மங்கையர் மலர்



MANGAYAR MALAR அக்டோபர் 1996 விலை ரூ. 9



கொட்டப்பாக்கும் கொழுந்து வெத்தலையும்
தட்டில் ஏந்தி பூ நடந்து வந்தது போல் வந்த
பெண் புடிச்சிருக்கு எதனாலே?
சாரதா'ஸ் உடுத்தி வந்ததாலே!
சாரதாஸ்
(முகூர்த்தபட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
827, மவுண்ட்ரோடு
சென்னை - 600 002.
போன் : 852 11 77
32, N.S.B. ரோடு,
திருச்சி 620 002
போன் : 27077
சாரதாஸ் சென்னை - 2, திருச்சி - 2 ல் மட்டுமே
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.



விருந்துகள் சுவைக்கத்
தெரிந்தவர்களுக்காகவே.
எங்களுடைய 'டின்னர் செட்'களுடன், அது
கண்களுக்கும் சுவை படைக்கின்றது.

விருந்துகளில் பரிமாறப்படும் நற்சுவை உணவுகள் நாவிற்கு நயம் பயக்கின்றன.

உணவைப் பரிமாறும் முறையும் கூட நாவின் சுவையை அதிகமாக்கும்.

எடுத்துக் காட்டாக, எங்களுடைய "டின்னர் செட்"டில்.

இப்பொழுது அது சிந்தனைக்குச் சில சிறப்பான உணவினைத் தரும்.

லா ஒபாலா ஒபல்வேர்

பெரும்பாலான விருந்தினர், வைத்த விழிவாங்காமல் கவனிப்பர் இதனை.



லா ஒபாலா®

ஒபல் க்ளாஸ் டேபிள்வேர்


இதுவே நீங்கள் உருவாக்கும் நன்மதிப்பு.

ஒளி ஊடுருவக்கூடிய முத்துப்போன்ற சுடு இணையற்ற வெண்மை நிறத்தில் தேர்ந்தெடுக்கப் பலவித நுண்ணிய மலர்கள் மற்றும் இக்காலத்தின் ஒப்பற்ற ஓவியங்கள். மைக்ரோவேவ் மற்றும் டிஷ்வாஷர்களிலும் பயன்படுத்த உகந்தது. உதிரியாகவும் செட்களாகவும் கிடைக்கிறது. மேலும் விவரங்களுக்கு அணுகவும்: La Opala Glass Ltd., 12A Camac Street, Calcutta 700 017. Phone : 2421740/5931/6847. Fax : 2427885.

CONTRACT LO 290/95 TAM



மஞ்சள் நிலாப் பெண்ணழகு
கொஞ்சும் வண்ணப் பட்டழகு
ஈரோடு
பரணி
பட்டு சென்டர்
RAGHAASS - 96



மங்கையர் மலர்

அக்டோபர் '96
மலர் : 16
இதழ் : 9

நவராத்திரி இரட்டைச் சிறப்பிதழ்





தொடர்கதை

இந்த மாதம் முடியும் வாசகியர் பங்கெடுத்த போட்டிக் கட்டுரைகள்....

நீங்கள் விரும்பும் மற்ற வழக்கமான....



மருத்துவம்....

சமீபகாலமாக நாம் பேசிக் கொண்டிருக்கும்....

உங்களுக்கு எப்பொழுதும் நாங்கள் பக்கபலம்



MUDRA - முஷ்டி – 'முஷ்டி' என்றால் பலம், வீரம், தைரியம், திடசித்தம் ஆகியவற்றைக் குறிக்கின்றது.

எல்ஜி பைனான்ஸின் சேவை, 75 வருட அனுபவமும், ரூ.700
கோடி மதிப்பும் கொண்ட எல்ஜி குழுமத்தின்
பாரம்பரியத்துடன் இணைந்து வருகிறது.

இணைந்திடுவீர் எம்மோடு, வளர்ந்திடுவோம் வளமோடு.

ELGI
FINANCE

எல்ஜி பைனான்ஸ் லிமிடெட்


கார்பொரேட் அலுவலகம்

4-வது மாடி, JVL பிளாஸா, 501, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
போன் : (044) 4345445, 4348896, 4348897.

உங்கள் நம்பிக்கையே எங்கள் நற்பெயர்

தலைமை அலுவலகம்: எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர் 641 045 ☎ (0422) 216132, 214571

• FIXED DEPOSITS • HIRE PURCHASE • LEASING • BILL DISCOUNTING • MERCHANT BANKING





எங்கள் வீட்டு கொலு!



வருடா வருடம் எங்கள் வீட்டில் கொலு பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். என் கணவருக்கு இயற்கையிலேயே இதில் ஆர்வம் உண்டு. துர்கை முகம் ஒன்று எங்கள் பூஜை அறையில் உண்டு. முகத்தை மட்டும் வைத்து அதற்கு தானே கைகள், கால்கள், தலைமுடி செய்து கோயில் அம்மனை போல அலங்காரம் செய்வார். பட்டுப் பாவாடைகளை தானே தைத்து அம்மனுக்கு அணிவிப்பதுண்டு.

ஒன்பது நாட்களும் ஒன்பது விதமான அலங்காரம் செய்யப்படும். ஆண்டாள், அன்னபூரணி, ராஜ ராஜேஸ்வரி, ஹம்ச வாகனம், துர்கை, மஹாலக்ஷ்மி, சரஸ்வதி என்று பலவித அலங்காரங்கள் செய்வார்.

வெல்வெட் துணி கொண்டு கை, கால்கள், சிகை அலங்காரத்திற்கு கறுப்புத் துணி, ஜரிகை நூல், முத்து, தோடு, இடுப்பிற்குக் கையில் அணியும் ப்ரேஸ்லெட் தெர்மாகோல் வைத்து அன்ன வாகனம், அதற்கு மேல் ஜரிகை பேப்பர், கண்ணாடி பொருத்தி அழகுற செய்வார். இந்த ஒன்பது நாளும் அம்மனுக்கு லலிதா சகஸ்ர நாமம் அர்ச்சனை நடைபெறும். கொலுவின் சிறப்பே அம்மன் அலங்காரமும் ஆராதனையும்தான்.

வருடம் தோறும் எடுக்கப்பட்ட சில புகைப்படங்களையும் இணைத்துள்ளேன்.

— வசுமதி சுரேஷ்





சில ப்ரச்னைகள்; சில வார்த்தைகள்

இதோ ஒரு வழிகாட்டி!

மஞ்சுளா ரமேஷ்

ராமர் பிள்ளை - இவர் யார் என உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ம்... என யோசிக்கலாம். டெண்டுல்கர், நக்மா, மற்றும் அரசியல்வாதிகளின் பெயர்கள் எல்லாம் தெரிந்திருக்கும். ஆனால் உலகின் பொருளாதாரத்தையே மாற்றும் அளவிற்கு ஓர் அற்புதமான விஷயத்தைக் கண்டு பிடித்துள்ள ராமர்பிள்ளையைப் பற்றி நாலில் இரண்டு பேருக்குத் தெரிந்திருந்தால் ஆச்சர்யம்.

தமிழகத்தின் இராஜபாளையம் பக்கத்திலுள்ள இடையங்குளம் ராமர் பிள்ளைக்குச் சொந்த ஊர். பள்ளியில் படிக்கும் போது சிறுவர்களுடன் காட்டுப்பகுதிக்குச் சென்ற போது தாங்கள் பற்ற வைத்த நெருப்புப் பட்டு ஓர் இலை எரிவதைப் பார்த்தார். அந்தச் சிறுவனின் மனத்தில் அது அப்படியே நிலைத்துவிட்டது. ராமர் பிள்ளை பெரியவரான பிறகு இதே சிந்தனை அவரைப் பிடித்து ஆட்டியது. பிறகு தூக்கமில்லை, ஓய்வுமில்லை. ஆராய்ச்சியில் இறங்கிவிட்டார். பள்ளிப் படிப்புக் கூட முடிக்காத ராமர்பிள்ளை ஓய்வு ஒழிவில்லாமல் ஒரு விஞ்ஞானியாக மாறி ஆராய்ச்சி செய்ததன் விளைவுதான் 'மூலிகைப் பெட்ரோல்.'



• ராமர்பிள்ளை

சில மூலிகைகளைக் கொண்டு, சில இராசாயனப் பொருட்களைச் சேர்த்து பெட்ரோல் தயாரிக்க முடியும் எனக் கண்டு பிடித்தார். அதனை அரசாங்கத்தில் பதிவு செய்து, தன்னுடைய கிராமத்திலேயே தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்பதுதான் அவருடைய அவா. இவர் தயாரிப்பின் பிரகாரம் ஒரு லிட்டர் பெட்ரோல் இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கும்! பெட்ரோலின் தேவை உலகத்தில் எத்தனை முக்கியமானது என நாம் அறிவோம். ஒரு காலத்தில் பாலைவனமாக இருந்த அரபு நாடுகள் இன்று குபேரப் பட்டணமாகக் கொழிப்பதற்குக் காரணம் பெட்ரோல்! உலகமெல்லாம் பெட்ரோலுக்கு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் நம் நாட்டில், நம் தமிழகத்தின் கிராமத்தில் ஒரு தமிழன் பெட்ரோலுக்கு அற்புதமான ஒரு மாற்றுப் பொருளைக் கண்டு பிடித்து இருக்கிறான்! இதை விட பெருமைபட வேறென்ன இருக்கிறது?

இத்தனை நேரம் தமிழகமும், இந்தியாவும் திமிலோகப்பட்டிருக்க வேண்டாமா? உலகமெல்லாம் நம்மைப் பார்த்து புருவத்தைத் தூக்கியிருக்க வேண்டாமா? இல்லை என்பது தான் ஆச்சர்யமான விஷயம். ஊழல் அரசியல்வாதிகளுக்கும், ஒய்யார சினிமாவுலகிற்கும் உள்ள 'பப்ளிசிடி' ராமர்பிள்ளைக்குக் கிடைக்கவில்லை என்பது வருத்தமான விஷயம்.

அந்தக் கிராமத்து மனிதரின் நெஞ்சுரம் நாம் அனைவரும் போற்றிப் புகழவேண்டிய சமா சாரம். அவர் ஏதோ நேற்று இந்த விஷயத்தைக் கண்டு பிடித்துக் 'கொஞ்சம்' பிரபலமாக வில்லை. ஏழாண்டுகளுக்கு முன்பே மூலிகையால் பெட்ரோல் தயாரிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்து விட்டார். பல்வேறு பெரும் கம்பெனிகள் இதைத் தெரிந்து கொண்டு 'கோடி கோடியாக பணம் தருகிறேன், அந்த ரகசியத்தைச் சொல்' என்று சொல்லியும் மறுத்துவிட்டார். அதற்காக அந்த எளிய மனிதர் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்ச மில்லை. அவரை சிலிங்க்பேனில் தொங்கவிட்டு அடித்திருக்கிறார் கள். இந்த

மங்கையர் மலர்

அடுத்த இதழ்

தீபாவளி சிறப்பிதழ்

மங்கையர் மலர் - இரட்டைச் சிறப்பிதழ்

என மலருகிறது

— பட்டாசின் வண்ணங்களைப் போல நம் எண்ணங்கள் மலர, குதூகலம் பொங்கும் தீபாவளிக்காகவே!

ரகசியத்தைக் காப்பாற்றி மேலும் மேலும் ஆராய்ச்சிகள் செய்ய பணம் வாங்கி வாங்கி இன்று கடனாளியாக இருக் கிறார்.

ஆனாலும் மனம் தளராமல் இவர் அரசாங்கக் கதவை தட்டிக் கொண்டே இருந்திருக் கிறார். ஏழாண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் டெல்லியில் பல விஞ்ஞானிகள் முன்பு இதனை நிருபிக்கவும் ஆச்சர்யத்தில் விஞ் ஞானிகள் அசந்து போயிருக்கிறார்கள். உடனே ராஜமரியாதை கிடைத்துவிடவில்லை. விஞ் ஞானிகள் அந்தப் பக்கம் போனவுடன், இந்தப் பக்கம் 'யோவ், கெஸ்ட் அவுஸைக் காலி பண் ணுய்யா'என்று அவமானப்படுத்தி இருக்கிறார் கள். இவர் தொடர்ந்து டெல்லியில் தங்க வசதி யில்லாமல் ஊருக்குத் திரும்புவதற்குள் அவர் அமைத்து வைத்திருந்த சிறிய ஃபேக்டரியையே கொளுத்தி விட்டிருக்கிறார்கள். இன்னும் மனம் தளரவில்லை, தன் நெஞ்சுறுதியிலிருந்து மாற வில்லை ராமர்பிள்ளை.

சமீபத்தில் முதல்வர் திரு. கருணாநிதியின் முன்பு தன் சாதனையை நிகழ்த்திக் காட்டிய போது, அவருக்குத் தேவையான உதவிகளை யும், பாதுகாப்பையும் தருவதாக வாக்களித் திருக்கிறார் முதல்வர்.

ராமர்பிள்ளை தன் கண்டுபிடிப்பை ஏடுத் துக் கொண்டு வெளிநாடு போகவில்லை. சகல வசதிகளுடன் தலைநகரில் தொழிற்சாலை நிறுவ ஆசைப்படவில்லை. இந்தியாவில், தமிழ கத்தில், தன் கிராமத்தில் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என ஒரே இலட்சியத்துடன் இத்தனை கொடுமைகள், அடி உதைகள், அவட் சியங்கள் அத்தனையையும் தாங்கிக் கொண்டு வாழும் இவரல்லவோ மாமனிதர்! இவரல் லவோ நமக்கெல்லாம் வழிகாட்டி!

'இவரே இந்த நேரம் வெளிநாட்டில் பிறந் திருந்தால்....' என்று சொல்வதையெல்லாம் விட்டுவிட்டு தமிழகமே ஒன்று திரண்டு அவருக்கு ஆதரவு தரவேண்டும். மாணவ, மாணவிகள் அனைவருக்கும் அவரைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இப்பொழுதும் பத்திரி கைகள் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக் கின்றன. இருப்பினும் தொடர்ந்து விடாமல் அவருடைய இலட்சியத்தை அடையும் வரை அவரைப் பற்றி செய்திகள் வர வேண்டும். சமூக சேவை நிறுவனங்கள் அவரைப் பாராட்டி பரிசளிக்க வேண்டும்.

தெற்கு உயர ஆரம்பித்திருக்கும் நேரமிது. அரசியல் ரீதியாக உயர்ந்திருப்பது போல பொருளாதார ரீதியாகவும் மிகப் பெரிய உயர் வடைய இது நேரம். தமிழகமே, இந்தச் சந்தர்ப் பத்தில் ராமர்பிள்ளையை உயர்வடையச் செய் வதைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

1994-லிருந்து பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து வரும்

VISWAPRIYA'S
PRIME INVEST

இப்பொழுது 2-ம் ஆண்டினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருக்கிறது.

இயக்குனர் குழு

- திரு ஆர். நாராயணன், தலைவர்
  முன்னாள் தலைவர் LIC
- திரு கே.எஸ்.பி. சன்யால்
  முன்னாள் தலைவர் ஆன்ட்ரு யூல்
- நீதிபதி ஜீ. ராமானுஜம்
  முன்னாள் நீதிபதி,
  சென்னை உயர்நீதிமன்றம்
- திரு கே. பாலகிருஷ்ணன்
  பேராசிரியர், I.I.M. அகமதாபாத்
- திரு எஸ். ராஜரத்தினம்
  முன்னாள் உறுப்பினர்,
  இன்கம்டாக்ஸ் அப்பலேட் ட்ரிப்யூனல்
- திரு ஆர். சுப்பிரமணியன்
  நிர்வாக இயக்குனர்

2-ம் ஆண்டு விழா! சிறப்பு சலுகைகள் பெறுங்கள்

19.56% ஆண்டு வருவாய், 1 ஆண்டு முதலீட்டு திட்டம்

நிச்சயமான உயர் வருமானத்தை உறுதி செய்யும் ஒரு வழிமுறையை நாங்கள் அறிமுகம் செய்தோம். அதனைப் பயன்படுத்திக்கொள்ள ஆயிரக்கணக்கானவர்கள் எங்களை அணுகினார்கள். 'விஸ்வப்ரியாவின் நிர்வாகத்திறமை கொண்ட சேவையினால் அவர்களுடைய முதலீடு பத்திரமாக இருப்பதோடு அவர்களுக்கு முழுப்பலனும் கிடைக்கிறது. ஆமாம், அவர்களைப் பொறுத்தவரை, பருத்தி புடவையாகவே காய்த்து விடுகிறது.

விஸ்வப்ரியாவின் ப்ரைம் இன்வெஸ்ட் இருக்கும் போது இன்னொரு பாதுகாப்பான வழிமுறையை நாடவேண்டிய அவசியம் என்?

விஸ்வப்ரியா ஃபைனான்ஷியல் சர்வீசஸ் & செக்யூரிடீஸ் லிமிடெட்

சென்னை : K.R. பில்டிங், 124–ஏ, L.B. ரோடு, அடையாறு, போன்: 4915431 (5 Lines)
புதுடெல்லி : 90, நியூ ராஜ்தானி என்க்ளேவ், போன்: 2223984 / 2224307.
கோயம்புத்தூர் : 232, 5வது தெரு, காந்திபுரம். போன்: 434208 / 431281.
திருச்சி : எண்.1, ராயல் ரோடு, சென்ட்ரல் பஸ் நிலையம் எதிரில். போன்: 462627 / 463629.

ADVAVE/VFS/5326/TAM

மேலும் விபரங்களுக்கு:

இன்டெல் இன்வெஸ்டர் சர்வீசஸ் (பி) லிமிடெட்

தலைமையகம்: சென்னை போன்: 4994133/4995147; மயிலாப்பூர் போன்: 4995133; தி. நகர் போன்: 4342456. நுங்கம்பாக்கம் போன்: 2330683. அண்ணாநகர் போன்: 6212446. அடையாறு போன்: 413046. வடபழனி போன்: 420502. குரோம்பேட்டை போன்: 401912. ஜார்ஜ்டவுன் போன்: 5246240. கே.கே. நகர். ஏபி 1443, முதல் செக்டார், முதல் தெரு ஓட்டல் சரவணபவனை அடுத்து. திருவல்லிக்கேணி போன்: 8548959. திருநெல்வேலி போன்: 337120, திருச்சி போன்: 24084 / 431440. கோயம்புத்தூர் போன்: 233134. மதுரை போன்: 622749 / 606761. காரைக்குடி போன்: 22952. கும்பகோணம் போன்: 24290. சேலம். சேலம் காம்ப்ளெக்ஸ், முதல் மாடி, 48, தி. பேட்டுத் தெரு (எல்லைமன் கோயில் அருகில்) தஞ்சாவூர் போன்: 25810 P.P. பெங்களூர் போன்: 3363937, 6632993, 5295493 3350001 P.P. & 5297480. மைசூர். எண்.2, பில்டிங் எண். 1528, முதல் மாடி, சங்கர் மார்க்கெட், சிவாஜிபேட். எர்ணாகுளம் போன்: 395553. திருவனந்தபுரம் போன்: 77050. செகந்திராபாத் போன்: 845125. ஹைதராபாத் போன்: 237601, 3745001, 4061287. விஜயவாடா போன்: 477758. நெய்வேலி போன்: 52668, 52444,

வாருங்கள். முழுப்பாதுகாப்பான முதலீட்டைத் தெரிந்துகொள்ளுங்கள்.

நெஞ்சைத் தொடும் பரிசு... நிலையான பரிசு.

தித்திக்கும் தீபாவளித் திருநாளில், உங்கள் மனம் கவர்ந்தோருக்கு வாழ்த்துக் கூற விரும்புவீர்கள் அல்லவா? வாழ்த்துடன், பரிசு தருவதுமல்லவா நமது மரபு! எனவேதான், மில்டன் அறிமுகப்படுத்துகிறது நெஞ்சைத் தொடும் பரிசுகளை! இவை மிக மிக வித்தியாசமானவை. நினைவை விட்டு அகலாதவை. ஒவ்வொருவரின் ரசனைக்கும், பர்சுக்கும் ஏற்றவாறு மில்டன் திருவிழா கால பரிசு அணிவரிசை வடிவமைக்கப்பட்டுள்ளது. கேஸரோல்ஸ், வேக்யூம் ஃப்ளாஸ்க்ஸ் அல்லது டிஃபன் பாக்ஸ்-இவை அனைத்துமே, முன்பின் காணாத புதுமையான வடிவங்களிலே, கவர்ச்சிகர நிறங்களிலே வருகின்றன. மில்டன் மட்டுமே புரட்சிகர டஃப் பஃப் இன்சுலேஷனை, தனது எல்லா தெர்மோவேர் தயாரிப்புகளிலும் பொருத்தி இருக்கிறது. எனவே, இந்த தீபாவளித் திருநாளில் எப்படி வாழ்த்தினால், உங்கள் மனம் கவர்ந்தோரின் மனம் கவர முடியும் என்று இப்போது உங்களுக்குத் தெரியுமல்லவா?! எத்தனை தீபாவளிகளுக்குத்தான், இனிப்புகளையும், உலர் பழங்களையுமே திரும்பத் திரும்பத் தருவது?!

Valentino Gift Set



Stockable Kasseroles





MILTON
TUF-PUF
IT'S A MILTON MIRACLE

Lintas MP 22 2013 Tm

சிறுவாச்சூர் மதுரகாளியைத் தரிசித்து எழுதும் பாக்கியம் பெற்ற பிறகு, அதனைப் படித்து நிறைய வாசக, வாசகிகள் கடிதம் எழுதியிருந்தார்கள். அப்படி வந்த கடிதங்களுள் ஒன்று மிக விரிவாக எழுதப்பட்ட கடிதம். 'காஞ்சி பரமாச்சார்யாரின் குருதெய்வம் சிறுவாச்சூர் மதுரகாளி' என அதில் குறிப்பிட்டிருந்தார் அந்தக் கடிதம் எழுதியவர். ஸ்ரீவித்யா உபாசனையில் மிகச் சிறந்தவராகவும், தேவியக்ஞம் செய்வதில் தலைசிறந்தவராகவும், சாக்த தர்சனப்ரவீணாகவும் விளங்கும் பி.வி. ராமஸ்வாமி எனும் மாகனுபாவர்தான் அவர். சிறுவாச்சூர் மதுரகாளியின் மாதுர்யங்களை விவரித்திருந்த அவர், இது நவராத்திரி காலமாதலால் தேவி உபாசனை எத்தனை உயர்ந்தது என்பதை விளக்கியிருந்தார்.

தியான ஸ்லோகத்தில் மட்டுமே விளக்கியிருந்த 'ஸ்ரீவித்யா மஹாபராஷோடசி தேவி', அந்த ஸ்லோகத்தில் கண்டபடியே தேவி கோலத்தில் உருவமாக, ஓவியமாக தன் பூஜா கிரமத்தில் வைத்திருப்பதையும், அதனை சிருங்கேரி சங்கராச்சார்யார்கள் ஆமோதித்து ஆசீர்வதித்ததையும் எழுதியிருந்தார்.

நம் மங்கையர் மலர் வாசகிகளுக்காக அந்த அற்புதமான, கிடைத்தற்கரிய படத்தையும் அனுப்பியிருந்தார். அவர் எழுதிய விரிவான கடிதத்தில் இருந்து சில பகுதிகள் -


அகிலாண்டகோடி ப்ரம்மாண்டமனைத்திலும் ஆதார சக்தியாக விளங்கும் மஹாசக்தியே, பன்னிருகை தத்துவமறிந்த பற்பல யோகீஸ்வரர்களின் பக்குவமடைந்த சிதாகாசத்திலே, உள்ளமென்ற கோயிலிலே, திருநடனமாடும் சிவ-சக்தி ஸ்வரூபிணியாக, ஸ்ரீ மஹா-பராஷோடசீ, ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தரி பரா பட்டாரிகை, ஸ்ரீ ராஜ-ராஜேஸ்வரியாகத் திகழ்கின்றாள். ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் வகுத்தளித்த ஷண்மதங்களில், அத்வைத ஸித்திபெற மிக உதவும் சாக்த வழிபாடு முறைகளில், ஸ்ரீ ரத்னாகர பத்ததி எனும் பழம் பெரும் வழியொன்றுமுளது. அதில் ஸ்ரீ மஹா-பராஷோடசியின் தியானம் கூறப்பட்டிருக்கின்றது.

சாபம்சேக்ஷுமயம் ப்ரஸூனெ விஸிகம்
பாசாங்குசம் புஸ்தகம்
மாணிக்யாக்ஷ-ஸ்ருஜ்ஜவரம் மணிமயீம்
வீணாம் ஸரோஜ-த்வயம்.
ஹஸ்தாப்யாம் வரதாபயஞ்ச தததீம்
ப்ரும்ஹாணி ஸேவ்யாம் பராம்
ஸிந்தூராருண லோசனாம் பகவதீம் தாம்
ஷோடசீம் ஆஸ்ரயே.

கற்பகத் தருவெனும் கரும்பு வில்லும்,
ஐம்பொறியடக்கிடும் பஞ்சபுஷ்ப பாணமும்,
பக்தரை யீர்க்கும் பாசக்கயிறும்,



அவரவர் நெறியில் அவரவர் வழிபடுவதே சிறந்தது!



புதியவை அறிமுகம்

மல்ட்டி-பில்லியன் டாலர் கம்பெனியான ஆல்-ஃபுட்டம் க்ரூப் ஆப் கம்பெனியுடன் இணைந்து, மற்றொரு உலகப் புகழ் பெற்ற வெஸ்டார் கம்பெனி கைக்கெடிகாரங்களைத் தயாரிக்கிறது. தளர்த்தப்பட்ட இந்தியப் பொருளாதாரக் கொள்கைகளால் கவரப்பட்டு, நம் நாட்டில் அடியெடுத்து வைத்துள்ள இவர்கள் நவீன நாகரீகத்திற்கேற்ப கைக்கெடிகாரங்களைத் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியாவின் வெஸ்டார் கம்பெனி பெங்களூரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது.

அகந்தையகற்றிடும் அங்குசக் கருவியும்,
ஞான மளித்திடும் திருமறையேடும்,
மனதொரு நிலைதரும் மாணிக்க மாலையும்,
கருத்தொருமிக்கப் ப்ரணவ நாதமும்,
கலைவடிவுந்தரும் ஞான வீணையும்,
செல்வங்களளிக்கும் கமலமிரண்டும்,
இகபரமளிக்கும் அபய வரதமும்,
ஸிந்தூராருண நயனங்களிரண்டும்,
ப்ராம்ஹீ சக்திகள் பணிந்து வணங்கிடும்,
அலைமகள் கலைமகள் மலைமகளாகவும்,
பக்தருக்கருளும் பரா-ஷோடசியே,
சித்தத்தில் நடமிடும் சிவ-சக்தியுருவே,
காத்தருள் புரிவாய் காமேஸ்வரியே.

கமலமிரண்டும், அபயவரதமும் இச்சா - சக்தியாக விளங்கி இகபரசெல்வங்களையும் அளிக்கும் **ஸ்ரீ மஹாலக்ஷ்மியாகவும்;** ஞான ஏடும், மாணிக்கமாலையும், ப்ரணவ ஒலிதரும் ஞானவீணையும், ஞான-சக்தியாக விளங்கி, அறுபத்திநான்கு கலைச்செல்வங்களையும் வாரி வழங்கும் **ஸ்ரீ மஹா ஸரஸ்வதியாகவும்;** கரும்பு வில்லும் பஞ்சபுஷ்ப பாணமும், பாசாங்குசமும் க்ரியா-சக்தியாக விளங்கி, தீயசக்திகளை வென்று, நற்கார்யங்களில் ஈடுபட்டு, நற்பயன்களை எல்லாம் அளிக்கும் **ஸ்ரீ மஹா காளியாகவும்,** அதர்வண வேதத்தில் கூறியபடி **ஸ்ரீ** அதர்வண பத்ரகாளீ ப்ரத்யங்கிரா பரமேஸ்வரியாகவும், சாக்த மந்த்ரங்களில், மகோன்னதமான **ஸ்ரீ** மஹா-பரா-ஷோடசீ மஹாமந்த்ர-ராஜ வடிவாகவும், **ஸ்ரீ** சக்ர மஹாமேரு யந்த்ர-ராஜ வடிவமாகவும், ஸகல தந்த்ர-ராஜ வடிவமாகவும், **ஸ்ரீ** வித்யா ஸ்வரூபிணியாகவும், அத்வைத-ஸித்தியின் சிகரமாக, சிவ-சக்தி ஸ்வரூபிணியாகவும், விளங்கும் **ஸ்ரீ** மஹா-த்ரிபுரஸுந்தரீ பராபட்டாரிகையின் ஒன்று சேர்த்து திரண்ட ஸமஷ்டித் தோற்றமே பன்னிருகை படைத்த **ஸ்ரீ மஹா-பரா-ஷோடசீ ஸ்ரீ ராஜ-ராஜேஸ்வரி** திருவுருவமாகும்.

விக்னங்களை விலக்கும் முழுமுதற் கடவுள் **விநாயகனைத்** தோற்றுவித்தவள் ஆதிசக்தி. கார்த்திகைப் பெண்களால் தங்கத் தாமரை தொட்டிலிலே பேணி வளர்க்கப்பட்ட, ஆறு தனியுருவங்களை, கட்டிப் பிடித்தணைத்து ஒன்றாக்கி, சிவ-சக்தி அனுக்ரஹம் பெற்றதற்கு அடையாளமாக ஒரே வடிவமாக, பன்னிருகையுடன் **ஆறுமுகனைப்** படைத்தவள் அன்னை சிவ-சக்தி. அவளுக்குப் பன்னிருகை இருப்பது மிகப்பொருத்தமே. **ஆதித்யன்** சக்தியில்லையெனில் பயிர்கள் வளராது. **அம்புலியின்** சக்தியில்லையேல் வளரும் பயிர் தீய்ந்துவிடும். அக்னியின் சக்தியிலையெனில் உயிரனங்களுக்கு, உண்ட உணவை ஜீரணிக்க சக்தி இருக்காது. இம்முச்சக்திகளையும் **முக்கண்களாகக்** கொண்டவள் அன்னை பராசக்தி. படைக்கும் ப்ரும்ம சக்தியாகவும், காக்கும் **விஷ்ணு** சக்தியாகவும், அனைத்துப் புறவெண்ணங்களையும் அடக்கி, செயலறச்செய்து, லயமாக்கும் சிவனுடைய சக்தியாகவும், விளங்குபவள் **மஹா-சக்தி.** இவ்வொவ்வொரு சக்திக்கும் நான்கு கரங்கள் வீதம், சமஷ்டியாக பன்னிருகரங்கள் அமைந்த வடிவமே, ஷண்மத சக்திகளையும் தன்னகத்தே வைத்துக் கொண்டு, **ப்ரும்மா விஷ்ணு ருத்ரன் ஈசானன்** இவர்களை நான்கு கால்களாகவும், **ஸதாசிவத்தை** பலகையாகவும் கூடிய, சிவாகாரமான (மங்கள வடிவமான) பஞ்சப்ரேதாசன மஞ்சத்தில் வீற்றிருப்பவள் **பன்னிருகையுடைய பராசக்தியாவாள்.** தாமஸ குணமும், ராஜஸ குணமும் நிறைந்த **ஸிம்ஹமே** சாத்வீக குணமடைந்து அன்னைக்கு வாஹனமாகிக் காட்சியளிக்கின்றது.

மேலும் அனைத்து மந்த்ரங்களுக்கும் ஆதியாக விளங்கும் **ஸ்ரீ காயத்ரீ மஹாமந்த்ரத்தில்** இருபத்திநான்கு அக்ஷரங்கள் உள்ளன. மன்னுயிரில் ஸப்த நாடிகள் உள்ளன. இவ்விருபத்திநான்கு அக்ஷரங்களையும் இருபத்திநான்கு மெட்டுகளாகவும், ஸப்த நாடிகளை ஏழு தந்திகளாகவும் கொண்டதே ஞான **வீணையாகும்.** ஸப்த நாடிகளாகிய வீணையின் நரம்புகளை மீட்டி, இருபத்திநான்கு அக்ஷரங்களாகிய மெட்டுகள் ஒவ்வொன்றையும் தொட்டால்,

ஆத்மஞான ஒலியான ப்ரணவநாதம், ப்ரளய காலத்திலும், கேட்கும் ஒலியாக எழும். அவ்வீணையையும், வேதங்களாகிய ஏடுகளையும், அவ்வேதங்களை எடுத்துரைத்துக் காட்டும் ஐம்பத்தோரு அக்ஷரங்களை மாணிக்க மாலையாகவும், ஏற்ற ஞான வடிவமும், **பன்னிருகை பராசக்தி வடிவில்** அடங்கியுள்ளது.

இம்மைக்கு செல்வத்தைத் தேடவேண்டும். அப்பொருளைக் கொண்டு தீயசெயல் புரியவிடாது தடுக்கும் நல்லறிவும் வேண்டும். பொருளும் அறிவும் கிடைத்த பின்னர், தற்செருக்கடையாமல் இருந்து, பொருளையும், அறிவாற்றலையும் நல்வழியில், உலக நல்வாழ்வின் முன்னேற்றத்திற்காக உபயோகிக்கும் உள்ளத்திறன் வேண்டும். ஆகவே இம்மூன்றையும் பெற மூன்று சக்திகளையும் ஒரே உருவத்தில் கொண்ட பன்னிருகை ஸ்ரீ மஹா-பரா-ஷோடசியை அர்ச்சிக்கவேண்டும். இவ்வடிவை தியானித்து அர்ச்சித்தால், இம்மையிலும் மறுமையிலும் கிட்டாத பேறொன்றும் உளதோ! இவ்வுருவத்தை வழிபடுவது, இச்சா-ஞான-க்ரியா சக்திகள் மூன்றையும் காணுபத்யம், கௌமாரம், ஸௌரம், வைஷ்ணவம், சைவம், சாக்தமெனும் ஷண்மத தேவதா சக்திகளையும்; இவற்றிலடங்கிய அனைத்து ஆவரண தேவதா சக்திகளையும் ஒரே வடிவில், ஒரே நேரத்தில் வழிபடுவதற்கு ஒப்பாகும் என்பதில் ஐயமில்லை.

பஞ்சாமிர்த ஐஸ்கிரீம் :

நவராத்திரி சமயம் எல்லோர் வீட்டிலும் கொடுக்கும் வாழைப்பழம், நம் வீட்டில் பூஜைக்கு வைத்தது என்று நிறைய வாழைப்பழங்கள் சேர்ந்து விடும். அவற்றை சிறுதுண்டுகளாக்கி, வெல்ல சர்க்கரை, கல்கண்டு, திராட்சை (உலர்ந்தது), பேரிச்சை இவற்றுடன் கலந்து நன்கு பிசைந்து பஞ்சாமிர்தம் செய்து ஐஸ் ட்ரேயில் உள்ள குழிகளில் ரொப்பி அதன் மீது ஒரு குச்சியை சொருகி ப்ரீசரில் வைத்து மாலை நேரங்களில் கொலு பார்க்க வரும் குழந்தைகளுக்கு குச்சி ஐஸ் போல் கொடுத்தால் அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

— *மீரா ஸ்ரீபாதராமன்*



ஆகவே பன்னிருகை ஸ்ரீ மஹா-பரா-ஷோடசி ராஜ ராஜேஸ்வரியை அனைவரும் பூஜிக்க வேண்டும். பஞ்ச-லக்ஷக்ரந்தமெனும் **ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரத்ன கோசத்திலும், ஆதிசங்கர பகவத்பாதர்** அருளி, நமக்களித்த, **ப்ரபஞ்ச-ஸாரக்ரந்தத்திலும், ஸ்ரீ** சக்ர-நகர-ஸாம்ராஜ்யலக்ஷ்மீ மஹாத்ரிபுரஸுந்தரியை ஆவரண தேவதைகளுடன் பூஜிக்கும் வழிபாடுமுறை விரிவாக உளது.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியை வணங்குதல்: 1. வந்தே மாதரம் அம்பிகாம் பகவதீம் ரமா வாணீ ஸேவிதாம், கல்யாணீம் கமனீய கல்ப லதிகரம் கைலாஸநாத ப்ரியாம்! வேதாந்த ப்ரதிபாத்ய மான விபவாம் விஸ்வன் மனோரஞ்ஜனீம், ஸ்ரீசக்ராங்கித ரத்ன பீட நிலையாம் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரீம்!!

2. லக்ஷ்மீ ப்ரதான ஸமயே நவ வித்ருமாபரம், வித்யா ப்ரதான ஸமயே ஸரதிந்து ஸுப்ராம்! வித்வேஷி வர்க விஜயேபி தமால நீலாம். தேவீம் த்ரிலோக ஜனனீம் சரணம் ப்ரபத்யே!!

நான்கு வகை ஆன்மீக வாழ்வில், ப்ரும்மசாரிகள் (திருமணமாகாதவர்கள்) ஸ்ருஷ்டி-க்ரமம் (படைத்தல்) முறையிலும், க்ருஹஸ்த-ஆஸ்ரம-வாஸிகள் (இல்லறத்தையேற்று நல்லறமாக கடைபிடிப்பவர்கள்) ஸ்திதி-க்ரமம் (உலகை காக்கும்) முறையிலும், வானப்ரஸ்தர்களும், சன்யாஸிகளும் (இல்லறத்தை துறந்து, துறவறம் பின்பற்றுபவர்கள்) ஸம்ஹார-க்ரமம் (பிறப்பு-இறப்பெனும் சுழலை அழித்து, மோக்ஷத்தையே, குறிக்கோளாகவுள்ள) முறையிலும், ஸ்ரீசக்ர-சாக்த-வழிபாடும், ந்யாஸங்களும் (மனித உடலிலேயே தேவதைகளின் கலைகளை வழிபடும் முறை) செய்யப்பட வேண்டுமென்ற மூவழிகள், பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, நடைமுறையிலிருந்ததற்கு "தந்த்ர-சாஸ்த்ர" பண்டைய ஏடுகளில் சான்றுகள் உள்ளன. காலப்போக்கில் துறவிகள் பின்பற்ற வேண்டிய "ஸம்ஹார" முறையே, ப்ரும்மசர்யம், இல்லறம் இவைகளில் உள்ளவர்களும் பின்பற்றி வரும் நிலை வந்துள்ளது. ஆனால் அந்தந்த வாழ்க்கை நெறியில் உள்ளவர்கள் அந்தந்த வழிபாட்டு முறையை பின்பற்றுவதே சாலச்சிறந்தது. பலவித பற்றுள்ளவர்கள், பற்றற்ற துறவிகள் செய்ய வேண்டிய "ஸம்ஹார-க்ரம" பூஜையை செய்வதை விட, இல்லறம் நடத்தும் மாந்தர். "ஸ்திதி-க்ரம-பூஜை" செய்ய வேண்டும் என்பதில் ஐயமில்லை. "ஸ்திதி-க்ரம-வழிபாடு" இவ்வுலகில் ஸௌக்யங்களையும் "பரவுலகில்" மோட்சஸாம்ராஜ்யத்தையும் கொடுக்குமென தேவீ-ரஹஸ்ய நூல்கள் கூறுகின்றன.

— பி.வி. ராமஸ்வாமி

அறிமுகப்படுத்துகிறோம்

பட்டர்ஃப்ளை



உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கும் நான்-ஸ்டிக் பாத்திரங்கள் இப்போது இந்திய சமையலுக்குத் தயார். பட்டர்ஃப்ளை அறிமுகப்படுத்துகிறது.

உயரிய
ஜெர்மானிய
தொழிற்நுட்பத்துடன்

பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக் பாத்திரங்கள் சர்வதேச சிறப்பு வாய்ந்த ஜெர்மானிய க்ரெப்லான் பேட்டா தொழிற்நுட்பத்தில் தயாராகின்றன. ஒவ்வொரு பாத்திரமும் உங்கள் தேவையறிந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்-ஸ்டிக் கோட்டிங் நெடுநாட்கள் உழைக்க மும்முறைப்பூச்சு! நீங்கள் சுலபமாக சமைக்க, உபயோகிக்க, கழுவிட, நுணுக்கமான டிசைன்கள்; கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி...

...கருத்தைக் கவரும் நான்-ஸ்டிக்கின் அற்புத குணங்கள். இதுவே பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக்.

தோசை



நிறைவான சுவைக்கு எளிய செய்முறை

1 உங்கள் பட்டர்ஃபிளை நான்-ஸ்டிக் தவாவினை அடுப்பில் இளஞ்சூட்டில் வைத்து ஒரு கரண்டி தோசை மாவை இடுங்கள். இதமாக, அழகிய வட்டமாகப் பரப்புங்கள் (இப்போது ரேடியோவுடன் நீங்களும் பாட ஆரம்பிக்கலாம்).

2 ஒரிரு நிமிடங்கள் கழித்து, இரண்டே சொட்டு எண்ணையை தோசையைச் சுற்றி இடுங்கள். (இப்போது புடவை தலைப்பு, தலை முடியை சரி செய்து கொண்டு, வரவிருக்கும் பாராட்டுகளுக்குத் தயாராகுங்கள்).

3 ஒரு மரக்கரண்டியால் மொறுமொறு தோசையை சுலபமாகத் தவாவிலிருந்து எடுத்து பெருமையுடன் குடும்பத்தாருக்குப் பரிமாறுங்கள் (கூடவே சட்னியுடன் கொஞ்சம் புன்சிரிப்பையும் சேர்த்து).



பட்டர்ஃபிளை

நான்-ஸ்டிக் பாத்திரங்கள்.

சமையலறை அற்புதம். உங்கள் வீட்டிற்கு வந்து விட்டதா?

பட்டர்ஃபிளை நான்-ஸ்டிக் பாத்திரங்கள், தவா, ஃப்ரை பேன், சாஸ் பேன், டக்க ஓவன் போன்ற பல ரகங்களில் உங்கள் ஒவ்வொரு சமையல் தேவைக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளன.







கங்காதரம் அப்ளையன்சஸ் லிட். வழங்கும் 'தர உறுதி' பெற்ற தயாரிப்பு.
272, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

Seagull-GAL-193/TAM/MM

விடுதலை



இந்தியாவில் முதன்முறையாக

ரொட்டிசெஃப்

இன்ஸ்டன்ட் ரொட்டி மேக்கர்

ஒரு நிமிடத்திலும் குறைவாக கண் இமைக்கும் நேரத்தில் மின் கைவண்ண ரொட்டி

★ டூபாண் வழங்கும் டேப்லான் நான்-ஸ்டிக் கோட்டிங்

★ ரொட்டி மட்டுமல்ல நான், காக்ரா, தோசை அனைத்தும் உடனே தயார்.

★ சமையல் எண்ணெய், காஸ் மற்றும் நேரம் மிச்சம்

★ வேலை பார்க்கும் மற்றும் வீட்டு வேலை பார்க்கும் பெண்களுக்கு ஒரு வரம்

★ *12 மாத உத்திரவாதம்*

சப்பாத்தி உருட்டும் குழவி, வாணலி மற்றும் இடுக்கியை மறந்து விடுங்கள்

MIN

ROTICHEF™

INSTANT ROTI MAKER



டி.வி.
யில்
தெரிவது போல்

கண் இமைக்கும் நேரத்தில், மின் கைவண்ண ரொட்டி

Max. Ret. Price: Rs.2,195/-

Manufactured by:

MIN®
MIN HOME APPLIANCES
MUMBAI 400 072

DISTRIBUTOR FOR SOUTH INDIA:
AXIS MARKETING
36 Halls Road, Egmore, Madras 600 008.
Ph: 8252926/27.
Fax-044-8252928

Promotion

DEALER ENQUIRIES SOLICITED

சொல்ல விரும்புகிறோம்

✱ தேர்ந்த மனோதத்துவ நிபுணரின் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப் போல உற்சாக மூட்டியது இம்மாத 'சில பிரச்னைகள், சில வார்த்தைகள்'. பெரிய விஷயங்களை யெல்லாம் இலகுவாக எடுத்துக் கொண்டு சின்ன பிரச்னைக்கு மனதை அலட்டிக் கொள் பவர்கள் இங்கே அதிகம். ஆசிரியர் சொல்வது போல் நமக்குக் கிடைத்த ஒரே வாழ்க்கையை மகிழ்ச்சியாய் அனுபவிப்போம்.

பரமக்குடி. பா. உஷா கா[illegible]ரி.

✱ ''நம் உயர்வை நாம் உணர்வோம்'' கருத்துப் பரிமாற்றத்தில், புதுவை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பெரும் கல்வியாளருமான டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்களின் பெயர் கி. வேங்கட கிருஷ்ணன் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை - 41. தி. சுவாமிநாதன்.



✱ 'தேடித் தேடி இளைத்தேனே' சிறுகதை சூபர்ப்! கதையில் உள்ள நையாண்டிகளும் உவமான உவமேயங்களும் கதாசிரியையின் நகைச்சுவை உணர்வுக்கு அத்தாட்சியாக விளங்குகின்றன. பாராட்டுக்கள்.

சென்னை - 61. பவானி சங்கர்.

✱ 'வழிகாட்டிகள்' தொடரில் வந்த முதல் (பரிசுக்) கட்டுரையே அருமையாக இருந்தது. அக்கட்டுரை எத்தனை தெளிவாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது என்பதை எளிதில் உணர முடிந்தது. மேலும் அக்கட்டுரை 'வழிகாட்டிகள்' தொடரில் இனி வரப்போகும் கட்டுரைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும், 'வழிகாட்டி'யாக அமைந்திருந்தது. கட்டுரை எழுதிய ரா. தரங்கிணிக்கும், பிரசுரித்துக் கௌரவித்த 'மங்கையர் மலரு'க்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

மாயனூர். இரா. குருராஜ்.

✱ நமது உடம்பின் அழகைவிட உள்ளத்தின் அழகை மென்மைப்படுத்திக் கொள்ள ஸ்ரீ அன்னை அவர்கள் நமக்கு எடுத்துச் சொன்ன போதனைகளை (ஸ்ரீ) கவி நயத்துடன் எடுத்துச் சொல்லியிருந்தது அழகாகவே இருந்தது.

சென்னை - 33. விஜயா முரளி.

✱ ஆ! ஹா! மாதம் தோறும் தங்கமான போட்டியா? முதல் போட்டி(யை)யே 'கா(துத்) தோடு' சொல்லியிருந்ததை கண்டு மகிழ்ந்தேன்.

மதுரை - 11. சுகந்தி நாராயண்.

✱ சிறுவயதிலிருந்தே அனாதை குழந்தைகளுக்கும், ஏழைகளுக்கும் கொடுத்து உதவ உதவும் 'கொடுத்துப் பாருங்கள் மகிழ்ச்சி வரும்' என்ற கட்டுரை வரவேற்கத்தக்கது.

சென்னை - 51. தாய்மண் தமிழினியன்.

✱ வழிகாட்டிகள், கலந்துரையாடல் நாட்டு நடப்பை சுட்டிக் காட்டியதோடு மட்டுமல்லாமல் விழிப்புணர்வையும் எடுத்துக் காட்டியது.

ரத்தினபுரி - 27. செல்லம் வசந்தா.

✱ 'என்ன கோர்ஸ் எங்கு படிக்கலாம்' என்ற வழிகாட்டும் தொடரை படித்து விட்டு வெட்டி பத்திரப் படுத்திக் கொண்டேன். சேர்த்து பைண்டிங் செய்து பயன்படுத்த ஏற்ற வகையில். மிக்க நன்றி!

வேம்பார். ச. கிறிஸ்து ஞான வள்ளுவன்.


✱ ''ஜெயஸ்ரீ சாரநாதன்'' எழுதியுள்ள ''ஒரு குடும்பத் தலைவியின் போதி மரம்'' முதுகு வலிக்குச் சிறந்த நிவாரணமாகவும், வியாதியினால் படும் அவஸ்தையை விட மனத்தினால் பிறர் படும் கஷ்டம் அதிகம் என்பதை அழகாக விளக்கியுள்ளது பாராட்டத்தக்கது.

சென்னை - 33. உமா ராமமூர்த்தி.

✱ பல நூறு மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கும் அற்புத ஆலயங்களைப் பற்றிய மகிமைகளை வீட்டிலிருந்து கொண்டே அறிந்து கொள்ள உதவும் மங்கையர் மலரின் ஆன்மீகப் பணியும் இறை தொண்டும் விலை மதிப்பற்றது.

சென்னை - 78. மேகலா மாணிக்கம்.

கா(துத்)தோடு வந்த போட்டி!




பூச்செடி

நவராத்திரி ஸீஸன் ஆரம்பிக்கப் போகிறது. விதவிதமான அலங்கார பொருட்கள், பார்க்கில் வைக்க வேண்டிய பொருட்கள் செய்ய வேண்டி இருக்கும். தீர்ந்து போன ஸ்கெட்ச் பேனாக்களில் நிறைய பொருட்கள் செய்யலாம்.


ஸ்கெட்சின் உள்ளே இருக்கும் பஞ்சை பிளாஸ்டிக் கவரிலிருந்து கொஞ்சமாக வெளியே இழுத்து விரித்து பூ போன்று செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு பல கலர்களில் செய்து ஒரு பிளவர் வாஸ் அல்லது பீங்கான் கிண்ணத்தில் மண் போட்டு சொருகி வைக்க வேண்டும். தொட்டியில் வளரும் பூக்களை போன்று அரேன்ஜ் செய்து பார்க்கில் வைத்தால் மிகவும் அழகாக கலர்புல்லாக இருக்கும்.

மணிமண்டபம்




ஸ்கெட்சின் வெளி கவரை சிறிய சதுரமான களிமண்ணில் செருகி வையுங்கள். அவற்றை வட்டமாக அரேன்ஜ் செய்து வைக்கவும். பின் சுமாரான கெட்டி அட்டையை எட்டாக மடித்து ஓரத்தில் வட்டமாக வெட்டி விரித்தால் கூம்பான மேல் கூரை கிடைக்கும். மேல் கூரையின் மேல் கலர் பேப்பரை ஒட்டவும். பின் அவற்றை ஸ்கெட்ச் மண்டபத்தின் மேல் வைத்து ஸ்கெட்சின் பேனா முனையை லேசாக ஒவ்வொரு இடத்திலும் குத்தி நிற்க வைத்தால் அழகான வண்ணமயமான மணிமண்டபம் ரெடி. இதை பார்க்கின் நடுவிலும் வைக்கலாம். அல்லது கொலு படியில் வைத்து நடுவில் ஏதாவது ஒரு பொம்மையை வைக்கலாம்.

கொலுவுக்கு அழகு செய்ய....




கூண்டுகள் தயாரிக்க...

டூத் பேஸ்ட், சோப், கேக், காம்ப்ளான், ஹார்லிக்ஸ் போன்றவற்றின் அட்டைப் பெட்டிகளை தூக்கி எறியாமல் சேர்த்து வைக்க வேண்டும். அவற்றின் மேல் பிரவுன் பேப்பரை ஒட்டி விட்டு பின் ஒரு பக்கத்தில் மட்டும் சிறிது சதுரமாகவோ, வட்டமாகவோ, ஒவல் ஷேப்பிலோ வெட்டி விட வேண்டும். வலை போன்று வெள்ளி கலரில் ஃபேன்ஸி கடைகளில் கிடைக்கும். அவற்றை வாங்கி, நீங்கள் வெட்டி விட்ட பகுதியில் அட்டை பெட்டியின் உட்புறமாக ஒட்ட வேண்டும். பின் சிங்கம், புலி, கரடி போன்ற விலங்கு பொம்மைகளை ஒவ்வொன்றிலும் வைத்து பெட்டியை மூடி விட அழகான கூண்டுகள் தயார். காடு போன்று மரம், செடி, கொடிகளை வடிவமைத்து பின் இந்த கூண்டுகளை ஆங்காங்கே வைத்தால் சூப்பரான ஜூ ரெடி. நுழைவாயிலில் ஆர்ச் வளைவில் ஏதாவது ஜூ பேரையும் எழுதி வைக்கலாம். அட்டை பெட்டியின் ஒரு பக்கம் மட்டுமேயல்லாது நான்கு பக்கங்களிலும் கூட இவ்வாறு வெட்டி ஒட்டலாம்.



விலங்கு பொம்மைகளை சாதாரணமாக கொலுப் படிகளில் வைப்பதை விட, சிறு கதைகளை பேஸ் செய்து வைத்தால் பார்க்க இன்ட்ரஸ்டிங்காக இருக்கும். முயல், ஆமை ஒன்றன்பின் ஒன்று ஓடுவது போல, சிங்கத்தின் மேல் சுண்டெலி விளையாடுவது போன்று, யானையின் காலை முதலை கவ்வி இழுப்பது போல, நான்கு மாடுகள் சிங்கத்தை சுற்றி இருப்பது போன்று வைத்தால் கொலு பார்க்க வரும் குழந்தைகள் இன்னும் ஆர்வத்துடன் ரசிப்பார்கள். உங்களுக்குத் தெரிந்த கதைகள் பலவற்றை யோசித்துச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

- க. க. லெக்ஷ்மி



Available at leading chemists in select towns. Both Scholl and Dr Scholl's are registered trademarks of Scholl PLC, UK.

S S C & B * SCH *03

சரவணா ஸ்டோர்ஸ்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600 017.

உயர்தரமான தங்க நகைகள்
வெள்ளி பாத்திரங்களுக்கு

செய்கூலி இல்லை



22 CT. தங்கம்

1 கிராம் விலை ரூ. 470.00
(விலை மாற்றம் உண்டு)

பட்டுப்புடவைகளுக்கு
10% தள்ளுபடி

ஜவுளிகள்,
ரெடிமேட் ஆடைகள்,
பாத்திரங்கள்,
T.V., டேப்ரிக்கார்டர்,
ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின்,
ஃபேன், கிரைண்டர்,
மிக்ஸி, சூட்கேஸ்

FIXED DEPOSIT
24%
PER ANNUM

ஞாயிறு விற்பனை உண்டு.

T.R. SWAMI P/P

நோக்கம்

அகிலா கார்த்திகேயன்

'கெட்டி மேளம், கெட்டிமேளம்' 'மாங்கல்யம் தந்துநானேனா, மருமகள் வந்தாளா, லெமன் ஜூஸ், சேந்தமங்கலம் வைத்தி ரூபாய் நூறு, கங்கிராஜுலேஷன், இருங்க சாப்பிட்டு போலாம்...' அப்பாடா முகூர்த்தம் முடிந்து விட்டது. இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்பி விடலாமென்று நினைத்துக் கொண்டேன். அம்மாவைத் தேடினேன். பெண்கள் கூட்டத்தில் பொக்கை வாயை காட்டிக் கொண்டு ஏதோ வம்பளந்து கொண்டிருந்தாள். இதற்காகவே மெனக்கெட்டு கல்யாணத் திற்கு வந்திருக்கிறாள் அம்மா. நேற்று ராத்திரி சத்திரத்திற்கு வந்ததிலிருந்து பேச்சு... பேச்சு... பேச்சு.

"சுந்தரராமன் பையன்தானே நீ. என்னை தெரியறதா?"

"கொஞ்சம் விடுவிடுன்னு மாட்டுப் பொண்ணு பேசுவாளேயொழிய வாய்க்கு 'மசமச'ன்னு சட்டுனு கிளம்பாம உட்கார்ந்துடுவே... எனக்கு லீவே இல்லே. அன்னிக்கே திரும்பியாகணும்... திருச்சியிலே ஒரு பஸ்ஸி ரெண்டு மணிக்குக் கிளம்பினாத்தான் ராத்திரி வந்து சேர முடியும்"

என்று தடுத்துத்தான் பார்த்தேன். என் மாமா பேரன் கல்யாணம். நான் மட்டும் போய் தலைகாட்டி விட்டு ஓடிவிட்டு விட்டு வருவதற்கு மட்டுமே பட்ஜெட்டில் இடமிருந்தது. கூட அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு போவதற்கில்லை. வயதானவளை ரயிலில் அழைத்துக் கொண்டு போனால்தான் சௌகர்யம். ரயில் சார்ஜ் அதிகம். மேலும் அம்மாவை அலைக்கழித்தால் ஊருக்குத் திரும்பியதும் படுத்து விடுவாள். மருந்து மாயம் என்று செலவுகள் தொடரும். ஆகவே சுத்தமாக தவிர்க்கத்தான் பார்த்தேன்.

"என்னடா பழைய மனுஷாளையெல்லாம் பார்க்கலாம்னுதான்டா வரேன்னு சொல்றேன்... ஜெயம் வருவா... சேதுவை பார்த்து ருசியா பண்ணி போடறா போயேன்."

"நம்ப சேஷன் இருந்தானே அவன்தான் கிச்சாவுக்கு வேலை பண்ணி வைச்சான்."

கூடிக்கூடி அப்படி என்னதான் பேசுவாளோ... அம்மாவுக்கு நேரமே போதவில்லை. ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட என்று கல்யாணத் திற்கு வந்திருந்த அத்தனை உறவினரிடமும் ஆளுக்கு இத்தனை நேரம் என்று அலாட் பண்ணி அளவளாவியபோதும் அம்மாவிற்குப் பேச்சு முடிந்தபாடில்லை. இந்தக் கால பர பரப்பிற்கு சற்றும் ஒத்துப் போகாத ஜென்மம். இதற்காகவே கல்யாணத்திற்குத் தானும் வருவதாக அம்மா சொன்னபோது எனக்கு வெறுப்பாக இருந்தது.

"இதோ பாரும்மா... ஏதோ கடமையேன்னு பஸ்லே போய் ராத்திரி இறங்கி, முகூர்த்தம் முடிஞ்ச கையோட ஆச்சுன்னு கிடைக்கிற பஸ்ஸை பிடிக்க நான் வந்துண்டிருப்பேன்... உன்னையெல்லாம் அழைச்சிண்டு போனா ஆகாது. நீ பாட்டுக்கு இருபது வருஷமாறது 'அத்தை இப்படி எந்தக் கல்யாணத்துக்கும் வராம பண்றீங்களே'ன்னு சாவித்ரி கேட்கறா... ஆசையா கூப்பிடற மனுஷா. போனா சந்தோஷப்படுவா. ரெண்டு நாளா பிரஷர் கூட அவ்வளவா இல்லே. உன் கூடவே பஸ்ஸிலேயே வர்றேன். டிரெயின் வேண்டாம்... முகூர்த்தம் முடிஞ்சதும் ரெண்டு வாய் சாப்டுட்டு 'லேட்' பண்ணாம கிளம்பிடறேன். கல்யாணத்துக்கு சுந்தரேசன் வந்தான்னா 'அத்தை வைச்சுக்கோ'ன்னு ஏதாவது பணம் தருவான்... பஸ் சார்ஜுக்கு ஆகும்" என்னை தாஜா பண்ண ஏதேதோ சொன்னான். எனக்கு வேறு வழி தெரியவில்லை.

"சரி... சரி... கிளம்பு.. அதுக்குன்னு அங்க வந்து சுந்தரேசனை தேடிண்டு போய் அசிங்கம் பண்ணி வைக்காதே" என்று எச்சரித்து அழைத்து வந்தேன்.

நேற்று சத்திரத்திற்கு வந்தவுடன் அம்மாவை விட்டு விட்டு பஸ் நிலையத்திற்குப்



போனேன். ரிசர்வ் செய்ய நேரம் முடிந்து விட்டதென்றார்கள். பன்னிரெண்டு மணிக்கு மேல் வரிசையாக திருவன்று வருக்குக் குறைவில்லை என்றார்கள். பத்தரை பன்னிரெண்டு முகூர்த்தம்... ஒரு மணிக்கு சாப்பிட்டு எழுந்தால் கூட அப்படி இப்படியென்று இரண்டு மணியாகிவிடும்... எட்டு மணி நேரம் ஆகும் மெட்ராஸ் போக... பத்து மணிக்குக் கொண்டு விட்டாலும் பரவாயில்லை பல்லவன் இருப்பான்.

கல்யாணமென்று வருகிறோமே தவிர மனமெல்லாம் எப்போது முடியும் எப்போது பிய்த்துக் கொள்ளலாமென்றே பரபரக்கின்றது. சம்பந்தப்பட்டவர்களும் 'ஆச்சா கிளம்புங்க' என்று விரட்டாத குறைதான். 'தாம்பூலம் வாங்கிண்டீங்களா?' என்றால் 'இடத்தை காலி பண்ணுங்க' என்பது போலத்தான் தொனிக்கிறது இயந்திர உலகம். இதில் அம்மாவைப் போல பழங்கால ஜென்மங்கள்!

பாவம் என்னுடனேயே பந்தியில் அம்மா சாப்பிட்டு விட்டு தயாரானது போல்தான் தெரிந்தாள்.

"சரிம்மா... யார்யார்ட்டே சொல்லிக்கணுமோ சொல்லிண்டு புறப்படு.. உன் செருப்பை மேளக்காரன் உட்கார்ந்துண்டு இருக்கானே அந்த பெஞ்சுக்கடியிலே போட்டிருக்கேன்'' என்று அவசரப் படுத்தியபடி நான் ஸூட்கேஸை அடுக்க ஆரம்பித்தேன்.

"மூர்த்தி கைப்பை ஏதாவது கொண்டு வந்திருக்கியா?'' என்று அம்மா கேட்

டாள்.

"எல்லாம் இருக்கு... மாவடுதானே... தெப்பக்குளத்து வழியாத்தானே போறோம் வாங்கிண்டு போலாம்... ஆச்சுன்னு எல்லார்கிட்டேயும் சொல்லிண்டு வா."

"அதுக்கில்லேடா... கல்யாண பட்சணம் தருவா... போட்டுண்டு போலாம்னுதான்" என்றாள். எனக்கு எரிச்சலாகி விட்டது.

"என்னம்மா இது பட்சணம் அது இதுன்னு நேரமாக்கிட்டே போறே" நான் பல்லைக் கடித்துக் கொண்டு முணுமுணுத்தபோது அம்மா அந்த ரூமிற்குள் நுழைந்தே விட்டாள். பையன் வீட்டார் தங்கியிருந்த அந்த அறை ஒரே கனேபரமாக இருந்தது. பெட்டிகளும், பைகளுமாக பாதி அறையை அடைத்துக் கொண்டிருந்த சீர் பாத்திரங்கள் பரவிக் கிடக்க, சில பெண்டிர் பட்டுப் புடைவையை மாற்றி வேறு புடைவை கட்டிக் கொண்டிருக்க கதவு அடிக்கடி திறந்து சாத்தப்பட்டுக் கொண்டிருந்தது. உள்ளே நுழைந்த அம்மாவைக் காணவில்லை.

"எங்க அம்மா உள்ளே இருந்தா கொஞ்சம் அவசரமா கிளம்பணும்னு வரச் சொல்லுங்களேன்" என்று சொல்லியனுப்பினேன்.

அந்தம்மா திரும்பி வந்தாள்.


"இப்பத்தான் சீர் முறுக்கு, சீர் லட்டு எல்லாம் கொண்டு வைச்சாங்களாம்; பிரிச்சுண்டிருக்காங்களாம். வாங்கிண்டு உடனே வந்துடறேன்னு உங்ககிட்டே சொல்லச் சொன்னா" என்று போய் விட்டாள்.

எனக்குக் கோபமாக வந்தது. மணி ஒன்றரை. கிழவி கடைசியில் தன் வேலையைக் காட்டி விட்டாள். ஆத்திரத்துடன் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். நாலைந்து பெண் மணிகள் உட்கார்ந்து அட்டை பெட்டியிலிருந்து லட்டு முறுக்கு, அதிரசம் என்று எடுத்து விண்டு விண்டு பாக் கெட் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அம்மா அங்கு நின்று கொண்டு சுவாரஸ்யமாக பார்த்துக் கொண் டிருந்தாள். கிளம்ப வேண்டுமென்ற பிரக்ஞையே இல்லையா? நான் இங்கிருந்து சைகை காட்டியும் பார்ப்பதாகத் தெரியவில்லை. உள்ளே போகலாமென்று பார்த்தாலும் பெண்மணிகள், பெண் மணிகள்! ஒரே சங்கடம்!

"ஏண்டி பட்டு, அந்த மனோகரம் பருப்புத் தேங்க..ாய உடைச்சியன்" அம்மாவின் குரல்தான். சுவாதீனமாக கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள். இதென்ன லஜ்ஜையில்லாமல் கேட்டு வாங்கிக் கொள்ளும் பழக்கம்! ஐயோ நேரம் ஓடிக் கொண்டேயிருக்கிறதே... தவித்துக் கொண்டிருந்தேன். அரை மணி நேரம் கழித்து அம்மா வெளியே வந்தாள்.

"ஏம்பா... அதுக்குன்னு





கல்யாணம்னு வந்துட்டு பட்சணம் கூட வாங்காம கிளம்பினா நல்லாவாயிருக்கும் சொல்லு... இன்னும் தெரட்டிப் பால் கொண்டு வைக்கலே... நீ அவசரப்படறேயேன்னு வந்துட்டேன்'' என்று ஒரு பொட்டலத்தை கைப் பையில் போட்டபடி என்னை முந்திக் கொண்டு சமாதானப்படுத்தினான். நாலு பேர் நடுவில் என் கோபத்தைக் காட்ட முடியவில்லை.

''சரிதாம்மா... பேசாதே சட்னு கிளம்பு... என்ன பஸ் கிடைக்கப் போறதோ... மாவடு கேவடுன்னு இன்னும் டிலே பண்ண முடியாது நேரே பஸ் ஸ்டாண்ட்தான்.''

என் கோபத்தை மாவடுவை 'கட்' பண்ணியதன் மூலம் காட்டிக் கொண்டு பஸ் நிலையம் அடைந்தபோது மணி இரண்டரை. ரெடியாக திருவள்ளுவர் ஒன்று கிளம்பி இருந்தது. ஒழுங்காகவே போகும் பட்சத்திலும் குறைந்தது பத்தரை மணிக்குத்தான் சைதாப்பேட்டையில் போய் இறங்க முடியும். பாலவாக்கம் டவுன் பஸ் பத்து இருபதோடு சரி! ஆட்டோதான் வேறு வழியில்லை. பகீரென்றது. அம்மாவின் மேல் கோபம் கோபமாக வந்தது. பஸ்ஸில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. திண்டிவனத்தில் பஸ்ஸை நிறுத்தி விட்டு எல்லோரும் டிபன் சாப்பிடப் போன போதும் உம்மென்றுதான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். வயசானவளுக்கு ஒரு கப் காப்பி வாங்கித் தரக் கூட தோன்றாமல் என் கோபம் தடுத்தது.

''மூர்த்தி.. பையிலே பட்சணம் இருக்கு எடுத்து சாப்பிடேன்'' என்றாள்.

''இந்த பட்சணத்தை யார் இல்லேன்னு அழுதா... இப்பப் பாரு இதுக்காக நீ 'டிலே' பண்ணினதாலே சைதாப்பேட்டையிலேர்ந்து ஆட்டோலே போய் தொலைக்கணும்... ஐம்பது கேட்கறானோ... அறுபது கேட்கறானோ தெரியலே... வேண்டாம்னா வரேன் வரேன்னு கழுத்தறுக்கறே'' என்று என் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தேன்.

அம்மா எதுவும் பேசவில்லை.

''இந்தா நீயே தின்னு'' என்று பையை அவளிடம் பொத்தென்று போட்டேன்.

''எனக்கு இதையெல்லாம் தின்ற வயசாடா சொல்லு.. உடம்புக்கு ஆகாது.. பாட்டில்ல தண்ணியிருந்தா கொடு. போறும்'' என்று விட்டாள். பின்னே ஏன் பிக்காரிதனமாக இந்த அரை லட்டிற்கும், முக்கால் முறுக்கிற்கும் நேரத்தை வீணடித்திருக்கிறாள் என்று எனக்குத் தோன்றியது.

நான் நினைத்தது போலத்தான் ஆனது. பத்தே முக்காலுக்கு சைதாப்பேட்டையில் இறங்கிய போது ஆட்டோக்கள் மொய்த்துக் கொண்டன. பேரம் பேச முடியவில்லை. 'அறுபதுக்குக் குறைஞ்சி போவதடா கிஷ்டா' என்று ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் கறாராக பேசினார்கள்.

ஆட்டோவிலும் என் கோபம் தொடர்ந்தது. அறுபது ரூபாயை மூக்கால் அழுது விட்டு அம்மாவுடன் பாலவாக்கத்தில் வீட்டிற்கு முன் இறங்கிய போது வீட்டில் விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது.


''வந்தாச்சா.. இப்பத்தான் ஜுனூன் முடிஞ்சது... 'பாட்டி எப்ப வருவா எப்ப வருவான்'னு உங்க பேரன் முழிச்சிட்டேயிருக்கான்'' என்றபடி என் மனைவி கதவைத் திறந்தாள்.

''பாத்தி... பாத்தி'' என்று குழந்தை ராம்ஜி ஓடி வந்து என் அம்மாவை கட்டிக் கொண்டான். ''பச்சணம் எடுத்துண்டு வருவேன்னு சொன்னியே'' என்று அவளிடமிருந்து கைப் பையை பிடுங்கிக் கொண்டான்.

இவ்வளவு நேரம் அலைந்து வந்த பிரயாணக் களைப்பையும் மீறி அந்த வயதான முகத்தில் மகிழ்ச்சி விரிந்தது.

இன்னும் சில நாட்களில் ஆஸ்திரேலியாவில் பெண்களோடு சரி நிகர் சமானமாக ஆண்களும் வீட்டு வேலைகள் செய்யப் போகிறார்கள். 'கல்யாணத்திற்கு நிற்கும் பையன்களுக்கு' குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகள் முதலியவற்றை வகுப்பறைகளில் சொல்லித்தரப் போகிறார்களாம். அதிகமான விவாகரத்துக்கான காரணங்களை ஆராய்ந்தபோது, பெரும்பாலும் கணவன் வீட்டு வேலைகளை பகிர்ந்து கொள்வதில்லை என்ற காரணமே பூதாகாரமாக உருவெடுத்து விவாகரத்து வரை கொண்டு போய் விட்டிருக்கிறது எனத் தெரியவந்தது. இதை சட்டமாகவே மாற்றப்போகிறார்களாம்.

—கிருஷ்ணவேணி ரங்கநாதன்



நவீன அதிரடித் தற்காப்புக் கலை ரூ. 55.00




அகில இந்திய குங்ஃபூ தலைமைப் பயிற்சியாளரான திரு. எம்.பி. செல்வா எழுதியிருக்கும் எளிமையாகப் புரியும்படியான அற்புதமான புத்தகம் இது. 250க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம் பெற்றிருப்பதால் ஓர் வீடியோ கேஸட்டைப் பார்த்துக் கற்றுக்கொள்வது போன்று சுலபமானது. இக் கலையைப் பற்றி வெளிவரும் முதல் புத்தகம் இது. இதர நூல்கள் : வர்மக் கலையைக் கற்றுக்கொள்ளுங்கள் 27.00; கராத்தே கற்றுக்கொள்ளுங்கள் பாகம்-1 25.00; பாகம்-2 36.00; ஜுடோ கற்றுக்கொள்ளுங்கள் 21.00; குங்ஃபூ கற்றுக்கொள்ளுங்கள் 18.50; குத்துச் சண்டை கற்றுக்கொள்ளுங்கள் 18.00; சிலம்பம் கற்றுக்கொள்ளுங்கள் 25.00; புரூஸ்லியின் வாழ்க்கை வரலாறு 22.00; ஒலிம்பிக் அன்றும் இன்றும் 12.00; ஒலிம்பிக் பற்றிய சுவையான தகவல்கள் 17.00; செஸ் விளையாடக் கற்றுக்கொள்ளுங்கள் 16.00; நீங்களும் நீச்சல் பழகலாம் 7.50; கிரிக்கெட் தோன்றிய விதமும் விதிமுறைகளும் 15.50; கிரிக்கெட் விளையாடுவது எப்படி? 17.00; கிரிக்கெட் விநாடி-வினா 18.00; கிரிக்கெட் சாதனைகளும் சாதனையாளர்களும் 15.00; வரலாறு படைத்த கிரிக்கெட் போட்டிகள் 23.00; பரபரப்பான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் 22.00; புகழ்மிக்க இந்தியக் கிரிக்கெட் வீரர்களும், சாதனைகளும் 30.00; உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்களும் சாதனைகளும் 30.00; சாதனை மன்னன் கவாஸ்கர் 23.00; கிரிக்கெட் சிங்கம் கபில்தேவ் 22.50.

1997ஆம் ஆண்டு ராசி பலன் ரூ. 12.00

மேஷம்; ரிஷபம்; மிதுனம்; கடகம்; சிம்மம்; கன்னி; துலாம்; விருச்சிகம்; தனுசு; மகரம்; கும்பம்; மீனம் – ஆகிய 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் இந்த ஒரே புத்தகத்தில் மாதவாரியாக விரிவாகத் தரப்பட்டுள்ளன. ஜோதிடகர்த்தா திரு. விட்டலாபுரம் ராஜன் அவர்களின் துல்லியமான கணிப்பு 80% பொருந்தி வரும். இதர நூல்கள் : சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (16.4.98 வரை பலன்கள்) 15.00; ஜோஸ்யம் கற்றுக்கொள்ளுங்கள் 57.00; ஜாதகம் பார்ப்பது எப்படி? 40.00; மூச்சு ஜோதிடம் பார்ப்பது எப்படி? 10.50; மணிமேகலைத் தூய திருக்கணிதப் பஞ்சாங்கம் 1926 முதல் 2000 வரை 75 வருடங்களுக்கு 6 புத்தகங்கள். ஒரு செட்டின் விலை ரூ. 445.00; இதே போல் வாக்கியப் பஞ்சாங்க செட் ரூ. 460.00; பதஞ்சலி நாடி ஜோதிடம் பாகம்-1 72.00; பாகம்-2 51.00; அகத்தியர் நாடி ஜோதிடப்படி ஒவ்வொரு ராசிக்கும் ஒவ்வொரு புத்தகம். 12 புத்தகங்களின் விலை ரூ. 282.00; கைரேகை சாஸ்திரம் (250 பட விளக்கங்களுடன்) 87.00; அதிர்ஷ்ட நம்பர்கள் 47.00; புலிப்பாணி முனிவரின் ஜாதக [illegible] 57.00

குறைந்த பட்ஜெட் வீடுகளுக்கான சிறந்த பிளான்கள் பாகம்-1 ரூ. 30.00



250 சதுர அடியிலிருந்து 750 சதுர அடி வரையிலான வீடுகளுக்கான பிளான்களின் மாதிரிகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. ஒன்றரை லட்ச ரூபாய் பட்ஜெட்டில் வீடுகட்ட மிகச் சரியாகத் திட்டமிட முடியும். காரணம், வீடு கட்டத் தேவையான அனைத்துப் பொருட்களின் அளவுகள் தரப்பட்டுள்ளதுதான்; மார்க்கெட் விலையுடன் இவற்றைப் [illegible] தெளிவாகத் தெரிந்துவிடும். இதர நூல்கள் : குறைந்த பட்ஜெட் வீடுகளுக்கான சிறந்த பிளான்கள் பாகம்-2 ரூ. 30.00, பாகம்-3 ரூ. 30.00; நடுத்தர பட்ஜெட் வீடுகளுக்கான நல்ல பிளான்கள் பாகம்-1 ரூ. 30.00; பாகம்-2 ரூ. 30.00; பாகம்-3 ரூ. 30.00; பெரிய பட்ஜெட் வீடுகளுக்கான அழகான பிளான்கள் பாகம்-1 ரூ. 30.00; பாகம்-2 ரூ. 30.00; பாகம்-3 ரூ. 30.00; மேலைநாட்டுப் பாணி வீடுகளுக்கான பிளான்கள் ரூ. 30.00; 60 வகையான வரவேற்பறை மாதிரிகள் 20.00; 60 வகையான அலுவலக மாதிரிகள் 25.00; நவீன சமையலறை–குளியலறை மாதிரிகள் 25.00; 30 வகையான ஓட்டு வீடுகளுக்கான மாதிரிகள் பாகம்-1 ரூ. 24.00; பாகம்-2 ரூ. 30.00; 110 வகையான காம்பவுண்ட் சுவர் மாதிரிகள் 23.00; வீடு கட்டுவதற்குத் தேவையான தரமான பொருள்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி? 12.00; நீங்களும் சொந்த வீடு கட்டலாம் ரூ. 10.00, வீடுகட்டப் பல்வேறு கடனுதவிகளைப் பெறுவது எப்படி? 20.00.

சிவப்பாக ஆகவேண்டுமா? ரூ.12.00

கறுப்பாக இருப்பவர்கள் நிற மாற்றத்தைப் பெறுவது சாத்தியம். இந் நூல் இதற்கான நிறைய நடைமுறை வழிகளைத் தெரிவிக்கிறது. இதர நூல்கள் : நீங்கள் உயரமாக வளரவேண்டுமா? 9.00; ஒல்லியாக இருக்கும் நீங்கள் குண்டாக விரும்புகிறீர்களா? 8.00; உடல் பருமனைக் குறைக்கச் சுலபமான வழிகள் 15.00; முகப்பருவைப் போக்க முப்பது வழிகள் 15.00; உடம்பு உறுதியாக இருக்க வேண்டுமா? 13.00; உடல் உறுதி பெற உடற்பயிற்சி முறைகள் பாகம்-1 ரூ.15.00; பாகம்-2 ரூ. 32.00; பெண்களுக்கான எளிய உடற்பயிற்சிகள் ரூ. 14.00; தலைமுடியைப் பாதுகாப்பது எப்படி? 15.00; யோகாசனம் கற்றுக்கொள்ளுங்கள் 30.00; பெண்களுக்கான யோகாசனம் 16.00; இல்லற இன்பத்திற்கு உதவும் யோகாசன முறைகள் 21.00; தியான நெறிகளும் நன்மைகளும் 21.00; மூச்சுப் பயிற்சியும் ஒருமுகச் சிந்தனையும் 17.00; ஆரோக்கியத்திற்கான உணவு முறைகள் 15.50; வைட்டமின்களும் அவற்றைப் பெறும் முறைகளும் 10.00; முதலுதவி செய்வது எப்படி? 16.50; எது கடித்தாலும் வைத்தியம் 13.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். தோறும் விற்பனை நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி:

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447, 4, தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை – 600 017.

தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082

பிரிமியர்* மில்ஸ்

ப்ளவுஸ் துணிகளில் நெ. 1



நீங்கள் தேர்ந்தெடுக்க...

* ரூபி
* ஃபேர் & லவ்லி
* பிளாட்டினம் சூப்பர்
* லவ்லி லேடி

சேலையும் சோளியும் ...

இதுவல்லவா ஜோடிப்பொருத்தம் !

SASI / 469 / 94



• காயத்ரி தேவி

நவராத்திரியில் காயத்ரி மந்திரம்!

எல்லா மதங்களும் பெண்களுக்குச் சிறப்பான [illegible] அளிக்கப்பட்டுள்ளன. ஆண்களை விட பெண்களே புனிதமானவர்களாகக் கருதப்பட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல ஆண்களைப் போல் பெண்களும் ஆன்ம நிலையில் உயர்ந்தவர்களாக இருந்து வருகிறார்கள்.

அப்படியிருக்கும் பொழுது, வாரணாசி, இந்து பல்கலைக் கழகத்தில் வேதபாட வகுப்பில் சேர, குமாரி கல்யாணி என்கிற பெண் மனு செய்திருந்தார். "சாஸ்திரப்படி பெண்கள் வேத மந்திரங்களை சொல்லக் கூடாது" என்று காரணம் காட்டி இடமளிக்க மறுத்து விட்டார்கள். பல செய்தித்தாள்கள் ஆதரித்தும், எதிர்த்தும் எழுதி வந்தன. அப்பொழுது இது பற்றி ஆராய, மகான் மதன் மோகன் மாளவியா தலைமையில் ஒரு குழுவை பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்தது. அக்குழு சாஸ்திரங்களை அலசி, ஆராய்ந்து "ஆண்களைப் போல் பெண்களும் வேதம் பயிலலாம். ஆகையால் குமாரி கல்யாணிக்கு இட மளிக்க வேண்டும்" என்று முடிவை வெளியிட்டது. சானாதன தர்மத்தின் உயிர் மூச்சாகக் கருதப் படும் மதன்மோகன் மாளவியா 1946ம் ஆண்டு ஆகஸ்ட் 22ந் தேதி இதனை வெளியிட்டார்.

மைத்ரேயி என்கிற ரிஷிபத்தினி பிரம் மவாதினி (வேதங்களுக்கு விளக்கம் சொல்லக் கூடியவர்) என்று அழைக்கப்பட்டார். ஆதி சங்கரருடன் இறை குறித்து வாதம் புரிந்த பாரதிதேவியும் வேதம் கசடறக் கற்றவர்தான்.

...த்திரி ஓராண்டு காலம் காயத்ரி ஜபம் செய்து இறந்த கணவன் சத்யவானின் உயிரை ...னிடமிருந்து மீட்டிருக்கிறார்.

காயத்ரி வழிபாடு என்பது கடவுளை ...ாகப் பாவித்து வழிபடுவது.

காயத்ரி மந்திரம் –

'நம்முடைய உயிராற்றலாகவும், துக்கத்தை அழிப்பதாகவும், இன்பமே வடிவாகவும் உள்ள அந்த சூரியனைப் போன்ற ஒளிமய மானதும், ...னைவிட மேலாக ஒன்றும் இல் லாததும், ... பாபங்களை அழிக்கக் கூடி யதுமான தெய் ...ப் பரம்பொருளை நாம் மனதில் இருத்தி தியானிப்போமாக. அந்தப் பரம் பொருள் நமது அறிவை நல் வழியில் ஈடுபடுத்தட்டும்.'

– எனும் பொருளைக் கொண்டது.

இந்த காயத்ரி மந்திரத்தை மனதில் இருத்தித் தினமும் சொல்லுவதால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.


பெண்கள் காயத்ரி சாதனை செய்வது பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் சமஸ்கிருத அறிஞரும், எம்.ஓ.பி. வைஷ்ணவ் கல்லூரியின் முதல்வரான டாக்டர் திருவேங்கடத்தான் கூறுகிறார்–

"கன்னிப் பெண்கள் செய்யும் முறை:

ஒரு சுத்தமான பலகையில் கோலமிட்டு, விளக்கேற்றி, காயத்ரி படத்தை வைத்து, அதற்கு சந்தன குங்குமம் இட்டு, கண்களை மூடி 24 முறை காயத்ரி மந்திரத்தைச் சொல்ல வேண்டும். நைவேத்யத்திற்கு ஏதாவது இனிப்பு வகை, நவதானியங்களை வைத்து, கற்பூர தீபம் காட்ட வேண்டும்.

இப்படி நவராத்திரி ஒன்பது நாட்களும் செய்வ தால் நல்ல கணவனும், வளமான வாழ்க்கையும் அமைய உதவும்.

பத்து இலட்சத்திற்கும் மேலான இந்தியக் குடும்பங்கள் கடைக்குச் செல்லாமலே யூரோக்ளீன் வேக்யும் க்ளீனர் வாங்கியுள்ளனர்.



இன்று, ஒரு வாஷிங் மெஷின் அல்லது ஃப்ரிட்ஜைப் போல் அத்தனை அத்தியாவசியமாகி விட்டது ஒரு வேக்யும் க்ளீனர். ஆனால் ஒரு கேள்வி எழுகிறது: சரியான ஒன்றை ஒருவர் எவ்வாறு வாங்குவது? இந்தக் கேள்விக்கான விடையை நாங்கள் உங்களுக்காக எளிதாக்குகிறோம். நீங்கள் உங்களையே இந்த நான்கு கேள்விகளைக் கேட்டுக் கொள்வதே மிகச் சிறந்ததாகும்.

கே: உங்கள் இல்லத்தில் இதன் நேர்முறை விளக்கம் செய்யப்படுகிறதா?

முழுமையான நேர்முறை விளக்கத்திற்குப் பிறகே ஒரு வேக்யும் க்ளீனர் வாங்கப்பட வேண்டும். நீங்கள் ஒரு கடையில் வாங்கினால், அதன் நேர்முக இயக்கத்தை உண்மையில் நீங்கள் காண முடிவதில்லை. உங்கள் இல்லத்தில் செய்யப்படும் நேர்முக விளக்கம் உங்களுக்குத் திருப்தி அளிக்கும்.

கே: வாங்குவதற்கு முன் நீங்கள் அதைச் சோதித்துப் பார்க்க முடியுமா?

சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபர் யூரோக்ளீனை, நீங்கள் உங்கள் இல்லத்தில், உங்கள் கைப்படவே சோதித்துப் பார்க்க அனுமதிப்பார்.

கே: பத்து இலட்சத்திற்கும் மேலான குடும்பங்களின் விருப்பத் தேர்வாக இது உள்ளதா?

உண்மை என்னவென்றால் யூரோக்ளீன் வேக்யும் க்ளீனர் முற்போக்கான, பன்முகத் திறன் கொண்ட மற்றும் உங்கள் தேவைகளுக்கான கச்சிதமான படைப்பாக விளங்குகிறது. எனவே பத்து இலட்சத்திற்கும் மேலான குடும்பங்கள் இதை விரும்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கே: காலதாமதம் இல்லாத, விற்பனைக்குப் பிந்திய பணிச்சேவை, வசதியாக உங்கள் இல்லத்திலேயே கிடைக்கும் என்பதற்கான உறுதி நிச்சயம் உண்டா?

நினைவிருக்கட்டும், சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபர் மட்டுமே, தாமதமில்லாத, விற்பனைக்குப் பிந்திய பணிச்சேவையை, 48 மணி நேரத்திற்குள் உங்கள் இல்லத்தில் வழங்க முடியும்.

அனைத்து கேள்விகளுக்கும் இப்போது சரியான விடை உங்களுக்குக் கிடைத்துவிட்டது. சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபரிடமிருந்து ஒரு வேக்யும் க்ளீனரை வாங்குவதை பெரும்பான்மையான குடும்பங்கள் ஏன் விரும்புகின்றன என்பது தெள்ளத் தெளிவாகி விட்டதல்லவா?

ஒரு அழகான இல்லத்தின் அணிகலன் யூரோக்ளீன் வேக்யும் க்ளீனரே. இல்லத்தில் இலவச நேர்முக விளக்கம் பெற, சிநேகபூர்வமான யூரேகா ஃபோர்ப்ஸ் நபரை இன்றே அழைக்கவும்.

EUREKA FORBES LTD.

Friends for life

A subsidiary of Forbes Gokak Ltd.

MUMBAI : TEL : 4301725, 4301718. DELHI : TEL: 6427401, 6427415. MADRAS : TEL: 4348328, 4348304. BANGALORE : TEL: 5536362, 5536383.



திருமணமான பெண்கள் செய்யும் முறை:

சுத்தமாக மஞ்சள் தேய்த்துக் குளித்து, மஞ்சள் நிற ஆடை உடுத்தி இந்த மந்திரத்தைச் சொல்லலாம். அப்படிச் சொல்லும் பொழுது கிழக்கு முகமாக அமர்ந்து கொள்ள வேண்டும். சந்தனம் குங்குமப் பூ (சிறிதளவு) இரண்டையும் குழைத்து நெற்றி தொண்டை, மார்பில் பூசிக் கொள்ள வேண்டும். மஞ்சள் கலந்த பூ, மஞ்சள் கலந்த அட்சதை ஆகியவற்றால் அர்ச்சனை செய்ய வேண்டும். கண்களை மூடி 24 முறை இதை ஜெபிக்க வேண்டும். மஞ்சள் நிற ஆடையில் அம்பாள், மஞ்சள் நிற புலி வாகனத்தில் வருவது போல் நினைத்து மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். நைவேத்யத்திற்கு லட்டினை வைக்க வேண்டும். இதில் எல்லாமே மஞ்சள் நிறம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இப்படிச் செய்வதால் தீய எண்ணம், கெட்ட நடத்தை உள்ள கணவன்மார்கள் திருந்துவார்கள். குடும்பத்தில் நோய், நீங்கி நலம் பெருகும். பணக்கஷ்டம், தகராறுகள் தீரும். மாங்கல்யபாக்யம் பெருகும்.

குழந்தைச் செல்வத்தைப் பெறுவதற்கு:

குழந்தை இல்லாத பெண்கள் நன்கு குளித்து, ஈரத்துணியுடன் உட்கார்ந்து தியானம் செய்ய வேண்டும். கண்களை மூடிய நிலையில் காயத்ரி மாதாவை, பேரொளியாக ஒளிமயமாக தோன்றுவது போல் கற்பனையில் கொண்டு வர வேண்டும். அவ்வொளி கருவாய் வழியாக தங்கள் கருப்பைக்குள் செல்வது போல் பாவித்து 24 முறை தியானம் செய்ய வேண்டும். தியானம் முடிந்தவுடன் உள்ளங்கையில் சிறிது நீரை எடுத்து "இது சூரிய பகவானுக்கு அர்ப்பணம்" என்று கூறி, ஜலத்தைத் தரையில் விட்டு விட்டு, இரண்டாம் முறை எடுத்து, கோயில் தீர்த்தம் சாப்பிடுவது போல் பருக வேண்டும்.

இப்படிச் செய்வதால் கருச்சிதைவு ஏற்படுதல், குழந்தை இறந்து பிறத்தல், குழந்தை பிறந்தவுடன் இறத்தல் ஆகியவை நீங்கும்.

நல்ல குழந்தைகளாய் வளர:

தாய்மார்கள், சுத்தமாகக் குளித்து, கண்களை மூடி, 24முறை ஜபிக்க வேண்டும். காயத்ரி மாதா ஒரு அன்னத்தின் மேல் இருப்பதாகவும், வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் வைத்திருப்பது போல் கற்பனை செய்து, முடிவில் சிறிது நீரை சூரியனுக்கு அர்ப்பணம் செய்து, பிறகு சிறிது நீரை குழந்தைகள் தலையில் தெளிக்க வேண்டும்.

இப்படிச் செய்வதால் நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் நோய் நீங்கியும், தீய எண்ணங்கள் உடையவர்கள், அது நீங்கி நல்ல குழந்தைகளாக வளர மாற்றங்களைச் செய்யும்.

வயதானவர்கள் செய்ய வேண்டியது:

இவர்கள் காயத்ரி மாதாவை நான்கு கைகள் உடையவளாகவும், நான்கு கரங்களிலும் ஜபமாலை, புத்தகம், கமண்டலம், தாமரைமலர் முதலியவற்றை வைத்திருப்பது போலவும், வெள்ளைப் புடைவை உடுத்தி, காளை மாட்டின் மேல் அமர்ந்திருப்பவள் போலவும் கற்பனை செய்து தியானிக்க வேண்டும்.

இதைச் செய்வதால் புலனடக்கம் ஏற்பட்டு புனிதமாக வாய்ப்புண்டு. சத்வ குணம் தோன்றும். அமைதியும், தெளிவும் ஏற்படும்.

முக்கியமாக காயத்ரி மந்திரம் சொல்லும் பொழுது தொண்டையிலிருந்து ஒலி வரவேண்டும். உதடுகள் அசைய வேண்டும். ஆனால் என்ன சொல்லுகிறோம் என்பது அருகில் இருப்பவர்களுக்குக் கூட கேட்கக் கூடாது என்பது ரொம்பவும் முக்கியம்."

சரி. காயத்ரி மந்திரம் என்பது பூணூல் போட்டவர்கள் தான் ஜபிக்க வேண்டும் என்று சாஸ்த்திரங்கள் சொல்லுகின்றன. அப்படியிருக்கும் பொழுது பெண்கள் எப்படி காயத்ரி ஜபம் சொல்லலாம்?

ஆதித்யன் என்கிற தர்ம சாஸ்திரர், பெண்களுக்கு ருது ஆவதற்கு முன் பூணூல் அணிவிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

மனு என்கிற தர்ம சாஸ்திரர், பெண்களுக்குத் திருமண காலத்தில் பூணூல் அணிவிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

ஆனால் சாஸ்திரங்களுக்கு உரை எழுதியவர்கள் சாஸ்திரங்களை தளர்த்தி இருக்கிறார்கள். அதாவது பூணூல் போட்டுக் கொள்வது போல், பெண்கள் பாவனையாக புடைவை உடுத்திக் கொள்வதால் பெண்கள் வேதம் பயிலலாம்; காயத்ரி சொல்லலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் அம்பாளை வழிபட, (காயத்ரி சொல்ல) பெண் என்பதால் எந்தத் தடையும் கிடையாது. அசுத்தமான நாட்களைத் தவிர்த்து பாக்கி எல்லா நாட்களிலும் காயத்ரி சொல்லலாம். முக்கியமாக நவராத்திரியில் சொல்லுதல் ரொம்பவும் விசேஷம்."

பேட்டி : மாலதி சந்திரசேகரன்

முத்துவேல் இண்டஸ்ட்ரீஸ்

(முத்துவேல் குரூப் நிறுவனங்கள்)

பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று பிக்சட் டெபாசிட் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

ஆண்டுக்கு

உங்கள் பிக்சட் டெபாசிட்டுக்கு கணக்கிடப்படும் வட்டி விகிதம்

24%

குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 10,000/-

உங்கள் குமுலேட்டிவ் டெபாசிட்டுகளுக்கு முதிர்வு தொகை அட்டவணைப்படி அளிக்கப்படும்

மாதங்கள்	ரூ. 10,000-க்கு முதிர்வு தொகை
12	12,600
24	15,876
36	20,004
48	25,205
60	31,756

குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 10,000/-

- முதல் டெபாசிட்டிற்குதான் குறைந்தபட்ச தொகை. அதே பெயரில் மீண்டும் டெபாசிட் செய்தால் ரூ. 1000/- அதற்கு மேலும் அனுப்பலாம்.
- மக்கள் சேவையில் 49 ஆண்டுகள்.
- 75% வரை கடன் பெறும் வசதி.
- முதிர்வு தேதிக்கு முன்பே முழுத்தொகை தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதிர்வு தேதிக்கு 10 தினங்கள் முன்னதாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்படும்.
- நம்பிக்கையும் துரித சேவையும் எமது தாரக மந்திரங்கள்.

வியாபார வளர்ச்சிக்கு வசதியான சேவல் மார்க் பைல்களையே எப்போதும் உபயோகியுங்கள்.
TAG FILE, CLIP FILE, LEVER FILE
COMPUTER FILE, FIBRE BOARD FILE, WRITING PAD.

COCK BRAND FILE
TRADE MARK

MUTHUVEL INDUSTRIES

Mfrs. of COCK BRAND OFFICE FILES
Angappa Chettiar Industrial Complex,
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.
Ph: Off: (0451) 26850 & 27637.
Res : 26858 & 27011 Grams: COCKFILE

உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி

"ரிசர்வ் வங்கி சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45S-ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்குட்பட்டு டெபாசிட்களைப் பெறுகிறோம்".



* படம் : ராஜநாராயணன்

இருபத்தியோராம் நூற்றாண்டின் குழந்தைகளுக்காக...

டீன் ஏஜில்.....

இவ்வயதுக் குழந்தைகளிடம் அதிகமாக காணப்படுவது அரட்டைச் சுகமும், ஆடம்பரப் பிரியமும்தான். அவசியமற்ற விஷயங்களைப் பற்றிப் பேசி இன்புறுவதே அரட்டைச் சுகமாகும். இதனால் எவ்வளவு நேரம் விரயமாகிறது என கணக்கிட்டால் அதன் தீமை புலப்படும். மேலும் 'வாக்குத் தவம்' என்ற உயர்ந்த நோக்கத்திற்காக பயன் படுத்த வேண்டிய பேச்சாற்றலை தேவையற்ற விஷயங்களைப் பற்றிப் பேசி, வீணாக்கக் கூடாது என்பதை தாய் அடிக்கடி குழந்தைகளுக்கு நினைவுபடுத்த வேண்டும். இதில் தாய் மறக்கக்கூடாத ஒரு விஷயம் என்னவென்றால் குழந்தைகள் எவ்வாறு நடக்க வேண்டுமென தாய் கூறும்போது, அது போல தானும் நடந்து காட்ட வேண்டும். தாய் 'சொல்வது ஒன்று, செய்வது வேறு' என நடந்து கொண்டால் குழந்தைகள் சிறிதும் மதிக்காமல் கெடும். வீட்டிலுள்ளவர்களைப் போலவே குழந்தைகள் நடக்க விரும்புதல் இயற்கை. ஆகவே குழந்தைகள் தவறு செய்தால் முதலில் தாய் தன்னிடத்தில் ஏதேனும் குறையுள்ளதா என அறிய வேண்டும். அல்லது குழந்தையுடன் பழகும் பிறரிடம் குறையுள்ளதா என அறிந்து, களைய வேண்டும்.

ஆடம்பரப் பொருட்களை வாங்குவதை தாய் தவிர்க்க வேண்டும். நமக்கு அவசிய மில்லாத பொருட்கள் ஆடம்பரப் பொருட்களாகும். உதாரணமாக வீட்டிலுள்ள ஒரு தாய், உதவிக்கு வேலைக்காரியோ, மற்றவர்களோ

இருக்கும்போது, கடன் வாங்கி துணி துவைக் கும் இயந்திரம் வாங்குவது ஆடம்பர மாகும். ஆனால் வேலைப்பளு அதிகமாக உள்ள தாய், நேரத்தை மிச்சப் படுத்த அது போன்ற பொருட்களை கடன் வாங்கி வாங்கினாலும் அது ஆடம்பரமல்ல. மிச்சப்படும் நேரத்தைப் பயனுள்ள வேலைகளுக்குச் செலவழித்தால் அது அத்தியாவசியமான பொருளே.

இவ்வயதுக் குழந்தைகள் ஆடம்பரமாக வாழ நினைப்பது இயற்கை. ஆனாலும் அதைத் தடுக்க வேண்டும். கண்டிப்பதால் எதிர்மறை யான விளைவுகளே ஏற்படும். என்ன செய்வது? ஆடம்பர வாழ்வு வாழ்ந்தால் பல துன்பங்களை அனுபவிக்கும் சில குடும்பங்கள் ஆங்காங்கு இருக்கத்தான் செய்கின்றன. அவர்களைப் பற்றி தாய் கூறி குழந்தைகளை எச்சரிக்கைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக குடும்பத்தின் வரவு செலவு கணக்கு குழந்தைகளுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். முடிந்தால் அவர்களையே கூட வரவு செலவு திட்டத்தை தயாரிக்கச் சொல் லவும். தங்களிடம் தரப்பட்ட பொறுப்பை நல்லபடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இயற்கையாகவே குழந்தைகளிடம் உள்ளதால், நல்லமுறையில் திட்டமிடுவர். அவசியமற்ற செலவினங்களை அவர்களாகவே தவிர்த்து விடுவார்கள் 'சிக்கனம் தெய்வ சம்பத்து' என்ற எண்ணத்தை தாய் குழந்தைகளிடத்தில் ஏற் படுத்த வேண்டும்.

சிக்கனத்திற்கும் கருமித்தனத்திற்கும் வேறுபாடு உண்டு. அவசியமான செலவுகளைக் கூட செய்யாமல் இருப்பது கருமித்தனம். அவசி யமில்லாத செலவுகளைச் செய்யாமல் இருப்பது சிக்கனம். எது அவசியம், எது அவ சியமற்றது என்பதைத் தாய் குழந்தைகளுக்கு விளக்க வேண்டியது மிக அவசியம். சிக்கனம் என்ற பெயரில் சரியாக சாப்பிடாமல் உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டால் பல மடங்கு பிறகு செலவு செய்ய வேண்டியிருக்கும். தூய் மையைக் கடைபிடிக்க வேண்டிய விஷயங் களில் சிக்கனத்தைப் பார்க்கக் கூடாது. அதாவது மட்டமான சோப்புக்களை உப யோகித்துத் தோலையும், துணிகளையும் பாதிக்கச் செய்வது அல்லது அவற்றை மிகக் குறைவாகப் பயன்படுத்தி அழுக்குடன் இருக்கச் செய்வது முதலியன தவிர்க்கப்பட வேண்டும். எளிமை, தூய்மை, வாய்மை, உழைப்பு, அடக்கம் ஆகிய பண்புகளை இந்த வயதில் குழந்தைகளிடத்து ஏற்படுத்துவது தாயின் கடமையாகும். இவை ஐந்தும் சேர்ந்த இடத்தில் இறையருள் நிச்சயம் காணப்படும். ஆடம்பரம் உள்ள இடத்தில் அடக்கம் இராது. பிறர் பாராட்டை எதிர்பார்த்து ஆடம்பரச் செலவுகளை இன்று செய்தால் நாளை பிறர் தூற்றலை தவிர்க்கவே முடியாது.

பிறர் பரிகசிப்பு அல்லது பாராட்டாமல் மனம் சலனப்படாமல் இருக்கும் தன்மையை இவ்வயதிலே புகுத்த தாய் முயல வேண்டும். நாம் சரியான, நல்ல வழியில் போகும்போது இறைவன் துணை நமக்கிருப்பதால் மற்றவர்கள் கருத்தைப் பற்றி கவலைப்பட வேண்டிய தில்லை. பிறர் இகழ்ச்சியாகப் பேசினாலும் 'அது அவர்கள் கருத்து, சொல்லிவிட்டு போகட் டும். நான் அதை ஏற்றுக் கொண்டால்தான் தவறு' என குழந்தை நினைத்து இயவர்களிட மிருந்து ஒதுங்கிப் போகும் மனநிலையை குழந்தை களுக்கு தாய் ஏற்படுத்த வேண்டும்.

அப்போது பிறர் கருத்துக்களுக்கு செவி சாய்க்கக் கூடாதா என்ற கேள்வி எழும். பிறர் நம்மைப் பரிகசிக்கும்போது அல்லது இடித் துரைக்கும்போது, நாம் அவ்வாறுதான் நடந்து கொள்கிறோமா என யோசித்து நம்மிடத்தில் தவறு இருந்தால் நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். இங்கு பிறர் கருத்துக்கு மதிப்பு கொடுக்கிறோம்.

'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப் பாரிலும் கெடும்'

என்ற குறளில் வள்ளுவர் கூறுவது ஒரு பெரிய அரசனாக இருந்தாலும் அவன் செய்யும் தவறைச் சுட்டிக்காட்டி திருத்துபவர் இல்லையென்றால், அவனைக் கெடுக்க யாருமே இல்லையென்றாலும் அவனேகெட்டு அழிவான் என்பதாகும்.

அன்புள்ளம் கொண்ட தாய் (அ) யாராக இருந்தாலும், தான் நேசிப்பவர், முக்கியமாக அன்பு காட்டும் குழந்தைகள் அல்லது பிறர் தவறு செய்யும்போது, தக்க முறையில் சுட்டிக் காட்டி இருத்தி நல்ல வழியில் செலுத்த



பருத்திக் காய்களை (இலவம் பஞ்சு) இரண்டாகப் பிளந்து அதன் நடுவில் காகிதத் தால் பாய்மரம் ஒட்டி படகு மரம் போல செய்து நம் கொலு குளத்தில் மிதக்க விடலாம். தீப்பெட்டியை காகிதத்தால் ஒட்டி கதவு வைத்து அதை பருத்திக் காயின் நடுவில் வைத்து படகு வீடு போலவும் வைக்கலாம்.

—கே. சௌந்தர்யா

ரவா உப்புமாவை சிறிது மாற்றிச் செய்யலாம். சாதாரணமாக உப்புமாவில் இஞ்சி சேர்த்தால் குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை. அதனால் உப்புமாவிற்குப் போடும் போது இஞ்சி, பச்சை மிளகாயுடன் கொஞ்சம் தேங்காயும் சின்ன தக்காளியையும் வைத்து அரைத்துக் கொதிக்கும் நீரில் கலந்து உப்புமா செய்தால் உப்புமா சூப்பராக இருக்கும்.

– எஸ். லலிதா



வேண்டும். இவ்வயதுக் குழந்தைகளில் பலரிடம் காணப்படும் தன்மை சோம்பலும், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணமும்தான். இவற்றை நீக்கி குழந்தைகளை உற்சாகத்துடன் உழைக்கச் செய்வது தாயின் கடமையாகும்.

நேரத்தை வீணாக்காமல் அவரவர்க்குரிய கடமைகளை (படிப்பதோ, வேலை செய்வதோ) மிக நன்றாகச் செய்ய தாய் ஊக்குவிக்க வேண்டும். 'The deadliest sin is laziness' அதாவது பாவங்களிலேயே மிகப் பெரிய பாவச் செயல் சோம்பலாக இருத்தல் என்ற உண்மையை தாய் குழந்தைக்கு கற்பிக்கத் தானே அயராது உழைத்துக் காட்ட வேண்டும்.

தவறு என்றால் என்ன? நல்லது, கெட்டது எனப் பகுத்துணரும் பக்குவமின்றிச் செய்யும் நன்மையற்ற செயல் தவறு எனப்படும். ஆனால் நல்லது எது? கெட்டது எது எனப் பகுத்துணரும் அறிவு இருந்தும், அறிந்தும் செய்யும் தீய செயல் 'தப்பு' மன்னிக்க முடியாதது. 'தவறு' மன்னிக்கக் கூடியது. 10 வயது முதல் 20 வயது வரையிலுள்ள குழந்தைகள் செய்வது அநேகமாக தவறு தான். தப்பல்ல. ஆகவே அவர்களிடம் கோபப் படாமல் அன்புடன் தாய் விளக்கம் தர வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம். இவ்வயதுப் பெண் குழந்தைகள் உள்ள வீட்டில் ஏற்படும் ஒரு போராட்டம் உடையைப் பற்றியது. பாட்டி புடவைதான் சிறந்தது என்றும், அம்மா சுடிதார் போட்டால் தப்பு இல்லை என்றும், மகள் பேண்ட், ஷர்ட் தான் மாடர்ன் என்றும் தர்க்கம் செய்வதை ஆங்காங்கு காண்கிறோம். இந்த மூன்று வகை உடைகளோ (அ) வேறு மாதிரியான உடைகளோ எதுவாயினும் உடை மாதிரியில் ஒவ்வொன்றும் சிறந்ததே. உடுத்தும் முறை சரியில்லையெனில் எந்த உடையும் சிறந்ததல்ல. புடவையை மோசமாக உடுத்தி, அதன் சிறப்புத் தன்மையை கெடுப்பவர்களும் உண்டு. அதே புடவையை நல்ல முறையில் உடுத்துபவர்களும் உண்டு. ஆகவே புடவை மீது பற்றுள்ள பாட்டி, பேத்திக்கு என்ன கூற வேண்டும்?

"நாம் உடுத்தும் உடை பிறரிடம் தீய எண்ணங்களை ஏற்படுத்தாதபடி இருக்க வேண்டும். புடவையைக் கூட சிலர் உடல் வளைவுகள் தெரியும்படி உடுத்தி, தீயோர் பார்வையைச் சுண்டியிழுத்து பிரச்னைகளை உண்டாக்கிக் கொள்கின்றனர். சுடிதார், பேண்ட் ஷர்ட் முதலியன உடலின் பெரும் பகுதியை மூடி விடுவதால் சிறந்தவைதான். ஒரு சிலர் அவற்றை இறுக்கமாக அணிவதால் மார்பகம், இடுப்பு வளைவுகள், நல்லவர்களுக்கு அருவருப்பையும், கெட்டவர்களுக்கு மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. கெட்டவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தால் அவர்களால் பல பிரச்னைகள் ஏற்படும். ஆகவே சுடிதார் அணிவதாக இருந்தால் தளர்த்தியாக அணிதல் நலம். இறுக்கமானதாக இருந்தால் மேலே ஒரு மேலாடையை வளைவுகள் தெரியாவண்ணம் அணிந்து கொள்ள வேண்டும். அப்போது அது சிறந்த உடையாகிறது. ஷர்ட் போடுவதாக இருந்தால் அவசியம் தளர்த்தியாக போட வேண்டும்.

எந்த உடை வேண்டுமானாலும் அணிந்து கொள். ஆனால் பிறர் திருட்டுப் பார்வையைச் சுண்டியிழுக்காதபடி உடுத்திக் கொள். நீ உடுத்தும் உடை பிறர் மனதில் மரியாதையைத் தோற்றுவிக்க வேண்டும். அழகாக உடுத்திக் கொள். ஆனால் கவர்ச்சிகரமாக உடுத்தாதே. உடை விஷயத்தில் நீ கவனமாக இருந்தால் உனக்கு வரும் பல தீங்கிலிருந்து உன்னை நீ காப்பாற்றிக் கொள்ளலாம்."

என்று விளக்கம் கூறினால் எந்தக் குழந்தை கேட்காமல் இருக்கும். அதை விடுத்து தாயோ பாட்டியோ 'நீ இதைத்தான் உடுத்த வேண்டும். யாராவது ஏதாவது கூறுவார்கள்' என கூறினால் குழந்தை கேட்காது. தவறு குழந்தையினுடையது அல்ல. பெரியவர்களுடையது தான்.

இந்த வயதுக் குழந்தைகள் சிலர் சேர்ந்தால் வம்பளப்பது வழக்கமாகி விட்டது. அந்தக் கும்பலில் தன்னையே 'ஹீரோ'வாக பிறர், சுற்றியுள்ளோர் கருத வேண்டுமென்ற ஆர்வத்தில் செயற்கையான அட்டகாசத்துடன் சத்தத்துடன் சிரித்து, பேசி மகிழும் இளையவர்களை பெரியவர்கள் மதிக்க மாட்டார்கள். ஆகவே தேவையில்லாத இடங்களில் தேவையற்ற பேச்சுக்களை, சத்தம் போட்டு வம்பளப்பதை

தவிர்க்குமாறும், அத்தகையோருடன் பழகா திருக்குமாறும் தாய் எச்சரிக்கை செய்ய வேண் டும் (அன்புடன்)

நம் பேச்சு, நம் உடை, இரண்டிலும் கவனத்துடன் இருந்தால் பல பிரச்னைகளுடன் போராட வேண்டிய அவசியமில்லையாதலால் அதிக நேரத்தை நம் கடமைகளைச் செய்ய ஒதுக்கி, நம்மை உயர்த்திக் கொள்ள முடியும். இப்படியிருந்தால் ஒன்றும் தெரியாத பெண், ஏமாளியாக இருக்கும், இத்துடன் பழகி ஏமாற்றலாம் என பிறர் நினைப்பார்கள் என ஒரு சிலர் கூறலாம். நமக்கு எல்லாம் தெரியும் என காட்டிக் கொள்ள வேண்டியது அவசிய மில்லை. அதற்காக அலட்டிக் கொள்வதற்குப் பதிலாக தேவையான சமயத்தில் நம் வலிமையைக் காட்டினால் போதுமானது என தாய் தன் மகளுக்குக் கூறி நல்வழிப்படுத்த வேண்டும். இங்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ள ஒரு கதையைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

'ஒரு ஊரில் ஒரு கொடிய நாகம் இருந்தது. அந்த ஊரில் உள்ள பலரைக் கடித்து அடிக்கடி துன்பத்தைக் கொடுத்தது. அந்த நாகத்தைக் கண்டாலே அனைவரும் அஞ்சி ஓடினர். ஒருநாள் தவசி, ஒருவர் அவ்வூருக்கு வந்து பிரசங்கம் செய்தார். எந்த உயிர்க்கும் தீங்கு இழைக்காமல் வாழ வேண்டும் என மக்களுக்கு அறிவுரை வழங்கினார். தான் இருக்கும் மறைவிடத்திலிருந்து அந்த நாகமும் இதைக் கேட்டது. தான் இதுவரை செய்த கொடுமை களை எண்ணி வருந்தியது. இனி எந்த உயிர்க்கும் தீங்கு செய்வதில்லை என முடிவு செய்தது.

தன் இரையைத் தேட வெளியே வந்தபோது அந்தப் பாம்பு யாரையும் கடிக்க வில்லை. பாம்பைக் கண்ட உடனே ஓடும் மக்கள், அது எந்தத் தீங்கும் செய்யாததைக் கண்டு, பாம்புக்கு வயசாகி விட்டது போலும் அல்லது அதன் விஷப் பற்கள் விழுந்து விட்டது போலும் என முடிவு செய்து ஓடுவதை நிறுத்தி முதலில் மெல்ல அருகில் வந்தனர். பாம்பு ஒன்றும் செய்யாததைக் கண்டு தைரியமடைந்து பெரியவர்களும் சிறியவர்களும் பாம்பின் மேல் கற்களை வீசி துன்புறுத்தினர். பாம்பு ஓடி ஒளிந்தது. தன் உணவுக்காகவும் வெளியே வர முடியாதபடி துன்புறுத்தியதால் நாளடைவில் மெலிந்தது. அப்போதும் அந்தப் பாம்பு தவசி சொன்னதை மறக்கவில்லை. யாருக்கும் தீங்கு செய்யாமல் இருந்தது.

மீண்டும் ஒருநாள் அந்தத் தவசி ஊருக்கு வந்தார். அவரைக் கண்டதும் அப் பாம்பு மெல்ல ஊர்ந்து சென்று வணங்கியது. குற்றுயி ராய்க் கிடந்த அந்தப் பாம்பை கண்ட தவசி மனம் உருகினார். அவர் பேச்சைக் கேட் டதிலிருந்து அதன்படி நடப்பதாகவும், மக்கள் துன்புறுத்துவதாகவும் கூறியது. அதற்கு அந்த மகான், "யாருக்கும் துன்பம் செய்யக் கூடாது என்று கூறினேன். ஆனால் உனக்குத் துன்பம் தருபவரிடம் சீறி உன்னைக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். யாரையும் கடிக்கக் கூடாது. ஆனால் தீயவர்களிடம் சீறி பயமுறுத் துவது உன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். உன்னை நெருங்க அஞ்சுவர்" எனக் கூறினார். பாம்பும் அதன் படியே செய்து தானும் துன் புறாமல், யாரையும் துன்புறுத்தாமல் நல்வாழ்வு வாழ்ந்தது.

இந்த பாம்பைப் போல் நாம் ஒவ்வொரு வரும் வாழ வேண்டும். முக்கியமாக 10-20 வயது குழந்தைகள், அதிலும் பெண் குழந்தைகள் தீயோரிடம் சீறி தங்களிடம் நெருங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என தாய் மகளுக்குக் கூற வேண்டும். நல்லோரிடம் மிக அடக்கமாக நடந்து கொள்ள வேண்டும். நல்ல வர்களிடத்து நல்லவர்களாகவும் தீயோரிடத்து சீறியும் அதாவது துன்புறுத்த முடியும் என்பதைக் காட்டியும் நடந்து கொள்ள வேண் டும். தீயோரிடம் நல்ல பெயர் எடுக்க ஒரு போதும் விரும்பக் கூடாது.

ஆண் குழந்தைகளையும் இந்த வயதில் அதிகமாக வெளியே சுற்ற விடக் கூடாது அதிக மனப் பக்குவம் பெறாத நிலையில். அதேபோல் அதிக மனப் பக்குவம் அற்ற பிற ஆண் குழந் தைகளுடன் பழகினாலும் பல தீய பண்புகள் படியலாம். ஆகவே வெளியில் பழகுதல் அளவோடு இருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகளுக்கு வேண்டிய அளவு அன்பும் பாசமும் கிடைத்தால் அவர்கள் ஏன் வெளியே சுற்றச் செல்கிறார்கள். வீட்டிலேயே இருந்து நேரத்தை வீணாக்காமல் படித்து முன்னேறுவர். இவர்களைச் சிறந்தவர்களாக மாற்றுவதில் தாயின் பங்கு மிக அதிகம்.

- மல்லிகா பலராமன்

(தொடரும்)

பெண்கள் பாத்ரூமில் மஞ்சள் பொடியைக் கப்பில் வைப்பதற்கு பதிலாக, உப்பு, மிளகுத்தூள் தூவும் பிளாஸ்டிக்கில் துளைகள் வைத்த டப்பாவில் போட்டு வைத்தால் கீழே கொட்டவும் கொட்டாது. தண்ணீர் பட்டு நனைந்து கட்டியாக ஆகும் தொல்லையும் இல்லை. —ஆர்.ராஜேஸ்வரி





MONEYCRAFT'S
100% DEWAXED
BY LIPOFRAC TECHNOLOGY
UNDER NORMAL TEMPERATURE
சன்கிரா∴ப்ட்
முற்றிலும் நவீன முறையில்
சுத்திகரிக்கப்பட்ட "அக்மார்க்"
சமையல் எண்ணெய்
SunCraft
உங்கள் ஆரோக்யத்தின் நம்பிக்கை இதுவே

மனம் விட்டு

காலிங் பெல் ஒலித்தது. எதிர் ஃப்ளாட் வந்தனாதான். கதவைத் திறந்தேன்.

"ஆன்ட்டி. என்ன பிஸியா..."

சுவாதீனமாய் உள்ளே வந்தாள்.

கிரைண்டரில் மாவு அரைபட்டுக் கொண்டிருந்தது. இன்று ராணி வர மாட்டாள். நனைத்து வைத்த துணிகளை அலச வேண்டும்.

வந்தனாவிடம் நின்று பேச இன்று எனக்கு மனதில்லை. வேலைப் பளு என்பதால் இல்லை.

"என்னன்னு கேட்க மாட்டீங்களா... நான் இப்ப வெளியே போறேன்... திரும்பறதுக்கு எப்படியும் நாலு மணி ஆயிரும்... பால் வந்தா கூட அரை லிட்டர் வாங்கணும்... முடியுமா..."

தலையசைத்தேன். மேஜை மீது கிடந்த மாத இதழைப் புரட்டி ராசி பலன் பார்த்தாள்.

"மலாய் கோப்தா பண்றது பத்தி போட்டிருக்கான். பார்த்திங்களா..." என்றாள்.

என்னிடமிருந்து வழக்கமான பிரதிபலிப்பு எதுவும் இல்லை என்பது அவளுக்குப் புரியவில்லையா. அல்லது புரியாத மாதிரி நடிக்கிறாளா...

"சரி... வரட்டுமா..."

போய் விட்டாள். கதவை உட்புறம் தாளிட்டேன். அப்படியே ஹாலில் அமர்ந்து விட்டேன்.

வந்தனா பழக ஆரம்பித்தபோது ரொம்ப சந்தோஷமாய் இருந்தது. இந்த ஃப்ளாட் வாங்கின புதிதில் எதிர் ஃப்ளாட்டிற்கு யார் வரப் போகிறார்கள் என்று கொஞ்சம் கவலையாகவே கவனித்தேன்.

என் கணவருக்கு அடிக்கடி ஆடிட் விஷயமாய் டூர் போகிற உத்தியோகம். பெரும்பாலும் தனிமை. பையன் ஆர்.இ.சி.யில் படிக்கிறான்.

எதிர் ஃப்ளாட்காரர் தாம் குடிதான் வைக்கப் போவதாகச் சொல்லியிருந்தார்.

வந்தனாதான் குடி வந்தாள். புதுத் தம்பதி கல்யாணமாகி இரண்டு வருஷம்தான் ஆகிறது. குழந்தை இப்போது வேண்டாம் என்று தள்ளிப் போட்டிருக்கிறார்களாம்.

இதெல்லாம் பேசும்போது தெரிந்து கொண்டவை.

வந்தனாவிற்குப் பொதுவாகவே நிறையத் தெரிந்து கொள்வதில் ஈடுபாடு.

கம்ப்யூட்டர் கிளாஸ் வேறு சேர்ந்திருக்கிறாள். பெயிண்டிங்கில் ஆர்வம் உண்டு. புது 'ரெஸிபி' பார்த்தால் என்னிடம் சொல்வாள். இரண்டு பேருமே செய்து பார்த்து ஒப்பிட்டுக் கொள்வோம். பொதுவாய் வயது வித்தியாசம் அடிபட்டுப் போய் மன இணக்கம் எங்களுக்குள் வந்து விட்டது.

நிஜமாய் இதுதான் நானும் எதிர்பார்த்துக் காத்திருந்தது.

ஒன்று சொல்ல வேண்டும். எப்போதும் தனிமை என்பது எல்லோருக்குமே சாத்தியப்படாது.

மனம் விட்டுப் பேச வேண்டும் என்ற தவிப்பு எல்லோருக்குமே வரும். ஆனால் பேச இய





லாமல் போவது எதனால் என்றால், நம் நம்பிக்கைக்குரிய நபர் அமையாமல் போவதால்.

கல்யாணம் ஆன புதிதில் என்னவர் என்னமாய் பாடாய்ப் படுத்தியிருக்கிறார். வார்த்தைகள் அப்படியே கடுசரம். அதுவும் மாசத்தில் பாதி நாட்கள் இருக்க மாட்டார். வந்தாலே எரிச்சல்தான்.

யாரிடமும் சொல்லி அழக் கூட முடியாது. இன்று வந்தனா 'நோ மீல்ஸ்.. இன்று ஹோட்டல்தான்' என்றால் சுபாஷ் 'உத்தரவு தேவி' என்று குளிக்காமல் அழைத்துப் போகிறானே... இதையே நான் இவரிடம் சொல்லியிருக்க முடியுமா... சொன்னால் சும்மா விட்டு விடுவாரா...

போகட்டும். ஐந்து விரல்களும் ஒன்று போல் இல்லை. கிரிதர் பிறந்ததும் இன்னொரு உலகம் எனக்கு அறிமுகமானது.

அவனும் வளர்ந்த பிறகு அப்பாவைப் போலவே முரடாக இருந்தான். எல்லாம் தன்னிஷ்டப்படி என்கிற ஆர்வம்.

இப்போது கூட, அவனுடன் படிக்கும் வேற்று மாநிலப் பெண்ணுடன் சிநேகமாம். இரண்டு பேருமாய் எடுத்துக் கொண்ட போட்டோவை அனுப்பியிருந்தான்.

பார்த்த உடன் பகிரென்றது. இவரிடம் சொன்னால் ஒன்று எகிறிக் குதிப்பார். அல்லது 'அதிலென்ன... தப்பு... அவன் இஷ்டம்' என்பார்.

'மனம் விட்டுப் பேசணும்' என்று அப்போதுதான் எனக்கும் ஒரு தவிப்பு வந்தது.

யாரிடம் பேசுவது... அபத்தமோ... தருதியோ.... குமுறல்களைக் கொட்டலாம் போலிருந்த வேளையில் வந்தனா நேற்று வந்தாள்.

இந்த நாலைந்து மாதங்களில் பொதுவாய்த்தான் பேசியிருக்கிறோம். எனக்கும் சட்டென்று எல்லா விஷயமும் பகிரும் தைரியம் வராது.

'என்ன ஆன்ட்டி' என்றவளின் முகம் பார்க்க அக்கறை இருப்பது போலத் தோன்றியது.

சொல்லி விட்டேன். முழுசாய்க் கேட்டுக்

ரிஷபன்

கொண்டாள். சமாதானமாய் ஏதோ சொன்னாள். அத்தோடு நின்றால் நன்றாய் இருந்திருக்கும்.

கீழே கிரவுண்ட் ஃப்ளோரில் ஒரு ஃப்ளாட்காரியும் இவளுக்குப் பழக்கம்.

என்னடா... வேறு வீட்டு விஷயம் என்ற கூச்சம் வேண்டாமோ... இவள் என்ன சொல்லி வைத்தாளோ... அவள் என்னைப் பார்த்து, இத்தனை நாட்களாய்ப் பேசாத மகராசி கேட்கிறாள்.

''ஜாதகம் வந்தது... கொண்டு வந்து தரலாம்னு இருந்தேன்... வேற என்னவோ கேள்விப்பட்டேனே... வாஸ்தவமா... '' என்றாள்.

''என்ன...''

''உங்க பையனுக்குக் கல்யாணமே ஆயிருத்தாமே....''

எனக்குப் படபடவென்று வந்து விட்டது. என்ன பதில் சொன்னேனோ... மாடிக்கு வந்ததுதான் தெரியும்.

எனக்குள் 'ச்சீ'யென்று ஆகிவிட்டது.

அதெப்படி இவர்களுக்கு மனசாகிறது. இந்த மாதிரி அந்தரங்கமாய்ப் பேசின விஷயங்களைப் பட்டென்றுப் போட்டு

உடைக்க... பிறகு என்னதான் காரணம் காரண்டி... ஒப்புக்குப் பேசி....பட்டுக் கத்திரித்தாற்போல நகரும் சாமர்த்தியம்தான் செல்லுபடியாகுமோ... அப்புறம் என்ன பழக்கம் வேண்டியிருக்கிறது மனுஷாளுக்குள். துரோகம் இல்லையா இது. ஒருத்தர் மீது நம்பிக்கை உருவாகவே எத்தனை நாள் வேண்டியிருக்கிறது. பரஸ்பரம் பழகி, கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்று, நட்பெனும் வலை பின்னி வைத்த பிறகு... இப்படி மூன்றாம் மனிதனை விட மோசமாய் நடக்க எப்படி முடிகிறது...

எனக்குக் கண்ணீர் பெருகியது. ஆன வயசுக்கு இப்படி நான் அழ வேண்டுமா... ஆனால் என்னால் தாங்க முடியவில்லை.. எனக்கு வேண்டும். வயசு வித்தியாசம் கூடப் பார்க்காமல் சக மனுஷியை சிநேகிதமாய்ப் பாவித்த பெருந்தன்மைக்கு நல்ல அறிவு.

நேற்றிரவு ஒரு மணிக்கு மேல் ஆனது தூக்கம் வர. தலைவலித் தைலம் பாதி பாட்டில் காலியானதுதான் மிச்சம். நல்ல நாளிலேயே தைலம் முகர்ந்தால்தான் தூக்கம் வரும். நேற்று மண்டையிடிக்கு எதுவுமே கேட்கவில்லை.

பாலை வாங்கிக் கொண்டு போக வந்தான்.

"என்ன வேலையெல்லாம் முடிஞ்சுதா..."

அவனை நேராய்ப் பார்க்கக்கூட எனக்கு விருப்பம் இல்லை. உன் தகுதி இவ்வளவுதான் என்று நிரூபித்து விட்டாய். இனிமேல் உன்னோடு எனக்கென்ன பேச்சு....

"ஆன்ட்டி உடம்பு சரியில்லையா என்ன" என்றான்.

கெட்டிக்காரிதான். அகத்தின் அழகு தெரிவதைப் புரிந்து கொண்டாளோ... ஆனால் எப்படி இருக்க வேண்டும் என்ற அடிப்படை ஞானம் இல்லையே...

அருகில் வந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

"லேசா சுடறது... மாத்திரை எதுவும் போட்டுக்கலியா..."

"ப்ச்..."

"ஆன்ட்டி"

இந்த முறை அழைப்பில் சற்று அழுத்தம்.

நிமிர்ந்தேன். கலங்கலான பார்வையில் கோபமும் கட்டுக் கொண்டிருந்தது என்னிடம்.

"எம்மேல எதுவும் கோபமா..."

"சேச்சே... உம்மேல நான் எதுக்கு."

"ப்ளீஸ் ஆன்ட்டி மறைக்க வேண்டாம்.... நீங்க எப்பவும் பேசற மாதிரி இல்லே..."

சொல்லி விடட்டுமா... உன்னை நம்பி ஏமாந்தேன் என்று.

என்னவோ தெரியவில்லை. ஒரு வித கையாலாகாத்தனம். பளிச்சென்று போட்டு உடைக்கும் சாமர்த்தியம் என்னிடம் இல்லை. மனதில் வைத்து மறுகத்தான் முடிகிறது.

"ஆன்ட்டி நானே ஒரு விஷயம் உங்க கிட்டே பேசணும். ஒரு தப்பு பண்ணிட்டேனோன்னு தோணுது..." என்றான்.

பேசாமலிருந்தேன். அவளே சொல்லட்டும்.

"நேத்து கீழ் வீட்டுப் பரிமளா கூட பேசிகிட்டு இருந்தேன். தற்செயலா உங்க ஸன் பத்தி பேச்சு வந்தது... நல்ல பர்சனாலிட்டி... பார்க்க லட்சணமா இருக்கார்னு சொன்னேன்... நீ எப்பப் பார்த்தேன்னு என்னைக் கேட்டா... ஃபோட்டோல பார்த்தநா சொன்னேன்.... கூடப் படிக்கிற பொண்ணோட சேர்ந்து எடுத்திண்ட ஃபோட்டோன்னு வாய் தவறிச் சொல்லிட்டேன்... லவ்வான்னு கேட்டா... அதிலென்ன தப்புன்னு ஆர்க்யு பண்ணேன். என்னவோ நினைப்பு... கடைசில அவங்க தப்பா புரிஞ்சுண்டு இருப்பாங்களோன்னு சந்தேகம்... என் நோக்கம் லவ் பண்ணாத் தப்பென்னென்னு கேப்பது மட்டும்தான். உங்க ஸன் லவ் பண்றார்னு சொல்லலே. ஸம் கன்ப்யூஷன்..."

சமாளிக்கிறாளா....

"இப்ப காலைல உங்க கிட்டே சொல்லிட்டு போனப்ப கீழே மறுபடி பரிமளாவைப் பார்த்தேன்... ஒரு மாதிரி இதே விஷயத்தைப் பேசவும் இனியரா சொல்லிட்டேனே... உங்க ஸன் லவ் பண்றார்னு சொல்லலே... லவ் பண்ணாத் தப்பில்லேன்னு என் ஒபினியன்னு... எனக்கு காஸிப்பிங்கே பிடிக்காது... நானா வம்புல மாட்டிண்டேன். கொஞ்சம் வெகுளித்தனமா வார்த்தைகளை விட்டுட்டேனோன்னு வருத்தமா படறேன்..."


வருத்தமா என்னை நேராகப் பார்த்தாள்.

"இன் ஃபாக்ட்... உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போனதுக்குக் காரணமே இந்த மாதிரி சீப் டேஸ்ட் உங்ககிட்டேயும் கிடையாது. நாம எப்பவும் இதே போல மனம் விட்டுப் பேசற சிநேகிதமா இருக்கணும்னு தான் என்னோட டிசயர்..." என்றாள் லேசாய் குரல் கலங்கி.

ஆயிரம் சொல்லுங்கள்... புரிந்து கொண்ட சிநேகிதத்திற்கு எதை ஈடு சொல்ல முடியும்...

நாம் குழந்தைகளுக்கு வாங்கும் பேபிஃபுட், அல்லது காம்ப்ளான் போன்றவை 'பேக்' செய்து வரும் வெள்ளி போன்ற காகித வகைகளை சேர்த்துக் கத்தரித்துப் பூக்கட்டுவது போல் கட்டி கொலுப் படிக்கு மேல் விதவிதமாக தொங்கவிட்டு அழகு படுத்தலாம்.


-கே. சௌந்தர்யா



உங்கள்
ரசனையை
உங்களவரின்
தீபாவளி
துணியெடுக்க
உபயோகப்
படுத்துங்கள்
ஆண்களுக்கென்றே...
ஈரோடு
மோத்தி
சூட்டிங்ஸ் • சர்ட்டிங்ஸ் • ரெடிமேட்ஸ்
வாங்குங்கள்... அணிய வைத்து மகிழுங்கள்
RAGHAASS-C

இப்பொழுது உலகத்தரம் வாய்ந்த
ஒவ்வொரு பட்டர்ஃப்ளை
ஸ்டாண்டர்டு
பிரஷர் குக்கருடன்

அதற்கு இணையான பட்டர்ஃப்ளை பிரஷர் பான்* இலவசம்!



ஒன்றின் விலையில் இரண்டு பட்டர்ஃப்ளை சாதனங்களைப் பெற இதோ ஒரு வாய்ப்பு.

பட்டர்ஃப்ளை பிரஷர் குக்கர் கனமான தகடு, வலுவான கட்டமைப்பு, எளிதாய்ப் பயன்படுத்த இணையற்ற கைப்பிடி என இதன் ஒவ்வொரு பாகமும் நீண்ட ஆராய்ச்சியின் வடிவமைப்பு.

இந்த வாய்ப்பு பட்டர்ஃப்ளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் மற்றும் ஸ்டாண்டர்டு பிரஷர் குக்கர்கள் ஆகிய இரண்டுக்கும் (7.5, 10 மற்றும் 12 லிட்டர்களுக்கு மட்டும்).

இவ்வாய்ப்பு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே.

* மூடியில்லாமல்



பட்டர்ஃப்ளை

ஒன்றின் விலையில் இரண்டு

இவ்வாய்ப்பு தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு மட்டுமே.

ASP/M/GA/2092

எந்தப் பொருளுக்கு ஆயுத பூஜை?

நவராத்திரி – இதன் குதூகலத்தையும், சம்பிரதாயங்களையும் நாம் அறிவோம். இளைய தலைமுறையினரின் கருத்து இவை பற்றி என்னவாக இருக்கும்? இவர்களது இந்தக் கண்ணோட்டத்திலும் 'தலைமுறை இடைவெளி' தன் கைவரிசையைக் காட்டியிருக்குமோ? தெரிந்து கொள்வதற்காக தேடிச் சென்று சந்தித்தோம், சில உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளை. "ஆயுத பூஜைக்காக எந்தப் பொருளைத் தேர்வு செய்வீர்கள்?" என்ற கேள்விக்கும் கொஞ்சம் வித்தியாசமான விடை கிடைத்தது. 'ஆயுதம்' என்பதன் அர்த்தம் 'அப்ளையன்ஸ்' என்று



கூட மாறிவிட்டிருந்தது புரிந்தது! 'இன்னும் சில ஆண்டுகளில் நவராத்திரிக் கொண்டாட்டங்கள் எந்த அளவில் இருக்கும்?' என்பதைக் கூட தர்க்க ரீதியாகக் கணிக்கக் கூறினோம்.

ஆனந்தி :

"நவராத்திரி நான் விரும்பும் பண்டிகை என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் இந்த விஷயத்தில் நான் இளையதலைமுறையின் பிரதிநிதியான்றது சந்தேகம்தான். என்னுடைய சிநேகிதியின் அம்மா நவராத்திரிக்காகப் பார்த்துப் பார்த்து வீட்டை அலங்கரிப்பாங்க. ஆனா என் ஃப்ரெண்டுக்கோ 'கொலுவுக்காக வீடு வீடாக ஏறி இறங்குவது' ஓர் அநாவசிய விஷயம்! "இதி லெல்லாம் என்ன பிரமாதமா இருக்கு?" என் பாள் பளிச்சென்று. கிருஷ்ணர், ராதை மாதிரி யெல்லாம் மாறுவேடம் அணிந்து வீடு வீடாகச் செல்ல நாங்கள் மட்டுமல்ல பல சிறுவர் சிறுமிகளும் கூட இன்று தயாரில்லை.

தாவணியும், புடவையும்தான் நம் பண்பாட்டுச் சின்னம்னு சொல்றவங்க உண்டு. ஆனால் சுரிதார் போன்ற உடைகளுக்கு நாங்க மாறிட்டோம்னா அதுக்குக் காரணம் சௌகரியம்தான். இது போல, நவராத்திரி மாதிரி பண்டிகைகளைக் கூட கொஞ்சம் அப்படி இப்படி மாற்றிக் கொண்டாடறோம்னு வச்சுக்கலாம். "எங்க காலத்திலே நவராத்திரிக்காக நிறைய மெனக்கெட்டோம். நீங்க அவ்வளவு அக்கறை எடுத்துக்கறதில்லே"ன்னு பல பெற்றோர்கள் சொல்றாங்க. வருங்காலத்திலே இந்த 'மெனக் கெடும் சதவீதம்' மேலும் மேலும் குறையத்தான் செய்யும்.

கேரம், ஷட்டில், சுருதிப்பெட்டி இதுக்கெல்லாம்தான் ஆயுதபூஜையன்னிக்கு

ஸ்பெஷல் கவனமும் அலங்காரமும். காரணம் நான் சொல்லாமலேயே விளங்கியிருக்குமே."

தீபா :

"பல தோழிகளின் வீட்டுக்குப் போய் வருவதுதான் நவராத்திரியிலே எனக்குப் பிடிச்ச விஷயம். மனித உறவுகள் வளர இதுமாதிரி பண்டிகைகள் நிறைய உதவுது. ஆனா ஒண்ணு. கொலுவிலே பாடும்படி கம்ப்பல் பண்ணினா சினிமாப் பாட்டு (ஆபாசம் இல்லாததுதான்) பாடினாலும் முகம் சுளிக்கக்கூடாது. ஒருமுறை நேரக் குறைவு காரணமாக நவராத்திரியின் போது என் அத்தை வீட்டுக்குப் போக முடியல்லே. தப்பா எடுத்துக்கிட்டாங்க. பண்டிகை நாட்களில் யாரும் யாரையும் கோவிச்சுக்கக் கூடாதுன்னு உறுதிமொழி எடுத்துக்கிட்டா நல்லாயிருக்கும்.

வீட்டிலே கொலுப்படிகளை வச்ச பிறகு அதற்கு அடுத்த நாள்தான் பொம்மைகளை அடுக்குவாங்க. அந்த இடைப்பட்ட நாளிலே படியிலே உட்கார்ந்துக்கிட்டு யார் ஹோம்-ஒர்க் செய்வதுன்னு எனக்கும் தங்கைக்கும் சண்டை வரும். இதுபோன்ற சின்னச் சின்ன சுவாரசியங்கள் நவராத்திரியில் நிறைய உண்டு. ஆயுத பூஜையன்று நான் மறக்காமல் சந்தனம், குங்குமம் இடுவது கம்ப்யூட்டர், சலங்கை, டேப்ரெக்கார்டர் ஆகியவற்றுக்குத்தான்.

நவராத்திரிப் பழக்கம் ஒருநாளும் நின்றுவிடாது. ஆஸ்திரேலியாவில்கூட என் உறவினர்கள் இதைக் கொண்டாடி வருகிறார்கள். ஆனால் இப்படி வேறு நாடு, வேறு மாநிலம், கலப்புமணம் என்றெல்லாம் ஆகும்போது நவராத்திரிக் கொண்டாட்டங்கள் குறைவது இயல்புதான். பத்து இருபது வருடங்கள் கழித்து 'ஏதோ முடிஞ்சா கொண்டாடுவா' என்ற நிலை உருவாக வாய்ப்பு உண்டு."

சியாமளா :

"ப்ராக்டிகலாகப் பார்த்தால் தொலைக்காட்சி என்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாததாகி விட்டது. அதுவும் கேபிள் டீ.வி. தொடர்புள்ள வீடுகளில் டீ.வி. ஆஃப் ஆகியிருக்கும் நேரம் இன்னும் குறைவு. நவராத்திரியின் போது நல்ல டீ.வி. நிகழ்ச்சிகள் வந்தால் பலருக்கும் அதைப் பார்க்கத் தோன்றுவது இயற்கைதானே. இதனால் சில சம்பிரதாயங்கள் முன்னே பின்னே அனுசரிக்கப்படுகின்றன. அப்பா அம்மா இரண்டு பேரும் வேலைக்குப் போகும் குடும்பங்களில் நவராத்திரியைப் பெரிய அளவில் கொண்டாட முடிவதில்லை. தவிர குழந்தைகள் நன்றாகப் படிக்கணும்கிற ஆர்வம் பெற்றோரிடம் ஒரு வெறியாகவே மாறியிருக்கு. "அம்மா நான் பாடம் படிக்கணுமே"ன்னு மகள் சொன்னா, "அதை அப்புறம் பார்த்துக்கலாம். முதல்லே மற்ற வீடுகளுக்குப் போய் கொலுவுக்கு அழைச்சுட்டு வரலாம் வா"ன்னு சொல்லும் அம்மாக்கள் குறைச்சலாயிட்டு வ்ராங்க.

எங்க வீட்டில் மைசூர் ராஜா செட் பொம்மை ஒன்று உண்டு. அதைச் சுற்றி என் கை வேலைத் திறமைகளைக் காட்டுவேன். ஒருமுறை பற்பசை ட்யூபின் மூடிகளை வைத்தே கோட்டை சுவர் மாதிரி கட்டினேன். சிலர் கேலியா சிரிச்சாங்க. கடவுளை வணங்க மட்டுமில்லே, எங்களின் கலை மற்றும் கற்பனைத் திறமைகளை வெளிப்படுத்தவும்தான் நவராத்திரின்றதை எல்லோரும் புரிஞ்சுக்கணும்.

டீ.வி.செட், சைக்கிள் இரண்டும்தான் ஆயுத பூஜைக்கான என்னுடைய ஐடியல் சாய்ஸ்.

இன்னும் சில வருடங்கள் கழித்து ஏதோ சிம்பிளா, ரெண்டு படிக்கட்டு, நாலு பொம்மைகள்னு சிம்பாலிக்காதான் நவராத்திரியைக் கொண்டாடுவாங்கன்னு தோணுது. இதை நினைச்சா வருத்தமா இருக்கு."

வஜ்ரேஸ்வரி :

இப்போதே சிலர் "ஷோ கேஸ்தான் இருக்கே. தனியா கொலு எதுக்கு!"ன்னு கேட்கத் தொடங்கிட்டாங்க. பண்ண செய்ய இட நெருக்கடி அந்த மாதிரி. என்னைப் பொறுத்தவரை கொலுப்படிகளுக்குக் கீழே செயற்கைப் பூங்காவை உருவாக்குவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

வயலின், ஹார்மோனியம் இரண்டும்தான் ஆயுத பூஜையில் என் ஸ்பெஷல் கவனிப்பைப் பெறும் ஜட்டங்கள். ஸ்பானர், சுத்தியல் இவையெல்லாம் கூட நமக்கு அடிக்கடி தேவைப்படும் ஆயுதங்களென்பதால் இவற்றுக்கும் நன்றி சொல்வதுதான் நியாயம்.

சாமி பொம்மைக்குப் பக்கத்தில் பறவைகளின் பொம்மைகளை வைக்கலாமா? எந்தப் படியில் எதுமாதிரி பொம்மைகளை வைப்பது? என்பது போன்ற விஷயங்களில் சின்னச் சின்ன சுவாரசியமான வாக்குவாதங்கள் வரும். இங்கே இருந்தபோது எப்போது நவராத்திரி வரும் என்று காத்துக் கிடக்கும் என் உறவினர் ஒருவர் அமெரிக்காவில் குடியேறியபிறகு கொலு வைப்பதையே விட்டு விட்டார்.

எங்களைப் போன்ற இளைய தலைமுறையினர் மரபுகளை மதிக்கிறோம். ஆனால் மதிப்பதோடு அவற்றைப் பின்பற்றணும்னா, அவற்றின் பின்னணி ஏத்துக்கும்படி இருக்கணும்."

- **ஜி.எஸ்.எஸ்.**

வெந்தயத் தோசைக்கு
கொத்தமல்லித் தழை சேர்த்து
அரைக்கவும்.
சுவையாக இருக்கும்.
-ஆர்.பார்வதி



Rediffusion-DY&R/Bom/CP/461bTM



வாழ்வை வளமாக்கும் அதிர்ஷ்டக் கல்?

வாழ்வை வளமாக்கும் அதிர்ஷ்டக் கல்! போட்டியில் பரிசு பெற்ற இக்கட்டுரையாளர்களுக்கு ரூ.500/- மதிப்புள்ள வண்ண முத்துமாலை செட்டினைப் பரிசாக அளிப்பவர் சென்னை தி.நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளெக்ஸ் எதிரில் இருக்கும் ஜெய்ப்பூர் ஜெம்ஸ்இன் உரிமையாளர் ராஜேந்திர குமார் எம்.மேத்தா.

திருமகளின் அருட்கடாட்சம் கிட்டியது!

நான் மூட்டு வலியாலும் உயர் இரத்த அழுத்த நோயாலும் (Hypertension) கடந்த ஐந்து வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். என் வேலைகளை செய்து கொள்வதுகூட மிகவும் சிரமம்.

இச்சமயம் தற்செயலாக என் கணித ஜோதிடர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. ஆனாலும், கேட்டுப் பார்க்கலாமே என்று பார்த்தபோது, அவர் என் பிறந்த நாள் என்ன மற்ற குறிப்புகளை எழுதிக் கொண்டு, பின் அதற்கான பரிகாரங்களைச் சொன்னார்.

இது சமயம் நான் எப்பொழுதும் இதுநான் வரை வைரக் கம்மலும், பவள மோதிரமும், பவளமும் முத்தும் கலந்த மாலையும்தான் அணிந்து கொண்டிருந்தேன்.

அவர், இவைகளைப் பார்த்துவிட்டு, நீங்கள் இரண்டாம் (2) எண்ணுக்குரியவர். 2-ம் எண்ணுக்கான கிரகம் சந்திரன். அதற்கான கிரக இரத்தினம் முத்து, மற்றும் வைடூர்யம், பச்சை நிறக்கல், சந்திரகாந்தக் கல் ஆகும்.

எனவே, நீங்கள் போட்டிருக்கும் ஆபரணங்களை மாற்றி விட்டு, தனி முத்து மாலை, பச்சைக் கல் வைத்த மோதிரம், சந்திரகாந்தக் கல் அல்லது முத்துக்கள் பதித்த கம்மல் போட்டுக் கொள்ளுங்கள். அதுவும் அவை ஓபன் செட்டிங்காகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதன் சக்தி உடலின் மேல் பட்டு, பலன் தந்து உங்கள் நோய் திருவதுடன், வாழ்வில் முன்னேற்றங்களையும் காணலாம் என்றார்.

அவர் சொன்னபடியே செய்தேன். சுமார் இரண்டு மாதங்களில் படிப்படியாக எனக்குக் குணமாகி, என் வலிகள் குறைவதைக் கண்டேன். மேலும் பல ப்ரச்னைகளும் தீர்ந்ததுடன், திருமகளின் (லட்சுமி) வரவும் அருளும் பெறுவதைக் கண்டேன். எல்லாம் அந்த ஆதிபராசக்தியின் அருளாலும், முத்து, பச்சை, சந்திரகாந்தக் கல் போன்ற அதிர்ஷ்டக் கற்களினாலும்தான் என்பது நான் என் வாழ்க்கையில் அனுபவபூர்வமாக கண்ட உண்மையாகும்.

– கஸ்தூரி பாலசுப்ரமணியன், கரூர் – 1.

அதிர்ஷ்டக்கல்தான் காரணம்

என் மன அமைதிக்கும் என் இனிய குடும்பத்துக்கும் இன்று காரணமாக இருப்பது இந்த அதிர்ஷ்டக்கல்தான். எனக்குத் திருமணம், குழந்தை பாக்கியம் எல்லாம் கிடைத்து விட்டது. ஆனால் நானும் என் கணவரும் இருவருமே வேலையில்லாத பட்டதாரிகள். வெறுங்கை எப்படி முழம் போடும். கிராமம் வேறு. நாங்களும் கும்பிடாத தெய்வம் இல்லை. போகாத கோவில் இல்லை. கைநீட்டாத ஜோதிடர் இல்லை. ஒருநாள் ஒரு திருமணத்துக்குச் சென்றிருந்தபோதுதான் அந்த ஆச்சர்யம் நிகழ்ந்தது. திருமணமாகி 19 வருடம் குழந்தையில்லாமல் இருந்த என் தோழி கலா

குழந்தையுடன் வந்திருந்தாள். பெரிய பணக்காரி. வளையல்களே 50, 60 பவுன் இருக்கும். எனக்கு ரொம்ப நேரம் சந்தேகம். இது யார் குழந்தை? எப்படிக் கேட்பது டெஸ்ட் டியூப் பேபியா? வெகுநேரம் கழித்து என் அருகில் வந்தாள். நான் யதார்த்தமாக அவள் கைகளைப் பற்றி நலம் விசாரித்தேன். அப்பொழுது இரண்டு கை விரல்களிலும் பளிச் பளிச் தங்க மோதிரங்கள் ஒரு விரலில் மட்டும் மங்கலான வெள்ளி கலந்த புஷ்பராகம் போன்ற ஒரு ஜாதிக்கல்லாம் அழுக்கேறி இருந்தது. நானோ,


"ஏண்டி இந்த விரலிலும் இந்த அழுக்கு மோதிரத்தை எடுத்து விட்டுப் புதிதாக அணிந்திருக்கக் கூடாதா?" என்றேன்.

அதற்கு அவள், கோபம் கலந்த குரலில் "அடி அசடு இந்தக் குட்டிப் பயல் வந்ததே அதனால்தான்" என்றாள். எனக்கு ஒரே குழப்பம். பின் அவள் ஜாதிக்கல், அதிர்ஷ்டக்கல், யாரிடம் அது பற்றிக் கேட்பது எப்படி செலக்ட் பண்ணுவது என்பது பற்றித் தெளிவாகக் கூறினாள். ஆச்சரியம் தாங்கவில்லை.

நானும் மறுநாளே அந்த டெஸ்ட்டில் இறங்கினேன். எனது ராசிப்படி சிவப்புக் கல் என அறிந்து அதனை அணியத் துவங்கி சரியாக இரண்டு மாதம் 11 நாட்கள் ஆனது. அரசு ஆணைப் படி அரசு வேலையே கிடைத்து இன்று மேல்நிலைப் பள்ளியில் பணிசெய்கிறேன். அது போலவே எனது தங்கைக்கும் எடுத்துக் கூறி அவள் தடைப்பட்ட திருமணம் ஜாம் ஜாம் என நடந்தது. எங்கள் குடும்பத்தில் இதுபோல் இன்னும் உண்மை நிகழ்ச்சிகள் எத்தனையோ.

- ஜோ. ராணி, திருவையாறு.





ஒவ்வொருவருக்கும் பொருத்தமான கல் எது?

காந்தம் காந்தமாக இருக்கிற வரையிலும் அதன் சக்தி நமக்குத் தெரிவதில்லை. ஆனால் இரும்பிடம் கொண்டு செல்லும் போது அந்த இரும்பு காந்தத்தை நோக்கிக் கவரப்படுவது போல ஜாதிக்கற்கள் ஏன் உடல் மற்றும் மனரீதியான பிரச்னைகளைத் தீர்க்கக் கூடாது?

கிரக திசைகள் மாறும் போது நோயுற்றவன் நிவாரணமடைகிறான். நோய் இல்லாதவன் நோயுற்றவன் ஆகிறான். காரணம் அந்த தசாநாதன் அந்த ஜாதகனுக்கு யோகக்காரனா என்பதைப் பொறுத்தது.

எங்கோ இருக்கும் கிரகத்திற்கும், பூமியில் இருக்கும் நமக்கும் என்ன தொடர்பு என்று கேட்கலாம்? "முழங்காலுக்கும், மொட்டைத்தலைக்கும்" முடிச்சுப் போடுவது போல் இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். ஆனால் நமது உடல் பல தனிமங்களால் ஆக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு தனிமத்திற்கும் ஒவ்வொரு கிரகத்தின் ஆகர்ஷண சக்தியின் மூலமாக நாளமில்லா மற்றும் நாளமுள்ள சுரப்பிகள் தூண்டப்பட்டு நோய் ஏற்படுகிறது அல்லது குறைகிறது.

அது போலத்தான் ஒவ்வொரு ராசிக்கும் அந்த ராசிநாதனுக்கு ஏற்ற கலர் மற்றும் இரசாயனத் தன்மைக்கேற்றவாறு நம் மெய் ஞானிகள்,

அக்டோபர் கோகுலம் வந்தாச்சு!
அனைவரும் வாங்கிடப் பறந்தாச்சு!

கோகுலம்

அக்டோபர் இதழில்...

★ கண்மணி கேட்டவரம்!
(வண்ணப்படக்கதை)

★ தாயன்பை அறியுமா தாமரைக்கோழி?



+ போட்டி, ஏராளமான கதைகள், பாடல்கள், அறிவியல், மூளைக்கு வேலை எல்லாம்!

96 பக்கங்கள்
ஐந்தே ரூபாய்தான்!

கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

1. மேஷ ராசி - விருச்சிக ராசிக்கு - பவளமும்
2. ரிஷப ராசி - துலா ராசிக்கு - வைரமும்
3. மிதுன ராசி - கன்னிராசிக்கு - மரகதப் பச்சையும்
1. கடக ராசிக்கு - முத்துவும்
.5. சிம்ம ராசிக்கு - மாணிக்கமும்
6. தனுசு ராசி - மீன ராசிக்கு - புஷ்பராகமும்
7. மகர ராசி - கும்ப ராசிக்கு - நீலமும்
8. ராகுவுக்கு - கோமேதகமும்
9. கேதுவுக்கு - வைடூரியமும் போன்ற நவரத்தினக் கற்களை நமக்கு அளித்து இருக்கிறார்கள்.

மேலும் "நாகதோஷமா" - காளகஸ்தி அல்லது திருநாகேஸ்வரம் போ, குருவினால் பாதிப்பா - ஆலங்குடி செல் - இது ஜோதிடர்களின் கூற்று. ஏன் கூறுகிறார்கள்? சிலைகளுக்குக் கீழே சில மருந்துப் பொருட்கள், ஔஷதங்கள் மற்றும் நவரத்தினக் கற்கள் ஆகியவற்றை கும்பாபிஷேகம் மற்றும் பிரதிஷ்டையின் போது வைக்கிறார்கள். பாலாபிஷேகம் செய்யும்போது அப்பாலில் மருந்து சக்தி சேருகிறது. அதனால் கிரக தோஷம் நீங்க வழிசெய்கிறது.

நவரத்தினங்கள் - நவகிரக ஈர்ப்பு குவியும் பூமியில் சில இடங்களில உருவாகிறது.

1. சூரியனின் மாணிக்கம் - மலையில் உருவாகி ஆற்றுப்படுகையில் சுமார் 30 அடி முதல் 50 அடி ஆழத்தில் சுண்ணாம்புப் பாளையில் உருவாகிறது.
2. குருவின் புஷ்பராகம் - எரிமலை கக்கிய பாறையில் உருவாகிறது.
3. செவ்வாயின் பவளம் - கடல் உயிரிகளால் கடலில் உருவாக்கப்படுகிறது
1. சனியின் நீலம் - மலையில் உருவாக்கப்படுகிறது.
5. புதனின் மரகதம் - பழங்கால எரிமலை கக்கிய பாறைகளில் உருவாகிறது.
6. சந்திரனின் முத்து - கடலில் கிடைக்கிறது.
7. சுக்ரனின் வைரம் - சுமார் 100 மைல் ஆழத்தில் உருவாகிறது.

மலேரியாக் காய்ச்சலுக்கு மஞ்சள் காமாலைக்குரிய மருந்தைச் சாப்பிட்டால் காய்ச்சல் குறைவதற்குப் பதிலாக வேறு நோய்தான் ஏற்படும். ஆகவே ஒவ்வொரு ராசிக்காரரும் தனக்குரிய கல்லைத் தேர்ந்தெடுக்காமல் வேறு கல்லை அணிந்தால் தொந்தரவு ஏற்படும். ஆகவே தம் ராசிக்கேற்ற கல்லை தகுந்த ஜோதிடர் மற்றும் நம்பத் தகுந்த நகை வியாபாரிகளை அணுகி சிறந்த ஜாதிக்கற்களை அணிந்து வாழ்வில் சிறக்க வேண்டுகிறேன்.

- என். ரமணி சேகர், கல்லுப்பட்டி.

இன்றைய நிலையில் இதுதான் நவராத்திரி

நவராத்திரி சுபராத்திரி என்று ஒன்பது நாட்களும் சுபமங்களமான நாட்களாக நவராத்திரி கொண்டாடப்படுகிறது. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயரிட்டு ஒன்பது நாட்களும் தெய்வத்திருநாட்களாகக் கருதுகிறோம்.

தமிழகத்தில் நவராத்திரி கொலுவாக, கர்நாடகத்தில் தசராவாக, மகாராஷ்டிரத்தில் இராவண வதமாக, வங்காளத்தில் துர்க்கா பூஜாவாக வருடத்தில் புரட்டாசி மாதம் மாஹாளய அமாவாசையிலிருந்து ஒன்பது நாட்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். சரித்திரத்தில் நரசிம்ம பல்லவன விஜயதசமி அன்று துர்க்கை பூஜை செய்து சாளுக்கிய புலிகேசி மீது படையெடுத்து வாதாபி கொண்டான் என்கிறார்கள். எனவே இந்த ஒன்பது நாட்களும் ஆதிகாலம் தொட்டே சிறப்பான நாட்களாக புனிதமான நாட்களாக எண்ணி வழிப்பட்டு வந்துள்ளார்கள்.

விழாக்கள் அனைத்துமே மனிதர்களை ஒன்றுபடுத்தி அவர்களை சந்தோஷமும திருப்தியும படுத்துவதற்காகத்தான ஏற்பட்டுள்ளது. இன்றைக்கு சங்கங்கள் எப்படி பலரும் ஒன்று சேரும் இடமாக இருக்கிறதோ அவ்வாறே நம் முன்னோர்கள் பிரம்மாண்டமான கோயில்களை ஏற்படுத்தி, மக்கள் அனைவரையும் ஒருமித்துக் கூடச் செய்து ஆன்மீக நெறியில் ஒழுங்குபடுத்தி பல கலைகளை வளர்த்தார்கள். இயற்கையின் மாறுதல்களையும் சிறப்பினையும் வெளிப்படுத்தும் விதமாக விழாக்காலங்கள் அமைந்தன.



பின்னர் அவைகளுக்காக, ஆர்வமும் உற்சாகமும் பிறந்திட புராணங்களையும், இதிகாசங்களையும் கூறி விழாக்களை மேலும் சிறப்படையச் செய்தனர்.

இன்றோ கம்ப்யூட்டர் யுகம் எங்கும் அவசரம் எதிலும் அவசரம். நாளும் கிழமையும் வந்தால் மனத்தில் தோன்றுவது அலுப்புதான். 'அட போங்கடா இருக்குற வேலையில இது ஒரு அவஸ்தை ஏதோ ஒன்னு பண்ணிட்டுப் போக்லாம்' என்ற எண்ணம்தான் அடிமனத்தில் எழுகிறது. இதற்கு விலைவாசி ஏற்றம், நேரமின்மை, மற்றும் பல காரணங்கள் கூறப்படுகிறது.

நவராத்திரி பற்றிப் பல பேரிடம் கேட்டபொழுது ஆன்றோரும், சான்றோரும் பெரியவர்களும் அதன் தத்துவத்தையும், மகத்துவத்தையும், பராம்பரியத்தையும் கூறி நம் கலாசாரத்தைக் காப்பாற்ற அரும்பாடுபடுகிறார்கள். ஆனால் அது சாதாரண மக்களிடம். எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று பார்த்தால் வித்தியாசமான கருத்துக்களும், மேம்போக்கான எண்ணங்களுமே விடையாகக் கிடைக்கிறது.

லட்சுமி என்பவர், வீட்டு வேலை செய்பவர். அவரிடம் நவ்ராத்திரி பற்றிக் கேட்ட பொழுது.

"அது நான் வேலை செய்ற வூட்ல செய்வாங்க, ஏதோ பசங்களுக்கு சுண்டல் தருவாங்க. இன்னிக்கு விலைவாசில அது கூட ஒரு நாளைக்குத் தான் தராங்க" என்றார். ராமாயி பாட்டி, "ஒன்பது நாள் பொம்மை கொலு வச்சு பங்கனா வூட்ல சாமி கும்பிட்டு பாட்டுப் பாடி சரஸ்வதி பூஜைக்கு அப்பாலே பசங்களை ஸ்கூல்ல சேப்பாங்க. நான் வேலை செய்யற என்ஜினியர் வூட்டு அம்மா கூட அது பேரனை நர்ஸரி இஸ்கூல்ல அப்படித்தான் போன வருசம் சேத்தது" என்றார்.

இந்த எண்ணம் சென்னை

மதுரை மாக்ஸ்வொர்த் நகரில், உங்களுக்கு சொந்தமான நிலத்தில், உங்கள் சொந்த இல்லம். உங்கள் முதலீட்டுக்கும் முழு பாதுகாப்பைப் பெறுங்கள்.



மதுரையிலுள்ள மாக்ஸ்வொர்த் நகரில் நீங்கள் ஏன் ஒரு வீட்டை சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும்?

ஏனென்றால், உங்கள் குடும்ப நலனுக்காக ஒரு வீட்டில் முதலீடு செய்ய நீங்கள் விரும்பக்கூடும். அந்த வீடும், அது கட்டப்படும் நிலமும் உங்களுக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

உங்களுக்குப் பிறகு அந்த வீடும் நிலமும் உங்கள் குழந்தைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் போய்ச் சேருமல்லவா!

வசிப்பதற்கு நல்ல இடம் முதலீடு செய்ய சிறந்த இடம்

நாகமலை புதுக்கோட்டை பகுதியில் இடம்பெற்று, S.V.N. கல்லூரிக்கு 1.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாக்ஸ்வொர்த் நகரிலிருந்து, மதுரையின் பிரபல புறநகரான திருநகருக்கு எளிதில் செல்ல முடியும்.

அதோடு, இந்த குடியிருப்பிலிருந்து நகருக்குச் செல்ல அடிக்கடி நல்ல பஸ் வசதியுள்ளது. நீங்கள் நிம்மதியுடன் வாழ இங்கு வசதிகள் அனைத்தும் இருக்கின்றன.

மதுரையிலுள்ள மாக்ஸ்வொர்த் நகர் வெறும் வீட்டு வசதிக் குடியிருப்பு மட்டுமல்ல, நீங்கள் தரமான வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் எல்லா நவீன வசதிகளும் சேவைகளும் கிடைக்கும் தனித்தனி வீடுகள் கொண்ட நவீன குடியிருப்பாகும்.

தாராளமான தண்ணீர் வசதி

தாராளமான தண்ணீர் சப்ளை தொடர்ச்சியாகக் கிடைப்பதற்காக மாக்ஸ்வொர்த் நகரில் பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் 300 முதல் 1000 லிட்டர் கொள்ளளவுள்ள தண்ணீர்த் தொட்டி இருக்கும். எனவே தண்ணீர்த் தட்டுப்பாடே இருக்காது. அப்படி சமாளிக்க 4 ஆழ்கிணறுகள் கொண்ட அமைப்பு ஒன்று (இதை விரிவுபடுத்த வகை செய்யப்பட்டுள்ளது) இருக்கும். இந்த 4 ஆழ்கிணறுகள் 400,000-க்கும் அதிகமான லிட்டர் தண்ணீர்த் தருவதால், இங்குள்ள 300 வீடுகளின் தண்ணீர்த் தேவை எளிதில் சமாளிக்கப்பட்டுவிடும்.

இந்த ஆழ்கிணறுகளிலிருந்து வரும் தண்ணீர் சுத்திகரிப்பு

இயந்திரத்தின் மூலம் செலுத்தப்பட்டு வருவதால், உங்களுக்கு தூய்மையான, கிருமிகள் அற்ற தண்ணீர் வருடம் 365 நாட்களும் நிச்சயமாகக் கிடைக்கும்.

வசதியான வாழ்க்கைக்காக வடிவமைக்கப்பட்ட வீடு



மதுரை - மாக்ஸ்வொர்த் நகரில் நீங்கள் வாங்கப் போகும் வீடு, கட்டிடக் கலை நிபுணர்களாலும் பொறியாளர்களாலும் வடிவமைக்கப்பட்டு, சிறப்பாக கட்டப்படும்.

இந்த வீடுகள் இரு பயன் கொண்டவை. இவற்றிற்கு வலுவான அடித்தளம் போடப்படுவதால், வருங் காலத்தில் வீட்டை மேற்கொண்டு விரிவுபடுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கும். சிறிது இடம் கூட வீணாக்கப்படுவதில்லை. உங்கள் குடும்பத்துக்கு முழுமையான தனிமை கிடைக்கும்.

குடும்பப்பாங்கான வீடு, குடும்பத்துக்கேற்ற விலையில்

மதுரையிலுள்ள மாக்ஸ்வொர்த் நகரில், 1200 முதல் 3000 சதுர அடி பரப்பளவுள்ள நிலத்தில் 750 முதல் 1800 சதுர அடி பரப்பளவுள்ள வீடுகள் கட்டப்படுகின்றன. நீங்கள் எதனையும் தேர்ந்தெடுக்கலாம்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் வீட்டின் அளவைப் பொறுத்து அதன் விலை ரூ. 4.75 லட்சம் முதல் ரூ. 14.35 லட்சம் வரை இருக்கும்.

உங்கள் பெயரிலேயே நிலப்பட்டா பதிவு செய்து தரப்படும். எனவே உங்கள் நிலத்துக்கும் வீட்டுக்கும் வில்லங்கமற்ற உரிமைப்பத்திரம் வழங்கப்படும்.

வேடிக்கை, விளையாட்டுகள்

மாக்ஸ்வொர்த் நகரில் நீங்களும் உங்கள் குடும்பமும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காகப் பல வசதிகள். 1,00,000 சதுர அடிக்கும் அதிகமான மொத்த பரப்புள்ள நிலத்தில் விளையாட்டுத் திடல்களும் ஒன்பது பூங்காக்களும் இருக்கும். இந்தப் பசுமையான நிலத்தை தோட்டக்கலை நிபுணர்கள் பராமரித்து வருவார்கள்.

தவிர, ஒரு பொழுதுபோக்கு மையம், ஒரு சமுதாயக் கூடம் மற்றும் நீங்கள் வெளியில் செல்லும்போது உங்கள் செல்வங்களைக் கவலையின்றி விட்டுச்செல்ல, பயிற்சி பெற்ற பணியாளர் கொண்ட ஒரு குழந்தை காப்பகமும் இருக்கும்.

தரமான கல்வி

உங்கள் குழந்தைகளின் கல்வியையும் புறக்கணிக்கக் கூடாதல்லவா? எனவே, இங்கு ஒரு சிறந்த பள்ளி இருக்கும். ஒரு பிரபல தலைமை ஆசிரியரின்கீழ் மிக உயர்ந்த பயிற்சியும் தகுதியும் பெற்ற ஆசிரியர்களால் இந்தப் பள்ளி இயங்கி வரும்.

நீங்கள் இங்கு அச்சமின்றி இருக்க ராப்பகலாக பாதுகாப்பு சேவையும் உங்கள் உடல் நலம் கவனிக்க, நவீன சாதனங்களும் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் கொண்ட ஒரு மையமும் இருக்கும்.

இறுதியில், இந்தக் குடியிருப்பிலேயே, பயிற்சி பெற்ற எலெக்ட்ரீஷியன்கள், பிளம்பர்கள், பணிப்பெண்கள் மற்றும் பலர் உங்கள் சேவைக்காகக் காத்திருப்பர்.

அது சரி, இத்தகைய சிறந்த முதலீட்டை செய்வது எப்படி என்று நீங்கள் கவலைப்பட்டால், அதற்கும் நாங்கள் வழி செய்கிறோம்.

நிதியுதவிக்கும் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்

உங்கள் வீட்டின் கட்டுமானம் வளர வளர, நீங்கள் தவணைகளை செலுத்த வேண்டும். GIC குழுமம், LIC குழுமம், இந்த்பாங்க் மற்றும் Canfin ஹோம்ஸ் போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களின் மூலம் உங்களுக்குக் கடனுதவி செய்ய துணைபுரிவோம்.

எனவே, இன்றே எங்களை அணுகுங்கள். உங்கள் சொந்த நிலத்திலேயே உங்கள் சொந்த வீட்டைப் பெறுங்கள்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், தொழிலில் ஈடுபட்டுள்ளோர், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் பலர், மதுரை மாக்ஸ்வொர்த் நகரில் ஏற்கெனவே வீடுகளைப் பதிவு செய்து கொண்டுள்ளார்கள்.

மதுரையிலுள்ள மாக்ஸ்வொர்த் நகரின் கட்டுமானப் பணிகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளன. எனவே விரைந்திடுங்கள்.

இலவசமாக மனையைப் பார்க்க ஏற்பாடு செய்கிறோம்

MAXWORTH
— NAGAR —

உங்கள் சொந்த ஊரிலேயே உங்கள் சொந்த வீடு

எங்களை அணுக வேண்டிய முகவரி:
மாக்ஸ்வொர்த் கண்ட்ரி (இந்தியா) லிட்.,
6 முதல் மாடி, 80 அடி சாலை,
ஸ்பென்ஸர்ஸ் சூப்பர் ஸ்டோர் அருகில், கே.கே. நகர்,
மதுரை - 625 020. தொ.பே: 651070, 651209.
டெலிஃபேக்ஸ்: 650305.
திருச்சி: தொ.பே: 464453, 462137.

LIC மூலம் லோன்களை விரைவாக பெறலாம்.

ஆம்! என் முதலீட்டுக்கு முழுப் பாதுகாப்பும் பெற விரும்புகிறேன். மதுரை-மாக்ஸ்வொர்த் நகரில் என் நிலத்தில் சொந்தமாக ஒரு வீடு பெற விரும்புகிறேன். விவரங்களை விரைந்தனுப்புக.

பெயர் : .... முகவரி : ....

நகரம் : .... பின்கோடு : .... தொ.பே: .... வயது : .... தொழில் : ....

இக்கூப்பனை நிறைவு செய்து, வெட்டி எடுத்து, தபாலில் இடவும்:
மாக்ஸ்வொர்த் கண்ட்ரி (இந்தியா) லிட்., 112, ஸ்டெர்லிங் சாலை, 3-வது மாடி, சென்னை 600 034.

SISTA SAATCHI & SAATCHI-C16096 M TM

நகரிலுள்ள பின்தங்கிய மக்களிடம் மட்டு மல்லாது பல மாவட்டங்களிலுள்ளவர்களின் எண்ணமும் கூட. நவராத்திரி மேல்தட்டு மக்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தவர்க்கு மட்டுமே உருவான பண்டிகையாக நினைக் கிறார்கள். சரஸ்வதி ஆயுத பூஜைகள் மட்டுமே மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கோயில்களில் மட்டுமே ஒன்பது நாட்களும் அம்மனுக்கு அலங்காரம் செய்து சிறப்ப வ்ழிபாடுகள் நடைபெறுகின்றது. .

. பல் ஊர்களில் நவராத்திரி என்று கொண்டாடுவதை விட அதற்கு முன்பாக ஆடி மாதம் ஆரம்பித்தவுடன் ஆடி வெள்ளிக் கிழமை அம்மனுக்கு பொங்கல் வைப்பதும், ஆடி ஞாயிறன்று அம்மனுக்குக் கூழ் ஊத்து வதும், ஆடிப்பெருக்கை சுமங்கலி பூஜையாகக் கொண்டாடுவதும், ஆடிப்பூரம் அன்று அம் மனுக்குச் சிறப்பு வழிபாடு செய்வதும், ஆடிக் கிருத்திகை, ஆடி அமாவாசை விளக்குப் பூஜை என்று ஆடி மாதம் முழுவதையுமே புனிதமான மாதமாக முக்கியமாக அம்மனுக்கு உகந்த மாத மாக தமிழகக் கிராமம் தோறும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சென்னையிலும் பல குடிசைப் பகுதிகளில் இருக்கும் சின்னஞ்சிறு அம்மன் கோயிலில் கூட ஆடி மாதம் வந்தால் விடியற்காலையில் மைக்கில் எல்.ஆர். ஈஸ்வரி 'தாயே கருமாரி' என்று அனைவரையும் ஒரு உலுக்கு உலுக்கி எழுப்பி விடுகிறாரே!

வழிவழியாக நவராத்திரியை ஒன்பது நாட்களும் வழிபடுபவர்களை கேட்டபொழுது, வேலைக்குச் செல்லும் மிடில் கிளாஸ் லதா ராமானாதன் சொன்னார்-


"எங்கே நேரமிருக்கிறது. ஒருநாள் செவ்வாய்க் கிழமையோ வெள்ளிக் கிழ மையோ மத்தியானம் பர்மிஷன் போட்டு அன் றைக்கு எல்லாரையும் கூப்பிட்டு மஞ்சள் குங்குமம் தருகிறேன். பிள்ளைங்க ஆசைக்குக் கொலு வைக்கறேன். அவங்களுக்கும் எங்க நேரம்? ஸ்கூல் விட்டு வந்தா டியூஷன், ஹோம் வொர்க் என்று சரியாக இருக்கிறது. சித்த நேரம் அமைதியா உட்கார்ந்து ஒரு ஸ்லோகம் சொல்ல முடிகிறதா? அதையும் டேப்பில் போட்டுட்டுப் போறோம். ஆனாலும் நவராத் திரி வந்தால் சந்தோஷம்தான்."

இதையே அறுபத்திரெண்டு வயதாகும் விஜயா அம்மாளிடம் கேட்டால். "வழிவழியா வர சம்பிரதாயத்தை விட முடியுமா. இந்த நவராத்திரி லோகத்துக்கே க்ஷேமம் தர்றதுக்கு அம்பாளை வழிபடுறது. நிக்க நேரமில்ல, உட்கார நேரமில்லைன்னு சொல்லிட்டு கர்ம சிரத்தையா செய்யாம கடமையா ஏனோ தானோன்னு செய்யறதாலேதான் இந்தக் காலத்துல இத்தனை கஷ்டங்களை அனு பவிக்கிறோம். வருஷத்துல ஒரு பத்து நாள் கொஞ்சம் சிரமப்பட்டு செய்யணும். என் காலம் வரை நான் நல்லா செய்வேன். என்ன, விலைவாசி அதிகமா இருக்கிறதாலே ஆசை இருந்தும் அதிகமாக செய்ய முடியலே" என்றார்.

நவராத்திரியைப் பற்றி அப்பர் மிடில் கிளாஸ் அதிகமாக வசிக்கும் முதல்தர ஃப்ளாட்டில் கேட்டபொழுது அவர்கள் கூறினார்கள். "இப்ப எல்லாம் டைமே இல்லை. கொலு வைக்க இடமும் இல்ல. ஸோ நான் ப்ளவுஸ் பீஸ் வாங்கி ஜஸ்ட் வீட்டுக்கு வர்றவங்களுக்கு வெத்தலை பாக்கு வச்சு கொடுத்துடுவேன்" என்கிறார்கள். வசதியா னவர்களுக்குக் கேட்க வேண்டாம் கையில் பணமும், நேரமும், கௌரவமும் சேர்வதால் நவராத்திரியை வருடா வருடம் புதிது புதி தாகச் செய்கிறார்கள்.

இன்றைய நிலையில் இதுதான நவராத்திரி விழா.. வழக்கம் போல பண்டிகைகளும் அவர வர் விருப்பம் போல அங்கும்இங்கும் அலைபாய் கிறது. விஜயா அம்மாள் கூறுவது போல நவராத்திரி ஒன்பது நாட்களும் அம்பிகையை மகிழ்வித்து உலகத்தின் நலத்திற்காக அவளிடம் கர்மசிரத்தையுடன் பிரார்த்திப்பது தான் நவராத்திரியின் பாரம்பரிய தாத்பர்யம். இதனை அந்த ஒன்பது நாட்களில் ஏதேனும் ஒரு ஐந்து நிமிடமாவது உணர்ந்து உலக நன் மைக்கும், அமைதிக்கும், செழிப்புக்கும் பிரார்த்திப்போம்.

- மஞ்சுகணேஷ்



தாம்பூலத்தோடு கொடுக்கப்படும் எவர்சில்வர், ப்ளாஸ்டிக் கிண்ணங்கள் பத்தோடு பதினொன்றாகத்தான் இருக்கும். இதற்கு பதில் சிறிய ஸ்வாமி படத்தையோ, ஒரு சின்ன கலைப் பொருளையோ கொடுங்கள். அவர்கள் கொலுவில் கொண்டு வைப்பார்கள்.

— உஷா

"உங்களின் எழில் மேனியை அலங்கரிக்க
வருகிறது அலங்கார ஆடைகளின் அணிவகுப்பு."



கண்கவரும் இந்த
ஆடைகளின் அணிவகுப்பில்
உங்கள் மனதுக்கு பிடித்த

- சுரிதார்கள்
- நைட்டீஸ்
- பேண்டீஸ்
- பிராக்கள்
- கைக்குட்டைகள்
- உள் பாவாடைகள்

ஆகியவற்றை
தேர்ந்தெடுக்க வாருங்கள்.

HARI PRIYA


ஹரிப்பிரியா


பெண்களின் பிரத்யேக ஆடை உலகம்.
III, முதல் மாடி, கச்சேரி சாலை,
மயிலாப்பூர், சென்னை - 4. போன் : 4942368.

இது ஒரு ஹரி ஏஜென்சியின் அங்கம்.

IMAGEADS

இலவசம்!





ஒவ்வொரு

சீதா®


அலுமினியம் / ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பிரஷர் குக்கருடன்

- நூறு சதவீதம் நம்பகமான வெயிட் வால்வு கேஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம் மற்றும் கூடுதல் பாதுகாப்பிற்கு சேப்டி பிளக்
- இறக்குமதி செய்யப்பட்ட, உடையாத, வெப்பத் தடுப்புடன் கூடிய கைப்பிடி
- நீடித்து உழைக்கக் கூடியது.
- 3, 5, 6, 7.5, 10 மற்றும் 12 லிட்டர் அளவுகளில் கிடைக்கிறது.

* இச்சலுகை 7.5, 10 & 12 லிட்டருக்கு மட்டுமே

இலவசம்!

கூடுதலாக இரண்டு கேண்டில்கள்





10 வருட உத்தரவாதம்

சீதா®

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
வாட்டர் பில்டர்

17, 24, & 34 லிட்டர் அளவுகளில் கிடைக்கிறது

- தெள்ளத் தெளிவான தண்ணீர்
- நீடித்து உழைக்கக் கூடியது
- துருப்பிடிக்காதது
- எளிதில் திறக்கக் கூடிய ஒழுகல் இல்லாத குழாய் பொருத்தப்பட்டது
- ஆய்வுக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட கேண்டில்கள் கொண்டது
- இலவச சேவை

அனைத்து பிரபல கடைகளிலும் கிடைக்கும்

Kanara Ads.

• ஜெயஸ்ரீ



பண்டிகை, விசேஷ நாள் என்றாலே குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான்! அதிலும் நவராத்திரி என்றால் பெண் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு ஏது அளவு? 'ஐயோ! பெண் குழந்தையா? வேண்டாமே' என முகம் சுளித்து விஸ்வாமித்திரர் பாணியில் கைகளைக் காண்பிப்போர்களை கூட, 'இப்படி நாள் கிழமைகளில் போய் நாலு பேரை வீட்டுக்கு அழைத்து வெற்றிலை பாக்கு தர மஹாலட்சுமி மாதிரி பெண் குழந்தைகள் இல்லையே' என ஏங்க வைக்கும் பண்டிகைதான் இந்த நவராத்திரி.

ஒன்பது நாட்களும் உறவினர், நெருங்கிய நண்பர்களை மட்டுமின்றி அதிகம் பழக்கம் இல்லாதவர்களைக் கூட நம் வீட்டு கொலுவுக்கு அழைப்பதும், தினம் ஒருவகை சுண்டல் தருவதும், வெற்றிலை பாக்குடன் ரவிக்கைத் துணி தருவதும், நம் பல நாளைய பழக்கம். சிறு குழந்தைகளுக்குப் பலவித வேடங்கள் அணிவித்து அவர்களை 'ஊர் அழைக்க' அனுப்புவது பழைய பழக்கம். ஆனால் உலகம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் இந்த நாளில் நவராத்திரியை எப்படிக் (கொஞ்சம் 'நவீனமாக') கொண்டாடலாம் எனச் சில மாணவிகளைக் கேட்ட போது –



• சுதா



• செளம்யா



• லக்ஷ்மி ப்ரியா



மாணவிகள் கண்ணோட்டத்தில் நவராத்திரி!

ஜெயஸ்ரீ
வரதக்குட்டி
(+1 மாணவி)

"முன்பெல்லாம் வீடு வீடாகப் போய் அழைப்பார்கள். குழந்தைகளுக்கு விதவிதமாக வேடங்கள் போட்டு அவர்களை இப்படி அழைக்க அனுப்புவார்கள். ஆனால் இன்று வேடமணியவும், வீடு வீடாகச் செல்லவும் குழந்தைகளுக்குக் கூட நேரம் ஏது? மூன்று வயதாகு முன்பே பள்ளி சென்று பாடம் படிக்க ஆரம்பித்து விடுகிறார்களே? இன்றைய வேகத்திற்கு அழைப்பிதழ்களைத் தபால் மூலம் அனுப்புவதுதான் சரியான வழி. போன் இருப்பவர்களுக்கு போன் மூலம் (நேரடியாகவே) சொல்லி அழைக்கலாம்.

விருந்தினர்களை நம் வீடுகளுக்கு அழைக்க கடைசி இரண்டு நாட்கள்தான் சிறந்தது. அந்த நாட்கள் பெரும்பாலும் எல்லோருக்கும் விடுமுறை நாட்களாகயிருக்குமே? அதே போல விருந்தினர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேரம் சொல்லி அதே நேரத்தில் வரும்படி அவர்களிடம் சொல்ல வேண்டும். இல்லையென்றால் நாம் இல்லாத நேரத்தில் வரும் ஏமாற்றம் அவர்களுக்கு ஏற்படுமே! நம்மை அழைப்பவர்கள் வீட்டுக்கு நாமும் போக வேண்டும் இல்லையா? மற்ற மதங்களைச் சார்ந்த தோழிகளை அழைத்து இதுபோன்ற பண்டிகைகள் பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லி அவர்களையும் நம்மோடு இணைந்து இந்தக் கொண்டாட்டங்களில் ஈடுபடச் செய்யலாம். இது பெண்களுக்கு மட்டுமே ஆன கொண்டாட்டம் என எண்ணாமல்

ஆண்களையும் அழைப்பதுடன் அவர்களுக்குப் பயன்படக்கூடிய எளிய, சிறிய பரிசுப் பொருட்கள் தரலாம்."

ஸ்வேதா : (பி.ஏ. 2-ம் ஆண்டு)

"உண்மையிலேயே ரொம்ப இன்ட்ரஸ்டிங்கான பண்டிகைதான் இந்த நவராத்திரி. என்னதான் வேகமான உலகம் என்றாலும் இதுபோன்ற பண்டிகைகளுக்கு நாம் நேரம் ஒதுக்கிக் கொண்டாடும் போது கிடைக்கும் மனநிறைவே தனிதான். உறவினர்களையும், தோழிகளையும் வீட்டுக்கு அழைத்து மனம் விட்டுப் பேச இது நல்ல ஒரு வாய்ப்பு. முன்பெல்லாம் ஆண்டவனின் வேஷங்களில் சிறு குழந்தைகள் கண்ணனாகவும், முருகனாகவும், ராதையாகவும் வருவார்கள். அது தற்போது குறைந்து வருவது வருத்தமான விஷயம்தான். இந்த நவராத்திரி நாட்களில் நேரம் ஒதுக்கி குழந்தைகளை இப்படி ஆண்டவன் வேஷங்களுடன் தேசத் தலைவர்களின் வேஷங்களும் அணிவித்து அழகு பார்க்கலாம். அது வித்தியாசமாகத்தான் இருக்கும். நிறைய விடுமுறைகள் கிடைக்கும் நாட்கள் என்பதால் நன்றாகவே கொண்டாடலாம். அதுவும் பெண்களுக்கான தனி பண்டிகையாயிற்றே?"

சௌம்யா விஜயகுமார் (+1 மாணவி)

"தெய்வீகத் தன்மையுடன் கூடிய நவராத்திரி போன்ற விழாக்களையும் தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் கொண்டாடுவதுதான் இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்தமானது என்றும் நமக்குள் சகோதரத்துவத்தையும், மதநல்லிணக்கத்தையும் பதியவைக்கும் கொண்டாட்டங்களாக மட்டுமே அமைய வேண்டும் இவை. நம் மதங்கள் பற்றி பொம்மைகளைப் படியில் வைப்பது போல மற்ற மதங்கள் சார்ந்த பொம்மைகளையும் வைக்கலாம். இது போன்ற நேரங்களில்தானே முன்கூட்டியே அப்பாயின்மென்ட் இல்லாமலும் கூட சென்று வேண்டியவர்களைப் பார்க்க முடியும்? இந்த நேரம் நாம் தரும் பரிசுப் பொருட்கள் உண்மையிலேயே நினைவுப் பொருட்களாக அதைப் பார்க்கும்போதெல்லாம் நம் நினைவை பெறுபவர்களின் மனத்தில் ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும். அதே நேரம் விலை எப்படியிருந்தாலும் பயன் நிறைந்ததாக இருத்தல் வேண்டும்."

காழியூர் சுதா ஸ்ரீரங்கன் :
(எம்.ஏ. 2-ம் ஆண்டு)

"நவராத்திரி ஒரு வகையான 'கெட்டு கெதர்'தான். ஓரளவு பழக்கமுள்ளவர்களிடம் கூட மனம் விட்டுப் பழக, விட்டுப் போன உறவுகளையும் மீண்டும் இணைத்துக் கொள்ள இது நல்ல ஒரு வாய்ப்பு என்பதால் அவசியம் கொண்டாட வேண்டிய ஒரு பண்டிகை. கூடுமானவரை நேரிலேயே போய் அழைப்பது தான் நலம் தரும். இதனால் ஒரு நெருக்கம் ஏற்படும். வீட்டில் சிறு குழந்தைகள் இருந்தால் வேஷம் போட்டு அழைத்துச் செல்லலாம். ஆனால் இது நம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமைய வேண்டும். நேரமில்லை என்று சொல்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. பள்ளிகளில் மாறுவேடப் போட்டிகளில் குழந்தைகள் கலந்து கொள்வது போலத்தானே இதுவும். அழைக்கும்போதே வருபவர்களுக்கான நேரம் ஒன்றையும் குறிப்பிட்டு விட வேண்டும். நம் பண்டிகைகள் அனைத்துக்குமே நிச்சயம் ஒரு அர்த்தம் இருக்கும். இவைகளை என்றும் விட்டு விடாமல் தொடர்ந்து கொண்டாட வேண்டும்."

கே. லக்ஷ்மி ப்ரியா (பி.ஏ. 3-ம் ஆண்டு)

"நவராத்திரிக்கு அழைப்பிதழ்கள் அனுப்புவது என்பது இன்றைய நாகரீகமாகி விட்டது. மனம் விட்டுப் பழக ஆடை அலங்காரங்கள் அணிய இவை நல்ல ஒரு சந்தர்ப்பம். நம் பண்டிகைகள் அனைத்துமே நம் கலாசாரங்களைப் பிரதிபலிப்பவை; அர்த்தமுள்ளவை. இவைகளை நிச்சயம் நிறுத்தாமல் கொண்டாட வேண்டும். அதிக செலவுகள், அனாவசிய விரயங்களைத் தவிர்த்து சிக்கன முறையில் எளிமையாகக் கொண்டாட வேண்டும். நம் விருந்தோம்பல் முறைகளைக் காட்ட இது நல்ல நேரம். சத்து மிகுந்த சுண்டல்கள், பழங்கள் போன்றவைகளைத் தரலாம். நம் கலைத் திறமைகளைக் காண்பிக்க நல்ல ஒரு சமயம். பாடத் தெரிந்தவர்களும், ஆடத் தெரிந்தவர்களும் திறமைகளைக் காட்டலாம். கைவினைப் பொருட்கள் செய்யத் தெரிந்தவர்கள் தாம் செய்தவைகளைக் கூடப் பரிசுப் பொருட்களாகத் தரலாம்."

பேட்டி : **வைதேகிதேசிகன்**


அட்டையில் : **சுதா**

வண்ணப்படம் : **ஜி. சுரேஷ்**



பெண்கள் வாரத்துக்கு ஒரு தடவை ஒரு சில துளிகளாவது தேங்காய் எண்ணெயை உடம்பில் தேய்த்துக் கொண்டு குளித்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். சருமமும் மிருதுவாக இருக்கும்.

– பா. குணா


இதோ அனைத்திலும் அதிக உலர்வான, அதிக மெல்லிய டயாப்பர்: புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம்.
உங்கள் குழந்தையின் முகத்தில் சிரிப்பைக் காண உண்மையிலேயே விரும்பினால் அதற்கு புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம் டயாப்பரை விடச் சிறந்தது இல்லை. இது பிற சாதாரண டயாப்பர்களை விட மிகவும் மெல்லியதாக இருந்தாலும், இதன் விசேஷ சூப்பர் உறிஞ்சும் பொருட்கள், ஈரத்தை அதிகமாக உறிஞ்சும். ஆதலால் குழந்தை பலமணிநேரம் உலர்வாகவே இருக்கும்.
இது உங்கள் குழந்தைக்கு கச்சிதமாகப் பொருந்தும். இதன் விசேஷ அம்சங்களான இழுக்கக்கூடிய, மீண்டும் கட்டக்கூடிய டேப்புகள் மற்றும் இடைவெளி விடாதவகையில் வளைந்த கால் எலாஸ்டிக்குகள். இது மட்டுமே துணிபோன்ற உணர்வைத்தந்து கூடுதல் சுகம் தரும்.
புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம் டயாப்பர்கள் உங்கள் குழந்தைக்கு நீங்கள் மிகச்சிறந்ததையே தரவேண்டும் என்ற கொள்கைக்கு உதவும். குழந்தையின் அழகுச்சிரிப்பில் அது நிரூபணமாகும்.
சாதாரண டயாப்பர்
ஹகிஸ் அல்ட்ராட்ரிம்
ஹகிஸின் தனித்துவமான உறிஞ்சும் முறை மற்ற டயாப்பர்களைவிட அதிநேரம் குழந்தையை உலர்வாய் வைக்கும்.
புதிய ஹகிஸ் அல்ட்ராட்ரிம்
அனைத்திலும் அதிக உலர்வான, அதிக மெல்லிய டயாப்பர்
Ogilvy&Mather 1154 TM

தெய்வ ஆராதனை

டேப் ரிக்கார்டரில் ஒலித்த மஹிஷா சுரமர்த்தினி அஷ்டோத்திரம், மெட்டாடார் வேனின் இஞ்சின் சத்தம், எங்களைத் தாண்டிப் புயலாய்ப் பறக்கும் திருவள்ளுவரின் இரைச்சல், இத்தனையையும் மீறி ஒலித்தது சொர்ணம் மாமியின் குரல்.

"நான் கிளம்பும் சமாச்சாரம் தெரிஞ்சதிலிருந்து வினோதினி மூஞ்சியை பூசணிக்காய் மாதிரி தூக்கி வச்சிண்டு இருந்தா. அவ குடுத்த சாவியால என் பிள்ளை நேற்று. 'எதுக்கும்மா இப்போ அனாவசியமா ஊர்ப் பயணம் அது இதுன்னு அலையணும்? மழை வரும் போல இருக்கே... மாட்டிண்டா கஷ்டமே... உனக்கும் ஆஸ்த்துமா வந்துடுத்துன்னா என்ன பண்ணுவே?'ன்னு மெதுவா இழுத்தான். அவனோட போதனை.... எனக்காக முன்னூறு ரூபாய் எடுத்து வைக்கணுமோல்லியோ... அத்தனை கணக்கு... மத்தபடிக்கு, கரிசனமா உருகுறதெல்லாம் வெறும் வேஷம்..."

"எப்படியோ... நீ ஜெயிச்சுட்டேன்னு சொல்லு... ஆனா, நீ வராட்டி நம்ம ட்ரிப்பே களை கட்டியிருக்காது" என்றாள் சீதாலட்சுமி.

"நமக்குன்னு என்னத்தை ஸ்பெஷலாய் கேட்கிறோம்? என்ன தான் அபூர்வமாய் செஞ்சுக்கறோம்? என்னமோ... ஊட்டி, கொடைக்கானல்னு ஜாலி 'டூர்'ரா அடிக்கிறோம்? நவராத்திரி சமயத்தில் ஸ்வாமிகளோட ஆசிரமத்தில் அமர்க்களமாய் பூஜையென்ன, கச்சேரியென்னன்னு இருக்கும். இது மாதிரி விசேஷ சமயங்களில் அவர் கையால தீர்த்தம் வாங்கிக் கொள்ள குடுத்து வச்சிருக்கணும்..."

"போகிற வழிக்குப் புண்ணியம் தேடக் கிளம்பறேன். அதுக்கு ஆயிரம் நக்கல், இடைஞ்சல், தடங்கல்கள்... என் கடைசிப் பிள்ளை ஆரம்பத்திலிருந்தே தகராறு பண்ணினான்... சாமியார், ஆசிரமம் அது இதுன்னு போகாதே... காலம் கெட்டுக்கிடக்குன்னு சொல்லிட்டு சிரிக்கறான்டி..."

"சிவ சிவா... கண்டவர்களை மாதிரியா இவர்? நடமாடும் தெய்வம்... அவதார புருஷர்..." என்று கன்னத்தில் போட்டுக் கொண்ட ரங்கம்மாள், என்னைப் பார்த்து..

"எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கணும், நம்ம சங்கரி மாதிரி .. அவ பார்க்காத கோவில் உண்டா, தரிசிக்காத மகான் உண்டா? ஒரு கல்யாணம், காட்சி விடுவதில்லை... புருஷனோ, பிள்ளையோ, நாட்டுப் பெண்ணோ வாயைத் திறப்பதில்லை எதுக்கும் குடுப்பினை வேண்டும்" என்றாள்.

சிரித்துக் கொண்டேன்.

எதுவுமே தானாக வந்துவிடுவதில்லை.

திட்டமிடல் தேவை.

நானும் திட்டமிட்டேன். நாராயணனுக்கும் கல்யாண வயசு வந்ததிலிருந்தே திட்டமிட்டேன். கமலியையும், சரசாவையும், அவர்களது பதினெட்டாவது வயது எட்டிய நாளிலிருந்தே திட்டமிட்டு ஜாதகத்தை எடுத்து ஒரே வருடத்தில் கல்யாணம் செய்து தந்ததுகூட ஒருவித திட்டத்தோடுதான்.

"அட, நாற்பத்தியெட்டு வயசுக்குள்ளே உன் கடமைகள் பலதையும் முடிச்சுட்டியே... பெண்களின் கல்யாணம், பிரசவங்கள்... அட... அட... உடம்பு தளர்வதற்குள் எல்லாவற்றையுமே முடிச்சுட்டியே... அடுத்தது



நாராயணனுக்குக் கல்யாணமா?"

மகனின் கல்யாணத்திற்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன்பே கணவரையும் மகனையும அழைத்தேன்.

"என்னம்மா?"

"என்ன சங்கரி, ஏதோ பேசணும்னியே?"

கரிசனக் கேள்விகள்தான்.

"இத்தனை நாட்கள் குடும்பத்திற்கு மாடாய் உழைச்சாச்சு. இனிமே முடியாது. ஒண்ணு பாருங்க. ஆணுக்கு ஒரு வயசுக் கப்புறம் ரிட்டயர்மெண்ட் உண்டு. ரெஸ்ட் உண்டு. ஆனால் பெண்ணுக்கு? வீடும், அடுப்பும் அவளை விடுவதேயில்லை. போதாக் குறைக்கு, அறுபதை நெருங்கும்போது கூட பேரன், பேத்தி வளர்க்கும் பொறுப்பு வேறு வந்து விடுகிறது" என்று ஆரம்பித்தேன்.

"இப்ப என்ன சொல்ல வர்றே?"

"எனக்கும் ஓய்வு வேணும். நாராயணனின் பெண்டாட்டி அடுத்தது 'சார்ஜ்' எடுத்துக் கட்டும்கறேன்." என்றேன் அழுத்தமாய்....

"**வே**லைக்குப் போ... அதை நான் தடுக்கலை... ஆனா இந்த வீட்டோட பொறுப்பு - உன் கடமை...." என்றேன். சீதா தேன் நிலவிலிருந்து திரும்பிய நான்காவது நாளில்..

கைகளில் நிறைய நேரம்.

தினமும் காலையில் எழுந்தவுடன், சீதா தரும் காபி, பூஜை, கையோடு ஏதோ ஒரு கோயில், மத்தியானத்திற்கு சௌந்தர்ய லஹரி க்ளாஸ், மாலையில் சபா கச்சேரி, பஜனை மண்டலி, சத்சங்கம், மற்ற நேரம் டீ.வி அக்கம்பக்கத்தாரோடு சௌஜன்ய உறவு என்று மனதுக்குப் பிடித்த ஒரு அட்டவணையை அமைத்துக் கொண்டேன்.

"எந்தக் கல்யாணத்தையும்,

உஷா ஸ்ரீகுமார்

விசேஷத்தை யும் சங்கரி விட்டுக் கொடுக்க மாட்டாள். அவளுக்கு மனுஷங்க வேணும்." புகழ்ச்சியில் குளிர்ந்தேன்.

சுமி பிறந்தபோது உரசல்கள் தலையெடுக்க...

"டேய், நாராயணா... என்னால முடியலைடா... ஒண்ணு சீதாவை ரிசைன் பண்ணச் சொல்லு... இல்லை குழந்தையைப் பார்த்துக்க வேற ஏற்பாடு பண்ணச் சொல்லு... எனக்குக் குழந்தை வளர்க்கும் வயசா? சொல்லு... அவ பின்னால ஓட முடியலை. நாளைக்குக் குழந்தை ஏதாவது அடிகிடி பட்டுண்டா யாருக்கு நஷ்டம்? சரி. அதுதான் முடியலை,





அடுப்பை பார்த்துக்கலாம்னா, பாழாய்ப் போற மறதி... காலை அணைக்க மறந்துடறேன், குழம்புக்கு ரெண்டு உப்பு போட்டுடறேன்.

ஒண்ணு பண்ணேன். மந்தைவெளியிலுள்ள உன் மாமியார்... வீட்டில் சுமி பள்ளிக்கூடம் சேரும்வரை பகல் பொழுதில் இருக்கட்டுமே... உங்கப்பா இருந்தால்கூட பரவாயில்லை, எப்படியோ ஒப்பேத்திடுவேன். அவர் பொழுது போகலைன்னு கடையில் கணக்கெழுதப் போயிடறார். என்னால தனியா முடியலைடா... சீதாகிட்ட பக்குவமாய் சொல்லு."

புரிந்து கொண்டார்கள்.

சுமி, ஆபீஸ் போகும் அப்பா அம்மாவோடு கிளம்பி 'அம்மம்மா' வீட்டிற்குப் போக ஆரம்பித்தாள்.

வேன் தேசிய நெடுஞ்சாலையை விட்டு இறங்கி குண்டும் குழியுமான கப்பி ரோட்டில் குலுங்கியபடி ஓடியது.

"ஆச்சு, இன்னும் நாற்பதே கிலோமீட்டர் ஆசிரமம் வந்தாயிடும். இந்த ஒன்பது நாட்களும் எவ்வளவு கோலாகலமாய் இருக்கும் தெரியுமா? ஜப்பான், அமெரிக்கா, டில்லி, சிங்கப்பூரிலிருந்தெல்லாம் சுவாமிகளை தரிசிக்க ஜனங்கள் திருமணியூருக்கு வருவா.. விசாலி நாலாவது தடவையாக தரிசிக்க வருகிறாள்."

'அப்படியென்னதான் விசேஷமாய் இருக்கப் போகிறது திருமணியூரில்?' ஆவல் மேலிட எட்டிப் பார்த்தேன்.

ஆசிரமத்தின் கொடிக்கம்பம் தூரத்தில் தெரிந்தது.

ஆசிரமம் 'ஜே.. ஜே' என்றிருந்தது.



ரசப்பொடி, கரகரப்பாக அரைத்தால் ரசம் தெளிவாக இருக்கும்.

-ஆர்.பார்வதி

ஒரு பக்கம் சுவாசினி பூஜை. மற்றொரு பக்கம் சஹஸ்ர சண்டிஹோமம் என்று பக்திப் பிரவாகமாய் இருந்தது.

நூற்றியெட்டுப் பெண்கள் ஒருபோல வரிசையாய் அமர்ந்து குத்துவிளக்கில் அம்பாளை ஆவாஹனம் செய்து மலர்களாலும், குங்குமத்தாலும் அர்ச்சித்தோம்.

அப்போது மனதில் எழுந்ததே, ஒரு நிறைவான உணர்வு - அதுதான் நிம்மதி என்பதா?. புரியவில்லை.

பூஜைக்குப் பின் மதியம் மூன்று மணிவாக்கில் அருளே உருவாக அமர்ந்திருந்த ஸ்வாமிகளிடமிருந்து தீர்த்தமும், பிரசாதமும் பெற்றுக் கொண்டோம்.

"இவங்கள்ளாம் ராதாபுரம் பஜனை மண்டலியைச் சேர்ந்தவங்க வேன் வச்சிகிட்டு வந்திருக்காங்க" பக்கத்திலிருந்தவர் பவ்யமாய்ச் சொல்ல மஹான் "தாயே... ஜகன் மாதா" என்றபடி ஒரு நொடி கண்களை மூடிக் கொண்டார்.

சாப்பாடான கையோடு கிளம்புவதாய் திட்டம்.

மனசு வரவில்லை.

"சாயந்திரம் அம்மனை ஊஞ்சலில் வைத்துப் பாடுவார்கள். திரிபுரசுந்தரி கச்சேரி வேற இருக்கு. வந்தது தான் வந்தோம். எட்டு மணிக்குக் கிளம்புவோமே... நாலே மணி நேரத்தில் போய்ச் சேர்ந்திடுவோம்."

சுந்திரியின் பேச்சை ஆமோதித்தோம்.

ஏனோ வீட்டு ஞாபகம்.

"சீதா வந்திருப்பாளோ? இன்று யாரெல்லாம் கொலுவுக்கு வருகிறார்களோ?"

கிளம்புமுன் என் கணவர் ஆரம்பித்தார்...

"சீதாவுக்கு வேறு 'ஆடிட் சமயம்' கொலு வேறு வச்சிருக்கு நீ இருந்தா விளக்கேத்தி, தாம்பூலம் கொடுப்பே... அவ வரும்போதே ஏழாகி விடுகிறதே..."

"லீவ் போடட்டும். போன வாரம் அவ ப்ரெண்டு சீமந்தத்துக்காக லீவ் போட்டாளே..." கத்திரித்தாற் போல சொல்லிவிட்டேன்.

பின்னே, பிறந்ததிலிருந்து அப்பா.. அம்மா, கணவர், மாமியார், நாத்தனார் சம்பந்திகள் என்று எத்தனையோ பேர்களுக்குப் பயந்து என் ஆசாபாசங்களை மூட்டைகட்டி வைத்தாகி விட்டது. இன்னுமா அடுத்தவங்களுக்காகவே வாழ்வது?

இரவு எட்டு மணிக்கு....

"இஞ்சின் ப்ராப்ளம்மா... சரி செய்ய எப்படியும் நாலு அவர் ஆயிடும்" வேன் டிரைவர் கைவிரிக்க..

"எங்கே தங்குவது?" கேள்வியெழுந்தது. ஆசிரமத்தின் அறைகளில் கூட்டம் ஏற்கனவே



பதி பாஸ்கரையா & பிரதர்,

149, நகரத்பேட், பெங்களூர்-560 002 போன்: 2224093, 2237870

ஃபேக்ஸ்: 080-2224093 கிராம்ஸ்: பதிசில்க்ஸ்

PATHI GROUP

சரவணபவ

காபி, டிபன், பிராமணாள் சைவ உணவு உள்பட சுற்றுலாக்கள்.

* கர்நாடகா- மைசூர்-தலைக்காவேரி-சுப்ரமண்யா-தர்மஸ்தலம்-உடுப்பி-கட்டில்-ஸ்ரீ மூகாம்பிகை-கோகர்ணம்-சிருங்கேரி-பேலூர்-ஹலபேடு-மேல்கோட்டை 25.10.96 முதல் 7 நாட்கள் டிலக்ஸ் பஸ் சுற்றுலா ரூ. 1290/-
* தீபாவளி கங்காஸ்நானம் திரிவேணி-நைமிசரண்யம்-அயோத்யா-காசி-சாரனாத்-வியாசகாசி-கயா-புத்தகயா-கல்கத்தா-பூரி-கோனார்க்-புவனேஸ்வர்-சிம்மாசலம்-விஜயவாடா 7.11.96 முதல் 14 நாட்கள் 3 TIER ரயில் சுற்றுலா ரூ. 3390.
* **AMIRITSAR-** ஜெய்ப்பூர்-ஆக்ரா-டெல்லி-அமிர்தசரஸ்-ஹரித்துவார்-ரிஷிகேசம்-காசி-கயா-திரிவேணி 21.11.96 முதல் 16 நாட்கள் 3 TIER ரயில் சுற்றுலா ரூ.3690.
* நவஜோதிர்லிங்கம் - பஞ்சதுவாரகா - பீமசங்கர்- நாசிக்-திரியம்பகம்- நாகேஸ்வரம்-சோமநாத்-நாகநாத் கோமதி துவாரகா-பேட்டி துவாரகா-ருக்மணிதுவாரகா- மூலதுவாரகா-துலாபாரதுவாரகா-போர்பந்தர்-உஜ்ஜயினி-ஓம்காரேஸ்வர்-அஜந்தா-எல்லோரா-கிருஷ்ணேஸ்வரம் ஷீரடி-வைத்தியநாதம்-22.12.96 முதல் 16 நாட்கள்.3 TIER ரயில் & டிலக்ஸ் பஸ் சுற்றுலா ரூ.3690.
* **VAISHNODEVI-** டெல்லி-ஆக்ரா-குருசேத்ரா-அமிர்தசரஸ்-ஜம்மு-வைஷ்ணதேவி-ஜ்வாலாமுகி-சாமுண்டாதேவி-காங்ராதேவி-சிந்துபூரணி-பக்ராநங்கள் சண்டிகார்-ஹரித்துவார்-ரிஷிகேசம் - காசி-கயா-திரிவேணி 18.10.96 முதல் 20 நாட்கள் 3 TIER ரயில் டிலக்ஸ் & பஸ் சுற்றுலா ரூ. 3990.

குமரன் டிராவல்ஸ்

20, வடக்கு சித்திரைவீதி,
மதுரை - 625001. போன் 621519.

GENUINE DISCOUNT SALE

தள்ளுபடி விற்பனை

ராணி சாரீஸ்
சகுந்தலா சாரீஸ்

மற்றும் பாதிக் டிசைன் புடைவைகள் பாதிக் டிசைன்
சுடிதார் துணி பெங்கால் காட்டன் சாரீஸ்

10% TO 12½ %


15% ON SELECTED ITEMS.

1.10.96 முதல் 10.10.96 வரை
(6.10.96 ஞாயிறு கடை உண்டு)

மதுரை டெக்ஸ்டைல்ஸ்

2. சிவப்பிரகாசம் சாலை,
பாண்டி பஜார், சென்னை - 17.
(அகஸ்தியர் கோவில் அருகே)

MADURAI TEXTILES



சில வீடுகளில் சரஸ்வதி பூஜையன்று சந்தனத்தை குழைத்து 'அம்மன் முகம்' செய்து கொண்டாடுவார்கள். சந்தனக் கலவையில் சிறிது மஞ்சள் பொடி சேர்த்துக் கொண்டால், எவ்வளவு காய்ந்தாலும் நிறம் மங்காமல், அம்மன் முகம் பார்ப்பதற்குப் பிரகாசமாய் இருக்கும்.

– பி. ஜானகி

வழிந்தது.

"சுப்பிரமணிய குருக்கள் வீட்டில் ராத்தங்க ஏற்பாடு செய்யறேன்." அபயமளித்தார் ஆசிரமத்து காரியஸ்தர்.

ஃபேனில்லாத கூடத்தில் ஜமுக்காளத்தில் பன்னிரெண்டு பேரும் படுத்து உறங்க முயன்றோம். ஏனோ வீடும், மெத்தையும் நினைவுக்கு வந்தது.

விடியற்காலை...

குருக்களின் மருமகள் தந்த காபியை ருசித்துக் குடித்துவிட்டு, பழக்கமில்லாமல் கிணற்றடியில் குளித்துவிட்டு, அதிருஷ்டவசமாய் கையோடு கொண்டு வந்திருந்த மாற்றுப் புடவையை அணிந்து கொண்டு உள்ளே வந்த போது... தாழ்வாரத்தில் அமர்ந்து காய் நறுக்கிக் கொண்டிருந்த குருக்களின் மனைவி புன்னகைத்தாள்.

''டவுன்காரா..., சவுகரியக்குறைச்சலாக இருந்தாலும் அனுசரிச்சுண்டு இருக்கீங்க பாவம்'' என்றவளை சிநேகமாய்ப் பார்த்தேன்...

''சீக்கிரம் கிளம்புங்க.. ஆசிரமத்தில் கோபூஜை, கஜபூஜையெல்லாம் கொஞ்ச நேரத்தில் ஆரம்பிச்சுடும்."

"நீங்க வரலியா?"

"காரியம் இருக்கே...''

"வயசு காலத்தில் நீங்க எதற்குக் கஷ்டப் படறீங்க? நாட்டுப் பெண் பார்த்துக்க மாட்டாளா?"

''வயசாச்சேன்னு நாம சாப்பாடு, தூக்கத்தையெல்லாம் விட்டுட்டோமா சொல்லு? எதுக்கு நம்மால முடியற காரியங்களை மட்டும் வயசை சாக்காய் வச்சு செய்யாமல் தடாய்க்கணும்? அடுப்படியில் பாத்திரங்களை ஏற்றியிறக்க முடியலை.. என்னால முடிஞ்சது காய் நறுக்குவேன். ஊறுகாய் போடுவேன், கோவிலுக்குப் பூத்தொடுத்துக் கொடுப்பேன், அரிசியில் கல் பொறுக்குவேன்... கையும் காலும் தளர்ந்து போகலியே... நம்ம ஸ்வாமிகள் எப்பவுமே சொல்லுவார், ''தெய்வத்தைத் தேடி எங்கேயும் போக வேண்டாம்.. தெய்வம் தன் கடமையை கணங்காமல் செய்பவர்கிட்டேயிருக்கார். அவனுக்கு அபிஷேகம் செய்வதைவிட சகஜீவராசிகளுக்கும் உன்னால முடிஞ்ச உதவியை செய். அதுவே ஸ்வர்ணாபிஷேகம்... அர்ச்சனைக்குப் பதில் பிறர் மனசுக்கு இதமான வார்த்தையைப் பேசு... அதுவே சகஸ்ரநாமாவளி..." என்பார். நான் பாட்டுக்குப் பேசிண்டேயிருக்கேன்... நீங்க கிளம்புங்க!" ஸ்தம்பித்து நின்றேன்.

என்னென்னவோ புரிந்தாற்போலிருந்தது.

வீடு போய்ச் சேரும்போது உச்சிவேளை...

"கவலைப் பட்டுப் போயிட்டோம்.. டிரைவர் ட்ராங்கால் போட்டுச் சொல்லியிருக்காட்டா நான் கிளம்பி வந்திருப்பேன். சீதா நாளைவை திருமணிபூருக்கு விரட்டவே ஆரம்பிச்சுட்டா... விடிய விடிய 'எங்கே தங்கறாங்களோ? என்ன சாப்பிட்டாங்களோ' புலம்பல்தான் அவளுக்கு"

இவர் சொல்லச் சொல்ல குறுகினேன்.

மாலையில் நான்கு மணிக்கே பர்மிஷன் போட்டுவிட்டு வந்த சீதாவின் நாசியைக் கடலைப் பருப்பு சுண்டலின் மணம் தாக்கி ஆச்சரியப்படுத்தியது.

பட்டுப் பாவாடை, பூப்பின்னல் அலங்காரத்தோடு சிரித்த சுமியைப் பார்த்து விழிகள் அகன்றன.

"சுமி. பாட்டியை ட்ரெஸ் பண்ணி விடச் சொல்லிப் படுத்தினயா? ஏம்மா... நீங்களா சுண்டல் செஞ்சீங்க? எதுக்கு? நான் செய்ய மாட்டேன்?" என்று பரபரத்தாள்.

பயணக் கதைகளை விசாரித்தபடி,

"நீங்க இன்னிக்கு சாயங்காலம் சுப்புமாமி வீட்டு குங்கும அர்ச்சனைக்குப் போவதாய் இருந்தீங்களே கிளம்பலியா?" என்ற மருமகள் சீதாவிடம்,

''இங்கேயே அர்ச்சனையை செஞ்சுட்டேன்'' என்றேன்.

அவளுக்குப் புரியவில்லை.

இரவில்...

''என் சங்கரி, ஸ்வாமிகள் ஏதாவது உபதேசம் செஞ்சாரா? என்ன பேசினார்?" என்ற என் கணவரிடம்,

''அவர் ''தாயே ஜகன்மாதா''ன்னார். ஆனால் எனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிப் புரியவைச்சுட்டார்... சரி... சரி, தூங்குங்க. கார்த்தாலே சீக்கிரமா எழுந்திருக்கணும். பாவம் சீதா. தனியாகக் கஷ்டப் படுவா.. கூடமாட ஒத்தாசை செய்ய வேண்டாமா?" என்றபடி விளக்கை அணைத்தேன்.

என் மனம் பல நாட்களுக்குப் பிறகு பிரகாசமாக இருந்தது. உடம்பில் தெம்பு கூடியது போல இருந்தது.

பேரழகின் ரகசியம் மிலன்ஸ்ரீ சேலைகள்



மிலன்ஸ்ரீ சேலைகள் டிசைன்களிலும், தரத்திலும், அழகிலும் இணையற்றவை. நாடு முழுவதிலுமுள்ள டிசைன் நிபுணர்கள் மூலம் வடிவமைக்கப்பட்டவை. நீங்கள் தேர்ந்தெடுக்க பட்டு, காட்டன், எம்ப்ராய்டரி சேலைகள் ஏராளமாக குவிந்துள்ளன. இந்த தீபாவளியை மிலன்ஸ்ரீயுடன் கொண்டாடுங்கள். மங்கையரை அலங்கரிக்கும் எழில்மிக்க சேலைகளுக்கு வருகை தாருங்கள்.

மிலன் ஸ்ரீ

எழில்மிக்க சேலைகள் மற்றும் லஹங்கா சோளி

60, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 17.

போன்: 4345879.

BRIGHT ADVERTISING

நவரத்தினங்களின் அற்புதசக்தி! நவரத்தினங்களின் அற்புதசக்தி!

ஆதித்யாதி நவக்கிரக தேவதாப்யோ நம :

ரத்னோத் ஜ்வலாய நம :

தடைபடும் திருமணங்கள், வீடுகட்டுதல், தொழில், வியாபாரம், குடும்ப பிரச்சினைகளைத் தீர்த்து அதிர்ஷ்டத்தைத் தரும் உங்கள் ராசிக்கேற்ற ஒரிஜினல் நவரத்தினங்களை தேர்வு செய்து தர கட்டணம் எதுவும் இல்லை.

பெல்ஜியம், பாம்பே கட்டிங்வைரங்கள், எந்தவித தோஷமும் இல்லாமல் எங்களால் நன்கு பரிசோதிக்கப் பட்டபின் உங்கள் விருப்பத்திற்கேற்ப புதிய டிசைன்களில் வைரக் கம்மல், மூக்குத்தி, மோதிரங்களாகச் செய்து தருகிறோம்.

நீங்கள் சுலபமாக வைரக் கம்மல் வாங்கிட வைரசேமிப்புத் திட்டத்தை 18-10-96 முதல் ஆரம்பிக்கிறோம். இத்திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயன் பெறுங்கள்.

நம்பிக்கை + நாணயம் + கைராசி


அருணா ஜெம்ஸ் & டைமண்ட்ஸ்,

37, நடேசன் தெரு, (சிவா விஷ்ணு கோவில் அருகில்)

தி. நகர், சென்னை - 600 017.

VA '96

நவரத்தினங்களின் அற்புத சக்தி நவரத்தினங்களின் அற்புத சக்தி நவரத்தினங்களின் அற்புத சக்தி



• தண்டுமாரியம்மன்


கோவையின் நாயகிகள்

சைவ ஆகம விதிப்படி தமிழகம் முழுக்க எந்தச் சிவா லயம் எடுத்தாலும் அதன் வடக்கு எல்லைக் காவல் தெய்வமாக காளி அல்லது கொற்றவை இருப்பாள்.

அந்தக் காலத்தில் ஊர்கள் சிறியதாக இருந்து இன்று மிகப் பெரியதாக வளர்ந்து விட்டதாக இருப்பதற்குச் சிறந்த சாட்சியங்கள் காவல் தெய்வங்களின் கோயில்கள் ஊருக்குள் இருப்பதுதான். எல்லைக் காவலை விட, ஊருக் குள்ளேயே மனிதர்களுக்குக் காவல் அதிகம் தேவை என் பதை இவை உணர்த்துகின்றனவோ என்னவோ?

சங்க காலத்தில் கோவன்புதூர் என்ற ஊரை கோசர்கள் ஆண்டு வந்தார்கள். அந்தக் காலத்தில் அரசர்களின் கோட்டைகள் மண்ணாலும் செங்கற்களா லும்தான் கட்டப்பட்டன. அவர்களின் கோட்டையிலே ஈசனின் முருகனின் ஆல யங்கள் இருந்தன. அரசர்கள் வழிபட (கோ- அரசன்) எல்லைக் காவல் தெய்வமாக இருந்த கொற்றவை கோனி யம்மன் என அழைக்கப் பட்டாள்.

காவல் தெய்வம் எனும் பெயருக்கேற்ப எட்டுக் கைகள். உடுக்கை, நெருப்பு, வாள் என ஏந்தியிருப்பதால் 'நான் போர் புரிபவள்' எனப் பயந்து விட வேண்டாம் என கிளியையும், அமுதக் கிண் ணத்தையும் ஏந்தியிருக்கும் அழகுத் தெய்வமாக ஒரு காலை மடித்து ஒரு காலை அரக்கன் மேல் வைத்து 'அழகு மாகாளியாக' விளங்கு கிறாள் அன்னை. அபய ஹஸ்தமும், வதன முறுவலும் வணங்கி நிற்கும் பக்தரை



• கோனியம்மன்

இந்த தீபாவளியை இனிதாகக் கொண்டாடுங்கள் !
கேதான் கிரைண்டர் மோட்டார் வழங்கும் பரிசுத் திட்டம் !!

நீங்கள் கேதான் மோட்டார் பொருத்திய கிரைண்டரை வாங்கி இருப்பவரா ?

நீங்கள் செய்ய வேண்டியது

அப்படியானால் உங்களுக்காக பரிசுகள் காத்திருக்கிறது

1. செப்டம்பர் மங்கையர் மலர் இதழில் வெளியான விளம்பரத்தில் கேதான் மோட்டாரின் சிறப்பு அம்சங்கள் எத்தனை தெரிவிக்கப்பட்டுள்ளன ?
2. கேதான் கிரைண்டர் மோட்டார்களுக்கு எத்தனை ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது ?
3. கேதான் மோட்டார் பொருத்திய கிரைண்டர்களே சிறந்தது, ஏனெனில் ....

(பத்து வார்த்தைகளுக்கு மிகாமல் எழுத வேண்டும்)

சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும் மூவருக்கு முறையே

முதல் பரிசு	:	கேதான் மினி ஏர் கூலர்
இரண்டாம் பரிசு	:	கேதான் ஹூமேர் விசிறி
மூன்றாம் பரிசு	:	கேதான் சோனா பெடஸ்டல் மின் விசிறி

அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 10.11.96

அனுப்ப வேண்டிய முகவரி:

கேதான் கிரைண்டர் மோட்டார் பரிசுப் போட்டி

கேதான் (இந்தியா) லிமிடெட்

7, தியாகராய தெரு (வடக்கு உஸ்மான் சாலை பிரிவு), சென்னை - 600 017.

விதிமுறைகள்: 1. நவம்பர் 10ம் தேதிக்குள் தபால் மூலம் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும். 2. கேதான் மற்றும் கனரா அட்வர்டைசிங் நிறுவனங்களில் பணி புரிபவர்கள் கண்டிப்பாக கலந்து கொள்ளக் கூடாது. 3. இந்த போட்டி சம்மந்தமான நேரடி மற்றும் தபால் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 4. கேதான் நிறுவனத்தினரின் முடிவே இறுதியானது. 5. பரிசு பெற்றவர்களுக்கு தபால் மூலம் தெரிவிக்கப்படும். 6. குறிப்பிட்டுள்ள பரிசுப் பொருட்கள் மட்டுமே வழங்கப்படும். பணமாக கொடுக்கப்படமாட்டாது. 7. விண்ணப்பங்களை கேதான் மோட்டார் பொருத்திய கிரைண்டர் வாங்கியதற்கான சான்றிதழுடன் (பில் காப்பி) இணைத்து அனுப்பவேண்டும்.

கேதான் – பெயர் ஒன்றே போதும்

Kanara Ads.



• நவக்கிரக நாயகர்கள், நாயகிகளுடன்

'அஞ்சேல், அஞ்சேல்' என்கிறது.

அது சரி, இந்தக் கோனியம்மன் எங்கிருக்கிறாள்? இந்தப் பெயரெல்லாம் எங்கோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே என்கிறீர்களா? கோவன்புதூரே இன்று கோயமுத்தூர் என மருவி விட்டது. அன்று கோட்டை இருந்ததற்கு அடையாளமாக சிதிலமடைந்த இடத்தையே 'கோட்டை மேடு' என இன்றும் அழைக்கிறார்கள். எல்லைக் காளி ஊர்பெரியதாகி விட்டதால் இன்று நகரமையத்தில் அமர்ந்திருக்கிறாள்.

கோவிலின் புராதானத்திற்கு மேலும் பல சாட்சிகள் உள்ளன என்கிறார்கள் கோனியம்மனை பூசிக்கும் சுவாமிநாத குருக்கள் மற்றும் ஷண்முகசுந்தர பூசாரி இவர்களுக்கு முறையே இளையவர்களான சுந்தரமூர்த்தி குருக்களும், செந்தில் குமார் பூசாரியும்,

"இந்த ஆலயத்தின் மிகப் பெரிய விழாவாக திருத்தேர்த் திருவிழா நடக்கும். ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் நடக்கும் இந்த விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். தீ மிதித்தல், தீச்சட்டி ஏந்துதல் என அம்மனுக்கான நேர்த்திக் கடனெல்லாம் நடத்துவார்கள். அந்தச் சமயத்தில் மலைப்பகுதியிலிருந்தெல்லாம் இருளர்கள் முதலான மலைவாசிகள் நிறைய வருவார்கள். கோனியம்மன் அவர்களுக்குக் குலதெய்வம். அவர்கள் பக்தி ஆவேசத்தோடு வருவதைப் பார்க்கும் போதே புல்லரிக்கும். ஆயிரக்கணக்கான வருடங்களாக இக்கோயில் இருக்கிறது என்பதற்கு இதுவே பெரிய சாட்சி."

என்கிறார்கள் இவர்கள். இது தவிர நவராத்திரி ஒன்பது நாட்களும் சிறப்பு அலங்காரம், பூஜைகள் உண்டாம். வேண்டும் வரம் தாயாக அமர்ந்திருப்பதால் நிறைய நேர்த்திக்கடன்கள் இங்கு நடக்கின்றனவாம்.



• செந்தில்குமார்

• சுந்தரமூர்த்தி

சமீபத்தில் தேவியர்களுடன் கூடிய சாந்த நவக்கிரக நாயகர்களை இக்கோயிலை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். முகமதியப் படையெடுப்பின் போது ஆதி கோனியம்மனை எடுத்து ஆற்றில் வீசி விட்டதாகவும் அந்த விக்ரகத்தின் தலை மட்டுமே பின்னர் கிடைத்தது எனவும், அதனை இப்போதைய மூலஸ்தானத்திற்குப் பின்புறம் பிரதிஷ்டை செய்திருக் கிறார்கள். பக்கத்திலே அழகு சிந்தும் ராகுகால' துர்கை. இந்தத் துர்கைக்கு செவ்வாய், வெள்ளி களிலே அவ்வளவு பெண்கள் கூட்டம் வருகிறது என்கிறார்கள்.

"எலுமிச்சந் தோலில் விளக்கேற்றுவது ரொம்ப விசேஷம். ஒவ்வொரு வாரமும் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போவதே இவளின் சக்தியைக் காட்டுகிறது"



• கோனியம்மன் கோயில் கோபுரம்

என்கிறார்கள். பக்கத்திலேயே ஐயனார் போன்ற பழமைத் தெய்வங்களை பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். சப்த கன்னிகைகளும் இருக்கிறார்கள். சுற்றிக் கொண்டு வந்து பிள்ளையாருக்கும் ஒரு நமஸ் காரம் செய்கிறோம்.

கோவையின் நாயகி கோனியம்மனைப் போலவே புகழ்பெற்றவள் தண்டு மாரி யம்மன். இவளோ மதநல்லிணக்கத்திற்கு சாட்சி சொல் பவளாக அமைந்திருக்கிறாள் எனலாம். 1790-ல் ஆங்கிலேயர்கள் நம் தேசத்தைக் கபளீகரம் செய்ய முற்பட்டபோது வீரத்துடன் எதிர்த்துப் போரிட் டவர்களில் திப்புசுல்தானும் ஒருவர்.

அந்தச் சமயத்தில்தான் கோவையில் அதிசய நிகழ்ச்சியும் நடந்தது. படைவீரர்கள்



தண்டு மாரியம்மன்

• ஆதி கோனியம்மன்

• ராகுகால துர்கை

தங்குவதற்குக் கூடாரங்களை அமைத்துக் கொள்வார்கள். இதனை 'தண்டு இறக்குதல்' என்பார்கள். இப் படிப்பட்ட 'தண்டு'வில் தங்கியிருந்த போர் வீரர்களில் ஒருவரின் கனவில் மாரியம்மன் தோன்றி, தான் அங்கு அனாதி காலம் தொட்டுத் தங்கியிருப்ப தாகவும், தங்கியிருக்கும் இடத்திற்கு அடையாளமாக வேப்பமரம் மண்டிக் கிடக் கும், சுனைநீர் இருக்கும் என்று சொல்லி மறைந்து விட்டாள். மறுநாள் சுற்றுப்புறத்தில் தேடிய வீரனுக்கு சுயம்புவாக கல் வடிவில் காட்சி தந்திருக்கிறாள் மாரி. வீரர்கள் அனைவரும் மெய்சிலிர்க்கத் தொழுது 'தண்டு மாரியம்மன்' எனப் பெயரிட்டுத் தங்கள் குல தெய்வமாக அவளை ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

சில காலங்களில் படை வீரர்களின் கூடாரங்கள் கலைந்தாலும், அவர்கள் வெகு தூரத்திற்குச் சென்றாலும் அன்னை மட்டும் அவர்களை ஆகர்ஷித்துக் கொண்டே இருந்திருக்கிறாள். அக்காலத்தில் காலரா, அம்மை, பிளேக் நோய்கள் சர்வசாதார ணமாக மக்களை சூறையாடிக் கொண்டு இருந்திருக்கிறது. அன்னையின் தீர்த்தமும் வேப்பிலையுமே நோயின் கடுமையைக் குறைப்பதை உணர்ந்தனர். வாழ்வில் கடுமையுற்றுக் கண்ணீர் சிந்தும் தீனர் களுக்கு ஆறுதல் அளிக்க மாரியாக, மழைக்கால அருள்மாரியாக அவள் விளங்குவதை அவரவர் அனுபவத் தாலே உணர்ந்தனர்.

கோவையின் அவிநாசி நெடுஞ்சாலையிலுள்ள இன்றைய கோயிலிலே சூலம் கையிலேந்தி அமர்ந்த கோலத்திலே திருவுரு காட்சியளிக்கிறாள். திருவுருவுக்கு முன்பு வீரர்கள் கண்ட சுயம்புக் கல்லினை மஞ்சள குங்கும... இட்டு இன்றும் வழிபடு கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டின் சித்திரை முதல் செவ்வாய்க்கிழமை தொடங்கி 13 நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. ஆடி வெள்ளியும், நவராத்திரியும் அம்மன் விழா கொண்டாடும் நாட்கள்தான்.

இவர்களின் அருளாட்சியிலே கோய முத்தூர், மகாலட்சுமி ஆட்சியில் மும்பை யைப் போலச் செல்வம் கொழிப்பதை உணர முடிகிறது. கோவையின் இரு கண் களாக, கோனியம்மனும், தண்டு மாரியம்மனும் விளங்குகிறார்கள் என்பது கண்கூடு.

- மங்களா ரமேஷ்

படங்கள் : ஜி. சுரேஷ்

பல்லாண்டு வாழ்க பெண்ணே



MUHURTHAM
COLLECTION

"சீரும் சிறப்பும் பெற்று வாழ்க என் செல்வமே".. ஒவ்வொரு புது மணப்பெண்ணுக்கும் உடன் வரும் மங்கள வாழ்த்து.

இந்த உணர்ச்சிகளில் பங்கேற்கிறது பிரின்ஸ் ஜுவல்லரி. தனது 'முகூர்த்தம் கலெக்ஷன்' மூலம். மணமகளுக்காகவே பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட நகைகள்.. நீங்காத நினைவுகளை, பொன்னான நினைவுகளாக்கும்.

முல்லை காசு மாலை

தமிழ்ப்பெண்ணின் பாரம்பரிய ஆபரணமான இது. லக்ஷ்மியின் உருவம் பதித்த தங்க நாணயங்களால் செய்யப்பட்ட மாலை. இதற்கு புதுப்பொலிவு சேர்க்க, பிரின்ஸ் ஜுவல்லரி, முல்லை மலர்களை ஒவ்வொரு தங்க நாணயத்தின் மீதும் சேர்த்துள்ளது. புகுந்த வீட்டிற்குள் செல்வச் செழிப்பை எடுத்துச் செல்லும் மணமகளுக்காகவே!

PRINCE®
JEWELLERY


13, Nageswara Rao Road, Panagal Park, T.Nagar, Madras - 600 017. Ph : 4346783 / 4347493

(We have no branches)

❖ Gold ❖ Diamond ❖ Birth Stones ❖ Silver ❖ Tanishq Jewellery

FORTUNE-M

MAX POWER STABILISERS



Right Choice to protect your Window, Split Air Conditioners & A.C. Plants.

GUARANTEE 10 YEARS

95% Efficiency


Aruna Agencies
No.9, Theetharappan Street,
Triplicane, Madras - 600 005.
Phone : 8555612 / 832652 / 8541254.

COMPARE THE QUALITY NOT THE PRICE

பொன் விளையும் பூமி

கூடுவாஞ்சேரி:

அவ்வை நகர் (1121/95)
ராஜாஜி நகர் (532/95)
திருக்குறள் நகர் பகுதி I (1057/97)



ஃபோர்டு கார் தொழிற்சாலை அருகே

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கூடுவாஞ்சேரியில் மதிப்பு வாய்ந்த வீட்டு மனைகளை உங்களுக்கு வழங்குகிறது டிஎல்வி. இந்நிறுவனம், இருபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துறைகளில் தன் பெயரை நிலைநாட்டியுள்ளது.

மனைகளுக்கான பணம் செலுத்தும் போது வியப்பூட்டும் தள்ளுபடிகள் மற்றும் தங்கப் பரிசுகள் பெறலாம்.

15 தினங்களுக்குள் முழுத் தொகை -
11% தள்ளுபடி + 3 கிராம் தங்ககாசு.
30 தினங்களுக்குள் முழுத்தொகை -
10% தள்ளுபடி + 2 கிராம் தங்ககாசு
60 தினங்களுக்குள் முழுத்தொகை -
5% தள்ளுபடி + 1 கிராம் தங்ககாசு

இலவசம். மனைக்கு செல்ல வாகன வசதி-
காலை 6, 11 மணி. மாலை 3 மணி.

மேற்கொண்டு விபரமறிய எங்களை அணுகவும் :

TLV
Quality is Our Strength

டிஎல்வி ஹவுஸிங் & ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்,
54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,
புவனேஸ்வரி தியேட்டர் எதிரில்,
சென்னை - 600 007.
போன்: 5325311/12/13 ஃபேக்ஸ் : 5325353

20 ஆண்டுகளுக்கு மேலாக தரமதிப்பை கட்டிக்காப்பவர்கள்

மறுபக்கமும் உண்டு சகோதரியே!

'எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்,' 'அடிபட்ட சகோதரிகள் அழுகிறார்கள்' என இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து வந்த கட்டுரைகளில் கணவனை இழந்த பெண்களின் துயரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அது சார்பாக இன்னும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

இருட்டை விமரிசித்துக் கொண்டே இருப்பதை விட ஒரு சிறு அகல் விளக்கையாவது ஏற்றிவைக்கும் முயற்சியே இந்தக் கட்டுரைகள். நம் சகோதரிகள் மனமாற்றம் பெறவேண்டும். அறிந்தோ சில சமயம் அறியாமலேயோ தவறுகள் நடந்திருப்பின் திருத்திக் கொள்ளவே இரண்டு இதழ்களில் விரிவுபடுத்தினோம்.

நிறைய பேர் மாற்றம் கண்டுள்ள அவர்களின் சூழ்நிலைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் சிலர் எழுதிய அனுபவங்களை இங்கே பிரசுரித்துள்ளோம்.

இதோடு வாசகியரின் எழுத்து அனுபவங்களை நிறுத்திக் கொள்வோம். வாழ்க்கையிலே நம் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்வோம்.


– ஆசிரியர்



அன்புள்ள சகோதரி,

"எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்" என்று நீங்கள் மனம் குமுறி எழுதிய வரிகளைப் படித்தேன். ஒவ்வொரு எழுத்தின் பின்னாலிருந்த துயரை என்னால் முழுமையாக உணர முடிகிறது. ஏனெனில் நானும் உங்களைப் போல பத்து ஆண்டுகளுக்கு முன்பு என் கணவரை இழந்தவள். இந்தப் பத்து ஆண்டுகளில் பெண்ணுக்குப் பெண்ணே செய்யும் சிறுமைகளைப் பல இடங்களில் பல வடிவங்களில் சந்தித்திருக்கிறேன்; அவை பற்றிச் சிந்தித்திருக்கிறேன். பிறந்த வீட்டிலும் சரி, புகுந்த வீட்டிலும் சரி, என் உறவினர் முற்போக்குச் சிந்தனை உடையவர்களாக இருந்ததால் அந்த அளவுக்கு என் வேதனை குறைக்கப்பட்டது.

தங்களைப் பொறுத்த அளவில் உங்கள் சிநேகிதிகளும் உடன் பிறந்தோருமே உங்கள் மனம் புண்பட நடந்து வருகிறார்கள்; இந்தக் கொடுமை தங்களை மிகவும் பாதித்திருக்கிறது. அவர்கள் நடத்தையால் மன



நவராத்திரி பொம்மைகளை வாங்கும்போது, சின்னசின்ன செடிகளையும் வாங்கி, கொலு வைக்கும் அறையில் அழகாக வைத்தால், நவராத்திரி களைகட்டுமே!(வீட்டுக்கு ஒரு மரம் வைத்ததுபோலும் இருக்கும்)

– ஆர். சீதா

மொடிந்து போவதற்கு முன் சிறிது சிந்தியுங்கள். தங்கள் உடன் பிறந்தவர்களைப் பொறுத்தவரை தங்கள் மனத்தை நோகச் செய்தல் நோக்கமாக இருக்க முடியாது. காலங்காலமாக இந்தச் சமுதாயம் அவர்கள் பால் ஏற்றியிருக்கும் மூடநம்பிக்கைகளும் குறுகிய மனப்பாங்கும்தான் அவர்கள் செயலுக்குப் பின்னணி. அறியாமை, மனிதநேயமின்மை பிற காரணிகள்.

நம் மனம் ஆழமான வேதனையில் துடிக்கும் போது ஒரு சிறிய துயரும் பேருருக் கொள்கிறது; எல்லோருமே வரிந்து நம்மை வேதனைப்படுத்துகிறார்களோ என்ற தன்னிரக்கம் மேலிடுகிறது. சான்றாக, உங்கள் சகோதரி உங்களுக்குக் குங்குமம் அளிக்காததற்குக் காரணம் அதை ஏற்கும் நிலையில் நீங்கள் இல்லையே என்ற வருத்தமாகக் கூட இருக்கலாம். பலமுறை நொந்து போன நம் உள்ளம் கற்பனையான சில எண்ணங்களையும் வளர்த்துக் கொள்கிறது. அரண்டவன் கண்! ஆனால் நீங்கள் முயன்றால், உங்கள் கண்ணோட்டத்தை மாற்றிக் கொண்டால் நீங்கள் எதிர்கொள்ள நேரும் கொடுமைகளை, சிறுமைகளை நிச்சயமாக எதிர்க்கலாம், தவிர்க்கலாம். நல்ல மாற்றங்களை எளிதில் ஏற்க இந்தச் சமுதாயம் தயாரில்லை. இத்தகைய சமுதாயத்தை எதிர்கொள்ளும் முயற்சியில் நான் கற்ற பாடங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் :

1. முதல் முயற்சியாக உங்கள் ஆழ்மனத்தில் படிந்துள்ள குற்றவுணர்வை நீக்கி விடுங்கள். "கணவரை இழந்த பெண்கள் செய்த தவறென்ன? அவர்கள் ஏன் காரணம் இல்லாமல் தண்டிக்கப்படுகிறார்கள்?" எனும் வினாக்களை நீங்களை எழுப்பியுள்ளீர்கள். கணவரின் மறைவுக்கு நீங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பல்ல என்பது புரிகிறது அல்லவா? பிறகு, நல்ல ஆடை அணிவதில், மகிழ்ச்சியாக இருப்பதில், வாழ்க்கையை ரசிப்பதில், ஆராதனை செய்வதில் குற்றவுணர்வு ஏன்? கூசிக் குறுகி, புழுங்கி, நடுங்குவது ஏன்? இயல்பாக நடந்து கொள்ளுங்கள். குற்றம் செய்தாரை நடத்துவது போலப் பிறர் தங்களை நடத்துவது மறையாவிடினும் ஓரளவு குறையும். பிறர் நடத்தை உங்களை பாதிக்கக் கூடாது; அப்போக்கினை அனுமதிக்காதீர்கள்.

2. தன்னம்பிக்கையை, வளர்த்துக் கொள்ளுங்கள். தோற்றத்தில் கவனம் செலுத்துவது, தன்னம்பிக்கையை வளர்க்கும் முதல் படி. நன்றாக உடுத்துங்கள்; 'பளிச்' என்று வளைய வாருங்கள். உங்கள் சீரான தோற்றம், உங்கள் குழந்தைகளை மகிழ்விக்கும்; பிறரிடம் உங்கள் மதிப்பை உயர்த்தும். ஒவ்வொருவருள்ளும் ஒரு சாதனையாளர் ஒளிந்து கொண்டிருக்கிறார்.

3. உங்கள் தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தத் திறமையை ஏன் மேலும் வளர்த்துக் கொள்ளக் கூடாது? இதனால் உங்களுக்கு இரட்டைப் பயன்– உங்கள் மனதுக்குப் பிடித்ததைச் செய்யும்போது உங்கள் மனவலி குறைகிறது; திறமை வளர்கிறது. உங்கள் தனித்திறமை வளர வளர உங்கள் மதிப்பு, பிறரிடையே பன்மடங்கு வளர்கிறது. கணவரை இழந்தும் தொடர்ந்து சாதனை படைக்கும் எழுத்தாளர், இசைவாணர் இன்று நம்மிடையே பலர் உள்ளனர். அவர்களை விதவையாகப் பார்ப்பதோ, பிற சிறுமை செய்யத் துணிவதோ இயலாது; உலகம், அவர்களை மதிப்புடன், அண்ணாந்து நோக்கி வியக்கிறது.

4. உங்களுக்கு மனவேதனை தரும் சூழ்நிலைகளைத் தவிர்த்து விடுங்கள்.

ஒதுக்கப்படுவீர்கள் என்பது தெரிந்தும் இந்தச் சடங்குகளில் கலந்து கொண்டு மனவலியுடன் திரும்புவது அவசியம்தானா? இதை இரு வகைகளில் அணுகலாம் : ஒன்று, இந்தச் சந்தர்ப்பங்களை முற்றாகத் தவிர்ப்பது. இரண்டு, அச்சூழலில் அறிந்தோ, அறியாமலோ சிலர் செய்யும் சிறுமைகளை அலட்சியப்படுத்துவது, அவற்றுக்காகக் கலங்காமல் இருப்பது.

5. உங்கள் மனநிலை, உங்கள் குழந்தைகளின் மனநிலையையும் எதிர்காலத்தையும்

பாதிக்கும் என்பதை மறக்காதீர்கள். தந்தையை இழந்த அவர்கள் உங்களைத்தான் முற்றாகச் சார்ந்திருப்பர். குற்ற உணர்வு, தாழ்வு மனப் பான்மை, ஏக்கங்கள் – இவற்றுடன் வாழ்க் கையை எதிர்கொள்ளும் தாய், தன் மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்புணர்வினைத் தர முடியும்? ''என் தாய் உறுதிமிக்கவள், என்னைக் காப்பாற்றி, நல்வழி நடத்தும் பக்குவமும், துணிவும், அறிவும் பெற்றவள்'' என்ற உணர்வு அவர்களிடம் தோன்றி நிலைக்குமாறு நடந்து கொள்ளுங்கள்.

6. விருப்பம் இருப்பின் மறுமணம் செய்து கொள்வது பற்றித் தீவிரமாகச் சிந்தியுங்கள். உங்கள் உறவினரின் பரிந்துரை இதற்கு அவசியமில்லை. அவர்கள் இந்த யோசனையை உங்கள் முன் வைப்பதில்லை என்று வருத்தப்பட்டுள்ளீர்கள். இந்த யோசனையை ஏற்பீர்களோ, அதனால் உங்கள் மனம் புண் படுமோ என்ற தயக்கம் கூட அதற்குக் காரணமாக இருக்கலாம். மறுமணத்தில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால் உங்களுக்கு நெருக்கமான, நம்பிக்கைக்குரிய, அறிவார்ந்த ஒருவருடன் – அவர் தோழியாக அல்லது சகோதரியாக இருக்கலாம் – கலந்து ஆலோசியுங்கள். இது குறித்து உங்கள் குழந்தைகளிடமும் பக்குவமாகப் பேசுங்கள். நல்ல முடிவு எடுத்து அதற்கொப்ப முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

பெண்ணே தன் இருப்புக் கூட்டிலிருந்து வெளிவந்து தன் கண்ணியத்தையும் உரிமையையும் காத்துக் கொள்ளப் போராடி, விடுதலையை வென்றெடுப்பது வரை சமுதாயத்தில் பெருமாற்றம் ஏற்படாது.

அன்புடன்,
உங்களைப்போல் ஒரு சகோதரி

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு என் தாயார் வீட்டில் நான் இருந்த சமயம் எங்கள் தெருவில் இருந்த சௌராஷ்டிர இனத்தைச் சேர்ந்த குடும்பத்தினரின் உறவினர் தங்கள் முதல் பையனுக்குத் திருமணம் செய்தனர். நான்கு ஆண் பிள்ளைகள் கொண்ட குடும்பம் அது. பையன், பெண் இருவருக்குமே சிறிய வயதுதான் திருமணம் முடிந்த ஒரு வருடத்திற்குள்ளாக ஜாதகம் பார்த்ததில் நேரம் சரியில்லை. அதற்குரிய பரிகாரம் செய்யுங்கள் என சோதிடர் கூறியதனால் குடும்பம் மொத்தமும் காரில் பல திருத்தலங்களுக்குப் பிரயாணம் செய்தனர். திருநள்ளாறு சென்று சனீஸ்வரனுக்குப் பரிகாரம் செய்து விட்டுத் திரும்பும் வழியில் திருச்சியில் காவிரிக் கரையில் சிரம பரிகாரம் செய்து கொள்ள அனைவரும் இறங்கியிருந்தனர்.


அப்பொழுது பெற்றவர்களிடம் சொல்லாமல் பையன் அவன் மனைவி, அவனது தம்பிகள் அனைவரும் காவிரியில் குளிப்பதற்கு இறங்குகையில் மாப்பிள்ளை சுழலில் மாட்டிக் கொள்ள அவனைக் காப்பாற்ற மனைவி நீரில் இறங்கி ஓடிப் பிடிக்க இருவரையும் பார்த்த ஆற்றங்கரையில் இருந்த மற்றொருவர் அவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கையில் மனைவியை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. பையனின் உடலைத்தான் மீட்டார்கள். அந்தச் சிறு பெண்ணைப் பார்த்துக் கதறாதவர்கள் இல்லை.

மிகுந்த கட்டுப்பாடும் சடங்கும் சம்பிரதாயமும் கொண்ட குடும்பத்தில் அந்தப் பெண்ணின் நிலை இனி வைதவ்யம்தான் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் பையனின் பெற்றோர்கள் அப் பெண்ணைத் தங்களின் 2-வது பையனுக்கு மணம் பேச முனைந்தனர். இதற்கு அவர்கள் சமூகத்தில் பயங்கரமாக எதிர்ப்புக் கிளம்பிய போதும் சிறிதும் அதைப் பொருட்படுத்தாது உறவினர்கள் யார் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி என்று மனம் துணிந்து அப் பெண்ணின் வாழ்க்கை பாழாகக் கூடாது என்ற ஒரே எண்ணத்துடன் அவர்களின் திருமணத்தை நடத்தி முடித்தனர்.

பிறகு அப்பெண் கர்ப்பவதியாகி கைநிறைய வளையல்களும் பூவும் அணிந்து வந்த காட்சி இப்பொழுது கூட கண்கொள்ளாக் காட்சியாக மனத்திரையில் காட்சியளிக்கிறது. மிகச் சிறிய வயதிலேயே விதவையான எத்தனையோ பேர்கள் அதனால் பல துன்பங்களை நம் கண் முன்னேயே

பழைய சைக்கிளின் சக்கரத்தை சுத்தம் செய்து, கலர்பேப்பர், அல்லது வண்ணத் துணிகள் அல்லது கலர் ரிப்பனைச் சுற்றி, இருபுறமும் நல்ல நூலினால் கட்டி, அறையின் நடுவே தொங்கவிடலாம். கம்பீரமாக இருக்கும்!

— ஆர். சீதா



உங்கள் டெபாசிட்டுகளுக்கு ஆண்டு முழுவதும் விழாக்கால கோலாகலம்.

ANUGRAHAM

Deposit Utsav

SEPT. '96 — MAR. '97


ராம் காஷ்யப்பின் செயல் திறனைப் பாரீர்!

- முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில், நிகர லாபம் 1995 - 96ல் 108% ஆக உயர்ந்துள்ளது.
- சொத்து மதிப்பு ரூ.13 கோடிக்கு மேல்
- 1995ல் ரூ.35.83 லட்சங்களாக இருந்த டெபாசிட் தொகை ஆகஸ்ட் 1996ல் ரூ.12 கோடிகளாக உயர்ந்துள்ளது - டெபாசிட்தாரர்களின் நம்பிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம்.
- வியாபார யுக்தி நன்கு அறிந்த தொழில் வல்லுனர்களால் நிர்வகிக்கப்படும், ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற பப்ளிக் லிமிடெட் நிறுவனம்.
- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் மேலான ஆதரவைப் பெற்றது.
- CARE நிறுவனத்தார்களால் BBB + ஆக உயர்த்தப்பட்ட போதிய பாதுகாப்பிற்கான மதிப்பீடு.

அனுக்கிரஹம் டெபாசிட் உற்சவம்

• உடனடிப் பரிசு • மாதாந்திர பரிசுகள் • சூப்பர் போனான்ஸா பரிசுகள்

விழாக்கால கோலாகல பரிசுகள்



பரிசுகளை வழங்குபவர்கள் காஷ்யப் ஃபைனான்ஷியல் சர்வீஸஸ்

மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள எமது கிளை
அல்லது புரோக்கர்கள்/ஏஜெண்டுகளை அணுகவும்.

இன்றே விரைந்திடுவீர்!

Ram Kaashyap
Investment Ltd

பதிவு அலுவலகம் : 53 பிஷப் கார்டன் (கிரீன்வேஸ் சாலை அருகே), சென்னை 600 028. போன் : 4936931, 4936932
கிளைகள் : சென்னை : • **தி.நகர்** போன் 4341513 • **மைலாப்பூர்** போன் 4951650, 4950920. • **ஆழ்வார்பேட்டை** போன் 4970204, 4998325. • **மேற்கு மாம்பலம்** போன் 4896638. • **அண்ணா நகர்** போன் 610979. • **அடையார்** போன் 418081. • **கோயம்புத்தூர்** போன் 231886. • **திருச்சி** போன் 704752. • **தஞ்சாவூர்** போன் 25871. • **மதுரை** போன் 541802. • **கும்பகோணம்** போன் 24221. • **ஈரோடு** போன் 79822. • **வேலூர்** போன் 26336. • **பாண்டிச்சேரி** போன் 46154. • **சேலம்** போன் 445771. • **திருநெல்வேலி** போன் 23808. • **காரைக்குடி** : ஸ்ரீ ஜய விலாஸ் காம்ப்ளெக்ஸ், 108, நூறடி ரோடு, புது டவுன், காரைக்குடி 630 001 • **திண்டுக்கல்** : நெ.24, புது அக்ரஹாரம், திண்டுக்கல் 624 007. • **திருவாரூர்** : 80-A தெற்கு தெரு, திருவாரூர் 610 002.

உலகக் கண்ணோட்டம்; தனி மனித மேம்பாடு

சட்டபூர்வமான ஃபிக்சட் டெபாசிட் விளம்பரம் 7.6.96 தேதியிட்ட 'ட்ரினிட்டி மிரர்' மற்றும் 10.6.96 தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது.

Insight-401



நவராத்திரி சமயத்தில் நிறைய "சிலேடு"களை வாங்கி வைத்துக் கொண்டால், நாம் பூ கொடுக்கும் போது விருந்தினர்களுக்கு சிலேடு ஒன்றையும் சேர்த்துக் கொடுத்தால், பூ வைத்துக் கொள்ள சுலபமாக இருக்கும்.

— ஆர். சீதா

அனுபவிக்கும் இந்த நாளில் அப்பெண்ணை அதிலிருந்து மீட்ட அப் பெண்ணின் மாமனார், மாமியார் இருவரும் இன்றும் கூட எனக்கு மனித தெய்வங் களாகவே தோன்று கிறார்கள்.

– விஎம். சாந்தி

அடிபட்ட நான் சிரிக்கிறேன்

கணவரை இழந்து என் ஒரே குழந்தை யுடன் நான் பட்ட அவமானங்கள் கொஞ் சமல்ல. அப்போது என் கணவருடைய உறவினர் ஒருவர் நான் அந்தப் பெரிய குடும்பத்தில் அனுசரித்து நடந்த முறைகள், என் குணங்கள் இவற்றை மனத்தில் கொண்டு என்னை மறுமணம் செய்து கொள்ள என் பெற்றோரை அணுகிய போது மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் 6 வருடம் மூத்த மருமகளாக, பெற்ற பெண் போல் வீட்டின் ஏற்ற தாழ்வுகளை அனுசரித்து இருந்த என்னை, என் மாமியாராகட்டும், என் மைத்துனர்களாகட்டும் புரிந்து கொள்ள வில்லை. இவர்களே புரிந்து கொள்ளாத போது வெளி மனிதர்களை பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. எல்லா எதிர்ப்புகளையும் மீறி மாறிவரும் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக என்னை அந்த நல்ல மனிதர் என் பெற்றோர் ஆசியுடன் மணம் புரிந்தார். இந்த திருமணத் தால் எல்லா உறவுகளையும் இழந்து என்னை யும் என் குழந்தையையும் மட்டுமே உறவாக எண்ணி புது வாழ்க்கையை தொடங்கி யிருக்கும் என் கணவரை பார்த்தாவது இன்றைய இளையதலைமுறையினர் என் னைப் போன்ற விதவைகளுக்கு புது வாழ்வு அமைக்க முன்வருவார்கள் என்ற நம்பிக் கையில் இதை எழுதியிருக்கிறேன்.

– வி. ஜெயந்தி, பெங்களூர்.

கல்கி

6.10.96 இதழில்....

ஊழலை எதிர்த்துப் போராடும் மகளிர் சங்கம்!



— சிறப்புக் கட்டுரை

NAVARATHRI and DEEPAVALI Festival Discount

50%

- Kancheepuram Silk Sarees
- Pattu Pavadai
- Mysore Silk Sarees
- Printed Silk Sarees

Srinivas Silks

(House of Kancheepuram Silk Sarees)
'Luz Bazaar' No. 4, R.K. Mutt Road,
Mylapore; Madras - 600 004. Ph : 4943566

ALL CREDIT CARDS ACCEPTED

WEAVER DISCOUNT SAREES AT MUCH CHEAPER PRICES

SHOP OPEN ON SUNDAYS TILL DEEPAVALI

VIA MEDIA 9/96

என் கணவர் குடிப்பழக்கத்தினால் வாழ்க்கையில் செட்டிலாவதற்கு முன்பே மரணமடைந்தார். எனக்கு 2 குழந்தைகள். இறந்தவுடன் என் பிறந்த வீட்டிலிருந்து எனக்கு 'மாரல் சப்போர்ட்' கிடைத்தது. என் உறவினர்கள் எல்லோரும் என்னிடம், ''சந்தோஷமாக வாழ உனக்கு எல்லா உரிமையும் உண்டு. பைத்தியக்காரத்தனமாக பழைய பழக்கங்களைக் கைக்கொள்ளாதே'' என்றது மட்டுமல்ல, ஃப்ரீயாக இருக்க அனுமதித்தனர். பழத்தட்டுகளை அலங்காரம் செய்வது, பந்தலில் வைப்பது, வெற்றிலை பாக்கு கொடுப்பது போன்ற பணிகளை செய்ய அனுமதிக்கப்பட்டேன். என் சித்தி பிள்ளை திருமணத்தில் நடந்த நிகழ்ச்சிகளை கூற விரும்புகிறேன். மணப்பெண்ணின் அக்கா இளம் விதவை. ஆனால் ஊஞ்சல் போதும், கூறை உடுத்தும் போதும் அக்கா மணப்பெண்ணின் அருகிலேயே இருந்தாள். கூறையை வாத்தியார் கொடுத்த போது அவள் தான் மணப்பெண்ணிடமிருந்து அதை வாங்கிக் கொண்டு உள்ளே அழைத்துப் போய் கட்டியும் விட்டாள். மற்றும் மணமகனின் பெரியம்மா விதவையானதால் சற்று ஒதுங்கியிருந்தாள். தாலி கட்டும் போது என் பெரியப்பா அவரிடம் சென்று, ''நீங்கள் அவனுக்கு அம்மா மாதிரி. மணமேடையில் வந்து நின்று ஆசீர்வாதம் செய்ய வேண்டாமா?'' என்று கூறி கையைப் பிடித்து மணமேடைக்கு அழைத்து வந்தார். இதை எல்லோரும் பாடமாக எடுத்துக் கொள்ளலாமே.

இன்னும் பண்டிகைகளோ, எந்த விசேஷமோ என் உறவினர்களின் அன்பான அணுகுமுறையில் நான் சாதாரண வாழ்க்கையே வாழ்கிறேன். இப்படி எல்லோரும் என்று மாறுவார்கள்?

- செளம்யா.

நாணயத்தில் இரு பக்கம் உண்டு

எங்கள் வீட்டில் நவராத்திரி மற்றும் எந்தவொரு விசேஷமானாலும் எங்கள் உறவினரிலும், சிநேகிதிகளிலும் பெண்கள் எல்லோரையும் ஒன்று போல் அழைத்து, வரவேற்று குங்குமம், பூ, மஞ்சள், வெற்றிலை, பாக்கு, தேங்காய், ரவிக்கைத் துண்டு முதலியவை ஒன்று போல் வைத்துக் கொடுக்கிறேன். அவர்களாக பூ, மஞ்சள் வேண்டாமென்று மறுப்பவர்களைக் கூட சமாதானம் சொல்லிக் கொடுத்து விடுவேன்.

என் மகளின் கல்யாணத்தின் போது என் உறவினர்கள் எல்லோருக்கும் பாகுபாடு இல்







டெலிபோன் மணியடித்தால் பயம். அவரோட ஆபீஸ் ஃப்ரெண்ட்ஸ் யாராவது டின்னருக்கு வராங்க என்றால் பயம். பார்ட்டிக்குப் போகணும் ரெடியாக இரு என்றால் பயம். மத்தவங்களோட சகஜமாக பேச பயம், இப்படி எதற்கெடுத்தாலும் பயந்து நடுங்கியதற்குக் காரணம் இங்கிலீஷ் தான்.

ஆனால் இப்பொழுது நான் அடியோடு மாறிவிட்டேன். ஆம்! விவேகானந்தாவின் ஹை பவர் இங்கிலீஷ் கோர்ஸ் என் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எந்த சூழ்நிலையாக இருந்தாலும் என்னால் இப்பொழுது துளிக் கூட பயமில்லாமல் சர்வ சாதாரணமாக இங்கிலீஸ் பேச முடிகிறது. நீங்களும் ட்ரை பண்ணிப் பாருங்க, நான் சொல்றது உண்மைதான்னு உங்களுக்கே தெரியும். Mrs. Nirmala

கடந்த 15 ஆண்டுகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விவேகானந்தாவின் ஆங்கிலப் பயிற்சியில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளுங்கள். சரளமாக பேசத் தொடங்குங்கள்.

5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ள முறையான, முழுமையான பயிற்சி.

விவேகானந்தாவின்

ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ்

..... *விவரம்* ....

LEVEL - 1

(அடிப்படை ஆங்கிலம்) ABCD யிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக்கான கட்டணம் ரூ. **150/-** மட்டுமே

LEVEL - 2

(இலக்கணம் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு, பிழையின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாக பயிற்சி பெறலாம். பயிற்சிக்கான கட்டணம் ரூ. **175/-** மட்டுமே.

LEVEL - 3

உரையாடல் பயிற்சி **(Spoken English)** தவறாக பேசிவிடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் மிகச் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக்கான கட்டணம் ரூ. **200/-** மட்டுமே.

நேர்முகப்பயிற்சி மையங்கள் : சென்னை : 9, வெட்லி ரோடு, தி நகர், சென்னை - 17. ★ 18, ராமசாமி தெரு, மேற்கு தாம்பரம், (பஸ் நிலையம் அருகில்) சென்னை - 45. ★ 30, மேடவாக்கம் டாங்க் ரோடு (E.S.I. ஆஸ்பத்திரி அருகில்) கீழ்பாக்கம், சென்னை - 10. ★ திருநெல்வேலி : 16A, திருச்செந்தூர் ரோடு (கனரா பாங்க் மாடியில்) முருகன் குறிச்சி, திருநெல்வேலி - 2. ★ திருச்சி : சோழா டவர்ஸ், சிந்தாமணி, (E.R. ஸ்கூல் எதிரில்)

சிறப்புச் சலுகை

LEVEL - 2&3

இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. **325/-** மட்டும் செலுத்தினால் போதும்.

LEVEL - 1,2&3

மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. **450/-** மட்டும் செலுத்தினால் போதும்.

முன்பணம் அனுப்ப வேண்டியதில்லை பாடங்களை V.P.P. யில் அனுப்புகிறோம். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இக்கூப்பனை பூர்த்தி செய்து 15 நாட்களுக்குள் அனுப்புங்கள்

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை V.P.P. யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களை பெற்றுக்கொள்கிறேன்.

தேவையான கட்டத்தில் ✓ குறியிடுங்கள்

☐ **Level - 1**

☐ **Level - 2**

☐ **Level - 3**

லாமல் புடவை, ரவிக்கைத் துண்டு, வெற்றிலைப் பாக்கு வைத்துக் கொடுத்தேன்.

என் மன்னி (அண்ணா காலமாகி விட்டார்) அவர்கள் வீட்டிற்கு நான் சென்றால் வெற்றிலை, பாக்கு, மஞ்சள் தான் கொடுப்பதற்குப் பதில் மகளிடமோ, அல்லது மருமகளிடமோ கொடுத்து கொடுக்கச் சொல்வார். "நீ என்னை விட வயதில் எவ்வளவோ மூத்தவள். உன் கையாலேயே கொடுத்து என்னை ஆசீர்வாதம் செய்" என்று கூறி, நமஸ்காரம் செய்து என் மன்னி கையாலேயேதான் நான் மஞ்சள், குங்குமம் பெற்றுக் கொள்வேன்.

இதை எழுதும் போது கட்டுரை எழுதிய சகோதரி, "நீ ஒருத்தி பரந்தமனப்பான்மையுடன் இருந்தால் போதுமா?" என்று கேட்பது என் காதில் விழுகிறது. உதாரணத்திற்கு எழுதியிருக்கிறேனே தவிர என்னைப் போல் ஆயிரமாயிரம் பேர் இருக்கிறார்கள்.

ஐம்பது வருடம் முன்னால் நடந்தது. என் பாட்டி (அப்போது என் தாத்தா உயிருடன் இல்லை)யின் தம்பிக்கு சஷ்டியப்தபூர்த்தி. அதற்கு என் பாட்டியின் தம்பி மனைவி, "என் கல்யாணத்திற்கு நீங்கள்தான் தாலி முடிந்தீர்கள். உங்கள் கை ராசி நாங்கள் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடிக் கொள்ளும் பாக்கியம் பெற்றோம். இப்போதும் நீங்கள்தான் தாலி முடிய வேண்டும். அப்போதுதான் நாங்கள் சதாபிஷேகம் கொண்டாட கொடுத்து வைத்தவர்களாவோம்" என்று கூறி, என் பாட்டியின் கையாலேயே தாலி முடிந்து கொண்டார். அதிலும் என் பாட்டியின் தங்கைகள் இருவர் சுமங்கலிகளாக இருந்தும், என் பாட்டிக்கே அந்த கௌரவத்தைக் கொடுத்தார் சகோதரி.

'அவருடைய மறுமணத்தைப் பற்றி அவருடைய உடன் பிறந்த தங்கை கூட அவரிடம் தப்பித் தவறி பேசியதில்லை'

‘இப்போது என் கண்மணியின் தலைமுடிக்குத் தருகிறேன் தேங்காய் எண்ணெய் மற்றும் லிக்விட் புரோட்டீனின் ஊட்டச்சத்து... அதுவும் பிசுபிசுப்பு, சிக்கு இல்லாமலேயே’! —திருமதி. ஷர்மா



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

Lintas CI PI 29 2013 Tm

'பயம்' என்ற தலைப்பில் வந்திருந்த கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற சரஸ்வதி ராமஸ்வாமிக்குப் புடவையைப் பரிசளிக்கக் கோயமுத்தூர் போயிருந்தோம். செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. ஜம்பகம் ராமசாமியையும், எங்களையும் பார்த்தவுடன் பேச ஆரம்பித்தவர்தான். அவ்வளவு





வாழ்வின் வண்ணங்கள்

மகிழ்ச்சி திருமதி. சரஸ்வதிக்கு. அவர் பரிசு பெறும் வைபவத்தைக் காணவே சேலத்திலிருந்தும், சென்னையிலிருந்தும் அவருடைய சகோதரர்கள் வந்திருந்தார்கள். தன்னுடைய கணவர், குழந்தைகள், சகோதரர்கள் அனைவரையும் அறிமுகப்படுத்தியவர், தாங்கள் வாழ்க்கையில் கஷ்டப்பட்டதையும், குழந்தைகள் நன்கு படித்து இப்போது நல்லவேலையில் இருப்பதால் தற்போது நன்றாக இருப்பதையும் விவரித்தார். ஒரு கல்யாணத்திற்குத் தான் கட்டிக் கொண்டு போன பட்டுப்புடவைக்காக வீட்டுக்கார அம்மாவைப் பார்த்து எப்படியெல்லாம் பயப்பட்டார் என்பதை விவரித்திருந்த கட்டுரை அது. அவர்கள் குடும்பத்தினருடன் சிறிதுநேரம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினோம்.

இந்த இதழில் கடைசிப் போட்டியில் பரிசு பெற்ற 'வெற்றிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்த ஒன்பது மாதங்களில் நம்முடைய மங்கையர்மலர் சகோதரிகளில் ஒருவராகவே ஆகிவிட்ட ஜம்பகம் ராமசாமி நம்மோடு குதூகலமாக நவராத்திரியைக் கொண்டாட வேண்டும் என்பதில்தான் ஆர்வமாக இருக்கிறார். அதைப்பற்றித் தான் கோயமுத்தூர் போகும் வழியில் எல்லாம் பேசிக் கொண்டு வந்தார். நவராத்திரி ஒன்பது நாட்களும் செண்பகம் சில்க்ஸ். 30 பி, லஸ் அவின்யூ, சென்னை-4 முகவரியில் 'நவராத்திரி தாம்பூலம்' தருவதுடன் நவராத்திரி சம்பந்தமாக

ஒரு போட்டியும் வைக்கிறார். கேள்விகளாகவோ அல்லது நவராத்திரி பற்றிய சிறு குறிப்பு எழுத வேண்டியதாகவோ இருக்கும். அவற்றுள் சிறந்ததைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு நாளும்

முதல் பரிசு - ரூ.1000/- மதிப்புள்ள புடைவை

ஒன்பது ஆறுதல் பரிசுகள் - ரூ.200/- மதிப்புள்ள சீட்டின் முதல் மாதத்திற்குத் தள்ளுபடி என வழங்க இருக்கிறார். விஜயதசமியன்று அனைத்துப் பரிசுகளும் அறிவிக்கப்பட்டு, அளிக்கப்படவும் உள்ளது.

இனி 'வெற்றி' பரிசுக் கட்டுரை....

'ஒண்ட இடம் இல்லை, உடுத்த பட்டுப்புடவையா?'

என் கணவரின் வெற்றிப்பாதைக்கு நான் காரணமாக இருந்தேன்: அதற்குச் சாட்சியென ஒரு புடைவை - பட்டுப்புடவை இருந்தது.

என் புகுந்த வீட்டில் அண்ணன் தம்பிகளுக்குள், சுமாரன நிலையில் இருந்த என் கணவர் எங்கள் சக்திக்கு மீறின வகையில் எனக்கு, அரக்கு நிறத்தில், அன்னம் டிசைன் நிறைந்த ஒரு பட்டுப்புடவை எடுத்து வர, அதைக் கண்ட என் வசதியான ஒரு கொழுந்தன் மனைவி (அதாங்க அவரோட அண்ணி) என் கணவரிடம் எல்லோரும் இருக்கும்போதே "ஒண்ட இடம் இல்லை; உடுத்த என்ன பட்டுப் புடவை வேண்டிக் கிடக்கு? பட்டா உடுத்தினா வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்யிறதா உத்தேசம்?" என்று எங்கள் சுமாரான நிலையையும், எங்களுக்கென்று வீடு இல்லாததையும் கூறி மனம் நோக வைத்து விட்டார்.

நான் பட்டுப்புடவையை அவர் கையில் கொடுத்துவிட்டு அறைக்குள் சென்று அழுது விட்டேன். இரவு அவர் என்னைப் பலவாறு சமாதானப்படுத்தியும், அந்தப் புடவையை நான் கட்ட மாட்டேன் என்றும், என்று நமக்கென்று ஒரு வீடு சொந்தமாகிறதோ அன்று தான் இனி பட்டுப்புடவையே கட்டுவேன் என்றும் "சவாலாய்" கூறி விட்டேன்.

என் அஸ்திரம் பலன் தந்தது. அவர் வீடு கட்ட முயற்சிப்போம் என்றார் அரைகுறை மனதாய்! போதாதா இது!

என் நகைகள் அனைத்தையும் பாங்கில் வைத்து கையில் இருந்த பணத்தையும் போட்டு காரைக்குடியில் ஒரு கிரவுண்டு வாங்கினோம். வீடு கட்ட உதவும் நிதி நிறுவனங்களை அணுகி 10 வருடத்தில் திருப்பிச் செலுத்தும் தவணையில் லோன் பெற்று வீட்டைக் கட்டினோம்.

வீட்டை என்னவோ கட்டி விட்டோம். ஆனால் லோன் தவணை! முழி பிதுங்கி விட்டது. என் கணவர் ஒரு நாள் எரிச்சலில் என்னை "பெரிய பாஞ்சாலி ! பட்டுப்புடவை சபதம் போட்டுட்டா. லோன் முடியற வரைக்கும் பட்டுப்புடவை கட்டாம இரு பார்ப்போம்?" என்று கேட்டு விட நானும் சரி என்று "சவால்" விட்டேன்.

பட்ஜெட் பொறுப்பை ஏற்றேன்; உணவு, உடை, பொழுதுபோக்கு என்று எல்லாவற்றிலும் சிக்கனம், சிக்கனம்! சிக்கனம்! என்று கொண்டு வந்தேன். அதை எப்படிச் சொல்வது இக்கணம். வருவாயைப் பெருக்க தையல் வகுப்பு எடுத்தேன். குரோஷா கூடை பின்னி விற்றேன்.

இதைக் கண்ட அவரும் ஊதிய உயர்வுக்கான தேர்வுகளை எழுதச் சம்மதித்தார். அவரோடு இரவு நானும் கண் விழித்தேன். (விட்டால் நித்திரைதான்) மூன்று ஊதிய உயர்வு பெற்றார். பதவி உயர்வும் கிடைத்தது.

120 மாதத்தில் முடிய வேண்டிய லோன் 60 மாதத்தில் முடிந்து வீடு சொந்தமாகி விட்டது.

இப்போது அவரே வருடா வருடம் பட்டுப் புடைவை எடுத்துத் தருகிறார். ஆனால் அந்தப் புடவை போல் ஆகுமா? அது பட்டுப்புடவை

சுண்டல் செய்ய பட்டாணி, கொண்டைக் கடலை போன்றவைகளை ஊறவைக்க மறந்து விட்டீர்களா? ஒரு பிளாஸ்க்கில் வெந்நீரை நிரப்பி அதில் பட்டாணி, கொண்டைக்கடலையை போட்டு ஒரு மணி நேரம் ஊற வைத்தால் டக்கென்று ஊறி விடும்.

— ஆர். ஜெயலட்சுமி



யுனிஸ்கோ

வோல்டேஜ் ஸ்டெபிலைசர்ஸ்

A) லோ வோல்டேஜ்னாலே ஏஸி, டிவி, ஃபேன், லைட் எதுவுமே ஒழுங்கா வேலை செய்யறதில்லே, ரிப்பேர் வேறே ஆயிடறது.

B) எனக்கு அந்த கவலையேயில்லை; ஏன்னா நான் யுனிஸ்கோ மாஸ்டர் ஸ்டெபியுலசர் வாங்கிட்டேன். அந்த ஒரே ஸ்டெபிலைசர் முழு வீட்டுக்கும் எல்லா மின் சாதனங்களுக்கும் கரெக்ட் வோல்டேஜ் தருது. சிக்கன மான விலையிலே முழுமையான பாதுகாப்பு தருவது யுனிஸ்கோ ஸ்டெபிலைசர்தான்.

A) அப்ப நானும் உடனே யுனிஸ்கோ ஸ்டெபிலைசரையே வாங்கிடறேன்.

UNISCO

VOLTAGE STABILISER

8 வருடம் கியாரண்டி

வோல்டேஜ் – 100 V முதல் 500 V வரை
கேபாஸிட்டி – 0.5 KVA முதல் 50 KVA வரை

சுலபத் தவணையிலும் கிடைக்கும்

ஏர் கண்டிஷனர்ஸ், பிரிட்ஜ், மைக்ரோவேவ் ஓவன், கிரைண்டர், மோட்டார் பம்ப் மற்றும் எல்லா மின் சாதனங்களுக்கும் தனித்தனி ஸ்டெபிலைசர் மற்றும் முழு வீட்டிற்குமாக மாஸ்டர் ஸ்டெபிலைசரும் கிடைக்கும்.

இத்துறையில் 15 வருட அனுபவமிக்கவர்களால் தயாரிக்கப்படுவது யுனிஸ்கோ ஸ்டெபிலைசர்ஸ்.

விபரங்களுக்கு:

இராயல் எண்டர் பிரைசஸ்
36, கற்பகாம்பாள் நகர்,
முதல்மாடி,
மைலாப்பூர், சென்னை - 4.
போன் : 4998366.

இராதா கம்பெனி,
கார்பரேஷன் ஷாப்பிங் சென்டர்,
மதுரை - 1.
போன் : 543004.

ADSTART



பிபிஎல் ஃப்ராஸ்ட்-ப்ரீ உணவை விட விலைமதிப்பற்ற ஒன்றையும் பாதுகாக்கிறது: நமது நாடெங்கிலும் காணப்படும் உணவுப் பழக்கங்கள். மிகத் துல்லியமான இதன் டெம்பரேச்சர் பகுதிகளும் நம் நாட்டின் மிகக் கடுமையான தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ற கம்ப்ரெஸ்ஸரும் இதற்கு உதவுகின்றன. அதனால் தான் இந்தியாவின் எல்லா


உணவைச் சிறப்பாகப் பாதுகாப்பது போலவே இது பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறது !

* ஓ.ஆர்ஜி ஜன்-ஜுன் '96

BPL REFRIGERATION LIMITED

Contact : **MADRAS** : 429, I Floor, Anna Salai, Nandanam, Tel: 4330278/801





மூலை முடுக்குகளிலும் இது திறனுடன் செயல்படுகிறது. தயிர் சாதமா, மிஷ்டி தஹியா –இது புத்தம் புதிதாக வைக்கிறது. விண்டாலு, சாம்பார், டிக்காஸ், அவியல் ... எதுவாயினும்! சுருக்கத்தில் எங்கள் சர்வதேச ஃப்ராஸ்ட் - ஃப்ரீ மாடல்கள் இந்தியாவுக்கு மிகவும் சிறந்தவை. உங்களுக்கு மிகவும் ஏற்றவை. கிடைக்கும் மற்ற மாடல்கள்: 2-டோர் 185லி, 2-டோர் 250லி, 3-டோர் 250லி, 3-டோர் 350லி மற்றும் 4-டோர் 350லி. இதன் ஒரே சர்வதேச அம்சம் – இதன் தொழில்நுட்பம்.


BPL FROST-FREE

2-டோர் 300 லி.

இந்தியாவின் மிகப் பெரிய, மிக அதிக விற்பனையாகும் ஃப்ராஸ்ட் - ஃப்ரீ அணிவரிசை.*

BPL Believe in the Best.

COIMBATORE : No. 2, Vincent Road, Fort. Tel: 391398



வரும் நவராத்திரிக்கு கொண்டைக் கடலையுடன் வெள்ளைக் கடலையையும், பச்சைப் பட்டாணியுடன் வெள்ளைப் பட்டாணியையும் கலந்து செய்து கொடுங்கள். மாறுதலாகவும், கலர்ஃபுல்லாகவும் இருப்பதால் அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

— ஜெயா

மட்டுமல்ல - வெற்றிப்புடைவையுங்கூட அல்லவா?

— பி.சௌந்திரம், புதுக்கோட்டை.

பிரசுரத்திற்கு....

திருமணம் எனும் வெற்றிக்கனி

நானும் எனது கணவரும் அப்போது காதலர்கள். எங்கள் காதலின் வயது 2 வருடம். எங்கள் வீட்டில் விஷயம் தெரிந்து திருமணத்திற்கு சம்மதமும் கிடைத்து விட்டது. என் கணவர் வீட்டிலும் அரசல் புரசலாக விஷயம் தெரியும். என் மாமனார் மிகவும் ஜோவியல். அவருடன் எனக்கு முன்பே அறிமுகம் இருக்கிறது. என் மாமியார் மிகவும் அன்பானவர். ஆனால் கண்டிப்பு மிக்கவர் என்று என் கணவர் சொல்லியிருக்கிறார். வீட்டில் அவரது முடிவே எந்த விஷயத்திலும் இறுதியானது. இந்த நிலையில் என் அத்தை என்னைப் பார்த்துத் திருமணம் பற்றி முடிவெடுக்க அழைத்து வரச் சொல்லியுள்ளார். என் கணவர் என்னிடம் வந்து, 'நல்லபெயரை பெற்று விடு தாயே, அப்பொழுதுதான் திருமணம்' என்று கூறினார். பெற்றோர் சம்மதத்துடன்தான் திருமணம் என்று நாங்கள் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம்.

எனது வருங்கால மாமியாரை சந்திக்கும் அந்த நாளும் வந்தது. பரிட்சைக்குச் செல்லும் மாணவிபோல் உள்ளூர நடுங்கிக் கொண்டே சென்றேன். அவரும் என்னை வரவேற்று என் படிப்பு குடும்பச் சூழ்நிலை பற்றியெல்லாம் பேசினார். எனக்கோ மனது திடுக் திடுக் என அடித்துக் கொண்டது. அவரோ எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் பேசிக் கொண்டிருந்தார். நானும் பின்னர் கிளம்பி வந்து விட்டேன். அடுத்த சில மாதங்களில் எங்கள் திருமணம் இனிதே நடைபெற்றது.

அவர்கள் குடும்பத்தில் நுழைந்த பின்தான் எனது அத்தையின் அன்பையும் பாசத்தையும் உணர்ந்தேன். ஒருநாள் அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது நான் அவரைப் பார்த்து பயந்ததைக் கூறி சிரித்துவிட்டு "எதைக் கண்டு என்னை உங்கள் வீட்டிற்குப் பொருத்தமானவள் என்று முடிவு செய்தீர்கள்?" எனக் கேட்டேன்.

"நீ காட்டன் புடவை கட்டி இருந்ததைப் பார்த்து எளிமையானவள் என்று புரிந்தது. அதை உடுத்திருந்த நேர்த்தியையும் அழகையும் பார்த்து எந்தக் காரியத்தையும் கருத்துடன் நேர்த்தி ஆக செய்வாய் என்பது தெரிந்தது. முக்கியமான நாள் என்பதால் கண்டிப்பாக உன் அதிர்ஷ்ட மற்றும் விருப்பமான நிறத்தில் தான் உடையணிந்து கொண்டிருப்பாய். அதன்படி பச்சை நிறத்தை விரும்பும் நீ பாசம் மிக்கவளாய் இருப்பாய் என்று உணர்ந்தேன்" என விளக்கினார்.

நான் உடுத்தியிருந்த ஒரு புடவையை வைத்து இவ்வளவு குணாதியங்களை அறிய முடித்ததா என்று வியப்பால் வாயடைத்துப் போனேன். (ஏனெனில் அவர் கணித்த அத்தனை குணங்களும் எனக்கு உண்டு) என் திருமணம் என்ற வாழ்வின் மிகப் பெரிய வெற்றிக் கனியை பெற உதவிய அந்த வெற்றிப்புடைவையை இன்றும் பாசத்துடன் நினைவு கூர்கிறேன்.

— உமா மகேஸ்வரி, கோவை -6.

வெற்றி

எனக்கு மிக நெருங்கிய தோழியின் திருமணம் நிச்சியக்கப் பட்டிருந்தது. தாய் தகப்பனாரை இழந்த சற்று வயதும்கூடிய மிக ஏழையான பெண்ணுக்கு திருமணம் என்றதும் என்னுடைய அடிமனதில் இப்பெண்ணுக்கு எப்படியாவது கண்டிப்பாக உதவ வேண்டும் என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன். திருமண அழைப்பிதழும் வந்தது. ஆனால் அவர்கள் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கவில்லை.

நான் எனக்காக, வரும் தீபாவளியை முன்னிட்டு முன்னதாக ஒரு பட்டுப்புடவை வாங்கி வைத்திருந்தேன். இந்தப் புடவையையே திருமணப் பரிசாக அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கத் தீர்மானித்தேன். ஆனால் எப்படியோ என்ன காரணமோ என்னால் திருமணத்திற்குப் போக முடியாமல் தடங்கல் வந்து விட்டது.

திருமணம் முடிந்து 7 (அ) 8 மாதங்கள் கழித்து தான் நான் அப் பெண்ணைச் சந்திக்க முடிந்தது. பிறகு அந்தப் புடவையையே அன்பளிப்பாகக் கொடுக்கவும் முடிந்தது. அவர்களும், வரப்போகும் வளைகாப்பு, சீமந்தம் நடத்த என்ன செய்வது என்று குழம்பியிருந்த சமயம் இந்தப் புடவை எங்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று எல்லோரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருந்தனர். ரூ.1500/- விலை உயர்ந்த பட்டுப்புடவையை யாருமே எதிர்பார்க்கவில்லை.

சமீபத்தில் அப்பெண்ணுக்கு இரட்டை குழந்தைகள் சுகப்பிரசவம் ஆனச் செய்தியை முதலில் எனக்குத்தான் தெரிவித்தார்கள். இப்போது அவர்கள் 'அந்தப் புடவை வந்த வேளை எங்களுக்குச் சீமந்த புத்திரர்கள் பிறந்தனர், மேலும் சுகப் பிரசவம் மற்றும் அக் குழந்தைகளின் தந்தைக்குச் சம்பள உயர்வு என்று படிப்படியாக நல்ல செய்தியே வருகிறது' என்று உள்ளம் உருகி எனக்குக் கடிதம் மேல் கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

— *கமலம், கோவை-2.*

மாமியாரும் 'அன்னை'யைப் போல்தான்

என் 60 ஆண்டுக்கால வாழ்விலே பல விஷயங்களில் பல 'வெற்றி'களை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் வாழ்விலே நான் மிகப் பெரிய 'வெற்றி'யைப் பெற்றது அந்தப் புடைவையால்தான்! பல வண்ண வண்ணப் புடைவைகளைக் கட்டி மகிழ்ந்திருக்கிறேன். பிரியமானவர்களுக்குப் பரிசும் அளித்திருக்கிறேன். ஆனால் என் மருமகளுக்கு நான் தந்த அந்தப் புடவை என் உண்மைத் தாய் அன்பை அவளுக்குப் புரிய வைத்தது.

பெற்றோருக்கு ஒரே வாரிசான என் மருமகளை நானும் என் கணவரும் சொந்த மகளாக எண்ணி நிரம்பச் செய்ய வேண்டும் என பல ஆசைகளை மனதில் வளர்த்திருந்தோம். ஆனால் எங்களைப் பற்றி பலவித தவறான செய்திகளைக் கூறி என் மருமகள் மனதிலே பயத்தை ஏற்படுத்தி இருந்தனர் சில "நல்லவர்கள்". பெற்றோருக்கு ஒரே செல்ல மகளான அவள் "மாமியாரை" ஒரு கொடுமைக்காரியாக கற்பனை செய்திருந்தாள் போலும், பிறர் ஏற்படுத்திய பயமும் சேர அவள் எங்களை வெறுக்கலானாள். எங்கள் வீட்டிற்கு வரவே விரும்பவில்லை. அவள் இருப்பிடம் சென்று புரியவைக்க முயன்ற எங்களுக்கு வரவேற்பும் இல்லை.

காலம் உருண்டது. அவளுக்கு ஒரு பிள்ளையும் பிறந்தான். எல்லாவற்றையும் மறந்து குல வாரிசைக் காண ஆவலுடன் சென்ற எங்களை குழந்தையைத் தொடக் கூட அனுமதிக்கவில்லை. இதனையும் பொறுத்துக் கொண்டோம்! ஆயினும் அவளது இந்தச் செய்கைகளால், என்னையும் மீறி மனதிலிருந்து "தாபம்" கடும் சொற்களாக வெளிவந்து விட்டது! ஆயினும் தவறை உடனே உணர்ந்த நான் பிறகு எதுவுமே பேசவில்லை.

குழந்தையின் முதல் ஆண்டு விழாவினை குலதெய்வம் கோவிலில் செய்ய ஏற்பாடு செய்திருந்தான் எங்கள் மகன். அதற்கும் செல்லுவதை கடமையாக எண்ணி நாங்கள் குழந்தைக்கும், மகன், மருமகளுக்கும் பல பரிசுகளைக் கொண்டு சென்றிருந்தோம். அத்துடன் எனக்கு மிகவும் பிடித்த அந்த புதுப்பட்டுப் புடவையும் எடுத்துச் சென்றிருந்தேன்.

விழாவில் மனையில் அமர 9 கெஜம் புடைவை தேவை. என் மருமகள் அவளது விலை உயர்ந்த கூரைப்புடவையை கொண்டு



வெற்றிலை, பாக்கு தட்டில் குறைந்த விலையில் தரமற்ற எவர்சில்வர் பாத்திரம் கொடுப்பதை விட சிறிய சைஸ் சட்னி டப்பாவோ, ஸ்நாக்ஸ் வைக்கும் பிளாஸ்டிக் டப்பாவோ, சிறிய பிள்ளையார், லக்ஷ்மி உருவங்கள் குறைந்த விலையில் கிடைக்கிறது, அவற்றையோ கொடுக்கலாம். பட்ஜெட்டில் இடமிருந்தால் கர்நாடக, கடவுள் மேல் பாடப்பட்ட மெல்லிசை பாடல்கள் கேசட்கள் கூட கொடுக்கலாம்.

— மஹிமா



ஒரு கப் பொட்டுக் கடலை, ஒரு சிறிய கரண்டி சர்க்கரை, ஒரு சிறிய கரண்டி கொப்பரைத் துருவல், 4, 5 ஏலக்காய் இதை மிக்ஸியில் பொடி செய் யுங்கள். இதை கர்நாடகத்தில் நவராத் திரி, விநாயகர் பூஜை நிவேதனத்திற்கு தவறாமல் செய்கிறார்கள். நீங்களும் நவராத்திரியில் ஒரு நாள் செய்து பாருங் களேன்!

— மஹிமா



வந்திருந்தாள். அவளிடம் வேறு ஜ கொரம் இல்லை. அதனைக் கட்டிக் கொண்டு சிறு குழந்தையை வைத்துக் கொண்டால் புடவை பாழாகி விடுமே என பயந்தாள். உடனே நான் அந்தப் புடவையை எடுத்துக் கொடுத்து, "விருப்பம் இருந்தால் இதனைக் கட்டிக் கொள்" எனக் கூறி சென்று விட்டேன். அந்த விழா முழுவதும் அவள் அந்தப் புடவையைத் தான் கட்டியிருந்தாள். நான் மிகவும் மகிழ்ந் தேன். புடவையைத் திரும்ப என்னிடம் தர வந்த அவளிடம், "உனக்குப் புடவை பிடித் திருந்தால் நீயே வைத்துக் கொள்" என நான் கூறியதை அவளும் அவள் பெற்றோர்களும் எதிர்பார்க்கவில்லை.

மாமியாரும் ஒருதாய்தான் என்பதை அவ ளுக்குப் புரியவைக்க நான் பல விலை உயர்ந்த பரிசுகளைக் கொடுத்தும் எனக்குக் கிடைக்காத வெற்றி அந்தப் புடவை மூலம் கிடைத்தது. இப்போழுதெல்லாம் எங்களை தன்னுடன் வந்து இருக்கும்படி அழைக்கிறாள். இந்த வெற்றி மட்டுமல்ல அந்தப் புடவை எனக்கு இப்பொழுது மற்றொரு வெற்றியையும் தரப் போகிறது!

— என். கமலா, திருச்சி.

அன்பால் ஜெயித்து வெற்றி பெற்றேன்

எனக்குத் திருமணமான புதிதில் என் மாமியாருக்கும் எனக்கும் கொஞ்சம்கூட ஒத்துப் போகவில்லை. நான் எதைச் செய் தாலும் குற்றம். செய்யாவிட்டாலும் குற்றம். எப்போதும் எனக்கும் அவருக்கும் சண்டை. அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னை இவரும் அடித்துவிடவே, கோபித்துக் கொண்டு பிறந்தகம் சென்று விட்டேன். வெளியிலிருந்து வந்த பாட்டியிடம் என் மாமியாரைப் பற்றிக் கூறி அழுதேன். என் மாமியார் பாட்டிக்கு தூரத்து உறவு.

"ஒரு கல்யாணத்திற்கு நிறைய ஜரிகை போட்ட பட்டுப்புடவை கட்டினால், எப்படி புடவையை பாழ்படுத்துகிறாள் பார்! என்று திட்டி, சாதாரண புடவையைக் கட்டிக் கொண்டு போனால், எங்க மறுவீட்டுக் கல்யா ணத்திற்கு என்னை அவமானப் படுத்த வேண்டுமென்றே இந்தப் புடவையை கட்டிக் கொண்டு வருகிறாள் என்று நிஷ்டூரம்" என்று பாட்டியிடம் கூறி அழுதேன். என் பாட்டி, வாழ்வியல் அறிஞர். என்னைச் சமாதானப் படுத்தி "உன் மாமியார் நல்லவள்தான், மூத்த பையனுக்கு சொந்தத்தில் பெண் எடுத்து, மகனை தாய் வீட்டிற்கே அழைத்துக் கொண்டு போன ஏமாற்றம். அவனை ஏதும் சொல்ல முடியாத துக்கம். இரண்டாவதாக வந்த உன் னிடம் கோபத்தை ஆற்றிக் கொள்கிறாள். நீ எதை யும் அவளிடம் கேட்டுச் செய்வதுதானே. அதில் உனக்கென்ன நஷ்டம். காசா, பணமா?" ஒரு அமைதியான குடும்பத்தின் வெற்றி, வீட்டின் பெண்களின் ஒற்றுமையில்தான் இருக்கிறது என்று புத்தி சொன்னார்.

பிடிக்கவில்லையென்றாலும் நடிக்க ஆரம் பித்தேன். "அம்மா, இந்தப் பச்சை கலர்ப் புடவை எடுத்துக் கொள்ளட்டுமா? (பாகற் காயை ஏற்கனவே நறுக்கி வைத்துக் கொண்டு) அம்மா இன்றைக்கு பாகற்காயை பிட்லை செய்யட்டுமா!" சிம்பிள் லாஜிக்தான். நடிப்பு பின் இயல்பாயிற்று. என் ஈகோவை கொஞ்சம் விட்டுக் கொடுத்தேன். என் மாமியாரை அன்பால் ஜெயித்து வெற்றி பெற்று விட்டேன்.

வாழ்நாள் முடியும் தருணத்தில், என்னோடு இருக்க ஆசைப்பட்டு 'சௌபாக்யத்தோடு வாழ்வாய்' என்று ஆசிர்வதித்து அவர் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்த பட்டுப் புடவைகளை மகளும் மற்ற இரு மருமகள் கள் இருந்தும் எனக்கே பரிசளித்தார். என் னையே உதாரணமாக்கி, எத்தனையோ பெண் களை நானும் சமாதானப்படுத்தி பெருமைப் பட்டு கொண்டது என வாழ்வின் வெற்றியா கவே கருதுகிறேன்.

— என். கமலாம்பாள், சேலம்-9

''கார்டியாலஜி, கைனகாலஜி என ஒவ்வொரு சிறப்புத் துறைகள் குறிப்பிடப்படுவது போல கூந்தலுக்குக் கூட ஒரு துறை வந்திருக்கிறது 'ட்ரைகாலஜி' என. இதைப் பற்றி நாங்கள் நீண்ட நாட்களாக ஆராய்ச்சி செய்து வருகிறோம், அதிலே சில சிறந்தவற்றையும் கண்டு பிடித்திருக்கிறோம்'' என்கிறார்கள் லலிதா, முரளி எனும் தம்பதியினர் —

'ட்ரைகாலஜி'

தெரியுமா?

''என்ன எண்ணெய் தடவினாலும் தவறாமல் வாரம் இரண்டு முறை எண்ணெய்த் தேய்த்துக் குளித்தாலும் ஏனோ தலைமுடி இப்படி உதிர்ந்து கொண்டே போகிறது. இதே போல உதிர்வது தொடர்ந்தால் தலை என்ன ஆகும்?'' - என்பவர்கள் நம்மில் பலர். முன்பு போல வெறும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்று இல்லாமல் இன்று பேன் தொல்லைக்கு ஒரு மருந்து. பொடுகுக்கு ஒரு ஷேம்ப்பு - முடிவளர ஒரு எண்ணெய். இப்படி எத்தனை தினம் அறிமுகமாகின்றன. ஆனால் முடிப் பிரச்னை என்னவோ தீராமல் தொடர்கிறது.



வேகமாக வளரும் கூந்தலை வெட்டிக் குறைத்துக் கொள்வது இன்றைய நாகரீகம்தான். ஆனால் முடியின் நீளத்தைக் குறைத்துக் கொள்ள விரும்புவோர் யாரும் அதன் அடர்த்தியைக் குறைக்க விரும்புவதில்லையே! இந்த முடிகள் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வு சொல்கிறார்கள் டாக்டர் முரளியும் - திருமதி லலிதா முரளியும். இவர்கள் முடி பற்றிய ஆராய்ச்சியைத் (Trichology) தொடர்ந்து 20 வருடங்களாகச் செய்து வருபவர்கள். அவர்களை நாம் சந்தித்த போது —

''முடிப் பிரச்னை என்பது பெண்களுக்கு எப்போதுமே உள்ள பொதுவான பிரச்னை தான். நீண்ட, அடர்ந்த அழகிய கூந்தல் அமையவில்லையே என்ற ஏக்கம் இல்லாத பெண்யார்? 'நீளமான கூந்தலுக்கே காவியம் உண்டே?' இந்தப் பிரச்னை பெண்களைப் பொறுத்தவரை பலருக்கு அழகுப் பிரச்னையானால் - சிலருக்கு வாழ்க்கைப் பிரச்னையாகவும் ஆகிவிடுகிறது?

''கூந்தல் பற்றி சந்தேகங்கள் இருப்பின் என்னுடைய 4919298, 4918820 எனும் தொலைபேசியில் கூட கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் துறையில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு'' என்றார் பேச்சின் இடையில்.

இளநரை, பொடுகு, முடி நுனியில் இரண்டாகப் பிரிதல், தலையில் ஆங்காங்கு சொட்டை விழுதல், புழு வெட்டு, கடைசியாக வழுக்கை - இவைதான் முடியைப் பொறுத்த வரை வரும் பொதுவான பிரச்னைகள். 40 வயது தாண்டிய பின்பு வரும் நரையைப் பற்றியே கவலைப்பட்டு தங்களை என்றும் இளமையாகக் காண்பித்துக் கொள்ள தலைக்கு 'டை போட்டுக் கொள்ளும் இந்தக் காலத்தில் 20 வயதிலேயே தலை வெளுத்து விடுவது ஒரு பெரிய பிரச்னைதானே? இதனால் எத்தனை பெண்களுக்குத் திருமணம் தடைபடுகிறது?

அடுத்து பொடுகு. இதுவும் என்றும் தொடரும் ஒரு பிரச்னை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. 1. செபேஷியஸ் சுரப்பிகள் அதிகம் சுரப்பதால், 2. அதிகம் கொழுப்பு நிறைந்த பொருட்களை உண்பது, 3. அதிகமான மனக்கவலை. இதை ஆரம்பத்திலேயே கவனியாது விட்டால் முடி அதிகம் உதிரும். முடி வளர்ச்சி பாதிக்கப்படும். முடி வேரோடு களையப்பட்டு விடலாம். இளநரைக்கு முக்கிய காரணம் பரம்பரையைத் தவிர இரும்பு, நாகம்

(Iron & Zinc) போன்ற தாதுப் பொருட்களின் குறைபாடு. பிளியல் சுரப்பியின் குறைபாடு. அயல்நாடுகளில் தலைமுடியை எந்த விதத்திலும் பாதிக்காத வண்ணம் ஷேம்புகள் தயார் செய்யப்படுகின்றன.

ஊட்டச்சத்துக்கள் குறைவினால் உண்டாவதுதான் முடிகள் பிளவுபடுதல். சொட்டை, புழுவெட்டு - இவை கிருமிகளின் (பேக்டீரியா & ஃபங்கஸ்) தாக்குதலால் வரலாம். சில மருந்துகளின் பக்க விளைவுகளினாலும் இவை வரலாம். வழுக்கை (ஆண்/பெண் இருபாலருக்கும்) ஆண்ட்ரோஜன் என்னும் ஹார்மோன் அதிக அளவில் சுரப்பதால் ஏற்படுவது.

முடியின் பிரச்னைக்கு மற்றொரு மிக முக்கிய காரணம் நாம் தலைகுளிக்கப் பயன்படுத்தும் தண்ணீர். அதன் தன்மையை பொருத்துத்தான் முடி அழகு அமையும்.

இதயம் சம்பந்தப்பட்ட மருத்துவத்தை இதய இயல் (Cardiology) என்றும், மகளிர் சம்பந்தப்பட்ட மருத்துவத்தை 'கைனகாலஜி' என்பது போல முடி சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு முடி மருத்துவம் (Tricho- logy) என்பது மருத்துவத் துறையில் சமீபத்தில் உருவானது. நாங்கள் இந்தத் துறையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மற்றும் சிகிச்சை செய்து வருகிறோம். அலோபதி, சித்தா மற்றும் ஆயுர் வேதம் போன்ற எல்லாத் துறைகளையும் இணைத்தே இந்த ஆராய்ச்சிகளைச் செய்தோம். 10 வருட ஆராய்ச்சிகளுக்குப் பின்பு உருவானதுதான் நாங்கள் கண்டு பிடித்துள்ள 'ரோமா' ஹேர் டானிக். இந்தியாவில் உள்ள பல அரசு மற்றும் புகழ் பெற்ற தனியார் மருத்துவமனைகள் (அப்போல்லோ ஆஸ்பிடல் போன்ற) பலவற்றிலும் இது பரிசோதிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தரம் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ அங்கீகாரம் பெறு வது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. பல அயல் நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



சாதாரண முடி உதிரும் பிரச்னைக்கு 'ரோமா' ஹேர்டானிக் பயன்படுத்த ஆரம்பித்த 2 மாதங்களில் (பெரும்பாலானவர்களுக்கு) முடி உதிர்வது நின்று விடும். அதன் பிறகு நீண்டு, அடர்த்தியாக வளரும். வழுக்கை பிரச்னை உள்ள ஆண்களுக்கு 4 மாதங்கள் முதல் பலன் தெரியும். வழுக்கை பகுதிகளிலும் முடி வளரும். இளநரை பொடுகு பிரச்னைகளுக்கும் விரைவான பலன் தருகிறது எனப் பயன்படுத்திய வர்கள் சொல்கிறார்கள்" என்று தங்கள் படைப்பைப் பற்றி சொல்லிக் கொண்டே போனவர்களை இடைமறித்தோம்.


"இவ்வளவு சிறப்பாக இருக்கிறது உங்கள் தயாரிப்பு என்கிறீர்களே, இது எப்படி வேலை செய்கிறது."

"சாதாரணமாக இரவில் உறங்கும் போது இரத்தக் குழாய்கள் விரிவடையும். இதனால் ரோமா ஹேர்டானிக்கை உறங்க 30 நிமிடங்களுக்கு முன்பு மயிர்கால்களில் நன்கு படும்படி தேய்த்துக் கொள்ள வேண்டும். உறங்கு முன்பே இது காய்ந்து விடும். மறுநாள் காலையில் எண்ணெய்ப் பசைக்காக மூலிகை வளம் நிறைந்த 'ரிஷி ஹெர்பல் ஹேர் ஆயில்' Crishi Herbal Hair Oil (தேங்காய் எண்ணெய்க்குப் பதில்) பயன்படுத்த வேண்டும். சாதாரண தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் இவைகள் கொழுப்பு நிறைந்தவை. அதனால் மயிர்கால்களில் இவைகள் ஊடுருவி உள்ளே செல்வதில்லை. இந்த ரிஷி ஹெர்பல் ஹேர் ஆயில் கொழுப்புச் சத்து அறவே இல்லாத - வைட்டமின்கள் நிறைந்த மூலிகைத் தைலமாக இருப்பதால் தினமும் பயன்படுத்த சிறந்தது. முடியை அலச கெமிகல்கள் நிறைந்த ஷாம்புக் களைத் தவிர்த்து ஸில்கி (Silky) ஹெர்பல் ஹேர் வாஷ் பவுடர் (வாரம் ஒரு முறை) உபயோகிக்கலாம். இவை 100 சதவிகிதம் மூலி கைகளால் மட்டுமே தயாரிக் கப்படுபவை. கெமிகல் என்பதே இதில் கிடையாது. இந்த மூன்று தயாரிப்புகளுமே தமிழ்நாடு முழுவதும் அனைத்து மருந்துக்கடை களிலும் கிடைக்கின்றன.

நம் தேசத்தில் சித்தர்கள் அற்புதமான அழகுப் பொருட்களை கண்டு பிடித்து வைத்திருக்கிறார்கள். நாம்தான் அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டோம். கூந்தல் என்பதை எடுத்துக் கொண்டு இதைத் தான் ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறோம். நிறைய பேர் பயன் பெற்றுள்ள கண்டுபிடிப்புகள் இவை. நம் நாட்டின் பெரியவர்களுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக இவற்றை அர்ப்பணிக்க விரும்புகிறோம்" என்கிறார்கள் 'ஆரோக்கியா நேச்சர் க்யூர் சென்டர்' எனும் பெயரிலேயே ஒரு சென்ட்டரை டி.55/ஏ, எலியட்ஸ் பீச் ரோடு, பெசன்ட் நகர், சென்னை - 90ல் வைத்து நடத்தும் இந்த லலிதா முரளி தம்பதியினர்.

பேட்டி : **வினயா**

இதோ, உயர்தர வாழ்வு அமைய ஓர் அரிய வாய்ப்பு.



24 ஏக்கர் பரப்பளவிலே!

ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ். தனித்தனி வில்லாக்கள் (Villas), டூப்ளக்ஸ் வீடுகள் மற்றும் ஃப்ளாட்டுகளை தன்னகத்தே பெறவிருக்கும், ஒரு எழில்மிகு குடியிருப்பு பகுதி. மேட்டுப்பாளையம் சாலையில், வடகோவை ரயில் நிலையத்திலிருந்து ஐந்து நிமிட பயண தூரத்தில்!

கோவையில் முதலிடம் வகிக்கும் கட்டட நிபுணர்களான சங்கர் அஸோஸியேட்ஸ் வடிவமைத்துள்ள ஸ்ரீவத்ஸா கார்டன்ஸில் 2.4 ஏக்கர் வாழ்க்கையின் இன்றியமையாத பொழுதுபோக்குகளுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

Sreevatsa Gardens
COIMBATORE

ஸ்ரீவத்ஸா கார்டன்ஸை உங்களுக்கு வழங்குவது ஸ்ரீவத்ஸா க்ரூப் நிறுவனத்தினர். வியாபாரத் துறையில் 50 வருடங்களுக்கு மேலாக இவர்கள் பெற்றுள்ள அனுபவம், உங்கள் கனவுலக இல்லத்தை நனவாக்க ஒரு மகத்தான பின்னணியாய் அமையும். வாருங்கள்! ஸ்ரீவத்ஸா கார்டன்ஸுக்கு.

அபார்ட்மெண்ட்ஸ்



ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ், கோயம்புத்தூர் உயர்தர வாழ்க்கைக்கு தேவையான அனைத்து வசதிகளும் கொண்டது

'B' டைப் வில்லா



தனிப்பட்ட சிறப்பு அம்சங்கள்: •பொழுது போக்கு வசதிகளுக்காக 2.4 ஏக்கர்கள் •டென்னிஸ் கோர்ட், கூடைப்பந்து மற்றும் ஜாகிங் செய்வதற்கான பகுதி •குழந்தைகள் விளையாடும் பகுதி •சமூகக் கூடம் •அழகிய பூங்கா •கிளப் ஹவுஸ் •நீச்சல் குளம் •கேபிள் இணைப்பு •தெரு விளக்குகள் •வெள்ள நீர் வடிகால், கழிவுநீர் அகற்றல், தடையற்ற மற்றும் தாராளமான தண்ணீர் சப்ளை •நல்ல முறையில் அமைக்கப்பட்ட சாலைகள் •நிலத்தில் 27% மட்டுமே கட்டடப் பரப்பளவு •இரவும் பகலும் பாதுகாப்புப் பணி •5 அடி உயர சுற்றுப் புறச் சுவர்.

தனிப்பட்ட சேவைகள்: •தனி நபர்கள் அல்லது நிறுவன அமைப்புகளுக்குக் குறுகிய கால/நீண்ட கால ஒப்பந்தத்தில் உங்கள் இல்லங்களை வாடகைக்கு விட ஏற்பாடு செய்தல், வாடகையை வசூலித்து உள்ளூரில் உங்கள் பாங்க் கணக்கில் வரவு வைத்தல் •காலியாக உள்ள இல்லங்களை மாதம் இரு முறையாவது சுத்தம் செய்ய ஏற்பாடு செய்தல் •ஆட்சி அமைப்புகளுக்கான வரி, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம் மற்றும் குடியிருப்பு சங்கக் கட்டணம் போன்ற, சட்ட பூர்வமாகச் செலுத்த வேண்டிய கட்டணங்களை உங்கள் சார்பில் செலுத்த ஏற்பாடு செய்தல் •மின்சாரம் பழுது பார்க்கும் பணிகள், பெயிண்டிங் முதலிய பணிகளைக் கவனித்துக் கொள்ளுதல் •உங்கள் உடைமைகளுக்குப் பொருத்தமான பாதுகாப்பு ஏற்பாடு செய்தல் •இந்தியாவில் உங்கள் பயணங்களுக்கு உள்ளூர் டிராவல் ஏஜெண்டுகள் மூலம் பயணத் திட்டங்களை ஏற்பாடு செய்தல். •உங்களுக்குத் தேவைப்படக் கூடிய இதர தனிப்பட்ட சேவைகள்.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் லிட்.

கோயம்புத்தூர்: 62, மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர், 641 043.
தொலைபேசி: 91-0422-448942, 432184, 432574, 430899, 441481.
ஃபேக்ஸ்: 91-0422-430899. தந்தி: SRIVATSACO
Email : <Sreevatsa.cbe@smy.sprintrpg.ems.vsnl.net.in>

சென்னை: 7, வைராஜ் பார்க் தெரு, சென்னை 600 013, தொலைபேசி: 91-44-5553149, 5960270, 5957553, ஃபேக்ஸ்: 91-44-5950054, 5220192.

மும்பை: திரு. த.தீ. பரதன்
மெசர்ஸ் எக்ஸிம் இந்தியா சேல்ஸ் லிட்.
ப்ளாட், ரூ.37, 1, நிலா கமெர்ஷியல் காம்ப்ளெக்ஸ், கிரௌண்ட் ஃப்ளோர்,
டீவுடு சாலை, செம்பூர், மும்பை - 400 071.
தொலைபேசி: 5575?6 (மும்பை) ஃபேக்ஸ்: 022-5425356.

முதலீடு செய்பவர்களுக்கு சிறப்பு விலைச்சலுகை காத்திருக்கின்றன! வாருங்கள், வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.
கடன் வசதிகளுக்காக HDFC மற்றும் CANFIN ஹோம்ஸ் இந்தத் திட்டத்தை அங்கீகரித்துள்ளன.

Anugrah 2283/98



"இந்த ஆரஞ்சு கலர் கவுனை வாங்கிட்டுப் போங்க சார் - குழந்தையோட நிறத்துக்கு சூப்பரா இருக்கும்..."

ரெடிமேட் கடைக்காரர் காட்டிய அந்த அம்பர்லாகட் ஃபிராக்கை ஒரு பூவின் மிருதுவுடன் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த மோகன் -

"என்னப்பா மோகன்... சௌக்யமா? இது யாரு... உன் மூத்த குழந்தையா?" என முதுகுப்புறம் எழுந்த விசாரிப்புக்கு பனிச்சென்று திரும்பிப் பார்த்தான்.

பூடகச் சிரிப்போடும்... வெற்றிலைக் காவிப் பற்களோடும் அங்கே நின்று கொண்டிருந்தவர் அப்பாவின் பால்ய சிநேகிதர் ஆடிய பாதம். பார்வைக்கு பழுத்த பழமாய்த் தோன்றினாலும் உணர்வம்பில் அலாதிப் பிரியம் கிழவருக்கு!

"ஆமா மாமா... வீட்டில் [illegible]



லாம் சௌக்யம்தானே?"

"ம்...ம்... அவளுக்கென்ன ஓகோன்னிருக்காள். பாவம்... உன் அப்பாதான் ரெண்டு நாளைக்கு முந்தி பார்த்தப்ப கூட ரொம்பவும் வருத்தப்பட்டார்."

தலையுமில்லாமல் வாலுமில்லாமல் அவர் சொன்ன செய்திக்கு ஒரு கணம் திகைத்தான் அவன்.

"வருத்தப்பட்டாரா! என்னன்னு?"

"அம்மாவையும் அவரையும் நீ சரியாவே கவனிக்கறதில்லையாமே? இப்போல்லாம் நிறையவே மாறிட்டேன்னும்... கைச் செலவுக்குக் கூட ஒழுங்கா தர்றதில்லேன்னும் சொல்லிட்டிருந்தார். ம்...ம்... ஒன்னியக் குத்தம் சொல்லி என்ன பண்ண? இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான். கல்யாணமாகி பெண்டாட்டி வந்தாச்சுன்னா தலை கீழா மாறிடறானுக!"

இதயத்தில் சூட்டுக்கோல் கொண்டு சுட்டாற் போலிருந்தது மோக னுக்கு. சேல்ஸ்மேனும் பக்கத்திலிருந்த இரண்டொருவரும் பார்த்த பார் வைக்கு நடுத்தெருவில் நிர்வாணமாய் நிற்பது போல் அவமானமாயிருந்தது. என்ன அநியாயம்! அப்பா ஏன் இது மாதிரி நடந்து கொள்கிறார்? பின்னை என்றும் யோசியாமல் எதனால் கண்டவரிடமும் தனது மானத் தை ஏலம் விடுகிறார்? அப்படி என்ன குறை வைத்தேன் அவருக்கு?

"என்னவோ தம்பி... சொல்றத சொல்லிப்புட்டேன். வயசு காலத்துல பிள்ளைகதான் பெத்தவங்கள சந்தோசமா வச்சுக்கணும். அவுக செத்துப் போனதுக்குப் பிற்பாடு போட்டோவை வச்சு சாமி கும்பிடறத விட உசுரோட இருக்கறப்பவே நல்லவிதமா பார்த்துக்கறதுதேன் முக்கியம். அப்ப நான் வரட்டுமா..."

சூரியா சிதானந்த்

[illegible]

கண்ணில்பட்ட ஏதோ ஒரு கவுனை வாங்கிக் கொண்டு வெளி யேறினான் மோகன். இதயம் இரும் புத் துண்டமாய் கனத்துப் போயிருந்தது. கால்கள் தன் போக்கில் நடந்தாலும், மனம் மட்டும் வலியாய் வலித்தது.

அப்பா அம்மாவை கவனிக்கவில்லையாமே! இவர்களுக்கெல்லாம் என்ன தெரியும் அவனைப் பற்றி! பெற்றவர்களிடம் அவனுக்கிருக்கும் பாசமும் மரியாதையும் எத்த அளவுக் குப் புரியும்?

"என்னைப் பொறுத்தவரை அம்மாவும் அப்பாவும்தான் மஞ்சு நம்மோட முதல் குழந்தை கள்... நமக்குப் பிறப்பவை கூட இரண்டாம் பட்சம்தான். இதை நீ எப்பவும் மறந்துடக் கூடாது."

திருமணத்தன்று... முதலிரவின்



பயத்தம் பருப்பு சுண்டல் குழையாமலிருக்க பயத்தம் பருப்பை 2 மணி நேரம் ஊறப் போடவும். பிறகு, தண்ணீரைத் தளைக்க விட்டு, அடுப்பை ஆஃப் செய்து, பருப்பை அதில் போட்டு மூடி, 15 நிமிடம் கழித்து வடியவிடவும். பிறகு, தாளிக்கவும். ஆஹா, என்ன உதிர்? -

— ஆர். பார்வதி

தனிமையில் தன் மனைவி மஞ்சுவிடம் அவன் மனம் திறந்து பகிர்ந்து கொண்ட முதல் வார்த்தைகள் இவை!

இயல்பான சுபாவமோ... கெட்டிக்காரத்தனமோ... மஞ்சுவும் கணவனின் பாசம் புரிந்து நடந்து கொள்கிறாள். சராசரி மருமகளாய் மாமியார் மாமனாருடன் சண்டை போட்டுக் கொண்டிராமல், சொந்த மகளாகவே அன்பு செலுத்துகிறாள். இது விஷயத்தில் மோகனுக்கு இன்றளவும் பெருமிதம் உண்டு. மனம் புரிந்து நடக்கும் மனைவி கிடைத்து விட்டதிலான சந்தோஷம் உண்டு.

அப்படியிருக்க

அவனைப் போய இன்று யார் யாரெல்லாமோ நிற்க வைத்து கேள்வி கேட்கிறார்கள். பெண்டாட்டி வந்ததும் பெற்றவர்களை மறந்து போனதாய் குற்றம் சாட்டுகிறார்கள். முதலில் கூடப் பிறந்த தமக்கைகள்... பிறகு தொலை தூர சொந்தங்கள்... இப்போது யாரோ ஒரு ஆடிய பாதம்.

இத்தனைக்கும் காரணகர்த்தா அப்பா!

சொல்லப்போனால் அவன் நிலையில் வேறு யாருமிருந்தால் நிஜத்திலுமே அப்பாவை வெறுத்திருப்பார்கள். யார் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை... தான் - தன்சுகம்... என்றிருக்கும் அவரது சுயநலத்திற்கு எப்போதோ மனம் கசந்திருப்பார்கள். ஏனெனில் அப்பாவின் குணலட்சணம் அப்படி!

கலியுகக் குசேலராய் ஒன்பது பிள்ளைகளைப் பெற்றாரே தவிர, பெற்றவைகளை நல்லவிதமாய் படிக்க வைத்து ஆளாக்குவதும் தன் கடமைதான் என்பதை கொஞ்சமும் நினைத்தவரில்லை அப்பா. மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் முடித்த கையோடு பிஸினஸில் இமர் நஷ்டம் என்று வீட்டோடு உட்கார்ந்தவர்தான். மீண்டும் எழுந்து கொள்வதற்கான முயற்சியே காணோம்.

- விற்றுத் தின்பதற்கு வசதியாய் அம்மாவின் நகைகளும்... பாத்திர பண்டங்களும் ஏராளமாய் இருந்ததில் தைரியமாகிப் போனது. ஏதேனும் உத்தியோகம் பார்த்து ஆண்பிள்ளையாய் லட்சணமாய் நாலு காசு சம்பாதிக்கும் வழியைப் பாருங்கள் என்று இடித்துச் சொல்லாத மனைவி அமைந்து போனதில் சுத்தமாய் குளிர் விட்டுப் போனது. நாளடைவில் சும்மாயிருப்பதே சுகமாய்ப்பட்டுவிட வீட்டுத் திண்ணையே நிரந்தர வாசமாயிற்று.

குஞ்சும் குளுவானுமாய் இத்தனை கிடக்கிறதே.. என்னவென்று கரை சேர்ப்பாரோ என ஊரே அங்கலாய்க்க - அப்பா மட்டும் 'மரம் வச்சவன் தண்ணி விடாமலா போயிடுவான்' என்றபடிக்கு பொறுப்பை உதறியவராய் காலாட்டிக் கொண்டிருந்தார். நாலு வயது கடைக்குட்டிப் பெண் வெறும் வயிற்றோட்டத்திற்கு பலியான போது கூட, 'அதற்கு விதி அவ்வளவுதான். நாமென்ன செய்ய முடியும்' என்று தத்துவம் பேசினாரேயொழிய, ஒரு வேளை மருந்து மாத்திரை வாங்கித்தராத தன் கையாலாகாத்தனம்தான் அந்தத் தளிரின் அகால மரணத்துக்குக் காரணம் என்பதை ஒருநாளும் ஒத்துக் கொண்டதில்லை.

இந்த நிலையில் -

அதை இதை விற்றுக் கிடைத்த பணத்தில் அடுத்த இரண்டு பெண்களும் கழுத்தில் தாலியை வாங்கிக் கொண்டு வெளியேற வீட்டுக்கு மூத்த பிள்ளை 'வீடா இது... நரகம்' என காறி உமிழ்ந்து விட்டு ஊரைவிட்டே ஓடிப் போனான். அப்பாவுக்கு அறிவுரை சொல்ல வந்த அடுத்த பிள்ளையோ அவர் ஆடிய ருத்ர தாண்டவத்திற்கு சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறியவன்தான். இன்று வரை தகவல் இல்லை. அவனுக்குப் பின்னால் பிறந்த இரண்டும் படிப்பு பாதியோடு நின்று போன நிலையில் எங்கோ ஒரு வேலை தேடி தப்பித்துக் கொள்ள -

அத்தனையும் விற்றுத் தீர்த்து வெறுமையாகிப் போன வீட்டில் அகப்பட்டுக் கொண்டது மோகன் மட்டும்தான். தன் குழந்தைப் பிராயத்தை நினைத்து விட்டால் இப்பொழுதும் கூட மோகனின் கண்கள் குளமாகிப் போகும். கறியும் மீன் குழம்புமாய் அக்கம் பக்கத்து வீடுகள் மணக்கையில், வயிறார ஒரு வேளை மோர்சாதமாவது உண்ணமாட்டோமா என ஏங்கிய அந்த நாட்கள்!

படிப்பாவது... மண்ணாங்கட்டியாவது என அப்பா கைவிட்ட நிலையில், ஸ்காலர்ஷிப்புக்காக அலைந்த காலங்கள்!

சொற்ப ஊதியத்திற்காக காலையில் வீடு வீடாய் பேப்பர் போட்டு... பள்ளிக்கூடம் விட்டு திரும்பியதும் கம்பெனி ஒன்றில் பாக்

கெட் போடும் கூலி வேலை பார்த்து அல்லல் பட்ட தினங்கள்! அப்பப்பா எத்தனை கொடுமையான காலம் அது!

அத்தனைக்கும் அப்பா கல்லுப்பிள்ளையாராகத்தான் உட்கார்ந்திருப்பார். தன் முதுகின் அழுக்கு தெரியாமல் எதிர்வீட்டு.. கோடி வீட்டு பிரச்னைகளை வக்கணையாய் அலசிக் கொண்டிருப்பார். 'கறுகறுப்பா, ஓடியாடி சம்பாதிடா.. இல்லாட்டி நாளைக்கு ஒனக்கு வெறும் கேப்பைக்களிதான், ஞாபகம்' என்று அதட்டல் போடுவார்.

அம்மாவைப் பற்றிச் சொல்வதற்கோ எதுவுமில்லை. பதிபக்தியில் நளாயினியை மிஞ்சும் பிறவி! அவளைப் பொறுத்தவரை பெற்றவைகள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை... கணவரின் வயிறு வாடி விடக் கூடாது. அப்பா எத்தனையோ அக்கிரமங்கள் செய்யட்டும். அவரை யாரும் ஒருவார்த்தை குறைவாகச் சொல்லிவிடக் கூடாது. அது பயமா? இல்லை புருஷனென்ற பாசமா? இன்றளவும் மோகனுக்குத் தெரியாது.

ஆனால் இதற்காகவெல்லாம் அவன் அவளை வெறுத்ததில்லை. இயற்கை நியதிகளுக்கு முரணாய் இப்படியும் ஒரு அம்மாவா என ஆத்திரப்பட்டதில்லை. அவனைப் பொறுத்தவரை அவள் அவனுக்கு உடல் கொடுத்து, உயிர் கொடுத்து பத்து மாதம் சுமந்து பெற்ற தெய்வம். அவ்வளவுதான்.

இந்த உணர்விலேயே அம்மாவை அவன் நேசித்தான். அடித்து வைத்த அம்மன் சிலையாய் அப்பாவால் மூளியாக்கப்பட்டிருந்தவளை, இரண்டு ஜதை வளையல்கள்... நாலு பவுன் செயின்... வெள்ளைக்கல் மூக்குத்தி... சிகப்புக்கல் தோடு என லெட்சுமிகரமாய் நிறைத்துப் பார்த்து சந்தோஷப்பட்டான். அண்ணன்களெல்லாம் திருமணம் செய்து கொண்ட கையோடு திசைக்கொருவராய் தனிக் குடித்தனம் கிளம்பியும், அம்மா அப்பாவை தன்னோடே முழு விருப்பத்துடன் வைத்துக் கொண்டான்.

அப்பாவையும் சும்மா சொல்லக் கூடாது. நன்றாகவே அனுபவித்தார். பிள்ளை ஓரளவு நன்றாக சம்பாதிப்பது தெரிந்ததும் தனது வசதிகளை நிறையவே பெருக்கிக் கொண்டார். நினைத்த நேரத்தில் நினைத்த பலகாரம் - மகள்களைப் பார்க்க... பேரப் பிள்ளைகளைப் பார்க்க இஷ்டத்துக்குப் பிரயாணம் - மனம் போன படி செலவு என வாழ்க்கைத் தரத்தையே மாற்றிக் கொண்டார். அவனுக்கு திருமணம் முடிந்த பின்னும் சரி... ஒன்றுக்கு இரண்டு குழந்தைகள் என்று ஆன பின்னும் சரி... தன் அநாவஸ்யச் செலவுகளை ஒரு போதும் குறைத்துக் கொண்டதில்லை. இரவு பகல் பாராமல் பிள்ளை நாயாய் உழைத்துக் கொட்டும் வருமானத்தில் துளியேனும் மிச்சம் பிடிக்க வேண்டும் என்று நினைத்ததில்லை.

இப்பேர்ப்பட்ட அப்பாதான் அவதூறு எழுப்பியிருக்கிறார் - மகன் அவரை கவனிக்காமல் விட்டு விட்டதாய்!

இதில் ஆச்சர்யம் என்னவென்றால் ஊரும் உறவும் அவரைத்தான் நம்புகிறது! வயதானவர் என்ற அனுதாபத்தில் அவருக்கே வரிந்து கட்டி வக்காலத்து வாங்குகிறது!

ஆக -

விசாரணையில்லாமல் இன்று குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருப்பது அவன்தான். அப்பாவாவது அம்மாவாவது என்று தத்தம் வழி பார்த்துப் போய்விட்ட அண்ணன்களெல்லாம் நல்லவர்களாகிப் போக, சித்ரவதையும் சிரச்சேதமும் அவனுக்கு மட்டும்தான்!

சோர்வான நடையுடன் வெளி வாசலை நெருங்குகையிலேயே உள்ளே அப்பா நடத்தும் காட்டு தர்பார் கேட்கிறது.

"கோஸ் பொரியலும்... உருளைக் கிழங்கு பொடிமாஸூம் இத்துனூண்டு இத்துனூண்டு சட்டியில வச்சிருக்கியே... எவனுக்குப் பத்தும்? இதை எடுத்துச் சாப்பிடறதா... இல்லே ஊறுகாயாட்டம் தொட்டுக்கிட்டு சாப்பிடறதா?"

"மார்க்கெட்ல காய் வாங்கிட்டு வர்றவ, உங்க மருமவதான். அவளைக் கேளுங்க. என்னைப் போய்க் கேட்டா?" அம்மாவின் நழுவலான பதிலைத் தொடர்ந்து,

"இந்தாம்மா மஞ்சு.. ஒம்மனசுல நீ என்ன நெனச்சுட்டிருக்கே! நானும் பார்த்துட்டேயிருக்கேன்... வரவர ரொம்பத்தான் பிச்சைக்காரத்தனம் பண்றியே! இது என்ன உன்னோட சம்பாத்தியமா... இல்லே உங்கப்பன்

தற்போது குளிர் பானங்கள் வரும் 2 டின்களில் மணலை நிரப்பி, டிசைன் கலர் பேப்பர் ஒட்டி விடுங்கள். தலைக்கு வைக்கும் போவில் ப்ளெயின் கலர் பேப்பரில் பூ டிசைன் வெட்டி, 'போ'வில் சுற்றி வையுங்கள். உங்கள் கொலு பார்க்கில் அழகான 'ஆர்ச்' வரவேற்பு ரெடி.

— மஹிமா



கடுகு, உபருப்பு, மிளகாய் தாளித்து ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி, உப்பு போட்டு, கோஸ் 50 கிராம் (அரிந்து) சேர்த்து, நன்கு வெந்த வுடன், அவல் போட்டு, 5 நிமிடம் கழித்து, தேங் காய் துறுவல் சேர்த்து, அடுப்பிலிருந்து இறக்க வும். அவல்-கோஸ் உப்புமா ரெடி. எப்பொழுதும் செய்யும் ரவா உப்புமாவிலிருந்து காய்கறி உப்புமாவான இது ஒரு மாற்றமே.

— கே. திலகவதி



வீட்லேர்ந்து கொண்டு வந்ததா நெனப்பா?" அப்பாவின் திருவாயால் கொதிக்கக் கொதிக்கக் கொட்டப்படுகின்றன வார்த்தைகள்.

அசந்தே போனான் மோகன். ச்சீ... இந்த அளவுக்கா அப்பா தாம் தாழ்ந்து போனார்! யாரிடம் என்ன கேட்பதென்றில்லாமல் என்ன பேச்சு இது!

இன்னும் என்னென்ன பேசியிருப்பாரோ... பேத்தியைத் தோளில் சுமந்தபடி மகன் நுழை வதைக் கண்டதும் வாயை அந்தமட்டோடு மூடிக் கொள்கிறார். மணக்க மணக்க இலை யில் நிரம்பியிருந்த பொரியல் வகையறாக்களை ரசனையுடன் வளைத்துக்கட்டத் தொடங்கு கிறார்.

மௌனமாய் தாலியை அ[illegible] கொண் டிருந்த மஞ்சுவின் கலங்கிய [illegible] விழி கள் தன்னைத்தான் குற்றம் சாட்டுகிறதோ? மோகனுக்கு [illegible]

இப்படி [illegible] விடமும்... அந்த[illegible] அம்மா விடமும் நீ நேசம் காட்டத்தான் வேண்டும் என்று இவளை கட்டாயப் படுத்துவது எந்த வகையில் நியாயம்? அன்பு என்பது ஒருவழிப் பாதையல்லவே! அப்படியிருக்க மஞ்சுவின் சகிப்பும் பொறுமையும் எத்தனை நாளுக்குத் தாக்குப் பிடிக்கும்? ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் உள்ளங்கள் கசந்து... குடும்பமே உடைந்து போகாதா!

யோசனையுடன் திரும்பியவனின் பார்வை யில் -

"பாட்டி... அப்பா என் பர்த்டேக்கு புதுசா ட்ரெஸ் எடுத்திருக்கார்... பாக்கறீங்களா" என ஆவலோடு ஓடும் குழந்தையும் அதைக் கண்டு கொள்ளாமல் முகம் திருப்பிக் கொள்ளும் அம்மாவும் படுகின்றனர்.

சப்தமின்றி நெருஞ்சில் ஒன்று இறங்குகிறது அவனது நெஞ்சினுள்.

அவனுக்குத் தெரியும். அம்மாவுக்கு தன்மீது தான் கோபம். காசி... ஹரித்வார்... டூர் போய் வர இரண்டாயிரம் வேண்டும் என்று கேட்ட தற்கு 'இப்போது பணத்திற்கு கொஞ்சம் சிரம மாய் இருக்கும்மா... அடுத்த தடவை பார்க்க லாம்' என்று சொன்னதற்கான எதிரொலி. இருந்தாலும் இந்த இளம் பிஞ்சிடம் போய் அதைக் காட்டத்தான் வேண்டுமா?

"ஹூம்... எதெதுக்கெல்லாமோ செலவு செய்யத் தெரியுது. பெத்தவ ஆசைப்பட்டுக் கேட்டா மட்டும் காசில்லேன்னு பஞ்சப் பாட்டு..." சாதத்தை சாம்பாருடன் புரட்டிக் கொண்டிருந்த அப்பா அவன் காதுபடவே நொடிக்கிறார்.

எதற்கெல்லாமோ செலவு செய்தானா! சிக்கன விலையில் குழந்தைக்கு ஒரே ஒரு உடை... அதுவும் அதன் பிறந்த நாளுக்காக! அது கூட தவறாகுமா? அல்லது அதற்கான அந்த நூறு ரூபாயும்... இரண்டு முழு ஆயிரங்களும் தான் ஒன்றாகி விட முடியுமா? இதென்ன விதண்டாவாதம்!

"ஓகோ... அதுக்காகத்தான் கண்ட கண்ட மனுஷர்கிட்டயும் என்னை கேவலப்படுத்தி [illegible]" கோபத்தை வெளிக்காட்டாத அழுத்தமான குரலில் அவன் கேட்கவும் அப்பாவிடம் பதிலே காணோம். சாப்பாட்டில் மும்முரம் போலொரு பாவனை காட்டத் தொடங்குகிறார் ஒரு அப்பாவி முகத்தோற்றத் துடன். ஆனால் அம்மா சும்மாயிருக்கவில்லை. அப்பாதரப்பில் வாதத்தில் குதிக்கிறாள்.


"வந்ததும் வராததுமா அவர்கிட்ட ஏன் கோவிச்சுக்கறே? அப்படி என்ன கேவலப்படுத் திட்டாராம் உன்னை?"

"இன்னும் என்ன பண்ணனும்? கல்யாணத் துக்கப்புறம் நான் உங்களை கவனிக்கறதே இல்லையாம். நட்டாத்திலே விட்டுட்டேனாம். அந்த மனுஷன் ஆடிட்டபாதம் கிட்ட போய் சொல்லியிருக்கார். நாலு பேர் முன்னாடி வச்சு நாக்கைப் பிடுங்கிக்கறாப்போல கேள்வி கேக் கறான்மா அந்த ஆள். மானம் போகுது."

"நீ சும்மாயிரு. அப்பா அப்படியெல்லாம் பேசறவரில்லே. ஏதோ யதார்த்தமா சொன்ன தைப் போய் உன்கிட்ட சிண்டு முடிஞ்சிருக் கான் அந்தச் சண்டாளன்."

"எதை யதார்த்தம்கறே? பெண்டாட்டி பேச் சைக் கேட்டுட்டு நான் ஆடறேன்னு சொன்ன தையா?"

கணநேரத்திற்கு அம்மா பதில் பேசவில்லை.



SUSWAAD

கல்யாண ஸ்வீட்ஸ், சீர்முறுக்கு, சீர்வரிசை
பட்சணங்கள் எவ்வளவு தேவை
ஆனாலும் அர்ஜெண்ட் ஆர்டர் பேரில்
தயார் செய்து தருகிறோம்.

- ☐ சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்
- ☐ சுத்திகரிக்கப்பட்ட, கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்
- ☐ அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்டநாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (Free of Oil)
- ☐ Instant இட்லி மிக்ஸ், தோசை மிக்ஸ், அடை மிக்ஸ், வடை மிக்ஸ், புளியோதரை மிக்ஸ் etc.

OUR SPECIALITIES :

- ☐ புழுங்கலரிசி கைமுறுக்கு, தட்டை, சீடை மிக்ஸர் (Free of Oil) etc.
- ☐ மைசூர் பாகு, போளி, லட்டு, கோதுமை அல்வா, etc.
- ☐ Nitrogen filled packing for a longer shelf life.

SUSWAAD SWEETS AND SAVOURIES PRIVATE LIMITED
The Delicious Home made Sweets and Savouries
1/3, Venkatraman Street,
(Near Kasi Arcade, Pondy Bazaar),
T. Nagar, Madras - 17.
Ph : 8232678

Also Available at :

C/0. Unique Electronics
160, Royapettah High Road,
Mylapore, Madras - 4.
Ph : 4992190

EXPORT ORDERS & ENQUIRIES FOR TECH. KNOWHOW SOLICITED.

மௌனமாக மோட்டு வளையை வெறிக்கிறாள். பின் -

"முந்தியெல்லாம் அப்பா எது செலவழிச்சாலும் ஏன்... எதுக்குன்னு கண்டுக்க மாட்டே. ஆனா இப்ப இப்ப அது அநாவஸ்யம்... இது அநாவஸ்யமின்னு கணக்கு பார்க்கறில்ல? அதைச் சொல்லியிருப்பார். வேறென்ன..." என்கிறாள் யாரிடமோ சொல்வது போல்.

ஆக -

இரண்டு குழந்தைகளின் எதிர்காலத்தை உத்தேசித்து அவன் சற்று சிக்கனம் பார்ப்பதுதான் அப்பாவின் அழிச்சாட்டியத்துக்குக் காரணமா? மகன் மூலம் கிடைக்கும் சௌகரியமான வாழ்க்கையும்... பணமும் மட்டும்தான் அவரது ஒரே நோக்கமா? அப்படியானால் அவனது அன்புக்கும் பாசத்துக்கும் என்ன மதிப்பு இருக்கிறது?

மதிப்பில்லை என்பதை சீக்கிரமே நிரூபித்துக் காட்டுகிறார் அப்பா. தன் அருமைப் பெண்களுக்கு என்ன எழுதினாரோ தெரியாது... அடுத்த வாரத் தொடக்கத்திலேயே இரண்டாவது அக்கா கல்யாணி திடீர் விஜயமாய் திருவாடானையிலிருந்து ஆஜராகிறாள்.

"ஆனாலும் நீ இப்படி மாறிப் போவேன்னு நான் நெனைக்கலேயில்லேடா மோகன்." வந்த மறுநாளே தன்னுடன் யுத்தத்திற்கு நின்ற தமக்கையை நிச்சலனமாய் ஏறிட்டான் மோகன்.

"ஏன்... எப்படி மாறியிருக்கேன்?"

"நம்ம வீட்டுல வரவு செலவு நிர்வாகம் முழுக்க இத்தினி வருஷமா அப்பாதானே பார்த்துட்டிருந்தார். இப்ப என்ன திடீர்னு உன் பெண்டாட்டி அதிலே தலையிடறது? இதெல்லாம் நல்லாவாயிருக்கு?"

"அதிலென்ன தப்பு... நான்தான் அவளை கவனிக்கச் சொன்னேன். அவளுக்கும் இந்தக் குடும்பத்தில் பொறுப்பு இருக்குதானே?"

"ஏன் பெத்த அப்பாகிட்ட இல்லாத நம்பிக்கை நேத்து வந்தவகிட்ட வந்துடுச்சோ! அப்பா என்ன உன் சம்பாத்யத்தையெல்லாம் அப்படி வீதியிலா விதைச்சுடப் போறார்?"

அப்பாவின் குணாதிசயங்கள் அத்தனையும் தெரிந்தும் படபடவெனப் பொரியும் அக்காவின் பேச்சு ஆச்சர்யம் தந்தது அவனுக்கு.

நியாயமோ அநியாயமோ... இந்தப் பெண்கள்தான் எத்தனை கவமாய் தாய் தந்தைக்காக சப்போர்ட் செய்யக் கிளம்பி விடுகிறார்கள்! எவ்வளவு பிரியம் காட்டட்டும்... வீட்டுக்கு வந்த மருமகள்தான் என்றாலே பொல்லாதவர்கள்தான் என்று எத்தனை சீக்கிரம் முத்திரை குத்தி விடுகிறார்கள்! இதற்குப் பெயர் என்ன? ரத்த பாசமா... அவசர புத்தியா... அல்லது கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருட்டுதான் என்று சாதிக்கும் குருட்டுப் பிடிவாதமா?

அத்தனை குடும்பங்களிலும் இப்படியா நடக்கிறது? இல்லையே! அவன் பார்த்த அளவிலேயே தம் தந்தையர் செய்யும் தவற்றை நாசூக்காய் சுட்டிக்காட்டித் திருத்தும் பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களே! அப்படியிருக்க அவனுக்கு மட்டும் ஏன் அப்படியொரு சாதகமான தமக்கை அமையவில்லை!

இதோ இப்போதும் கூட,

அவன் பேசாதிருந்தால் அக்கா இதை ஒரு பூதாகரமான பிரச்னையாக்கி விடுவாள் என்பது புரிகிறது. தவறு அத்தனையும் அவன் பக்கம்தான் என்ற ரீதியில் விஷயத்தை திசை திருப்பி விட்டு விடுவாள் என்பது தெளிவாகவே மனத்தில் படுகிறது.

எனவே -


அவன் பேசித்தான் ஆக வேண்டும். கலகம் செய்தால்தான் நியாயம் பிறக்குமென்றால் கலகம் செய்துதான் தீர வேண்டும். வேறு வழியில்லை. மோகன் ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய் எழுந்து கொண்டான். முகத்தில் அழுத்தம் காட்டி நிதானமாய் பேசத் தொடங்கினான்.

"உன்னோட எகத்தாளமான கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல என்னால் முடியாதுக்கா. ஆனா ஒண்ணு... அம்மாவையும் அப்பாவையும் வச்சுக் காப்பாத்த எனக்கு எத்தனை கடமையிருக்கோ, அத்தனை கடமை என் பிள்ளைகள் விஷயத்திலும் இருக்கு. அந்த நாளில் நான்



உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, தனியா, மிளகாய் வற்றல், பெருங்காயம், கறிவேப்பிலை இவைகளை வறுத்து சிறிது உப்பு சேர்த்து மிக்ஸியில் பொடி செய்து கொள்ளுங்கள். பட்டாணி, கொண்டைக்கடலை சுண்டல் செய்யும் பொழுது உப்பு போட்டு குக்கரில் வேக வைத்து வாணலியில் கடுகு தாளித்து, சுண்டலைப் போட்டுத் தேவையான அளவு இந்த பொடியையும் மேலே தூவுங்கள். காரம், உப்பு ஒன்றாகக் கலந்து ருசியாக இருக்கும்.

— மஹிமா



டியூப் லைட்டின் பக்கத்தில் வெள்ளை ஜரிகை பேப்பரை லைட்டின் நீளத்திற்கு ஒட்டிவைத்து, லைட்டை போட்டுப் பாருங்கள். கொலு பொம்மைகளும், அறையும் பளிச்சிடுமே!

— ஆர். சீதா

பட்ட கஷ்டமும் வேதனையும் என் பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது. விபரம் புரியாத பிஞ்சு வயசுலயே, சம்பாதிச்சாத்தான் சாப்பாடுங்கற நிலைமை அவர்களுக்கும் வரக் கூடாது. படிப்பு... உத்யோகம்... கல்யாண வாழ்க்கை ஒவ்வொண்ணையும், தானே ஒண்டியா போராடித்தான் தேடிக்கணும்கற அந்த அவலம் நேர்ந்துடக் கூடாது."

உணர்ச்சிகரமாய் அவன் சொல்லச் சொல்லவே -

தட்டு நிறைய மெதுவடை வைத்து தின்று கொண்டிருந்த அப்பா ஆவேசம் வந்தவராய் குதிக்கிறார்.

"பார்த்தியாம்மா உன் தம்பிக்காரன் சொல்றதை! என்னிய எப்படில்லாம் குத்திக் காட்டறான் பார். இனியும் இந்த வீட்ல இருந்தேன்னா அது எனக்கு மரியாதையில்லை. நாளைக்கே நானும் உன் அம்மாவும் எங்கயாச்சும் தனிக் குடித்தனம் போயிடறோம். உடனே அதற்கு ஏற்பாடு பண்ணச் சொல்லு அவனை."

"ஓ... தாராளமாய்! ஆட்சேபணையேயில்லை. அவரோட தனிக்குடித்தனத்துக்கு மாதம் எவ்வளவு ஆகும்னு சொன்னாருன்னா நாலுல ஒரு பங்கை நான் இப்பவே குடுத்துடறேன். மீதி மூணு பங்கை அண்ணனுங்க மூணுபேர்கிட்ட கேட்டு வாங்கிக்கிடட்டும்..."

மகனிடம் இப்படி ஒரு பதிலை அவர் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

ஒன்று தன் தனிக்குடித்தனத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பான்... அல்லது அதற்கான செலவை தானே ஏற்றுக் கொள்வான் என்றுதான் நினைத்திருந்தார்.

அவனானால் உச்சந்தலையில் உலக் கையையல்லவா போடுகிறான்! மற்ற பிள்ளைகளிடமும் பங்குப்பணம் வாங்க வேண்டுமாமே! எவன் தருவான்? நடக்கிற காரியமா? இப்பொழுதே ஒவ்வொருவனும் எங்கே அப்பா நம்மிடம் கைச் செலவுக்கு பணம் கேட்டு விடுவாரோ என்ற பயத்தில் அவரைப் பார்க்கும் வேளையிலெல்லாம் பஞ்சப்பாட்டுப் பாடுகிறான்கள். வரும் போதும் போகும் போதும் ஐம்பது கொடு... நூறு கொடு என்று அவர் ஒதுக்கி வைத்திருக்கும் பணத்தைக் கூட தம்பிக்காரனுக்கு தெரியாமல் நைசாக கறந்து போகிறான்கள். இந்த லட்சணத்தில் எவன் அவருடைய தனிக்குடித்தனத்துக்கு பங்குப்பணம் தரப்போகிறான்?

இருந்தாலும் அதனை வெளிப்படையாய் ஒப்புக் கொள்வதற்கு அவரது வறட்டு கௌரவம் இடம் தருவதாயில்லை.

"ஏன் தர மாட்டேன்னுடுவாங்களோ? மூணு பங்கு என்ன... நான் மட்டும் வாயைத் தொறந்து கேட்டா உன் பங்கையும் சேர்த்தே அந்த மூணு பிள்ளைங்களும் தருவாங்கடா. என்னை தங்கத் தாம்பாளத்துலயே உட்கார்த்தி வச்சு தாங்குவாங்க... தெரிஞ்சுக்கோ"

தொண்டை நரம்பு புடைக்க ஓங்காரமிடும் அப்பாவை அமைதியாகப் பார்க்கிறான் மோகன்.

"தெரியும்பா. அதனாலதான் உங்க தனிக்குடித்தனத்துக்கான பொறுப்பை அவங்ககிட்டயே விட்டுடலாம்னு முடிவு பண்ணிட்டேன். ஏன்னா உங்க சந்தோஷம்தான் என் சந்தோஷமும்."

கிணறு வெட்ட பூதம் கிளம்பும் கதையாய் விஷயம் எங்கோ திரும்புவதை கல்யாணியக்கா உணர்ந்திருக்க வேண்டும். அவசர அவசரமாய் குறுக்கிடுகிறாள் இடையிலேயே.

"டேய் டேய்... அப்பாதான் ஏதோ தத்துப் பித்துன்னு உளறுறாருன்னா நீயும் சேர்ந்து தாளம் தட்டறியே. அவராவது இந்த வயசுல தனிக்குடித்தனம் போறதாவது! இப்ப பிரச்னை என்ன... ஒண்ணுமேயில்லை. நீ மட்டும் அவர் மனசுப்படி இன்னும் கொஞ்சம் நடந்துட்டியானா போதும்..." என்கிறாள் சமரசம் செய்பவள் போல்.

அப்பாவுக்கென்ன வெட்டிச் சவடால் பேசி விடுவார். அவளுக்குத் தெரியாதா மற்ற அண்ணன் தம்பிகளின் லட்சணம்! இத்தனை வருஷத்தில் மோகன் தவிர ஒருவரேனும் தம்பிடிக்காக பெற்றவர்களுக்குச் செலவழித்த தாய் சரித்திரமில்லை. இனிமேல்தான் கொடுத்து கிழித்து விடுவார்களாக்கும்! அவர்களை நம்பி அப்பா தனியே போவதாவது!... நாலே நாளில் அட்ரஸ் இல்லாமல் போய் விடுவார். இந்த லட்சணத்தில் அப்பாவின் தனிக்குடித்தனத்துக்கு வக்காலத்து வாங்கப் போய் பிரச்னையில் மாட்டிக் கொள்ள அவள் தயாரில்லை. ஆனால் மோகன் தன் முடிவில் உறுதியாய் இருக்கிறான்.

"இல்லேக்கா. இனி நான் செய்யறதுக்கு எதுவுமேயில்லை. என்னால் இவ்வளவுதான் முடியும். இத்தனைதான் பார்த்துக்க முடியும். தங்கத் தாம்பாளத்தில் வச்சுத் தாங்கினாத்தான் என்னை உத்தமமான பிள்ளைன்னு ஒத்துப் பார்ணா நான் மோசக்காரனாவே இருந்துட்டுப்

மங்கையர் மலர் & ARC ஜ்வல்லர்ஸ்

மாயவரம்
சென்னை - 34

இணைந்து வழங்கும் பொன்னான தருணங்கள்

போட்டிக் கட்டுரைகள் வந்து குவிந்துள்ளன. பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். ARC ஜ்வல்லர்ஸ் கீதா, ''எல்லாவற்றையும் விட நான் சந்தோஷப்பட்டது ஒன்று உண்டு. பரம்பரையாக மாயவரத்தில் எங்களுடைய கடையில் வாங்கிக் கொண்டிருந்தவர்கள், இப்போது சென்னையில் 'செட்டில்' ஆனவர்கள் இப்போது எங்களோடு தொடர்பு கொள்கிறார்கள். 'உங்க பெரியவங்க கடைய விரிவுபடுத்தித் திறந்தப்போ, அன்னிக்கு நான் வந்தேன் கீதா' என ஒரு வயதான பெண்மணி சொன்னப்போ ரொம்ப சந்தோஷமா இருந்தது'' என்றார்.

சரி, இந்த மாத போட்டிக்கான தலைப்பு --

'வளையல்'

'வளையல் சம்பந்தமாக உங்கள் வாழ்வில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதுங்கள்.

கட்டுரைகளை ARC ஜ்வல்லர்ஸ், 114, கோடம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 34, எனும் முகவரிக்கோ, மங்கையர் மலருக்கோ அனுப்பலாம். கட்டுரைகள் அனுப்ப கடைசி தேதி 20.10.96. சிறந்த கட்டுரைக்கு ரூ. 3000/- மதிப்புள்ள ARC ஜ்வல்லர்ஸ் நகை பரிசாக அளிக்கப்படும். கட்டுரையைப் பொறுத்தவரை ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

போறேன். ஊருக்கும் உங்களுக்கும் பாவியாவே தெரிஞ்கட்டுப் போறேன்.''

சாதாரணமாக மோகன் தன் உணர்ச்சிகளை வெளிககாட்டும் ரகமில்லை. வருத்தமோ... கோபமோ.. எதையும் சீக்கிரத்தில் கொட்டி விடுபவனில்லை.

"இத பார் லலிதாவோட மாமனார் செத்ததுக்கு அவளுக்கு... மாப்பிள்ளைக்கு பிள்ளைங்களுக்கெல்லாம் சம்பிரதாயப்படி நாம்பதான் கோடி எடுத்தாகணும். நாளை சிரார்த்தத்தன்னிக்கு... சபைக்கு நிறைவா... ஜாம் ஜாம்னு செய்ஞ்கடு. புரியுதா'' என்றபடிக்கு தான் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் நோகாமல் அப்பா அவன் தலையில் சுமத்தும் சந்தர்ப்பங்களிலும் சரி -

"ஏண்டா தாய் மாமன்கற முறைக்கு எம்மகளுக்கு பட்டுப்புடைவை செய்ஞ்சதுதான் செய்ஞ்சே. கூடுதலா ஒரு ஆயிரம் ரூபா போட்டு எடுத்திருந்தின்னா இன்னும் அகல ஜரிகை வச்சதா இருந்திருக்குமில்ல. இதிலே பார் பார்டர் கொஞ்சம் சின்னதா இருக்கு'' என தமக்கைமார்கள் அவன் செய்யும் மாமன் சீரை குறைபாடும் போதும் சரி -

ஒரு எதிர் வார்த்தை பேசாமல் கேட்டுக் கொள்வானே தவிர. 'ஏன்... நான் ஒருவன்தான் உங்கள் எல்லோருக்கும் பாரம் சுமக்க அகப்பட்டேனா' என்று சண்டைக்குக் கிளம்பிய தில்லை.

அப்படிப்பட்டவன் இன்று என்னை விட்டு விடுங்கள்... தனி வழியே ஒதுங்கிக் கொள்கிறேன் என்கிறானென்றால்?

அப்பாவுக்குள் புதிதாய் ஒரு பயம் முளைக்கிறது.

இளைய பிள்ளை நிஜமாகவே தன்னை நிராகரித்து விடுவானோ? தனக்கு எதுவுமே செய்யாத இவருக்காக இவ்வளவும் மெனக்கெடுவானேன் என்று கை விட்டு விடுவானோ?

அப்படியாகும் பட்சம் அவரது கதி என்ன? வந்தால்.. போனால் பெண்பிள்ளைகள் பிரியம் காட்டுவார்கள்தான். ஆனால் இத்தனை உரிமையோடும் சலுகையோடும் காலமெல்லாம் அவர்களை அண்டியிருக்க முடியுமா?

அன்று வரை இல்லாத விதமாய் நிதர்சனம் தாக்கியதில் அவருக்குள் இருந்த அகம்பாவவானின் முளை மளுக்கென முறிகிறது. ரத்தத்தோடு ரத்தமாய் ஊறிப் போயிருந்த அதிகார மிடுக்கு ஜலம் தெளித்த தணலாய் அடங்கித் தணிகிறது.

விளைவு -

எடுத்ததற்கெல்லாம் பொரித்த அப்பமாய் குதிப்பவர் ஜன்னலோரத்து நாற்காலியில் சப்தமின்றி சாய்ந்து கொள்கிறார். அங்கு எதுவுமே நடக்கவில்லை போல் பத்திரிக்கையொன்றில் தலையை நுழைத்துக் கொள்கிறார். அம்மா, மஞ்சுவுக்கு உதவியாய் காய் நறுக்கும் சாக்கில் சமையல்கட்டுக்குள் காணாமல் போக -

தூளிக்குள் சிணுங்கிய குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு வாசற்புறம் நடையைக் கட்டுகிறாள் கல்யாணியக்கா.

மோகனோ -

தான் சுமந்த சுமைகள் மாறப்போவதில்லை என்ற விரக்தியுடன் வெளியே நடக்கிறான்.

குறைந்த விலையில் உயர்ந்த புனித நூல்!
நவராத்திரிப் பாராயணத்திற்குப் பெரிதும் உகந்தது!

நவராத்திரி நாயகி

ரா. கணபதி



தேவி மாஹாத்மியத்திலும் தேவி பாகவதத்திலும் உள்ள ஸ்ரீ துர்க்கா தேவி சரிதத்தைச் சுவை செறிந்த கதையாகத் தத்வ விளக்கத்துடன் கூறுவது:

டெமி அளவில் 450 பக்கங்களுக்கு மேல்; விலை ரூ. 45.00 தான்!

முந்தைய வெளியீடுகள் :

ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் குறித்தவை:

மஹா பெரியவாள் விருந்து (ரூ. 18/-); காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம் (ரூ. 25/-); கருணைக் காஞ்சி-கனகதாரை (ரூ. 20/-); "மைத்ரீம் பஜத!" (ரூ. 20/-); சங்கரர் என்ற சங்கீதம் (ரூ. 22/-).

பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா குறித்தவை :

லீலா நாடக ஸாயி (ரூ. 45/-); அன்பு அறுபது (ரூ. 30/-); அறிவு அறுபது (ரூ. 24/-); அற்புதம் அறுபது (ரூ. 20/-); தீராத விளையாட்டு ஸாயி (ரூ. 20/-); ஸ்வாமி பகுதி I (ரூ. 70/-); பகுதி II (ரூ. 80/-); **BABA: SATYA SAI - Part I (Rs. 75/-); Part II** (அச்சில்); **AVATAR VERILY (Rs. 9/-).**

பதிப்பாளர்:

திவ்ய வித்யா டிரஸ்ட்

106/1, ஹபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை - 600 017.

ஸகல காரியங்களில் வெற்றி பெறவும், கோரிய பலன்களைப் பெறவும் படியுங்கள்

சுந்தர காண்டம்

சுந்தர காண்டம் படிப்பதால் தீராத நோய்கள் தீரும், பகை ஒழியும், எடுத்த காரியங்கள் இனிதே கைக்கூடும், திருமணங்கள் நிகழும், குடும்பத்தில் செல்வம் செழிக்கும், தெய்வ சக்தி ஏற்படும் என்று வாயு புராணம் கூறுகிறது.

நாமக்கல் ஸ்ரீ ஆஞ்ஜநேயர் படத்தின் முகப்பு அட்டையுடன் தமிழில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய புனிதமான நூல். சுப நிகழ்ச்சிகளில் அன்பளிப்பாக வழங்கவும் சிறந்த நூல்.

நூலின் விலை ரூ.32/- (பதிவுத் தபால் செலவு ரூ.8/-)

பூஜை அறையில் வைத்துப் போற்றவும், படிக்கவும், பிறவிப் பயனடையவும்

ஸ்ரீமத் பாகவதம்

(தமிழ் வசனம்)

- ஸ்ரீராம நாம வங்கியின் ஒரு பிரிவான ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டது.
- இஞ்சிக்கொல்லை ஸ்ரீமான் ஆர்.சிவராம சாஸ்திரிகளால் 1908 -ல் எழுதப்பட்டது.
- ஸப்தாஹ விதிப்படி ஏழு பாகங்களாகக் (சுமார் 2750 பக்கங்கள்) கொண்டது.
- 80 கலர் படங்களுடன் கூடியது.

7 பாகங்களும் சேர்ந்து மொத்த செட் விலை - ரூ.600/- (தபால் செலவு ரூ.40/-)

தபாலில் பெற விரும்புவோர் முன் பணம் அனுப்பவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

விஜயம் பதிப்பகம்

No.18, ராகவையா ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

CHARULATHA



பெங்கால் சேலைகள்

- * UNUSUAL BEAUTIFUL PRINTS
- * ஜரிகை சவுத் பார்டர்
- * பாலுசேரி சில்க்/டசர் KANTHA WORK
- * TANGAIL / DAKKA / DHANIKHALI
- * APPLIQUE / BEADWORK / FANCY
- * மற்றும் பண்டிகைக்கால புடைவைகள்

மேலும் கல்கத்தா பாவாடை, பிளவுஸ்பிட், சுடாய், தோசைகல் etc... etc..


அக்டோபர் 1ந் தேதி முதல் தீபாவளி வரை 10% சிறப்புத் தள்ளுபடி

SHOW ROOM

CHARULATHA SAREE SHOP
13/3 12th AVENUE, ASHOK NAGAR
MADRAS - 83. PH: 4820358

MASTER / VISA CARDS ACCEPTED

டி.வி.யில் முக சீரமைப்பு ஆபரேஷன்



* உதடு பிளவு

பிரபல முக சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். எஸ். எம். பாலாஜி சமீபத்தில் ஜெர்மன் நாட்டு அழைப்பின் பேரில் அங்கு 20 நாட்கள் சுற்றுப்பயணம் சென்றிருந்தார். அங்குள்ள டெலிவிஷன் இவரது 'முக சீரமைப்பு ஆபரேஷனை' நேரடியாக ஒளிபரப்புச் செய்து ஒரே நாளில் ஜெர்மன் நாட்டில் பிரபலமான முதல் இந்தியர் இவரே.

அதோடு சில மாதங்களுக்கு முன்பாக இலங்கை சென்றிருந்தபோது அங்கு ஒரே நாளில் 8 முக சீரமைப்பு ஆபரேஷன் செய்து சாதனை படைத்திருக்கிறார். இதற்காக இலங்கை ரூபவாகினி டெலிவிஷன் இவரிடம் சிறப்பு பேட்டி கண்டது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் தெரிந்த அறிவிப்பாளர்கள் மூலம் தனது சாதனை பற்றி விளக்கம் அளித்தார் பாலாஜி.

பெர்லினில் உள்ள இந்திய இலங்கை மக்கள் அழைப்பின் பேரில், முகசீரமைப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு முக சீரமைப்பின் அவசியம் பற்றிப் பேசினார். பெர்லின் டீ.வியின் ஒன்றரை மணி நேர பேட்டியின்போதே மேல்தாடை, கீழ் தாடை உள்ளிட்ட 7 ஆபரேஷன்களை டெலிவிஷனிலேயே செய்து காட்டினார்.

ஜெர்மன் சுற்றுப்பயணம் முடிந்து வழக்கம் போல இஸபெல்லா மருத்துவமனையிலும், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையிலுள்ள பாலாஜி டென்டல் கிளினிக்கிலும் சுறுசுறுப்பாகத் தன் பணிகளை கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் பாலாஜியிடம் ஜெர்மன் பயண அனுபவம் பற்றிக் கேட்டபோது –

“பல் மருத்துவத்தில் நவீனம் என்றதுமே நினைவுக்கு வருவது ஜெர்மன் நாடுதான். அங்குதான் முக சீரமைப்பு உள்ளிட்ட பல புதிய சிகிச்சைகளை கண்டுபிடித்து சாதனை செய்திருக்கிறார்கள். உதடு பிளவுபட்ட நிலை, மேலண்ணத்தில் ஓட்டை என்று முகம் எந்த நிலையில் இருந்தாலும் வெற்றிகரமான சிகிச்சை மூலம் சரிசெய்து வருகிறார்கள்.

நானும் இதுபோன்ற சிகிச்சை முறைகளை ஜெர்மனியில்தான் கற்றேன். அங்கு கற்ற அடிப்படையில் இதுவரை 4 ஆயிரம் பேருக்கு மேல் முக சீரமைப்பு ஆபரேஷனை வெற்றிகரமாக செய்திருக்கிறேன்.

ஜெர்மன் தலைநகரான பெர்லினில் முக அறுவை சிகிச்சை ஒன்றை நான் அங்குள்ள டெலிவிஷனுக்காக செய்து காட்டிய போது, பாராட்டாதோர் இல்லை எனலாம். அந்த அளவுக்கு நேரில், போனில் வாழ்த்தினார்கள்.”

“தாடை அறுவை சிகிச்சை தவிர, இந்தத் துறையில் சாதனை என்றளவில் பேசப்படும் மேல் உதட்டுப் பிளவு சிகிச்சை என்பது என்ன?”

“முறைப் பெண் – முறை மாமன் இப்படி சொந்தத்தில் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகள் சில சமயங்களில் இப்படி மேல் உதட்டுப் பிளவுக் குறைபாடுகளுடன் பிறந்து விடுகின்றன.

“மேல் உதடு பிளவுபட்ட நிலையில் பிறக்கும் குழந்தைகள் வெளிநாடுகளிலும் உள்ளன. 7 ஆயிரம் குழந்தைக்கு ஒரு குழந்தை இப்படி பிறப்பதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது.

இது மாதிரி நிலையில் உள்ள



* டாக்டர். எஸ். எம். பாலாஜி

குழந்தைகளின் எதிர்காலத்தில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் இருக்க, வழக்கமான முகத்தைப் போலவே அவர்களின் முகத்தையும் சீரமைக்க நவீன சிகிச்சை கண்டுபிடிக்கப்பட்டது. ஸ்காண்டிநேவியா நாடுகள் ஒன்றில் உதடு பிளவுபட்ட நிலையில் உள்ள குழந்தைகளுக்கென்றே ஒரு கிராமத்தையே உருவாக்கி வைத்திருக்கிறார்கள்."

உதடு பிளவுபட்ட நிலையிலுள்ள குழந்தைகளுக்குப் பால் குடிக்க முடியாது. இது மாதிரி நிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் 'பிளாஸ்டிக் சர்ஜரி' மூலம் மேலுள்ள சதைப் பகுதியை மட்டும் மூடி வந்தார்கள். ஆனால், அதையொட்டி உள்ள எலும்புக் குறைபாட்டை விட்டு விட்டார்கள்.

இந்த ஆபரேஷன் பற்றி அறிந்து கொள்வதற்காகவே ஒரு மாதம் ஆலந்து நாடு போய் வந்தேன். அங்கு பெற்ற பயிற்சி மூலம் எலும்புக் குறைபாட்டைப் போக்கும் ஆபரேஷனையும் செய்து வருகிறேன். இதே சிகிச்சை உதடு பிளவு பட்ட குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது. இதனால் குழந்தை சரியாக பால் குடிக்க முடிகிறது. பேசுவதும் எளிதாக உள்ளது.

இக்குறையை நீக்குவதற்குப் பல துறையில் உள்ள மருத்துவர்கள் தேவை. இவர்கள் குழந்தையின் வெவ்வேறு வளர்ச்சி நிலையில் சிகிச்சை அளிக்கிறார்கள். குழந்தை சிறப்பு மருத்துவர், முகசீரமைப்பு நிபுணர், பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர், குரல் பயிற்சி நிபுணர் ஆகியோரின் பணி மிகவும் அத்தியாவசியமாகிறது.

உதடு பிளவுபட்ட குழந்தைகளிடம் ஒரு கனிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. அக் குழந்தையின் பெற்றோரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. மூக்கு துவாரத்திற்கும் வாய்க்கும் பிரிவு ஏதும் இல்லாததால், குழந்தையினால் பால் குடிக்க இயலாது. இதற்கு 'அக்ரிலிக் பிளேட்'டை வாயில் பொருத்தினால் உணவு உண்பதற்கு மட்டுமல்லாமல் பேச்சு கூட தெளிவாக அமையும்.

முதல் 3-வது மாதத்தில் மேல் உதட்டில் உள்ள பிளவை சரிசெய்ய வேண்டும்.

குழந்தை வளரும் பொழுது அவர்களின் 'கேட்கும் திறனை'யும் 'பேச்சுத் திறனை'யும் கண்காணித்துச் சரிசெய்ய வேண்டும். இவர்களின் பல் சீராக இருக்காது. இதனை சீர் செய்யும் முன் இடுப்பு எலும்பை கொஞ்சம் எடுத்து 'கிராப்டிங்' செய்து ஓட்டையை அடைக்க வேண்டும். இதனை 8 முதல் 10 வயதுக்குள் செய்தாக வேண்டும். இதன் மூலம் மேல் தாடை எலும்பிற்குள் இருக்கும் பற்கள் சீராக வரிசையில் வளர பயன்படும்.

இவை அனைத்தையும் செய்த பிறகும் மேல் தாடை சில வேளை கீழ்தாடைக்குப் பிற்பட்டு சிறிதாக தென்படும். இந்நிலையில் தாடை எலும்பை ஆபரேஷன் செய்து முகத்தை சரி செய்ய வேண்டும். அவர்கள் குறை வடிவம் நீங்கப் பெறுவார்கள்.


பல் மருத்துவத்தில் இவரது சமீபத்திய சாதனை பற்றிக் கேட்டபொழுது,

"எர்ணாகுளத்தைச் சேர்ந்த சைபுதீன் என்ற இளைஞனுக்கு இரண்டு பக்க உதட்டிலும், மேலண்ணத்திலும் பிளவு இருந்தது. முன்னே துருத்திக் கொண்டிருக்கும் அந்த 4 முன் பற்களையும் எடுத்த பிறகே பிளவை சரிசெய்ய முடியும் என்று பல மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நான் அந்த முன் பற்களை ரத்த ஓட்டத்தோடு உள்ளே தள்ளி, இடுப்பில் இருந்து எலும்பை எடுத்து, 3 துண்டுகளாக இருந்த மேல் தாடையை ஒரே அளவாக ஆக்கி அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தேன்.

(முக சீரமைப்பு என்பது அழகுக் கலையில் ஒன்றாக வந்து விடுகிறதே! எனவே சில கட்டுரைகள் இதனைப் பற்றி அவரிடம் கேட்டு எழுதவுள்ளோம். வாசகருக்கு ஏதேனும் ஐயங்கள் இருப்பின் எழுதுங்கள். அவருடைய பேட்டியிலேயே விளக்கம் தரச் சொல்கிறோம்.)

(தொடரும்)



வீட்டில் இருக்கும் சின்ன ஜாம் டப்பாக்கள், நாம் பயணத்தின் போது வாங்கும் காப்பி கப்புகளில் மணல் நிரப்பி, கடுகு, தனியா தெளியுங்கள். உங்கள் பார்க்கில் 'அழகான குட்டி பூந்தொட்டி'.

— மஹிமா

அன்புக்கு அடிமையாகும் அன்னை!

மொட்டான ஆனந்தம் விரிவடையும் போது எடுக்கும் பல தோற்றங்களில் ஒன்று அன்பு. ஒரு கைமாற்றினை எதிர்பார்க்கும் அன்பு உண்மையான அன்பு அல்ல. நம் அன்பிற்கு இடமான பொருளின் நலனே தன் நலன். அதன் துக்கமே தன் துக்கம். அதனை விட்டுத் தனக்குத் தனி இருப்பு இல்லை என்ற அளவிற்கு அன்புக்குரிய பொருளாகவே ஆகிவிடுவது பேரன்பு. அதன் வடிவில் காணப்படுபவள் ஸர்வேச்வரியான புவனேஸ்வரி மாதா.

அன்பு வைக்கப்படும் இடத்திற்கேற்ப பெயர் மாறுபடும். பெரியோர்களிடத்தில் அன்பு பக்தியாகும். சமநிலையில் உள்ளவர்களி டத்தில் நட்பாகும். சிறியவர்களிடத்தில் வாத் ஸல்யமாகும். அன்பால் எனக்கு என்ன லாபம் என்ற கேள்விக்கு இவைகளில் இடமில்லை. அன்பே பராம்பிகை. அன்பை வளர்த்து அத னுள் அகப்பட்டு விடுவாள். அன்பின் வசப்பட்ட தேவி அடியார்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறாள். இதுகாறும் வெறுக்கப்பட்டதைக் கூடப் பிரியமாக்கித் தருகிறாள் புவனேஸ்வரி தேவி.


அன்பும் பக்தியும் கொண்டு பூஜித்த பக்தன் பாக்கியத்தை அனுபவிப்பான். ஆனால் அமைதியாக அதனால் இறுமாப்பு ஏற்படாதவாறு அடக்கத்துடன் அனுபவிப்பான். பக்தனும் குதூகலத்துடன் கூத்தாடும் நேரம் ஒன்று உண்டு. தேவியின் கருணை ததும்பும் தோற்றத்தைக் கண்டதும் ஆனந்தத்தை அடக்க முடியாமல் அப்படிக் கூத்தாடுவான். தேவியின் அருள் எங்கும் பரவி எங்கும் ஆனந்தம் பரவ இருப்பதை உணர்ந்து பக்தனது உள்ளம் கூத்தாடுகிறது. இப்படிக் கருணையால் தனக்குத் தாயானவளை எல்லோருக்கும் தாயாக உணர்ந்ததால் ஏற்பட்ட களிப்பையும், ஆனந்தத்தையும் பெற்றவர் தான் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளான சக்தி உபாசகர்.

அம்பிகை உபாசனையில் தம்மை அர்ப்பணித்து பக்தர்களின் நலனில் அக்கறை கொண்டு, அவர்களுக்கும் உபாசனா முறையை உபதேசித்து அருளும் ஸ்ரீஸ்வாமிகள் அமைத்த ஸ்ரீயோகமாயா புவனேஸ்வரி பீடமென்கிற ஸ்ரீபரத்வாஜ ஆசிர மம். சென்னையிலிருந்து இருபத்திரண்டு கிலோ மீட் டர் தொலைவில் அம்பத்தூர் ரெட் ஹில்ஸ் சாலையில் கங்கை நகர் பகுதியில் மக்கள் துயர் தீர்க்கும் மாமருந்தாய், சக்தி சாந்நி சந்நிதியாய் விளங்குகிறது. இங்கு கொலுவீற்றிருக்கும் யோக மாயா புவனேஸ்வரி தேவி அழகாய் ஜொலிக்கிறாள். மறுபடி மறுபடி காணத் தூண்டும், நெருங்கி நின்று பார்த்தால் பரவசம் தரும் புவனேஸ்வரியே - இவளது அழகே நம்முடன் பேசுவதை உணர்வோம்.

இத் தேவியின் கடைக்கண் பார்வை விழுமிடத்தில் கிங்கரிகளாக என்ன செய்ய வேண்டும்? செய்யக் காத்திருக்கிறேன் என்று கூறி நிற்கும் ஏவலாளிகளாகக் கோடிக்கணக்கான சுற்றுதேவிகள் காத்து நிற்கின்றனர். புவனேஸ்வரியின் கடைக்கண் பார்வை அடியார்கள் மேல் படுகிறது. அந்த அடியார்களின் விருப்பம் நிறைவேறுகிறது. சமீபத்தில் சுப்ரமண்யம் எனும் இளைஞர் வந்தார். இவர் எங்கே பார்ச்



• உஜ்ஜயினியில் மன்னன் விக்கிரமாதித்தன் வழிபட்ட ஹர்சித்தி தேவி



உணவே மருந்து மருந்தே உணவு

(NATURE CURE TREATMENT)

ஊசி, மருந்து, ஆபரேசன் இல்லாமல்

எல்லாவித நோய்களையும் குணப்படுத்துகிறோம்.

இதயநோய், மனநோய், கேன்சர், ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, பக்கவாதம், மூலவியாதி, ரத்தகொதிப்பு, ஆஸ்துமா, குடி மறக்க, புகை மறக்க, கை கால் நடுக்கம், மலடு நீக்க போன்ற நோய்கள் மட்டுமின்றி ஆங்கில மருத்துவத்தால் கைவிடப்பட்ட எல்லாவித நோய்களையும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தி தருகிறோம். **முன்பதிவு செய்துகொள்ளவும்**

இந்திர பிரஸ்தா இயற்கை நல மருத்துவமனை
140/2, ஜீவானந்தம் தெரு, (ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பின்புரம்)
சதானந்தபுரம், சென்னை - 600 063. ✆ **4344283.**

பஸ் ரூட் தாம்பரம் to பெருங்களத்தூர் A18, 18-A, 18G, PP18, G21, PP21, E18, 55D, T60, 55C
பெருங்களத்தூரிலிருந்து சதானந்தபுரத்திற்கு பஸ் நெ. 55D

ROYAL

விற்பனையாகிறது!

அக்டோபர் இதழில்...

- வந்து விட்டது 'சென்-ஐ'
- சாதாரணமாகும் பை-பாஸ் சர்ஜரி
- மாரடைப்புக்கு உடனடி மருந்து
- பாலூட்டும் தாய்மார்களுக்கு...
- மீண்டும் 'ப்ளேக்'
- சர்க்கரை நோய்க்கு பல துறை சிகிச்சை
- மற்றும் மருத்துவ ஜோதிடம், மகளிர் மட்டும் என ஏராளமான விஷயங்கள்



ஹெல்த் டாக்டர்

பயனுள்ள மருத்துவ மாத இதழ்

ஆசிரியர்: ஜி.விஜயலட்சுமி

☠ தமிழகத்தை விரைவில் தாக்கப் போகும் "உயிர்க் கொல்லி"

விலை ரூ.7/- மட்டுமே

80x20 Publicity

இது ஒரு சாய்ராம் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

தாலும் துப்புவது, நீரில் கை கால்களை அலம்பிக் கொண்டேயிருப்பது, எவர் மேலும் சந்தேகத்துடன் பார்ப்பது, யாரோ காதில் வந்து பேசுவது போன்று, சித்தப்பிரமை பிடித்தது போல் இருந்தார். கல்லூரிப் படிப்பு முடித்து வேலைக்குச் செல்லும் வயதில் இப் படி ஒரு மனக்கோளாறு. பதறினர் சுப்ரமண்யத்தின் பெற்றோர். புவனேஸ்வரி ஸ்வாமிகளிடத்தில் தஞ்சம் புகுந்தனர். முன்னூறு மூலிகைகளைக் கொண்டு துர்கா வேள்வியை நடத்தி அதன் பஸ்மத்தை தின மும் சாப்பிட்டு வரச் சொன்னார் ஸ்ரீஸ்வாமிகள். இன்று சுப்ரமண்யம் பெங்களூரில் தனியார் கம்பெனியில் உயர் பதவியில் இருக்கிறார்.

புவனேஸ்வரி பக்தியும் நம்பிக்கையும் உள்ள வர்களிடத்தில் சத்யப்ரஸாதினியாய் விளங்குகிறாள் அன்னை. இவள் எல்லோரது வணக்கத்திற்கும்



• பாண்டிச்சேரி கவர்னர் ராஜேந்திரகுமாரி பாஜ்பாய் ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில் நடத்திய சுவாஸினி பூஜை

உரியவள். வணங்குபவர்பால் இவள் கொண்டுள்ள நிகரற்ற அன்பினால் கருணை வடிவாகிறாள். அத னால் விழுந்து வணங்கினால் போதும், அழுது தொழுதால் போதும். பிரேமையாகக் கூப்பிட்டால் போதும். பக்தியாய் துதித்தால் போதும். இப்படி தொழுபவர்களிடத்தில் புவனேஸ்வரி தேவிக்கு அளவு கடந்த பிரியம். இந்தப் பிரியத்திற்கு இணை யாகப் பசு தன் இளம் கன்றிடம் கொண்ட பிரியத் தைக் கூறலாம். தனது மூத்த கன்றைக் கூட முட்டி விரட்டிப் பின் தன் இளைய கன்றிற்குப் பால் ஊட்டி மகிழும் பாங்கு, வாத்ஸல்யமாகும். அத னைப் போல் புவனேஸ்வரியும் வணங்கித் தன் னைச் சரணமாகக் கொண்டவர்களிடம் வாத்ஸல் யம் கொண்டவள்.

வேள்வி வடிவில் உள்ளவள் புவனேஸ்வரி தேவியே. யஜ, வேள்வி புரிதல், யஜமானன் – வேள்வி புரிந்து கொண்டிருப்பவன். யஜமான ஸ்வரூபிணி யாய் புவனேஸ்வரி இருப்பதால், நாம் யாகங்கள் புரிவதால் தேவதைகள் திருப்தியடைந்து மழை முதலியவற்றால் நம் வாழ்க்கையை வளப்படுத்து கிறார்கள். அதன்படியே இந்த பரத்வாஜ ஆசிரமத் தில் ஸ்ரீவாஞ்சா கல்ப கணபதி ஹோமம், ஸ்ரீநவசண் டியக்ஞம், ஸ்ரீவித்யா ஹோமம், ம்ருத்யுஞ்சய ஹோமம், சத மூலிகா ஹோமம் என நடத்திக் கொண்டேயிருக் கிறார்கள். இங்கே யாகம் செய்து காரிய சித்தி பெறு வதின் காரணம் சிரத்தையோடு நடத்துவதேயாகும். இன்ன தேவதைககு இன்ன திரவ்யம், இன்ன மந்திரங்கள் என்று திரவியலோபம், பக்தி லோபம், மந்திரலோபம் இல்லாமல் செய்கிறார்கள்.

புன்சிரிப்பால் அருள்புரிவதற்கு தேவி எடுக்கும் வடிவம் குரு. அறியாமையைப் போக்கி இறையுணர்வைத் தந்தருளும் குரு தேவியே அந்த குருவின் வரிசையில் ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் அடியார் களுக்கு வழிகாட்டியாய், நற்போதகராய், ரக்ஷிப்பவ ராய் விளங்குகிறார். இந்தியா முழுக்க பல சக்தி ஸ்தலங்களுக்குச் சென்று பூஜித்து வரும் இவர் சம்பத்தில் உஜ்ஜயினியிலுள்ள மன்னன் விக்கிரமாதித்தனால் பூஜிக்கப்பட்ட ஹர் சித்தி தேவியை ஆராதித்து வந்தார். இவரின் வழித் தோன்றலே ஸ்ரீபரத்வாஜ ஸ்வாமிகள். ஸம்பிரதாய கிரமமாய் முறைப்படி மந்திரங் களையும் வழிபாட்டு முறைகளையும் கற்று, உணர்ந்து அன்னையின் அருளமுதம் பெற்று அடியவர்களுக்கு ஸேவை புரிந்து வருகிறார்.

யோகமாயா புவனேஸ்வரியை "அம்மா" என்று அழைத்தால் போதும். இந்தத் தாயை வணங்குவதும் போற்றுவதும் மறுபடி மற்று மொரு தாயின் வயிற்றில் பிறக்காமல் இருக் கச்செய்யும். பக்தனின் பக்திக் குரல் கேட்டு ரக்ஷிக்கவே விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து குடிக்கொண்டிருக்கிறாள் கங்கை நகரில். பௌர் ணமி, அஷ்டமி தினங்களில் நடக்கும் ஆராத னையைத் தரிசித்தால் நினைத்ததை நினைத்தபடி அருளுகிறாள். வரும் நவராத்திரி திருவிழா அக் டோபர் 13-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை இந்தத் திருப்பீடத்தில் நடக்க உள்ளது. சண்டி ஹோமம், சுவாஸினி பூஜை என அந்தப் பத்து நாட்களும் அங்கு பக்தி மணமும், தெய்வீக மணமும் கலந்து நம்மை மெய்மறக்கச் செய்யும்.

இரட்டைச் சிறப்பிதழ் – 2 அட்டையில் : ஸ்ரீ

பரத்வாஜ ஆசிரமத்தில் குடிகொண்டுள்ள ஸ்ரீயோகமாயா புவனேஸ்வரி

சுலபத் தவணையில் சொந்த வீடு

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்

ரூ.1,650/- முதல் ரூ.10,000/- வரை மாதத் தவணைகளாக, செலுத்தி குலுக்கல் மூலம் 300 முதல் 1,000 சதுர அடிகள் வரையிலுள்ள வீட்டினை தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை வாடகை போல் வீட்டில் இருந்து கொண்டே செலுத்தலாம்.

வீடு கிடைக்கும் இடங்கள்

சென்னை : கே.கே. நகர், [illegible], சைதாப்பேட்டை, அசோக் நகர், [illegible], [illegible], அம்பத்தூர், [illegible], குரோம்பேட்டை. மதுரை : [illegible] நகர், அண்ணா நகர், [illegible]. திருச்சி : ஸ்ரீரங்கம், [illegible], கே.கே. நகர், [illegible]. கோவை : [illegible]. பெங்களூர் : [illegible].

முக்கிய அறிவிப்பு! விலை உயர்வு!!

27-10-96 முதல் ஒரு சதுர அடியின் விலை கீழ்கண்டவாறு உயரவுள்ளது

சென்னை	:	ரூ. 600 - ரூ. 700
பெங்களூர்	:	ரூ.1000 - ரூ.1200

27-10-96 க்குள் பதிவு செய்பவர்களுக்கு முதல் இரண்டு மாத தவணையில் 50% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும்

எங்களிடம் வைப்பு நிதிக்கு **18%** முதல் **27%** வரை வட்டி **+ 1** கிராம் தங்க நாணயம் **+ 1%** ஊக்க தொகை வழங்கப்படும்

(குறைந்த பட்ச முதலீடு ரூ.10,000/- அதற்கு மேல் ரூ.1,000/- மடங்குகளில்) தங்க நாணய சலுகை ஒரு வருடத்திற்கு மேல் வைப்பு நிதி செய்பவர்களுக்கு மட்டுமே

சரஸ்வதி பூஜை சிறப்பு சலுகை

"அதிர்ஷ்டம் உங்கள் வீடு தேடி வருகிறது" சரஸ்வதி பூஜையை முன்னிட்டு சிறப்பு சலுகையாக ரூபாய் 1 லட்சம் மதிப்புள்ள பரிசுக் கூப்பனை பெற்றுச் செல்வீர். இந்த பொன்னான அரிய வாய்ப்பினை நழுவ விடாதீர்

எங்களின் ஏதாவதொரு கிளைக்கு வைப்பு நிதி, வீட்டு வசதி திட்டம் மற்றும் காசி ஸ்கீம்கள் பற்றி விவரம் அறிந்து கொள்ள நேரில் வருகை தருபவர்களுக்கு ஒரு பரிசுக் கூப்பனும் மற்றும் எங்களது திட்டங்களில் சேருபவர்களுக்கு அத்திட்டத்திற்கேற்ப பரிசுக் கூப்பன்கள் வழங்கப்படும்

விலை உயர்வு 27-10-96 முதல் அமுலுக்கு வருவதால் உடன் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்

காசி குரூப் ஹவுசிங் ஸ்கீமின் வெற்றிகரமான 20வது குலுக்கல் 27-10-96 அன்று சென்னை காமராஜர் மெமோரியல் ஹாலில் நடைபெற உள்ளது

காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிமிடெட்,
காசி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

KGC

91-92, [illegible] சாலை, காசி [illegible], அசோக் நகர், சென்னை - 600 083. போன் 4822206, 4825506, 4821969, 4896373, 4896409. பேக்ஸ் 044-4825606 கிளைகள் சென்னை சைதாப்பேட்டை : 13, [illegible], சைதாப்பேட்டை, சென்னை - 600 015. போன் 456464 • மயிலாப்பூர் : 140, [illegible] 19, [illegible], மயிலாப்பூர், சென்னை - 600 004 • திருவான்மியூர் : [illegible] 10, [illegible] 64, [illegible], திருவான்மியூர், சென்னை - 600 041 • அம்பத்தூர் : [illegible] 11, [illegible], அம்பத்தூர், சென்னை - 600 053. போன் 682592 • மடிப்பாக்கம் : [illegible], மடிப்பாக்கம், சென்னை - 600 091 • கோவை : [illegible] 594/4, [illegible], கோவை - 641 002. போன் 439656 • கோவை : [illegible] 209/8, [illegible], கோவை - 641 012. • திருத்தணி : [illegible], திருத்தணி - 631 213. போன் 88304 • திருச்சி : 5/8, 25, [illegible] 5, [illegible], திருச்சி - 620 001. போன் 466003 • திருச்சி : 32B/2, [illegible], திருச்சி - 620 001. போன் 466002. • மதுரை : 246A, [illegible], மதுரை - 625 001. போன் 741190 • பெங்களூர் : 33, [illegible] 400, [illegible], பெங்களூர் - 560 041. போன் 3363351 • பெங்களூர் : 1532, [illegible], பெங்களூர் - 560 041. போன் 6652480 • மைசூர் : 20, [illegible], மைசூர் - 570 001. போன் 435997 • [illegible] : 4-8-14 [illegible] - 522 007. போன் 355257 • மும்பாய் : 203A, [illegible], மும்பாய் - 400 002. போன் 4082649 • Dubai : Nada Al Zuhoor Trading Est., P.Box No.27857, Dubai, U.A.E. Tel.: 00971 4 247970 Fax: 00971 4 247980.

நாம் வழக்கமாகச் செய்யும் சுண்டலையே இன்னும் கொஞ்சம் புதுமையாக, சுவையாகச் செய்யச் சொல்கிறார் திருமதி. விசாலாட்சி.

சுவையான சுண்டல் செய்வோம்

• விசாலாட்சி



கொள்ளு கார சுண்டல்

தேவையான பொருட்கள் :

கொள்ளு – 1 கப்,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
மிளகாய் வற்றல் – 5,
தனியா – 1 டீஸ்பூன்,
கடலை பருப்பு – 1 ஸ்பூன்,
கடுகு – 1 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி – 1 சிட்டிகை,
உப்பு – தேவைக்கேற்ப.
எண்ணெய் – தேவையான அளவு

செய்முறை :

முதலில் கொள்ளை வாணலியில் போட்டு அடுப்பில் வைத்து லேசாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின் குக்கரில் ஒன்றரை டம்ளர் தண்ணீர் விட்டுக் கொள்ளையும் போட்டு வேண்டிய அளவு உப்புப் போட்டு மூடி வேகவைக்க வேண்டும். பின் எடுத்து வடிய வைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து சிறிது எண்ணெய் விட்டு மிளகாய், தனியா, கடலைப் பருப்பு இவை களை நன்றாக வறுத்து எடுத்து மிக்ஸியில் போட்டு பொடி செய்து கொள்ள வேண்டும். பின் வாணலியில் 2 ஸ்பூன் எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை இவற்றைப் போட்டு நன்றாக வறுத்தபின் கொள்ளு, தேங்காய்த் துருவல், பெருங்காயம், காரப் பொடி இவற் றைச் சேர்த்து 5 நிமிடங்கள் நன்றாகக் கிளறி இறக்க வேண்டும். காரப் பொடி இல்லாமல் கடுகு, மிளகாய் தாளித்து தேங்காய் போட்டும் செய்யலாம்.

கொள்ளு இனிப்பு சுண்டல்

தேவையான பொருட்கள் :

கொள்ளு – 1 கப்,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
வெல்லம் – ஒரு நார்த்தங்காய் அளவு (சிறிது)
ஏலக்காய் – 4,
உப்பு – ½ சிட்டிகை.

செய்முறை :

வாணலியில் கொள்ளைப் போட்டு அடுப்பில் வைத்து வறுத்து எடுத்துக் கொண்டு பின் குக்கரில் ஒன்றரை டம்ளர் தண்ணீர் வைத்து கொள்ளைப் போட்டு ½ சிட்டிகை உப்பையும் போட்டு மூடி வேகவைக்க வேண்டும். வெயிட் போட்டு வேக வைக்கவும். பின் ஒரு பாத்திரத்தில் ஒரு கரண்டி தண்ணீர் விட்டு வெல்லத்தைப் போட்டு வெல்லம் கரைந்தவுடன் கொள்ளு, தேங்காய்த் துருவல் இவற்றையும் ஏலப்பொடியையும் போட்டு வெல்லம் பாகு முத்தாமல் சுண்டல் சேர்ந்து வருமளவுக்குக் கிளறி இறக்கி வைக்கவும்.

துவரை கார சுண்டல்

தேவையான பொருட்கள் :

துவரை – 1 கப்,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
மிளகாய் வத்தல் – 6,
தனியா – 1 ஸ்பூன்,
கடலைப் பருப்பு – 1 ஸ்பூன்,
உப்பு – தேவையான அளவு,
கடுகு – 1 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி – 1 சிட்டிகை,
எண்ணெய் – தேவையான அளவு,
கருவேப்பிலை – 5 அல்லது 6 இதழ்கள்.

செய்முறை :

துவரையை வாணலியில் போட்டு

அடுப்பில் வைத்து எண்ணெய் விடாமல் வறுத்து பின் குக்கரில் 2 டம்ளர் தண்ணீர் விட்டு துவரையைப் போட்டு தேவையான அளவு உப்பு சேர்த்து வெயிட் போட்டு வேக வைத்து இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். பின் மிளகாய், தனியா, கடலைப் பருப்பு இவற்றை வாணலியில் போட்டு ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து நன்றாக வறுத்து எடுத்து மிக்ஸியில் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து 2 ஸ்பூன் எண்ணெய் விட்டுக் கடுகைப் போட்டு கடுகு வெடித்தபின் கருவேப்பிலையையும் துவரை, தேங்காய் துருவலையும், காரப் பொடியும் பெருங்காயப் பொடியையும் சேர்த்து 5 நிமிடங்கள் நன்றாகக் கிளறி இறக்கி வைக்கவும்.

துவரை இனிப்பு சுண்டல்

தேவையான பொருட்கள் :

துவரை – 1 கப்,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
வெல்லம் – 1 நார்த்தங்காய் அளவு,
ஏலக்காய் – 4,
உப்பு – ½ சிட்டிகை.

செய்முறை :

துவரையை வாணலியில் போட்டு அடுப்பில் வைத்து எண்ணெய் விடாமல் வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு குக்கரில் 2 டம்ளர் தண்ணீர் விட்டு துவரையைப் போட்டு ½ சிட்டிகை உப்பைப் போட்டு வேகவைத்துக் கொள்ளவும். பின் ஒரு பாத்திரத்தில் ஒரு கரண்டி தண்ணீர் விட்டு வெல்லத்தைப் போட்டு வெல்லம் கரைந்தபின் துவரை, தேங்காய்த் துருவல் இவற்றைப் போட்டு ஏலப்பொடியையும் போட்டு நன்றாகக் கிளறி சுண்டல் சேர்ந்து வரும் வரையில் கிளறி இறக்க வேண்டும். பாகு முத்தக் கூடாது.

சோயாபீன்ஸ் கார சுண்டல்

தேவையான பொருட்கள் :

சோயாபீன்ஸ் – 100 கிராம்,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
தனியா – 1 ஸ்பூன்,
மிளகாய் வத்தல் – 6,
கடலைப் பருப்பு – 1 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி – சிறிது,
உப்பு – தேவையான அளவு,
கடுகு – 1 ஸ்பூன்,
எண்ணெய் – தேவைக்கேற்ப,
கருவேப்பிலை – 5 அல்லது 6 இதழ்கள்.

செய்முறை :

சோயாபீன்ஸை நன்றாக அலம்பி வாணலியில் தண்ணீர் வைத்து பீன்ஸைப் போட்டு அடுப்பில் வைத்து உப்புப் போட்டு வேகவைக்கவும். நன்றாக வெந்தபின் இறக்கி வடிகட்டவும். அடுப்பில் வாணலியை வைத்து சிறிதளவு எண்ணெய் விட்டு மிளகாய், தனியா, கடலைப் பருப்பு இவைகளை வறுத்து எடுத்துக் கொண்டு மிக்ஸியில் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் கடுகைப் போட்டு கடுகு வெடித்தவுடன் கருவேப்பிலை, காரப் பொடி, தேங்காய்த் துருவல், பீன்ஸ், பெருங்காயப் பொடி இவற்றைப் போட்டு 5 நிமிடங்கள் கிளறி இறக்கி விடவும்.

தினை மாவு

தேவையான பொருட்கள் :

தினை அரிசி – 1 கப்,
சர்க்கரைப் பொடி – 1 கப்,
முந்திரி – 6 அல்லது 7,
தேங்காய்த் துருவல் – ½ கப்,
ஏலக்காய் – 3,
நெய் – கொஞ்சம்.

செய்முறை :

தினையரிசியை வாணலியில் எண்ணெய் விடாமல் வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு தினை அரிசியையும், சர்க்கரையையும் மிக்ஸியில் பொடி செய்து கொள்ள வேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து ஒரு சிறிய கரண்டி நெய் விட்டு முந்திரிப் பருப்பை வறுத்துக் கொண்டு தேங்காயையும்



வீட்டில் அம்மா பாயசம் செய்யும்போது உபயோகிக்க வைத்திருந்த 'ரோஸ் எஸ்ஸென்ஸி'ல் ஒரு துளி எடுத்து என்னுடைய மை பாட்டிலில் விட்டேன். இப்போது ஒவ்வொரு முறையும் என் பேனாவைத் திறந்து எழுதும் போதெல்லாம் வாசனை கமகமவென்று வருகிறது. பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளை எழுதத்தூண்டும் இந்த வாசனை.

– எஸ். உமா

வறுத்துக் கொண்டு சர்க்கரை, மாவு, ஏலம், முந்திரி, தேங்காய் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்க வேண்டும்.

வரகரிசி சுண்டல்

தேவையான பொருட்கள் :
வரகரிசி - 1 கப்,
தேங்காய்த் துருவல் - ½ கப்,
மிளகாய் - 2 (அ) 3,
உப்பு - தேவையான அளவு,
கடுகு - 1 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி - 1 சிட்டிகை,
எண்ணெய் - தேவைக்கேற்ப.

செய்முறை :
வரகரிசியை நன்றாக 2 மணி நேரம் ஊறவைத்து பின் ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து, அரிசியை உப்புப் போட்டு வேகவிடவும். (சிறிது எடுத்துக் கையால் அழுத்தினால் வெந்தது தெரியும்) வெந்த வரகரிசியை நன்கு வடிய விடவும். பின் வாணலியில் கொஞ்சம் எண்ணெய் விட்டு, கடுகு, கிள்ளிய மிளகாய் ஆகியவற்றைப் போட்டு, வறுபட்டவுடன் வரகரிசியையும், தேங்காய்த் துருவலையும் போட்டு நன்கு கிளறி இறக்கவும்.

பலாக் கொட்டை கார சுண்டல்

தேவையான பொருட்கள் :
பலாக் கொட்டை - 20,
தேங்காய்த் துருவல் - ½ கப்,
தனியா - 1 ஸ்பூன்,
கடலைப் பருப்பு - 1 ஸ்பூன்,
மிளகாய் - 4,
கடுகு - 1 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி - சிறிது,
உப்பு - தேவைக்கேற்ப,
எண்ணெய் - தேவைக்கேற்ப.

செய்முறை :
பலாக் கொட்டையின் தோலை எடுத்து விட்டு, சிறிய துண்டங்களாக நறுக்கி, உப்பு போட்டு வேகவைத்து, வடிகட்டி, எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, கடலைப் பருப்பு, மிளகாய் வற்றல், தனியா ஆகியவற்றை வறுத்து எடுத்து, மிக்ஸியில் பொடித்துக் கொள்ள வேண்டும். பிறகு வாணலியில் மீண்டும் சிறிது எண்ணெய் விட்டு, கடுகு தாளித்துக் கொண்டு, வெந்த பலாக் கொட்டைகள், தேங்காய்த் துருவல், பொடித்த காரப் பொடி ஆகியவற்றைப் போட்டு நன்கு கிளறி, ஐந்து நிமிடங்களுக்குப் பின் இறக்கவும்.

வேர்க்கடலை கார சுண்டல்

தேவையான பொருட்கள் :
பச்சை வேர்க்கடலை உரித்தது - 1 கப்,
தேங்காய்த் துருவல் - 1 கப்,
மிளகாய் - 4,
உப்பு - தேவைக்கேற்ப,
பெருங்காயப் பொடி - சிறிது,
எண்ணெய் - தேவைக்கேற்ப.

செய்முறை :
ஒரு பாத்திரத்தில் ஒரு தம்ளர் தண்ணீர் விட்டு, உப்புப் போட்டு வேர்க்கடலையை வேகவைக்கவும். வெந்தவுடன் வடிகட்டவும். பின் வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகையும், மிளகாயையும் தாளிக்கவும். பிறகு வெந்த கடலை, தேங்காய்த் துருவல், பெருங்காயப் பொடி போட்டு, சிறிது கிளறி பிறகு இறக்கவும். (மிளகாயைக் கிள்ளிப் போடுவதற்குப் பதில் ஒரு ஸ்பூன் தனியா, ஒரு ஸ்பூன் கடலைப் பருப்பு மிளகாய் இவ்வகளை எண்ணெயில் வறுத்து, பொடி செய்தும் போடலாம்.)

சோள சுண்டல்

தேவையான பொருட்கள் :
சிறிய சோளம் - 1 கப்,
தேங்காய்த் துருவல் - ½ கப்,
பெருங்காயப் பொடி - சிறிது,
எண்ணெய் - தேவைக்கேற்ப,
கருவேப்பிலை - 5 இதழ்கள்,
உப்பு - தேவைக்கேற்ப,
காரப் பொடி - 1 ஸ்பூன்.

செய்முறை :
சிறிய சோளத்தை நன்றாக தண்ணீர் தெளித்து, உரலில் போட்டு குத்தி, தோலை நீக்கி விடவும். குக்கரில் ஒரு கப் தண்ணீரை வைத்து, சோளத்துடன் உப்பையும் போட்டு வெயிட் போட்டு வேகவிடும். பிறகு வடிய விடவும். ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு கடுகைத் தாளித்து வெந்த சோளத்தைப் போடவும். பின் காரப் பொடி, பெருங்காயப் பொடி, தேங்காய்த் துருவல், கருவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு கிளறி இறக்க வேண்டும். (ஒரு ஸ்பூன் தனியா, ஒரு ஸ்பூன் கடலைப் பருப்பு, நான்கு மிளகாய் வத்தல் ஆகியவற்றை வறுத்துப் பொடித்தும் காரப் பொடிக்குப் பதிலாக சேர்க்கலாம்.)

தொகுப்பு : **மாலதி**



மாலைமதியின் மறுபக்கத்தில் மறைந்திருப்பதென்ன?

கண்டு பிடியுங்கள்
இந்த நவராத்திரி நாட்களில்.

நவராத்திரி.

நல்லவற்றை பகிர்ந்து, பிறர் நலனையும் போற்றச்
சொல்லும் நன்னாள். உற்றார், உறவினர் மற்றும்
நண்பரை கண்டு மகிழும் இந்த நாட்களில், உங்கள்
வெற்றியின் ரகசியத்தையும் அவர்களுடன் பகிர்ந்து
கொள்ளுங்கள். ஆம் ஸ்ரீராம் சிட்ஸ்தான்.

குடும்பத்தில் ஒரு திருமணத்தைத் திட்டமிட்டு,
உங்கள் குழந்தையின் மேற்படிப்புக்கு தொகை ஒதுக்கி,
திடீரென ஏற்பட்ட மருத்துவ செலவையும்
கலங்காது நீங்கள் எதிர்கொள்ள
ஸ்ரீராம் சிட்ஸ் செய்த உதவியை கூறிடுங்கள்.

இழப்பற்ற, அதிக லாபம் தரும்

மந்திர ஜாலம் நடப்பதைப் பாருங்கள் !

ஸ்ரீராம் சிட்ஸின் சந்தாதாரர் என்ற முறையில் நீங்கள்
அடையாள **நிலாமேஜிக்** கூப்பன் ஒன்றை
ஏற்கனவே பெற்றிருப்பீர்கள்.

உங்கள் நண்பரையோ, உறவினரையோ
சக அலுவலரையோ ஸ்ரீராம் சிட்ஸின்
புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தும் போது
அந்த அடையாள கூப்பனை எடுத்து வாருங்கள்.

அறிமுகப்படுத்தியபின் **நிலாமேஜிக்** கூப்பன் ஒன்றினை
எங்கள் கிளை மேலாளரிடமிருந்து பெற்றிடுங்கள்.
துளையிட்ட பாகத்தை கிழியுங்கள். அடேயப்பா!
உங்கள் நிலவின் மறுபக்கத்தில் இருப்பதென்ன?

பரவசமூட்டும் பரிசு ஒன்றல்லவோ? S.S. ஸ்வீட் ஸெட்
முதல் தங்க செயின் வரை பரிசொன்று
நிச்சயம் உங்களுக்கு உண்டு.

கிளம்புங்கள் இப்பொழுதே! நவராத்திரி பண்டிகையை
வெற்றிகரமாக கொண்டாடுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்ஸ்"
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன்: 852070C/8523932/8522651/8525536/8520797

SHRIRAM GROUP COMPANIES MADRAS

சந்தாதாரர் பரிசு

*சீட்டுத்தொகை	பரிசு
250 x 40 = 10,000	மூடியுடன் கூடிய S.S. கன்டெய்னர்
500 x 30 = 15,000	சிறிய S.S.C.B டோப்
625 x 40 = 25,000	செல்லோ டீப்பாய் வாட்டர்பாட்டில் 1000மிலி
500 x 60 = 30,000	கும்பகோணம் கீபான்ஸி கன்டெய்னர்
1000 x 50 = 50,000	S.S.C.B டிபாய்
2500 x 30 = 75,000	பெரிய S.S.C.B டோப்
2500 x 40 = 1,00,000	காளி C.B காண்டன் வோக்
5000 x 30 = 1,50,000	பட்டர்ஃப்ளை நான்-ஸ்டிக் ஸாஸ்பேன்
5000 x 40 = 2,00,000	ஹாக்கின்ஸ் ப்ரஷர் பேன்
10000 x 30 = 3,00,000	காளி C.B 5 லிட்டர் குக்கர்
20000 x 25 = 5,00,000	4 கிராம் தங்க காசு

* நுழைவுக்கட்டணம் தனி. * முன் அங்கீகாரம் பெறப்பட்டது.

* நிலா மேஜிக் பரிசுகள்
இப்போதைய
சந்தாதாரருக்கு மட்டுமே.

நவராத்திரி மேளா
நி லா ம ஜி க்
12–21
அக்டோபர்
'96

தற்காலத்திய முதலீடு.

சிறுநீரகக் கற்கள்

டாக்டர். ஆர். ஞானசம்பந்தம்


'சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி கரைக்கவும் முடியும். மீண்டும் வராமல் தடுக்கவும் முடியும் ஹோமியோபதி முறையில்' என்கிறார் டாக்டர். ஆர். ஞானசம்பந்தம்.

"நான் எல்லோரையும் போலத்தானே சாப்பிட்டேன்? எனக்கு மட்டும் சிறுநீரகத்தில் கல் எப்படி வந்தது?"

இரண்டு முறை ஆபரேஷன் செய்து கல்லை எடுத்தாயிற்று. இப்போது மீண்டும் சிறுநீரகத்தில் கல்லாம். ஏன் இப்படி மீண்டும் மீண்டும் தோன்றுகிறது? இப்படி பெரும் பிரச்சனையாக இருப்பது சிறுநீரகக் கற்கள். கற்கள் மீண்டும் மீண்டும் தோன்றக் காரணம், தாது உப்புக்களை உட்கிரகிக்கும் தன்மை குறைவதுதான். இது ரியாக்ஷனை சிட்ரேட் உப்பு தடுக்கும். இதன் குறைபாட்டினால் கூட ஏற்படலாம்.

சிறுநீரகப் பாதையில் சிறுநீர் நீண்ட நேரம் தங்கி இருந்தால் கூட கற்கள் ஏற்படலாம். நீரில் படிகம் படிவது போலத்தான். சிறுநீர் கழிக்கும் உணர்வு தோன்றியதும் கழிப்பது நல்லது. புராஸ்டேட் சுரப்பி வீக்கம், சிறுநீர்க் குழாய் அடைப்பு போன்றவை சிறுநீர் தேங்க மற்ற காரணங்கள்.

சிறுநீரகப் பாதையில் உள்ள புண்கள் கற்களுக்கு அடிகோலும் புண்களின் சுவடுகள் மீது தாது உப்புக்கள் படிந்து கற்களை சிறிது சிறிதாக உண்டாக்கி விடும். சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், சீழ்வடிதல் போன்றவை இருந்தால் சிகிச்சையை தாமதிக்கக் கூடாது.



ஒருவருக்கொருவர் மாறுபடும். இதுதான் பெரும்பான்மையானவர்களுக்குக் கற்கள் ஏற்படக் காரணம். நாம் சாப்பிடும் உணவில் உள்ள தாது உப்புக்கள் ஜீரணிக்கப்பட்டு, இரத்தத்தை அடைகிறது. கல்லீரலில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு தாது உப்புகள் அந்தந்த உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இந்த மெட்டபாலிசம் நம் உடலில் உள்ள ஹார்மோன்கள் தன்மையைப் பொருத்தது. உணவில் தாது உப்புக்கள் இருந்தாலும் சிலருக்கு மிக எளிமையாக உடல் ஏற்றுக் கொண்டு சிறுநீரில் வெளியேறி விடுகிறது. அதிகபடியான தாது உப்புகள் சிறுநீரில் வெளியேறும் போது ஒன்றுக்கொன்று "கெமிகல் ரியாக்ஷனை" ஏற்படுத்தி சிறு சிறு கற்களை உருவாக்கி விடுகிறது. கெமிகல்

கற்களின் பிறப்பிடம் சிறுநீரகங்கள்தான். இரண்டிலும் தோன்றலாம். பெரும்பாலும் 4.மி.மி. முதல் 2.5. செ.மீ. வரை கூட இருக்கும். சிலருக்குப் புனல் போன்ற அடைப்பு முழுவதையும் அடைந்து பெரிய கல்லாக இருக்கும். கற்கள் சிறியதாக இருக்கும்போது எந்தத் தொந்தரவும் தெரியாது. பெரியதானதும் முதுகுப் பக்கத்தில் விலா எலும்புகள் முடியும் இடத்தில் "நறுக் நறுக்" என வலி தோன்ற ஆரம்பிக்கும். மாடிப்படிகளில் ஏறும்போது அல்லது வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது உணரலாம். பெரும்பாலும் இது சாதாரண வலி, செரிமான கோளாறு என அலட்சியப்படுத்தி விடுவார்கள். வலி ஏற்பட்டபின் சிறுநீர் கழிக்கும் போது இரத்தம் கலந்து மஞ்சள் நிறத்தில் வெளியேறினால் கற்கள் நிச்சயம் இருக்கும்.

கற்கள் சிறுநீரகத்திலிருந்து சிறுநீர்க்


குழாயை அடைக்கும்போது வலி மிகவும் கொடூரமானதாக இருக்கும். பக்கவாட்டில் தோன்றும் வலி, மர்ம உறுப்புகள் உள்ளங் கால்கள் வரை கூட ஊடுருவிச் செல்லும். வலி தாங்க முடியாமல் புரண்டு படுக்கும் போது கல் பாதையை விட்டு அகன்றதும் நிம்மதி பெருமூச்சு விடுவார். பெரும் பான்மையான நோயாளிகள் வலி மீண்டும் மீண்டும் தோன்றிய பின்னர்தான் எக்ஸ்ரே, ஸ்கேன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

கற்கள் 1 செ.மீ. குறைவாக இருந்தால் சிறிது சிறிதாக சிறுநீர்க் குழாய் வழியாக நகர்ந்து மூத்திரப் பையை அடையும். சிலருக்கு 1.5 செ.மீ அளவு கூட அடைத்துக் கொள்வது உண்டு. இந்த அடைப்பு சிறுநீரை சிறுநீரகத்தில் தேங்கி வீக்கத்தை உண்டு பண்ணும். சிறுநீரகப் பழுதால் இரத்த அழுத் தம் அதிகமாவதும் உண்டு.

மூத்திரப் பையில் கல் சிறியதாக இருந் தால் எளிதாக சிறுநீர்ப் பாதை வழியாக வெளியேறும். சிறுநீர் அடைத்துக் கொண்டு வராமல் சிரமப்பட்டு வெளியேற்றி விடு வார்கள். பெண்களுக்கு எளிதாக வந்துவிடும். மூத்திர பையில் உள்ள கல் மிகப் பெரிய அளவில் விரைவாக மாறிவிடும். அடி வயிற்றில் கனமான உணர்வு இருக்கும். அடிக் கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போலத் தோன்றும். சிறுநீர் கழித்தவுடன் கல்லை மூத்திரப்பை அழுத்திப் பிடிப்பதால் உட்சுவர்கள் புண்ணாகி வலி, எரிச்சலைக் கொடுக்கும். பஸ்களில் பிரயாணம் செய்யும் போது குலுக்கலினால் வலியால் துடித்துப் போவார்கள்.

கற்களில் பல வகையுண்டு. இதில் கால்சியம் ஆக்ஸலேட், கால்சியம் பாஸ்பேட் கற்கள்தான் அதிகம். மற்றும் யூரேட், சிஸ்டைன் கற்களும் உண்டு. சிலருக்கு மணிக்கட்டு கணுக்கால்களில் மட்டும்

• சிறுநீரகக் கற்கள்



சரஸ் என்கிற வார்த்தைக்கு நீர், நீரைச் சேர்ந்த என்ற பொருள். ரிக் வேதத்திலுள்ள சரஸ்வந்தம் (1.164.52) என்பதற்கு ஜோதி, நெருப்பு, விளக்கு, பிரகா சிக்கும் பெண் தெய்வம் என்பதாக பொருள் வந் துள்ளது. மேலும் பெண் தெய்வங்களின் வரிசையில் முதலாவதாகவும், மிகவும் உயர்ந்த தெய்வமாக வும் சரஸ்வதி (நதி) கூறப்பட்டுள்ளது. தேவி சரஸ்வதியை எட்டு உருவங்களாக - லக்ஷ்மி, மேதா, தாரா, புஷ்டி, கௌரி, துஷ்டி, பிரபா, த்ருதி என்று சித்திரிக்கப்பட்டுள்ளது. வீர பஞ்சமி தினத்தில் லக்ஷ்மி எழுத்தாணியாக இருக்கிறாள் என்கிறார் ஹலாயுதா தனது. பிரதிபா நூலில் (1100 **A.D**)

— *கீதா*

மூட்டுவலி இருக்கும். இரத்தத்தில் யூரிக் ஏசிட் அதிகமாகி கௌட் எனப்படும் தொந்தரவைக் கொடுக்கும். இந்நோய் உடையவருக்கு யூரேட் கற்கள் தோன்றும்.

சிறுநீரகக் கற்களை குறிகளை மட்டும் வைத்துக் கணிக்க முடியாது. எக்ஸ்ரே, ஸ்கேன் இவைகளின் மூலம் மட்டுமே உறுதி யாகக் கூறமுடியும். சிறுநீரையும் பரிசோ தனை செய்து தாது உப்புக்களை கணிக்க லாம். இரத்தக்கசிவை சிவப்பணுக்களின் அளவைக் கொண்டு அறியலாம்.

உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள உணவை தவிர்க்க வேண்டும். பால், முட்டை, மீன், மாமிச வகைகளை தவிர்க்க வேண்டும். ஆக்ஸலேட் உள்ளவர்கள் தக்காளி, பீன்ஸ், முட்டைக்கோஸ், கீரை வகைகளை தவிர்க்கலாம். அவரை, பீன்ஸ், பட்டாணி, சுண்டல், முருங்கை போன்றவைகளை யூரிக் ஏசிட் கற்கள் உள்ளவர்கள் தவிர்க்கலாம். மது கல்லீரலை பாதித்து உட்கிரகிக்கும் தன்மையை சீர்கேடாக்கும். தண்ணீர் நாள் தோறும் 3.5 லிட்டர் குடிக்கலாம். வாழைத் தண்டுச்சாறு, முள்ளங்கி, கொள்ளுரசம் போன்றவை அதிகமான சிறுநீரை வெளி யேற்றும் தன்மை வாய்ந்தவை. இவைகளைச் சேர்க்கலாம்.

சிறுநீரகக் கற்களுக்கு சிகிச்சை என்றால் ஆங்கில மருத்துவத்தால் அறுவை சிகிச்சை, நவீன லேசர் சிகிச்சையால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. ஆங்கில மருத்துவத்தால் கற்களை அகற்ற முடியுமே தவிர மீண்டும் உருவா வதை நிச்சயமாக தடுக்க முடியாது. அவசர கால சிகிச்சையாக மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் ஹோமியோபதி மருத்துவத்தால் சிறுநீரகக் கற்களை கரைக்கவும் முடியும். கற்கள் மீண்டும் தோன்றுவதைத் தடுக்கவும் முடியும். சிகிச்சைக்குப் பின் உணவுக் கட்டுப்பாடு கூட தேவை இல்லை.



* உணவில் தவிர்க்க வேண்டிய காய்கறிகள்

ஆங்கில மருத்துவத்தில் சிகிச்சை அளிப்பது போல் நோய்களின் பெயரில் மருந்துகள் இல்லை. நோயாளியின் மனநலம், உடல் நலம், நோயின் அறிகுறிகள் என்று பகுத்தறிந்து மருந்துகள் தேர்வு செய்யப்பட வேண்டும். மருந்துகள் நோயாளிக்கு நோயாளி மாறுபடும்.

பொதுவாக நோயாளிகளின் முழுக்குறிகளை வைத்து "கான்ஸ்டிடூஷனல் ரெமிடி." (Constitional Remedy) செலக்ட் செய்யப்பட வேண்டும்.

சிறு உபாதைகளை நீக்க கலவை மருந்துகள் குறைந்த வீரியமுள்ளவைகளை உபயோகிக்க வேண்டும். ஆனால் அது மற்ற மருந்தின் செயல்திறனை கூட்ட வேண்டும். செயலை முறிக்கக் கூடாது.

ஹோமியோபதி என்றாலே "ஸ்லோ ஆக்ஷன்" (Slow Action) என்ற நிலை தற்போது நவீன யுக்திகளால் மாறிவருகிறது என்று கூறலாம். கற்களை விரைவாகக் கரைக்க ஏராளமான தாய்திரவங்கள் (Mother Tinctures) உள்ளன.

ஒரு ஹோமியோபதி டாக்டருக்கு டெஸ்ட், ஸ்கேன் தேவையில்லை என்று நினைப்பது தவறு. இவைகளின் அடிப்படையில்தான் முன்னேற்றத்தை அறிய முடியும்.

உதாரணமாக ஒரு நோயாளி சிறுநீரகக் கல் அடைத்து கிட்னி "ஹைட்ரோ நெப்ரோஸிஸ்" என்ற நிலைக்குப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம். சிறுநீரக செயலின்மை "Renal Failure" ஏற்பட வாய்ப்புண்டு. அப்போது இரத்தக் கொதிப்பு ஏற்படலாம். சிறுநீரகம் கெட்டுப் போய் விட்டதா என்பதை அறிய இரத்தத்தில் உள்ள தாது உப்புக்களை கொண்டு அறியலாம் அல்லது சிறுநீரக பரிசோதனை மூலம் அறியலாம்.

பலருக்கு அறுவை சிகிச்சை செய்தபின் கற்கள் வராது என்ற எண்ணம் இருக்கிறது. கற்கள் உபாதைகளிலிருந்து விடுபடத்தான் நீக்கப்படுகிறது என்பதை உணர வேண்டும். உடல்ரீதியான காரணம் நீக்கப்படவில்லை. அந்தக் காரணத்தை உட்கிரகிப்புத் தன்மையைச் சீர்படுத்தி கற்கள் மீண்டும் வராமல் செய்ய ஹோமியோபதி மருந்துகளால் முடியும்.

கற்கள் பெரிதாக இருந்து சிறுநீரகம் மற்றும் உயிருக்கு ஆபத்தான நிலை என்ற போது மட்டும் அறுவை சிகிச்சை போதும் என்று கருதுகிறேன். கற்களை எளிதாக ஹோமியோபதி மருத்துவ முறையிலேயே இதை கரைத்து விடமுடியும். (டாக்டர். ஆர். ஞானசம்பந்தம் ஈரோடு அரசு மருத்துவமனை எதிரில் மருத்துவமனை நடத்தி வருகிறார். (போன் : 219344) வாரந்தோறும் சென்னை லாயிட்ஸ் ரோடு இராயப்பேட்டை சிவா மருத்துவமனைக்கு வெள்ளி சனி தோறும் வந்து சிகிச்சை அளிக்கிறார். (போன் : 8260451))

பெண்ணே இல்லத்தை நிறைவு செய்பவள். அம்மா, அக்கா, தங்கை, மகள், குழந்தை, மாமி, பாட்டி, அத்தை என அத்தனை ரூபத்திலும் இப்பெண்ணை, பட்டிலும், பாலியேஸ்டர், பருத்தி நூலிலும் ஆடையிட்டு அலங்கரித்து சிறக்கச் செய்து இல்லத்தை முழுமையாக்க எல்லா துணிவகைகளில், அனைவருக்கும் அனைத்தையும், அனைத்துக் காலங்களுக்கும் அளிக்க,



கோவையில் மகத்தான ஜவுளி சாம்ராஜ்யம்

குமரன் சில்க்ஸ்

558-560, ஒப்பணக்கார வீதி
கோயமுத்தூர் - 641 001

போன் : 391555 ஃபேக்ஸ் : 390333

அனைவருக்கும் எங்களது நவராத்திரி மற்றும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

மங்கையர் விரும்பும் மலர் தருவது ''கார்டன்''

கார்டன் துணிகளை அள்ளித் தருவது ''ஜிப்ஸி''



Garden* VARELI

449333
442333
448111



GYPSY*

GYPSY Corner, D.B. Road, R.S. Puram, Coimbatore - 641 002.

SAI TEXTILES

ஹோமியோபதி டாக்டரால் உருவாக்கப்பட்டது



மாருதி

ஹோமியோபதி பற்பசை


உங்களின் எல்லாவித பல்தொல்லைகளும் இன்றோடு தீர்ந்தன.

S.K.N. HOMOEO LAB

15, I Main Road, R.A. Puram

Madras - 600 028 Ph :4936233

இப்போது எல்லா இடங்களிலும் கிடைக்கும்







மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம்.

அரசுத் தேர்வுகளில் பங்கு பெற்று, வேலைக்காக எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்குப் பணியில் சேர அரசாணை வரலாம். கலைஞர்களுக்கும், அவர்கள் எத்துறையை சேர்ந்தவர்களானாலும் பரிசும், பாராட்டும், புது ஒப்பந்தமும் கூட கிடைக்கும். எதிர்பாராத தன லாபத்திற்குக் கூட வாய்ப்பு உள்ளது. ஆனால், மாதத்தின் பிற்பகுதியில் அரசியல்வாதிகளுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் சோதனைகள் பல அடுக்கடுக்காக வர வாய்ப்பிருக்கிறது. எனவே வருமுன் காப்போனாக இருப்பது நல்லது. எனினும் மற்றவர்களுக்குத் தாய்மாமன் வகையில் தாய் வீட்டுச் சீதனமும் கிடைக்கும். அது வீடோ, நிலமோ, நகையாகக் கூட இருக்கலாம். சுக்கிரன் பெரும்பாலான நாட்களில் தாம்பத்ய வாழ்வில் மனமகிழ்ச்சியைத் தர இருக்கிறார். புத்திரோற்பத்திக்குக் குரு ஆசிவழங்குகிறார். சுப நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். கேதுவும், செவ்வாயும் கெடுக்க நினைத்தாலும அதைத் தடுக்கும் ஆற்றல் ராகுவுக்கும் குருவின் பார்வைக்கும் உண்டே! விநாயகருக்கு வாரம் பூராவும் அதிகாலையில் படத்தை வைத்து விளக்கேற்றுங்கள்.






ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 ஆம் பாத...

பெற்று, வேலைக்காக எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்குப் பணியில் சேர அரசாணை வரலாம். கலைஞர்களுக்கும், அவர்கள் எத்துறையை சேர்ந்தவர்களானாலும் பரிசும், பாராட்டும், புது ஒப்பந்தமும் கூட கிடைக்கும். எதிர்பாராத தன லாபத்திற்குக் கூட வாய்ப்பு உள்ளது. ஆனால், மாதத்தின் பிற்பகுதியில் அரசியல்வாதிகளுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் சோதனைகள் பல அடுக்கடுக்காக வர வாய்ப்பிருக்கிறது. எனவே வருமுன் காப்போனாக இருப்பது நல்லது. எனினும் மற்றவர்களுக்குத் தாய்மாமன் வகையில் தாய் வீட்டுச் சீதனமும் கிடைக்கும். அது வீடோ, நிலமோ, நகையாகக் கூட இருக்கலாம். சுக்கிரன் பெரும்பாலான நாட்களில் தாம்பத்ய வாழ்வில் மனமகிழ்ச்சியைத் தர இருக்கிறார். புத்திரோற்பத்திக்குக் குரு ஆசிவழங்குகிறார். சுப நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். கேதுவும், செவ்வாயும் கெடுக்க நினைத்தாலும அதைத் தடுக்கும் ஆற்றல் ராகுவுக்கும் குருவின் பார்வைக்கும் உண்டே! விநாயகருக்கு வாரம் பூராவும் அதிகாலையில் படத்தை வைத்து விளக்கேற்றுங்கள்.



ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2, ஆம் பாதங்கள்

யோககாரகனாகிய சனி கும்பத்திற்கு வருவது சற்று நிம்மதியைத் தரும். மாதத்தின் பின்பகுதியில் சூரியனால் சில இனங்களில் வெற்றி உண்டு. அதுபோலவே பின்பகுதியில் செவ்வாய் நீச்சம் பெற்றாலும் கெடுதல் செய்யமாட்டார். ராசிநாதன் நல்லநிலையில் சஞ்சரிப்பதால் தாம்பத்திய உறவு, குடும்பத்தில் அமைதி, சுபநிகழ்ச்சி இவைகளுக்குக் குறையிருக்காது. புதன் நீச்சம் பெறுவதால் தொழிலிலும், வியாபாரத்திலும், எதிர்பார்த்த லாபம் வரவில்லை எனினும் நஷ்டம் வராது. சற்று அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம்தான். இன்னும் இரண்டொரு மாதத்திற்கு விநாயகரை விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள். விரும்பியதைப் பெறுவதில் தடை ஏற்படாது. கடந்த காலத்தில் உங்களிடம் விரோதம் பாராட்டிய ஒருவர் தற்போது தங்களை நம்பி வருவார். விரோதம் மறைந்தாலே மனத்தில் அமைதி வந்துவிடும்.

வினர்களில் எவரேனும் வறுமையில் வாடுப வராக இருந்தால், உங்களுக்கு நிதிவசதி இடம் தருமானால் தீபாவளித் திருநாளில் அவரைக் குசேலனாகப் பாவித்து, அந்த தம்பதிகளுக்கு வஸ்திராதிகள் கொடுத்து ஆசி பெறுங்கள். அவர்கள் வாழ்த்தினாலே அது, குசேலனின் சார்பாகச் சாட்சாத் கண்ணனே ஆசி கூறிய தற்கு ஒப்பாகும். அஷ்டமத்துக் குரு என்பதால் தான் இந்தப் பரிகாரம்.


மிதுன ராசி :



மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.


மாதத்தின் முற்பகுதியில் செவ்வாய் நீச்சம் அடைந்தாலும் பிற்பகுதியில் இடம் ஒன்று வாங்கும் வாய்ப்பினைத் தருகிறார். இராசிக்குள்ள குருவின் பார்வை, சுக்கிரன் சிம்மத்தில் இருக்கும் முதல் நான்கு வாரங்களில் அவரது ஆசிகள் இவை உங்களுக்கு மனத்தெம்பைத் தரும். அன்றாடப் பணிகளில் சற்று கவனம் தேவை. பாவக்கிரகங்கள் எவரும் உதவும் நிலையில் இல்லை. எனவே, உயர்பதவியில் உள்ளவர்கள் தங்களுக்கு மேலதிகாரியாக் உள்ளவர்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். அரசியல் வாதிகளானால் சற்று சோதனைகளுக்கு ஆளாவீர்கள். பணியில் இருக்கும் சகோதரிகள் சற்றும் பதட்டமடையாமல் உங்கள் பணிகளைச் செய்ய வேண்டிய சூழ்நிலை. தாய் தந்தையர்கள் உடல்நிலையை நன்கு கவனிக்க வேண்டும். குறிப்பாக தர்னில் உள்ள கேது அத்தகைய நிலையை உருவாக்குகிறார். இராசி நாதனாகிய புதன் உச்சம் பெற்றதால் நீச்சம் பெறும் சுக்கிரன் தாம்பத்திய உறவில் சிக்கலை ஏற்படுத்த மாட்டார். குடும்பத்தில் ஏற்படுகின்ற சுபநிகழ்ச்சியில் மற்றும் பண்டிகை சமயத்தில் சற்றுப் பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். 10-ல் உள்ள கேது அத்தகைய சந்தர்ப்பக் கோளாறுகளுக்குக் காரணமாகிறார். உங்கள் குலதெய்வம் பெருமாள் எனில் அவருடைய க்ஷேத்திரத்திற்குச் சென்று வாருங்களேன். சங்கடஹரசதுர்த்தி அன்று, சகல சங்கடங்களையும் நீக்கும் சக்தி படைத்தவராகிய விநாயகரைத் தரிசனம் செய்யுங்கள்.

கடக ராசி :



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

சுக்கிரனும், ராகுவும் சுகத்திற்கும் சுபநிகழ்ச்சிக்கும் உதவுகின்றநிலை. மற்றபடி மாதத்தின் முதற்பகுதியில் சூரியனால் புதியதொரு பதவியும், அதனால் மதிப்பும், தலைமைப் பதவியும் கிடைக்கலாம். உடல் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். மற்ற கிரகங்களில் புதன் உச்சம் பெற்றாலும் அதிகமாக ஏதும் கிடைத்திடாது. மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் ஏற்படலாம். திருடர் பயம், ராஜாங்ககோபம், நெருப்பினால் சிறு காயங்கள் ஆகியவை இந்த மாதத்தில் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. எனினும் விரயஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் விபரீதமாக ஒன்றும் ஏற்பட்டுவிடாது. நீதிப் பொறுப்பிலும் நீதித்துறையில் உள்ளவர்களும் கவனமுடன் பரிசீலித்துச் செயல்பட வேண்டிய காலகட்டம். அலுவலகப் பெண்டிர், வியாபாரிகள் அனைவருமே கறுகறுப்புடன் இயங்க வேண்டிய நிலை. வியாபாரிகள் குறிப்பாகத் துணி, மற்றும் நகை, மற்றும் நவீனப் பொருட்களை விற்பவர்கள் சரக்குகளை வந்துவிலைக்கு ஆதாயம் என விற்றுவிடுவது நல்லது. சேர்ந்து வைப்பதால் வரும் மாதங்களில் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாவீர்கள். டிசம்பருக்குப் பின் சோதனைகள் குறையும். தியாகமனப்பான்மையுடன் உழைப்பவர்களுக்கு டிசம்பருக்குப் பின் நல்லதொரு யோகம் வரும்.



டூத் பிரஷ்ஷில் அதன் மயிர்க்கால்களை அப்படியே முழுதும் வெட்டிவிட்டு (பிளேடினால்) அதன் குச்சி கலருக்கு rectangular shape ல் சின்ன துணியினால் இரண்டு சுற்று சுற்று கொடி மாதிரி அமைத்து குண்டூசி போட்டு விடலாம். அல்லது அதே கலர், கலர் பேப்பரால் ஒட்டி கொடி அமைக்கலாம். இந்த மாதிரி செய்தவற்றை நவராத்திரி சமயத்தில் (கொலு) பார்க் வைப்பவர்கள் அதில் அழகாக அலங்கரித்தால் நன்றாக இருக்கும். சின்ன குழந்தைகள் இருக்கும் வீட்டில் சின்ன டூத் பிரஷ் இருக்கும். அப்படியிருந்தால் பெரியதிலிருந்து சிறியது வரை வைத்தால் கலர் கலராக அழகாக இருக்கும்.

— ஆண்டாள் சுந்தர்

சாதாரண நான்-ஸ்டிக் பாத்திரத்தை வாங்கிப் பார்த்தீர்கள்:


கண்டதும் பிரெஸ்டீஜ் பிரீமியம் நான் - ஸ்டிக் குக்வேரின் நல்ல தோற்றம் இதற்கும் இருந்தது. ஆயுளுக்கும் உழைக்கும் தரம் இருப்பது போல தோன்றியது.

பிரெஸ்டீஜ் பிரீமியம் நான் - ஸ்டிக் குக்வேரை விட விலையும் குறைவாக இருந்தது.

முதன் முதலில் 'நான் - ஸ்டிக்' வாங்குகிறோமே, இந்த சாதாரணமானது போதாதா என்று நினைத்தீர்கள், சரிதான் - ஆனால், சிறிது நாட்களிலேயே இதன் உண்மை சொரூபம் வெளி வந்தது. விலை குறைவானது என்றும் லாபகரமானதல்ல, நீங்கள் செலவழித்தது வீண் என்ற உண்மையும் புரிய வந்தது.

உங்கள் பர்ஸில் (நம்பிக்கையிலும்) ஓட்டை விழுந்தது!

பிரெஸ்டீஜ் பிரீமியம் உங்கள் சமையலறையில் நீண்ட நாள் உழைக்க டிசைன் செய்யப்பட்டது.



2 வருட உத்திரவாதத்துடன் வரும் இந்தியாவின் ஒரே நான் - ஸ்டிக்.

இதன் உலகத் தரமுள்ள டெஃப்லான் நான்-ஸ்டிக் பூச்சு பல தலைமுறை சமையலுக்கு - சப்பாத்திகள், காய்கறிகள், எதுவாயினும் - நீடித்திடும். வெளிப்புறப் பூச்சான சிவப்பு இபோக்ஸி நீண்ட நாள் நின்றிடும். அடுப்பில் வைத்த சில மாதங்களுக்குள்ளேயே இதன் உறுதியான அலுமினியம் வளைந்து நெளியாது. ஸாட்டே பேன், மற்றும் ஸாஸ் பேன்களின் அடியில் உள்ள ஆர்க்கிமிடிஸ் ஸ்பைரலும், தவாக்களின் அடியில் உள்ள தெர்மோரேயும் உணவு கரியாமல் பார்த்துக் கொள்ளும். உயர்தரமுள்ள கைப்பிடிகளோ சுடவே சுடாது.

நான் - ஸ்டிக் புதிதாக வாங்கிப் பார்ப்பதாக இருந்தாலும், பிரெஸ்டீஜ் பிரீமியத்தையே வாங்குங்கள். இதில் செலவழிக்கப்போவதைப் பற்றி வருத்தமே வேண்டாம். ஏனெனில் நல்லதொரு பொருளில் இடும் முதலீடு இது.

Prestige
PREMIUM
NON-STICK COOKWARE

வாழ்வில் என்றும் நீடிக்கும் சந்தோஷங்களில் ஒன்று.

A PRODUCT

தவாக்கள் • ஃப்ரை பேன்கள் • சாஸ் பேன்கள் • ஸாட்டே பேன்கள் • வாணலிகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஈஸ்வரியின் 60 நாட்கள் டெபாசிட் சேகரிப்பு விழா மேலும் நவம்பர் 4 வரை நீட்டிக்கப்படுகிறது

நாங்கள் எங்களது மற்றும் உங்களின் எதிர்காலத்தை நிர்ணயித்து கொண்டுள்ளோம் !

ஈஸ்வரியின் டெபாசிட் சேகரிப்பு விழா

ஜூலை 15 முதல் நவம்பர் 4 வரை

ஃபிக்ஸட் டெபாசிட்

தொகை	காலம்	வட்டி	ஊக்கத்தொகை
ரூ.10,000	12 மாதங்கள்	24%	1 கிராம் தங்க நாணயம்

பின் தேதியிட்ட காசோலையாக வட்டி முன்னரே வழங்கப்படும்.

[illegible] டெபாசிட்

தொகை	காலம்	முதிர்வுத் தொகை	ஊக்கத் தொகை
ரூ.10,000	13 மாதங்கள்	ரூ.14,000	1 கிராம் தங்க நாணயம்
ரூ.15,000	25 மாதங்கள்	ரூ.28,000	1.5 கிராம் தங்க நாணயம்

ஈஸ்வரி பத்திரம்

தொகை	காலம்	முதிர்வுத் தொகை	ஊக்கத் தொகை
ரூ.25,000	37 மாதங்கள்	ரூ.50,000	4 கிராம் தங்க நாணயம்

திருமண பத்திரம்

தொகை	காலம்	முதிர்வுத் தொகை	ஊக்கத் தொகை
ரூ.50,000	60 மாதங்கள்	ரூ.1,50,000	8 கிராம் தங்க நாணயம்

வாழ்நாள் முழுவதும் வருவாய் பத்திரம்

டெபாசிட் தொகை	[illegible] ஊ. தொகை	முதிர்வுக் காலம்	முதிர்வுத் தொகை	37 மாதம் முதல் வாழ்நாள் முழுவதும்
ரூ. 25,000	1%	37 மாதங்கள்	ரூ. 47,500	ரூ. 1,000
ரூ. 15,000	1%	37 மாதங்கள்	ரூ. 28,500	ரூ. 750

பெண்களின் பெருமைமிகு திட்டம்

தொகை	காலம்	மாத வட்டி	ஊ. தொகை		முதிர்வுத் தொகை	
			முதல் வருடம்	2 & 3 வருடம்	அசல் + 25%	அசல் + 50%
10,000	36 மாதங்கள்	ரூ.200	2%	1%	ரூ.12,500	ரூ.15,000
25,000	36 மாதங்கள்	ரூ.500	2.5%	1%	ரூ.31,250	ரூ.37,500
50,000	36 மாதங்கள்	ரூ.1,000	3%	1%	ரூ.62,500	ரூ.75,000

ஆண்டுக்கு 24% வட்டி கணக்கிடப்பட்டுள்ளது. டெபாசிட் தாரர், டெபாசிட் காலம் முடியும் முன் காலமானால், அசலுடன் சேர்த்து 50% ஊக்கத் தொகையாக, டெபாசிட்தாரரின் வாரிசுதாரருக்கு டெபாசிட் காலம் முடிந்தவுடன் வழங்கப்படும்.

நிறைய வளரும் பத்திரம்

டெபாசிட் தொகை	திட்டம் 'அ' ரூ. 25,000	திட்டம் 'ஆ' ரூ. 15,000
ஊக்கத் தொகை முதிர்வு காலம்	2 கிராம் தங்க நாணயம் 37 மாதங்கள்	1 கிராம் தங்க நாணயம் 37 மாதங்கள்
முதிர்வுத் தொகை	ரூ. 45,000	ரூ. 24,500
4 வது ஆண்டு முதல்	ரூ. 1,000 ஆண்டுக்கு	ரூ. 1,000 ஆண்டுக்கு
9 வது ஆண்டு வரை 10 வது ஆண்டு முதல்	ரூ. 2,000 ஆண்டுக்கு	ரூ. 2,000 ஆண்டுக்கு
15 வது ஆண்டு வரை 16 வது ஆண்டு முதல்	ரூ. 4,000 ஆண்டுக்கு	ரூ. 4,000 ஆண்டுக்கு
20 வது ஆண்டு வரை 21 வது ஆண்டு முதல்	ரூ. 8,000 ஆண்டுக்கு	ரூ. 8,000 ஆண்டுக்கு
25 வது ஆண்டு வரை 26 வது ஆண்டு முதல்	ரூ. 16,000 ஆண்டுக்கு	ரூ. 16,000 ஆண்டுக்கு
30 வது ஆண்டு வரை 31 வது ஆண்டில்	ரூ. 32,000 ஆண்டுக்கு	ரூ.32,000 ஆண்டுக்கு
32 வது ஆண்டும் 33 வது ஆண்டும் கிடைக்கும் மொத்த தொகை	ரூ. 60,000	ரூ. 45,000

ESWARI
GROUP OF COMPANIES

ஈஸ்வரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

உங்கள் வளர்ச்சி ஈஸ்வரியுடன் வளரட்டும்

ரிசர்வ் வங்கிச் சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45'S கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்கு உட்பட்டு டெபாசிட்டுகளை பெறுகிறோம்.


கார்ப்பரேட் அலுவலகம் : 4, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
போன் : 455349, 459557, 457583. ஃபேக்ஸ்: 044 - 456186.

நிர்வாக அலுவலகம் : எண். 142, ஆர். எச். ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. போன் : 8556898, 8556899
கிளை அலுவலகங்கள் (தொ.பே.) : அடையார் 4916991, 4916992, அண்ணா நகர் : 6283921, 6283922, குரோம்பேட்டை : 405845, தி.நகர் : 8259661, திருவல்லிக்கேணி 841187, பாரிமுனை 5350767, புரசைவாக்கம் : 5324937/5324940, சாலிகிராமம் : 428650, தஞ்சாவூர் 2345891, கோயம்புத்தூர் 432751, 432752, வேலூர் : 27336, 27337, சேலம் : 445475, 445485, பாண்டிச்சேரி : 31830, 43489, மதுரை 540045, திண்டுக்கல் : 22206.


ஞாயிறு அன்றும் அலுவலகம் இயங்கும்.

கொட்டாங்குச்சிகளை கரகரப்பான இடத்தில் தேய்த்து வழுவழுப்பாக்கி அதன் மேல் டெய்லரிடம் வேண்டாத பூத்துணிகளை வாங்கி கொட்டாங்குச்சி மேல் ஒட்டி கொட்டாங்குச்சிகளை ஒன்றன் மேல் ஒன்றாகக் கம்பி மூலம் அடுக்கி (கொட்டாங்குச்சியில் துவாரம் இருக்கும்) அதன் மேல் வேண்டாத பொம்மையின் முகத்தை கம்பியில் செருகி வைத்தால் புதுவித பொம்மை தயார்.

— ஆர். பானு



சிம்ம ராசி :



மகம், பூரம், உத்திரம் ஆம் பாதம்.

மற்றவர்கள் மிகவும் நெருங்கி இருக்கவோ, அல்லது உங்களைவிட்டு ஒதுங்கி ஓடவோ, முடியாத நிலையில் உங்கள் தொடர்பு இருக்கும். ஏனெனில் உங்கள் ராசி எல்லைக்குள் சூரியன் ஒருவனே ஆட்சிக்குரியவர். மற்ற எந்தக் கிரகமும் உச்சமோ, நீச்சமோ பெற முடியாது. எனவேதான் உங்கள் ராசிக்கு ஒரு தனிமவுசு உண்டு. அடங்கி இருக்கும் போது ஊர்க்குருவியாகவும், ஆர்ப்பரித்து எழும் போது வானத்துப் பருந்தாகப் பறக்கும், தன்மை கொண்டுள்ள உங்களுக்கு இந்த ஆண்டில் குருபார்வை இருந்தும் அஷ்டமத்துச் சனியினால் உடலால் உள்ளத்தால், உள்ள நட்பால் பெரிதும் பாதிக்கப்பட்டீர்கள். வரும் குருபெயர்ச்சிக்கு முன் களஸ்திரத்தானத்திலும் தொழில் அமைப்பாலும் வக்கிரம் பெற்றுள்ள சனி எதிர்பாராத தோல்வி, மனச்சஞ்சலம், விரயம், அமைதியின்மை, உடல்நிலைக் கோளாறுகளைத் தந்தார். ஆனால் தற்போது தன்னால் அவதிக்குள்ளானவர்களைத் தான் ஆட்சிக்கு வந்ததும் நன்மையைப் பெற ஆவன செய்வார்.

இந்த மாதம் குரு, சுக்கிரனைத் தவிர வேறு எந்தக் கிரகமும் உதவும் நிலையில் இல்லை. சூரியன் கூட மாதத்தின் கடைசிப் பகுதியில் 3ல் நீச்சமே பெறுகிறார். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், மற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனைவருக்குமே சற்று சோதனை மிக்க மாதம். இது எத்துறையினர்க்கும் எந்நிலையில் உள்ளவர்க்கும் பொருந்தும். நடந்தவைகளை மறந்து நாளும் தெரிந்த அவனை சிவனே என நினைத்து தியானம் செய்யுங்கள். விரைவில் நிகழ இருக்கும் குருவின் மாற்றமும் சற்று சிரமத்தைத்தான் தரும் என்பதால் முன்னெச்சரிக்கையாகத் தொழிலில் எந்த மாற்றமும் செய்யாமலிருப்பதே நல்லது எனத் தோன்றுகிறது. சிதம்பரத்தில் சிறைமீட்ட கணபதியைத் தரிசனம் செய்வதுடன் அவருக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலானவைகளைச் செய்வது நல்லது.

கன்னி ராசி :




உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

இராசிநாதன் ஆட்சியில் இருப்பதுடன் 6ம் இடத்தில் சனீஸ்வரனும் இருப்பதால் உங்களுக்குச் சற்றுச் சாதகமாகும். சுக்கிரனால் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடாகலாம். குரு அஷ்டமஸ்தானத்தையும் பத்தாமிடத்தையும் பார்ப்பது விசேஷம். எனினும் நிதிப்பற்றாக்குறை, வீட்டில் அமைதியின்மை, தாம்பத்ய உறவில் சிறு விரிசல் என ஏதேனும் ஒருவிதத்தில் மனச்சங்கடம் ஏற்பட்டுச் சரியாகும். அடுத்து வரும் குருப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாக அமையும். வக்கிர சனியும் தொழிலில், உத்தியோகத்தில், வியாபாரத்தில் என எத்துறையிலிருப்பவர்களுக்கும் நன்மை புரிவார். தன லாபமும் ஏற்படும். அங்காரகனால் மாதத்தில் பிற்பகுதியில், ஒரு நில விஷயமாக அல்லது வீட்டுமனை விஷயமாகச் சிறு சலசலப்பை உண்டாக்குவார். விரயம் எனும் 12-ம் இடத்தைக் குரு பார்ப்பதால் பணவிரயம் குறையலாம். 7-ம் இடத்தில் உள்ள கேது, வாழ்க்கைத்துணைவரின் உடல்நிலையில், அல்லது தொழிலில் சிறிது சிரமத்தைத் தந்தாலும் இராசிநாதன் உச்சம் பெற்றுள்ளதால் உங்களுக்கு எல்லாம் நல்லபடியே முடியும். கவலை வேண்டாம். சற்று பக்தியுடனும், தகாத பழக்கம் ஏதேனும் இருப்பின் அதை விட்டு விட்டால், இனிவரும் குருப்பெயர்ச்சி உங்களுக்கு மேலானதொரு வாழ்க்கையை அளிக்கும். ஆஞ்சநேயருக்கு விருப்பமான சீதாராமஸ்லோகத்தைத் தினமும் ஒருமுறை படிப்பது நல்லது.


வெண்டீ
பணம் சேமிக்க வெண்டீ!
எப்போதும் இதற்கே வெற்றி!
சுதா உமா இருவரும் பள்ளித் தோழிகள். ஒரு நாள் வீடு திரும்பும் போது...
உமா, என் மம்மி ரொம்ப கிரேட். ஜோரா பெயிண்டிங் பண்ணுவாங்க.
HIGH SCHOOL
என் மம்மி ரொம்ப அழகா கர்ச்சீப் தைப்பாங்க.
வாக்குவாதம் சூடுபிடித்துவிட்டது
ப்பூ! என் மம்மி என் டிரஸ் எல்லாமே தைக்கிறாங்களே
என் மம்மி வெண்டீ நிலையத்தில் எண்ணெய் வாங்குறாங்க. உங்க அம்மா அப்படி இல்லை.. நிச்சயமா தெரியும்
Vendee
வெண்டீ... இது ஆட்டோமேட்டிக்கா எண்ணெய் வழங்கற இடம்னு அம்மா சொல்றாங்க. இது தூய்மையானது சுகாதாரமானது. அவங்களுக்கு நிறைய பணமும் மிச்சம் ஆகுதாம்.
எவ்வளவு பணம்?
போன மாதம் சேமிப்பிலே, எனக்கு ஒரு அழகான ஸ்கேட்ச் பென் பாக்ஸ் வாங்கிக் கொடுத்தாங்க. வெண்டீ எண்ணெய் மூலம் பாக்கேஜ் செலவும் மிச்சம் ஆகுதுன்னு சொன்னாங்க.
அப்ப அந்த எண்ணெய் எல்லாம் தூய்மையா இருக்காது
டாடி பேப்பர்லே படிச்சுகிட்டு இருந்தாங்களே
வெண்டீ வழங்குகிறது - அநுராக் சூப்பர் ரிஃபைண்டு சூரியகாந்தி எண்ணெய், அநுகூல் - பிரௌண்டட் வெஜிடபிள் எண்ணெய், அபூர்வா - சூப்பர் ரிஃபைண்டு கடலை எண்ணெய் மற்றும் டெய்லி - டபுள் ஃபில்ட்டர்டு கடலை எண்ணெய்
பாக்கேஜ் செய்த எண்ணெய்களைவிட இவை 6 முதல் 10 ரூபாய் விலை குறைவானவை
நான் தான் சொன்னேனே.. என் அம்மா தான் கிரேட்
மம்மிகிட்டே நிச்சயமா சொல்லணும் வெண்டீ பத்தி





பாக்கேஜ் செய்தது போல் தூய்மையானது.
...யே அளந்து வாங்குவது போல் விலை குறைவானது.

	பாக்கேஜ் செய்த எண்ணெயின் விலை (1 லிட்டருக்கு) ரூ.	வெண்டீ நிலையத்தில் (1 லிட்டருக்கு) ரூ.	உங்கள் சேமிப்பு ரூ.
...பைண்டு சூரியகாந்த் எண்ணெய்	51.00		
...பூர்வா ரீஃபைண்டு சூரியகாந்தி எண்ணெய்		41.00	10.00
...ல்டர்டு கடலை எண்ணெய்	48.00		
...லி ஃபில்டர்டு கடலை எண்ணெய்		42.00	6.00
...பைண்டு கடலை எண்ணெய்	54.00		
...பூர்வா ரீஃபைண்டு கடலை எண்ணெய்		46.00	8.00
...வெஜிடபிள் எண்ணெய்	45.00		
...பிளெண்டட் வெஜிடபிள் எண்ணெய்		37.00	8.00

தென் இந்தியா முழுவதும் மற்றும் மும்பையில் மொத்தம் 250 வெண்டீ நிலையங்கள் - சென்னையில் 75, திருச்சியில் 20, மதுரையில் 15, கோயம்புத்தூரில் 20, ஹைதராபாத்தில் 15, பெங்களூரில் 55, மற்றும் மும்பையில் 50.

உங்களுக்கு அருகில் உள்ள வெண்டீ நிலையத்தைத் தெரிந்து கொள்ள, எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்: சென்னை: 4823204 / 4823854 / 4849001-6 ஆற்காடு 25980 25981 பெங்களூர்: 626985 / 603691 திருச்சி 770052 / 77015: கோயம்புத்தூர் 232483 மதுரை 535392 ஹைதராபாத் 255201 / 255202 மும்பை 5775706 / 5775707

வெண்டீ வழங்கும் தள்ளுபடி சலுகை*
ரூ. 2/- தள்ளுபடி
ஒவ்வொரு லிட்டருக்கும்.
*இச்சலுகை நவம்பர் 10, '96 வரை மட்டுமே.
தள்ளுபடி கூப்பன்களை வெண்டீ நிலையங்களில் பெறலாம்.

அனுராக்

அபூர்வா

அனுராக் கோல்ட்

டெய்லி

A quality product from S&S

எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் எண்டர்பிரைசஸ் லிமிடெட்

சக்ரா மேன்ஷன், 3-வது மாடி, 158, ஆற்காடு சாலை, சென்னை 600 026. தொலைபேசி: 484 9001-6 தந்தி: ESSANDESS டெலக்ஸ்: 041-5334. ஃபேக்ஸ்: 484 9007.


துலா ராசி :



சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

சுக்கிரன், கேது, மற்றும் உச்ச புதனும் கூட உதவும் நிலை. திரிதியப் பிரகஸ்பதி எனும் குருவின் நிலை சற்று சாதகமாகத்தான் உள்ளது. அதாவது அவரது பார்வை 11-ம் இடத்திற்கு இருப்பதால் ஓரளவுக்கு விரயம் குறையும். எனினும் கேதுவால் தாய்வழி சொத்துக்கள் வரலாம். அல்லது வேறு விதத்தில் கூட நிதி உதவி நிரந்தரமாக வரலாம். கவலை வேண்டாம். 11-ம் இடத்தில் சுக்கிரன் சுபநிகழ்ச்சிக்கும் வீடு கட்டும் முயற்சிக்கும் உதவும் வாய்ப்பு உண்டு. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. உச்சபுதன் 9க்கும் உரியவராதலால் உங்கள் தொழிலில் குறிப்பாகக் கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட முட்டுக்கட்டை நீங்கி மீண்டும் தொழிலில் மறுமலர்ச்சி ஏற்படும். குழந்தைகளின் கல்வியில் முன்னேற்றம் உண்டு. தந்தைவழி பாட்டனாருக்கு உடல்நிலை பாதிக்கும். செவ்வாய் நீச்சம் பெற்றுள்ளதால் இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்குக் குறிப்பாக குறைவாக அழுத்தம் உடையவர்களுக்கு சற்று உடல்நிலை பாதித்தாலும், ஆயுள்காரகனாகிய சனி ஆட்சியில் இருப்பதால் கவலை தேவையில்லை. ஸ்ரீலக்ஷ்மி ஹோமம் அல்லது 16 வாரம் லக்ஷ்மிக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்வது நல்லது. ஸ்ரீசத்திய நாராயணபூஜை செய்வதும் நல்லதே. நிதித்துறையில் பணிபுரியும் பெண்கள் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.


விருச்சிக ராசி :



விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

சுக்கிரனும், செவ்வாயும் சனி, கேது ஆகியவர்களும் நல்லநிலையில் சஞ்சரிக்கவில்லை. அதாவது உங்களுக்குச் சாதகமான சூழ்நிலையில் இல்லை. எனவே, வீடு, நிலம் சம்பந்தமான பிரச்னைகள், தோன்றலாம். தொழிலில் கூட சற்று பின்தங்கும் நிலை. கூட்டுத் தொழில் செய்பவர்கள் பிரிந்து செல்லக் கூடிய நிலை வரலாம். உங்கள் குழந்தைகளே உங்களிடம் குறை காண்பார்கள். இது வரை இருந்த சாதகமான சூழ்நிலை சற்று மாறியுள்ளது. ராகு, புதன் இவர்களால் உங்களுக்கு, ஏற்படும் எந்தச் சிரமத்தையும் நீங்கள் சமாளிக்கும் ஆற்றலைப் பெற இருக்கிறீர்கள். அத்துடன் மாதத்தின் முற்பகுதியில் சூரியன் கூட அரசுப் பணியில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வோ, சம்பள உயர்வோ கிடைக்கும்படி செய்வார். புதனும், குருவும் தரும் மதியினால், சனியினால் ஏற்படும் விதியைக் கூட மாற்றி சாதனை புரிவீர்கள். மாதத்தின் பிற்பகுதியில் சூரியன் நீச்சம் பெறும் சமயம் அரசியல்வாதிகளும், அரசுப் பணியாளரும் எத்துறையினைச் சார்ந்தவரானாலும் சற்று எச்சரிக்கையுடன் பணிபுரிவது நல்லது.

தனுசு ராசி :



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

புதனும், சுக்கிரனும் உதவும் நிலை. எனவே தாம்பத்திய உறவு நல்ல முறையில் இருக்கும். குடும்பத்தில் பூசல் குறையும். வீடு, மனை வாங்கும் யோகமும் ஏற்படலாம். மூன்றாம் வீட்டில் உள்ள வக்கிரச் சனி தொழிலில் ஏற்பட்ட தொய்வுகளையோ, அல்லது தடங்கல்களையோ நீக்கி, மீண்டும் சரியாக இயங்கும்படி ஆக்கி விடுவார். கவலை தேவையில்லை. கேதுவும், ராகுவும் ஏதேனும் சிறுசிறு பிரச்னைகளை அவ்வப்போது தோற்றுவித்தாலும் ஆட்சியில் உள்ள குரு அவற்றைச் சமாளிக்கும் வகையில் உதவுவார். அங்காரகனால் சில தோல்விகளும், தனநாசமும் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவா



சின்ன வெங்காயத்தின் மேலுள்ள சருகுகளை தூர எறியாமல் சேர்த்து வையுங்கள். அல்லது வெங்காய வியாபாரிகளிடம் கேட்டால் வெங்காயச் சருகு கிடைக்கும். அதைக் கொண்டு வந்து ஒரு உறைக்குள் போட்டு, தலையணை மாதிரி வைத்து விடுங்கள். மூலவியாதிக்காரர்கள் உட்காரும் போது இந்த வெங்காயச் சருகு தலையணை மீது உட்கார்ந்து வந்தால் மூலம் சுருங்கிவரும். வலி தெரியாமல் இருக்கும். இது என் சொந்த அனுபவம்.

— ஜெயா




நாம் நம் உறவினர்கள், நண்பர்கள் வீட்டிற்குச் செல்லும் போது, பெரியவர்களுக்குப் பழம் என்றும் குழந்தைகளுக்கு பிஸ்கெட் என்றும் வாங்கிச் செல்கிறோம். குழந்தைகள் மட்டும் பிஸ்கெட் சாப்பிடுவதில்லை. வயதானவர்களும் ஆசையாக பிஸ்கெட் சாப்பிடுவார்கள். ஒரு தடவை குழந்தைகளுக்குப் பிஸ்கெட் கொடுக்கும் போது என் மாமியாருக்குக் கொடுத்தேன். அவர் மிகவும் ஆசையாக சாப்பிட்டார்கள். அன்றையிலிருந்து அவர் அறையில் ஒரு டப்பாவில் பிஸ்கெட் போட்டு வைத்து விடுவோம். அவர் தனக்கு விருப்பப்பட்ட போது சாப்பிடுவார். கேட்டுச் சாப்பிட கூச்சமாக இருக்கும். நானும் என் கணவரும் டப்பாவைத் தினமும் பார்த்து பிஸ்கெட் வைத்துவிடுவோம். பல் இல்லாதவர்களுக்கு பிஸ்கெட் கொடுத்தால் ரொம்ப விருப்பப்பட்டு சாப்பிடு வார்கள்.



— சீதாலக்ஷ்மி

னால் சுக்கிரன் அதைச் சரிகட்டவும், சூரியன் இழந்த கீர்த்தியைப் பெறவும் உதவும் போது கவலையேன். குறிப்பாக யாது காரணம் பற்றியோ அரசு விசாரணைக்கோ, காவல்துறையினரின் கண்காணிப்புக்கோ உட்பட்டவர்கள் அம்பலத்தாடும் பெருமானைத் தரிசனம் செய்வதுடன் அப்பகுதியில் உள்ள சிறை மீட்ட கணபதியையும் தொழுதாலே போதும். வேதனைகளும், சோதனைகளும் உங்களை விட்டு அகன்று விடும். மீண்டும் நீங்கள் உங்கள் பணியில் சாதனைகளைப் புரியலாம். இது எத்துறையினர்க்கும், எவ்வகையினருக்கும் பொருந்தும். மற்றபடி மாக மறுவற்ற மனத்தினால் உங்கள் குல தெய்வத்தை நினையுங்கள்.

மகர ராசி :



உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்.

வக்கிர சனிக்கு வலிமை அதிகம் என்பர். ஆனால் கும்பம் அவரது ஆட்சிவீடுதானே. ஆகவே இதுவரை இந்த ராசிக்காரர்களுக்கு இவரால் ஏற்பட்ட துன்பங்கள் அறவே நீங்கும், நிலையில் உதவுவார். எனினும் எடுத்த காரியத்திற்கு ஏதேனும் ஒரு தடங்கல் ஏற்பட்டு விடும். மனத்தில் விரக்தியும், குழப்பமும் வந்துவிடும். ஆனால் ஞானகாரகனாகிய கேதுவுக்கு, உங்களை இந்தச் சிக்கல்களிலிருந்து தப்புவிப்பது எப்படி என்பது தெரியும். எனவே, அவரை வணங்குவதுடன், அவருக்கு அதிதேவதையான விநாயகரையும், மற்றொரு தேவதையான சண்டிகேசுவரரையும் வணங்கி அர்ச்சனை செய்யுங்கள். 12-ல் இருக்கும் விரய குருவுக்காகவும் ஒருமுறை பிரதோஷத்தன்று சிவன் கோவில் சென்று மேற்படி அர்ச்சனைகளைச் செய்வது நல்லது எனத் தோன்றுகிறது. எட்டாமிடத்தில் உள்ள சுக்கிரன் குடும்ப வாழ்க்கையில் அமைதியையும் மனமகிழ்ச்சியையும் உண்டாக்குவார். 9-ம் இடத்தில் உள்ள புதன் உச்சம் பெறுவதால் தொழில் நிலையில் தனலாபத்தையும், பாக்யத்தையும் தர வேண்டியவராகிறார். எனினும் அவருடன் சேரும் கிரகங்களினால், குறிப்பாகச் சூரியனால் அவரது பலம் பாதிக்கப்படுவதால் சற்று ஏற்ற இறக்கமுள்ள மாதமாகத்தான் இருக்கும். வரவுக்கு மேல் செலவு, வந்தவரை உபசரித்தாலும் நிந்தனை, கடுமையாக உழைத்தும் அலுவலகத்தில் கெட்டபெயர் என ஏதேனும் ஒருவிதத்தில் மனநிம்மதி குறையும். எனவே சனீஸ்வரனுக்காக ஏதேனும் உங்களால் முடிந்த ப்ரீதியைச் செய்யுங்கள். அதுவே போதும்.

கும்ப ராசி :




அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்.

இலாபத்தில் குரு, எட்டில் எதிலும் வெற்றியைத் தரும் அளவில் புதன். 6-ல் நீச்சம் செவ்வாய் என கிரகங்கள் உதவும் நிலையில் இருந்தாலும், சனி ஆட்சியில் அமர்ந்தாலும் 7½ சனி என்பதன் சிரமம் பூராவும் போய்விட்டது எனக் கூற முடியாத நிலைதான். அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை. ஏராளமான நன்மையுடன் சில குறைகளும் இருக்கத்தான் செய்யும். அந்த அளவிற்கு சூரியனால் அரசியலில் செல்வாக்குடன் இதுவரை இருந்தவர்களுக்கும், அரசுப்பணியாளர்களுக்கும், குறிப்பாக உயர்பதவியில் இருந்தவர்களுக்கும் சோதனை ஏற்படுத்தி இருக்கும் நிலை. எனவே ஸ்ரீகார்த்த வீரியார்ஜுன ஜபஹோமம், மற்றும் மிருத்யுஞ்ஜய ஹோமங்களைச் செய்வது நல்லது. வசதி இல்லாதவர்கள் மேற்படி ஜபங்களையாவது ஒருநாளைக்கு 11 முறை கூறுவது நல்லது. சனீஸ்வரன், குரு, சூரியன், ஆகியவர்களுக்கு அர்ச்சனை செய்யலாம். இராகு-கேதுக்களுக்காகப் புற்றுக்குப் பால் வார்க்கலாம். அருகம்புல்லால் யானைமுகனை அர்ச்

சிக்கலாம். மற்றபடி ஏற்ற இறக்கமுள்ள மாதம் என்றாலும் குழந்தைகளினால் மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வண்ணம் அவர்களது கல்வியில் முன்னேற்றம் இருக்கும். ராசிநாதன் ஆட்சியில் இருப்பதாலும் 7½ சனியில் இன்னும் இரண்டாண்டுகள் பாக்கி இருப்பதாலும், ஒருமுறை திருநள்ளாறு அல்லது உறையூர் வெக்காளியம்மன் கோவிலில் உள்ள சனீஸ்வர சன்னதிக்கும் சென்று வரலாம்.

மீன ராசி :



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

இந்த மாதம் அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம்தான். இராசிநாதன் இலாபாதிபதி, களஸ்திர ஸ்தானாதிபதி என மூன்று கிரகங்கள் சுயவீட்டில்தான் இருக்கிறார்கள். எனினும் சுக்கிரன் 6-ல் இருப்பதால் எடுத்த காரியங்களைத் தடுத்து நிறுத்தும் நிலையில் அவர் இருக்கிறார். இலாபாதிபதியாகிய சனி 12-ல் விரயத்தில் ஆட்சிபெற்றதால் பலவிதங்களில் பணவிரயம் ஏற்படலாம். சூரியன் கீர்த்திக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் மாதத்தின் பிற்பகுதியில் சஞ்சரிக்கிறார். அரசாங்க பயம் உண்டு. குறிப்பாக இந்த இராசியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறுகளுக்குத் தற்போதுள்ள கோட்சாரம் உதவும் நிலையில் இல்லை. அதாவது எந்த கிரகமும் எந்த நிலையிலும் உதவும் நிலையில் இல்லை. எனவே, பணியில் உள்ள பெண்கள் அவர்கள் எந்தத்துறையில் எந்த அந்தஸ்தில் இருந்தாலும் சற்றுக் கவனமாகத் தங்களது பணிகளைச் செய்வது நல்லது. கோட்சாரத்தைவிட தசாபுக்தி வலிமை பெற்றிருந்தால் கவலை தேவையில்லை. அதாவது உச்ச சனி உங்கள் ஜாதகத்திலிருந்து அவரது திசை அல்லது புக்தி நடந்தாலும், அல்லது குரு, சுக்கிரன் போன்றவர்களது தசாபுக்திகள் அவரவர்கள் ஆட்சியிலிருந்து நடந்தாலும் நன்மை அதிகமாகவே நடக்கும். மற்றபடி அமைதியை கடைபிடித்தல், கனிவுடன் பேசுதல், ஜாமீன் நிற்பதைத் தவிர்த்தல், பொறுமையுடன் கவனித்துச் செயலாற்றுதல் போன்றவைகளைப் பின்பற்றுவது அவசியம். மருத்துவம், பிரயாணம், மற்றும் வேறு எந்த கிரகங்களின் மூலமும் பணம் விரயமாகலாம். சிதம்பரத்துச் சிறை மீட்ட கணபதியைத் தரிசித்து விட்டு வரலாம். உங்கள் சொந்த இடத்திலேயோ உள்ள ஆலயத்தில் சனீஸ்வரன் உள்ளிட்ட அனைத்து கிரகங்களுக்கும் அவரவர்களுக்குரிய நாளில் விளக்கேற்றி வாருங்கள். குருவுக்குக் குரு சன்னதியில் வியாழக்கிழமை, வெள்ளியன்று சுக்கிரனுக்கு என ஞாயிறு முதல் சனி முடிய ஏழு நாட்கள். ராகு கேதுவுக்கு செவ்வாய், சனி அன்று சேர்த்தே ஏற்றவும். இதனால் மனோதிடமும், எதிர்ப்புகளைப் புத்திசாலித்தனமாகச் சமாளித்து வெற்றி பெறும் நன்மையும் ஏற்படும்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்

பாட்டி சொல்லைத் தட்டாதே!

"எப்போது பார்த்தாலும் அதென்ன நகத்தைக் கடிக்கும் பழக்கம்!" என்றோ "நகத்தைக் கிள்ளி வீட்டில் கண்ட இடத்தில் போடாதே. தரித்திரம் வரும்" என்றோ பாட்டி சொன்னால் முணுமுணுக்காதீர்கள். அதில் உண்மை இருக்கிறது. சில வகை காளான்களினால்தான் படை, சேற்றுப்புண் முதலியன ஏற்படுகின்றன. அழுக்கான ஈரமான இடங்கள், உடலில் உள்ள பள்ளமான வளைவான பகுதிகள், நகக் கண் முதலியன இவற்றிற்குக் குஷியான இருப்பிடங்கள். இந்த வகைக் காளான்கள் உள்ள நகத்தை வெட்டிக் கண்டபடி போடும் போது, அவை காற்றில் பரவி சுவாசிக்கும் காற்றின் மூலம் உடலுக்குள் புக நேரிடுகிறது. இந்த விதமாக நுரையீரலில் புகும்போது ஆஸ்துமா ஏற்படுகிறது. தோலில் படை இருந்த சிலருக்குத் தீராத இருமலும், ஆஸ்த்துமா தொந்தரவும் இருந்ததாம். மேற் கூறியபடி காளான்கள் உட்புகுந்திருக்குமோ என்ற சந்தேகத்தில், தீவிரமாக 'படை'க்கு மருந்து கொடுத்து சரியானபோது, ஆஸ்த்துமாவும் குணமாகிவிட்டது என்று 'அலர்ஜி' ஆஸ்த்துமா அண்ட் இம்யூனாலஜி' என்ற மருத்துவ சஞ்சிகை கூறுகிறது.

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்



கடவுளின் மனைவியாக இருப்பதாலேயே பெண் கடவுளுக்கு மரியாதை...

• அருள்மொழி

நவராத்திரி பெண்களை உயர்த்தும் பண்டிகை என்றும், சக்தி வழிபாடு மூலம் பெண்ணின் உயர்வு வெளிப்படுத்தப் படுகிறது என்றும் சொல்வது பற்றி பகுத்தறிவுவாதியான வழக்கறிஞர் திருமதி. அ. அருள்மொழியிடம் கேட்டபோது....

"பெண்ணை, பெண்ணுக்காக மட்டுமே மரியாதை செய்யும் நாளே திருநாளாகும்" என்றார்.

"நவராத்திரிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கான காரணமோ, விளக்கமோ எந்த புராணத்திலும், இதிகாசத்திலும், கதையிலும் இல்லை. உலகம் ஆண்களுக்காகவே ஏற்பட்டது என்றும், அதில் வசிக்க அனுமதிக்கப்பட்ட ஜீவராசிகளில் ஒரு பகுதியே பெண்கள் என்கின்றது மதங்கள். படைத்தலும் காத்தலும் பெண்ணின் சிறப்புதானே! ஆனால் இந்துமதம் ஆண் கடவுளை முன் நிறுத்துவது போல், முகமதிய மதத்தில் அல்லாவும், கிருஸ்துவத்தில் கர்த்தரும் உயர்வானார்கள். ஏசுவைப் பெற்றதால் மட்டுமே மேரிக்குப் பெருமை என்கின்றனரே தவிர மேரியைக் கடவுளாக ஏற்றுக் கொள்வதிலும் முரண்படுகின்றனர் கிறிஸ்துவர்கள். கடவுளின் மனைவியாக இருப்பதால்தான் பெண் கடவுளையே வணங்குகின்றனர். படைத்தல் காத்தல் அழித்தல் எனும் பெரும் பொறுப்பு ஆண் கடவுளுக்கு என்றால் கல்வி, செல்வம், வீரம் எனும் இரண்டாம் தரமான பொறுப்புகள் பெண் கடவுளுக்கு. அதாவது முழுமைக்கு ஆண். இரண்டாம் இடப் பொறுப்புக்கு பெண்ணைப் பெருமைப்பட வைக்கிறது இந்துமதம்.

படித்து, வேலைக்குப் போகும் பெண்கள்தான் மிகவும் அதிகமாக பாரம்பரியத்தை மத கலாசாரத்தை சுமக்கின்றனர். அதனால்தான் சுமங்கலிகளுக்கு முக்கியத்துவம் தரும் சினிமா, தாலி சென்ட்டிமென்ட் எல்லாம் இன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாகி நவராத்திரி பெண்கள் பண்டிகை என்று (சுகாசினி பூஜை என்ற பெயரில் சுமங்கலி பண்டிகைதானே நடக்கின்றது) கொண்டாடப்படுகிறது.

இது போன்ற பண்டிகைகளைக் கொண்டாடும் பெண்கள் சிறிது சிந்தித்துச் செயல்படலாமே! தேவதாசி முறையை ஒழித்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, விண்வெளியில் பறந்து சாதனை செய்த வாலென்டினா பெண் விடுதலைக்காக உழைத்த பெண்மணிகளின், சாதனையாளர்களின் பிறந்தநாளை மார்ச் 8-ம் தேதியான உலகப் பெண்கள் தினவிழாவை ஒரு வாரம் கொண்டாடி பயனுள்ள செய்திகளைப் பரிமாறிக் கொண்டால் என்ன? என்பதே என் ஆதங்கம்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையை ஆணைச் சார்ந்தே மதிக்கின்றனர். சுமங்கலிகளுக்கே பண்டிகைகளில்

GRASIM GWALIOR SUITING

IN A CLASS OF ITS OWN



BUY SUITING SHIRITING & GENTS SHIRTS FOR RS. 1000/- GET TRAVALLERS BAG WORTH RS. 100/- FREE

GR

EXCLUSIVE SHOW ROOM AT SAIBABACOLONY

KRISHNA

170, N.S.R. ROAD
(CANARA BANK)
COIMBATORE - 641 011

ALSO AT

LIBERTY

D.B. ROAD, R.S. PURAM
COIMBATORE-641 002.

L.S.MANI

The Shop exclusively for Ladies only



WELCOME TO

AALURI SAREES

THE WORLD OF CHURIDARS, SAREES
& READY MADE BLOUSES.

DEALER OF
KARISHMA
CHURIDARS &
SAREES

OUR LATEST INRODUCTION LACHAS & GAGRA CHOLI'S

WHOLE SALE & RETAIL

No.4/38, R.K.Mutt Road, Mylapore,
Madras - 600 004. Ph: 4935791

முக்கியத்துவம். மனைவியை இழந்த ஆண் மணமேடையில் அருகில் இருந்து செய்யக் கூடிய சடங்கு, சம்பிரதாயங்களை கைம்பெண் செய்யக் கூடாது என்ற மூடப் பழக்கம் ஒழிய வேண்டும். ஆண் வேறு, பெண் வேறு என்ற இரட்டைப் பார்வை களையப்பட வேண்டும். விவாகரத்து பெற்ற ஆணைப் 'பாவம்' என்று சொல்லும் உலகம் பெண் விவாகரத்து பெற்றால் 'பாவி' என்றும் இவள் எப்படிப்பட்டவளோ! என்றும் தூற்றுகின்ற மனோபாவம் மாற வேண்டும். கணவனை இழந்த பின் சடங்குகளில் கலந்து கொள்ளத் தகுதியை இழந்த பெண், மறுமணம் செய்து கொண்டால் திரும்ப அந்தத் தகுதியைப் பெறுவது எப்படி? ஆணைச் சார்ந்தே அவளுக்கு மரியாதை கண்காணிப்புக் குழு போல செயல்பட்டால் தங்கள் பொன்னான நேரத்தைப் பயனுள்ளதாக்குவதாக இருக்கும். மாதம் ஒரு கூட்டம் போட்டு திரைப்படங்களில் வரும் ஆபாச வன்முறைக் காட்சிகளை பெண்களை இழிவுபடுத்தும் காட்சிகளை சென்சார் போர்டுக்கு எழுதி அனுப்பலாம்.

இப்படிப்பட்ட செயல்களைச் செய்து அதற்கான வெற்றி கிடைக்கும்- பலன் கிடைக்கும் நாளைப் பண்டிகையாகக் கொண்டாடி முன் உதாரணமாக இருக்கலாம் இல்லையா?" என்கிறார்.

இவருக்கு நேர் எதிராக இன்னொரு பெண்மணி தன் வாழ்க்கையே அம்மனோடுதான் என்கிறார்-

• விஜயா





என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதல்லவா?

பெண்கள் யோசித்துச் செயல்பட வேண்டும். பெண்ணை, பெண்களுக்காகவே மதிக்கும்படியான மாற்றத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் தங்கள் பகுதியிலுள்ள நூலகத்தை மேம்படுத்தலாம். அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களை படித்தும், படிக்க வைத்தும் செயல்படலாம். அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று உதவலாம். பெண்கள் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி தங்கள் பகுதியில் ஏற்படும் சிறு பிரச்சினைகள், வரதட்சணை போன்ற பெண்கள் பிரச்சனைகளை அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்வதோடு எப்.ஐ.ஆர் போட்டார்களா? மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்களா என்று தொடர்ந்து

"சுவாமி மலையில் 1980-'ல் ஸ்தபதியால் இரண்டு கிராம் தங்கம், பத்து கிராம் வெள்ளி தந்து அம்பாளின் சிறு விக்கிரக சிலையை கும்பகோணத்திலிருந்து வேத விற்பன்னர்கள் வந்து எங்கள் வீட்டில் 'பிராணப் பிரதிஷ்டை செய்தனர் 85-ல் பிரசன்ன வெங்கடேச பெருமாள் விக்கிரகத்தையும் செய்து தம்பதி சமேதராக வைத்தேன். குழந்தை இல்லை என்ற குறையே எனக்குத் தோன்றாமல் தேவியையே என் மகளாக பாவித்துத் திருக்கல்யாணம் செய்து வைத்து பெருமானை மாப்பிள்ளை ஆனதால் அதற்குரிய சீர் செய்து (வெள்ளித் தட்டு, வெள்ளி டம்ளர்) மகிழ்கிறேன். என் மகள் என்ற பாவனையில் தினமும் அவளுக்குப் பட்டுப் பாவாடைதான். தேவிக்கு முந்நூறு பாவாடைகள் உள்ளது. கலர் மங்கி அழுக்கானால் "ஏன் இப்படி அழுக்கு

செய்தாய்?" என்று உரிமையுடன் கோபித்துக் கொண்டு புதுப்பாவாடை அணிவிப்பேன். வீட்டுக்கு வரும் குழந்தைகளின் பொம்மைக்காக பழசானதை கொடுத்து விடுவேன். எனக்கு நகைகள் மீது ஆசையில்லை. என் மகளுக்கு சிகப்புக்கல் தோடு, காசுமாலை, குட்டி ஒட்டியாணம், சிவப்பு நெக்லஸ், எல்லாம் தங்கத்தால் செய்து போட்டுள்ளேன். பெருமாளுக்கும் நகை உள்ளது.

நவராத்திரி பெண்களின் பண்டிகையல்லவா? தாயாருக்குப் பத்து நாளும் பத்து வித அலங்காரம் ஜகஜ்ஜோதியாய் அமையும். பின்னல் போட்டு ஜடை தைத்து, பெருமாளையும், தாயாரையும் வெள்ளி ஊஞ்சலில் அமரச் செய்து தினமும் ஸஹஸ்ரநாமம் சொல்லி தினம் ஒரு பெண்ணுக்கு அன்னமிட்டு ரவிக்கையுடன் தாம்பூலம் தந்து கன்னிப்பெண்கள் நால்வருக்குப் பாவாடை சட்டை தைத்து அன்னமிட்டு மகிழ்கிறேன். சிங்கப்பூர் சென்றபோதுகூட அம்பாள் உடையை இஸ்திரி செய்ய மினி அயர்ன்பாக்ஸ் வாங்கி வந்தேன். என் கணவர் அழகாக இஸ்திரி செய்து தருவார். நித்யப்படி பூஜையிலும், நவராத்திரி அலங்காரத்திலும் உதவி செய்வார். காசியிலிருந்து யார் வந்தாலும் கங்கை ஜலம் கொண்டு வந்து தருவர். அம்பாளுக்குத் தினமும் நவராத்திரி பத்து நாட்களும் கங்காஜல அபிஷேகம்தான். எந்தப் பொருளைப் பார்த்தாலும் என் மகளுக்கு வாங்காமல் இருப்பதில்லை. எந்தத் தின் பண்டத்தையும் டிபனையும் அவளிடம் தராமல் நான் உண்பதில்லை. அவளுக்காகவே நவராத்திரியை மிகவும் சிரத்தையாகக் கொண்டாடுகிறேன். கோவிலில் கொண்டாடும் நவராத்திரி விழாவுக்கும் என் வீட்டு நவராத்திரிக்கும் கொஞ்சம்கூட வித்யாசம் இருக்காது என்றே சொல்லலாம். என் ஏக்கம் தீர்க்க அம்பாளே என் தாயாராக என்னை வழி நடத்தியும், என் செல்ல மகளாக பாவிக்கும்படியாகவும் செய்துள்ளாள். என் மூச்சு உள்ளவரை அம்பாள் ஸ்துதியைப் பாடியும் பிறருக்குச் சொல்லிக் கொடுத்தும் காலம் கழிக்க வேண்டும் என்பதே இந்த நன்னாளில் என் பிரார்த்தனை!"

- பானுமதி

FEAST WITH JAYABALAN AT THE LAVISH WEDDING



* MEET OUR YOUNG CULTURAL AMBASSADORS
* CHECK OUT!!! HOW BRAVE ARE YOU???

RIDDLES, POEMS, STORIES, ANECDOTES AND MORE

OCTOBER '96 ISSUE

96 pages

GOKULAM

The monthly magazine for children

for just Rs. 5!

GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097.

Johnson & Johnson

ஆய்வு முடிவு எண். 3

"நான் சாதாரணமா வாங்கற நாப்கினைப்-போல இல்லை ஸ்டேஃப்ரீ ஸில்க்கிடிரை. இது தகுந்த பாதுகாப்பு தருது. ஏன்னா, இது இடம் நகராம இருக்கு!"

பிரபலமான, உயர்வான ஸானிடரி நாப்கின்களைப் பயன்படுத்தும் 200 பெண்மணிகளிடம் பம்பாய் நகரில், நாங்கள் ஓர் ஒப்பிடும் ஆய்வினை நடத்தினோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரபலமான, உயர்வான நாப்கின் ஸாம்பிள்களையும், ஸ்டே:ப்ரீ ஸில்க்கிடிரை நாப்கின்களையும் வழங்கினோம்.

இதோ, ஆய்வு முடிவுகளைப் பாருங்கள். மிகப் பெரும்பான்மையான மகளிர், ஸ்டே:ப்ரீ ஸில்க்கிடிரைக்கே, மகத்தான அளவில் வாக்களித்திருக்கின்றனர். அதுவும், இது நீடித்துழைக்கிறது என்பதே அவர்கள் தீர்ப்பு. மற்ற பிரபலமான நாப்கின்களைப் போல இல்லாமல், ஸ்டே:ப்ரீ ஸில்க்கிடிரை இடம் நகராமல் இருக்கிறது என்றும் அவர்கள் சொல்கிறார்கள். எனவே, இது தகுந்த பாதுகாப்பு வழங்குகிறது என்றும் அவர்கள் ஆணித்தரமாக அடித்து சொல்கிறார்கள். என்ன நம்ப முடியவில்லையா? இலவச சாம்பிள் பெற எழுதுங்கள். நீங்களே உண்மையை உணர்வீர்கள். கீழே உள்ள கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்டே:ப்ரீ பெர்ஸனல் கேர் அட்வைஸர், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், 30, :போர்ஜெட் ஸ்ட்ரீட், மும்பை-400 036.

ஆம்! ஸ்டே:ப்ரீ ஸில்க்கிடிரையின் இலவச சாம்பிள் ஒன்றினை அனுப்பி வையுங்கள்.

பெயர்: ....

முகவரி: ....

வயது: .... தற்போதைய நாப்கின்: ....





லட்சுமி ஐயர் வயது-25
தாதர், பம்பாய்

Lintas: J&J Sd 8 2416 Tm

மணக்குது! மணக்குது!!

சாம்பார், ரசம்

உபயோகியுங்கள் ருசி கூட்டு பெருங்காயம் தூள்



Ruchi RUCHI AGRO PRODUCTS PVT. LTD.50, Giriappa Road, Madras - 600 017

TEL: 8269290, 8269438, 8275048

DEER BRAND COTTON SAREES

- COOL KOVAI COTTON
- FINE KORA COTTON
- NICE TISSUE COTTON
- BEST POLLACHI COTTON
- A/C SUNGADI COTTON

EXCLUSIVE DEZINESS

EYE CATCHING COLOURS

Mfrs. : **KASTHURI & CO.,**

163, S.S.KOIL STREET,

POLLACHI - 642 001.

PHONE : 04259 – 27695, 23995, 28106



• சுதா



பொருள் : நான் கற்றுக் கொண்ட உணவு"

முதல் பரிசு ரூ.300/-

ரகாடா பாட்டிஸ்

தேவையான பொருள்:-

வெள்ளை பட்டாணி - 100 கிராம்
உருளைக் கிழங்கு - 1/4 கிலோ
தக்காளி - 1
வெங்காயம் - 2
ப.மிளகாய் - 4
இஞ்சி - சிறிய துண்டு
பூண்டு - 2 பல்
கிராம்பு - 2
ஏலக்காய் - 2
ப்ரெட் - 2 துண்டு
கரம் மசாலா - ½ டீஸ்பூன்
காரப் பொடி - ½ டீஸ்பூன்

இம்மாத இல்லத்தரசி

சட்னி :-

வெல்லம் - 1 எலுமிச்சை அளவு
புளி - 1 எலுமிச்சை அளவு
உப்பு - சிட்டிகை

அலங்கரிக்க :-

ஓமப்பொடி - 50 கிராம்
கொத்தமல்லி - 1 கட்டு

செய்முறை :-

எண்ணெயில் ஏலக்காய், கிராம்பு போட்டுப் பொரித்துக் கொண்டு, வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி சேர்த்து வதக்கவும். வேக வைத்த பட்டாணியை நசுக்கிக் கொண்டு ஒரு சின்ன கப் அளவு நீர் சேர்த்து அடுப்பில் வைத்துக் கிளறவும். சிட்டிகை மஞ்சள் பொடி, ½ டீஸ்பூன் மிளகாய்ப்பொடி, ½ டீஸ்பூன் கரம் மசாலா, உப்பு சேர்க்கவும். பூண்டு, இஞ்சி, ப.மிளகாயை தண்ணீரில்லாமல் அரைக்கவும்.

முக்கால் பதத்திற்கு உருளைக்கிழங்கை வேக விட்டு தோலுரித்துக் காரட் சீவியில் மெதுவாக சீவவும். அரைத்த ப.மிளகாய் விழுதுடன், உருளைக் கிழங்கு மற்றும் உப்பு சேர்த்து கலக்கவும்.

ப்ரெட் ஓரத்தை எடுத்து விட்டு தண்ணீரில் நனைத்துப் பிழிந்து உருளை கலவையுடன் பிசையவும். சப்பாத்தி மாவு போல் பிசைந்து கொண்டு சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும். உருண்டைகளை லேசாக வடைபோல் தட்டி தோசைக்கல்லில் போட்டு எண்ணெய்

• தீபா





• ரூபாமணி

விட்டு மீடியம், சிவப்பில் எடுக்கவும். இரண்டு பக்கமும் 'மொறு மொறு'வென்று இருக்க வேண்டும்.

சட்னி :-

புளியை 1/2 கப் தண்ணீரில் கரைத்து வெல்லத்தூளைப் போட்டு கலக்கவும். சிட்டிகை உப்பு சேர்த்துக் கலக்கவும்.

அலங்கரிக்க :-

முதலில் பாட்டிஸை தட்டில் வைத்து பட்டாணி கலவையை மேலே தூவி விட்டு, பொடியாக நறுக்கிய வெங்காயம் தூவி விடவும். பிறகு கொத்தமல்லி, ஓமப்பொடி சட்னி தூவிப் பரிமாறவும்.

-சுதா ஆத்மராஜ், சென்னை-16.

இரண்டாம் பரிசு ரூ.200/-

வெந்தயக் களி

தேவையான பொருட்கள் :-

வெந்தயம் ஒரு கப்
கருப்பட்டி தூளாக்கியது 2 கப்
அல்லது
கெட்டிப் பாகு (இரண்டு கம்பி ஓடியது) 1 கப்
இரண்டு கப் நல்ல எண்ணெய் (எள் எண்ணை)

செய்முறை:-

வெந்தயத்தை முதல்நாள் இரவே ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் காலையில் சுத்தமாக அலம்பி, கல் போகக் களைந்து, சுத்தமாக வடி கட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த வெந்தயத்தை மிக்ஸியில்/ ஆட்டுக்கல்லில் போட்டு தண்ணீர் விடாமல் கெட்டியாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். (வடைக்கு உளுந்து அரைப்பதைப் போல) அரைத்த வெந்தய விழுது. கருப்பட்டி / வெல்லப் பாகு ஆகியவற்றை ஒரு வாணலியில் போட்டு, அடுப்பின் மீது வைத்து. சிறிது சிறிதாகக் கிளர வேண்டும். நல்ல எண்ணையைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டும். வாணலியில் ஒட்டாத பக்குவம் வந்ததும் இறக்கி சூடாகவே சாப்பிடக் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய எலுமிச்சை அளவு கொடுக்கலாம். இதைக் கண்டிப்பாக வாரம் ஒருமுறை சாப்பிட வேண்டும். இதைத் தவறாமல் சாப்பிடுவதால் பல நோய்களுக்கு மூல காரணமான மலச்சிக்கல் வரவே வராது. வெந்தயத்தில் உள்ள வழுவழுப்பான பொருள் 'லூப்ரிகண்ட்' மாதிரி வேலை செய்வதால், எலும்புகள் தேயாமல், மூட்டு வலிகள் வராமல் இருக்கும். சுருக்கம் இல்லாத தோல் அமையும். இன்றைய இளவயதினரைப் பாதிக்கும் இளநரை எட்டிக் கூடப் பார்க்காது. வேலைக்குப் போகும் தாய்மார்கள், கண்டிப்பாகத் தங்கள் பெண் குழந்தைகளுக்கு வெந்தயக் களி செய்து கொடுக்க வேண்டும். அது அந்தப் பெண் குழந்தைகளின் இடுப்பு எலும்பை



மலை செய்ய...

ஒரு சிறிய பேசின் அல்லது பிடியில்லாத ப்ளாஸ்டிக் பக்கெட்டில் எண்ணெயைத் தடவிக் கொண்டு அதன் மேல் தண்ணீரில் கெட்டியாகக் கரைத்த ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ் கலவையை ஊற்றி மலை போல ஷேப் செய்து கொள்ளவும்.

பத்தே நிமிடங்களில் காய்ந்து விடும். உள்ளேயுள்ள பாத்திரம் கழண்டு வந்து விடும்.










இதன் மேல் ப்ரௌன் மற்றும் கரும் பச்சை பெயிண்ட் அடிக்கவும். பல வருடங்கள் இந்த செலவில்லாத மலையையே உபயோகிக்கலாம்.

-உஷா

இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்

Murugan

முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே

முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்

21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3.
போன் : 5350182, 5343412

மதுரையில் 45 வருடங்களாக சுங்குடி புடவைகள் தயாரிப்பில்
பிரசித்தி பெற்று விளங்குவது எமது

சுந்தரம் சாரீஸ்
சுங்குடி புடவைகள்
TRADE MARK

Sundaram
Sarees

சுந்தரம் சாரீஸ்

எங்களிடம் ஜரிகை மற்றும் சாதா சுங்குடி புடவைகள். காஞ்சி, கோவை, நெகமம், பெங்கால், கைத்தறி காட்டன் புடவைகளும், கரீஸ்மா, தாரிகா, சுவிஸ் காட்டன், புனா, வாயல் புடவைகளும், பாலிக்காட்டன், கோரா சில்க் முதலிய தரமான புடவைகளும், கவர்ச்சியான சரிதார் டிசைன்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

எமது டிரேட்மார்க்
பார்த்து வாங்குங்கள்

சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்
90, தெற்குமாசி வீதி, மதுரை– 625 001. ✆ 25152

சென்னையில் கிளை நிறுவனம் கிடையாது



SHARAVANA

29 years of Glorious Service

Estd in 1967, Sharavana is pioneer in manufacturing Wet Grinders, right from 1 litre to 20 litres.

Models Available : Regular, Tilting & Table Top grinders.

- Exporting since 1980.
- High quality finish with Tapper & Double Ball Bearing System with AUE Motor
- Long lasting & durable

Available in different colours with stainless steel body finish with sun glass finish. Specialists in manufacturing of Commercial Grinders for Hotels, Hostels & Canteens.

Mfrs : **SHARAVANA ENGG. TRADERS**
Krishnasamy Mudaliar Road, R.S. Puram, Coimbatore - 641 002
Phone : 445117, 435118 Fax : 445119

TRADE ENQUIRIES SOLICITED

பலமாக்கும். பிரசவ காலத்தில் உபகாரமாக இருக்கும்.

-லலிதா பத்மனாபன்

மூன்றாம் பரிசு ரூ. 100/-

தவலை வில்லைகள்

வேண்டிய பொருட்கள் :-

பச்சரிசி - 1 டம்ளர்

(கழுவி, கல் அரித்து, நிழலில் ½ மணி நேரம் உலர்த்தி ரவை போல் உடைத்துக் கொள்ளவும். அதில் உள்ள மாவை சலிக்க வேண்டாம்)

சற்று புளித்த தயிர்- மேலே தயார் செய்து வைத்துள்ள குறுணையை இளக்கமாக (இட்லி மாவு போல்) கலந்து வைக்க தேவையான அளவு

துவரம் பருப்பு, பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு - மூன்றும் சேர்ந்து ½ டம்ளர்

வெங்காயம் - சிறிதளவு

மல்லித் தழை - சிறிதளவு

கறிவேப்பிலை - சிறிதளவு

பச்சை மிளகாய் - 2

தேங்காய்த் துருவல் - சிறிதளவு

மிளகு + சீரகம் சிறிதளவு

பெருங்காயம் - சிறிதளவு

உப்பு - ருசிக்குத் தக்கபடி.

வர.மிளகாய் - 3


செய்முறை :-

முதல்நாள் இரவு, அரிசிக் குறுணையை தயிரில் கலந்து, உப்பு சேர்த்து வைத்து விட வேண்டும்.

மறுநாள் காலையில் பருப்பு வகைகளை ½ மணி நேரம் ஊற வைத்து, கல் அரித்து, வர மிளகாய், மிளகு, சீரகம், பெருங்காயம் சேர்த்து சற்று கரகரப்பாக பந்து போல் ஆட்டி (மிக்ஸியில் ஆட்டிக் கொள்ளலாம்) தயிரில் ஊறிய பச்சரிசிக் குறுணையுடன் கலந்து அத்துடன் தேங்காய்த் துருவல், பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், மல்லித் தழை, கருவேப்பிலை சேர்த்து கடுகு தாளித்து தோசைக்கல்லில் 6 அல்லது 7 வில்லைகள் வரும்படி கையால் நீர் தொட்டுக் கொண்டு தட்ட வேண்டும். சுற்றிலும் ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு, தட்டினால் மூடி வைக்க வேண்டும். ஒரு பக்கம் ரோஸ்ட் ஆன உடன் மறுபக்கம் திருப்பி விட்டு 1 ஸ்பூன் எண்ணெய் விட்டு, ரோஸ்ட் செய்ய வேண்டும். இதிலேயே தேவையான காரம் இருப்பதால் தொட்டுக் கொள்ள ஒன்றும் தேவையில்லை.

இதில் பச்சரிசி கலந்திருப்பதால் கரகரப்பாகவும், புளித்த தயிர் சேர்ந்திருப்ப தால் கோல்டன் பிரவுனாகவும் இருக்கும். இது சிறிய வில்லைகளாக இருப்பதால், விளை யாட்டு உணவுப் பண்டமாக நினைத்து குழந்தைகள்கூட விரும்பிச் சாப்பிடுவார்கள். அக்காலத்தில் வெங்கல உருளையில் இதனைத் தயார் செய்வார்கள். ஆதலால் தவலை வில்லைகள் என்று சொல்வார்கள்.

-ஏ.கஸ்தூரி, தாராபுரம்



நோ டீவி பிளீஸ்!

கொலு பார்க்க யாராவது வரும்போது எப்பேர்ப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தாலும் தயவு தாட்சண்யமின்றி டீவியை நிறுத்திவிட்டு விருந்தினருடன் பேசுவதே நாகரிகம்.

-உஷா

ஆறுதல் பரிசு ரூ. 50/-

நவீன டோக்ளா

தேவையான பொருட்கள் :-

புளித்த மாவு - 3 கப்

தாளிக்க எண்ணெய் - சிறிது

கடுகு - 1 ஸ்பூன்

உளுத்தம் பருப்பு - 2 ஸ்பூன்

கடலைப்பருப்பு - 2 ஸ்பூன்

கருவேப்பிலை பொடியாக நறுக்கியது

மிகப் பொடியாக நறுக்கிய கொத்துமல்லி சிறிது
பச்சை மிளகாய் - 5 (அரைத்தது)
பொடியாக அரிந்த வெங்காயம் காரம்
மசாலா பொடி - தேவையானால் (அ) விருப்பமானால்
கடலை மாவு - 1½ கப்
உப்பு - சிறிது

செய்முறை :-

அடுப்பில் வாணலி போட்டு எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு தாளித்து, வெங்காய துண்டுகள், பச்சை மிளகாய், மல்லி அரைத்ததை வதக்கவும்.

ஒரு பாத்திரத்தில் புளித்த தோசை (அ) இட்லி (அ) அடை மாவுடன் கடலை மாவு உப்பு சேர்த்து, அடுப்பில் உள்ள கலவையைச் சேர்த்து கெட்டியாக (இட்லி ஊற்றும் பதத்தை விட கெட்டியாக) கரைத்துக் கொள்ளவும். கொத்துமல்லி கருவேப்பிலை கரம் மசாலாத் தூள் சேர்த்துக் கலக்கவும்.

இந்தக் கலவையை அடுப்பில் குக்கரில் அலுமினிய பாத்திரங்களில் எண்ணெய் தடவி ஊற்றி வெயிட் போடாமல் 10 நிமிடங்கள் ஆவியில் வைத்து எடுக்கவும். பிறகு வெளியில் எடுத்துத் தட்டினால் பாத்திரத்திலிருந்து டோக்ளா தனியாக வந்து விடும். இதை கத்தியால் சிறு துண்டங்கள் போட்டு சட்னியுடன் டிபனாக தரவும். அனைவரும் விரும்பிச் சாப்பிடுவர்.

-கீதா பரமசிவம், பொள்ளாச்சி



வேலிகள்

பார்க்கிற்கு வேலியாக கலர் கலரான பயன்படாத ப்ளாஸ்டிக் சீப்புகள், கலர் ஸ்கேல்கள் போன்றவைகளை வைக்கலாம். கலர் க்ரேயான்களை கம்பங்களாக மணலில் நட்டு வைக்கலாம்.

-உஷா

ஆறுதல் பரிசு ரூபாய் -50/-

புளிமா

தேவையான பொருள்கள்:-
புழுங்கல் அரிசி - ½ லிட்டர்
புளி - சிறிய எலுமிச்சை அளவு
காய்ந்த மிளகாய் - 12
பெருங்காயம் - 1 சிறிய கட்டி
உப்பு - தேவையான அளவு
சமையல் எண்ணெய் - 3 கரண்டி அளவு
கடுகு - ½ டீ ஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன்
வாசனைக்காக கிள்ளிய வர மிளகாய்-1
கருவேப்பிலை - 2 ஆர்க்கு
வெல்லம் - ஒரு சிறிய துண்டு.

செய்முறை :-

புழுங்கலரிசியை நன்றாகக் களைந்து நன்கு ஊற வைக்கவும். சிறிது வெந்நீரில் புளியை ஊற வைக்கவும். கிரைண்டரில் ஊறிய அரிசி, புளி, உப்பு, மிளகாய், பெருங்காயம் இவற்றை நன்றாக நைஸாக சற்று கெட்டியாக அரைக்கவும்.
வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் கடுகு, மிளகாய், உளுத்தம் பருப்பு, கருவேப்பிலை இவற்றை வறுத்து, அரைத்த மாவையும், வெல்லத்தையும் போட்டு நன்றாகக் கிளறவும். அடுப்பை சிறியதாக எரிய விட்டு மூடியால் மூடி அடிக்கடி கிளறி விடவும். 15 நிமிடத்திற்குள் நன்றாக வெந்து உதிர், உதிராக ஆகி விடும். பார்வைக்கு இளம் சிவப்பான நிறத்தில் உள்ள 'புளிமா' ருசியிலும் மிக நன்றாக இருக்கும். தொட்டுக் கொள்ள கட்டித் தயிரே போதுமானது.

-சூடாமணி வரதாச்சாரி,
கோயமுத்தூர்-9.


நீடித்து நிலைக்கும் வெண்மைக்கு
உஜாலா
இப்பொழுது ரூ. 3.50 நீங்கள் சேமிக்கலாம்
UJALA
FOR
SUPER WHITENESS OF
CLOTHES
(INSTANT ACTION LIQUID)
MAXIMUM RETAIL PRICE Rs. 14.00
(INCLUSIVE OF ALL TAXES)
JYOTHY LABORATORIES
BOMBAY 400 066
UJALA
FOR
SUPER WHITENESS OF
உஜாலாவின் இரகசியம்
நூதனமான மைக்ரோ ஒயிட்டனிங் மற்றும் மைக்ரோ டிஸ்பெர்ஷன் தொழில் டெக்னாலஜியில் ஜோதி லேபினுடைய லேபாரட்டரியால V+ ஃபார்முலா கொண்டு தயாரிக்கப்பட்டது உஜாலா.
இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கோடிக் கணக்கான மக்களின் இதயங்களை கவர்ந்து நிரந்தரமாக விரும்பப்படுகிறது உஜாலா. இதுவே உஜாலாவின் அபார வெற்றியின் இரகசியமாகும்.
உஜாலாவைப் போன்று தோற்றமளிக்கும் ஏராளமானவைகள் விற்பனைக்கு வருகின்றன. அவைகள் உஜாலாவின் இரகசியத்தை பெற முடியாது.
இப்போது 250 மிலி ஃபேமிலி பேக்கிலும் கிடைக்கிறது.
UJALA
From Jyothy Laboratories
ஜோதி லேபாரட்டரீஸ்
பம்பாய்.

ராஜாளி® நான்-ஸ்டிக் அதிசயம்

தொடர்கிறது...

இதுவரை தோசைக்கல், ஃப்ரை பான், கடாய் மட்டுமே தயாரித்து வழங்கி வந்த ராஜாளி இப்போது முதன் முதலாக யாரும் பார்த்திராத புதிய நான்-ஸ்டிக் இட்லி தட்டுகளும், நான்-ஸ்டிக் மில்க் பாய்லரும் தயாரித்து வழங்கி உங்களை அதிசயத்தில் ஆழ்த்த வந்திருக்கிறது.

இதெல்லாந்தான் கிடைக்கிறதே! இதிலென்ன அதிசயம்?!



அதிசயம்தான்!





- சாதாரண மில்க் பாய்லில் உட்புறம் பாலேடு படிந்து கொள்வது போல் ராஜாளி நான்-ஸ்டிக் மில்க் பாய்லில் ஒட்டாது
- தொடர்ச்சியாக உபயோகப்படுத்திய பின்பும் கூட பாத்திரத்தில் முந்தய காய்ச்சிய பால் வாசம் இருக்காது
- சுத்தம் செய்ய எளிது
- வழவழப்பான டஃப்லான் உட்புறப் பூச்சினால் பால் திரிந்து போகாது
- இது அகல வடிவமைப்பு பாத்திரமாகையால் எரிபொருள் மிச்சம்

- எண்ணெய் தடவாமலேயே தட்டிலிருந்து இட்லிகளை எடுக்கலாம்.
- இட்லி ஒட்டாததால் மாவு விரயம் ஆகாது
- நேரமும், எரிபொருளும் மிச்சம்.
- தட்டுகள் சுத்தம் செய்வது எளிது.
- எல்லா குக்கர்& இட்லி குக்கர்களிலும் பொருத்தக்கூடியது
- 4தட்டுகள் மேலும் 6தட்டுகளாக கிடைக்கிறது

நான்-ஸ்டிக்கில் இவையனைத்தும் கிடைப்பது அதிசயந்தானே!!

- [ ] தோசைக்கல் (Flat & Concave)
- [ ] கடாய்
- [ ] ஆப்பக் கடாய்
- [ ] இட்லித் தட்டுக்கள்
- [ ] மில்க் குக்கர்
- [ ] சாஸ் பான்
- [ ] ஃப்ரை பான்
- [ ] ப்ரட் டோஸ்டர்

எல்லா பிரபல பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்

ISI முத்திரையினைக் கொண்டது

RAJALI®
HOME EQUIPMENTS

50-A, Appar Swamy Koil Street, Thiruvottiyur, Madras - 600 019. ☎: 543391, 543867

வீட்டிலேயே 'கைவைத்தியம்' செய்யலாமே!

கை வேத்தியம் என்பது பாரம்பர்யமாக நம்மிடம் இருந்த அற்புதமான மருத்துவக் கலை. நவீன உலகில் அருகிவரும், பின்விளைவோ பக்க விளைவோ இல்லாதது அம்மருத்துவமுறை. இதனை வாசகர்களுக்கு தெரிவிக்க விரும்பி திருச்சி 17ல் தென்னூரில் ப்ரியா நர்ஸிங்ஹோம் வைத்திருக்கும் பிரபல சித்த மருத்துவ நிபுணரும், தற்பொழுது மத்திய அரசின் ஆயுர்வேதா மற்றும் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவியல் ஆலோசகராகவும் உள்ள டாக்டர் இரா.கண்ணனைக் கேட்டோம். இங்கு அவர் நம் வாசகிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

கேள்வி : என் மகனுக்குப் பதினொன்கு வயது ஆகிறது. இரவில் தூக்கத்தில் பிதற்றுகிறான் என்று நன்றாக தூங்க தினமும் ஒரு ஸ்பூன் தேன் கொடுத்து வருகிறேன். தேனின் மருத்துவ பயன்கள் என்ன?

டி.டி.ஜெயலெட்சுமி,
சென்னை.

பதில் - இது ஒரு பெரிய நோய் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. உங்கள் மகன் மீது நீங்கள் போதிய கவனம் செலுத்த வேண்டும். உங்கள் பையன் யார் யாரோடு பழகுகிறான், அவன் என்ன சாப்பிடுகிறான், அவனது அன்றாட நடவடிக்கைகள் என்ன என்பதை நீங்கள் கவனித்து வர வேண்டும். அடுத்ததாக உங்களுடைய மற்றும் உங்கள் கணவருடைய அரவணைப்பு அவனுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. உங்கள் மகனிடத்தில் இன்னும் அதிக அன்பு செலுத்துங்கள். அடுத்ததாக இரவில் அவனுக்கு 7 மணிக்கு எளிதில் செரிக்கக் கூடிய சத்தான உணவைக் கொடுத்து ஒன்பது மணி அளவில் உறங்கச் சொல்லுங்கள். மாலை நேரத்தில் அதிக் கடுமையான விளையாட்டுக்கள் விளையாடுவதைத் தவிர்க்கலாம். எந்த நோயும் இன்றி ஆரோக்கியத்துடன் இருக்கிறானா? என்று அருகிலுள்ள மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ளவும்.

தேனைப் பற்றி சற்று விரிவாகவே விளக்கியிருக்கிறேன். படியுங்கள்.

மரம் மற்றும் செடிகளில் உள்ள மலர்களில் சுரக்கும் ஒருவகை மதுவை தேனீக்கள் பருகி தம் உடலிலுள்ள தேன் பையில் சேர்த்துக் கொள்கின்றன. தேனியின் பையில் இருக்கின்ற அந்தத் திரவமானது ஒருவகை ரசாயன மாற்றம் அடைகின்றது. இந்தத் திரவத்தை தேனீக் கள் தேனடையில் உள்ள அறைகளில் உமிழ்ந்து சேர்த்து வைக்கின்றன. இவையே தேனாகும்.

தேனடையிலிருந்து எடுத்த புதிய தேன் இனிப்பாகவும், தெளிவாகவும்

• லலிதா ஜெயராமனுடன் டாக்டர் கண்ணன்





இளமஞ்சள் நிறமாகவும் இருக்கும். தேனீக்கள் சேகரிக்கும் தேன் மரங்களுக்கு ஏற்றவாறும், கால நிலை, இடத்திற்கு ஏற்றவாறு தேனினுடைய ருசி, குணம், மணம் முதலியவை வேறுபடும். தேனில் நம் உடலுக்குத் தேவையான இனிப்புச் சத்து, உலோகச் சத்து மற்றும் வைட்டமின் சத்துக்கள் எல்லாம் சிறு சிறு அளவில் அடங்கி இருக்கிறது. தேனில் மலைத் தேன், கொம்புத்தேன், புற்றுத்தேன், மனைத் தேன் எனப் பலவகை உண்டு. இவைகள் குணத்திலும் வேறுபடும். பொதுவாக சித்த மருத்துவத்தில் தேன் மிகச் சிறந்த அனுபான மாக பயன்படுகிறது.

தேனை சூடான வெந்நீரில் அல்லது அரிசிக் கஞ்சி தெளி நீருடன் அருந்தினால் மலக்கட்டு, செரியாமை, நீர்க்கோவை, இருமல், தொண்டையில் ஏற்பட்ட புண் ஆகியவை நீங்கும். சில பெண்களுக்கு மார் பகத்தில் குழந்தை பால் குடிக்கும் பகுதியில் ஏற்படும் வெடிப்பிற்கும், புண்ணிற்கும் தேனை தடவி வர நல்ல குணம் தரும். தீச் சுட்ட புண்ணிற்கு நல்ல தேனை தடவ புண் விரை வில் ஆறும். காலையில் ஒரு தேக்கரண்டி அளவு தேனும், அரை எலுமிச்சம் பழச் சாற்றையும், லேசான சூடான வெந்நீரில் கலந்து அருந்தி வந்தால் மலச்சிக்கல் நீங்கி வயிற்றில் அதிகரித்த அமிலச் சுரப்பினால் ஏற்படும் எரிச்சலும் நீங்கும். மிகவும் பருமனாக உள்ளவர்கள் இதனை அருந்தி வந்தால் உடல் எடை குறையும்.

எகிப்தில் ஒரு பிரமிடை தோண்டிப் பார்த்தபோது ஒரு ஜாடியில் மூவாயிரம் ஆண்டுகளான தேன் கெடாமல் அப்படியே இருந்தது என்றால் ஆச்சரியமாக இல்லையா?

முகம் பொலிவு பெறுவதற்கு தேனிலிருந்து ஒரு அழகுக் குறிப்பு சொல்லவா?

முகத்தில் கரும்புள்ளிகளோ, கோடுகளோ இருந்தால், அந்த இடத்தில் தேனை தடவி ஊற வைத்துக் கழுவி வந்தால் முகம் பொலிவு பெறும்.

ரூ.1000/- மதிப்புள்ள ராமச்சந்திரா புடவைகள் பரிசாகப் பெறும் மூன்று கேள்விகள்-


கேள்வி :- நான் வாயுத் தொல்லையால் மிகவும் கஷ்டப்படுகிறேன். இதற்கான எளிய கை வைத்திய முறைகளைக் கூறவும்.

வாசுகி,
மாரியப்பநகர்.

நீங்கள் உங்கள் வயதையும், எதைச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை வருகிறது என்பதையும் குறிப்பிடவில்லை! சிலருக்கு ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் சாப்பிடும் உணவு வகைகள், ஒத்துக் கொள்ளாமல், வாயுத் தொல்லை ஏற்படலாம். பொதுவாக பூமிக்குக் கீழே விளையும் கிழங்கு வகைகள், பட்டாணி, மொச்சை, கொண்டைக்கடலை முதலியவை சிலருக்கு ஒத்துக் கொள்ளாது.

சிலருக்கு வயிற்றிலே செரிமான சக்தி குறைந்தாலும், ஒவ்வாத உணவை உண்பதாலும், வாயுத் தொல்லை ஏற்படும். சிலருக்கு வயிற்றிலே அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகு இவ்வாறு ஏற்படலாம். பெரும்பாலோர்க்கு வயதான காலத்திலும், அதிக உடல் உழைப்பு இல்லாத காரணத்தாலும் வாயுத் தொல்லை ஏற்படும். இவர்கள் கிழங்கு வகைகளையும், வாயுப் பொருட் களையும் தவிர்க்க வேண்டும். கொழுப்பு மிகுந்த மற்றும் வறுத்த பொருட்களை நீக்கி எளிய கீரை வகைகள் மற்றும் பிஞ்சு காய் கறிகளின் கூட்டு இவைகளை அதிகமாக உணவில் சேர்க்க வேண்டும்.

மோர் ஒரு சிறந்த மருந்து. தெளிவான



இக் கேள்வி பதில் தொடரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த மூன்று கேள்விகளுக்கு ரூ.1000/- பெறுமானமுள்ள புடவைகளைப் பரிசாகத் தருபவர்கள்.

ராமச்சந்திரா சாரீஸ் (மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்) 37B ஆரியகௌடர் ரோடு, போஸ்டல் காலனி பஸ் ஸ்டாப், மேற்கு மாம்பலம், சென்னை - 33.

போன் : 4896532

புதிய

KKR

இந்தியாவின் முதல்
முத்திரைப் பெற்ற பாமாயில்.

நவீன விஞ்ஞான முறையில் சுத்திகரிக்கப்பட்டது

போஷாக்கூட்டும் சமையல் எண்ணெய்



தாய்ப் பாலுக்கு சமமானது என நிரூபிக்கப்பட்ட கே.கே. ஆர் பாமாயில் தனித்தன்மை வாய்ந்தது. இது சமையல் எண்ணெய்களிலிருந்து பல வகையில் மாறுபட்டது. பாமாயில் பாம் பழத்திலிருந்து பிழிந்தெடுக்கப்படுகிறது.

வைட்டமின் A & E இரண்டையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளதால் உயிரணுக்கள் சேதம் அடையாமல் பாதுகாத்து உடல் நலம் சீராக இருக்க உதவுகிறது. மாரடைப்பு, புற்றுநோய் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடிய அபாயத்தை குறைக்க வல்லது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.






* கே. கே. ஆரின் செம் பனை பண்ணையில் இரண்டு யூனிட் (10 செண்ட் ஒரு யூனிட்) வாங்குபவருக்கு, ஒரு வருடத்திற்கு மாதந்தோறும் ஒரு லிட்டர் கே.கே. ஆர் பாமாயில் இலவசமாக வழங்கப்படும்.

KKR பாமாயில் (இந்தியா) லிட்.,

NO. 121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை 600 011. Ph. 5375456, 5376796

ADEPT/KKR/96

கே. கே. ஆர் பாமாயில். சுத்தம் மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்.



பழைய பொம்மைகளின் முகம் 'பளிச்' என்று தெரிய நெற்றியில் சிறு ஸ்டிக்கர் பொட்டை வைத்து விடுங்கள்.

-உஷா

நீர் கலந்த நீர் மோரை அடிக்கடி பருகி வரலாம். பெருங்காயம் உணவில் அதிகமாகச் சேர்க்க லாம். இஞ்சி, கருவேப்பிலை, பிரண்டை, முடக்கற்றான் முதலியவைகளை துவையல் செய்து உணவுடன் அதிகம் உண்டு வர நல்ல பலன் கிடைக்கும். இரவு உணவினை முன் நேரத்திலேயே முடித்துக் கொள்ளுங்கள். இம்மாதிரி வயிற்றிலே வாயுத் தொல்லையால் அவதிப் படுவோர் எளிய உடற்பயிற்சி களையும் செய்து வருவது மிகவும் நல்லது.

கேள்வி :- நான் மூல நோயால் மிகவும் கஷ்டப் படுகிறேன். எவ்வளவோ வைத் தியங்கள் செய்தும் பலனில்லை. இந்த மூல நோய் எதனால் ஏற்படுகிறது? இதை வருவதற்கு முன்பே தவிர்க்க இயலுமா? வீட்டிலேயே செய்து கொள்ளும் எளிய மருத்துவ முறைகளை தெரிவிக்க முடியுமா?

சாந்தி,
சேலம்-7

பதில்:- நமது வயிற்றிலே கீழ்ப் பகுதியில் குடலில் இருந்து ஆசனவாய் வரை அசுத்த ரத்தத்தை எடுத்துச் செல்லும் நாளங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளில் ஏதேனும் ஒன்றோ அல்லது பலவோ அழற்சி ஏற்பட்டு வீங்கி ஆசன வாயில் ஓர் எரிச்சல், நமைச்சல், அரிப்பு ஆகிய குறி குணங்களைக் காட்டும். மேலும் எளிதாக மலம் கழிக்க முடியாமல் சிக்கலை உண்டாக்கும். சில சமயங்களில் மலம் கட்டினால் நோயாளி முக்கி, முக்கி மலத்தினை கழிக்க முயலுவார். அப்பொழுது மலத்திலுள்ள நீர் இறுகி, தேய்ந்து, கடினப் பட்டு இருப்பதால் அவை ரத்த நாளங்களைக் கீறுவதால் அதிலிருந்து ரத்தம் கசியும். சில சமயங்களில் மலத்தைக் கழிக்க அதிகமாக முக்குவதால் மூலமும் வெளித் தள்ளும்.

மூலநோய் ஏன் ஏற்படுகிறது என்பதை தெரிந்து கொள்வோமா!

1) மூல நோய்க்கு முதல் காரணமாக அமைவது, மலச்சிக்கலும், பிற வயிற்றுக் கோளாறுகளுமாகும்.

2) அளவுக்கு அதிகமான காரப் பொருட்கள் சாப்பிடுதல்.

3) நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து பணி புரிதல்.

4) அளவுக்கு மீறிய யோகப் பயிற்சி

5) பெண்களுக்குக் கருவுற்ற காலத்தில் ஆசனப் பகுதியிலுள்ள ரத்த நாளங்கள் கருப் பையின் அழுத்தம் காரணமாகவும், அதே போல் சிலருக்குக் கருப்பையில் உருவாகும் பெரிய கட்டி, கழலைகளினால் அழுத்தம் ஏற்படுவதாலும் மூல நோய் உண்டாகும்.

6) ஆண்களுக்கு புரஸ்த கோள (Prostate gland) வீக்கத்தினால் நீர்த் தாரையில் தடை ஏற்பட்டு சிறுநீர் கழிக்கும்போது சிரமத்துடன் சிறுநீர் கழிக்க முயற்சி செய்வதாலும் மூலநோய் ஏற்படுவது உண்டு.

7) சிலருக்கு இந்நோய் பரம்பரை நோயாகவும் வருவது உண்டு.

8) சிலருக்கு அஜீரண கழிச்சல், சீதக் கழிச்சல் முதலியவை அடிக்கடி ஏற்படுவ தாலும் அதனைத் தொடர்ந்து மூல நோய் உண்டாகும்.

9) சாதாரணமாக எப்பொழுதும் உட்கார்ந்து கொண்டே பணியாற்றுபவர்களுக்கும், அடிக்கடி பேருந்து போன்ற வாகனங்களில் நீண்ட தூரம் பயணம் செய்பவர்களுக்கும் மூலநோய் வர அதிக வாய்ப்பு இருக்கின்றது.

10) மனச் சிக்கலும், மூல நோய் ஏற்பட காரணமாக அமைகிறது என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா?

மூல நோயைத் தவிர இந்நோயின் தொடர்பாக ஆசன வாய் வெடிப்பு, ஆசன வாய் புண், சில சமயங்களில் ஆசனவாயில் கட்டி ஏற்பட்டு உடைந்து பவுத்திர நோயும் உண்டாகும். பெரும்பாலோர் இந்த மூல நோயும், பவுத்திர நோயும் ஒன்றே என எண்ணுவார்கள். ஆனால் இரண்டும் ஒன்றல்ல. வேறுபட்டது. வேறு வேறு

நோய்களாகும்.

மூலநோயைத் தவிர்க்க சில முறைகள்

1) மலச்சிக்கல் வராது பார்த்துக் கொள்ள வேண்டும்.

2) உணவில் அதிகமான காரப் பொருட்களை நீக்க வேண்டும்.

3) அதிகமான அளவில் தண்ணீர் பருக வேண்டும்.

4) ஒரே இடத்தில் உட்கார்ந்து இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

5) சிறப்பாக நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பதோடு தற்காலத்தில் அதிகமாகப் புழக்கத்தில் உள்ள ரெக்ஸின் இருக்கைகளில் உட்காருவதைத் தவிர்க்க வேண்டும்.

மூல நோயாளிகள் கடைபிடிக்க வேண்டிய எளிய உணவு முறைகள்.

1) நாட்பட்ட மலச்சிக்கலில் இருந்து விடுபட்டாலே மூல நோயைத் தவிர்க்கலாம். எனவே அதிகமாக பழங்களை உண்டு வருவது நல்லது. திராட்சை, ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு, தர்பூசணி போன்ற பழங்களை உண்ணலாம். பழங்களை உண்ண ஆரம் பிப்பதற்கு முன் சில நாட்கள் உண்ணா நோன்பு இருப்பது நல்லது. இம்முறை நீரழிவு நோயாளிகளுக்குப் பொருந்தாது. எனவே நீரழிவு நோயாளிகள் உணவு முறைகளில் பழங்களைத் தவிர்த்து மற்றவற்றைக் கடைபிடிக்கலாம்.

2) உணவில் கொழுப்புச் சத்துக்களைக் குறைத்து விட்டு பால், மோர் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிறப்பாக நீர் மோரை அதிக அளவில் பருகி வர வேண்டும்.

3) காரமான உணவு, மசாலாப் பொருட்கள் தவிர்க்க வேண்டும்.

4) அதிகமாக கீரை வகைகள் சிறப்பாக துத்திக் கீரை, தாளிக்கீரை, பசலைக்கீரை, வெந்தயக்கீரை சேர்த்துக் கொள்ளலாம்.

5) கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு சேர்க்கலாம்.

6) காய்கறிகளில் எளிதில் செரிக்கும் பிஞ்சு காய்களை வேக வைத்து கூட்டு போல் செய்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

7) மேலும் இந் நோயாளிகள் வாயகன்ற ஒரு பேசினில் இளஞ்சூட்டுடன் உள்ள வெந்நீரை எடுத்துச் சிறிது சோற்றுப்புப் போட்டு அதில் பத்து நிமிடம் உட்கார்ந்து இருப்பது நல்லது.

இந்த மூல நோயால் பல ஆண்டுகள் அவதிப்பட்டு எனது சித்த மருத்துவ சிகிச்சையில் முற்றிலும் குணமான திருமதி.லலிதா ஜெயராமன் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

"நான் வேலைக்குப் போகவில்லை. குடும்பத் தலைவிதான். எனக்கு இப்போது வயது அறுபத்தி இரண்டு. ஒரு வருடத்திற்கு முன்பு மூல நோயால் நான் மிகுந்த பாதிப்பு அடைந்தேன். எனக்கு 'வெளி மூலம்' வந்து நான் பட்ட கஷ்டங்கள்... வேதனைகளை இப்போது நினைத்தாலும் அழுகையே வந்து விடும். மூல ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். வயதாகி விட்டதே. ஆபரேஷனை உடல் தாங்குமா? என்ற பயம் வந்து விட்டது. அப்போதுதான் என் அக்கா பெண் தங்கம் திருச்சி சித்த மருத்துவ நிபுணர் டாக்டர்.கண்ணன் பற்றிக் கூறினாள். ஆபரேஷன் இல்லாமல் மூலத்தைக் குணப் படுத்தி விடலாம் என்று அவர் கூறியதும் மிகுந்த சந்தோஷம் அடைந்தேன். ஒரு வருடம் நான் மூல நோயால் அவதிப்பட்டதை இருபதே நாட்களில் மருந்துகள் மூலம் குணப்படுத்தி என்னையும் எங்கள் குடும்பத்தினரையும் டாக்டர்.கண்ணன் வியக்க வைத்து விட்டார். அவர் கூறிய உணவுக் கட்டுப்பாடுகளைக் கடைபிடித்து இப்போது பூரண குணம் அடைந்து விட்டேன்"

கேள்வி :- கல்லூரியில் பயிலும் மாணவி நான். எனக்குப் படித்த பாடங்கள் எதுவும் மனதில் நிற்பதில்லை. அதேபோல் தேர்வுக்குச் செல்லும்போது எவ்வளவு கஷ்டப்பட்டு மூன்று படித்தாலும் அவைகள் ஞாபகத்திற்கு



படிக்கட்டுகளுக்கு
விரித்த துணியின் மேல் வாடாமல்லி,
சாமாந்தி, போகன்
வில்லாப் பூக்களை செல்லோட்டேப்பால்
ஒட்டி வைத்தால்
நான்கு நாட்களுக்கு மேல்
வாடாமல் இருக்கும்.

-உஷா

வருவதில்லை. சுருக்கமாகச் சொன்னால் அதிக ஞாபக மறதி ஏற்படுகிறது. இந்த ஞாபக மறதியைப் போக்க எளிமையான மருத்துவ முறைகளை கூறுங்களேன்.

P. காயத்ரி, மேட்டூர்

பதில்: தற்காலத்தில் இந்த ஞாபக மறதி படிக்கின்ற மாணவ, மாணவிகளை ஆட்டிப் படைக்கின்ற ஒன்றாக ஆகி விட்டது. இந்த ஞாபக மறதிக்கு பல காரணங்கள் உண்டு. தீவிரமான நிலையிலுள்ள ஞாபக மறதி நோய், விபத்துக்களால் ஏற்படும் தலைக் காயங்கள், மனக்குழப்பம், மூளைக் காய்ச்சல், மூளையில் ஏற்படுகின்ற கட்டிகள், வலிப்பு நோய், அதிகமாக போதைப் பொருட்களை பயன் படுத்துதல், முதுமை போன்ற காரணங்களால் ஏற்படும். இவைகளுக்கு முறையான சிகிச்சை மூலமே நிவாரணம் பெறலாம்.

சாதாரணமாக உங்களைப் போன்ற மாணவிகள் இரவில் நெடுநேரம் விழித்திருந்து படித்துச் சரியாகத் தூங்காமல் தேர்வுக்குச் செல்லும்போது, தேர்வுக் கூடத்தில் நன்கு தூக்கம் வரும். படித்ததும் ஞாபகத்திற்கு வராது. அவ்வாறு இல்லாமல் மாணவிகள் இரவில் விரைவில் தூங்கி விடியற்காலையில் எழுந்து படித்தால் படித்தவை யாவும் மூளை யில் நிலைத்திருக்கும். ஏனென்றால் நன்றாக உறங்கி மூளை முழு ஓய்வுடன் இருப்பதால் காலையில் புத்துணர்ச்சியுடன் இருக்கிறது. மேலும் விடியற்காலை நேரத்தில் ஓஸோன் காற்றுப் படலமும், இருப்பதால் அதுவும் மூளைக்கும், உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும். மாணவிகள் மட்டுமல்ல பொதுவாக எல்லோருமே நல்ல சத்துணவுகளை உண்டு, உடற்பயிற்சியும் செய்து வந்தால் பலன் அளிக்கும்.

ஞாபக சக்தி, அறிவுக்கூர்மையையும் வளர்த்துக் கொள்ள கீழ்க்கண்ட எளிய மருத்துவ முறைகளையும், பயிற்சிகளையும் செய்து வரலாம்.

வல்லாரைக் கீரை ஞாபக சக்திக்கு சிறந்த டானிக் போன்றது. வல்லாரையைத் துவை யல், கறி, கீரை முதலியவைகளாக சமைத்து உண்ணலாம். பச்சையாகவும் சாப்பிடலாம். வல்லாரையை கற்ப முறைப்படி உண்டு வர சிறந்த பலனைக் கொடுக்கும். இதைத் தவிர மாணவர்கள் நல்ல ஞாபகச் சக்தி வளர பசுவினைப் போல் பயிற்சி செய்ய வேண்டும். பசு என்ன செய்கிறது? ஓரிடத்தில் புல்லை மேய்ந்து அவசர, அவசரமாக சேமித்து வைத்துக் கொள்கிறது. பிறகு ஓரிடத்தில் ஆற அமர அமர்ந்து மேய்ந்த புல்லையெல்லாம் நன்றாக அசை போட்டு உண்கிறது. அதைப் போல மாணவனும், படித்தவற்றை ஓய்வாக அமர்ந்து மீண்டும், மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து பார்க்கும் பயிற்சி செய்து வந்தால் படித்த பாடங்கள் ஞாபகத்தில் வரும். இவ்வாறு பயிற்சி செய்வது மாணவனுக்கு மட்டுமல்ல நம் அனைவருக்குமே நல்ல பலன் தரும்.

இவை தவிர இன்னும் சில மூலிகைகளை ஞாபக சக்தியும், அறிவுக் கூர்மையும் பெற பயன்படுத்தி வரலாம்.

1) திருநீற்றுப் பச்சிலை என்ற மூலிகையை பாலில் அரைத்துச் சாப்பிட்டு வரலாம்.

2) தாமரை இலையை நிழலில் உலரப் போட்டு இடித்துப் பொடித்து வைத்துக் கொண்டு காப்பிக்குப் பதிலாக அருந்தி வரலாம்.

3) வாலுளுவை அரிசியை சாப்பிட்டு வந்தாலும், பிறவியில் ஏற்படும் மூளை வளர்ச்சியின்மைக்கும், ஞாபக சக்திக்கும், நல்ல பலன் தரும்.

4) கரிசலாங்கண்ணியையும், கீரையாகச் சமைத்து சாப்பிட்டு வரலாம்.

5) தேற்றான் கொட்டையை முறைப்படி மருந்து செய்து சாப்பிட்டு வரலாம்.

6) அருகன் வேரை கஷாயம் செய்து அருந்தி வரலாம்.

நல்ல ஞாபக சக்தியும், அறிவுக் கூர்மையும் பெற நல்ல சூழ்நிலை, நல்ல உணவு இவைகளோடு தியானப் பயிற்சியும், யோகப் பயிற்சியும் சிறந்த பலனைக் கொடுக்கும்.

கொலுவில் ஒரு படி முழுவதும் குழந்தைகள் செய்த கைவினைப் பொருட்களையே வைக்கலாம். (அது ஸ்பாஞ்ச் பொம்மையோ, காகிதக் குருவியோ... எதுவானாலும் சரி...) அவர்கள் சந்தோஷப்படுவார்கள் முடிந்தால் தயாரிப்பு... என உங்கள் குட்டி வால்களின் பெயரை எழுதி விடுங்கள். சந்தோஷப்படுவார்கள்.

-உஷா

சிகப்பழகு வண்ணத்தை, இங்கு பார்க்கலாம்தான்...
மென்மையை தொட்டு உணர முடியாதே!



சிகப்பழகு பெற வேண்டும்...
மேனி மென்மையாக வேண்டும் என்பதே
உங்கள் கனவு அல்லவா! இதற்கெனவே,
இப்பொழுது வந்துவிட்டது - ஃபேர் அண்ட்
லவ்லி ஆக்டிவ் ஃபேர்னெஸ் மாயிஸ்ட்சரைசர்.
இதில் ஆக்டிவ் உட்பொருட்கள் இருப்பதால்,
ஒவ்வொரு துளியும் உயர்வளம் வாய்ந்தது. இது,
மேனிக்குள் இதமாக, இயற்கையாக செயல்பட்டு
மேனிக்கு சிகப்பழகை மட்டுமல்ல... மென்மை
அழகையும் தருகிறது.

[redacted]

நல்ல உறக்கத்திற்கு KFC மெத்தைகள்

உங்கள் உடல் ஆரோக்கியமாகவும், வலிமையுடையதாகவும் முதுகு வலியின்றி நல்ல புத்துணர்ச்சியுடன் தூங்கி எழுந்திருக்க எங்களது KFC மெத்தைகளை வாங்கிடுவீர்.



எங்களிடம்

- KFC காயர் மெத்தைகள்,
- KFC காயர் ஃபோம் மெத்தைகள்
- KFC ரப்பர் ஃபோம் மெத்தைகள்

மற்றும் சொகுசான தலையணைகளும் சோபா குஷன்களும் கிடைக்கும். இவையனைத்தும் தரமானது, நீடித்து உழைக்கக் கூடியது.

ஹோட்டல், லாட்ஜ், ஆஸ்பத்திரி, நர்ஸிங் ஹோம் மற்றும் இல்லத்திற்கு தேவையான மெத்தைகளும் கிடைக்குமிடம்.

அணுக வேண்டிய முகவரி :

Karnataka Foam & coir Company

133, Pycrofts Road, Royapettah,

Madras - 600 014.

Ph : 8526622, 8523389, 830199, 831929

எல்லா வகையான மெத்தைகளுக்கும் உத்தரவாதம் உண்டு.
Free டெலிவரி உண்டு. 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்து தரப்படும்.

திருமண மலர்

மணமகள் தேவை

■ Iyengar, Koundinya, Poosam, DOB 3/6/1965/173 cms., Inspector of Central Excise, Madras, M.A., B.L., seeks alliance from girls working in Govt. or reputed organisations. Please reply with bio-data to Box No. 13173

■ Good looking domestically trained preferably graduate girl for Kerala Iyer boy fair medium built 31, around 140 cms., 3200/-, B.Com, Vadama, Kausika, Thrikketa, employed Railways Baroda and owning house. Reply with details to Box No. 13180

■ பலிஜா நாயுடு பி.காம்., 35, சிறுவயதில் Spastic காரணமாக வீட்டிற்கு வெளியே செல்லும் போது மட்டும் சற்றே உதவி தேவை. வாகனம் உண்டு. டாக்டரின் தவறினால் ஒரு கண் இல்லை. ஊனம் வெளியே தெரியாது. நல்ல சிவப்பு, ஆரோக்கியம். கனிவு உள்ளமுள்ள பெற்றோர் பம்பாயில் உயர் பதவியிலிருந்தவர். சென்னை அடையாரில் பெரிய சொந்த வீடு. பம்பாயில் ஃப்ளாட், தமக்கையும், சகோதரர்களும் வசதியான பணியில் உள்ளனர். தம்பியை மிகவும் நேசிப்பவர்கள். மேல் நடுத்தர வகுப்பு வசதியுள்ள குடும்பம். நல்ல குடும்பத்து, படித்த சேவை மனப்பான்மை கொண்ட, ஆடம்பரம் விரும்பாத, நாகரிகமான நல்ல பழக்கங்களும், கூட்டுக் குடும்பச் சூழலில் அனுசரித்து, தமிழ் கலாச்சாரத்துடன் வாழும் அடக்கமும் கொண்ட வரன் தேவை. எங்கள் Spastic மகனுக்கும் அவனுக்கு வாய்க்கக் கூடிய வரனுக்கும் அடிப்படை தேவைக்கான வருவாய் உறுதியுள்ளது. அவனே நடத்தக்கூடிய சிறு தொழிலோ ஏஜென்ஸியோ ஏற்பாடு செய்ய உள்ளோம். அதில் அவனுடைய மனைவியும் ஈடுபடும் ஆற்றல் இருப்பின் நல்லது. ஜாதி, மதம், விதவை என்ற வேறுபாடில்லை. சற்றே ஊனமுற்றவர்களும், வெளிநாட்டவர்களும் விண்ணப் பிக்கலாம். பெட்டி எண் : 13191

■ Tamil Brahmin divorcee in forties earning Rs. 1.5 lacs p.a. propertied seeks a loving and caring bride with or without encumbrance from large affectionate families. No dowry or caste bars. Box No. 13193

■ Vadamal Iyer boy, Naithraba Kashyapa Gothram, Revathi, 35/168 cms, fair, B.A., LIC Career Agent, salary Rs. 4000/- p.m., Angaraka Dosham seeks girl with minimum height of 5'.2", fair, domestically well trained. Subsects no bar. Box No. 13231

■ ஐயர், பிரஹசரணம், கௌசிகம், வயது 37/எஸ்.எஸ்.எல்.சி, ரூ. 1200/- சிவப்பு நிறம். சென்னை தனியார் நிறுவனத்தில் சுருக்கெழுத்தாளர் பெண் வீட்டாரோடு சேர்ந்து வாழ தயாராக உள்ள வரனுக்கு நல்ல குடும்பத்து, வசதி உள்ள, வேலை பார்க்கும் பெண் தேவை. பெட்டி எண் : 13232

■ Mukkulathor (Kallar) 28/183, B.E., Ph.D. (USA) employed USA seeks bride below 26 years fair tall educated metropolitan city convented first class BEs graduates, Post graduates, no doctors upper caste mixed parentage acceptable. Horoscope, Bio-data to Box No. 13233

■ Correspondence invited from parents of fair good looking graduate preferably employed girl in LIC/ Bank. Box No. 13234

■ Alliance invited for professionally qualified Thuluva Vellala veg. boy 27/170/6000/- decently employed, from Mudaliar (Subsect acceptable) good looking, domestically trained graduate and employed girl. Reply with horoscope and family details to Box No. 13235

■ Alliance invited from cultured graduate girl for a development officer working in LIC. 32/9000/-, handsome, Vadamal Bharadwajam. Star Poorattathi. Contact Box No. 13236

■ Alliance invited from cultured graduate girl for B.Com, working in a Private Co. 34/5000/- tall, handsome Vadamal Mowthhalya Star Jyeshta. Box No. 13237

■ ஐயர் பிரஹசரணம் கௌசிக கோத்ரம் சதயம் வயது 29, எம்.காம்., துபாயில் ரூ. 35,000/- சம்பளம், 6 அடி உயரம், பையனுக்கு நல்ல குணமும், உயரமும் சிவந்த நிறம்,

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்ய, கட்டணம் ரூ. 100/-. இதை சென்னையில் மாற்றலாகக் கூடிய டிமாண்ட் டிராப்ஃடாக, "மங்கையர் மலர்" என்ற பெயருக்கு எடுத்து விளம்பர வாசகத்துடன் அனுப்ப வேண்டும். மணியார்டர், போஸ்டல் ஆர்டர் காசோலை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விளம்பரக் கட்டணத்தை எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து பணமாகவும் செலுத்தலாம்.

வங்கியிலோ/கம்பெனி செக்ரட்டரி வேலையிலோ உள்ள பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13238

■ Arya Vysya M.Com/30/170, Business, well settled seeks alliance from same caste educated girls. Reply with horscope to the Box No. 13239

■ தமிழ் ஐயர், வடமாள் பாரத்வாஜம், கேட்டை, 35/5.8"/ பி.காம் மற்றும் கம்ப்யூட்டர் பயிற்சி பெற்று family visa உடன் மஸ்கட்டில் பணிபுரியும் பையனுக்கு பட்டபடிப்பு படித்து வேலைக்கு செல்லக் கூடிய பெண் தேவை. (பெண் கம்ப்யூட்டர் அல்லது ஆசிரியை பயிற்சி பெற்றிருப்பின் நலம்) பையனுக்கு சென்னையில் சொந்த வீடு உள்ளது. கேரளா பிராமின் தவிர்க்கவும். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13240

■ வடகலை அய்யங்கார் கௌண்டன்ய கோத்ரம், அசுவதி வயது 34, உயரம் 5.4", பி.காம், ரூ. 2000/- சென்னையில் தனியார் நிறுவனமொன்றில் நிரந்தர வேலையில் உள்ள பையனுக்கு படித்த வேலைக்குச் செல்லும் மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 13241

■ 32, Kasyapa, Thiruvathirai, DME (Mech. Engineer), self employed, decent income seeks graduate employed bride. Early simple marriage. Contact phone No. 8256941. Box No. 13242

■ ஐயர், பரத்வாஜ கோத்ரம், ஸ்வாதி, வயது 46, சுயதொழில், நல்ல வருமானம், ஆன்மீகவாதி, ஆழ்ந்த பக்தி, கர்நாடக இசை தேர்ச்சி, கண்பார்வை இல்லாதவருக்கு 35 வயதுக்குள் குடும்பப்பாங்கான. பரந்த. தியாக மனப்பான்மை உள்ள பிராமணப் பெண் தேவை. பெட்டி எண் : 13243

■ மாத்வா, கன்னடா, அரவத்து வக்குலு, பாரத்வாஜ, ரோஹிணி வயது 32, 5.8" பி.எஸ்ஸி, பம்பாயில் தனியார் கம்பெனியில் Executive ஆக பணிபுரியும் பையனுக்கு, ஹிந்தி தெரிந்த, வேலையில் உள்ள 26 வயதிற்குள் உள்ள பட்டதாரி பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13244

■ Fair, good looking employed girl of transferable job for Vadamal Iyer boy Uchatya Gothram, star Uthiram, Officer Nationalsed Bank, 26, 165cms. Apply with horoscope and family details to Box No. 13245

■ சோழிய வெள்ளாளர் பிள்ளை, வயது 29, (பி.காம்.) உயரம் 175 செ.மீ. ஆயில்யம் 2ஆம் பாதம். அசைவம். சென்னையில் சொந்த தொழில் ரூ. 10,000/- வருமானம். மணமகனுக்கு அழகான பட்டப்படிப்பு படித்த நல்ல குணமுள்ள, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13246

■ Kerala Vadama Kousika Pooradam, 38/174cms graduate own business affluent cultured family seeks unemployed graduate Kerala girl. Reply with horoscope. Box No. 13247

■ Tirunelveli Saiva Pillai very fair, good looking post graduate, State Bank/40/170/Rs. 9500/- widower with 2 kids aged 10/5 yrs. very highly placed family with good connections seeks good looking bride preferably graduates, domestically well trained interested to groom the kids from orthodox vegetarians/Brahmins. No expectations. Respond with full particulars to Box No. 13248

■ Alliance invited from a fair, graduate, homely girl for a Sozhiya Vellala Pillai, 28 yrs. C.A. (Final), drawing salary around Rs. 5000/- p.m. own house. Other castes like Iyer, Mudaliar family are also acceptable. Apply with horoscope to Box No. 13249

■ பரணி, கௌசிகம், வயது 30, பி.ஏ. வரை, மாத மொத்த வருமானம் ரூ. 5,000/- and above (Engine Valves, Madras) என்கிற வரனுக்கு, +2 வரை படித்த வேலையுள்ள பெண் தேவை. பெட்டி எண் : 13250

■ Alliance invited for Hindu Tamil vegetarian Brahmin Saiva Pillai bachelor Executive, from good looking home loving employed vegetarian girl between 33 to 37. No bars. Box No. 13251

■ Alliance invited for Vadama, Srivatsa, Pooradam, 29 yrs. 178 cms, Merchandiser, European buying house, Rs. 6000/- p.m. from fair, religious, graduate girls. Reply with horoscope to Box No. 13252

■ Iyer, Vathima, Athreya, Uttiram padam IV, 34/ M.Sc/174/5500/-, very fair, employed in Central Govt., Bombay having Govt. accomodation seeks suitably employed girl. Apply Box No. 13253


■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், மூலம், 43/165 செ.மீ./ரூ. 11,000/- உதவி மேலாளர், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி, மூன்று ஆண்டுகளுக்கு முன் தாரமிழந்தவர். இரண்டு ஆண் குழந்தைகள் 15, 11 உட்பிரிவுகள் சம்மதம். பரந்த உள்ளமுள்ள பெண் தேவை. ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் : 13254

■ Brahacharanam, Haritha, Karthigai, M.Com, ACWAI, 29/163/6500/- AAO, LIC, seeks working girl with good family background from Insurance. Parents send horoscope to Box No. 13255

■ Alliance invited from good looking graduate employed girl for handsome Iyer boy Vadamal, Bharadwajam, Pooradam, M.Com, 29/162/8000 own flat. Employed Tata Groups, Madras as Internal Auditor. Reply with horoscope and family details to Box No. 13256

■ Sourashtra 170 cms, 29, B.E., Rs. 10,000/- seeks alliance from qualified good looking bride of respectable family. Apply with horoscope and other

விளம்பர வாசகங்கள் கண்டிப்பாக 30 வார்த்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது. விளம்பர வாசகங்களை அனுப்பும் போது பெட்டி எண்ணுடன் விளம்பரம் செய்ய வேண்டுமா அல்லது விலாசத்துடன் பிரசுரம் செய்ய வேண்டுமா என்பதைத் தெளிவாக எழுத வேண்டும். ஒன்றும் குறிப்பிடவில்லை என்றால் விலாசம் பிரசுரிக்கப்படும்.



Saasthaa

நல்ல கிரைண்டர்

தயாரிப்பாளர்கள்

ராஜா ஹோம் அப்ளையன்ஸ் லிமிடெட்

430, கண்ணுசாமி கவுண்டர் தெரு, ரத்தினபுரி, கோவை-27

கிளைகள்

181, நார்த் உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17.

635, 100அடி ரோடு, காந்திபுரம், கோவை - 12.

83, மதுரை ரோடு திருச்சி - 8.

TRICHY

RESIDENTIAL AND OFFICE SPACE FOR SALE

1, 2, & 3 bed room apartments with excellent features

PROJECTS

1. **KOUSALYA ESTATE** - next to Bishop Heber College, Vayalur Main Road, Puthur.
2. **SRISHTI COURT** - opp. UCO Bank, Salai Road, Thillainagar.

EXCITING OFFER FOR 4TH FLOOR KOUSALYA ESTATE HURRY!!

Project Managers :


LAVANYAA PROPERTY DEVELOPERS PRIVATE LIMITED,
C-24, Fort Station Road, Thillainagar, Tiruchirapalli - 620 018.
✆ : 0431 - 31447, 468372 Fax : 468682

Regional Contacts : - Time - 8.00 am - 7.00 pm

Madras - V.S. Jagannathan - 044 - 8527227

Mumbai - Sri Prasanna - 022 - 5601790. New Delhi - R. Karnan - 011 - 6810960.

G J Advtg.



வானளாவிய நம்பிக்கை



அழகுக்கு அழகு சேர்க்க...

பாலு ஜுவல்லர்ஸ்

72, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை 600 017.
போன் : 4341812/4341741/4341217/4343030 பேக்ஸ் : 4343377

FIXED DEPOSITS

21%	24%
ONE YEAR	TWO YEARS

பாலு பைனான்ஸ் பாம்பன் ஆயில் மில்ஸ் (பி) லிட்.,

family particulars. Box No. 13257

■ பம்பாயை சேர்ந்த மதுரை சௌராஷ்டிரா சவண கோத்திரம் சிம்மம், மேஷம், 35/158/5000 லிமிடெட் கம்பெனியில் வேலையிலுள்ள மணமகனுக்கு +2/டிகிரி படித்த மணமகள் தேவை. பெட்டி எண் : 13258

■ இந்து நாடார் வகுப்பைச் சார்ந்த மெடிக்கல் ஷாப் வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. D.Pharm படித்திருந்தால் மிகவும் நல்லது. மதுரையைச் சுற்றி 80 கி.மீ தொலைவில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். பெட்டி எண் : 13259

■ Wanted bride for Sankarithi Gothram, Vadagalai Iyengar boy, star Poosam, age 33 yrs. Central Govt. employed, salary Rs. 4000/- Simple and home loving girl. Simple marriage. Contact Box No. 13261

■ Wanted home loving, educated girl for SSI Businessman, B.Sc Maths, 39/170, Bharadwaja/ Vadama divorcee without encumbrance, settled in Madras. Reply with horoscope to Box No. 13262

■ வடமாள், பாரத்வாஜ கோத்திரம், எம்.ஏ படித்த, எல்.ஐ.சி. ஏஜெண்டாக வேலை பார்க்கும் 32 வயதான மணமகனுக்கு நடுத்தர/ஏழை பிராமண பெண் 28 வயதுக்குள் தேவை. பெட்டி எண் : 13263

■ Vadama, Koundinya, Iyer boy, 31 yrs. Avittam, 6000/-/160, Central Govt. Delhi requires transferable, Bank/LIC employed brides. Box No. 13264

■ Vadama, Koundinya, Iyer boy, 30 yrs. Ayilyam padam 4, 6000/-/160, Public Ltd. Company, Coimbatore requires employed brides. Box No. 13265

■ ஐயர் வடமாள்/சுக்லயஜுர் கௌதம 27/5000/-/5'.4" நல்ல வேலையில் உள்ள பையனுக்கு டிகிரி படித்த வேலையில் உள்ள பெண் தேவை. பெண் உயரம் 5.2" மிகாமல் இருத்தல் வேண்டும். ஜாதகம் மற்றும் குடும்ப விபரத்துடன் அணுகவும். பெட்டி எண் : 13266

■ Keralite Iyer Vadama, Kousika, Krithigai, 45, Bank Officer seeks alliance from good looking girl from decent family around 36 employed or unemployed. Box No. 13268

■ இந்து மருத்துவா (தெலுங்கு) படிப்பு (எம்.ஏ) வயது 28/165 செ.மீ. தனியார் நிறுவனம் ரூ. 3000/- பெறும் அழகான சிவந்த நிறமுடைய வரனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த வேலை செய்கிற செய்யாத பெண் தேவை. தொடர்பு கொள்க. பெட்டி எண் : 13269

■ ஐயர், கௌண்டின்ய கோத்ரம், அஷ்டஸஹஸ்ரம், உத்திரட்டாதி 46, 175 செ.மீ. பம்பாய் தனியார் நிறுவனம் 6000/- வரனுக்கு பெண் தேவை. சமீபத்தில் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு பூரண குணம் அடைந்தவர் (Angioplast) கணவனை இழந்தவர்களும், சட்டப்படி விவாகரத்து பெற்றவர்களும் (வாரிசு இல்லாதவர்கள்) விண்ணப்பிக்கலாம். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13270

■ Wanted Telugu Devanga Post graduate bride with Chevvai dosham for groom 28/173, M.Sc., M.Phil., PhD, in permanent Government Service. Apply with horoscope to Box No. 13271

■ Vadamal, Vadhoola, Thiruvadhirai, 32/5.11"/ M.Com., ICWA, Manager reputed company, Madras, seeks good looking, decent family backgound, employed girl. Box No. 13272

■ Saiva Pillai, Uthirattadhi, 26/5.1"/P.R.O. in a leading Travel Agent Company, Madras seeks good looking, decent family background employed/unemployed girl. Box. 13273

■ கேரள ஐயர் அஷ்டசஹஸ்ரம் கௌசிக கோத்திரம் மகம், வயது 29, உயரம் 5.10", பி.காம். பெங்களூரில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் பையனுக்கு தகுந்த குடும்பப் பாங்கான வேலைக்கு போகும் பெண் தேவை. பிள்ளையின் மாத வருமானம் ரூ. 5000/-. பெட்டி எண் : 13274

■ Vadamal twins 33/5.6"/Bharadwaja/Ayilyam, employed in New India Assurance and Alacrity Housing Co., beased at Madras. Rs. 5300/6500, graduates , seeks employed/unemployed graduate girls. Reply with horoscope to Box No. 13275

■ சைவ வேளாளகுலம், 29 வயது, 166 செ.மீ. மாநிறம், கம்பீரத் தோற்றம், எம்.டி. படித்து அரசாங்க மருத்துவமனையில் டாக்டராக பணிபுரியும் மண மகனுக்கு, அதே குலத்தைச் சேர்ந்த டாக்டருக்குப் படித்த பெண் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் பெண் தேவை! பெண்ணின் பெற்றோர்கள் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13276

■ Alliance invited from fair, smart, youngish looking girls below 23 yrs. preferably working in Bank, LIC or other reputed concerns transferable to Trichy for Iyer boy, Koundinyam, Anusham/27/B.E. Electronics/ Chargeman, HAPP (Defence), Trichy. Subsects no bar. Reply with horoscope and family details to Box No. 13277

■ Settled bride for Bramachari crossing Fifty - good physic, pleasing personality. Ex. Government Official, good family background, dedicating to Humanity, now cameout from Ashram, working Private Institution, independent, can settle anywhere working divorcee/widow. Caste, Religion no bar. Vegetarian preferred. Box No. 13278


■ Iyer, Brahacharanam, Haritha, Moolam, 28/165cms/ 5000/-/55Kgs., B.E. Electronics, Telecommunication Engineer, Hyderabad based seeks professionally qualified, Govt employed transferable, affluent bride only. Box No. 13279

■ ஐயர் பிரஹசரணம், பாரத்வாஜம், விசாகம், 34/5.4", எல்.ஐ.சி. சென்னை ரூ. 2200/-, 8-ல் செவ்வாய் உள்ள பையனுக்கு வேலைக்கு செல்லும் செவ்வாய் தோஷம் உள்ள பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13280

■ வடமாள், ஆத்ரேய கோத்திரம், சென்னை, நல்ல தனியார் நிறுவனம், 4000/- வயது 35, பி.ஏ. பட்டதாரி, 5.3"

விளம்பர வாசகங்கள் அனுப்பி வைத்தபிறகு, அதில் திருத்தங்களோ, மாற்றங்களோ செய்வதற்குக் கண்டிப்பாக இயலாது.


ஒற்றுமையே வாழ்வின் சாராம்சம்



தந்தையும் மகனும்

அன்பு, அக்கறை, நம்பிக்கை, தைரியம் என்ற அடிப்படைகளின் மேல் எழுந்த ஒரு இனிய உறவு. காலம் செல்லச் செல்ல வலிமையுறும் பிணைப்பு. இருவருக்கும் சக்தி ஊட்டி, போஷித்துப் பாதுகாக்கும் நட்புணர்வு அது.

நட்புணர்வு. ஒன்றுபடச் செய்யும் ஒரு உணர்வு. வாழ்வை அர்த்தமுடையதாக்கி ஒளிரச் செய்வது அது. நாளையத் தேவைகளான திருமணம், கல்வி இன்னும் பிற சுப காரியங்களுக்காகவும் திட்டமிட்டு சேமித்து எதிர்காலத்தை வாழ்வதற்குகந்த, பாதுகாப்புமிக்க இடமாக்குவதும் அதுவே. முக்கியமாக, சேமிப்பதற்கும், தேவை ஏற்பட்டால், உங்களது பணத்திலிருந்தே பெருமையுடனும் உரிமையுடனும் கடன் பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக அரியதொரு வசதியைத் தருகிறது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வாய்ப்பை நல்குகிறது.



ராம் காஷ்யப். உங்களது தேவைகளை புரிந்து கொள்கிறது. அத்துடன் அவற்றை நிறைவேற்றும் வழி முறைகளைத் தனது பல்வேறு சீட்டுத் திட்டங்கள் மூலம் அளிக்கிறது. இத்திட்டங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனத்திடையே நெருக்கத்தை ஏற்படுத்தி வாடிக்கையாளரின் தேவைகளைப் புரிந்து கொள்ளவும் தக்க சமயத்தில் அவற்றை நிறைவேற்றி வைக்கவும் வகை செய்கிறது. நிலையில்லாததோர் உலகினிலே பாதுகாப்பான ஒரு நங்கூரம் ராம் காஷ்யப் சிட்ஸ். எதிர் காலத்திற்காக முதலில் திட்டமிடுவது, பின் உடனேயே சேமிப்பில் இறங்குவது என்ற கருத்தினை உருவாக்கியவர்கள்.

விரைவீர்!
பாதுகாப்பானதோர்
எதிர்காலத்திற்கு
ஒன்றுபடுவோம் வாரீர்!



Ram Kaashyap
Chits Private Limited
Member Ram Kaashyap Group

நிர்வாக அலுவலகம் : 1/1, சர் தேசிகா ரோடு, (ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகில்), மைலாப்பூர், சென்னை 600 004. போன் : 4970205, 4998325.

கிளைகள் : சென்னை : • ஆழ்வார்பேட்டை, மேற்கு மாம்பலம், அண்ணா நகர், அடையாறு, தி.நகர், • கோயம்புத்தூர் • கும்பகோணம் • மதுரை • தஞ்சாவூர் • திருச்சி • ஈரோடு • சேலம் • திருவாரூர் • ஹைதராபாத் • செகந்திராபாத் • விஜயவாடா • விசாகப்பட்டினம் • மீர்யால்குடா • ராஜமுந்திரி • மச்சிலிபட்டினம் • ஏலூரு • காகிநாடா

ஈடில்லா சேமிப்பு. இணையற்ற தேர்வு

Insight-412

வரனுக்கு அதே இனத்தில் நல்ல வேலை பார்க்கும் அழகான பெண் தேவை. பெட்டி எண் : 13281

■ Hindu Vellala Pillai highly respected propertied family M.B.B.S./Poorattathi/30/160/20,000/- per month seeks alliance from beautiful educated preferably fair girl. Reply with family details, horoscope to Box No. 13282

■ தெலுங்கு, யாதவா, D.M.E., Post. Dip., 32, 165 செவ்வாய் தோஷம், மாதம் ரூ. 10,000/- (டாடா நிறுவனம்) வருமானம் உள்ள, மணமகனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த பட்டதாரி 23-24 வயது பெண் தேவை. பெட்டி எண் : 13283

■ ஐயர் பிரஹசரணம், விஸ்வாமித்ர கோத்திரம், ஆயில்யம் 28/170/எம்.எஸ்ஸி/4600 சதர்ன் ரயில்வே திருச்சியில் பணிபுரியும் பையனுக்கு எல்.ஐ.சி/பாங்க்/மத்திய, மாநில அரசில் பணிபுரியும் பட்டதாரி பெண் தேவை. குடும்ப விவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13284

■ ஐயர், வடமாள், அகித கோத்திரம், ஆயில்யம், வயது 31, தஞ்சாவூர் ஜில்லா, அரசு ஊழியர், (பஞ்சாயத்து யூனியன்) சம்பளம் 3800/- பெறும் சொந்த வீடு உள்ள மணமகனுக்கு வேலைக்கு செல்லும் குணவதியான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13285

■ Iyer, Koundinya, Thiruvonam, 27/6.2"/DEE/30,000/- p.m. employed in Muscat seeks suitably qualified tall beautiful girl from decent North based families. Reply with horoscope details to Box No. 13286

■ ஐயர், பிரஹசரணம், உதிஸ்ய கௌதம கோத்திரம், திருவோணம், 32/5.11" பட்டதாரி கல்கத்தாவில் அரசாங்க வேலை சம்பளம் ரூ. 3500/- clean habits உள்ள வரனுக்கு வேலை பார்க்கும் (transferable job in India) பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். குடும்ப விவரங்கள் ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 13287

■ சௌராஷ்டிரா, 35/160/10,000/- BE., EE/NLC ல் வேலை. படித்த பட்டம் பெற்ற பெண்கள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13288

■ Alliance invited from home loving and domestically trained Vadamal girl below 35 years for D.Com., qualified Iyer groom Vathoolam, Poorattathi 4th padam, 43/179/5000/- employed in State Govt. at Madras, boy has clean habits and owns properties. Please contact with horoscope. Phone : 5570732. Box No. 13289

■ துளுவ வேளாள முதலியார், சொந்த தொழில், ரூ. 10,000/- மாத வருமானம், உத்திரம், 2ம் பாதம், 31, 173 செ.மீ. சிகப்பு நிறம், வசதியுள்ள பையனுக்கு படித்த, அழகுள்ள வசதியான வேலைக்கு போகாத குடும்ப பெண் தேவை. ஜாதகம் அனுப்பவும். போன் : 4822977, 4820354. பெட்டி எண் : 13290

■ Vadagalai, Koundinya, Hastham, 33/B.Sc/Clerk, salary Rs. 1500/- p.m. Star Hotel/Trichy, seeks fair, unemployed or employed girl. Reply with horoscope and family details. Box No. 13291

■ கார்காத்த சைவப்பிள்ளை 41/சி.ஏ. மாத வருமானம் ரூ. 30,000/-க்கு மேல் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர், மனைவியை இழந்தவர், ஆண், பெண் குழந்தைகள் 14, 11 வயது. படித்த, பண்புள்ள, பரந்த மனப்பான்மையுள்ள 30 - 35 வயதில் மணமகள் தேவை. குழந்தைகள் இல்லாத விதவைகளும் விண்ணப்பிக்கலாம். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13292

■ ஐயர், வடமாள் (சோழ தேசம்) ஸ்ரீவத்ஸம், உத்திரம் (2ம் பாதம்) 5.8", 34 வயது சென்னை பாரி கம்பெனியில் ரூ. 4500/- சிறப்பான தெய்வ பக்தியுள்ள பையனுக்கு பட்டப் படிப்பு, அழகான வேலையில் உள்ள, வேலைக்கு போகக் கூடிய அதே வகுப்பு (அ) வடமாள் பெண் தேவை. ஜாதகத் துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 13293

■ Kongu Vella Gounder, Kannam Kootam, star Kirthigai, B.E., 30/174/15,000/-. Working with a reputed company at New Delhi seeks suitable match. Graduate girls preferred. Apply with horoscope to Box No. 13294

■ Alliance invited from suitable girls parents graduate/ undergraduate, unemployed to Bharadwaja Gothram brothers 10-12-1958, Anuradha, 2-7-1962, Punarvasu, 24-8-1964, Sathayam all graduates and assessees partners of established firm dealing in wholesale pharma. Box No. 13295

■ குருக்கள் காசிப கோத்திரம் ஆருத்ரா, 35, 157 செ.மீ. பி.எஸ்ஸி, பி.எல்., மாநில சர்க்கார் பையனுக்கு, சிவப்பும்

இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில் அனுப்ப விருப்பமுள்ளவர்கள் அந்த பெட்டி எண்ணை கவரில் தெளிவாக எழுதி C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதை உரிய விளம்பரதாரருக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கப்படும். அதற்கு பதில் தெரிவிப்பது விளம்பரதாரரின் இஷ்டமே. நாங்கள் எந்தவித உதவியும் செய்ய இயலாது. அவர்களின் விலாசத்தை கொடுப்பதற்கு இல்லை. தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து இல்லை. இந்த இதழில் பிரசுரமாகிய பெட்டி எண்களின் பதிலை அனுப்ப கடைசி தேதி 30.11.96.

லக்ஷணமும் சுத்த ஜாதகமும் உடைய 28 வயதிற்குட்பட்ட படித்த பெண் தேவை. ஐயர், அய்யங்கார் உட்பிரிவும் சம்மதம். பெட்டி எண் : 13296

■ கௌண்டியம் கோத்திரம், மூலம், 3ம் பாதம், ஐயர், வடமாள், 29/ரூ. 10,000/- பி.காம்., (எல்.எல்.பி.) வரனுக்கு வேலையில்லாத அல்லது உள்ள நல்ல அழகிய பெண் தேவை. பெட்டி எண் : 13297

■ Iyer, Brahacharanam, Kasyapa, Anusham, 30/159/ B.Com. ACA working in Vietnam Multi National Sevai 8th house, need beautiful graduate girl. Subsect acceptable. Reply with horoscope family details. Box No. 13299

■ Alliance invited for Vadagalai, Srivatsa, 28/173/ 5500/- Sr. Executive in reputed travel company, Delhi, only son, chevvai dosham. Subsects no bar. Contact Box No. 13300

■ ஐயர், வடமாள், கௌண்டன்யம், அனுஷம், வடஆற்காடு, பட்டதாரி, 32/166/ரூ. 20,000, தென் சென்னையில் சொந்த ஆட்டோ மொபைல் பிஸினஸ் செய்யும் வரனுக்கு, பட்டப் படிப்பு படித்த, வேலையில் உள்ள, நல்ல குடும்பப் பெண் தேவை. பெட்டி எண் : 13301

■ Brahacharanam, Shadamarushanam, Thiruvathirai, SSLC, 38/5.0"/2,300/- employed in a Multinational firm, Madras. Coimbatore branch. Seeks employed/ unemployed girl. Subsect acceptable write to Box No. 13302

■ Vathima, Bharadwajam, Poorattathi, 26/180/AMIE employed Maruti Udyog, seeks graduate girl. Reply with horoscope to Sri. T.S. Viswanathan, Plot No. 13, 3rd Cross, Street, Srinivasapuram, Korattur, Madras - 76.

■ Iyer, Vadamal, Koundinya, Kirthigai 36/5.6", B.Com employed Private Company Rs. 3,500/- requires employed in Madras girl. Subsect no bar. Contact N. Venkataraman, 46, Angalamman Koil Street, Cuddalore - 607 001.

■ Boy 32, fair, pre-degree working in Gulf requires girl fair, employed, preferably educated Kerala natives. Contact Sivaramakrishna Iyer, Pudiya Madam (West), Kaipuzha, Kulanada P.O., Kerala - 689 503.

■ Sozhia Vellalar boy 31/165/7,000/-, fair, DEE/Asst. Manager, Private Organisation seeks educated smart degree girl from the same caste. Contact with horoscope family details: M. Ramalingam, (Retd. Tahshildar) 18, Kagiviswanathar North St., Kumbakonam - 612 001.

■ Vadama, Koundinya, Chitirai, 31/5400/-/DME/Pub. Ltd. Madras. Seeks slim, good looking girl employed (or) unemployed. Simple marriage. Write to : A. Ganapathy, 2/4, Venkatarama Iyer St., Venkatapuram, Ambattur, Madras - 53.

■ Brahacharanam, Haritha Uthiram, 33/165cms, handsome B.Sc., employed in Bank seeks good looking graduate girl (employed preferred) subsect no bar. Send horscope with bio-data to V. Vaidyanathan, IA/ 529, Ranivaikkal Lane, Thanjavur - 613 009. Phone : 24087.

■ Vadamal, Bharadwajam, Avittam, B.Com., ICWA Inter, 29/184/7000. Accounts Officer, TVS Group, Madras seeks Vadama graduate, tall, fair, good looking girl. Horoscope to A. Ramachandran, Gokul Flats, Plot No. 8/42, 6th Avenue, Ashok Nagar, Madras - 83.

■ ஐயர், வடமாள், பாரத்வாஜ, கேட்டை, பி.காம்., ஐ.டி.ஐ. சென்னையில் தனியார் கம்பெனியில் ரூ. 2,500/- வருமானமுள்ள வரனுக்கு நன்கு படித்த மற்றும் தட்டச்சு, சுருக்கெழுத்து தெரிந்த வேலை செய்யும்/வேலை செய்யாத பெண் தேவை. K. Mohan, 16, Ezhuthukaran Street, Kaladipet, Thiruvottiyur, (Near Manickam Theatre), Madras - 600 019.

■ இந்து ஆற்காடு முதலியார், எம்.காம், 29/155 செ.மீ. தனியார் நிறுவனம் ரூ. 5000/- பெறும் வரனுக்கு 25 வயதிற்குள் அழகான வேலைக்கு செல்லும் மணமகள் தேவை. தொடர்பு கொள்க : S. Balakrishnan, 4/7, Arunachala Lane, Chintadripet, Madras - 2.

■ Vadama, Kausika, Bharani, 28/184/8000/- B.E., MBA, Officer IOC, Siliguri, West Bengal, seeks tall fair graduate girl. Send horoscope and details to N. Ramu, 95, Avalkara Street, Vellore - 632 001.

■ Vadama, Gowthama, Krithigai, 183/28/5000/- M.Com., ICWA, Bank employee requires graduate, musically interested, unemployed girl from respectable family. Apply with horoscope to S. Venkataramani, 5/309, Agatheeswara Nagar, Pozhichalur, Madras - 74.

■ Vadagalai, Kousika, Chithirai, Kanya Rasi, 30 yrs. B.Sc, good habits, type institute, tuition centre wants graduate type, short hand, tailoring, domestically well trained girl. Narayanan, 1-A Tagore Street, Trichy - 21.

■ Alliance invited for Brahacharanam, Srivatsa, Bharani, 26/8000 Service Engineer in Ashok Leyland

மங்கையர் மலர் மாத இதழாக இருப்பதாலும், குறிப்பிட்ட பக்கங்களே திருமண மலர் பகுதிக்காக ஒதுக்கப்படுவதாலும், ஆனால் வருகின்ற விளம்பரங்கள் மிக அதிகமாக இருப்பதாலும், உடனுக்குடன் பிரசுரிக்க இயலவில்லை. இதுவரையுள்ள விளம்பரங்களே டிசம்பர் '96 வரை பிரசுரிக்க இருப்பதால் அக்டோபர் '96 31 வரை எங்கள் அலுவலகத்திற்கு வரும் விளம்பரங்கள் ஜனவரி '97 இதழில் பிரசுரமாகும்.

from educated, decent family brides. Reply to L. Gurumurthy, 30/D, LIG Flats (RPS) Mayapuri, New Delhi - 110 064.

■ Vadagalai, Vadhula, Punarvasu, padam (2), D.O.B. 04.07.70, B.Sc., 165 cms, working in Canara Bank, Erode, requires graduate employed bride preferably in Insurance or Bank. Apply with horoscope to Sri. D. Lakshmi Narayanan, 31, Anna Nagar, 3rd Street, Koothapakkam, Cuddalore - 607 002.

■ Iyer, Vadamal, Srivatsa, Barani, B.A., 31, 183cms, 10,000/- running own business at Cuddalore, having own house, requires employed/unemployed graduate, good looking bride. Apply with horoscope to D. Krishnamoorthy, 19, Venkateswara Nagar, Cuddalore - 607 002.

■ Iyer, Ashtasahasram, Haritha Gothram, DME, 27 yrs, 175 cms tall, earning 3,500/- Royal Enfield, Madras, seeks alliance from graduate employed girls. Subsect no bar. Contact M. Shankar, A3/60, BHEL Township, Trichy - 620 014. Ph: 554252

■ Brahacharanam, Bharadwajam, Uthiram, M.Sc., 27/181/6000/- Development Officer LIC seeks working girl transferable job with good family background. Send horoscope to N. Lakshminarayana Sharma, 20, Sannathi Street, Srivaikuntam - 628 601.

■ வடகலை, நைத்திருப காசிபம், பூராடம், 29, 5.6", பி.எஸ்ஸி, தனியார் நிறுவனத்தில் நல்ல பணியில் உள்ள வரனுக்கு அரசு/தனியார் துறையில் பணிபுரியும் மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எம்.எஸ். கேசவன். "ஸ்ரீநிவாஸ்" 27 மஜித் தெரு, பொம்மிடி - 635 301.

■ பிள்ளை, 42, 5.5" சிவந்த அழகான தோற்றமுள்ள சொந்தத் தொழில் ரூ. 10.000/- வருமானம் உள்ள மனைவியை [illegible] 15 வருடங்கள் ஆக தனித்து வாழும் நபருக்கு அழகும், அன்பும் கொண்ட குணவதியான 35 வயதிற்குட்பட்ட பெண் தேவை. விதவை/ விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கவும். சாதி மத பேதமில்லை. T.V. Jayaraman, 165-A, Dr. Radhakrishnan Road, Tatabad, Coimbatore - 641 012.

■ Tamil Iyer, Brahacharanam, Haritha Gothram, Magam, 168/29 B.Com., (ACS) Steno, Income Tax Dept. seeks Tamil/Keralite bride below 26 employed/ unemployed, subsect no bar. Contact N.R. Ramachandran, 24/316, Single Street, Nurani, Palghat - 678 004.

■ Janarthanam 117, 12th B Cross, J.P. Nagar, 2 Phase, Bangalore - 560 078 invites alliance for his son MS/29/ 175/vegetarian with clean habits. Working in INTEL USA, from parents of girls fair and beautiful, B.E./ MBA/B.Sc Computer/MBBS. Ph: 649216.

■ Vadamal Barathawajam, Kettai, 29/5.6", B.Com., 2,500/- + 1100/- Rent from own flats. Subsects accepted. Multinational, Pondicherry. Reply with horoscope to R. Venkataraman, 5/2, 27the Street, Nanganallur Madras - 61

■ தொண்டமண்டல முதலியார் 26 வயதான BE., MS. வேலை USA வருமானம் 1,50,000/- அழகான 176 செ.மீ உயரம் உள்ள மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை (உட்பிரிவுகள் சம்மதம்) பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர், மற்ற விவரத்துடன் எழுதுக. G. காந்திமதி, 40, வி.வி கோவில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை - 86.

■ 27 வயதான ரெட்டியார் பி.இ. படித்து சிங்கப்பூர் உத்தியோகத்தில் உள்ள ஒரே மகனுக்கு படித்த நல்ல நிலையில் உள்ள மணமகள் தேவை. பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர் மற்ற விவரத்துடன் எழுதுக. கே கணபதி, பிளாட் நெ: 4-எ, முதல் குறுக்குத் தெரு சிட்டிபாபு நகர், பள்ளிக்கரணை, சென்னை - 601 302

■ 30 வயதுள்ள வடமாள், ஆத்ரேய கோத்திரம், M.Tech MBA, உதவி மேனேஜராக பணிபுரியும் ரூபாய் 18,500 மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. பிறந்த தேதி பிறந்த நேரம், பிறந்த ஊர், மற்ற விவரங்களுடன் எழுதுக. தபால் பெட்டி எண். 1482, தேனாம்பேட்டை சென்னை - 18.

■ ஆற்காடு முதலியார் BE., MS., 31, USAவில் வேலை செய்யும் ரூபாய் 1,60,000/- அழகான உயரம் 5.11 மணமகனுக்கு ஏற்ற பெண் தேவை. பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர் மற்றும் முழு விவரத்துடன் எழுதுக. T.S ராமசாமி, 277, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை - 18.

■ Vadama, Srivatsa, Iyer, Anusham, 33, B.Com Building Contractor owning Coffee works and plc seeks employed bride. Contact Ramanathan (Phon

திருமண மலர் பகுதிக்குக் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

திருமண மலர்
விளம்பர பிரிவு
மங்கையர் மலர்
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097. தொலைபேசி : 2345622

6350806), 35, North Park Street, Ambattur, Madras - 53.

■ Airline Captain 47/175,Vadamal, Koundinya, Uthirattadi, One Lakh p.m., widower, three children, seeks Brahmin girls age subsects no bar. Contact Kandhaswamy, 28/6, First Main Road, Damodarapuram, Madras - 600 020. Phone : 4912060

■ For Vadhulam, Vadakalai Iyengar boy Sathayam, 36/132 black fair, widower no issue, employed in Company at Turicorin, wanted soft employed domestically trained girl. Kalai no bar. Simple marriage. A.T. Rangachari, L-349, 14th Cross Street, Thiruvalluvar nagar, Thiruvanmiyur, Madras - 41.

■ வன்னியகுல க்ஷத்திரியர், சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 28 வயதுள்ள பட்டதாரி மணமகளுக்கு (மாத வருமானம் ரூ. 5000) அதே இனத்தைச் சேர்ந்த +2/பட்டதாரி மணமகன் தேவை. போட்டோ, ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் எழுதவும். G. குப்புசாமி, 7, சுந்தர விநாயகர் கோயில் தெரு, சென்னை - 600 060.

மணமகன் தேவை

■ விபத்தில் கணவரை இழந்தவர், செட்டியார், 24 +2, 5.4" நிறம் சிகப்பு, இடம் தஞ்சை மாவட்டம், வசதியான குடும்பம், வங்கி வைப்பு தொகை மூலம் மாதம் 2000/- வருமானம் உள்ளவர், இவருக்கு மாதம் 5000/- வரக்கூடிய தொழில் அல்லது அரசு வேலையில் உள்ளவர் 35 வயதிற்குள் உள்ள மணமகன் தேவை. விவாகரத்து ஆனவர், மனைவியை இழந்தவராக இருந்தாலும், மற்ற வகுப்பினராக இருந்தாலும் எழுதுக. பெட்டி எண் : 23211

■ Alliance for Vadamal Tamil Iyer Bombay based Bank Officer, Vadhoola Gothram, Ayilyam 3rd padam, 34 years, 5.3"/160 cms from decent families. Reply with horoscope and family details to Box No. 23212

■ Well employed educated groom for Madhwa, Kannada, Haricha Gothram, Moolam star (3rd padam) no dosham, Physics graduate girl 27 yrs. written CA-Inter Examination, employed in Audit Firm. Reply Box No. 23213

■ RC நாடார் வயது 24 எம்.பி.பி.எஸ். டாக்டர் மணமகளுக்கு மணமகன் தேவை. அதே இனத்தைச் சேர்ந்த டாக்டர் அல்லது இன்ஜினியர் இவர்களிடமிருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. பெட்டி எண் : 23221

■ Alliance for Vadama Kerala Bharani post graduate 167cms, 40, well accomplished fair good looking girl from respected family from non Kousika well placed qualified bridegrooms. Box No. 23222

■ Horoscopes (matching optional) invited from Bombay based Kerala/Tamil Iyer boys, tall, well qualified/settled for graduate, Haritha, Thiruvathirai, 29/170 Domestic Airlines (office). Immediate marriage. Advt. for wider choice. Reply Box No. 23223

■ Alliance for Tamilian Adi Dravida (S.C) 25 yrs. girl working at State Govt. Hyderabad requires suitable alliance. Box No. 23224

■ Alliance invited from Arya Vysya, well qualified and employed boys, below 28 yrs. for very fair girl, B.Sc., HDISM, 22/166 (Mars in fourth), Poosam, Srivatsa Gothram. Apply with horoscope to Box No. 23225

■ Alliance invited for Tamil Iyer Brahacharanam, Sankrithi, Magam, M.Com., 27/145/LIC employed girl from professionally qualified/well employed boys. Subsect no bar. Reply with horoscope to Box No. 23226

■ Alliance invited for Srivatsa, Brahacharanam, Chithirai (II padam) 5.2" Rs. 2,000/-, 27 yrs, graduate, Computer Literate, working in Butterfly Group. Boy should be professionally qualified, well settled from a good family. Reply with horoscope Box No. 23227

■ Wanted suitable groom for Vadama/Koundinya/Bharani/27/160cms unencumbered divorcee/Pvt. employed Rs. 2,000/-. Box No. 23228

■ தமிழ்நாடு தெலுங்கு பிராமின் முலகநாடு கௌதம கோத்ரம், மிருகசீரிஷம் 30.03.63, DEE., PGDCSA, (B.Com.) பிரைவேட் கம்பெனி வேலை. பெண்ணிற்கு பட்டப்படிப்பு படித்த நல்ல வேலையில் உள்ள தெலுங்கு/தமிழ் பிராமின் மணமகன் தேவை. பெட்டி எண் : 23229

■ திருநெல்வேலி சைவபிள்ளை 5.3" எம்.ஏ. மாநிறம் மத்திய அரசில் வேலை பார்க்கும் 36 வயதுடைய பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த கவர்ன்மெண்ட் அல்லது ரெபியூட்டட் கம்பெனியில் வேலையில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண் : 23230

■ தஞ்சை சைவ வெள்ளாளர் BE (Ece.) மற்றும் கணிப்பொறியியல் பயிற்சியும் பெற்று சென்னையில் தனியார் துறையில் வேலை பார்க்கும் 22 வயது, 161 செ.மீ. உள்ள பெண்ணிற்கு BE/MBA/MCA/Dr. மணமகன் தேவை. போன். 429559. பெட்டி எண் : 23231

■ Hindu, upperclass, educated, cultured, financially very sound, Madras based alliance for very fair, very beautiful, MBA just twenty six, propertied, financially independent, innocent divorcee with son of five years. Box No. 23232

■ திருநெல்வேலி சைவப் பிள்ளை வகுப்பை சேர்ந்த, அழகும் சிவந்த நிறமும் உடைய பம்பாயில் பணிபுரியும் பெண்ணுக்கு 24/158/10,000/- + அதே வகுப்பைச் சேர்ந்த

திருமண மலர் விளம்பர வாசகத்திற்கு தனியாக படிவம் எதுவும் கிடையாது. விளம்பரதாரர்கள் ஒரு முழு வெள்ளை தாளில் வாசகத்தை தெளிவாக எழுத வேண்டும். மணமகள் தேவை பகுதியா (அல்லது) மணமகன் தேவை பகுதியா என்பதை அவசியம் குறிப்பிட வேண்டும்.

Doctor/Executive/Engineer மணமகன் தேவை. போன் : 044-4915847. பெட்டி எண் : 23233

■ வாணியச் செட்டியார், வயது 40, விதவை, உயரம் 5.2" குழந்தை இல்லை, படிப்பு எஸ்.எஸ்.எல்.சி., நிறம் சிகப்பு மணமகளுக்கு மணமகன் தேவை. ஜாதி தடை இல்லை. பெட்டி எண் : 23234

■ Alliance invited from Hindu Nadar educated employed grooms for bride M.Sc., MCA, 32/6500/- employed as College Professor. Groom in and around Southern Districts preferable. Box No. 23235

■ Alliance invited from CSI Nadar, professional grooms for medium colour good looking girl MBBS, 23 yrs. 5.3" hailing from God fearing family. Doctors preferred. Box No. 23236

■ அகமுடைய முதலியார், அசைவம், +2/26/165, உத்திரம், குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த அரசுப் பணி மற்றும் சுய தொழில் செய்யும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தகுந்த மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 23237

■ சௌராஷ்டிரா மணமகள் வியாச ரிஷி கோத்திரம் அனுஷம், வயது 25, உயரம் 5.5" MA, PGDHRM சென்னையில் பிரபல கம்பெனியில் பணி 3,600/-. பொருத்தமான வரன் ஜாதகமும் குடும்ப விவரங்களும் அனுப்பவும். பெட்டி எண் : 23238

■ மாத்வா கன்னடம், 34/150 வேலை செய்யும் பெண்ணுக்கு (Cleft Palate Operated) தமிழ்/தெலுங்கு/ கன்னடம் ஐயர் மணமகன் தேவை. மனைவியை இழந்தவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 23240

■ Alliance invited for Brahacharanam, Iyer girl, Haritha, Ayilyam, 25/161/6000, B.E., employed in a Multinational at Madras from professionals/Post graduates with clean habits. Box No. 23241

■ சைவ பிள்ளை வயது 23, BE (Mech) Asst. Engineer சுவாதி, உயரம் 164 செ.மீ. உள்ள பெண்ணிற்கு, அதே இனத்தில் BE or ME, B.Tech Engineer, Bank Officer, CA படித்த நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23242

■ Wanted decently employed tall groom from respectable family for fair girl aged 23 B.Sc., B.Ed. (M.A.) 168 cms, star Pooradam, Vadama, Vathula Gothram. Early decent marriage. Subsect no bar. Reply Box No. 23243

■ தமிழக அரசு மருத்துவமனையில் டாக்டராகப் பணிபுரியும் வயது 34 எம்.பி.பி.எஸ். டி.ஜி.ஓ. இந்து எஸ்.சி., ஏ.டி. மணமகளுக்கு கிறிஸ்தவர் அல்லாத இதே இனத்தைச் சேர்ந்த டாக்டர் அல்லது அரசாங்கத்தில் பணிபுரியும் இன்ஜினியர் மணமகன தேவை. பெட்டி எண் : 23244

■ இந்து எஸ்.சி. ஏ.டி. வயது 28, பி.எஸ்ஸி., பி.எட். தனியார் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரியும் மணமகளுக்கு கிறிஸ்தவர் அல்லாத இதே இனத்தைச் சேர்ந்த இன்ஜினியர், பாங்க், எல்.ஐ.சி. இரயில்வே, இன்சூரன்ஸ், மத்திய, மாநில அரசு உத்யோகத்தில் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெட்டி எண் : 23245

■ குழந்தையில்லாத அரசு உத்தியோகத்திலுள்ள 38 வயது விதவைப் பெண்ணுக்கு மணமகன் தேவை. மணமகன் 45 வயதிற்குள் கல்யாணமாகாத அல்லது திருமணமாகி மனைவியிழந்தவராய், கன்னட செட்டியார் குலத்தை சேர்ந்தவராய் இருத்தல் அவசியம். பெட்டி எண் : 23246

■ மாத்வ, கன்னட பிராமின், கௌசிக கோத்திரம், பரணி, நட்சத்திரம் வயது 29, படிப்பு பி.ஏ., சிவப்பு நிறமுள்ள பெண்ணிற்கு நல்ல குணமுடைய பையன் தேவை. பெட்டி எண் : 23247

■ Hindu Velama Naidu bride Sathayam, 33/162/4000, B.Sc., MBBS, seeks employed post-graduate of any discipline. Subsects no bar. Reply with horoscope and bio-data. Box No. 23248

■ Alliance invited for a fair good looking Hindu girl 25/163/2,600/- working as teacher in private school from well settled, decently employed grooms of same religion. Vegetarians preferred. Box No. 23249

■ Wanted suitable alliance for a Tamil Yadavar fair, good looking girl, B.Com/26/ preferrably from Bank or Govt. employed persons. Box No. 23250

■ கள்ளர், முக்குலத்தோர் (பட்டப் பெயர் தொண்டைமான்) கல்வித் தகுதி பி.ஏ. பி.எட்., வயது 30, மாநிறம். குடும்பப் பாங்கான பெண்ணிற்கு மத்திய, மாநில அரசுப் பணி அல்லது ஆசிரியர் பணி நிரந்தர பணி இடத்தில் பணியில் உள்ள முக்குலத்தோரைச் சேர்ந்த வரன் தேவை. குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 23251

■ Professionally qualified groom for fair, Vadama Keralite Iyer, working in Calcutta, Garga Swathi, 26/168, B.Sc., B.Ed, Computer from NIIT. Box No. 23252

■ Alliance invited for Iyer, Vadamal, Kausika, Anusham, 24/5.3" B.Sc., B.Ed., employed in a Private Firm from decently employed groom. Send horoscope with details to Box No. 23253

■ ஐயர் பிரஹசரணம் விஸ்வாமித்ர கோத்திரம், ஹஸ்தம், 24/162/எம்.காம்./3000/- திருச்சியில் மத்திய அரசு வேலை. பெண்ணிற்கு எல்.ஐ.சி/பாங்க், மத்திய, மாநில அரசில் வேலை பார்க்கும் பட்டதாரி வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம் குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 23254

■ Telugu Brahmin, Mulakanadu, B.Sc., employed in Multi National Bank, Madras, 23 yrs. Fair, good looking Bharadwaja seeks alliance from professionally qualified well employed Telugu Brahmin boys, upto 28 yrs. employed in Madras. Subsect no bar. Box No. 23255

■ Suitable alliance invited from Kannada Madhwa Brahmin boys for fair and beautiful girl (Vashishta) 29/160, M.Com., employed in Public Sector. Send details, horoscope to Box No. 23256

■ கார்காத்த வேளாளர், வயது 27, 165 செ.மீ. மகம், DECE தற்சமயம் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணிற்கு, வங்கி, அரசு துறையில் பணிபுரியும் ஆசிரியர், பேராசிரியர், அல்லது தனியார் நிறுவனத்தில் நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23257

■ Alliance invited for Palghat Iyer Vadamal girl B.Com. graduate, doing C.A. Articleship, 22 years, fair, Poosam, Kousika, suddha jatakam from well settled boys preferably from Bombay/Pune. Reply to Box No. 23258

■ Suitable alliance requested from broadminded Iyer family for Tanjore Vadama girl born and brought up

at North Avittam, Pooryakutsa Gothram, 25 yrs., 5.4", 'O' Positive, B.Sc. capable for employment weatish good looking. Simple marriage, having chevvai dosham, Mars in 7th house. Box No. 23259

■ மதுரையைச் சேர்ந்த சைவ வெள்ளாளர் பிள்ளை, 20-12-1982, சித்திரை, +2 தட்டச்சு சுருக்கெழுத்து படித்த குடும்பப்பாங்கான பெண்ணிற்கு அதே சமுதாயத்தைச் சார்ந்த தனியார்/அரசுத் துறையில் வேலை பார்க்கும் மணமகன் பெற்றோர்களிடமிருந்து தகுந்த வரன் எதிர் பார்க்கப்படுகிறது. நல்ல நிலையில் உள்ள இரண்டாம் தாரமாக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 23260

■ Well placed boys below 30 for Vathiama girl. M.A., unemployed 25, 153 cms., Koundinya, Mrigaseersa, Subsect no bar. Reply Box No. 23261

■ துளுவ வேளாளர், கேட்டை நட்சத்திரம், விருச்சிகம் ராசி, வயது 22, உயரம் 5 அடி, நல்ல குணமுள்ள எஸ்.எஸ்.எல்.சி. படித்துள்ள மாநிறமுள்ள பெண்ணிற்கு நிரந்தர வேலையிலுள்ள மணமகன் தேவை. தையல் வேலை நன்றாகத் தெரியும். குடும்ப விவரம் மற்றும் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23262

■ Alliance for 29 yrs. 5 feet, fair and good looking Gavara Naidu girl SSLC home loving. Horoscope not available. Grooms from decent family and well employed. Caste no bar. Box No. 23263

■ கார்காத்த வெள்ளாளர் வயது 27, பி.காம். உயரம் 5.4" அழகிய சிவப்பு நிறமுள்ள மணமகளுக்கு வேலையில் உள்ள மற்றும் நிரந்தர தொழில் புரியும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23264

■ மாத்வா கன்னடம் (தேசிஸ்தா) சவாக கேட்டை, வயது 26, நல்ல நிறம், உயரம் 165 செ.மீ. BE (Civil), (Final MBA) படித்து இருக்கும் பெண்ணிற்கு அதே பிரிவைச் சேர்ந்த வரன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23265

■ வன்னிய குல க்ஷத்திரியர், அனுஷம், 30/5', +2 படித்த, வேலையில் இல்லாத, சென்னையில் உள்ள நடுத்தர குடும்ப வரனுக்கு 36 வயதுக்குட்பட்ட, பண்புள்ள, தகுந்த மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 23266

■ Tamil Iyer, Brahacharanam, Sankruti, Revathi girl 25/160cms, MBA, doing Doctoral Programme in IIMA completing early 1997, requires professionally qualified, broadminded boys. Contact Box No. 23267

■ +2 படித்துள்ள ஐயர், வடமாள் கணவனை இழந்த எவ்வித ஆதரவுமில்லாத 32 வயதுள்ள பெண்ணிற்குப் பரந்த மனப்பான்மையுள்ள வரன் தேவை. மனைவியை இழந்த அல்லது விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம். 5 வயதில் ஒரு பையன் உண்டு. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 23268

■ Alliance for Kousika Thenkalai Iyengar girl Thiruvathirai, 31, 164cms fair, PG Varsity Lecturer in Assam Vadagalai no bar. Horoscope optional. Box No. 23269

■ Alliance for Kousika Thenkalai Iyengar girl Kettai, 29, 152cms, fair PG Senior Executive Private Company Vadagalai no bar. Horoscope optional. Box No. 23270

■ Beautiful, Vegetarian, 26/155/M.A., B.Ed., M.Phil., PhD, Agamudalya Mudaliar, decent family bride seeks suitable alliance. Subsects acceptable. Contact N. Sitharthan, 31C, Vedachalam Nagar, II Street, Kodamballam, Madras - 600 024.

■ Telugu Balija Naidu girl fair, 38/156, M.A., B.Ed., M.Phil., Lecturer, Madras seeks Madras graduate bachelor aged below 42 doing decent job/business (divorcee/widower no preferable) simple early mariage. Contact immdiately Mrs. Thilakavathy Muthukumar, 20, 47th Street, Ashok Nagar, Madras - 600 083. Ph: (Res) : 4896411

■ தெலுங்கு பிராமணாள், 6000 நியோகி கௌண்டின்யம், உத்திராடம் 4ம் பாதம், 21/162, இரண்டாம் வருடம் எம்.ஏ. படித்துக் கொண்டிருக்கும் சிகப்பு நிறம் பெண்ணிற்கு நிரந்தர வேலையில் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். முகவரி C. ராமமூர்த்தி, நெ. 11, நாட்டு வீராச்சி தெரு, மைலாப்பூர், சென்னை - 4.

■ Alliance invited for Vadamal fair girl, Kashyapa, Chathayam, 26/5.1" B.Sc., PG Dip. Now in USA visiting sister from well qualified and employed groom, horoscope and family details to Mrs. Mani, 110C Sanjay Apartment, S.V.P. Road, Mumbai - 400 092. Tel. 8935461 or 4142560.

■ வடமாள், ஆத்ரேயம், புனர்பூசம், 22/158 செ.மீ. பி.காம், படித்து, வேலையில்லாத பெண்ணுக்கு நிரந்தர வேலையில், ஒழுக்கம் உள்ள, நல்ல சம்பளம் பெறும் 28 வயதுக்குள் வரன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். K.S. Anantha Narayanan, 30, Arcot Mudali Street, T. Nagar, Madras - 600 017. Phone : 4340741.

■ Smartha, Brahacharanam, Shadamarshnam, Kettai, 23/154, B.Sc. (Maths) HDSM (NIIT) fair, good looking domestically trained, unemployed. Subsects acceptable. Send horoscope family details to A. Ramakrishnan, H-18, Phase II, Housing Board Colony, Perumalpuram, Tirunelveli - 627 007. Phone : 577527.

■ Wanted groom for Iyer Brahacharanam, Kashyapa, Aswini, 151 cms., wheatish, 27/B.Sc., DCA., decent, simple and early marriage. Reply with horoscope to R. Ganesan, 7, Avvaiyar Street, Tharamani, Madras - 113.

■ திருநெல்வேலி சைவ பிள்ளை, புனர்பூசம், வயது 22, பி.ஏ. வரை படித்துள்ள அழகான குடும்ப பெண்ணிற்கு, அதே இனத்தை சேர்ந்த, படித்த, அரசாங்க அல்லது நிரந்தர வேலையிலுள்ள பேங்க் மற்றும் இன்ஜினியர் மணமகன் தேவை. ஜாதக விவரங்களுடன் அணுக வேண்டிய முகவரி தியாகராஜன், 4, சுப்பிரமணியபுரம், மேற்கு கோவிந்தபுரம், திண்டுக்கல்.

■ பிரஹசரணம், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்ய நட்சத்திரம் முதல் பாதம் 5' உயரம் வயது 23 (09-08-1972) பி.ஏ. படித்துள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு 30 வயதுக்குள்ளான அரசு நிறுவனத்தில் வேலையில் உள்ள/ பொதுத்துறை நிறுவனம் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதக விவரங்களுடன் எழுதவும். முகவரி V.S. வெங்கட்ராமன், 'A', 126, 4th East Cross Street, V.G. Rao Nagar, Vellore - 632 007.

■ Wanted professional Bank/LIC/Govt. employed bridegroom India/Australia from decent Madhwa Kannada Brahmin family for good looking 22/155cms, B.Com., (C.A.), Jamadakni, Ayilyam 4th padam, same community. C.S. Jaganathan, 44, V.C. Garden, I Street, Raja Annamalaipuram, Madras - 28.

■ சௌராஷ்டிரா, 27/148/எம்.ஏ. குடும்பப்பாங்கான பெண்ணுக்கு படித்த நல்ல வேலையில் உள்ள வரன்கள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- M.N. தேசிகாச்சாரி, 1, தெற்கு சௌராஷ்டிரா தெரு, திருச்சிராப்பள்ளி - 620 008.

■ பிரஹசரணம், பாரத்வாஜம், கேட்டை, 22/160, எம்.காம், குடும்பப்பாங்கான பெண்ணிற்கு தனியார்/அரசுத் துறையில் நல்ல பதவியிலுள்ள பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். முகவரி- திரு. ஆர். சுப்ரமணியன், ஸ்ரீசங்கர குருகுலம், இராமன் நகர், மேட்டூர் அணை - 636 403.

■ Delhi based boys for Iyer girl Athreyam, Visakam, BA (Hons), 26/157/4500 working in private concern. Send horoscope with particulars to Mr. Ramesh, C-80, Dashrathpuri, Dabri, Palam Road, New Delhi - 45.

■ Alliance invited from non-Sankirithi, Brahacharanan, Vadama, post graduate/graduate well employed grooms for post graduate C.A. intermediate, girl 36 yrs., 5.1" affluent family, star Punarpusam. Details to Uma Sankar, D-28, Nangal Road, Block No. 27, Neyveli - 3.

■ தமிழ் அய்யர் ராஜீத்ர கோத்ரம், மூலம் வயது 22, பி.காம்., டி.சி.ஏ., தட்டச்சு தமிழ், ஆங்கிலத்தில் சீனியர் பாஸ் செய்த பெண்ணுக்கு 30 வயதிற்குள் நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. முகவரி வி. இராசகோபாலன், 12, சீனிவாசபுரம், பட்டுக்கோட்டை - 614 601.

■ Vadamal Barathwajam, Anusham, 20/151/B.Com., wanted well settled and professionally qualified boys upto 27 yrs. Owns flat. Reply with horoscope to R. Venkataraman, 5/2, 27th Street, Nanganallur, Madras - 61.

■ Brahacharanam, Parasara, Revathi, 23, 150 cms, M.A., Steno CMC Vellore seeks grooms preferably Engineers, Doctors, Offiers. Send details with horoscope to Mrs. Sundari Mahadevan, 38, Jaganatha Pillai Street, V.O.C. Nagar, Vellore.

■ தென்கலை ஐயங்கார், சாண்டில்ய கோத்திரம், மூலம் 3ம் பாதம், +2/5.2"/22 வயதுடைய, சிவப்பான, அழகான, பெண்ணிற்கு அரசு அல்லது தனியார் துறையில் நல்ல வேலையிலிருக்கும், 30 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. S.R. ஸ்ரீநிவாசன், 87, ஐஸ்வர்யா தெரு, விஜயா நகர், மடிப்பாக்கம், சென்னை - 600 091. போன் : 8250943, 8233362.

■ தொண்டமண்டல முதலியார், 25 வயதான BE., MS., வேலை USA வருமானம் 1,25,000/- அழகான 169 செ.மீ. உயரம் உள்ள பெண்ணிற்கு ஏற்ற மணமகள் தேவை. (உட்பிரிவு சம்மதம்) பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர் மற்ற விவரத்துடன் எழுதுக. G. காந்திமதி, 40, வி.வி. கோவில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை -86.

■ ரெட்டியார் MA., M.Phil., PhD., படித்த 27 வயதான வேலையில் உள்ள அழகான பெண்ணிற்கு மணமகன் தேவை. பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர், மற்ற விவரத்துடன் எழுதுக. கே. கணபதி, பிளாட் நெ. 4-ஏ, முதல் குறுக்குத் தெரு, சிட்டிபாபு நகர், பள்ளிக்கரணை, சென்னை - 601 302.

■ 28 வயது, வடமாள், பாரத்வாஜ கோத்திரம், B.Sc., ACA, 5.5" உயரம் உள்ள, உத்தியோகத்தில் உள்ள அழகான பெண்ணிற்கு ஏற்ற வரன் தேவை. பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர் மற்ற விவரங்களுடன் எழுதுக. தபால் பெட்டி எண். 1482, தேனாம்பேட்டை, சென்னை - 18.

■ முதலியார், வயது 30, MA., M.Phil (French) வேலை செய்யும் மாத வருமானம் 8,000/-, 1.58 மீ. உயரம் உள்ள நல்ல அழகான பெண்ணிற்கு என்ஜினியர், டாக்டர், அல்லது MBA, CA, படித்த மணமகன் தேவை. பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர், மற்ற விவரத்துடன் எழுதுக. T.S ராமசாமி, 277, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை - 18.

■ Alliance invited from Public Sector/Govt/Reputec Private Sector employed for Vadamal, Srivatsa, Rohin girl, 24, 5.3" fair, Diploma in Electrical Engg. working in a Private Company. Subsects no bar. Reply with horoscope to Venkatesan, 31/5, Ramnagar, Ist Main Road, Nanganallur, Madras - 600 061.

■ தெலுங்கு அய்யங்கார், தென்கலை, பாரத்வாஜ கோத்திரம், சதயம் நட்சத்திரம். வயது 36, படிப்பு பி.எச்டி. அரசு கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரியும் பார்வையிழந்த பெண்ணுக்கு படித்த கருணையுள்ளம் படைத்த பிராமண மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். கி. இராஜகோபால், பிளாட் எண். 95, கதவு எண். 43, வெண்கல பிடாரி அம்மன் கோவில் தெரு, சார்லஸ் நகர், புதுக்கோட்டை - 622 005.

■ Vadamal, Garga, Revathi, 25, D.E.C.E., working girl, horoscope and family details. Contact: Harihara Subramaniam, No. 1, Rajagopal St., Ambattur Phone : 681233.

■ அகமுடையார், செவ்வாய் தோஷம், 25/158/கேட்டை அழகான தோற்றம், சரியான பொருத்தம் தேவை. முகவரி : தியாகராஜன், 45, முதல் மெயின் ரோடு, ராமகிருஷ்ணா நகர், சென்னை - 28.

மணமகன் மணமகள் தேவை

■ Veerasaivam vegetarian Moolam (I) 27/167/850 Bank Officer Shimla, transferable, seeks Bank Insurance fair, slim girl and groom for siste Thiruvoonam (I) Sevvai dosham, fair, B.Com Computers, 26/154/2500 Private Company, Madra Caste no bar. Please reply horoscopes, bio-data, famil details to Box No. 30348

Printed by V. Murali at the Bharathan Press and published by K. Rajendran on behalf of Bharatha Publications Private Limited. Editor : MANJULA RAMESH


Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097

Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement 2345622; Managing Director : 2345621

Annual Subscription : India Rs. 108/-; Overseas : Rs. 650/- (Air Mail); Rs. 280/- (Sea Mail)

Half Yearly Subscription : India Rs. 54/-; Overseas : Rs. 325/- (Air Mail); Rs. 140/- (Sea Mail)



மணமகளே,
இமை திறந்த
விழிகளோடே
கனவுகளா!
ரூபினி - கனவும், பகட்டும், கற்பனையும் கொண்டு அற்புத வண்ணங்களில் எண்ணற்ற வகைகளில் ஒப்பாரா சேலைகளை படைத்திருக்கின்றது. திருமணம் மற்றும் அனைத்து விழாக்களுக்கும் ஏற்ற பாரம்பரிய காஞ்சிப்பட்டு, பனாரஸ் பட்டு, ஜகார்டுகள், டிஷ்யுக்கள், ஜாம்தானி, ஜாமேவார், சிந்தடிக்ஸ், காட்டன்ஸ், க்ரேப்ஸ் மற்றும் ப்ரோகேட் போன்ற புத்தம்புதிய டிசைன்களில் புடவைகளை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.
தங்ககாசு இலவசம்
1.10.96 முதல் 31.10.96 வரை ஒவ்வொரு நாளும் எங்கள் எம்போரியத்தில் சேலைகள் வாங்கும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு தங்ககாசு இலவசமாக வழங்கப்படும். உடனே முந்துங்கள்.
பிரைடல் மற்றும் டிசைனர் கலெக்ஷன்ஸ்
ரூபினி சில்க்ஸ்
ஜன்பிரியா சென்டர் (பழைய ராஜகுமாரி தியேட்டர்) 34, பாண்டி பஜார், தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி: 434 4414, 434 7735 ஃபேக்ஸ்: 434 6625



உங்களது அருகாமையிலுள்ள இன்ஸ்டாகலர் மையத்தின் விலாசத்தை அறிய அணுகவும் :
ஜென்ஸன் & நிக்கல்ஸன் : அஹமதாபாத் : 5832344, பெங்களூர் : 2226492, கல்கத்தா : 2426960, சவுத் கல்கத்தா : 4735897, காலிகட் : 3654
கோவா : 220073, கௌஹாத்தி : 31934, ஹைதராபாத் : 7630130, இந்தோர் : 63767, ஜெய்ப்பூர் : 49876, ஜம்மு : 535385, லக்னோ : 2657
ராய்ப்பூர் : 527992, சிலிகுரி : 527177, விசாகபட்டினம் : 60609.

மங்கையர் மலர்

அக்டோபர் '96 – நவராத்திரி இரட்டைச் சிறப்பிதழ்-II





என் முகஅழகு கூட கூட, அவருக்கு என்மேல் ஆர்வமும் கூடுகிறது.
NIVEA
VISAGE
Specific Care
NIVEA VISAGE
FAIRNESS CREAM
கொஞ்சம் நிவியா விசாஜ் ஃபேர்னெஸ் க்ரீம் தடவுங்கள். இதன் இயற்கையான லிகோரைஸ் பார்முலேஷன் உங்கள் சருமத்தை கருமைப்படுத்தும் மெலனினை கட்டுப்படுத்தி நாலு அல்லது ஆறு வாரங்களில் உங்கள் அழகை கூட்டுகிறது. இரட்டை யூ.வி சன்ஸ்கிரீன், உங்களை யூ.வி. கதிர்களிடமிருந்து பாதுகாத்து, அதன் ஈரத்தன்மை சருமத்தை வளமையாக்கி மென்மை, மிருது ஆக்குகிறது. இதில் பிசுபிசுப்பு, வெடிப்பு இல்லை. மென்மையான பராமரிப்பே உள்ளது. உலகின் உன்னதமான சருமப் பராமரிப்பு என்றாலே, நிவியா விசாஜ் தான். இனி, அவரின் அன்பு மழையில் நனையுங்கள்.
நாட்கள் செல்லச்செல்ல அழகு மென்மையாக
ஜே. எல். மோரிசன் (இ) லிமிடின் ஒரு தரமான தயாரிப்பு
SPEER 488 96 TM

ஆகஸ்ட் இதழில் 'வழிகாட்டிகள்' போட்டியை அறிவித்தது பற்றிப் பெருமிதப்படும் வகையில் நிறைய வாசகிகள் மிகப் பயனுள்ள கல்வி வகுப்புக்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டே வாருங்கள். கல்வியாண்டில் பயனுள்ளதாக இருக்கும். மற்றவர்களுக்கும் தரலாமே, வழிகாட்டலாமே!

(வாசகர்களுக்கு ஒரு வார்த்தை - இது ஒரு வழிகாட்டும் தகவல் பகுதி மட்டுமே. கோர்ஸ் அல்லது கோர்ஸ் நடத்தும் நிறுவனங்களின் நிறைகுறைகளை அவரவர்கள் தான் ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். நம் நிறுவனம் அதற்குப் பொறுப்பாகாது.

(ஆ.ர்)

(Health visitors)) S.H.V.(Sector Health Visitors) ஆகவும் மேல் பதவி வகிக்கலாம்.

– *ஜானகி பரந்தாமன்,*
திருநெல்வேலி - 2.



National Institute of Personnel Management, ஒரு அகில இந்திய நிர்வாக இயல் (ஊழியர் துறை) கழகம். இது ஒரு முதுநிலை PG Course நடத்துகிறது. இதில் PG Diploma பெற்றவர்கள் MBA படித்ததற்குச் சமமென AICTE சான்றிதழ் அளித்துள்ளது. வீட்டிலிருந்தே படிக்கலாம். செலவும் குறைவுதான். மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ.5000/-க்கு மேற்படாது. படித்து இந்த டிப்ளோமா பெற்றவர்கள் தொழிற்சாலைகளில் Personel Officer, Welfare Officer ஆகிய பதவிகளுக்குத் தகுதி பெறுவர்.

வழிகாட்டிகள்



இந்தப் புகைப்படத்தில் இருப்பவர் என் தோழி 'காந்திமதி' V.H.N. ஆக (Village Health nurse) நெல்லை மாவட்டத்தில், கருங்குளத்தில் வேலை பார்க்கிறார். அப்பா கிடையாது.

+2 படித்து சும்மாதானே இருக்கிறேன் என்று ஒரு தனியார் ஆஸ்பத்திரிக்கு வேலைக்குச் சென்றிருக்கிறார். அங்கு வரும் நாளிதழில் M.P.H.W. (Multi purpose Health Workers) வேலைக்கு ஆள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து அப்ளிகேஷன் போட்டார் படிப்புத்தகுதி 10ம் வகுப்புதான். ஒன்றரை வருடம் பயிற்சி கொடுத்து, ரூ. 125 ஸ்காலர்ஷிப்பும் கொடுத்தார்கள். இன்று V.H.N.ஆக வேலை பார்க்கிறார். சம்பளம் ரூ.2,800. அரசாங்க உத்தியோகமும் கூட.

இதிலும் உயர்பதவிகள் உண்டு. டிபார்ட்மென்ட் பரீட்சை எழுதினால் H.V. ஆக,

முகவரி

45 JHOWTALA ROAD,
POST BOX NO.10275,
CALCUTTA - 700 019.

ஆர். சேதுலக்ஷ்மி, திருச்சி - 1

"THE APPREL TRAINING AND DESIGN CENTRE"

'அப்பரேல் டிரைனிங் அண்டு டிசைன் சென்டர்' என்ற இந்தப் பயிற்சி மையம் Textile (or) Designing துறையில் விருப்பமுள்ள மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருப்பமுள்ள துறையில் பயிற்சியளிக்கிறது.

இந்தப் பயிற்சியின் காலம் 6 மாதங்கள் மட்டுமே. பயிற்சிக்கான கல்வித் தகுதி 10th or +2 மட்டுமே.



• ஜகதீஷ்குமார்

ஒரு சில தனியார் இன்ஸ்டிடியூட்ஸ் இருந்தபோதிலும் அவற்றை விட இந்தப் பயிற்சி மையத்தில் மிகக் குறைந்த கட்டணமே பெறப்படுகிறது. அதோடு மட்டுமில்லாமல் பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்குத் தேவையான Pattern paper, Instruments, fabrics, desigining சம்பந்தமான புக்ஸ் அனைத்துமே பயிற்சி நிறுவனமே வழங்குவதால் வசதி குறைந்தவர்களும் வந்து படிக்கலாம். ஏனெனில் அவர்களுக்குப் பயிற்சிக் கட்டணம் தவிர வேற எந்தக் கட்டணமும் பெறப்படுவதில்லை. அதுமட்டுமின்றி இப் பயிற்சிக்கு வயது வரம்பு இல்லை என்பதால் இல்லத்தரசிகளும் இப்பயிற்சியில் சேரலாம்.

ஏற்றுமதி ஆடை அபிவிருத்திக் கழகமான "APPAREL EXPORT AND PROMOTION COUNCIL" என்ற நிறுவனம் இந்தப் பயிற்சி மையத்திற்கு ஸ்பான்சர் செய்வதால் திறமையானவர்களுக்குப் இப்பயிற்சி முடிந்தவுடன், அவர்களே வேலைவாய்ப்பிற்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

இந்தப் பயிற்சி மையத்தின் முகவரி:

The Apparel Training and Design Centre
No. 5, 3rd Floor,
Kondy Chetty st,
Ms -1. Ph: 581 591.

திருமதி புனிதா பிரியா
பெர்னான்டஸ், சென்னை -34.

நேரிடைப் பயிற்சி!

எஸ்.சி.எஸ். கோத்தாரி அகாடமி 7, வெங்கடபதி தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை, இந்த அகாடமி, Small Leather Goods Manufacturing Training Programme (4மாத கோர்ஸ்) நடத்துகிறது. இந்தப் பயிற்சியில் மணிபர்ஸ்கள், பெண்களின் கைப்பைகள், மூக்குக் கண்ணாடி கவர்கள் போன்றவை தயாரிப்பது சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இக்கோர்சுக்குப் படிப்புத் தகுதி பத்தாவது(அ) மேலும் இருக்கலாம். ஓரளவு ஆங்கிலத்தில் புரிந்து கொள்ளும் தகுதி போதும். இவ்வகுப்புகளில், தோல் பொருட்களைப் பற்றிச் சொல்லித் தருவது மட்டுமல்லாமல், பயிற்சியாளர்களைத் தொழில் அதிபர்களாக்கவும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதற்காக நிர்வாகத்திறன், மார்க்கெட்டிங், அக்கவுண்ட்ஸ், கமர்ஷியல்லா, பிசினஸ் ஆர்கனைசேஷன் என்று பலவற்றில் பயிற்சி தரப்படுகிறது.

இந்தக் கோர்ஸ் படித்து முடித்தவுடன், தொழில் தொடங்கவும், ஆலோசனைகள் வழங்கவும், பண உதவி செய்யவும் வங்கிகள் முன்வருகின்றன. இந்தக் கோர்ஸ் படித்தவர்கள், சூப்பர்வைசர்களாகப் போகலாம்(அ) தாங்களே ஒரு சிறிய தொழிற்கூடத்தை ஆரம்பிக்கலாம்.

- ராஜி, பெங்களூர்.

முதல்பரிசு ரூ.500/- பரிசு பெறும் தகவல்

பார்வையியல் என்று தொடர் பயிற்சித் துறை நடத்தப்படுகிறது. இந்தக் கல்வித் திட்டம் செப்டம்பர் 1985ல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் (Medical Research Foundation) துவங்கப்பட்டது.

OPTOMETRY

இது ஒரு நான்கு வருடப் படிப்பு. Sankara Nethralaya BITS(Birla Institute of Technology and Science, pilani வின் Distance learning Programme மூலம் B.S. Optometry என்ற degree வழங்கப்படுகிறது. சங்கரா நேத்ராலயா பார்வையற்றோருக்கு உதவி புரிவதிலும், BITS, pilani தனது கல்வி கற்பிக்கும் திறனுக்காகவும் உலகப் புகழ் பெற்றுள்ளது என்பதை அனைவரும் அறிவோம். +2வில் Maths/Physics/Chemistry/Biology (0r) Maths/Physics/Chemistry/Computer Science (or) Physics/Chemistry/Botany/Zoology

படித்து நல்ல மதிப்பெண் பெற்ற எவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை BITS, pilani, Rajasthan இடம் தபால் மூலம் பெற்று.

வங்கத்தில் இப்போது பூஜைக்குகந்ததாகக் கருதப்படும் காளி உருவமானது பேதயநாத் முகிக் என்பவரால் சந்திரநாத் மலையிலிருந்து (சிட்டகாங் – பங்களாதேசத்தில் உள்ளது) ஒரு சாது பூஜை செய்து வந்திருந்த சிலையை அடிப்படையாகக் கொண்டுதான் உருவானது. நம்மூர் விநாயகரைப் போல வங்கத்தில் துர்காதேவியை மலை முதல் குடிசை வரை எங்கும் வைத்து வழிபடுகிறார்கள். துர்க்கையை ராமலீலா, நவராத்திரி, பவானி பூஜை போன்ற விசேஷ தினங்களில் துதிக்கிறார்கள்.

- கீதா




டீ-வேக்ஸிங்!
இதன் மாபெரும் சிறப்பு!

Sunline
SUPER-REFINED SUNFLOWER OIL



சன்லைன்

- தெளிவானது மற்றும் இலேசானது
- சால்வெண்ட் எக்ஸ்ட்ராக்ஷன் எதுவும் இன்றி, உயர்தர சூரியகாந்தி வித்துக்களிலிருந்து தயாரிக்கப்பட்டது
- வைட்டமின் 'E' நிறைந்தது
- கொலஸ்ட்ரால் இல்லாதது



நிறைவான சூரியகாந்தி எண்ணெய் - சன்லைன்

Calibre 12-8-95

S.S.D. OIL MILLS CO. LTD.

• MADRAS Ph: 8281803 • COCHIN Ph: 391640 • BANGALORE Ph: 367330
• GUNTUR Ph: 223572 • BHUBANESWAR Ph: 410362 • GOA Ph: 731195
• ANDAMANS Ph. 30641

பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப் பங்களுக்கான அறிவிப்பு ஒவ்வொரு வருடமும் மே, ஜூன் மாதங்களில் பிரபல செய்தித்தாள் களில் வெளிவரும்.

இக்கல்வி திட்டத்தில் நான்கு வருடப் படிப்பில் கடைசி வருடம் எழும்பூரிலுள்ள Sankara Nethralaya விலும், அதன் கிளை நிறுவனமான பரங்கிமலையிலுள்ள C.U. Shah Rural Eye Hospital விலும் நோயாளி களைக் கவனிக்கப் பயிற்சியளிக்கப்படும். பயிற் சியை முடிக்கும்போது எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கும் வகையில் கணிப்பொறி, மனோதத்துவம், மக்கள் தொடர்பு, புள்ளி விவரயியல் போன்றவற்றிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது சுயவேலை வாய்ப்பிற் கும் உதவும். பட்டம் பெற்றவுடன் நல்ல சம் பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு மிகுதி. வேலைக்கான தகவல்களும் கல்லூரி யிலேயே அவ்வப்போது வழங்கப்படும்.

முகவரி:

Elite School of Optometry;
No. 8, G.S.T. Road, St.Thomas Mount,
Madras - 600 016. Ph: 2346022.

- என். அனுராதா சென்னை - 28.

பெங்களூரில் WASE (WIPRO ACADEMY OF SOFTWARE EXCELLANCE) என்ற பெயரில் விப்ரோ நிறுவனம் ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் நடத்துகிறது. இதற்காக பி.எஸ்ஸி படித்து முடித்தவுடன் உள்ள மாணவர்களை உடனே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 3 வரு டம் கம்ப்யூட்டர் கோர்ஸ் நடத்துகிறார் கள். அவர்களே நல்ல உதவித் தொகையும் கொடுப்பதால் திறமையுள்ள ஏழைகள் கூட இதன் மூலம் பயனடைய முடியும்.

Address:
WASE
40/1A, LAVELLA ROAD,
BANGALORE - 560 001.
PH: 2215010/ 2215014
FAX: 2271954

ஆர்.பிரேமா, திருவனந்தபுரம்



* உமா நாகராஜன்

செவிலியர் துறையில் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் பத்தாம் வகுப்பு தேர்விற் குப் பின்னர் அரசினரால் நடத்தப்படும் A.N.M. COURSE அரசினரால் உதவித் தொகை யுடன் நடத்தப்படுகிறது. கட்டாயமாக வேலை வாய்ப்பும் உண்டு. A.N.M. என்பது AUXILLARY NURSE MIDWIFE என்பதின் சுருக்கம். இதன் காலப் பிரிவு 18 மாதங்களை உள்ளடக்கியது.

மேலும் +2 தேர்ச்சிக்குப் பிறகு செவிலியர் துறையில் மூன்றரை வருடங்கள் அடங்கிய பட்டப் படிப்பும், 4 வருடங்கள் அடங்கிய பட்டப் படிப்பும் உண்டு. இதற்கு +2 தேர்வில் அறிவியல் கட்டாயப் பாடமாக இருத்தல் அவசியம்.

பட்டப் படிப்பில் உதவித் தொகை மற்றும் கட்டாயமான விடுதி வசதிகளும் உண்டு. சிறந்த தேர்ச்சிக்கு பிறகு அரசு அல்லது தனி யார் துறையில் வேலை உறுதி.

குறிப்பு: இதில் சேரும் விவரங்கள் பத்தாம் வகுப்பு, +2 இறுதி முடிவுகளின் பின்பு அரசின ரால் நாளிதழ்களில் வெளியாகும். சேரும் விபரம், விண்ணப்பப் படிவம் பற்றி தகவல் வெளியாகும்.

தனியார் துறையில் செயல்படும் கல்லூரி கள் அரசு அங்கீகாரம் பெற்றவையா என அறிந்து செயல்பட வேண்டும்.

உமாநாகராஜன், சென்னை -11.

இலையுதிர்காலத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும் இந்த துர்கா பூஜை, ராவணனுடன் போர்புரிந்து கொண்டிருக்கும் கடைசி கட்டத்தில் வெற்றி பெறுவதற்காக ஸ்ரீராமனால் செய்யப்பட்டது என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் இதைப் பற்றிய குறிப்பு வால்மீகி இராமாயணத்திலோ, அதைத் தழுவி எழுதப்பட்ட துளசி இராமாயணத்திலோ கூறப்படவில்லை. ஆனால் கீர்த்திவாஸனின் வங்காள விருத்தாந்தத்தில் ராமன் துர் காவை துதித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

- கீதா

அல்ட்ரா கிரைண்ட்+ வீட்ல இருந்தா வேலை எவ்வளவு ஈஸி!




ULTRA
GRIND +

12 month warranty


இந்தியாவின் முதல் "டேபிள் டாப்" ஆட்டுக்கல்

என்னைப் போல ஒங்களைப் போல பிஸியா இருக்கற புதுயுகப் பெண்களுக்காகவே தயாரிச்சிருக்காங்க இந்த அல்ட்ரா கிரைண்ட் + ஆமாம்! இந்த அல்ட்ரா கிரைண்ட் + வந்ததிலேருந்து இட்லி தோசைக்கு மாவு அரைக்கறது ஈஸி! சட்னிக்கு தேங்காய் துருவறது ஈஸி! சப்பாத்தி மாவு பிசையறது ஈஸி! இப்படி, நம்மளோட வேலையெல்லாம் எவ்வளவு ஈஸியாயிடுச்சு பாத்தீங்களா?

என்னைப் பொருத்தவரைக்கும் இல்லத்தரசிக்கு வசதி மட்டுமில்ல; இல்லத்திற்கே பெருமை தர்றது இந்த அல்ட்ரா கிரைண்ட் + என்ன, நான் சொல்றது சரிதானே!



மாவு பிசை சாதனம்



தேங்காய்த் துருவி


எல்ஜி தயாரிப்பு

எல்ஜி பாலிடெக்ஸ் லிமிடெட் — அல்ட்ரா டிவிஷன்,
எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 045.
போன்: 0422-216132, 214571. பேக்ஸ்: 0422-211740
மண்டல அலுவலகம்: சிந்தூரி டவர்ஸ், 95, டைஸ் சர்ச் சாலை,
சென்னை-600 004. போன்: 4996824/6577.

PATENT PENDING DESIGN REGD. NO. 163445 & 163446.

புதுயுக வசதி அல்ட்ரா. புதியதோர் அனுபவம் அல்ட்ரா.

Anugrah 1693/96 Tam



வேத மாதா, வாகீஸ்வரி, பாரதி, சாரதா என்று பல பெயர்களில் போற்றி வழிபடுகிற சரஸ்வதி மாதாவை திபேத், சிலோன், நேபாளம், தென்மேற்கு, ஆசியா, சைனா மற்றும் ஜப்பானிலும் கூட வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

— கீதா

கம்பெனி செகரெட்டரியாக : (Company Secretary Course) :

ஒரு கம்பெனி செகரெட்டரி, ஒரு கம்பெனியில் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்க்கு அடுத்த இடத்தைப் பெறுகிறார். இப்படிப்பட்ட உயர்ந்த பொறுப்பும், பதவியும், நல்ல சம்பளமும் கொண்ட இவ்வேலைக்குப் பழக்கப்படும் படிப்புதான் கம்பெனி செகரெட்டரி கோர்ஸ்.

ஒருவர் கம்பெனி செகரெட்டரி ஆக விரும்பினால், இன்ஸ்டிட்யூட் ஆஃப் கம்பெனி செகரெட்டரீஸ் ஆஃப் இந்தியாவால் நடத்தப்படும் தேர்வில் வெற்றிபெற வேண்டும். இத்தேர்வில் மூன்று நிலைகள் உள்ளன. அவை ஃபௌண்டேஷன், இண்டர்மீடியட், பைனல். +2 தேர்ச்சி அடைந்தவர்கள் இதை எழுதத் தகுதி உடையவராவர். பட்டதாரிகள் (Arts/Commerce/Science) கம்பெனி செகரெட்டரியாக விரும்பினால் Foundation Exam எழுதத் தேவையில்லை. அவர்கள் இண்டர்மீடியட்டிலிருந்து எழுதினால் போதும்.

ICSI, டில்லியில் தனது தலைமை அலுவலகத்தையும் மற்றும் இந்தியா முழுவதும் 40 கிளைகளையும் பெற்று உள்ளது. தில்லியில் இதன் முகவரி வருமாறு :

The Institute of Company Secretaries of India (ICSI)

'ICSI House',
22, Institutional Area,
Lodi Road,
New Delhi - 110 002.

— டி. புவனேஸ்வரி, சேலம் – 7.

Interior மற்றும் Exterior decoration பற்றி மிகுந்த விழிப்புணர்வு பெற்றுவரும் இந்தக் காலத்தில் அதை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ யார் வேண்டுமானாலும், எந்த வயதினரும் செய்யலாம். சுயதொழில் தொடங்கலாம்.

Exterior - Interior (P) Ltd.,
147, Greams Road 2nd Floor,
Madras - 600 006.

செப்டெம்பர் மாதவாக்கில் வகுப்புக்கள் தொடங்கும். ஜூலை மாதத்தில் விளம்பரம் பண்ணுவார்கள்.

— புவனா, மதுரை.

இரண்டாம் பரிசு ரூ.250 பரிசுபெறும் தகவல்

தமிழ்நாட்டில் சமீபகாலம் வரை இஞ்ஜினீயரிங் கல்லூரிகளில் இடம்பெற ரெகுலர் ஸ்டூடண்ட்களுக்கு ஒரு ரூட் மட்டுமே இருந்து வந்தது. அதாவது, அவர்கள் +2 முடித்தவுடன் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். +2 மார்க்குகளும் நுழைவுத் தேர்வு மார்க்குகளும் கணக்கில் கொள்ளப்பட்டு 'ரேங்க்' போடப்படும். அதன் அடிப்படையில் மாணவர்களுக்கு 4 வருட இஞ்ஜினியரிங் கோர்ஸில் முதல் வருட அட்மிஷன் கிடைக்கும்.

ரேங்க் லிஸ்ட்டில் வரமுடியாத மாணவர்கள் உடன் மனது தளர வேண்டாம் என்பதை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கம். அவர்கள் இஞ்ஜினியரிங் கல்லூரிகளில் நுழைய ஓர் புதிய மார்க்கம் உண்டு! (தமிழ்நாட்டில் மட்டும்தான் இது அமலில் உள்ளது.)

+2 முடித்தவர்கள் பாலிடெக்னிக்குகளில் 'டிப்ளமா' படிப்பதற்காக இரண்டாம் வருட வகுப்பில் குறுக்காக (Lateral Course) நுழையலாம். இரண்டு வருடத்தில் டிப்ளமாவை முடித்துவிட்டு, நுழைவுத் தேர்வு எதுவும் இல்லாமல், டிப்ளமா இறுதி ஆண்டுத் தேர்வு மார்க்குகளின் அடிப்படையில் இஞ்ஜினியரிங் கல்லூரிகளில் இரண்டாம் வருட வகுப்பில் மீண்டும் குறுக்காக (Lateral) நுழையலாம்.

இம்முறையில் +2 படித்த மாணவன் இஞ்ஜினியரிங் முடிக்க ஐந்து ஆண்டுகள் ஆகும். (டிப்ளமா வழி செல்லாத ரெகுலர் ஸ்டூடண்ட்களுக்கு 4 வருடங்கள் மட்டுமே ஆகும்).

இனி, இந்த ஒரு வருடம் கூட வீணாகாமல் அதே சமயம் நுழைவுத் தேர்வும் இல்லாமல் இஞ்ஜினியரிங் கல்லூரியில் இடம்பெற மேலும் ஒரு ரூட் தமிழ்நாட்டில் உண்டு!

அதாவது 10வது முடித்தவுடன் நேராக டிப்ளமா – 3 வருடங்கள்... பின்பு நுழைவுத் தேர்வு இல்லாமலேயே இஞ்ஜினியரிங் கல்லூரியில் இரண்டாவது வருடத்தில் 'Lateral' அட்மிஷன். ஆக 10வது முடித்தவுடன் ஆறு வருடங்களில் பி.ஈ., டிகிரி! அதாவது +2 ரூட்டில்

நேரடியாக இஞ்ஜினியரிங் செல்பவர்களும் இவர்களும் ஒரே சமயத்தில் பி.ஈ. முடிக்கிறார்கள்.

(+2 வில் சராசரி மார்க்குகளே பெற்ற எனது மகன் ஜகதீஷ்குமார் பின்பு டிப்ளமா முடித்து, நல்ல மதிப்பெண்கள் பெற்று, இப்போது 'Lateral Course' இரண்டாவது வருடத்தில் தக்கலை பொறியியல் கல்லூரியில் சேர்ந்துள்ளான்!)

– நதமா ஜே.பி., திருவனந்தபுரம்.

மூன்றாவது பரிசு ரூ.100/- பரிசு பெறும் தகவல் – கேபிள் டெலிவிஷன் பயிற்சிப் படிப்பு!

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் துறை கேபிள் டெலிவிஷன் குறித்த குறுகியகால பயிற்சியை அளித்து வருகின்றது இந்தியாவிலேயே இதுபோன்ற பயிற்சி வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரையில் மூன்று மாத பயிற்சி அளிக்கப்படுகின்றது. அதையடுத்து பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் வரையிலும் நடைபெறும். முப்பது மாணவர்கள் மட்டுமே இப்பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் பயிற்சிக் கட்டணமாகும்.

பொறியியல் பட்டதாரிகள், மின்னணுவியல் டிப்ளமாதாரர்கள், எலக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமென்டேஷன் அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றவர்கள், மின்னணுவியல் பாடத்துடன் கூடிய அறிவியல் பாடம் பெற்றவர்கள், கேபிள் ஆபரேட்டர்கள், மின்னணுவியல் சேவை பொறியியல் படித்தவர்கள் இப்படிப்பில் சேரலாம்.

ஒருங்கிணைப்பாளர்,
ஸ்கூல் ஆஃப் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் என்ஜினியரிங்,
கிண்டி பொறியியல் கல்லூரி,
அண்ணா பல்கலைக்கழகம்,
சென்னை – 600 025.

– எம். கதிஜாபேகம், கிராப்பட்டி.

விருந்து ஏப்ரல் வரையிலும் நடைபெறும். முப்பது மாணவர்கள் மட்டுமே இப்பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் பயிற்சிக் கட்டணமாகும்.

பொறியியல் பட்டதாரிகள், மின்னணுவியல் டிப்ளமாதாரர்கள், எலக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமென்டேஷன் அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றவர்கள், மின்னணுவியல் பாடத்துடன் கூடிய அறிவியல் பாடம் பெற்றவர்கள், கேபிள் ஆபரேட்டர்கள், மின்னணு

யக் குழு (UGC) ஆண்டுக்கு இருமுறை Net எனப்படும் தகுதித் தேர்வினை நடத்துகின்றது. இத்தேர்வில் அறிவியல் துறைகளோடு கலையியல் துறைகளுக்கும் தேர்வு உண்டு.

NET எனப்படும் National Level Eligibility Test இல் தேர்ச்சி பெற்றால் கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளுக்கு மேற்படிப்புக்கான உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

ஜூன், மற்றும் டிசம்பர் மாதம் இத்தேர்வுகள் நடைபெறும். இத்தேர்வு பற்றிய அறிவிப்புக்கள் எம்பிளாய்மெண்ட் நியூஸ், ஹிண்டு பிற முன்னணி நாளிதழ்களில் வெளியாகின்றது. தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பிற கலையியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களும் இத்தேர்வு எழுதத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். அதிக மதிப்பெண்ணோ, முதல் வகுப்புத் தேர்ச்சியோ கூட இதற்குத் தேவையில்லை. உயர் இரண்டாம் வகுப்பான 55% பெற்றாலே போதும்.

கடந்த இரண்டாண்டுகளாக முதுகலை படித்துக் கொண்டிருக்கும்போதே இத்தேர்வு எழுத வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா முழுவதும் உள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களும் தேர்வு மையமாக அமையும். பல்கலைக் கழகம் இருக்கும் நகரத்தில் இல்லாதவராக நீங்கள் இருந்தால் தேர்வெழுதுவதற்கு உங்களுக்காகும் போக்குவரத்துச் செலவும் அளிக்கப்படுகின்றது.

தேர்வில் வெற்றியடைந்தால் மாதந்தோறும் ரூ. 2100/- முதல் ரூ. 2800/- வரை உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். இந்தியாவில் உள்ள எந்தப் பல்கலைக்கழகத்திலும் சேர்ந்து நமது மேற்படிப்பைத் (பிஎச்டி) தொடரலாம். இடையில் திருமணம், ஏனைய குடும்பச் சூழல் காரணமாக வேற்றூர் செல்ல நேரிட்டாலும் மேற்படிப்பை அப்பகுதிக்கு அருகில் உள்ள வேறொரு பல்கலைக் கழகத்திற்கு மாற்றிக் கொள்ளலாம்.

இந்த உபகாரச் சம்பளம் ஐந்து ஆண்டுகள் வரை அளிக்கப்படுகின்றது. இது தவிர ஆய்வுக் கல்விக்குத் தேவையான எழுதுபொருள்கள், டைப், ஜெராக்ஸ் செலவுகள் முதலியவற்றிற்காக ஆண்டொன்றிற்கு ரூ. 5000/- வரை கன்டின்ஜென்சியாக வழங்கப்படுகின்றது. H.R.A. எனப்படும் வீட்டு வாடகைப்படியும் உண்டு.

இல்லாதவராக நீங்கள் இருந்தால் தேர்வெழுதுவதற்கு உங்களுக்காகும் போக்குவரத்துச் செலவும் அளிக்கப்படுகின்றது.

தேர்வில் வெற்றியடைந்தால் மாதந்தோறும் ரூ. 2100/- முதல் ரூ. 2800/- வரை உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். இந்தியாவில் உள்ள எந்தப் பல்கலைக்கழகத்திலும் சேர்ந்து நமது மேற்படிப்பைத் (பிஎச்டி) தொடரலாம். இடையில் திருமணம், ஏனைய குடும்பச் சூழல் காரணமாக வேற்றூர் செல்ல நேரிட்டாலும் மேற்படிப்பை அப்பகுதிக்கு அருகில் உள்ள

நாச்சியார் கோவில்


பெண் சுதந்திரம் உள்ளதா, இல்லையா என்று பட்டி தொட்டிதோறும் பெண்கள் கவலைக்கிடமாக பட்டிமன்றங்கள் நடத்திக் கொண்டிருக்கையில், பெண்ணைப் பெருமைப் படுத்த அம்பாளே அவதாரம் செய்த புண்ணிய க்ஷேத்திரம் கும்பகோணத்தில் உள்ளது என்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி தருகிறது. கும்ப கோணம் ஸ்ரீஒப்பிலியப்பன் கோவில் அருகே உள்ள நாச்சியார்கோவிலின் சிறப்பே, இங்கே பெருமாளைவிட தாயாருக்கு முன் உரிமையும், முதல் மரியாதையும் என்பதுதான்.

இராமாயணத்தில் ஸ்ரீராமனையும், ஸீதையையும் சேர்த்து வைத்த ஹனுமார் போல், இந்த ஸ்தலத்தில் கருடாழ்வாருக்கு தாயாரைத் தேடிப் பெருமாளுடன் சேர்த்து வைத்த பெருமை உள்ளது. மேதாவி முனிவரின் தபஸால் ஸ்ரீதேவி, திருநறையூர் எனும் நாச்சியார் கோவிலில் மணி முத்தாற்றின் கரையில் வஞ்சுள மரத்தடியில் ஒரு பங்குனி மாத வெள்ளிக் கிழமை உத்திர நன்னாளில் விருக்ஷப லக்னத்தில் சிறுமியாக தோழிகளுடன் திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்த சமயம் முனிவர் தேவியைக் கண்டு கொண்டார். வஞ்சுளா என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். பெருமான் அவளை மணமுடிக்க எண்ணி, பஞ்சவியூகம் அமைத்து ஐந்து ரூபத்துடன் (வாசுதேவன், சங்கிருஷ்ணன், அநிருத்தன், ப்ரத்யும்னன், சாம்பன்) தேடி வந்தனர். மேதாவி முனிவர் அவர்களை ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். விண்வெளியில் தாயாரைத் தேடி வந்த கருடனும், இறைவி அங்கு வளர்வதை, வந்தவர்களுக்கு குறிப்பால் உணர்த்தினார். ஸ்ரீவாசுதேவன் கை அலம்பத் தீர்த்தம் கேட்க, முனிவர் தந்ததும், 'நான் கன்னிகை கையால்தான் ஏற்பேன் என்றார். முனிவரும் வஞ்சுளவல்லியை அழைத்து நீர் கொண்டு வரச் செய்தார். பகவானின் கையில் நாணத்துடன் நீர் வார்க்கையில் தேவியின் திருக்கைத்தலம் பற்றினார் பகவான். முறைதவறி விருந்தினர் கையைப் பற்றியதும், தேவி கூக்குரலிட, கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து சாபம் கொடுக்க முனிவர் யத்தனிக்கையில், தன் திவ்விய மங்கள ரூபத்தைக் காட்டிப் புன்முறுவல் பூத்து நின்றார். தங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுத்துத் தாங்கள் மாமனராக வேண்டும் என்றார் இறைவன். மகிழ்ச்சி கொண்ட முனிவரும் சில வரங்களைப் பெற்றுக் கொள்ள அருள் வேண்டி நின்றார்.

1) அடியேனுக்கு வஞ்சுளவல்லியுடன் கூடி காட்சி தந்தது போல் யாவரும் இத்தலத்தில் ஏக சிம்மாசனத்தில் ஸேவித்து மகிழ வேண்டும்.

2) எனது புதல்வியான வஞ்சுளவல்லிக்கே இத்தலத்தில் எல்லா விஷயத்திலும் (ஆராதனை, நைவேத்தியம், வீதி உலா, உற்சவ கால பூஜைகள்) முதன்மையும் சுதந்திரமும் தந்தருள்வதுடன், அவள் பெயராலேயே இத்தலம் அழைக்கப்பட வேண்டும்.

3) தங்களை சரணடைந்தவர்களுக்குத்



* கல்கருடன்



• கல்கருடனுடன் தாயார், பெருமாள்

தப்பாமல் மோட்சம் அளிக்க வேண்டும்.

4) இவ்வூரில் உள்ள பூல் பூண்டு முதல் எதுவாக இருந்தாலும், இங்கு இருந்த பெருமைக் காக மோட்சம் பெற வேண்டும்.

இந்த நான்கு வரங்களையும் தந்து தாயாரின் பிறந்த இடத்திலேயே தானும் வந்து ஸ்ரீனிவாச விமானத்தைத் தோற்றுவித்து, அதனடியில் வஞ்சுளவல்லித் தாயாருடன், தேடி வந்த ஐந்து ரூபங்களுடன் சங்கர்ஷண, பிரத்யும்ன, அநிருத்த, சாம்ப, வாஸுதேவ புருஷோத்தமர்களுடனும், ப்ரம்மாவுடனும் காட்சி தந்து கொண்டிருக் கிறார்.

வஞ்சுளவல்லி அம்மை ஸ்ரீனிவாச பெரு மாளின் திருக்கோயிலின் தனிச்சிறப்பு கோயில், 'மாடக் கோயில்' அமைப்பில் உள்ளது. கோபுர வாசலில் (தெருவில்) நின்று பார்த்தால் கருவறை யில் உள்ள இறைவன் மலைமேல் எழுந்தருளி யிருப்பது போல் தோன்றும். நாச்சியாருக்கு சிறப்பு என்பதால் ஆஸ்தானத்திலும், திருவிழாக் காலங்களில் பெருமானுக்கு முன்னிட்டிருப்பார் தாயார். கோயிலைச் சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தும் நாச்சியார் பெயரில்தான் உள்ளது. இங்கு வீட்டோடு மாப் பிள்ளையாகப் பெருமாள்.

கருடனுக்குத் தனி சன்னதி. கருங் கல் கருடன். ஸ்ரீனிவாசபெருமாள் கருடன் மீது எழுந்தருளும்போது முதலில் நான்கு பேரும், பிறகு எட்டு, பதினாறு, முப்பத்தி இரண்டு, அறு பத்தி நாலு பேராக கருடனை எழுந் தருளச் செய்யும் (மிகவும் கனத்துப் போவதால் படிகள் அகன்று கொண்டே போகும்) கல் கருடனின் முகத்தில் வியர்வைகள் அரும்பும் அதிசயமும் கண் கொள்ளாக் காட்சி யாகும். வியாழன்தோறும் ஏழு வாரங் கள் இக் கருடனை பிரார்த்தினை செய்து கொண்டால் கன்னிப் பெண் களுக்குத் திருமணம் ஆகும். பிள்ளை இல்லாதவர்க்குப் பிள்ளைகள் பிறக் கும். இவருக்கும் ஆறு வேளை ஆரா தனம் உண்டு. இவருக்கு 'அமுத கலசம்' எனும் மோதகம் மிகவும் விருப்பம் என்பதால 'மோதகா மோதர்' என்றும் அழைப்பதுண்டு. இவருக்குக் கஸ்தூரி, புனுகு, புஷ்பாங்கி, வஸ்திரம் மாலை சாத்துவது மிகவும் சிறப்பானது. திருமஞ்சனம் கிடையாது. தைலக் காப்பு உண்டு.

நவராத்திரியில் பத்து நாட்களும் திருவேங்கட பெருமான் சன்னதியில் அலங்காரம், தீபாராதனையும், கொலு வைப்பதும் உண்டு. கோயில் கொலு வைக் காணப் பெண்கள் கூட்டம் வரும். தினமும் பிரசாதம் சுண்டல் நைவேத் தியம் செய்து விநியோகிக்கப்படுகிறது. விஜயதசமியன்று பெருமான் குதிரை வாகனத் திலும் தாயார் தண்டிகையிலும் புறப்பட்டு கீழக் கோடி அநிருத்த புஷ்கரணிக் கரையில் பெரிய திருவீதி புறப்பாடு கண்டருளி அம்பு போடு தலும் உண்டு.

முக்தி தரும் பன்னிரண்டு ஸ்தலங்களுள் 'ஸ்ரீநிவாசம்' என்ற பதினோராவது ஸ்தலம் இது. திருநறையூர் என்றும் பெயர் பெற்றது. திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற திருவரங்கம், திருவேங் கடம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை மலை என்ற திவ்ய தேசங்களை அடுத்து ஐந்தா வது திவ்யதேசம் திருநறையூர் எனும் நாச்சியார் கோவிலாகும். திருமங்கையாழ்வாருக்கு ஸ்ரீ வைஷ்ணவ இலச்சினை செய்து 'நம்பி' என்ற திருநாமம் அவ்வாழ்வாரால் இடப்பெட்ட பெரு மாள். நம்பி என்றால் 'பூரணன்' என்று அர்த்தம். திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியை அருளிச் செய்து பாடல் பெற்ற ஸ்தலம் இது.

-பானுமதி

கருமையான கூந்தல் வளர்ச்சிக்கு

"ஆனந்தாவின்"

நீலி பிருங்காதி தைலம்



எல்லா
கடைகளிலும்
கிடைக்கும்.



ஆனந்தா வைத்திய சாலை,
புது தாராபுரம்ரோடு, பழனி, தமிழ்நாடு.

தொலைபேசி: 681190,
பேக்ஸ்: C/o. 682360

சங்கமித்திரை

சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: 106, நேரு பஜார், ஆவடி,
சென்னை-600 054

கிளைகள்: ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி.

கீழ்க்கண்ட சீட்டு குரூப்புகளில் உறுப்பினராகி பயனடைவீர்.
உறுப்பினராக சேர்பவர்களுக்கு பரிசும், உறுப்பினர்களை
அறிமுகப்படுத்துபவர்களுக்கு தனி தனி பரிசுகள் உண்டு.
மற்ற விபரங்களுக்கு நேரில் அணுகவும்.

சீட்டுத் தொகை	தவணைத் தொகை	மொத்த உறுப்பினர்	மொத்த மாதம்
5,00,000	10,000	50	50
3,00,000	7,500	40	40
1,00,000	5,000	20	20
1,00,000	4,000	25	25
50,000	2,500	20	20
50,000	2,000	25	25
30,000	1,200	25	25
20,000	1,000	20	20
10,000	500	20	20
5,000	250	20	20

80x20 Publicity

உங்களின் அன்பான ஆதரவை என்றும் நாடும் உங்களின்
சங்கமித்திரை சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்
(சௌதிரி குரூப் கம்பெனிகள்)
ஏஜெண்டுகள் தேவை

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!

அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி
மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான
டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும்
தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.
Phone : 4340224/4340210/4342667. Fax : 044-2344333

HITECH 9604

இனியும் கதையும் தொடரும்



"உலகத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவர் பண்ணறதுக்குன்னே இளம்பியிருக்கிறானுங்க இந்த சாட்டிலைட் டீவிக்காரனுங்க... கோரி சாண்டர் டிரான்ஸ்பாண்டராம் இன்டெல்சாட் டிரான்ஸ்பாண்டராம்... எனக்கு மட்டும் சக்தியிருந்திச்சின்னா பென்சிலாலே எழுதனதை ரப்பரால் அழிக்கறமே அப்படி அழிச்சிடுவேன் இந்த டீவி. நிகழ்ச்சிங்களையெல்லாம். நாகரீகத்தைக் கேவலப்படுத்தறானுங்க, கலாச்சாரத்தைக் குழி தோண்டிப் புதைக்கிறானுங்க, ஒரு கலையுணர்ச்சி கிடையாது, ஒரு அழகுணர்ச்சி கிடையாது... எப்பப் பார்த்தாலும் வக்கிரம் தான், அசிங்கம்தான், கண்றாவிதான். அதைக் குடும்பம் குடும்பமா உட்கார்ந்து பாக்கறது... நான் சொல்லிக்கிட்டே இருக்கறேன், நீ வேணா பாரு இன்னும் கொஞ்ச வருஷத்துல மனுஷனுடைய மனசு மட்டுமில்ல, உருவங்கூட கெட்டு நசுங்கி, குறுகி ஆரோக்கியங்கெட்டு அழிஞ்சு

போகலேன்னா பாரு..." யோகேஸ்வரன் குமுறிக் கொண் டிருந்தான்.

பத்துக்குப் பனிரெண்டேயான அந்த அறையின் ஒரு பக்கமாக அமர்ந்து துவைத்த துணிகளை அமைதியாக மடித்துக் கொண்டிருந்த யுவராணி கீழ் உதட்டைப் பற்களால் அழுந்தக் கடித்துக் கொண்டாள். யோகேஸ்வரனின் கோபத்துக்கான காரணம் அவளுக்குத் தெரியாததல்ல. அதிலும் கடந்த ஒரு வாரமாக அவனுடைய இந்தக் கோபத் தையும் அவள் செய்யும் சமாதானத்தையும் கேட்டுக் கேட்டு வீட்டுச் சுவர்களுக்குக் கூடச் சலித்துப் போயிருக்கும்.

வீட்டில் இனிமேலும் அடகு வைக்கப் பொருள் இல்லை என்ற சூழ்நிலை. நான்காவது வகுப்பில் படிக்கும் நம்பியோ ஏழாவது வகுப்பில் படிக் கும் முத்துவோ ஏதாவது செலவு கொண்டு வந்து விடுவார் களோ என்ற



திலகவதி



பயத்திலேயே இருந்தாள் யுவராணி. வீட்டுச் சொந்தக்காரனுக்கு வாடகை கொடுத்து மூன்று மாதமாகி விட்டது. அதே மாதிரிதான் மளிகை, பால் எல்லாம். யோகேஸ்வரனின் தொழில் முடங்கியதிலிருந்து இதே நிலைதான்.

"இங்க பாருங்கம்மா. இந்த சால்ஜாப்பெல்லாம் வேணா. நீங்க குடிவந்தப்ப கொடுத்த அட்வான்சில இந்த மூணு மாச வாடகையைக் கழிச்சுக்கறேன். என்னால உங்களுக்குப் பண்ண முடிஞ்ச சகாயம் அதுதான். வீட்டுச் சத்தம் வெளியே வராம குடித்தனம் பண்ற நல்ல மனுசருங்கங்கறதாலேதான் இதுவும். அதுக்கு மேலே ஒரே ஒரு நாளு கூட நீங்க இங்க இருக்கக் கூடாது. வீட்டிலே இருந்து உங்க பொருளுங்களையெல்லாம் எடுத்து வெளியே வைக்கிற வேலையை எனக்கு வச்சிடாதீங்க. வர்ற வாரம் சனிக்கிழமைக்குள்ள நீங்களாகவே எனக்கு வீட்டை ஒழிச்சுக் குடுத்துடுங்க" என்று ராயர் வந்து சத்தம் போட்டு விட்டுப் போயிருந்தார்.

அதற்கப்புறம்தான் யுவராணி மனம் துணிந்து யோகேஸ்வரனிடம் தான் 'ஆகாஷ்' டி.விக்கு வேலைக்குப் போவதைப் பற்றிப் பேசினாள்.


யோகேஸ்வரன், அற்பமான புழுவைப் பார்ப்பது போல அவளைப் பார்த்தான்.

"ம்... சிங்கம் இளைச்சா முயல் அதுகிட்ட வந்து மச்சான் முறை கொண்டாடும்ங்கறது இதைத்தான்" என்றான்.

வியாபாரத்தில் நஷ்டப்பட்டுக் கையொடிந்து கிடக்கிற அவன் இளைத்த சிங்கம். கம்பனும், நக்கீரனும், பாரதியும் வந்த வழியில் வந்தவன் நான் என்று கனல் பறக்கிற கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதும் அவன் இளைத்த சிங்கம். சமூக அநீதிகளை அழித்து விட முடியும் என்று அவ்வப்போது சிறு பத்திரிகைகளை லட்சிய வேகத்துடன் நடத்தி அவை பொருளாதார நெருக்கடியினால் அல்பாயுசில் உயிரிழக்க உற்சாகமிழக்காமல் இருக்கிற அவன் இளைத்த சிங்கம்.

அவனுடைய இலக்கியத்தையும் இலட்சியங்களையும் மோகித்து, அவன் மேல் காதல் கொண்டு நிழலற்ற பாலையில் அவனுடைய நிழலாக நின்று, அவன் காரியங்கள் யாவற்றுக்கும் கைகொடுத்து, அவனுடைய கவிதைகளுக்குத் திருத்தம் சொல்லி, பாராட்டி, விமர்சித்து, அவன் பத்திரிகை நடத்தும்போது ப்ரூஃப் பார்த்து அவனுக்கு சகல விதங்களிலும் துணை நின்ற யுவராணி, இன்று பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வழி தெரியாமல் 'ஆகாஷ்' டி.வி.க்கு வேலைக்குப் போவதைப் பற்றிய பரிசீலனையில் இறங்கி விட்டதால் 'முயல்'.

"கொஞ்சம் ப்ராக்டிகலா யோசனை பண்ணிப் பாருங்க. நாம்ப ரெண்டு பேர் மட்டு



கொலுவுக்கு சுற்றிலும் பார்க் கட்டி கேழ்வரகுதான் போடுவார்கள். வித்தியாசமாய் கொத்துமல்லி தூவுங்களேன். பச்சைப் பசேலென்று இருப்பதுடன் பயனுள்ளதாகவும் இருக்குமே!

— கி. மஞ்சுளா

முன்னா பரவாயில்லை. குழந்தைங்களை நெனைச்சுப் பாருங்க..."


யோகி, "உஸ்" என்றபடி மூடியிருந்த தன் உதடுகளின் மீது தன் ஆள்காட்டி விரலை வைத்தான். "எல்லாத் திருடனுங்களும், அயோக்கியனுங்களும், துரோகிங்களும், கள்ள மார்க்கெட்காரனுங்களும் சொல்ற அதே சமாதானத்தை நீ எனக்கும் சொல்லாதே..." மந்திரம் உச்சரிப்பது போல அழுத்தமாக நிதானமாக மெதுவாக களத்துக் கரகரத்தது அவன் குரல். "எந்தத் தகுதியும் இல்லாம டி.வி.யில முகம் காட்டறதுனால கிடைக்கிற விளம்பரம், பேர், புகழ், இதெல்லாம் உனக்கும் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். நீ சொல்ற மாதிரி அதனால நம்முடைய பொருளாதார நெருக்கடியும் தீரலாம். இல்லேன்னு சொல்லலை. நீ எடுக்கற முடிவிலே நான் தலையிடவும் மாட்டேன். உன்னை நான் தடுக்கவும் மாட்டேன். அதுவும் உனக்குத் தெரியும். ஆனா, அது நாம்ப நினைக்கிற நிறைவைத் தர்ற உலகம் இல்லை. உனக்கு அது சீக்கிரத்திலேயே விளங்கும்..."

அவன் அதைச் சொல்லி முடித்த பிறகு தம்பதிகளுக்கிடையே நீண்ட நேரம் பேச்சே இல்லை. வாதம் வளர்த்து அதன் மூலம் தன் மனைவியின் முடிவை மாற்றித் தீர வேண்டும் என்ற வேகம் அவனிடமும் இல்லை. நிர்ப்பந்தத்தையொட்டித் தான் எடுத்த முடிவே நியாயமானது என்று சாதிக்கிற பிடிவாதம் அவளிடமும் இல்லை.

ஆனால், யோகேஸ்வரனின் வார்த்தைகள் ஏதோ ஒரு சாபம் போல அவளுக்குப் பட்டது. 'அது நமக்கான உலகம்' இல்லை என்றான். இது அறிவிப்பா இல்லை எச்சரிக்கையா? ஆக, அந்த உலகத்தின் சுக துக்கங்களை அவன் அவளுடன் நிச்சிந்தையாகப் பரிமாறிக் கொள்ளு



எச்சரிக்கை !



எங்கள் பெருங்காயத்தின் போலிகளை தவிர்க்க, நாங்கள் எங்கள் பொடி செய்த கூட்டுப் பெருங்காயத்தின் ப்ளாஸ்டிக் டப்பாக்களின் மூடியின் மேல் *ஹோலோகிராம்* (HOLOGRAM) சீல்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

ஹோலோகிராம் சீலினுள் "L.G." என்ற பெரிய எழுத்து மத்தியில் பெரியதாகவும், சிறு சிறு வடிவில் "L.G." என்ற எழுத்து அதை சுற்றியும் பின்புறத்தில் அமைந்துள்ளது. "L.G." என்ற எழுத்தும் பின்புறத்தில் அமைந்துள்ள எழுத்தும், வெவ்வேறு கோணத்தில் நோக்கும்போது வண்ணங்கள் மாறுபடும். "L.G." என்ற எழுத்தும், மறைவதும், தோன்றுவதாகவும் இருக்கும்.

ஆனால் போலியான *ஹோலோகிராம்* (HOLOGRAM) சீல்களில் பின்புறத்தில் உள்ள வண்ணங்கள் மாறினாலும் "L.G." என்ற எழுத்துக்கள், வெவ்வேறு கோணத்தில் நோக்கும்போது, வண்ணங்கள் மாறாமலும், தோன்றி மறையாமலும் இருக்கும்.

இதனால் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் அவர்கள் சரியான *ஹோலோகிராம்* (HOLOGRAM) சீலை கவனித்து, உண்மையான "L.G." கூட்டுப் பெருங்காயத்தை வாங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

லால்ஜி கோது & கம்பெனி

RAE - 2820

53, பெருமாள் முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை – 79.

நங்கையருக்கு அழகு சேர்க்கும்
நவீன டிசைன்களில் வண்ணமயமான

* சூரத் பெங்கால் காட்டன் சேலைகள் * காஞ்சீபுரம் பட்டு * மைசூர் சில்க்/பிரின்டட் சில்க் * கோரா காட்டன் * சுங்குடி சேலைகள் * பாலி காட்டன் * கோரா பை கோரா மற்றும் * ரெடிமேட் ப்ளவுஸ்/ஷர்ட்ஸ் * சுடிதார்.

இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

WE ACCEPT FIXED DEPOSITS

Deposit	Period	Maturity Value
ரூ. 1000	46 மாதம்	ரூ. 2000

உங்களுடைய Deposit *தொகை முதிர்வு பெறும்வரை நீங்கள்* Deposit *செய்த தொகைக்கு நிகராக எங்கள்* show room-*லிருந்து புடவைகளை விற்பனை செய்ய எடுத்துச் செல்லலாம்.* Door Delivery *வசதியும் உண்டு.*

மீரா டெக்ஸ்டைல்ஸ்

26/1, மோதிலால் தெரு, தி.நகர்,
சென்னை - 600 017. போன் : 4342696

Authorised Dealers : WIMCO FABRICS - SURAT

வதற்கான வழியை அதற்கான தேவை தோன்றுவதன் முன்பே அவன் இழுத்து மூடி விட்டான். சரிதான். இது நமக்கான உலகம் இல்லை என்றால் நமக்கான உலகம் எது? யுவராணியின் மனம் ஒரு சுழல் வட்டப் பாதையில் மந்தமாக நடை போட்டது. விசுவாமித்திரர் திரிசங்குவுக்காக உண்டாக்கியது போலத்தான் அவர்கள் இரண்டு பேருக்காகவும் ஒரு புதிய உலகத்தை உண்டாக்க வேண்டும். அந்தப் புதிய உலகத்தில் என்னென்ன இருக்க வேண்டும் என்னென்ன இருக்கக் கூடாது என்று அவர்களிடம் நீண்டதொரு பட்டியல் என்னவோ தயாராக இருந்தது. ஆனால் அது சாத்தியமா?

மடித்த துணிகளை எடுத்துச் சுவரில் பதித்திருந்த அலமாரியில் வைத்துவிட்டு யோகேஸ்வரனின் அருகே வந்து உட்கார்ந்தாள் யுவராணி. முதுகைச் சுவரில் சாய்த்து உட்கார்ந்திருந்த அவனுடைய குத்திட்ட முழங்காலின் மீது தன் மோவாயைப் பதித்துக் கொண்டாள். அவன் மூடியிருந்த கண்களைத் திறந்து அவளைப் பார்த்தான். நெற்றிப் பொட்டிலிருந்து கற்றையாகக் கிளம்பி மின்விசிறிச் சுழற்சிக்கேற்ப அசைந்த அவளுடைய சுருண்ட முடியை தலையுடன் சேர்த்து நீவி விட்டான்.

"இருட்டைப் பழிச்சிக்கிட்டே இருக்கறதுக்குப் பதிலா ஒரு விளக்கை ஏத்தணும்பீங்க இல்ல. அது மாதிரி, நான் போறதும் இருட்டுக்குள்ளவேன்னாலும் என் கைத்தீபம் அந்த இருட்டை விழுங்கிடாதா..." அவள் ஆட்காட்டி விரலை நீட்டி அவன் முகவட்டத்தின் மீது ஒரு கோடு வரைந்தாள்.

"என்ன சொல்ல வர்ற இப்ப. பெண்ணைக் காட்சிப் பொருளாக்கி லாபம் பார்க்க நெனைக்கறவங்க இருக்கற இடத்துல, பணம் தவிர வேற லட்சியமே இல்லாத இடத்துல, ஜனங்களுடைய நேரத்தையும் மனசையும் விரசமான பொழுதுபோக்குக்கானது மட்டுமேன்னு நெனைக்கற இடத்துல, உன் கைத்தீபம் உச்சிப் பகல் சூரியனுக்கு முன்னாலே ஏத்தின வெளக்காயிடும் ராணி. வசதிகளுக்காக வாழ்க்கையை விக்கத் தயாரா இருக்கற உலகம் அது..."

கோல் பிளந்த நீர் மறுபடியும் கூடிக் கொள்வது போல மீண்டும் அவர்களுக் கிடையே அடர்ந்து கனக்கிற அமைதி புகுந்து கொண்டது.

"என்ன பண்றது? நம்ம இலட்சியங்களை விட்டு வாடகையாகவும், மளிகையாகவும் கொடுக்க முடியலியே. உயிர் வசிக்கிற இடமாக உடம்பிருக்கற வரை அதைப் பராமரிக்க வருமானமும் அதுக்காக ஒரு வேலையும் தேட வேண்டியதாயிருக்குதே. வேலைக்குப் போறதுங்கற முடிவுக்கு வந்தப்புறம் நமக்குப் பிடிச்ச வேலையே எங்கே கிடைக்குது? கிடைக்கிற வேலை எதுவோ அதுக்குத்தானே போக வேண்டியதாயிடுது? ஒவ்வொருத்தருடைய விருப்பத்தையும் கேட்டா அரசாங்கம் வேலை போட்டுக் குடுக்குது...?"

யுவராணியோடு படித்த பெண் ஒருத்தி ஆகாஷ் டி.வி.யில் 'வேலை பார்த்தாள். காமாட்சி. அவள்தான் நிர்வாகத்தினரிடம் சொல்லி யுவராணிக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கித் தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அதற்குள்ளாகவே யுவராணி ஆகாஷ் டி.வி.யில் வேலைக்குச் சேரப் போகிறாள் என்ற தகவல் சுற்று வட்டாரத்தில் பரவி இருந்தது. யுவராணியின் மகன் முத்தழகு நேற்றே பள்ளியிலிருந்து வரும் போது அவனுடைய வகுப்பு ஆசிரியையின் கோரிக்கையைச் சுமந்து வந்திருந்தான். ஒன்றல்ல இரண்டு கோரிக்கைகள். முதலாவது, குழந்தைகள் நிகழ்ச்சியில் அவனுடைய வகுப்பு இடம்பெறச் செய்வது. இரண்டாவது வினாடி-வினா நிகழ்ச்சியில் அவனுடைய ஆசிரியைக்கு வாய்ப்பளிப்பது.

"அம்மா, அவங்க டீச்சர் சொல்ற மாதிரியெல்லாம் செஞ்சி அவங்களை ஆகாஷ் டி.வி.யில வரவச்சா எங்க டீச்சரையும் வர வச்சாக

பொதுவாக நவராத்திரி பொம்மைகளை துணியில் சுற்றி பத்திரப்படுத்துவார்கள். இந்த வருடம் கொலு முடிந்த பிறகு நியூஸ் பேப்பரில் சுற்றி வைத்துப் பாருங்கள். சிறிது கூட கலர் மாற்றமோ, பழுப்பேறியோ இருக்காது.

- வித்யா இராமஆனந்த்



ணும். இல்லேன்னா பாரு..." என்று மிரட்டினான் இளையவன்.

பால் பையன், காய்க்காரி, பெட்டிக் கடைக்காரன் என்று ஒவ்வொருவரும் அவளிடம் வலிய வந்து அதிகப்படியான புன்னகையுடன், அன்புடன், மரியாதையுடன் பேசி அவளுக்குக் கிடைக்கப் போகும் வேலையைப் பற்றித் தங்களுடைய மகிழ்ச்சியைப் பதிவுசெய்தார்கள்.

"பிடிச்ச சினிமாப்பாட்டு, மன்மோகன் சிங்கின் பொருளாதாரக் கொள்கை பற்றிய அபிப்பிராயம், டில்லி பட்ஜெட், மெட்றாஸ் பட்ஜெட் பத்திய கருத்து அப்படி இப்படின்னு எதிலேயாவது என்னை நொளைச்சு விடுங்கம்மா..." என்றார்கள்.

பெட்டிக்கடைக்காரனின் தேவையும் அதற்காக அவன் சொன்ன காரணமும் அவ ளுக்கு அதிசயமாகப் பட்டது. மெழுகுவர்த்தி வாங்கப் போன யுவராணி கொடுத்த சில்லறைக் காசை வாங்க மறுத்த அவன் சொன்னான். "இருக்கட்டும்மா. இது என்ன பெரிசு. என்னை மட்டும் ஆகாஷ் டீ.வி.யில நாலு தடவை தலை காட்ட வச்சிடுங்க. அது போதும். எங்க மாமனார் வீட்டார் என்னை என்னவோ இள்ளுக்கீரைன்னு நெனச்சிக்கிட்டிருக்காங்க. எம் பொண்டாட்டி அதுக்கு மேலே. அவங்க மூஞ்சியில எல்லாம் கரியைப் பூசி, அய்யா யாரு, அவருடைய செல்வாக்கு என்னங்கறதை அவங்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டற மாதிரி ஒரு உதவி செய்ங்கம்மா" என்றான்.

யோகி மட்டும்தான் வேறு மாதிரி சிந்தித்தான். யுவராணி அதையும் தன் சிநேகிதி காமாட்சியின் காதில் வேசாகப் போட்டு வைத்தாள். உடனே வந்ததே பார்க்க வேண்டும் ஆத்திரம் அவளுக்கு. மதுரையை எரித்த கண்ணகியைப் பின்னுக்குத் தள்ளி விட்டாள். சாட்டிலைட் டீ.வி.க்களின் தேவை, சேவை, அவை எப்படிக் காலத்தின் கட்டாயமாகி விட்டிருக்கின்றன என்பதைப் பற்றி மூன்று நிமிடத்துக்கு ஒரு சொற்பொழிவே ஆற்றி விட்டாள். அப்படியாக, விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு வெளிப்பாடாக இருக்கும் ஆகாஷ் டீ.வியில் எவ்வளவு சிறியதானாலும் தாங்களும் ஒரு அங்கமாவதைப் பற்றி ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டும். அதை விட்டு விட்டு அதைப் பற்றி மட்டந்தட்டுவது எந்தவிதத்திலும் அறிவுடைமையாகாது என்றாள். நேரடியாகச் சொல்லவில்லையே தவிர நெருப்புக் கோழி, அழுமூஞ்சி, உதவாக்கரை என்பது போன்ற பல பட்டப் பெயர்கள் யோகிக்கு ஏற்றதாகத் தன் கைவசம் இருப்பதை நாசூக்காகத் தெரிவிக்கவும் செய்தாள்.

"என்னவோ காமாட்சி, அவர் எப்பவும் என் விருப்பத்துக்குக் குறுக்கே நின்னதில்லை. நானும் அவர் மனசுக்கு விரோதமாக இதுவரை எதையும் செய்ததில்லை..." என்று யுவராணி தன் சிநேகிதியின் காதுபட முணுமுணுத்தாள்.


"அதெல்லாம் ஒரு பிரச்னையும் இருக்காது. நம்பளைப் போல எத்தினி பேரு அங்க வேலை செய்யறாங்க? எத்தினியோ பேரு அங்க வேலை கெடைச்சாப் போதும்னு காவடி தூக்கிகிட்டு அலையறாங்க. நீ வீணா மனசைப் போட்டு அலட்டிக்காம பேசாம என் கூட வா. எல்லாம் சரியாப் போகும்..."

காமாட்சி, இரண்டு பக்கங்களிலும் அடிவாங்கும் மத்தளமானாள். ஆகாஷ் டீ.வி.க்கு யுவராணியை அவள் அழைத்துப் போன முதல் தினத்திலேயே அது நடந்தது. ஆகாஷ் டீ.வி. செய்தி வாசிப்பாளர் நந்தினியும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் யசோதா, ரஞ்சிதம், பைந்தமிழ்ச் செல்வி, நித்யா என்று எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டு ஆளுக்கொரு கருத்தாகச் சொல்லி அவளைக் கலக்க ஆரம்பித்தார்கள்.

ஏலத்தில் எடுக்கப் போகிற பழைய நாற்காலியைப் பார்ப்பது போல யுவராணியை இடமும் வலமுமாகச் சுற்றி வந்து பார்த்தார்கள் நந்தினியும் ரஞ்சிதமும்.

நந்தினி உதட்டைப் பிதுக்கிக் கொண்டு 'சரிப்பட்டு வராது' என்று சொல்வது போலத் தலையை அதிருப்தியுடன் ஆட்டினாள்.

"ஏய்... என்ன... அவளுக்கு என்ன குறைச்சல்? அழகா லட்சணமா இருக்கா. கண்ணு மூக்கு எல்லாம் எடுப்பா இருக்கு. படிப்பிருக்குது. கவிதை எழுதுவா. அவ எழுதி நடிச்ச நாடகம் கலைவிழாவில பரிசு வாங்கியிருக்குது. இன்னும் என்ன வேணும்" என்றாள் காமாட்சி அதட்டலாக.



கொலுவிற்குக் கலர் பலூன்களை தொங்க விடுவோம். பலூனைச் சுற்றி கலர் சமிக்கிகள் பெரிது பெரிதாய் ஒட்டுங்கள். பிரமாதமாய் இருக்கும்.

- கி. மங்களா

"**பருவா!** எனக்கா! அது மறைஞ்சு போய்
எத்தனையோ நாளாச்சு!" என்கிறார் நளினி.

தன் **சருமம் வறண்டு** போய் இருந்ததை
சங்கீதா எப்போதோ மறந்து விட்டார்.

"இப்போதெல்லாம் **வெயிலில்** போனா முகம்
கறுக்காமல் இருக்க எனக்குச் சரியான
பாதுகாப்பு கிடைச்சாச்சு" என்கிறார் விஜயா.

"என் **மென்மையான சருமத்தை** நினைச்சா எனக்கு
ரொம்ப **பெருமையா** இருக்கு" என்கிறார் மது.



பருக்களினால் அவதியா? சருமம் வறண்டு போகிறதா?' முகத்தில் சுருக்கம் விழுகிறதா? வெயிலினால் முகம் கறுத்து விடுகிறதா? ஃபேஸ் டு ஃபேஸ் ஆயுர்வேத க்ரீம் இத்தகைய பிரச்னைகளை நிச்சயமாகப் போக்கி விடுகிறது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள ஆயுர்வேத மருத்துவமுறைதான் அதற்குக் காரணம். அந்த மருத்துவ முறையினால்தான் ஒரே ஃபார்முலேஷனைக் கொண்டு பல்வேறு சருமப் பிரச்னைகளையும் தீர்க்க முடிகிறது. முக்கியமாக, எத்தகைய பக்க விளைவுகளும் இல்லாமல். எனவே, உங்கள் சருமம் நாள் முழுவதும் பளிச்சென்று மிருதுவாகத் திகழ முடிகிறது. ஃபேஸ் டு ஃபேஸ் பல்லாயிரக்கணக்கான பெண்களுக்குப் பலனளித்து வரும் அழகு சாதனம். நீங்களும் பலனடையுங்களேன்.



ஃபேஸ் டு ஃபேஸ் பல்வேறு சருமப் பிரச்சனைகளுக்கும் ஆயுர்வேதம் அளித்திடும் நிவாரணம்.

Make your Money work for you with Sindhoori Deposit Schemes

Special Customer Service

HIGHLIGHTS

- Free Master Health check-up at Apollo Hospitals.
- Personal Accident coverage for the first named depositor.
- Concessional terms on Car financing.
- Postdated interest warrants along with Deposit Receipt.
- Outstation repayments will be made by way of demand draft.
- Outstation cheques accepted at par.
- CARE Rated Company.

SCHEME I FIXED DEPOSITS

Period of Deposit	Rate of Int. per annum	
	Monthly	Quarterly
12 months to 60 months	15%	15.19%

SCHEME II CUMULATIVE DEPOSIT

Period of Deposit	Maturity amount on every Rs. 3000/- of deposit	Effective Annual yield
1 Year	3,482	16.08%
2 Years	4,042	17.37%
3 Years	4,692	18.80%
4 Years	5,446	20.38%
5 Years	6,321	22.14%

For full text under Non-Banking Financial Companies & Miscellaneous Non-Banking Companies (Advertisement Rules 1977) refer advertisement released in the Trinity Mirror & Makkal Kural on 18-10-95

OM SINDHOORI CAPITAL INVESTMENTS LTD.

A Part of the Apollo Hospitals Group

Registered Office: Ali Towers, 22, Greams Road, Madras - 600 006. Ph: 8233702, 8233680.
Branch Offices : Bangalore - Ph: 2281529 Cochin - Ph: 368401, Hyderabad - Ph: 316335.
(Applications are also accepted at the offices of the various Managers to the Scheme)

கோதுமை மாவை கரைத்து தோசை செய்யும் பொழுது மாவு கட்டி, கட்டிகளாக கரைக்க சிரம மாக இருக்கும். அதைத் தவிர்க்க,

மாவை நன்கு நனையுமாறு நீர் விட்டு மூடிவைத்து விட வேண்டும். 15 நிமிடம் கழித்து மாவைக் கரைத்தால் கட்டிகளில்லாமல் மாவு கரைக்க சுலபமாக இருக்கும். இது என் அனுபவத் தில் கண்டது.

— ரேவதி



"தபாரு, உன்னை மாதிரி அக்கவுண்ட்ஸ் லேன்னா இருந்துடலாம். இல்ல, வேற டெக் னிகல் சைட்லே, கேமரா, எடிட்டிங், ஸ்கிரிப்ட் தயாரிக்கறதுங்கறதுங்கற மாதிரி எதிலேயாவது இருந்துடலாம். ஆனா ஸ்கிரீன்ல முகம் காட்ட விடுவாங்களான்னு எனக்குக் கூட சந்தேகமா இருக்குது" என்றாள் ரஞ்சிதம்.

"என்ன காமாட்சி, இப்படி விவரம் தெரியா மப் பேசறே... டீ.வி.யிலே முகம் காட்டறதுக் கான முதல் கண்டிஷன் இளமை. அந்த இள மைதான் இப்ப சினிமாக் கணக்கைத் தொட்டி டுச்சே. பதிமூணுல இருந்து இருபத்தி மூணுக் குள்ளனாத்தான் இங்க சிறு வயசும்பாங்க. இவங்களுக்கு இருபத்தியஞ்சு, இருபத்தியாறு இருக்குமே.. அப்புறம், அழகா இருக்காங்க இல் லேங்கல... இருந்து என்ன பிரயோசனம்... மாநிறமா இருக்காங்களே... மூக்கும் முழியுமா இல்லாட்டாலும் இங்கே தோல் வெளுப்பா இருக்கணும்பாங்களே. எல்லாத்தையும் விட இவங்க கன்னியமாப் பேசறாங்க. தமிழைத் தமிழ் மாதிரி உச்சரிக்கிறாங்க. கௌரவமா சிரிக்கிறாங்க. இதெல்லாம் சரிப்பட்டு வருமா? டீ.வி. பார்த்துக்கிட்டிருவங்க மேலே நாய்க் குட்டி விழுந்து பொன்ற மாதிரி பெரண்டு கொஞ்சிக் கொஞ்சிப் பேசற குரல்லே, பழைய காலத்துப் பொம்பளை, முறை மாப்பிள்ளை யைப் பார்க்கறாப்பல ஒரு பார்வை பார்த்து, சிரிச்சி, மணிக்கட்டை சக்கர வட்டமாகச் சுத்தி, எதிராளியோட கண்ணைக் குத்தற மாதிரி மின்னல் வேகத்திலே இரண்டு ஆட் காட்டி விரலையும் நீட்டி, தமிழை இங்லீஷ் உச்சரிப்போடு பேசி, வண்டு ரீங்கரிக்கப்பறாப் பல மூக்காலே வார்த்தைகளைச் சொல்லி, ஒவ் வொரு எழுத்தையும் ஏத்தி இறக்கி... இதெல் லாம் இவங்களால முடியுமா..." என்று மெய் யான அக்கறையுடன் கவலைப்பட்டாள் பைந் தமிழ்ச் செல்வி.

"கல்யாணம் வேற ஆயிடுச்சாம்டி" என்று அறிவித்தாள் நந்தினி. "குழந்தைங்க கூட இருக்குதில்ல..." என்று சந்தேகம் கேட்டாள் யசோதா.

"ஏய்.. சும்மா எதையாவது சொல்லி காபரா பண்ணாதீங்க. கலா கூட தான் கல்யாண மானவ. உஷாவுக்கு பதினைஞ்சு வயசுல பையன் இருக்கறான். அவங்களை எல்லாம் இங்கே வேலைக்குச் சேர்த்துக்கலையா.. போங் கடி. பேசாம..." என்று அவர்களை அடக்கி னாள் காமாட்சி.

பிரம்மாண்டமான கட்டிடத்தையும், கால் புதையும் கம்பளங்களையும், பளபளக்கும் உலோகக் கதவுப் பிடிகளையும் அலங்காரச் சாதனங்களையும் கண்டு பிரமித்துப் போயி ருந்த யுவராணியை அவர்கள் பேச்சு கலங்கிப் போகத்தான் செய்தது.

"என்ன பேச்சுப் பேசற காமு. கழுதையும் குதிரையும் ஒண்ணாயிடுமா? கலா, உஷாவெல் லாம் 'ஆகாஷ் டீ.வி.' ஆரம்பிச்ச காலத்துல இருந்தே இங்கே இருக்கறவங்க. அப்புறம் நிர்வாகத்துக்கு அவங்க செஞ்சிருக்கற சேவை இருக்குதே சே... வை... அது என்ன எல்லாராலே யும் செய்ய முடிஞ்ச சேவையா?" என்றாள் நந்தினி.

"ச்! பொறாமை பிடிச்ச நாய்ங்க... எங்கியா வது ஒரு பொம்பளை பவர்ஃபுல்லா இருந்தா உங்களுக்குப் பிடிக்காதே. உடனே இப்படி எதுனா பழியைப் போடுங்க..." என்று நந்தினி யின் காதைப் பிடித்து முறுக்கினாள் பைந் தமிழ்ச் செல்வி.

"அட! உள்ளதைச் சொன்னா, இவ என் னாடி அவளுங்களுக்கு இந்த வக்காலத்து வாங் கறா..." என்று செல்வியின் தலையில் ஒரு குட்டு வைத்தாள் ரஞ்சிதம்.

"ரொம்பத் தெரிஞ்ச மாதிரி பேச வந்துட் டியே... ஆட்டோவுக்குக் காசு தர வக்கில்லாம இருந்த கலா, வீடியோ ஷூட்டிங்குக்குத் தேவையான அவ்வளவு கருவிங்களையும் வாட கைக்குத் தர்ற கடையைத் தொறந்துட்டா... அது எப்படி.... சும்மாக் கிடந்த அவளுடைய கைப் பைக்குள்ள அம்பது லட்சம் ரூபாய் எப்படி மொளச்சது? காண்வெண்ட்டில எல்லாம் ஃபீஸ்

கட்ட முடியலேன்னு கார்ப்பரேஷன் ஸ்கூல்ல புள்ளையை படிக்க வைக்கறேன்னு என்கிட்டேயே இதே இடத்தில நின்னுக்கிட்டு இரண்டு வருஷத்துக்கு முன்னாலே உஷா சொல்லியிருக்கா. இப்ப அண்ணாநகர் வெஸ்ட்லே பங்களா, டாடா எஸ்டேட்ல சவாரி, கையில செல்லுலார் ஃபோன். எப்படி வந்துச்சாம்..." என்றாள் நந்தினி.

"எனக்கென்ன போச்சு. இப்படியே துரத்திக்கிட்டு இருங்க. அது மெதுவா வெளியில பரவி 'ஆகாஷ்... டீவியில வேலை செய்யற பொண்ணுங்க எல்லோருமே அப்படித்தான்னு நம்ப எல்லார் தலையிலேயும் சேர்ந்து விடியப் போவுது பாருங்க... வீடியோ எக்யுப் மெண்ட்ஸ் வாங்கிட்டாளாம். ஏன் பேங்கில லோன் போட்டு வாங்கியிருக்க மாட்டாளா? வீடு கட்டிட்டாளாம்.. ஒருவேளை அரசாங்கம் நிலம் ஒதுக்கியிருக்கும். நகை நட்டை வித்து, பூர்வீகமான சொத்துங்களை வித்து கட்டியிருக்கலாம். உடனே எதுக்கு தப்புக் கணக்குப் போடறீங்க...?" என்றாள் பைந்தமிழ்ச் செல்வி.

"அப்படிங்களா ஏகநாதரே... அவளுங்க ரெண்டு பேரும் அடிக்கற கொட்டத்தையும் வெளியே போட்டுக் காட்டற வேஷத்தையும் இந்த இரண்டு கண்ணாலேயும் பார்த்ததுனால சொல்லிட்டேன்..." என்ற ரஞ்சிதம் படபடவென்று கன்னத்தில் 'தப்பு' போட்டுக் கொண்டு நந்தினியின் பக்கம் திரும்பி, "அவளுங்களைப் பத்தி ஒரு வார்த்தை தப்பா பேச வுடமாட்டங்கறா... என்ன சமாசாரம்..." என்றாள்.

நந்தினி எதையும் சொல்வதற்கு முன் பைந்தமிழ்ச்செல்வி, "அவங்களைப் பத்தி ஒரு நல்ல வார்த்தை சொல்ல மாட்டேங்கறீங்களே நீங்க, அது ஏன்?" என்று அவர்களை மடக்கினாள்.

"ம்... அப்படிக் கேளு. நான் சொல்றேன். அந்த விஷயத்தை..." என்றாள் யசோதா. "போன வருஷம் பொங்கலுக்கோ, தீபாவளிக்கோ ஸ்பெஷல் நிகழ்ச்சிங்க தயாரிக்கற வேலையை ஒவ்வொருத்தருக்கும் குடுத்திருந்தாங்களே, அப்ப, இந்தம்மா தான் தயாரித்த நிகழ்ச்சியுடைய கேசட்டை எடிட் பண்ணி, சொன்ன தேதியில கேப்சூலிங் டிபார்ட்மெண்டில குடுத்துடணும்னு ராத்திரி பன்னென்டு வரைக்கும் காத்திருந்தாங்க. அந்தப் பையன் என்னடான்னா உஷா கேசட்டை வாங்கி எடிட் பண்ண ஆரம்பிச்சுட்டான். பொழுது விடிஞ்சுது. அப்பவாவது இவ கேசட்டை வாங்கிப் பண்ணிக் குடுத்துடுவானுங்கன்னு இவ உட்கார்ந்துகிட்டே இருந்தா. அந் நேரத்துக்கு டி.ஜியம்மோ, எம்டியோ தெரியலை ஃபோன் பண்ணி முதல்ல கலாவுடைய கேசட்டை எடிட் பண்ணிக் குடுத்துடுங்கன்னாங்களாம். அதான் இந்தம்மாவுக்கு எரிச்சல்..."

"அதெல்லாம் அப்படி. எம்டியும் டி.ஜி.எம்மும் சொல்லவேயில்லையாம். இந்த எடிட்டிங் ரும் ஆசாமிங்க விடற குடு அது. நான் ஒண்ணும் அதை மனசில வச்சிக்கலை. அப்படி ராத்திரி முழுக்கக் காத்திருந்தும் மறுநாள் எம்டி., நான் என்னவோ சோம்பேறி மாதிரியும் கேசட் கேப்ஸ்யூல் பண்ணி ஃபிலிப்பைன்ஸுக்கு அனுப்பணும்னுங்கறது தெரியாதவள்னும் நெனைச்சுகிட்டு செமை டோஸ் விட்டாரே. அப்ப கொஞ்சம் வருத்தமா இருந்திச்சு. அப்புறம் மறந்துட்டேன்..." என்றாள் ரஞ்சிதம்.

"ஆமா... ஒவ்வொருத்தி ஒரு புரோகிராம் பண்ணா பரவாயில்லை... அஞ்சாறு புரோகிராம் பண்ணியாகணும். இதுல இருக்கற எடிட்டிங் ரூமுங்க போதறதே இல்லை. அதனால, 'என் கேசட்டை முதல்லே முடி உன் கேசட்டை முடி'ன்னு எப்பப் பார்த்தாலும் அடிபிடிதான். இந்த எடிட்டிங்காரனுங்க காட்டற புளிப்ஸ் இருக்குதே... அப்பாடா... அதுலயும் இந்த டிஎஃப்டிக்காரனுங்களை கையிலேயே பிடிக்க முடியறதில்லே... என்ன செய்யறது... இதா அதான்னு இந்த வருஷம் தீபாவளியும் வந்துடுச்சி. எல்லார் தலையிலயும் இரட்டிப்பு மடங்கு லோடைக் கட்டுவாங்க. என்ன செய்யப் போறோமோ தெரியலை..." என்று சலித்துக் கொண்டாள் ரஞ்சிதம்.

ஆபீஸ் பையன் சாமிக்கண்ணு வந்து அவர்கள் உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். "யுவராணிங்கறவங்களை எம்டி. கூப்பிடறாரு."

யுவராணி எழுந்து நின்றாள். காமாட்சியைத் திரும்பிப் பார்த்தாள். "அட என்ன இது? பயப்படறியா... எதுக்கு... சும்மா தைரியமா போய்ப் பார்த்துட்டு வா... என்ன ஆயிடப்



கோயிலுக்கு அர்ச்சனை செய்யப் போகும் போது, அதிகமாக மற்றொரு தேங்காயை உங்கள் பைக்குள் வைத்திருக்கவும். முதலில் உடைக்கும் தேங்காய் அழுகி விட்டால் அது கைகொடுக்கும். மனமும் கஷ்டப்படாது.

— வயலூர். ஆர். பார்த்திபன்

MBF

மந்தவெளி பெனிபிட் பண்ட் லிமிடெட்

MANDAVELI BENEFIT FUND LTD

பிக்செட் டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட்

மற்றும் சேமிப்பு கணக்குகளும் உண்டு

நகைக்கடன் மற்றும் மாநகர எல்லைக்குட்பட்ட சொத்துக்களின் பேரில் கடன் வழங்கப்படும்.

பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு

க. பொன்னுசாமி
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
Phone (Per) : 493 8252

MAIN BRANCH

P.A. BUILDING 42, VENKATAKRISHNA ROAD,
RAJA ANNAMALAIPURAM, MADRAS - 600 028. PH : 493 8314 / 15 / 16

EGMORE BRANCH

P.A. HOUSE, 32-A, HALLS ROAD, EGMORE, MADRAS - 600 008.
PH : 826 4422 / 33

ANNA NAGAR BRANCH

1652-H, II AVENUE, FIRST FLOOR, (OPP. POST OFFICE)
ANNA NAGAR, MADRAS - 600 040. PH : 628 5543, 628 1198

CHROMPET BRANCH

81, RADHA NAGAR MAIN ROAD, CHROMPET, MADRAS - 600 044.
PH : 40 2178

PORUR BRANCH

NO. 300-B, TRUNK ROAD, FIRST FLOOR, PORUR, MADRAS - 600 116.
PH : 482 6867

* Transaction with members only

PA

P.A. CONSTRUCTION GROUP

P.A. Ads

ஸ்ரீரஸ்து – சுபமஸ்து – ஸ்ரீ வெங்கடேசப்ரசன்ன:- ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள்
ஆசியுடனும் ஆக்ஞையின்படியும் –

தீபாவளி நிஜ கங்காஸ்நான காசியாத்திரை

நமது யாத்ரா சர்வீஸுக்கு வயது 30. இதுவரை நடத்தியுள்ள யாத்திரைகள் 200ஐ நடத்தி தீபாவளி கங்காஸ்நான காசி யாத்திரை. 201-வது யாத்திரையாக அமைகிறது. எனவே இந்த யாத்திரையை ஸ்ரீ வெங்கடரமண ஸ்வாமிக்கும் கங்கா அன்னபூர்ணா, விசாலாக்ஷி சமேத ஸ்ரீ விஸ்வநாதருக்கும் க்ருதஜ்ஞதை தெரிவிக்கும் வகையில் அமைத்து உள்ளோம். 2.11.96 சென்னையிலிருந்து T.No. 6039 கங்கா காவேரி எக்ஸ்பிரஸில் புறப்பாடு. 4.11.96 காலை காசி சேருதல் 5.11.96 காலை கணபதி ஹோமம் முதல் 9.11.96 இரவு வரை காலை, மாலை இருவேளைகள். 9 வேளைகள், ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஹோமம் – ஸ்ரீ மஹாசுதர்சன ஹோமம் – அன்னபூர்ணா ஆவஹந்தி ஹோமம், ராஜமாதங்கி, ராஜஸ்யமளா, ப்ரத்யங்கிரா முதலிய ஹோமங்கள் செய்து 9.11.96 இரவு மஹாசண்டீ யாகம் பூர்ணா ஹுதி, வஸோர் தாரை, அவப்ருதஸ்நானம் சுவாசினி பூஜை தம்பதி பூஜை இத்யாதிகளுடன் நடத்த அமைத்து உள்ளது. தீபாவளி சமயம் காசியில் வந்து தங்கியிருக்கும் தென்னாட்டு யாத்ரீகர்கள் அனைவரும் மேற்படி யாகங்களைத் தரிசிக்கலாம். 10.11.96 அதிகாலை தீபாவளி கங்காஸ்நானம் – ஸ்வர்ண அன்னபூர்ணா தரிசனம், பால் குடம் எடுத்து 108 படிபால் ஸ்ரீ விஸ்வநாதருக்கு அபிஷேகம் – பீதாம்பரம் சாற்றுதல் – ஏழைகளுக்கு அன்னதானம் இப்படி நடைபெறும். 11.11.96 ஸ்ரீ வெங்கடரமண சுவாமிக்கு ஏக இலக்ஷார்ச்சனை. தரிசிக்கும் க்ஷேத்திரங்கள் தீர்த்தங்கள். ஸ்ரீ காசி கங்கா கோமதீ சங்கமம், மார்க்கண்டேய காலஸம்ஹார மூர்த்தி. வால்மீகி மஹரிஷி ஆச்ரமம், சாரனாத் புத்தக்ஷேத்ரம், வியாசகாசி, விந்த்யவாசினி துர்காக்ஷேத்ரம், நந்தி கிராமம் பாதுகா பட்டாபிஷேகம் – சித்ரகூடம் – அயோத்யா – நைமிசாரண்யம் – கயா – புத்த கயா முதலிய க்ஷேத்ரங்கள். 20 நாட்கள் நபர் 1-க்கு ரூ. 5000/- இந்த விளம்பரம் பார்த்து நபர் 1-க்கு ரூபா 1000/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி பெயர்களை பதிவுசெய்து கொள்ள வேணும். மீதி துகையை 15.10.96-க்குள் செலுத்த வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :


ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்,
1 பூசுப் லேன், அருணாசல ஆசாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை – 600 005. டெலிபோன் : 854 1957

1. குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் யாத்ரீகர்களை நிறுத்திக் கொள்ளவே ரூ. 1000/- டோக்கன் அட்வான்ஸ் வாங்கப்படுகிறது. 2. யாத்திரைகளை அறிவித்த பிறகு தள்ளிவைப்பதோ ஒட்டுமொத்தமாக கேன்ஸல் செய்வதோ இடையாது. 3. யாத்திரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து இடங்களையும் காண்பிக்கப்படும். 4. யாத்திரை மத்தியில் தனியாக இதற்கு அதற்கு என்று பணம் வசூலிப்பது இடையாது. 5. காசியில் நவசண்டீ பூஜா, யாக காலங்களில் பூஜையில் வைத்த ஸ்ரீமஹாலக்ஷ்மி டாலரும், சால்வையும் போர்த்தி யாத்ரீகர்களை கௌரவிக்கப்படும். 6. பூஜை யாக சம்ரக்ஷணம் செய்ய உபகரித்தவர்களுக்கும் ரிஜிஸ்தர் தபாலில் பிரசாதங்கள் அனுப்பபப்படும்.

1.10.1996 முதல் 10.10.1996 வரை சிறப்பு தள்ளுபடி விற்பனை

மதுரை சுந்தரம் சாரீஸ்

தரமான மதுரை சுங்குடி புடைவைகள், கோரா காட்டன், பாலி காட்டன், பெங்கால் காட்டன், டஸ்சர் சில்க், பத்திக் சுடிதார் போன்றவற்றை மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் வாங்க கைராசியான ஸ்தாபனம்.



சுந்தரம் சன்
மதுரை சுந்தரம் சாரீஸ்
47, ஆர்.கே. மடம் ரோடு
சென்னை – 28.
(மந்தைவெளி மார்க்கெட் போஸ்டாபீஸ் அருகில்)

H.O. தேவாங்கர் சத்திரம்
98, தெற்குமாசி வீதி,
மதுரை – 625 001. போன் : 37303

வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!

போவுது..." என்று அவளுக்குத் தைரியம் சொன்னாள் காமாட்சி.

"ஃபைல், பேனா, ஹாண்ட்பேக் எல்லாத்தையும் விட்டுட்டுப் போறீங்களே. இந்தாங்க" என்று அவள் கைகளில் நீல நிற பிளாஸ்டிக் ஃபைலைத் திணித்தாள் யசோதா.

எம்.டி.யின் அறை என்பது ஏதோ ஒரு கனவுக் காட்சி போல இருந்தது. அவர் பார்வையை ஊன்றியிருந்த சிறிய தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்ததும் அவளுக்குப் பகீரென்றது. அதில் வழக்கமான டீ.வி. நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக அவள் இத்தனை நேரமும் உட்கார்ந்து மற்ற பெண்களுடன் பேசிக் கொண்டிருந்த இடம் தெரிந்தது. அவள் நீங்கலாக மற்ற பெண்கள் இருந்த இடத்திலே இருந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.



கொலு மேடையில் ப்ளெயின் துணி போட நேர்ந்தால், போட்டதும் க்ரேயான் பென்சிலால் டிசைன், படங்கள் வரைந்து தள்ளுங்கள். உங்கள் துணியும் கலர் புல்லாக இருக்கும். உங்கள் கைவண்ணமும் சிறக்கும்.

- மஞ்சுளா கிருஷ்ணன்

நந்தினி, கண்ணாடி முன் நின்று, நெற்றிப் பொட்டை சரிசெய்து கொண்டாள்.

எம்.டி. அந்தச் சிறிய தொலைக்காட்சிப் பெட்டியின் இயக்கத்தை நிறுத்திவிட்டு, அவளைப் பார்த்தார். அவளுக்கு உடலே கூசிப் போவது போல இருந்தது.

"ப்ளீஸ், டேக் யுவர் சீட்" என்றார் எம்.டி. மிகவும் மரியாதையுடன். "உங்களைப் பற்றி அக்கவுண்ட்ஸ் காமாட்சி சொன்னாங்க. உங்களோட அப்ளிகேஷனையும், ஜெராக்ஸ் சர்டிபிகேட்டுகளையும் பார்த்தேன். உங்களை உடனடியா இங்கே வேலைக்கு எடுத்துக்கறதா தீர்மானம் பண்ணிட்டேன். ஆனா, உங்களுக்கு டீ.வி. ஸ்கிரீன்ல முகம் காட்டணும்ங்கற ஆசை எதுவும் இருக்காதுன்னே நெனைக்கறேன். நான் சொல்றது சரியா..." என்றபடி எம்.டி. எதிரில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியை இயக்குவதும் நிறுத்துவதுமாக இருந்தார்.

"டீ.வியில வரணும்னு நான் நெனைக்கலை சார். குடும்பக் கஷ்டம் தீர எதாவது ஒரு வேலை கெடைச்சாப் போதுமேன்னு..." யுவராணிக்கு யாரோ ஒரு அன்னியனிடம் இதைச் சொல்ல நேர்ந்து விட்டதே என்பது வருத்தமாக இருந்தது.

"தட்ஸ் குட். உங்க முதிர்ச்சியை நான் பாராட்டறேன்" என்று சொன்ன எம்.டி. மேசையின் இழுப்பறையைத் திறந்து ஒரு கட்டு கரன்சி நோட்டுகளை எடுத்தார். "வீட்டு வாடகைப் பிரச்னை பத்தி காமாட்சி சொன்னாங்க. ப்ளீஸ்... இத வாங்கிக்கங்க..."

"பரவால்ல சார். நான் சம்பளம் வாங்கனப்புறம் அதையெல்லாம் சமாளிச்சுக்கறேன்" யுவராணியை நோக்கி உருகி வெண்ணெய் வழிவது போல வழுக்கிக் கொண்டு வந்தது நோட்டுக்கட்டு.

"எடுத்துக்குங்க ப்ளீஸ்" என்றவர் "நான் டி.ஜி.எம்கிட்டயும் புரொகிராம் மேனேஜர்கிட்டயும் சொல்லிடறேன். நீங்க அவங்ககிட்டே நாலு கான்செப்ட் குடுத்துடுங்க. உங்களைப் போல படிப்பும் திறமையும் இருக்கிறவங்களால தான் இப்படிப்பட்ட மக்கள் தொடர்பு சாதனத்துக்கு இடையறாத புது ரத்தம் செலுத்திகிட்டே இருக்க முடியும்னு நான் நம்பறேன். என் நம்பிக்கைக்கு ஏத்தபடி நீங்க நடந்துக்குவீங்கன்னு நெனைக்கிறேன். உங்களுடைய அதிகபட்ச திறமையைக் காட்டி தீபாவளி நிகழ்ச்சிங்களை தயாரிச்சுத் தருவீங்கன்னு எதிர் பார்க்கிறேன்" என்று ஆங்கிலத்தில் சொல்லி, அளவாகப் புன்னகைத்து அவள் அங்கிருந்து வெளியே போகலாம் என்று அவன் உணர்த்தினான்.

'கான்செப்ட்' என்றால் என்ன என்பது மட்டும்தான் அவளுக்கு விளங்கவில்லை. அதைத் தவிர அவன் சொன்ன விஷயங்கள், அதைச் சொல்லிய முறை எல்லாம் அவளுக்குப் பிடித்தேயிருந்தது. யோகி, கொஞ்சம் தேவைக்கு அதிகமாகவே பயந்து விட்டான் என்று அவளுக்குத் தோன்றியது. கைப்பையிலிருந்து பணம் அமைதியை, நிம்மதியை, தைரியத்தை ஒருவிதத்தில் தன்னம்பிக்கையைக் கூடக் கொடுத்தது போல இருந்தது.

தயாரிப்பாளர்களாக இருந்த மற்ற பெண்களை சந்தித்து 'கான்செப்ட்' என்றால் என்ன என்பதையும், தீபாவளிக்குக் கடந்த வருடங்களில் என்னமாதிரியான நிகழ்ச்சிகள் 'ஆகாஷி'லும் மற்ற தனியார் தொலைக்காட்சிகளிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்கிற தகவலையும் அவள் தெரிந்து கொள்ள விரும்பினாள்.

'ரிசப்ஷன்' மேசையின் வண்ணமிகு பூங்கொத்துக்குப் பின்னால் அமர்ந்திருந்த பெண்ணை நோக்கி நடந்தாள். அந்த அலுவலகத்தில் மற்ற தயாரிப்பாளர்களின் அறைகள் எங்கே இருக்கின்றன என்பதை அவளிடம்

கேட்டுத் தெரிந்து கொள்ள அவன் விரும்பினாள். அவள் ரிசப்ஷனிஸ்ட் மேசையை நெருங்கவும் வாசல் கதவைத் திறந்து கொண்டு ஒரு இளைஞன் அந்த ரிசப்ஷனிஸ்டை அணுகவும் சரியாக இருந்தது. ரிசப்ஷன் பெண்ணின் இடதுபுறம் நின்று, அவளை முழுவதும் மறைத்துக் கொள்வது போலத் திரும்பி நின்ற அவன், நெற்றியை மறைத்துக் கொண்டு கிடந்த அவளுடைய தலைமுடியைத் தட்டியபடி, "மார்னிங். ஹெலன்' என்றான்.

ஹெலன், பதில் சொல்லாமல் அவனை முறைத்தாள். "அந்த ராட்சசி உங்களைக் காலையிலிருந்து நாலு தடவை கேட்டுட்டா. இன்னிக்கு அவ நடிகை மிருதுலாவைப் பார்த்து ப்ரோகிராம் முடிவு பண்ண இந்த வண்டியைத் தான் ரிசர்வ் பண்ணி வச்சிருந்தாளாம்..."

"எந்த ராட்சசியைச் சொல்றேம்மா. ஒரு அஞ்சாறு நடமாடுதே. அதனால குழப்பமாயிருக்குது..."

"வீணா கிண்டல் பண்ணாதீங்க. நேத்து காத்தால வண்டி எடுத்துட்டுப் போனவரு நீங்க. புள்ளைங்களைப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு போறது,. பொண்டாட்டியை டாக்டர்கிட்டே அழைச்சுட்டுப் போறது, அரிசி மூட்டையை வீட்ல கொண்டு போய் இறக்கறது இதுக்கெல்லாம் உங்களுக்கு ஆபீஸ் வண்டி தானா கெடைச்சது? டிஜிஎம்கிட்டே சொல்றேன், எம்டிகிட்டே சொல்றேன்னு குதிச்சுக் கிட்டிருக்கா ரஞ்சிதம்..." என்றாள் ஹெலன்.

அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று யுவராணி மௌனமாக நின்றாள்.

அதற்குள் ரஞ்சிதம், புயலைப் போல வேகமாக வந்து அவன் எதிரே நின்றாள்.

"ஹாய்... ராஞ்ச், எங்கே உன் இது... சாரி... கால்... அதைக் காட்டு... நான் உடனே விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கறேன். அடடா! எதுக்கு இப்படி காலே தெரியாம இத்தனை மீட்டர் துணியைப் போட்டு காக்ரா கட்டி அதை மறைச்சுகிட்டிருக்கே. அங்கங்கே அசிங்கமா நரம்பும் எலும்பும் தூக்கிக்கிட்டிருக்கற காலையும், கொளகொளன்னு சதை பிதுங்கி வழியற காலையும் காட்டிக்கிட்டு ஒவ்வொருத்தியும் ஹாட் பாண்ட்ஸ், பெர்முடா, ஸ்கர்ட்டுன்னு..."

"ஸ்டாப் இட்... மிஸ்டர்... வண்டி எங்கே... மிருதுலா மதியானம் ப்ளைட்ல கோயமுத்தூர் கிளம்பறதுக்கு முன்னாலே நான் போய் அவங்களைப் பிடிச்சாகணும். வந்து பேசிக்கிறேன் உங்கிட்டே" என்று தலைதெறிக்க வெளியே ஓடினாள் ரஞ்சிதம்.

"பார்த்தியா நீல்... எவ்வளவு கோபமா இருக்கான்னு. விஷயத்தைப் பெரிசுபடுத்தாம விடவே மாட்டா. நீ வேணா பாரு..." என்றாள் ஹெலன்.

"ஹஹ்ஹா" என்றான் அவன் யாரோ ஒரு சினிமா நடிகரை நினைவுபடுத்தும் விதத்தில். "என்ன பண்ணிட முடியும் இவளால... எம்.டி. கிட்டே சொல்றேன். அரசியல்லயும் சினிமா விலயும் டாப்ல இருக்கற நாலு பேரைச் சொல்லி அவங்கள வச்சி சுவாரஸ்யமா ஒரு புரோக்ராம் பண்ணலாம்னு அலைஞ்சிகிட்டிருந்தேங்கறேன். ரஜினிகாந்த், சரத்குமார், சுப்பிரமணியசாமி, கு.ப. கிருஷ்ணன் அப்படி இப்படின்னு நாலு பேரைச் சொல்ல வேண்டியதுதான்."

"ரியலீ"

"ரியலாவது புயலாவது. சும்மனாச்சிக்கும் அப்படி ரீல் வுட வேண்டியதுதான்..."

"அய்யய்யோ... டிரைவரை விசாரிச்சா..."

"இவங்க தர்ற டீத்தண்ணியை விட நான் அவனுக்குக் குடுக்கற சிமந்தண்ணிக்கு அவன் விஸ்வாசமா இருப்பான். நீ கவலைப்படாதே..." என்றான் அவன்.

யுவராணிக்குச் சங்கடமாக இருந்தது. ஐந்தரை அடி உயரத்தில் அவள் ஒருத்தி நிற்கிறாள் என்கிற பிரக்ஞையே இல்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். "எக்ஸ்க்யூஸ்

இன்னும் கொஞ்சம் டூத்பிரஷ் மகிமை!

சத்து மிக்க உணவு என உருளை, காரட் போன்றவற்றைத் தோலோடு சமைக்க விரும்புகிறோம். அவற்றை என்னதான் கழுவினாலும் அவற்றின் கணுக்களிலும், வேர் விடும் பகுதிகளிலும் மண் முழுவதும் போயிருக்குமோ எனச் சந்தேகம் வரும். உருளை காரட் போன்ற கிழங்குகளை 10 நிமிடம் தண்ணீரில் மூழ்கியிருக்குமாறு விட்டுப் பின் பயன்படுத்தாத டூத்பிரஷ் கொண்டு நன்றாகத் தேய்த்தால் மூலை முடுக்குகளில் உள்ள மண்ணெல்லாம் போய் புத்தம் புதிதாக குளித்து வந்தாற்போலிருக்கும். இப்படி இஞ்சியையும் கூட சுத்தமாகக் கழுவலாம்.

– பத்மாபூபதி







ஒன்றுமில்லாத வெங்காயச் சட்னி ஓட்டலில் மட்டும் கமகமக்குதே! வதக்கிய வெங்காயம், தக்காளி, பொட்டுக்கடலை, உப்பு இவற்றை மைய அரையுங்கள். அம்புட்டுதான்.

– கி. மஞ்சுளா

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மீ" என்றாள் யுவராணி.

அவர்கள் இருவரும் அவளைப் பார்த்தார்கள். "நான் இன்னிக்குத்தான் இங்கே வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன். ஏதாவது ஒரு புரொட்யூசரைப் பார்த்துப் பேசணும்..."

"ஐ'ம் நீலகண்டன். நானும் புரொட்யூசர்தான். பேசலாம் வாங்க" என்ற அவன் மீண்டும் ஒரு தடவை ஹெலனின் முடிக்கற்றையைச் சுண்டி விட்டு யுவராணியுடன் நடந்தான்.

எம்.டியின் டேபிளின் மேல் இருக்கும் சின்னத்திரையில் ஹெலனின் முடிக்கற்றை துள்ளுகிற துள்ளல் தெரியுமா என்று நினைத்தபடி அவனுடன் நடந்தாள் யுவராணி.

"உங்களுக்கு ரூம் காமிச்சிட்டாங்களா?"

"இல்லை..."

"சரி... அப்புறம்..."

"சார்... 'கான்செப்ட்'னா என்ன?"

"முதல்லே என்னை சார்னு கூப்பிடறதை விட்டுடுங்க. சும்மா நீல்னு கூப்பிடுங்க" என்றவன் அவளிடம் மளமளவென்று அந்தத் தனியார் தொலைக்காட்சி இயங்கும் முறை, அதில் தயாரிப்பாளர்களின் வேலை பற்றியெல்லாம் விவரமாகச் சொன்னான்.

"ஆக, 'கான்செப்ட்'னா தீம், அதாவது எதைப் பத்தின நிகழ்ச்சின்னு ஒரு குறிப்பு எழுதித் தர்றது. அவ்வளவுதானே. மொதல்ல அதைச் செஞ்சிடறேன்" யுவராணி அவனிடமிருந்து வெறும் தாள்களை வாங்கி வைத்துக் கொண்டு எழுத உட்கார்ந்தாள். எழுதினாள் :

1. குழந்தைகளுக்காக சொல்லப்படும் கதைகளில் பொய், வஞ்சம், ஏமாற்று ஆகியவை வெல்வதாகவே காட்டப்படுவதை மாற்றி, இந்தக் காலத்தின் யதார்த்தங்களும் மதிப்பீடுகளும் கலந்து கதை சொல்ல வேண்டும்.

2. பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கிறேன் என்று பிரபலங்களைப் பேட்டி காண்பது சாமான்யப் பெண்களின் உள்ளத்தில் ஒரு பற்றாக்குறையான உணர்வை ஏற்படுத்துகிறது. இதைத் தவிர்த்து தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு சராசரிப் பெண்கள் குடும்ப வாழ்வில், அன்றாடச் சிக்கல்களை எதிர்கொள்ளும் விதங்கள், அவர்களின் சாதனை பற்றிய தகவல்களை வரவேற்கலாம்.

3. அட்லாண்டாவின் ஒலிம்பிக் பந்தயம் நமது விளையாட்டுத் துறை எவ்வளவு தாழ்ந்து கிடக்கிறது என்பதற்கு அடையாளம். நமது இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் விளையாட்டுக்களின் மீது ஆர்வமும், உடல் வலிமையை வளர்த்துக் கொள்வதற்கான அக்கறையையும் உண்டாக்கக்கூடிய விதத்தில் அத்துறையில் உள்ள விற்பன்னர்களைக் கொண்டு நிகழ்ச்சி தயாரிக்கலாம்.

4. நாம் வாழும் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு, அண்டை நாடுகள் ஆகியவை பற்றிய புவியியல் ரீதியான தகவல்களும் சரி வரலாறும் சரி பெரும்பாலானவர்களுக்குத் தெரியாத நிலைதான் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஏற்றதான நிகழ்ச்சிகள் தரலாம்.

எழுதியவற்றை யுவராணி மீண்டும் படித்துப் பார்த்தாள். அவளுக்கு அவை மிகவும் திருப்தியாக இருந்தன. நிகழ்ச்சி அமைப்பு பற்றிய விரிவான குறிப்புகளை எழுத உட்கார்ந்தாள். ஆபீஸ் பையன் சாமிக்கண்ணு மறுபடியும் அவளைத் தேடிக் கொண்டு வந்தான்.

"நீங்கதானே யுவராணி மேடம். உங்களை புரொக்ராம் மேனேஜர் கூப்பிடறாரு..." யுவராணி எழுதியவைகளை எடுத்துக் கொண்டு சாமிக்கண்ணுவைத் தொடர்ந்து நடந்தாள்.

நெற்றி முழுவதும் அடைத்தாற்போலத் தீட்டி இழுத்த குங்குமம், சுருக்கம் விழுந்த முகத்தோடு ஒட்டாத கன்னங்கரேலென்ற டை அடித்த தலைமுடி, இறுகப் பிடித்த பாலியெஸ்டர் சட்டை ஆகியவற்றுடன் உட்கார்ந்திருந்த புரொக்ராம் மேனேஜரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"வணக்கம் சார்" என்றாள் யுவராணி.

"என்னா வணக்கம்... எதுக்கு வணக்கம்... ஏன் வணக்கம்... வயசானவங்களுக்கு வணக்கம். இளசுங்களுக்கு ஹாய்... அப்படித்தானே..."

"இல்ல சார்... அப்படியெல்லாமில்லை..."

"அப்ப ஏன் எனக்கு ஹாய் சொல்லலை. இவ்வளவு நேரம் அந்த நீலகண்டன் ரூமிலே போய் உட்கார்ந்திருந்தீங்களே... அவனைப் பார்த்து வணக்கமா சொன்னீங்க... சொல்லுங்க... ம்... சொல்லுங்க."

"சொல்லலை சார்."

"பின்னே... எனக்குத் தெரியாதா உங்களை மாதிரி ஆளுங்களை... எம்.டி. ரூமுக்கு வந்தீங்க. அதுக்கு அப்புறம் நேரா இங்கதான வரணும். இத்தனைக்கு அவர் டிஜிஎம்மையும் புரொக்ராம் மேனேஜரையும் பாருங்கன்னு சொல்லி அனுப்பியிருக்கறாரு. நீங்க போய் அவன் ரூமுக்

குழந்தை இல்லையா?

கருப்பை கட்டிகள்-மாதவிடாய் கோளாறா?

*** கருப்பை கட்டி- குழந்தை பெற்றவர்:** Mr.N.R. பார்த்தசாரதி (36) இவர் மனைவி பத்மஜா (31), லட்சுமி நாராயணன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33 கருக்கோளம் மற்றும் இணைப்பு குழாயில் பெரிய கட்டி இருந்து 8 Gynaecologistகள் முயன்றும் குழந்தை பேறு கிட்டவில்லை. எமது சிகிச்சையில் கட்டி கரைந்தது. இப்போது ஒரு குழந்தைக்கு தாயாகி உள்ளார். இதுபோல **Dr. RATHNA, M.B.B.S.,** சென்னையில் ஒரு பிரபல மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டரான இவருக்கு Clinical Testகள் Normal -ஆக இருந்தும் குழந்தை இல்லை. எமது குருமருந்து சிகிச்சைக்குப்பின் கருவுற்றிருக்கிறார். *** கருப்பைக் கட்டி கரைந்தது:** (Fibroid) Miss. திலகம் (39) கிழக்கு தாம்பரம், சென்னை-59. இவருக்கு கருப்பையினுள் 5.1cm. கட்டி (Fibroid) இருந்தது. எமது சிகிச்சைக்குப் பின் கட்டி முழுதும் கரைந்துவிட்டது U.S. Scan மூலம் உறுதியாகி உள்ளது. *** சிறுநீரக கல் கரைந்தது:** Mrs. கிளாடிஸ் (35) மகாலட்சுமிபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை-59. இவருக்கு சிறுநீரகக் குழலில் (Ureter) கல் அடைத்து சிறுநீரகமும் வீங்கியது. எமது சிகிச்சையில் அது முழுவதும் கரைந்து விட்டது.

திருமணமாகி 5-6 ஆண்டு ஆகியும் குழந்தை இல்லையா?

அப்படியானால் உங்கள் பிரச்சினை இவைகளாகத்தான் இருக்க வேண்டும்!

1) ஆர்மோன் ஒழுங்கீனம் காரணமாக தாறுமாறான ரத்தப்போக்கு. 2) கருப்பை கட்டிகளாக அதிகமான ரத்தப்போக்கு. 3) கருக்கோளங்களில் கட்டிகள் - PCOD (Poly Cystic Ovarian Diseases) குழந்தை இல்லாத பெண்களில் 70% பேரின் பிரச்சனை இதுதான்! இதனால் மாதவிடாய் நாட்களைக்கின்படி வருவதில்லை. முட்டை (Follicle) உற்பத்தி தடைபட்டு ஆர்மோன் மாத்திரை சாப்பிட்டால் மட்டுமே மாதவிலக்கு ஏற்படுவது இல்லாவிட்டால் 2 - 3 மாதம் ஆனாலும் வருவதில்லை. சிலருக்கு 13 - 14 வயதிலேயே இந்தப் பிரச்சினை ஆரம்பித்து விடுகிறது 4) கருப்பையினுள் கட்டிகள் புண்கள் (Fibroid Polyp, Cyst, Endometriosis, Cervicitis) குழந்தை பெறுமுன்பேகூட பல பெண்களுக்கு கட்டிக்காக கருப்பையை எடுத்துவிட வேண்டிய நிர்ப்பந்தம். 5) கருக்குழலில் அடைப்புகள்- (Fallopian Tube Block) இதற்கு ஆபரேஷன் செய்வதால் கருக்குழலே சேதமடையும் வாய்ப்பு அதிகம். 6) 3-வது, 4-வது மாதத்தில் தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion) முழு ஓய்வில் இருந்தாலும் கூட இதை தவிர்க்க முடிவதில்லை. நவீன மருத்துவத்தில் இது புரியாத புதிர்! கருப்பை கோளாறுகளுக்கும், குழந்தை இல்லாத பெண்கள் குறைபாடுகளுக்கு பொதுவாகஒருசில ஆர்மோன் மாத்திரைகளே பல பெயரில் தயாராகி வேறு வேறு டாக்டர்களால் தரப்படுகின்றன. இவைகளையே தொடர்ந்து சாப்பிடுவதால் பல பயங்கர தீய விளைவுகள் உண்டு. (Shaw's Text Book of Gynaecology)

உயிரணு இல்லாத ஆண்கள்: (Azoospermia) ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. இதற்கு வெறும் விந்து-பெருக்கும் மருந்துகள் எத்தனை ஆண்டு சாப்பிட்டாலும் பலன் இல்லை.

இந்த குறைபாடுகள் நீங்கி குழந்தை பேறு பெற வேண்டுமா? உங்களுக்கு உதவ 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்ற சித்தர் மருத்துவ சிகிச்சை அளிக்கிறோம். ஒவ்வொரு கோளாறுக்கும் தனித்தனி சிறப்பு மருத்துவம் உண்டு!

30-40 நாள் நிற்காத ரத்தம்: பல பெண்களின் 30-40 நாள் நிற்காத ரத்தப் போக்கிற்காக கருப்பையை அகற்ற தேவை இல்லை! எமது மூலிகை மருந்தினால் குணம் பெறலாம்!

இளம்பெண் மார்பக கட்டி கரைந்தது!

Miss. சசிகலா (20) பண்ருட்டி, செங்கை MGR மாவட்டம் இவருக்கு இடப்புற மார்பினுள் 1.5 செ.மீ. அளவு இருந்த கட்டி (Fibro Adenoma) எமது சிகிச்சையில் முழுவதும் கரைந்து விட்டது. இதுபோல இம்மாதம் இன்னும் 2 பேர் நலம் பெற்று உள்ளனர். (திருமணம் ஆகாத பெண்கள் ஆகையால் முழு முகவரி வெளியிட முடியவில்லை).

பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ ஒருவித கட்டி (Fibro Adenoma) வருவதுண்டு. இது ஆபரேஷன் செய்தாலும் மீண்டும் மீண்டும் வரும். இதை கரைத்துவிட சரியான மருத்துவம் இல்லாமல், மாதாமாதம் Check-up செய்து கொண்டு வருபவர் பலர். எமது சிகிச்சையில் எளிதாக குணம் பெறலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

புற்றுநோய் தீராத நோய் அல்ல. கடைசி கட்டத்தில், வருவதைவிட கண்டுபிடித்தவுடன் எமது சிகிச்சை பெற்றால் குணம் அடையும் வாய்ப்பு அதிகம். **கன்னம், மார்பகம், தொண்டை, கல்லீரல், கருப்பை, மலக்குடல்,** Thyroid **அக்குள் சுரப்பிகள், மூக்கு, நாக்கு, மூளை ஆகிய இடங்களில் வரும் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை செய்கிறோம்.** 20-நாளில் வலி நின்று விடுவதும், 45 நாளிலேயே குணமாகும் அறிகுறி தென்படுவதும் எமது குரு மருந்துகளின் மகிமையாகும்.

சோதனைக்கு பெண் மருத்துவர் உண்டு. வெளியூர் நோயாளிகள் மருந்து பெற்றுக்கொண்டு உடன் திரும்பிவிடலாம்.



Dr. S. JEYARAM, M.A., M.A., PRAVEEN, HIMP, RMP

3000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சுவடிகளை ஆராய்ந்தவர் மற்றும் ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆங்கில மருத்துவ முறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உள்ளவர்.

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு (மாடியில்) கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(லிபர்டி பஸ் ஸ்டாப் / சேகர் எம்போரியம் அருகில்) போன் : 4810752 / 8551258 (வீடு)

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 2 மணி வரை, மாலை 4 முதல் 8.30 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

தபால் / போன் / நேரில், தேதி-நேரம் குறித்துக் கொண்டுதான் வர வேண்டும்.

அக்டோபர் மாதம் கோவையில் டாக்டரை சந்திக்க, 15-ந்தேதிக்குள் முன் பதிவுக்கு கடிதம் எழுதுக / போன்: 440235 (P.P.)

நம் நாட்டினர் மட்டும் அல்ல வெளிநாட்டினரும்

விரும்பி வாங்குவது

பாரினில் சிறந்தது

பாப்புலர் அப்பளம்

உபயோகித்தபின் வேறெதையும்
விரும்பமாட்டீர்கள்!

அறுசுவை உணவுக்கு மேலும் சுவையூட்டுகிறது.

617, T.H. Road, Tondiarpet, Madras - 600 081

Ph : 5954351, 5950116
Fax : 91-44-5952987

CABLE : POPAPPALAM TELEX : 041-7058 VASUIN

கெட்டி சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
மதுரை ஒரிஜினல் ராணி சுங்குடி
புடவைகள்

மற்றும்

பெங்கால் காட்டன்/பாலிகாட்டன்
புடவைகள் சூப்பர் டிசைன், கலர்களில்
வாங்க கைராசியான இடம்

R.R. சாரீஸ்

கடை எண். 6, ராம்ஸ் பஜார்,
3, Dr. பிரகாசம் சாலை (பனகல் பார்க் எதிரில்)
தி.நகர், சென்னை - 600 017. போன் : 8283367 (P.P.)

குள்ள உட்கார்ந்துட்டிருக்கீங்க.."

யுவராணி, இந்த திடீர் தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை. அயர்ச்சியாக இருந்தது அவளுக்கு.

"சார்... தப்பா நெனைச்சுக்காதீங்க... நான் கான்செப்டோடதான் உங்களை வந்து பாக்கணும்னு..."

"போதும்மா.. உங்களையெல்லாம் எனக்குத் தெரியும். என்ன யாருன்னு நெனைச்சீங்க? ஃபிலிம் ஃபீல்டுல நாப்பது வருஷம் பழம் தின்னு கொட்டை போட்டவன் நான். உங்களை மாதிரி கோடிப் பேரை பார்த்தாச்சு. சாதுப்பூச்சியா வருவீங்க நாளைக்கே பார்த்தா டிஜிஎம் கூட உட்கார்ந்து காரில ஊர்வலம் வருவீங்க. எனக்கேன் அந்த விவகாரம்லாம். நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருக்கறவன் நான்... கொண்டாங்க கான்செப்டை..." என்று யுவராணி நீட்டிய தாள்களை அவள் கையிலிருந்து பிடுங்காத குறையாக வாங்கினார். ஒரு தடவைக்கு மூன்று தடவைகள் படித்தார். அவருடைய நெற்றியிலிருந்த கோடுகள் ஆழமாயின. புருவங்கள் முடிச்சாக உயர்ந்து தாழ்ந்தன.

"உக்காருங்க..." என்றபடி அவளிடமிருந்து வாங்கிய தாள்களை மீண்டும் அவளிடமே கொடுத்தார். "இதான் கான்செப்டா... இந்தக் கான்செப்டினுடைய கான்செப்ட் என்ன 'ஆகாஷ் டீவி'க்கு ஜனகணமன பாடறதா? ம்..."

யுவராணி, பதைபதைப்புடன் உட்கார்ந்திருந்தாள். "எடுத்ததும் குழந்தைகளுக்குச் சொல்ற கதையாம்.. இங்க பாருங்க, நம்ப குழந்தைகளுக்கும் அவங்களைப் பெத்தவங்களுக்கும் டீவி.யில முகம் காமிக்கணும்ங்கறது தான் முக்கியம். புரிஞ்சுக்கங்க. இல்லேன்னா எதுக்கு ஒரு வயசுக் குழந்தையோட படத்தைக் காட்டி பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லி, "ஒருவன் ஒருவன் முதலாளி" பாட்டைப் போடறோம். ஒரு வருஷத்துக் குழந்தைக்கு அந்தப் பாட்டுல இருக்கிற தத்துவமெல்லாம் புரியவா போவுது. என்ன நான் சொல்றது புரியுதா... அத விட்டுருங்க..."

யுவராணி, சரியென்பது போலத் தலையசைத்தாள். "அப்புறம் என்ன எழுதியிருந்தீங்க... என்னமோ சரித்திரம் பூகோளம்லாம் சொல்லித் தரணும்னு. இதென்ன ஆகாஷ் டீவியா, இல்ல டூஜி.சியா? பள்ளிக்கூடத்துல இதெல்லாம் சொல்லிக் குடுத்தாலே அவனவன் ஓட்டம் பிடிக்கறான்... நீங்க என்னடான்னா டீவி.யில கொண்டாந்து சரித்திரம் சொல்லித் தர்றேங்கறீங்க... வேற வினையே வேணாம். அறுபத்தி எட்டு சேனல் வந்திடுச்சி. பார்க்கறவன் தலையைப் பிச்சிக்கிறான். ரிமோட் கண்ட்ரோலுக்கு வாயிருந்தா அழும். அவ்வளவு வேகமா சானல் மாத்தறான். நம்ப புரொக்ராம் எப்படியிருக்கணும்னா அது முடியற வரைக்கும் பார்க்கறவன் ரிமோட் மேல கையை வைக்கப்படாது. என்ன புரியுதா...?"


யுவராணி, அவர் சொல்வதைக் கேட்டபடி சிலையாக அமர்ந்திருந்தாள்.

புரோகிராம் மானேஜர் வழுக்கை தெரியாமல் காதோரத்திலிருந்து மறுகாது வரை இழுத்து வைக்கப்பட்ட, பழைய பத்து பைசா மாதிரி வளைந்து நெளிந்து போன தலை முடியை உள்ளங்கையால் அழுத்தி விட்டுக் கொண்டார். நெற்றிப் பொட்டை ஆட்காட்டி விரலால் படபடவென்று தட்டிக் கொண்டார்.


"ஆனா, மத்தது ரெண்டையும் உருப்படி பண்ணிடலாம். அன்றாட வாழ்வில் பெண்கள் சாமர்த்தியம் வெளிப்படும் விதங்கன்னு சொன்னீங்களே, அதுக்கு ஃபிலிம் கிளிப்பிங்ஸ் தயார் பண்ணிடுங்க. அந்தக் காலத்துல 'தங்கப் பதக்கத்து'ல ஒரு சீன் வரும். சிவாஜி சார் தைரியசாலியான போலீஸ் ஆபீசரா இருந்தாலும் பட்டாக வெடிக்கப் பயப்படுவார். விஜயாம்மா தான் வந்து வெடிகளைக் கொளுத்துவாங்க. அந்த மாதிரி சீனுங்கள புதுப் படங்களிலே இருந்து எடுங்க. லைப்ரரியன்கிட்ட கேட்டா படங்களும் தருவார். தனியா கிளிப்பிங்ஸ் பட்டியலும் இருக்கும்..." என்றவர் அவளை உற்றுப் பார்த்துவிட்டு "என்ன" என்றார்.

"சரி... சார்..." என்றாள் யுவராணி.

"அந்த விளையாட்டு கான்செப்ட் இருக்கே.. அதுல நிறையச் செய்யலாம். கொஞ்ச நேரம் ஸ்போர்ட்ஸ் பீல்டுல இருக்கற நிஜ ஸ்டார். அப்புறம். அவங்க ஆட்டத்திலே அனல் பறக்கற கட்டம். அப்புறம் அதே விளையாட்டு வர்ற ஃபிலிம் கிளிப்பிங்ஸ். பந்தாட்டம், சடுகுடு இதுக்கெல்லாம் பாட்டுங்களே கூட கிடைக்கும். கடைசியா, யாராவது ஒரு நடிகர் வந்து அந்த விளையாட்டை இளைஞர்கள் கத்துக்க வேண்டியதன் அவசியம் பத்தி சொல்றாப்பல வச்சி



- பிரேமா சம்பந்தன்



ஸ்ரீமதி எஸ். தனலட்சுமி

ஜமாய்ச்சிடலாம்."

யுவராணிக்கு அதை ரசிக்க முடியவில்லை. "சினிமா, நடிகர்னு புகுத்தனா நிகழ்ச்சியோட தரமே போயிடும் சார்" என்றாள் தயங்கியபடி.

"இந்த இடத்துலதான் அநுபவம் பேசணும். நீங்க நினைக்கறது தப்பு. நீங்க அரை மணி நேரம் கரடியாக் கத்தினாலும் நம்ப ஜனங்க சட்டை செய்யாதுங்க. அதையே ஒரு நடிகர் சொன்னா, இல்லேன்னா செஞ்சா, அதை கர்ம சிரத்தையா அப்படியே பின்பத்துவாங்க. குழந்தைக்குத் தடுப்பூசி போடறதிலேயிருந்து எலெக்ஷன்ல வோட்டுப் போட்டு நம்முடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கிற ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கறவரை, நம்ப ஜனங்க நடிகர் நடிகைங்க சொல்படிதானே எந்த முடிவையும் எடுப்பாங்க. நீங்களே யோசனை பண்ணிப் பாருங்க. சாக்ரடீஸ், பிளேட்டோ தொடங்கி ரிஷிகள், நம்ப புலவர்கள், அறிஞர்கள்னு சிந்தனையாளர்கள் கருத்துப்படி ஜனங்க நடந்த காலமெல்லாம் மலையேறி டிச்சே. அதனால நீங்க நான் சொல்ற மாதிரி செய்ங்க..."

யுவராணி எழுந்தாள்.

"அலுத்துக் களைச்சு வீடு வர்ற ஆம்பளை நம்ப டீ.வியைப் போட்டா எல்லாக் கவலையையும் பிரச்னையையும் மறந்து அதைப் பார்த்துக்கிட்டே இருக்கணும். அப்படின்னா என்ன செய்யணும். இதுக்கு உலகம் முழுக்க ஒரே ஃபார்முலாதான். நான் அதை நீங்க பொம்பளைங்கறதாலே நாகரீகமா சொல்றேன். காதல், பெண்ணின் அழகு, குற்றவாளிகளின் திறமை, அவர்கள் கடைப்பிடிக்கற வன்முறை, இந்த மாதிரி விஷயங்கள்தான். இதை சலிச்சுப் போகாதபடி வேற வேற 'பேக்கிங்'கில தரணும். பொம்பளைங்களுக்கு அலங்காரம், சமையல், ஜோஸ்யம் இப்படிக் கொஞ்சம் அடிஷனல் சமாசாரங்க. டீ.வி.க்கு மட்டுமில்லே, எல்லா வெகுஜனத் தொடர்பு சாதனத்துடைய வெற்றிக்கும் இதுதான் நிரந்தர ஃபார்முலா. ஞாபகம் வச்சிக்குங்க. ஒரு பெரிய தொழில் ரகசியத்தை இன்னிக்கு உங்களுக்குச் சொல்லியிருக்கேன். இந்த ஃபார்முலாவைத்தான் நாம்ப கடைப்பிடிக்கிறோமுங்கறது வெளியே தெரியாம, எலும்பை மூடியிருக்கற சதை மாதிரி நீங்க புத்திசாலித்தனமா புரோகிராம்களைப் பண்ணிக் கொண்டாங்க. எது பண்ணாலும் சினிமாவை அதுக்குள்ள நுழைச்சிடணும். அப்பத்தான் விளம்பரம் கிடைக்கும். வியூயர்ஷிப்பும் அதிகமாகும். இப்ப சுதந்திரதினம் வருதுன்னு வச்சுக்குங்க. எழுபது, எண்பது வயசாகி பல்லு, கண்ணு எல்லாம் போய்க் கிடக்கிற கிழவனுங்க சுதந்திரத்துக்காகப் போராடினாங்கங்கறதுக்காகக் கொண்டாந்து, 'நீங்க எப்படிப் போராடினீங்க' அது இதுன்னு கேட்டுக்கிட்டுருக்கக் கூடாது. பச்சுப் பச்சுன்னு சிறு வயசா நாலு புது நடிகைகளைக் கூப்பிட்டு சுதந்திர தின செய்தி, சுதந்திர தின வாழ்த்து அப்படின்னு நிகழ்ச்சி நடத்தணும். இதைப் புரிஞ்சிக்கிட்டீங்கன்னா போதும். சரி நீங்க போகலாம்" என்றார் புரொக்ராம் மேனேஜர்.

யுவராணி அந்த அறையை விட்டு வெளியேறி நீலகண்டனின் அறைக்குப் போனாள்.

"ஹாய்... யுவ்ஸ்... அப்படிக் கூப்பிடலாமில்லையா நான்... என்னாச்சு... முதல் நாளுன்னு கூடப் பார்க்காம அறைஞ்சுட்டதா அந்தப் பேய்... ஃபர்கெட் இட்" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னான். அவளை அழைத்துக் கொண்டு போய் அலுவலகம் முழுவதும் சுற்றிக் காட்டினான். ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைத்தான்.

எடிட்டிங் அறையில் இருந்த நந்தகுமாரும் இன்னிவனவனும் நீலகண்டனைக் கேலி செய்தார்கள். "அதிர்ஷ்டக்காரன்டா நீ. இன்னிக்குத்தான் கட்டிடத்துக்குள்ளே அவங்க காலை எடுத்து வச்சிருக்காங்க. இன்னிக்கே நீ அவங்க இதயத்துக்குள்ளே காலை எடுத்து வச்சிட்டியேடா" என்றார்கள். நீலகண்டன் இது எப்போதும் எனக்கு நடப்பதுதானே என்பது போன்ற பாவனையில் புன்முறுவல் செய்தான். அவர்கள் பேச்சு காதில் விழாத மாதிரி யுவராணி மானிட்டரைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அங்கும் அதிக நேரம் நிற்க முடியாதபடி அவர்கள் அனைவரும் அரவிந்தசாமி, 'உயிரே, வந்து என்னோடு கலந்து விடு' என்று விடுத்த


வந்துவிட்டது தமிழ்நாட்டிற்கு !
வாசு புளியோதரை
அம்மா பண்றா மாதிரியே!
பழைய கால முறைப்படி கலந்த
18 சுத்தமான
இயற்கையான
பொருள்கள்
Vasu
PULIODARAI
MIX
வெறும் சாதத்துடன் கலந்தால் போதும்
காரசாரமான, வாய் ஊறும்,
கலாசார ருசியான உணவு
இத்துடன் உப்பும் தாளிதமும் உள்ளது.
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு
நிமிர்ந்து நிற்கும்படியான பைகளில்
நிரப்பப்பட்டுள்ளது.
Vasu
தயாரிப்பாளர் :- வாசு ஹேராம் ப்ராடக்ட்ஸ் ப்ரைவேட் லிமிடெட், சென்னை - 600 097



இப் புகைப்படத்தில் காணும் எண்ணற்ற குழந்தைகள் சிவானந்த குருகுலத்தில் சேர்க்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்று இலவச கல்வி, உணவு, உடை, இருக்க இருப்பிடம் அளிக்கப்பட்டு தங்களுடைய கருணையால் அமைதியான சூழ்நிலையில் வளர்கின்றனர்.

இப்படிப்பட்ட எண்ணற்ற சீறார்களுக்கு மனமகிழ்ச்சி தருவது தங்களுடைய அன்பும், ஆசியும், பொருளுதவியும்.

வருகின்ற தீபாவளித் திருநாளை புத்தாடை, இனிப்பு, பட்டாசுகளுடன் சிறப்பாக கொண்டாட உங்கள் உதவியை நாடுகிறோம். இத்தீபாவளித் திருநாளை தங்கள் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியுடனும், குதூகலத்துடனும் கொண்டாட எங்கள் பிரார்த்தனையுடன் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவானந்த ஆசிரமத்திலுள்ள சுமார் 200 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்தத் தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்கள் மனமுவந்து உதவுமாறு வேண்டுகிறோம். இதனைப் படிக்கும் தாங்கள் தங்களுடைய காணிக்கையாக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் தலா ஒரு ரூபாய் இவ்வறப்பணிக்கு அர்ப்பணம் செய்தால், இத்திருப்பணி தங்கள் ஆசியுடன் பரிபூரணமாக நிறைவேறும் என்பதோடல்லாமல் இந்நாட்டில் உள்ள அனைத்து ஆதரவற்றோரும் பயன்பெறுவர்.

சிவானந்த ஆசிரமத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி இலாகாவின் பிரிவு 80G படிவத்தின்படி விலக்கு சான்றிதழ் உண்டு.

பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை - பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக.

நிர்வாகி,

"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"

நெ. 20 கம்பர் தெரு,

கிழக்கு தாம்பரம்,

சென்னை - 600 058.

தொலைபேசி எண்கள் : 2369078, 2369444.



வாழைத் தண்டை வாரம் ஒருமுறை உண வில் சேர்த்துக் கொள்ளுதல் மிக அவசியம். தண்டைப் பொடியாக அரிந்து தண்ணீரில் போட்டு அதில் டூத் பிரஷை நன்றாகச் சுழற்றி எடுத்தால் வேண்டாத நார்களை எடுத்து விடலாம். குச்சியைத் தேட வேண் டாம்.

— பத்மாபூபதி

■ ■

அழைப்பை ஏற்று ஓடிவரும் மனீஷா கொய்ராலாவின் குலுங்கும் அழகை உறைய வைத்து ரசிக்கத் தொடங்கியதும் அங்கே நிற்க முடியாத அருவருப்பு உணர்ச்சியுடன் வெளியே நடந்தாள் யுவராணி. லைப்ரரியில் மாலை வரை ஃபிலிம் கிளிப்பிங்க்ஸ் தேடுவதில் அவளுடைய பொழுது கழிந்தது.

பறவைகள் வீடு திரும்பும் வேளையில் நீல கண்டன் அவளை எல்லா இடத்திலும் தேடி விட்டுக் கடைசியாக லைப்ரரிக்கு வந்தான். “என்ன... யுவ்ஸ் அந்தக் கிழம் சொன்னதை யெல்லாம் இன்னிக்கே செஞ்சுடணுமா என்ன? கிளம்பு...”

“கிளம்பறதா... எங்கே...” என்றாள் யுவ ராணி. எடிட்டிங் ரூமில் அவளுடைய தோழர் கள் அவளைக் குறித்துப் பேசிய போது அவன் அதைத் தடுத்தோ மறுத்தோ எதுவும் சொல் லாததோடு பெருமிதம் தோன்ற புன்னகை பூத்தது அவளுக்குப் பிடிக்கவே இல்லை.

“ஈகா தியேட்டர் போயிட்டுப் போலாம். தில்வாலே துல்ஹனியா சம்திங்னு ஒரு படம் வந்து போடு போடுன்னு போட்டுக்கிட்டிருக்கு தில்லே... அதுக்கு ரெண்டு டிக்கெட் வச்சிருக் கிறேன்.”

யுவராணியின் மனதிலிருந்து ஒரு கொதி நீர் ஊற்றுக் கிளம்பி உடலெங்கும் பரவி கண் களில் தீப்பொறியாக உருமாற்றம் கொண்டது. ‘இவன் என்ன நினைத்துக் கொண்டிருக் கிறான்? நான் இன்னும் இவனைச் சந்தித்து முழுசாக இருபத்தி நாலு மணி நேரம் கூட ஆகவில்லையே, அதற்குள் எந்தத் தைரியத்தில் இப்படியொரு அழைப்பை விடுக்கிறான். தயா ராக கைவசம் டிக்கெட் வேறு எப்படி வைத் திருக்கிறான்?’

“சார்... மரியாதையாப் பேசுங்க. வீட்ல எம் புருஷனும் புள்ளைங்களும் எனக்காகக் காத் திட்டிருப்பாங்க...” என்றாள் யுவராணி. தான் மணமானவள் என்ற செய்தியை ஒரு மிரட்ட லைப் போலத் தெரிவித்தாள் அவள்.

“என்ன யுவ்ஸ். இவ்வளவு நேரம் டிசன்ட்டா பழகிட்டு திடீர்னு நாட்டு மாடு மாதிரி மிரள்றே. என் வீட்ல கூடத்தான் பொண்டாட்டி புள் ளைங்க இருக்காங்க. சோ வாட்? அவங்களை கல்யாணம் சாவு, காது குத் துன்னு எதுக்காவது கூட்டிட்டுப் போவேன். அந்த மாதிரி நீங்களும் உங்க வீட்டு மனுஷாளைப் பழக்கிடுங்க. கிளம் புங்க. படம் ஆரம்பிச்சுடும்..”

யுவராணி, பற்களைக் கடித்துக் கொண் டாள். இப்பேர்ப்பட்ட காட்டுமிராண்டியை எப்படிச் சமாளிப்பது? இதற்கான பக்குவமும் பயிற்சியும் அவளுக்கு ஏது? கூச்சல் போட்டு தகராறு செய்தால் முதல் தினத்திலேயே தக ராறு செய்தவள் என்ற பேர் கிடைக்கும். அதற் கும் மேற்பட்ட பட்டங்களையும் அவன் அவ ளுக்குக் கட்டக்கூடும். அமைதியாக இருந்தால் அவனுடைய துணிச்சல் அதிகரிக்கக்கூடும். யுவ ராணி சற்றே யோசித்தாள்.

“நான் இப்ப உடனே வீட்டுக்குப் போயா கணும்” என்றாள். அவள் குரல் அவளுக்கே அந்நியமாகத் தோன்றியது. கடுமையும் துயர மும் தவிப்பும் கலந்த அந்தக் குரலில் இருந்த ஏதோ ஒன்று இனிமேல் முயற்சி செய்வதில் பயன் இல்லை என்று அவனுக்கு உணர்த்தி யிருக்க வேண்டும். அவன் அவளை மன்னிக்கிற பெருந்தன்மையான தோரணையில், “ஓ.கே... யுவ்ஸ்... இட்ஸ் ஆல்ரைட்” என்றபடி வெளி யேறினான்.

அவர்களுடைய வாக்குவாதத்தைக் கேட் டும் கேளாத பாவனையாக லைப்ரரிக்குள் நட மாடிக் கொண்டிருந்த லைப்ரேரியன் நித்தி யானந்தம் யுவராணியை நெருங்கினான்.

யுவராணி, கண்களை மூடிக் கொண்டு, தன் மேல் பட்டு விட்டிருக்கக்கூடிய நீலகண்டனின் சுவாசக் காற்றை வழித்தெறிபவள் போல இடது உள்ளங்கையை நெற்றியில் அழுந்தப் பதித்து மோவாய் வரை வேகமாக இறக்கி உதறி னாள். பெருமூச்சு விட்டபடி, நிமிர்ந்து நித்தியா னந்தத்தைப் பார்த்தாள்.

“யுவராணி... என்னடா இவன் அறிமுகமே யில்லாதவன் அதுக்குள்ள நமக்கு உபதேசம் பண்ண வந்துட்டானேன்னு நெனைச்சுக்கா தீங்க. எங்கம்மா ஒரு வொர்க்கிங் வுமன். சின்ன வயசுலேயே அவங்க கஷ்டத்தைப் பார்த்தவன் நான். எங்கம்மாவும் நானுமா ஒரு காலகட் டத்துல உட்கார்ந்து இதைப் பத்தி பேசவும் பேசியிருக்கோம். இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். எனக்கும் எங்கம்மாவுக்கும் பதினாறு வயசுதான் வித்தியாசம். என்னைத் தவிர வேற துணையும் ஆறுதலும் அவங் களுக்கு இல்லை. அந்தச் சூழ்நிலை தெரிஞ்சா உங்களுக்கு அது அதிசயமாத் தெரியாது...”

நித்தியானந்தம், பேச்சை நிறுத்தி விட்டு ஜன்னலுக்கு வெளியே கரும்பச்சை நிழலுருவாகத் தெரிந்த பூமரத்தை ஒருகணம் பார்த்தான்.

"என் சிஸ்டர்ஸ் எல்லாரும் வேலைக்குப் போறாங்க. கடைசி தங்கச்சி வேலை தேடிக்கிட்டிருக்கா. என்னோட வைஃபும் வொர்க்கிங் வுமன்தான். எதுக்குச் சொல்றேன்னா, வேலை பார்க்கிறதுல பொம்பளைங்களுக்கு இந்த மாதிரி அச்சு பிச்சுங்களால ஒரு பக்கம் தொந்தரவு இருந்தாலும் அவங்க வேலைக்குப் போய்க்கிட்டுத்தான் இருக்காங்க. அது ஏன்? இதை நீங்களே நல்லா யோசனை பண்ணிப் பாருங்க. உங்களுக்கே பல விஷயங்கள் புலப்படும். அவசரப்பட்டு மனசை வுட்டுடாதீங்க. இங்கே இருக்கற எல்லாரும் இவனைப் போலத்தான் இருப்பாங்கன்னும் நெனைச்சிடாதீங்க.." என்றபடி அவளைப் பார்த்து மென்மையாகச் சிரித்தான்.

கொதிக்கிற பாலில் தெளிக்கப்படும் தண்ணீரைப் போல நித்தியானந்தத்தின் வார்த்தைகள் புயல் கடலாகியிருந்த அவள் மனத்தை சற்றே சாந்தப்படுத்தின.

வீடு வந்து சேர்கிற வரை யுவராணியின் மனது நடந்தவை, நடக்கக்கூடியவை என்பவை பற்றிய சிந்தனையெனும் சுழலில் சிக்கிக் கொண்டது. நடந்தவற்றையெல்லாம் யோகியிடம் ஒன்றுவிடாமல் சொல்ல அவள் மனது இடம் தரவில்லை, உடலுக்கும் தெம்பு இல்லை.

"அட! என்ன இது... சமைக்கலாம்னு ஓடி வந்தேன். நீங்க எதுக்கு இதையெல்லாம் பண்ணி அவஸ்தைப்பட்டீங்க..."

யோகி, குழல் ஊதும் கண்ணனைப் போல காலை முறுக்கியபடி நின்று கொண்டு கைகளைக் கட்டியவாறு அவளைப் பார்த்து புன்னகை செய்தான். அவளுக்கு என்னமோ மனத்திற்குள் குறுகுறுப்பாக இருந்தது. தான் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் அவன் செய்ய, தான் தாமதமாக வந்ததற்காக அவள் தன்னையே கடிந்து கொண்டாள். அவளுடைய கண்கள் கண்ணீரால் நிரம்பின.

"இனிமே இப்படி சமையல் எல்லாம் செய்யாதீங்க..." என்று தழுதழுத்தாள்.

"என்னத்தை சிறுபத்திரிகை நடத்தி, கதை எழுதினாலும் நீங்கள்லாம் மாறவே மாட்டீங்க.. இப்ப எதுக்கும்மா அழுறே.. நேரத்தை வச்சிக்கிட்டு என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியல... சமைச்சேன். நீ அதை சாப்பிட்டுப் பார்த்துட்டு அழுதாக் கூட எனக்கு எவ்வளவோ ஆறுதலா இருக்கும். சாப்பிட்டுட்டு வேணுமானா அழேன். உம் பிள்ளைங்க இன்னிக்கே மூக்காலே அழுது, அம்மா மாதிரி சமைக்க உனக்குத் தெரியலை போப்பான்னுட்டங்க" அவன், அவள் கன்னத்தைப் பிடித்து நிமிண்டினான். அவள் சிரித்தாள். கண்களில் திரண்டிருந்த நீர் அவளுடைய கன்னத்தில் வடிந்தது.

"நேரம் இருந்தா கவிதை எழுதுங்க... கட்டுரை எழுதுங்க. இல்லேன்னா படிங்க... எங்கப்பாவெல்லாம் தானாத் தண்ணிமொண்டு கூட குடிச்சதில்ல" அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"எம்பொண்டாட்டி அறிவாளி, கெட்டிக்காரின்னெல்லாம் நெனைச்சிகிட்டிருந்தேன். என்னை ஏமாத்திடாதே.. புரியுதா..." என்ற யோகி, "கவிதையும் எழுதினேன். சமையல் அந்த ஓட்டத்தைத் தடுத்துடுமா என்ன? அது பாட்டுக்கு உள்ள ரீங்காரிச்சுகிட்டே இருக்குது. ஞாபகத்துக்கு ரெண்டு வரி இதோ சிகரெட் அட்டையில கிறுக்கி வச்சேன்."

யுவராணி, அதை எடுத்துப் படித்தாள்.

"குப்பைக்குள்ளும் முத்து உண்டு
முத்தின் மீதும் குப்பை உண்டு
நெஞ்சிற்குள்ளும் நெருப்பு உண்டு
நெருப்பின் மீதும் நெஞ்சம் உண்டு"

மீண்டும் அவள் கண்கள் நிறைந்தன. காரணமில்லாமல் ஏன் இப்படிக் கலங்குகிறாள் என்று யோகேஸ்வரன் அவளைக் கவலையோடு பார்த்தான். "வேண்டாம்மா... வேண்டாம்" என்று அவளைத் தன் நெஞ்சில் சாய்த்தவாறு முதுகைத் தடவிக் கொடுத்தான்.

"இன்னிக்குப் பொழுது எப்படிப் போச்சு. வேலை எப்படி இருந்திச்சு. அதை எல்லாம் சொல்லு."

"ப்ச்... வேணா.. தூங்கலாம்" என்றாள் அவள்.

"மனுஷான்லாம் உங்கிட்ட நல்லபடி பழகுறாங்களா? லேடீஸ் நெறைய பேர் இருக்கறாங்களா?" அவன் கேள்விகளுக்கெல்லாம், "ம்" என்று ஒற்றைச் சொல்லில் பதில் தந்து விட்டு படுக்கையில் விழுந்தாள் யுவராணி.


கைப்பையிலிருந்த பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்திருக்கலாம் என்று ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது. மறுகணம் அப்படிச் செய்வது அவனை அவமானப்படுத்துவது போல இருக்கும் என்று அவளுக்குப்பட்டது. அதற்கான தர்க்கபூர்வமான விளக்கம் ஏதும் அவளிடம் இல்லை. ஏனோ அவளுக்கு அப்படித் தோன்றியது.

(முற்றும்)

அன்பிருக்கிறதா உங்களிடம்? உங்களால் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லை. சுயநலத்தைத் துறந்தவர்களா நீங்கள்? உங்களை எதிர்க்கும் சக்தி எதுவுமில்லை.
தகவல் : ஆர். பார்த்திபன்


அம்மம்மா, இரட்டிப்பு அழகு!
Girija
PEARL

இல்லத்தரசிகளுக்கு 8 in 1 வெட்கிரைண்டர்



இணைப்புகள்: 1. வெட்கிரைண்டர், 2. சப்பாத்தி பூரி மாவு பிசைதல், 3. தேங்காய் துருவுதல், 4. பழரசம் பிழிதல், 5. காய்கறி வெட்டுதல், 6. சிப்ஸ் வெட்டுதல், 7. காய்கறி துருவுதல் (சிறியது), 8. காய்கறி துருவுதல் (பெரியது)

சிறப்பம்சங்கள்: மாவு டில்டிங் மற்றும் தானாகவே வெளியேறும் வசதி, 100% Stainless Steel ஆல் ஆனது. Nylo Tuf gear transmission. குறைந்த இடத்தையே ஆக்கிரமிக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட டபுள் பால் பேரிங்ஸ் அகன்ற பாகம் கொண்ட உருளைக் கற்கள், இயக்குவதும் பராமரிப்பதும் எளிது. விரைந்து செயலாற்ற வல்லது. கொள்ளளவு: மாவு அரைத்தல் 2 ltr சப்பாத்தி மாவு பிசைதல் 1 kg.


AUE Motor

Universal

8 அற்புதங்கள்!
ஒரு வெட்கிரைண்டரின் விலைக்கே!!

Marketed by: San Domestic Appliances (P) Ltd., 182, 100, Ft.Road, Tatabad, Coimbatore-641012. Ph:436925. Dealers: Essarr Agencies, Madras. Ph:4347005, Anantha Agencies, Madurai. Ph:30281; Kasianantha & Co., Tirunelveli, Ph:26044, Selvan Shopping Centre, Nazareth, R.M.H.Corporation, Trichy. Ph:703092; A.Venkatraman, Mayiladuthurai. Ph:22153; Shanthi Electricals, Madras. Ph:5221634; Lakshmi Electronics, Attur. Ph:40576; Lakshmi Agencies, Pondicherry. Ph:34736; Lakshmi Agencies, Villupuram. Ph:3057; Cuddalore, Ph:853; Lakshmi Enterprises, Karaikal, Ph:32597; Haseen Enterprises, Neyveli, Ph:22033; Ramco Agencies, Salem, Ph:44171; Vijayathenu-Vilas, Karaikudi. Ph:32886; Prakash Traders, Hosur. Ph:22829; Sri Rama, Nagercoil. Ph:27886; Rajendra & Co., Coimbatore. Ph:231265; M.M.Home Appliances, Vijayawada, Ph:65370; Madras Stores, New Delhi. Ph:345703; Bhima Stainless Steel & Ind., Alleppey, Ph:60027. Murthy Radio Service, Krishnagiri.

1.10.96 முதல் 6.10.96 வரை சிறப்பு தள்ளுபடி விற்பனை



தரமான மதுரை சுங்குடி மற்றும்
அனைத்துரக காட்டன் புடவைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
வாங்க சிறந்த நிறுவனம்


மதுரை சுந்தரம் டிரேடர்ஸ்

18-A, சுந்தரம்பிள்ளை தெரு,
புரசைவாக்கம் (டேங்க்)
சென்னை - 600 007. ☎ 6427450

H.O.: தேவாங்கர் சத்திரம்
98, தெற்குமாசி வீதி, மதுரை - 625 001.

வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!

'அம்போவோ' அம்பாள் ஆனாள்!



நவராத்திரிக் கொண்டாட்டத்தின் அடிப்படை, அது கொண்டாடப்படும் காலகட்டம், கொலு வைக்கும் நடைமுறை அறிமுகமான விதம் - இவற்றைப் பற்றித்தான் எவ்வளவு சுவையான பின்னணிகள்! சமயம், சரித்திரம் இரண்டும் தனியாகவும், இணைந்தும் தருகின்றன இந்த சுவாரசியங்களை.

அத்தனை சக்திகளும் அம்மனாய் இணைந்தன.

எருமை முகம் கொண்ட மகிஷாசுரன் என்ற அரக்கன் தேவர்களையும் முனிவர்களை யும் துன்புறுத்த, தேவர்கள் மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் கோபம் அக்னி ஜுவாலையாகப் பிறந்து ஒன்றாக இணைய, அதிலிருந்து துர்கா தேவி தோன்றினாள். துர்கைக்குப் பத்து கரங்கள். ஒவ்வொரு கரத்திலும் வெவ்வேறு ஆயுதங்கள் - பல்வேறு கடவுளர் அளித்தவை. என்றாலும் சிவபெருமான் அளித்த திருசூலத்துக்குத்தான் மகிஷாசுரனை அழித்த பெருமை கிடைத்தது. மகிஷனை துர்கை வதம் செய்த நாள்தான் வெற்றித் திருநாள் என்று பொருள் கொண்ட விஜயதசமி.

மேற்கு வங்கத்தில் 'துர்கா பூஜா' என்று இதனால்தான் நவராத்திரி அழைக்கப்படுகிறது. பல்வேறு கலைஞர்கள் பிரம் மாண்டமான வடிவில் துர்கையின் உருவத்தை உருவாக்கப் போட்டி போடுவார்கள். தசராவின் ஆறாவது நாள் நிறுவப்படும் இந்த உருவங்கள் பத்தாம் நாளான விஜயதசமி அன்று கடலில் கரைக்கப்படும்.

தசராவின் காரணம் தசகண்ட ராவணன்தான்

ராமர் ராவணனோடு போரிட்ட ஒன்பது நாட்களைத்தான் நவராத்திரி என்றும், ராவணனை ராமபிரான் வென்ற பத்தாவது நாளைத்தான் விஜயதசமியாகக் கொண்டாடுகிறோம் என்ற நம்பிக்கையும் நம் நாட்டில் பரவலாக உள்ளது. நவராத்திரியை 'தசரா பண்டிகை' என்று அழைப்பதே இந்த நம்பிக்கைக்கு வலுவூட்டுவதாக இருக்கிறது. 'தச' என்றால் பத்து, 'ஹரா' என் றால் நீக்குதல் - பத்து தலை கொண்ட ராவணனை இவ்வுலகிலிருந்து நீக்குவதற்காக யுத்தம் நடந்த காலகட்டத்

னைத்தான் 'தசரா' என்று அழைக்கிறோம்.

வட இந்தியாவில் ராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோரின் உருவங்கள் பிரம்மாண்ட மான அளவுகளில் உருவாக்கப்பட்டு தசராவின் போது எரிக்கப்படும். இதை 'ராம் லீலா' என்று அழைக்கிறார்கள். அப்போது பட்டாசுகள் வெடித்தும், ஆடிப் பாடியும் மக்கள் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்துவது வழக்கம்.

வசந்தவிழா வழிமாறியது ஏன்?

ஒரு காலத்தில் நவராத்திரி வசந்த விழா வாகத்தான் நடத்தப்பட்டு வந்தது என்கிறது சரித்திரம். இந்தக் காலகட்டத்தில் நடத்தப் பட்டதால்தான் திறந்த வெளியில் இசை, நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் அப்போது ஏற்பாடு செய்யப்பட்டன.

நாளடைவில் இது போன்ற கலைநிகழ்ச்சி களை ஜில்லென்ற மாலைப்பொழுதுகளில் வைத்துக் கொள்வது நடைமுறையானதாம். மழைக் காலம் ஒரு சுற்று முடிந்த கையோடு நவராத்திரி விழா வைக்கப்பட்டதால் விதைகள் தூவவேண்டிய காலகட்டம் முடிய, அறுவடைக்கு முன்னால் நவராத்திரி கொண்டா டப்பட்டதால் விவசாயிகளுக்கும் இந்தக் காலகட்டம் ஏற்றதாக அமைந்தது.

மாற்றலின் மற்றொரு பின்னணி

நவராத்திரி கொண்டாடப்பட்ட கால கட்டம் நாளடைவில் மாறியதற்கு மற்றொரு கதையும் நிலவுகிறது.



ராவணன் சிவபக்தன் என்பது நமக்குத் தெரியும். அவன் பெரும் அம்மனின் பக்தனும் கூட. வசந்த காலத்தில் நிறைய பூஜைகள் செய்து விழா எடுப்பான் அம்மனுக்கு. அப்போது மக்களும் நவராத்திரியை வசந்த விழாவாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

பின்னாளில் ராமபிரான் அம்மனுக்கு வேறொரு மாதத்தில் (நாம் இப்போது கொண்டாடும் தினங்களில்) பூஜைகள் செய்ய, ராவணனைப் பின்பற்றுவதைவிட, தெய்வாம்சம் பொருந்திய ராமனையே பின்பற்றுவோம் என்று கருதி மக்களும் தங்கள் நவராத்திரி விழாவின் காலகட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டனர்.

அந்த நூலிலும் உள்ள ஆச்சரிய ஒற்றுமை


பார்ஸி இன மக்களின் புனித நூல் 'ஜெண்ட் அவெஸ்தா' இதில் வரும் ஒரு மரபுக் கதை நம் மகிஷாசுரமர்த்தினி சம்பவங்களைப் பெரிதும் ஒத்திருக்கிறது. எந்த மதமாக இருந்தாலும் 'நல்லதே நிலைக்கும், தீயவை அழியும்' என்பதைத்தானே வலியுறுத்துகிறது!

கொலுக் கொண்டாட்டம்

நவராத்திரியின் போது பொம்மைக் கொலு வைக்கும் பழக்கம் எப்படி உண்டானது? தெளி வாகத் தெரியவில்லையென்றாலும் விஜயநகர



சுவையுடனே ஆரோக்யம் !
சுவையான சமையல் எண்ணெய், ஆரோக்யமான
சமையல் எண்ணெய்இரண்டுக்கும் இடையில் இருந்த
இடைவெளி இனிமேல் இல்லை.
இனியா நல்லெண்ணெய் !
சுவையானது, ஆரோக்யமானது...
சமையலுக்கு மிகவும் உகந்தது !!
தயாரிப்பாளர்கள் :
எவர்கிரீன்
என்டர்பிரைசஸ்
தபால் பெட்டி நெ. 504
ஈரோடு – 638 003
இனியா
நல்லெண்ணெய்
ஸ்டாக்கிஸ்ட் விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.



Dr. C.K.M சபாபதி

சிறுநீரகக் கோளாறா! புற்றுநோயா! சர்க்கரை வியாதியா! ஆஸ்த்மாவா! அல்சரா! மூட்டுவலியா!

இனி கவலையே வேண்டாம்!



Dr. C.K.M குருபரன்

நமது உணவு பொருட்களில் நாள்தோறும் சேர்க்கும் ரசாயனப் பொருட்களாலும், T.B., B.P., Sugar, Asthma போன்றவைகளுக்காக உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பதாலும் நமது உடலில் உள்ள சிறுநீரகங்களில் தற்காலிக அடைப்பு ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு தற்காலிக அடைப்பு ஏற்பட்டு செயல்படாமல் இருப்பதை நிரந்தரமாக சுருங்கி பழுதடைந்து (Kidney Failure) விட்டதாக முடிவு செய்து டயாலிஸிஸ் செய்து கொண்டிருப்பவர்களும், உடனடியாக டயாலிஸிஸ் செய்ய வேண்டும் என்ற நிலைமையில் உள்ளவர்களும், மாற்று சிறுநீரகங்களை தேடி அலைந்து கொண்டிருப்பவர்களும் உடனே கவலையை விட்டு விடுங்கள்.

சிவனுக்குரிய வில்வ இலை, சக்திக்குரிய வேப்பிலை, பிரம்மாவுக்குரிய அத்திஇலை, விநாயகருக்குரிய அருகம்புல், திருமாலுக்குரிய துளசி இலை, கங்கைக்குரிய மாவிலை போன்ற தெய்வீக மூலிகைகளுடன் அற்புத மருத்துவ குணம் கொண்ட பக்க விளைவு, பின்விளைவுகளை ஏற்படுத்தாத ஆடாதொடை, கீழாநெல்லி, குப்பைமேனி, தும்பை ஆகியவைகளையும் பொடி செய்து தக்க அளவில் கலந்து உட்கொண்டும் இயற்கை உணவுகளான பச்சையாக சாப்பிடும் காய்கறிகள், பழங்கள் போன்றவைகளை உட்கொண்டு வருவதாலும் சிறுநீரகங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிக அடைப்பினை நீக்கி மீண்டும் சீராக செயல்பட செய்திடலாம். மேலும் நீரிழிவு, மூட்டுவலி, அல்சர், ஆஸ்த்மா, புற்றுநோய் போன்ற நோய்களில் இருந்து வியக்கத்தக்க வகையில் விடுபடவும் விரிவான ஆலோசனையை கீழ்கண்ட முகாம்களில் தெய்வீக மூலிகை வைத்தியர் Dr. C.K.M. சபாபதி அவர்களிடம் நேரில் ஆலோசனை பெறலாம். ஆலோசனைக்கு :

சென்னை முகவரி:

Dr.C.K.M. சபாபதி,
S/o. Dr.C.K. மாணிக்கவாசகம்
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(பிரின்ஸ் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638




Dr.C.K.M.

திருப்பத்தூர் முகவரி:
ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்
Dr.C.K.M. குருபரன்
S/o. Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22329.

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மூலிகைப்பொடி பெற : 1996ம் வருட புதிய முகாம் விபரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி - வேலூர் (N.A.)	: பிற்பகல் 1 to 2 மணி வரை ஹோட்டல் கல்யாண், 16, ஆஃபீஸர்ஸ் லைன். ✆ : 0416 / 23060.
3 & 19 ந்தேதி - சென்னை	: காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி - கடலூர் (S.A.Dt.)	: காலை 9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 20707.
4-ந் தேதி - விழுப்புரம்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி - திருவண்ணாமலை	: மாலை 5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆: 04175 / 22536.
9-ந் தேதி - பெங்களூர்	: காலை 11 to 12.30 ஹோட்டல் பிளாட்பேஸ், (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட். ✆ : 2266374
9-ந் தேதி - ஓசூர்	: மாலை 3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899.
9-ந் தேதி - கிருஷ்ணகிரி	: மாலை 5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி - சேலம்	: காலை 11.30 to 12.30 ஹோட்டல் செல்லம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி - ஈரோடு	: மாலை 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761.
13-ந் தேதி - கோயம்புத்தூர்	: காலை 9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி - மதுரை	: காலை 9 to 11 ஹோட்டல் கிரான்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 543940.
14-ந் தேதி - தஞ்சாவூர்	: மாலை 5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 20021.
15-ந் தேதி - திருச்சி	: காலை 9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), ✆: 0431 / 460545.
15-ந் தேதி - நாமக்கல்	: பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 21336.
18-ந் தேதி - ஆம்பூர்	: காலை 10 to 11 சம்பங்கி லாட்ஜ், ✆: 04176 / 43311.
18-ந் தேதி - காஞ்சிபுரம்	: மாலை 4 to 5 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
19-ந் தேதி - சென்னை	: காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி - தர்மபுரி	: காலை 9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி - திருப்பூர்	: பிற்பகல் 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 20418.
22-ந் தேதி - உடுமலைப்பேட்டை	: மாலை 6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆: 04252 / 24353.
23-ந் தேதி - திண்டுக்கல்	: காலை 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆: 27017.
23-ந் தேதி - தூத்துக்குடி	: மாலை 5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 22780.
24-ந் தேதி - திருநெல்வேலி	: காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 23312.
24-ந் தேதி - நாகர்கோவில்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் சரவணா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25689.
25-ந் தேதி - விருதுநகர்	: காலை 9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி - கரூர்	: பிற்பகல், 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 62663.

DIVINE HERBAL CENTRE
DHC



ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக நவராத்திரி கொண்டாட முடியாதவர்கள் 3-ம் நாளிலிருந்து, 5-ம் நாளிலிருந்து, அல்லது 7-ம் நாளிலிருந்து, ஆரம்பித்து முடிக்கலாம். இதையும் செய்ய இயலாதவர்கள் அஷ்டமி அல்லது நவமி அன்றும் பூஜை செய்து பலன் பெறலாம் என்கிறது கலிகா மற்றும் புராணங்கள்.

— கீதா

மன்னர்களிடமிருந்துதான் இந்த வழக்கம் தோன்றியிருக்க வாய்ப்பு உண்டு என்று கருதுகிறார்கள். சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள், தசரா பண்டிகையின் போது ராணுவ அணிவகுப்பு, மல்யுத்தம் மற்றும் பல்வேறு விளையாட்டுக்கள் என்றெல்லாம் ஏற்பாடு செய்து மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள் விஜயநகர மன்னர்கள். தங்கள் படைபலத்தைக் காட்ட, தங்கள் ஆயுதங்கள், குதிரைகள், ரதங்கள் இவற்றை மினி அளவில் செய்து மக்கள் பார்வைக்கு வைப்பது வழக்கமாம். பிறகு இந்தப் பழக்கம் பொது மக்களுக்கும் தொற்றிக் கொண்டிருக்க வேண்டும்; கொலுப் பழக்கம் உறுதிப்பட்டிருக்க வேண்டும்.

எது நிஜம்?


மகிஷன் வதமா? ராவண வதமா? ஏன் இருவிதமான வித்தியாசமான நம்பிக்கைகள் நவராத்திரியைப் பொறுத்தவரை உருவாக வேண்டும்? இதற்குக் காரணம் நவராத்திரியின் தொன்மை. மேற்கு வங்கத்தில் உள்ள தொன்மையான கல் மற்றும் டெரகோட்டா சிற்பங்கள் நவராத்திரியின் பழமையை விளக்குகின்றன.

அவ்வளவு ஏன்? கிரேக்க நாட்டிலிருந்து இந்த விழா நம் நாட்டுக்கு வந்ததென்று கூறுபவர்களும் உண்டு. கி.மு. 1ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள கிரேக்க நாணயங்களில் ஒரு பெண் தெய்வத்தின் உருவமும் அதன் கீழே "அம்போவோ" என்ற எழுத்துக்களும் காணப்படுகின்றன. 'அம்போவோ'தான் 'அம்பாளாக' மாறியிருக்க வேண்டும் என்பவர்கள் உண்டு.

துர்கை மகிஷனை வதம் செய்த நாளாக இருந்தாலும் சரி, அம்மனை வழிபட்டு ராம பிரான் ராவணனை வென்ற நாளாக இருந்தாலும் சரி, தீயவனை வென்றது ஒரு பெண் தெய்வத்தின் அருள் என்பது பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் விஷயம்தானே. அதனால் நவராத்திரியை மகளிர் பண்டிகையாகக் கொண்டாடுவதும் பொருத்தம்தானே.


— ஜி.எஸ்.எஸ்.

தேர் கோலம்



— எஸ். கோமதி

மலையும் பார்க்கும் செய்யலாமா?



"உங்கள் கொலு ரொம்ப கிராண்ட்" என்று மற்றவர்கள் சொல்வதைக் கேட்க அனைவருக்கும் ஆசைதான். ஆனால் சிரமப்பட வேண்டுமே என்று, பயம் வேண்டாம். ஆசையும், பொறுமையும் உள்ளவர்கள் திட்டமிட்டுச் செய்யும் எந்தக் காரியத்திலும் நேரமும், சிரமமும் குறைவுதான். கிட்டத்தட்ட அனைத்துப் பொருள்களும் (இன்ஸ்டன்ட்) ஆகக் கிடைக்கும் இந்தக் காலத்தில் அதே யுக்தியைக் கையாண்டால் உங்கள் வீட்டுக் கொலுவும் இன்ஸ்டன்ட் கொலுவானாலும் கிராண்டாக அமையும்.

எவ்வளவு பொம்மைகள் இருந்தாலும் குழந்தைகள் மற்றும் அனைவரது பாராட்டையும் பெற்றுத் தருவது பார்க், மலை போன்றவைதான்.

முதலில் பார்க் செய்வதற்குத் தயார் செய்ய வேண்டியவை : கனமான அட்டைப் பெட்டியை வெட்டி 2 அடி நீள அகலமும், 4 அங்குல உயரம் வரும் சதுரமான அமைப்பில் தயார் செய்து அதே நீளம் உள்ள நான்கு கனமான குச்சிகளை உட்பக்கம் நான்கு புறமும் வைத்து கோணி தைக்கும் ஊசியால் அங்கங்கே குத்திக் கட்டி விட்டால் அசையாதபடி இருக்கும். வெளிப்புறம் கலர் பேப்பர் ஒட்டவும்.

இரண்டு அங்குலத் தென்னந்துடப்பம் குச்சிகளை உடைத்துப் பச்சைக் கலர் பேப்பர் 2 அங்குல நீள அகலத்தில் வெட்டி ஒரு பக்கம் பாதி வரை சிறு சிறு பிரிவுகளாக வெட்டிக் கொண்டு பசையைத் தடவி குச்சியில் பாதி வரை வெட்டாத இடத்தைச் சுற்றி விட்டால் சிறிய செடிகள் தயார். தேவையான அளவு செய்து வைத்துக் கொள்ளவும்.

நான்கு அங்குல தென்னந்துடப்பம் குச்சிகளை ஒடித்துக் கொண்டு கலர் பேப் பர் ஒட்டி மேலே ஒரு பெரிய சைஸ் மணியைக் குத்தி விட்டால் மின்விளக்குக் கம்பங்கள் தயார்.

மரம் அறுக்கும் கடைகளில் கிடைக் கும் பாக்கிங் செய்ய உபயோகிக்கும் மரச் சுருள்களையும், மரத்தூளையும் (saw dust) வாங்கி வந்து மரச்சுருளுக்கு சிறிது தண்ணீரில் பச்சைக் கலரைக் கலந்து மரச்சுருளைப் பிசறி நிழலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும். இவற்றை வருடக்கணக்கில் கொலு முடிந்ததும் மண் இல்லாமல் தனியாகக் கவரில் போட்டு எடுத்து வைத்துப் பயன்படுத்தலாம்.



மரத்தூளுடன் சிறிது தண்ணீர் விட்டுப் பிசிறி பச்சைக் கலர் தூளைத் தூவி இரு கைகளிலும் தேய்த்து நிழலில் உலர்த்தி எடுத்து வைக்கவும். அதிகம் தண்ணீர் சேர்க்கக் கூடாது. இதே போல் காவிக் கலர் சேர்த்துத் தனியாகக் கலந்து உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். கரியைப் பொடியாக்கி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

கிரிக்கெட் ஸ்டேடியத்திற்குத் தேவையானவை :

கனமான அட்டைப் பெட்டியில் சுமார் 10 அடி நீளம், 4 அங்குல உயரம் உள்ள பட்டைகளை வெட்டி வளைய மாக இணைக்கவும். 3 அடி நீளமுள்ள இரண்டு மரக் குச்சிகளை இருபுறமும் 2, 2 அடி விட்டு எதிர், எதிர்புறம் கோணி ஊசியால் தைத்து 3, 4 இடங்களில் கட்டி விடவும்.

வெளிப்புறம் கலர் பேப்பர் ஒட்டவும்.

தூண்களுக்கு வீக், இண்டியா டுடே போன்ற ஒரே அளவுள்ள கலர் படங்கள் உள்ள பத்திரிகைத் தாள்களை ஒரு பென்சிலில் சுற்றிக் கொண்டு ஓரத்தில் மைதா மாவுப் பசையைத் தடவி உருவிக் காயவைக்கவும். சுமார் 7,5 செய்து வைத்துக் கொள்ளவும்.

கூரைக்குக் கனமுள்ள கலர் பேப்பர்கள் வாங்கி 4 அங்குல பட்டிகளாக வெட்டி இணைத்து 15 அடி நீளம் ஒட்டி விசிறி மடிப்புப் போல் சிறு சிறு மடிப்புகள் மடித்து ஸ்பிரிங் போல செய்து கொள்ளவும். இதையே பார்க், ஸ்டேடியத்திற்குத் தேவையான அளவில் வெட்டிப் படிக்கட்டுகளாக உப யோகிக்கலாம்.


பார்வையாளர் களுக்குப் பத்திரிகைகளில் வரும் உட்கார்ந்த, நிற்கும் மனிதர்கள் படங்கள், குரூப் போட்டோ, படங்கள் சிறிய விளம்பரங்கள், விளம்பர வாச கங்கள், ஸ்கோர் அட்டவணை ஆகியவற்றை வெட்டிக் கொண்டு போர்ன்விடா, பூஸ்ட், பால்பவுடர் போன்ற ரீபில் பேக் வரும் பெட்டிகளில் ஒட்டிக் கொண்டு கட்-அவுட் மாதிரி வெட்டிக் கொள்ளவும். மண்ணில் சொருகி வைப்பதற்கு 2 அங்குலத் தென்னந் துடப்பம் குச்சிகளை பின்பக்கம் வைத்துத் தைத்துக் கட்டி விடலாம். அல்லது பெவிகால் வைத்து ஒட்டி விடலாம்.

மலைக்குத் தேவையானவை :

கனமான ப்ரவுன் ஷீட் தேவைப்படும் அளவு வாங்கிக் கொண்டு மைதா மாவுக் கஞ்சியைக் கெட்டியாகக் கலந்து அதில் காவிக் கலர் பொடியைத் தூவி நன்கு கலந்து ஒருபுறத் தில் பேப்பரில் தடவி நிழலில் உலர்த்தி எடுத்து சுண்ணாம்பு சிறிதளவு நீரில் கரைத்து பிரஷ்ஷில் சிறிதளவு தொட்டு விரலால் சுரண்டினால் ஸ்ப்ரே மாதிரி புள்ளிகளாக விழும். இதுபோல் டார்க் நீலக் கலரிலும் செய்து மறுபடி ப்ரவுன் ஷீட்டைக் காயவைத்து எடுத்து வைக்கவும். மண்ணில் தூவும் மரத்தூள் தவிர மற்ற பொருட்கள் அனைத்தும் பல வருடங்கள் பத்திரப்படுத்திப் பயன்படுத்தலாம்.

இப்போது இவற்றை எப்படிப் பயன்படுத்தி உருவாக்கலாம் என்று பார்ப்போம்.

பார்க் : சதுரமான அமைப்பைத் தரையில் வைத்து அதனுள் மண்ணைக் கொட்டி நடுவில் பிளாஸ்டிக், அல்லது உலோக பேசின், கிண்ணம் போன்றவற்றை வைத்து மண்ணை சமப்படுத்தவும். ஒவ்வொரு பக்கத்திலிருந்து 4 அங்குல ரோடு கிண்ணத்தை நோக்கி வரையவும். கிண்ணத்தைச் சுற்றி 3 அங்குல வட்ட மான பாதையில் முடிக்கவும். ஓரங்களில் முழு வதும் சிறு செடிகள் செய்ததை குத்தவும். மேலும் பாதை தவிர அட்டையின் ஓரங் களிலும் குத்தி வைக்கவும். நான்கு புறமும் பாதைகளுக்குக் கரிப் பொடி தூவி ஓரத்தில் வெள்ளைப் பொடியால் கோடும், கிண்ணத் தைச் சுற்றிலும் காவிக் கலர் பொடியைத் தூவி வெள்ளைப் பொடியால் பாதை தவிர வெள் ளைக் கோடு போட்டுப் பிரிக்கப்பட்ட பகுதிகளுக்கும் பச்சைப் பொடி தூவி விடவும் இதில் ஒரு பகுதி ஜூ. ஒரு பகுதி ரெஸ்டா ரண்ட், சில்ரன்ஸ் பார்க், பறவைகள் சரணா லயம் போன்று பிரித்து அதற்கேற்ப ஜூவில்



மண் அகலைப் புதைத்துத் தண்ணீர் விட்டு முதலை பொம்மைகளைப் போட்டு மிருகங்கள் பொம்மைகளை அங்கங்கே வைத்து அலங் கரிக்கவும். மலைக்கு நாம் தயாரித்த ப்ரவுன் ஷீட்டை சிறிய அளவில் எடுத்துக் கசக்கி கூண்டு அமைப்பில் ஆணி கொண்டு மண்ணில் அழுத்தி வாயிலில் சிங்கம், புலி போன்றவற்றை வைத்தால் குகை போன்று இருக்கும்.

இதே போல் ரெஸ்டாரண்ட் பகுதியில் சிறிய பில்டிங், சிறிய நீள் சதுர, வட்ட, ஓவல் அமைப்புள்ள டப்பாக்களை மண்ணில் புதைத்து ஒரு அங்குலப் பொம்மைகளை நீரில் மிதக்க விட்டால் ஸ்விம்மிங் பூல் ரெடி. டேபிள், சேர் போன்றவற்றை வைக்கலாம்.

பறவைகள் பகுதியில் பறவைகளையும், சில்ரன்ஸ் பார்க் பகுதியில் ராட்டினம், சறுக்கு மரம், சீசா, ரயில் போன்ற குட்டி பொம் மைகள் வைத்து ரயில தண்டவாளத்திற்குக் கரிப் பொடியால் போடவும்.

நடுவே சிறிய கிண்ணத்தைத் தண்ணீரோடு கவிழ்த்து அதன் மேல் பீங்கான் பொம்மைகள், சிலைகள் வைத்து பேசினில் தண்ணீர் ஊற்றவும்.

மலை : தயாரித்துள்ள ப்ரவுன் ஷீட்டை ஒவ்வொன்றையும் கசக்கி விரித்துக் கோன் ஷேப்பில் செய்து துருப்பிடிக்காத குண்டூசி யால் இணைத்து மலை போன்ற அமைப்பில் செய்யவும். வேண்டிய அளவில் செய்து கொள்ளலாம். பெரிய பக்கெட்டைக் குப்புறப் போட்டு அதை மூடியபடி மலையை வைத்து உச்சிக்குக் கீழ் அழுத்தித் தட்டை யாகச் செய்து வானியின் மேல் கோபுரம் பொம்மை, மண்டபம், யானை போன்றவற்றை வைக்கலாம். படிக்கு 2 அங்குல அகலத்தில் ப்ரவுன் ஷீட் பட்டிகளை வெட்டித் தேவை யான நீளத்திற்கு விசிறி மடிப்புப் போல் மடித்து ஸ்பிரிங் மாதிரி செய்து கோபுரத் திலிருந்து மலை அடி வரை வளைத்து அமைத்து குண்டூசியால் குத்தி இணைக்கவும்.

ஆங்காங்கே மரம், செடிகள் வைத்து செம்மண் நிற பொடி தூவி, பச்சை நிறப் பொடி தூவி, புற்கள் மாதிரி மரச்சுருளைப் போட்டு வைக்கவும். ஆடு, மாடு, மனிதர்களின் சிறு சிறு பொம்மைகளையும் நிறுத்தி வைக் கவும்.

ஸ்டேடியம் : நாம் செய்து வைத்துள்ள அட்டைப் பட்டியை தரையில் வைத்து கம்பு இல்லாத இருபுறமும் வளைவாக வைத்து ஓவல் ஷேப் வரும்படி வைத்து வளைவான இடத்தில் உள்ளும் வெளியும் கனமான கற் களை வைத்து அமைப்பு மாறாமல் மண் கொட்டி சமப்படுத்தவும். வளைவான அமைப் பில் ஒருபுறம் கட்டிடம், வீடு போன்ற ஒரு பொம்மை வைத்து மறுபுறம் பாதைக்கு விட்டு விட்டு மற்ற இடங்களில் சுமார் 3 அங்குல இடைவெளியில் இரண்டு வரிசையாகத் தூண்களைச் செருகி அதன் மேல் கூரைக் காகச் செய்து வைத்துள்ள ஸ்பிரிங் போன்ற பேப்பரை விரித்து மெதுவாகப் போடவும். நடுவே செம்மண் பிட்ச்சிற்கு காவிப் பொடி தூவி வெள்ளை கோலப் பொடி கோடு போடவும். கூரை போட்ட இடம் தவிர மற்ற இடங்களில் பச்சை மரப் பொடியைத் தூவி விட்டு ஓரத்தில் வெள்ளைப் பொடியால் கோடு போடவும். கட்அவுட்களைத் தகுந்த இடத்தில் செருகி வைக்கவும். பொம்மை களைத் தகுந்த இடத்தில் வைக்கவும்.

இவ்வாறு ஒரு வருடம் மட்டும் முன்னதாக சிறிது நேரமும், பொறுமையுமாக இந்தப் பொருட்களைத் தயார் செய்து வைத்துக் கொண்டால், நம் வீட்டிலும் கிராண்டாக கொலு அமையும் அல்லவா! பச்சைக் கலர் புல்லை மலை, பார்க், ஸ்டேடியத்தைச் சுற்றிப் போடவும். வயல், வரப்பு போன்றவற்றையும் இதன் உதவியால் செய்யலாம்.

வெளிநாடுகளிலிருந்து சாக்லேட்கள் அழகான மோல்ட் பாக்கிங்கில் வருகின்றன. அந்த மோல்ட்கள் ஸ்டார், பூக்கள் போன்ற பல வடிவங்களில் பள்ளம், பள்ளமாக இருக்கும். அதைத் தூக்கி எறியாமல் அதில் எல்லா வகை மளிகைச் சாமான்களையும் ஒவ்வொரு பள்ளமான மோல்டில் போட்டு செட்டியார் முன் வைத்தால் சிறிய சிறிய டப்பாக்களில் போட்டு சிரமப்பட வேண்டாம். அதே சமயம் மிகவும் அழகாக இருக்கும்.

நவராத்திரி தெப்பக் குளத்திற்குத் தெரிந்த கொத்தனாரிடம் சொல்லியோ அல்லது வீடுகளில் யாகம் செய்வதற்கு விற்கும் சதுர மான சிமெண்ட் தொட்டியையே வாங்கி உள் புறம் வெள்ளை சிமிண்ட் கரைத்து அடித்து வெளிப்புறம் வெள்ளை சிமிண்டும், காவி கலர் மெட்டல் பிரைமரையும் பட்டை, பட்டையாக மாற்றி, மாற்றி அடித்தால் மிகவும் அழகாக இருக்கும். நடுவில் டம்ளரில் தண்ணீர் வைத்துக் கவிழ்த்தி மேலே மண்டபத்தை வைத்து மண்டபத்தைச் சுற்றி நந்தி, ஸ்வாமி பொம்மைகள் வைக்கலாம். குளத்திற்குத் தண்ணீரில் சிறிது நீலம் கலந்த தண்ணீர் ஊற்றித் தாமரை மொட்டுக்களை விரித்துப் போட்டுத் தாமரை இலைக்கு வெற்றிலையை தாமரை இலை வடிவத்தில் வெட்டிப் போடவும்.

- அமுதா பரந்தாமன்.

புல்வெளி அமைக்க கேப்பையைத் தூவுங்கள். விரைவில் முளைத்து விடும். * நெருக்கமாக தூவ வேண்டும். பி. ஜானகி

பொன்னை விரும்பும் பூமியிலே, ஈஸ்வர் பண்ணை வீட்டை ஏன் பலரும் விரும்புகின்றனர்?



மதுரைக்கு மிக அருகில் சுமார் 5000 ஏக்கரில் ஈஸ்வர் ஓர் எழில் கொஞ்சும் சோலையை உருவாக்கி வருகிறது.

இந்த சோலையில் 10,000 ச.அடி நிலமும், வளம் பெருக்கும் மா, பலா, தேக்கு மற்றும் அதிக லாபம் ஈட்டும் காய்கறிகளும் பழங்களும் பயிரிட்டு, 20 ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படும்.

ஈஸ்வரின் நிர்வாக திறன், வேளாண் நிபுணர்களின் உதவி, மிக உயரிய வேளாண் தொழில் நுட்பம் ஆகியவை இந்த சோலையை காப்பியங்களில் காணும் உதாரணங்களுக்கு ஈடாக அமைக்கும்.

இங்கே குயில்கள் பாடும், இன்ப இளந்தென்றல் உங்களை காதலோடு அரவணைக்கும், பல பசுமையான மரங்கள் கவிதை பாட வைக்கும். இத்தகைய சோலையில் ஒரு பண்ணை வீடு அமைத்து உங்கள் மகிழ்ச்சியையும், முதலீட்டையும் பெருக்குங்கள்.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 கல தவணைகள்	10,000 ச.அடி நிலம்	ரூ.10 லட்சம்
	24 தேக்கு மரங்கள்	ரூ.24 லட்சம்
	2 ஒட்டு மா	ரூ.50,000
	2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.50,000

20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. • அற்புத தொழில் நுட்ப விந்தை. • சிறந்த நீர் வளம், மண் வளம், பயிர் வளம். • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ.100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.

ESWAR GROW-TEK LTD

AGRI

287, West Masi Street, Madurai - 625 001.
Ph: 540843, 540305. Fax: 0452 - 540305. Telex: 0445 - 478 AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

எங்கள் கம்பெனி (ஈஸ்வர்), சென்னையை சார்ந்த ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனிகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

FIN-HANS R K SWAMY/BBDO



தெங்

SB
SmithKline Beecham

குழந்தைங்க சாப்பிடாம அடம்பிடிப்பாங்கதான்!

எம் பொண்ணு ப்ரியா, வயிறு நிறைய சாப்பிட்டாளா அதுவும் சரியானத சாப்பிட்டாளான்னு எனக்கு எப்பவுமே கவலையா இருந்தது.

நான், டாக்டரை பார்த்து இதுக்கு என்ன செய்யலாம்னு கேட்டது ரொம்பவே நல்லதா போயிடுச்சு.

அப்போதான் தெரிஞ்சது, 1-லிருந்து 3 வயசு குழந்தைங்களுக்கு ஸ்பெஷல் ஊட்டச்சத்து ரொம்ப அவசியம்ன்னு. இந்த வயசுல அவங்க எவ்ளோ வேகமா வளர்றாங்க!

அப்புறம்தான் Junior Horlicks பத்தி எனக்கு தெரிய வந்தது.

பால், கோதுமை, மால்டட் பார்லி இதெல்லாம் சேர்த்து சின்ன குழந்தைகளுக்குன்னு ஸ்பெஷலா தயாரிச்சிருக்காங்க. நேச்சுரல் பொருட்களால் தயாரிச்சிருக்கிறதால ஈஸியா ஜீரணமாகுது.

அதோட, இதுல எக்ஸ்ட்ரா கால்ஷியம், எக்ஸ்ட்ரா அயர்ன், முக்கிய விட்டமின், புரோட்டீன் எல்லாம் இருக்கு.

தயார் பண்றதா? ரொம்ப ஈஸிங்க! பால்ல கலந்து அப்படியே குடுக்கலாம்.
தெனமும் ரெண்டு தடவை.

உண்மையா சொன்னா, மனசு சந்தோஷப்படறப்போ, எனக்கு இதத்தான் சொல்லத் தோணுது...

ஸ்பெஷல் 1·2·3 ஊட்டச்சத்து



க்யூ,

'மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா? போடலாம்.
மண்ணிலும் வானந்தானே நிரம்பியிருக்கின்றது?
மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா?"



என பாரதி தன் வசன கவிதையில் கூறுகின்றார். இது எவ்வளவு உண்மை! வானத்து சக்திகள் அனைத்தும் மண்ணில் நிரம்பி இருக்கின்றன. அந்த சக்தியை மனிதன் தனக்கு சாதகமாக்கி வேலி போட்டு பாதுகாத்துக் கொள்ள வேண்டாமா? வேலி போட்டு பாதுகாக்கப்படுகின்ற தோட்டம் செழித்து வளர்ந்து அதிக பலனைக் கொடுக்கின்றது. வேலியற்ற நிலம் மேய்ச்சல் நிலமாகி நாசமாகின்றது. கூட்டை கட்டுகின்ற தூக்கணாங் குருவியும் பாதுகாப்பைக் கருதி நேர்த்தியாகக் கூட்டைக் கட்டி, தன் சந்ததியர் உலக வெளியில் சுதந்திரமாக இருக்கச் செய்யவே அழகான பாதுகாப்பான முறையில் கூடு அமைக்கின்றது. வீட்டைக் கட்டுகின்ற மனிதனோ! சாஸ்திரத்தை விட்டு விட்டு தன் மனம் போகின்ற போக்கில் இயற்கை விதிகளை மீறி, தன் சந்ததிகளாகிய குழந்தைகளை பயனற்றவர்களாக மாற்றி விடுகின்றான்."

வாஸ்து எனும் புதையல்

மனிதன் வீட்டை கட்டுவதற்கு முன் தான் தேர்ந்தெடுத்த நிலம் சரியான நிலந்தானா? சாஸ்திரப்படி வரை படங்கள் வரையப்பட்டுள்ளதா? இந்த வீட்டைக் கட்டினால் நான் என் சந்ததியுடன் சுகமாக வாழ்வேனா? என்னுடைய சந்ததிகள் வளர்ச்சிப் பெறுவார்களா? என வாஸ்து வல்லுனர்களைக் கொண்டு நன்கு தெரிந்த பின்னரே வீட்டைக் கட்ட வேண்டும். இப்படி நன்றாக அறிந்து கட்டுமான முறைகளை வல்லுனர்களின் ஆலோசனைப்படி கட்டும் பொழுது. பணத்தட்டுப்பாடு இன்றி, தொல்லைகள் ஏதும் இல்லாமல், தடங்கல்கள் ஏதும் இன்றி வீட்டை கட்டி முடிக்கலாம்.

இன்று மனிதர்கள் தான்தோன்றித்தனமாக கட்டிக் கொள்ளும் பொழுது ஏற்படும் தொல்லைகளை சற்று பார்ப்போம. கட்டிய வீடு பாதியிலேயே நிற்கின்றது. பூசப்படாத வீட்டில் குடியிருக்கின்றனர். வேலி போடாத வீடுகள் எத்தனை? வீட்டை கட்டிய பின் தன் வேலை, தொழில் மற்றும் வியாபாரங்களை இழந்தவர்கள் எத்தனைப் பேர்? தன் உடல் நிலையும்; தன் குடும்பத்தாரின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைப் பேர்? சற்று சிந்திப்போம். நாம் வசிக்கின்ற கிரஹம் (வீடு) தனக்கு இத்தனை தொல்லை களை கொடுக்கின்றதா? சிந்திப்போம். சக்தியை வழிபடுகின்ற இந்த நவராத்திரி காலத்தில்,



"ஸத்ய யுகத்தை அகத்தில் (வீட்டுள்) இருத்தித்
திறத்தை நமக்கருளிச் செய்யும் சக்தி."

துர்கையை வணங்கி நாம் புதியதாகக் கட்டுகின்ற வீட்டையோ அல்லது நமக்கு தந்தை வைத்து விட்டுப் போன வீட்டையும்,

வயலையுமோ சாஸ்திரப்படி மாற்றி நமது துய ரத்தின் போதெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்த மனைவியும் மகிழ்ச்சியுற்று உடல் பூரிக்கச் செய்வோம்.


கடந்த நான்கு இதழ்களிலும் என் அறிவுக்கு எட்டிய அனுபவபூர்வமான படித்தறிந்த சாஸ்திர முறைகளைக் கூறினேன். பலரும் என்னுடன் தொடர்பு கொண்டு தங்க ளுடைய ஐயங்களை நிவர்த்தி செய்து கொண் டார்கள். நீங்களும் என்னைத் தொடர்பு கொள்ள வேண்டுமானால் திங்கள், செவ்வா யில் சென்னை - 5, திருவல்லிக்கேணியிலுள்ள 13, பந்தல வேணுகோபால தெருவிலும், (தொ. பே. 840084), மற்ற நாட்களில் 43, பாரதி காலனி 2வது தெரு, பீளமேடு, கோவை -4 லும் (தொ. பே. 577907) தொடர்பு கொள்ளலாம்.


இந்த இதழில் வீதி சூலம் அல்லது தெருக் குத்து என்கின்ற தெரு தாக்கத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். தெரு தாக்கம் என்றால் என்ன? நம் வீடு அல்லது மனைக்கு நேர் எதி ராக எந்தத் திசையில் தெரு இருந்தாலும் அதை வீதி சூலம் அல்லது தெருக்குத்து அல்லது தெரு தாக்கம் என்று சாஸ்திரம் கூறுகின்றது. இந்த தெருத் தாக்கம் எட்டு வகைகளாக இருக்கின் றது. இவைகளில் நான்கு நன்மை செய்பவை களாகவும், நான்கு கடுமையான தீங்கு விளை விப்பவையாகவும் இருக்கின்றது. இப்பொழுது நன்மை செய்கின்ற தெருக்குத்து எவை என்ப தனை வரை படத்தின் மூலம் தெரிந்து கொள் வோம்.

நம் மனையையோ அல்லது வீட்டையோ சுற்றி வடகிழக்குத் திசையில் வடக்கை பார்ப் பது போல் தெரு தாக்கம் இருப்பின் இது அதிக நன்மைகளை கொடுத்து நம் பெண் சந்த திகள் நலமுடன் நல்வாழ்க்கை அமைந்து சுப போகத்தில் வாழ்வார்கள். இதே போன்று வட கிழக்குப் பாகத்தில் கிழக்கை பார்ப்பது போல் தெருத் தாக்கம் இருப்பின் இதுவும் அதிக நன் மைகளைக் கொடுத்து ஆண் சந்ததிகள் பெருமை பெறும் வாழ்வை பெற்று மேதைகள் ஆவார்கள். தென் கிழக்கு மூலையில் தெற்கை பார்ப்பது போல் தெருத் தாக்கம் இருந்தால் பெண்கள் பெருமை பெறுவார்கள். சுக போக வாழ்வும் அமையும். வட மேற்கு மூலையில் மேற்கை பார்ப்பது போல் தெருத் தாக்கம் இருந்தால் வியாபார தொழில் வளர்ச்சி பெற்று உயர்வடைவார்கள்.

இப்பொழுது தீமைகளை கொடுக்கும் தெருத்தாக்கம் எவை என்பதனையும் வரை படத்தின் மூலம் தெரிந்து கொள்வோம்.

வட மேற்கில் வடக்கைப் பார்த்து தெருத் தாக்கம் இருந்தால், அரசாங்கத்தாலும் அர சியல்வாதிகளாலும் தொல்லைகள் ஏற்படும். தென் கிழக்கு மூலையில் கிழக்கைப் பார்த்து தெருத் தாக்கம் இருந்தால் பெண்களுக்கு நோய் ஏற்படுவதுடன் தீ விபத்துக்கள் ஏற்படும். தென் மேற்கில் தெற்கைப் பார்த்து தெருத் தாக்கம் இருந்தால், தீராத வியாதி, பணக் கஷ்டங்கள் ஏற்படும். தென்மேற்கில் மேற்கைப் பார்த்து தெருத் தாக்கம் இருந்தால், எல்லாவற்றிலும் தோல்வி, அகால மரணம், மூத்த பிள்ளைக்குக் கெடுதல்கள் ஏற்படும். இவை அனைத்தும் அனு பவபூர்வமான சாஸ்திர உண்மைகள். இவை களை சரி செய்ய அநேகர் விநாயகர் சிலை அல்லது சூலாயுதத்தை தெரு தாக்கத்திற்கு நேராக வைத்து விடுகின்றனர். இதில் எந்த விதமான பலனும் ஏற்படாது. மேலும் புனிதமான விநாயகரை புனிதம் கெட நாம்





PGP SILKS

வழங்கும் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை

10% To 50%

பட்டு, பாலியஸ்டர், சேலைகள் மற்றும் அனைத்து ஜவுளி ரகங்களுக்கும்

விஜயதசமி

முதல்

தீபாவளி

வரை பட்டுச் சேலைகள் தறி விலைக்கே கிடைக்கும். வாருங்கள், சிறந்த தரம் குறைந்த விலையில் வாங்கி மகிழுங்கள்.



PGP SILKS
P.GOVINDASAMY PILLAI ENTERPRISES

258, (Lloyds Road) Avvai Shanmugam Salai, Gopalapuram, Madras-600 086.
Phone : 8276769.

We will Accept Credit Cards



அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குணா கூந்தல் தைலம்

குணா கூந்தல் தைலத்தை தினசரி உபயோகித்தால்

- தலைமயிர் நீண்டு, கறுத்து, அடர்த்தியாய் வளரும்.
- தலைமயிர் உதிர்தல், செம்பட்டை நிறம், இளம் பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு, சொரிந்தால் செதில் உதிர்தல் குணமாகும்.
- ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஏற்றது.

இயற்கை தரும் அதி உன்னத மூலிகைகளால் சித்த மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது 100ml, 200 ml packing-களில் கிடைக்கின்றது

வியாபார விசாரணைகளுக்கு கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

அகஸ்தியர் பார்மாசூடிக்கல்ஸ்
P. Box No. 588, சேலம் - 636 005.

இப்போது எல்லா மளிகை, மருந்து மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கிறது.


வழிச் செய்துவிடக் கூடாது. இதை சரி செய்ய வேறு விமோசன வழிகள் வாஸ்து சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இதை நன்கு ஆராய்ந்து அனுபவம் பெற்ற வாஸ்து வல்லுனர்களைக் கொண்டு, நேரில் ஆய்வு செய்த பின்னரே தெரு தாக்கங்களை போக்க வேண்டும்.

சென்ற இதழ் வரைபடத்தில் கிழக்கு, மேற்கு திசைகள் தவறாக மாறி அச்சிடப்பட்டு விட்டது. சரியான படம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.



எந்தச் சுண்டல் செய்தாலும் தாளிக்கும் போது கறிவேப்பிலையை அப்படியே கிள்ளிப்போடாமல் மிக்சியில் அரைத்து விழுவதை தூவிக் கிளறினால் மணமாகவும் இருக்கும். சத்தும் வீணாகாமல் உடலில் சேரும்.

-ஆர்.ஜெயலட்சுமி



மேலும் நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை, நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர், நொய்ந்த உள்ளம், இவற்றை காற்றுத் தேவன் புடைத்து நொறுக்கிவிடுவான். சொன்னாலும் கேட்கமாட்டான். ஆதலால் மானிடரே வாருங்கள் வீடுகளைத் இன்னமையுற கட்டுவோம். நாம் நல்ல வீடுகளை சிறந்த வாஸ்து வல்லுனர்களின் ஆலோசனையின் பேரில் கட்டுவோம். கட்டிய வீட்டின் குறைகளை நீக்கிக் கொள்வோம். தொழிற்சாலைகளின் குறைகளை நீக்கி தொழில் பெருக்கச் செய்வோம்.

— பி.ஜே.ரவிராஜ்

(தொடரும்)

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : ரெடிஃபுட் கடைசி தேதி :15.10.'96

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



வளமையான, இளமையான கூந்தலுக்கு என்றுமே

ப்ரம்ப்கால்

★ அடர்த்தியான கூந்தல் தந்திடும் ப்ரம்ப்கால் குளிர்ச்சியான மூலிகைத் தைலம்

★ பொடுகுத் தொல்லை விரட்டிடும் ப்ரம்ப்கால்

★ இளநரையை தடுத்திடும் ப்ரம்ப்கால்

★ முடி உதிர்வதைத் தடுத்திடும் தினமும் தலையில் தேய்க்கவும் ப்ரம்ப்கால்

★ கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, பொடுதலை, செம்பருத்தி போன்ற 28 மூலிகைகளைக் கொண்டு தேங்காய் எண்ணை மற்றும் ஆலிவ் எண்ணையுடன் கூடியது ப்ரம்ப்கால் மூலிகை கூந்தல் தைலம்



ப்ரம்ப்கால்

குடும்பத்தில் அனைவருக்கும்

உங்கள் அனுபவத்தை எழுதவும்

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்
அண்ணா மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை – 600 106.
தொலைபேசி: 6216696, 6214892.

DIPR/361/DIS/96

அழகுக்கு அழகு



அழகு விரல்கள் ஆயிரம் கவிதை பேசும். நீண்ட விரல்களும் அழகாக சீர் செய்யப் பட்ட நகங்களும் பெண்களின் அழகுக்கு அழகூட்டும். நகங்கள் கொழுப்புடன், புரோட்டீன் பொருள்களாலும் சொர சொரப்பான (Horny tissue) திசுக்களாலும் உண்டாக்கப்படுவன. நகங்களுக்கு இரத்தம் கிடையாது. வெட்ட வெட்ட நகம் வளரும். நகத்தின் மேல் பக்கங்களும் அடிப் பக்கமும், புறமும் விரல்களின் தசைப்பிடிப்புகளில் பதிந்துள்ளது. 'க்யூடிகல்' பிடிப்பு நகத்திற்கு பாதுகாப்பு தருகிறது. நகங்களை நன்றாக சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பின்பு விரல்களுக்கு ஏற்ப நீண்டு வளர்ந்துள்ள நகங்களை சீராக வெட்டி விடவும்.

சிலருக்கு வைட்டமின் மற்றும் கால்ஷியம் குறைவினால் சொத்தைகள் ஏற்பட்டு நகங்களின் அழகு பாதிக்கப்படும். வைட்டமின் 'சி', 'பி' காம்ப்ளெக்ஸ் குறைவு இதற்குக் காரணம். நகம், நிறம் மாறவும் வலிமை குறையவும் வாய்ப்புண்டு. இறுக்கமான ஷு போன்ற காலணிகளாலும் கால் நகங்கள் இறுக்கப்பட்டு வளர்ச்சி குன்றிப் போவதும் உண்டு. தண்ணீரில் நகங்களை அதிகமாக ஊற வைத்துக் கொண்டிருப்பதும், சோப்பு, சோடா, உப்பு போன்ற பொருள்களும் நகங்களின் அழகைக் குறைக்கும்.

மசாஜ் முறையில் மணிக்கட்டு மட்டும் விரல்களின் இணைப்பு எலும்புகளைப் பிடித்தும் முடுக்கிவிட்டு இயக்குவதால் நல்ல இரத்த ஓட்டம் ஏற்பட்டு கை, கால் விரல்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டலாம். நல்ல இரத்த ஓட்டத்தினால் நகங்கள் பளபளப்பாகவும் அழகுடன் செழுமையாக இருக்கும்.

பருக்கள் சாதாரணமாக இளம் வயதுக்காரர்களுக்கு அதிகம் வரும். செபீஷியஸ் சுரப்பிகள் அதிகமாக வேலை செய்வதால், திரவமானது தோலின் மேல் உள்ள துவாரங்களில் அடைப்பட்டு பருக்கள் வருகின்றன. இவற்றை எக்காரணங் கொண்டும் கிள்ளுதல் கூடாது. கிள்ளினால் 'செப்டிக்' ஆகி அடையாளக் குறிகள் ஏற்படுகின்றன. பருக்கள் வர முக்கியக் காரணங்கள் தலையில் பொடுகு இருந்தாலும், முகம் சுத்தம் இல்லாததாலும் வரும். அதிகமாக எண்ணெய் பதார்த்தங்கள், இனிப்புகள் உபயோகித்தாலும் வரும். குளிர் பானங்கள், சாக்லேட்டுகள், கேக்குகள், வறுத்த பதார்த்தங்கள், கிழங்கு வகைகள், அடிக்கடி பவுடர்கள், சோப்புகள் மாற்றுவதாலும் மாதவிலக்கு பிரச்சனை இருந்தாலும் பருக்கள் வரும்.

உணவில் எண்ணெய் பொருட்கள் வறுத்த பொருட்கள் இனி உபயோகிக்கக் கூடாது என்று கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். தினந்தோறும் 8 கிளாஸ் தண்ணீர் அவசியம் குடிக்க வேண்டும். உடற் பயிற்சி செய்தல் அவசியம். காரட், கீரை வகைகள், சாலட்டுகள், பழரச வகைகள், பழங்கள்



அதிகமாக உபயோகிக்க வேண்டும். வைட்டமின் டி, வைட்டமின் சி காப்ஸ்யூல்ஸ் உபயோகிக்க வேண்டும். முக்கியமாக தலையில் பொடுகு இல்லாதவாறு சுத்தமாக இருக்க வேண்டும். குளிப்பதற்கு ஒரு மணி நேரம் முன்பு (வேப்பட்டை கசகசா, சந்தனம், ஜாதிக்காய் நன்கு அரைத்து சலித்த பொடி) பன்னீருடன் அரைத்த பொடியை 1 ஸ்பூன் பேஸ்ட் போல் கலந்து முகத்தில் தடவவும். பருவின் ரணம் நன்கு ஆறும். பருவினால் ஏற்படும் தழும்பும் மறையும்.

தேக ஆரோக்கியத்தைப் போலவே, சிகை ஆரோக்கியத்திற்கும் உணவுக் கட்டுப்பாடு அவசியம். தலைமுடி ஆரோக்கியத்திற்கு நைட்ரஜன், சல்பர் சத்து மிக அவசியம். சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், காற்றோட்டமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.

கூந்தல் வளர்ச்சிக்காக பல்வேறு வழிமுறைகள் கையாண்டாலும் முடி உதிர்தல், மெலிந்து உயிரற்று இருத்தல் வளர்ச்சியின்மை போன்ற பிரச்சனைகள் முடிந்த வரை தீர்வு காண மூலிகை எண்ணெய் மற்றும் மூலிகைகளில் ஆன ஹெர்பெல் கண்டிஷனர் மிகவும் உதவி செய்கிறது. ஒவ்வொரு 10 நாட்களுக்கு ஒருமுறை கட்டாயம் ஹென்னா கண்டிஷனர் செய்வது அவசியம்.

மருதாணி சமய சஞ்சீவி மூலிகை. மருதாணியின் அற்புதத் திறன். தலைமுடிக்கு வேண்டிய போஷாக்குக் கொடுக்கும். பளபளக்கும் கூந்தலுக்கு ஹென்னா கண்டிஷனர் மிக முக்கியம். தலையை வாரிக் கொள்ளும் போது நன்றாகப் பிரித்துப் படர விட்டு பத்து விரல்களின் நுனிகளாலும் தலையை (Scalp) நன்கு அழுத்தமாக, பரவலாக ஒரே சீராக மசாஜ் செய்ய வேண்டும். ஒவ்வொரு முறை தலை வாரும் முன்பு 2 நிமிடங்கள் செய்ய வேண்டும். இம்முறையினால் போதிய இரத்த ஓட்டம் தலைக்குக் கிடைப்பதால், கேசம் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வளருகிறது. முடி பிளவு பட்டால் அடி நுனியை சரியாக 'ட்ரிம்' செய்ய வேண்டும்.

இன்று பெண்கள் சிகை அலங்காரத்திற்கு மிகவும் முக்கியம் கொடுத்து சிகை அலங்காரம் கற்றுக் கொள்கிறார்கள். என் மாணவிகள் சிகை அலங்காரம் மிகச் சிறப்பான முறையில் செய்கின்றனர். பெண்களுக்குக் கிரீடமாக அமைவதுதான் சிகை அலங்காரம். இத் துறையில் உங்களுக்கு ஆர்வமிருப்பின் என்னை 6383596 தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

அனாவசிய கவலைகளைத் தவிருங்கள். சத்தான உணவு உட்கொள்ளுங்கள். சின்னச் சின்ன உடற்பயிற்சி செய்ய பழகிக் கொள்ளுங்கள். முடிந்த வரையில் உலாவுதல் நல்லது. வாகனங்கள் இருந்தாலும் உபயோகிக்காதீர்கள்.

எண்ணெய்ப் பசையுள்ள முடி உள்ளவர்களுக்குத் தலைமுடி மிகவும் அரிக்கும். அவ்வாறு இருப்பவர்களுக்கு வாரம் ஒருமுறை மூலிகை எண்ணெய் மசாஜ் செய்து, ஹென்னா கண்டிஷனர் போட வேண்டும். நல்ல பலன் ஏற்படும். காரணம் இள நரைக்குப் பெரும்பாலும் பித்தம் காரணமாகிறது. இளம் வயதில் வரும் நரையை மூலிகை எண்ணெய் தடவி தவிர்க்கலாம். நாம் நம் தலைக்கு உபயோகிக்கும் தண்ணீர் மிருதுவானதாக (Soft water) இருத்தல் அவசியம்.

குழந்தைகளின் தலையிலுள்ள பேனை ஒழிப்பதற்கு, தினமும் இரவில் அரை ஸ்பூன் விளக்கெண்ணெய் உச்சந்தலையில் தேய்க்கவும். வாரம் இருமுறை நல்லெண்ணெய் தேய்த்து சிறிது ஊறிய பிறகு சாதம் வடித்த கஞ்சியில் சீக்காய் தூளைப் போட்டுக் கலந்து தலைக்கு தேய்த்துக் குளிக்க வேண்டும். இதனால் உடல் சூடு தணியும். முடியும் கொட்டாது. முடி சுத்தமாக இருப்பதால் பேன் வராது. வசம்பைத் தண்ணீர் விட்டு அரைத்துத் தலையில் நன்றாகத் தேய்த்து ஊறி வெறும் தண்ணீரில் தலைமுடி அலசினால் பேன் போகும்.

ஹேமாலஷ்மண்,
(அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்)




மண்ணில்லாமல் செடி...

கொலு பார்க்கில் பசேல் என்று செடி வளர்க்க மண்ணைப் பரப்பி தரையைக் கெடுக்காமல் சாதாரண பஞ்சை பரப்பி அதன்மேல் சாப்பாட்டில் சேர்க்கும் பச்சை கலரை தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இதன் மேல் சிறிது கடுகைத் தூவினால் போதும் மூன்றே நாட்களில் முளைத்து விடும்.

-உஷா

புகழ்பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மநாபன்.



எனது தந்தையார் ஆசீர்வதிக்கும் மந்திரோபதேசம் செய்யும் காட்சி.

பிரபல ஜோதிஷர் (**பண்டித காழியூர் பத்மநாபன்**) காழியூர் ஸ்ரீனிவாசாச்சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும் பெற்றவரால், மகத்தான சக்தி வாய்ந்த யந்திரங்கள், சக்கரங்கள் வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன. மகா லெக்ஷ்மி கவசம் ரூ. 250/-, மகா சுதர்சன யந்திரம் ரூ. 250/-, லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ. 350/-, தனாகர்ஷண யந்திரம் ரூ. 350/-, மகா சுதர்சன சக்கரம் ரூ. 550/- மஹாலக்ஷ்மி சக்ரம் ரூ. 550/-. இவை தவிர அநேக விதமான யந்திரங்களும், கவசங்களும், (விசேஷ பூஜா க்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும்.

வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை DD மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு ரூ. 50/-

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ் / ஆங்கிலம் ரூ. 50/- ஜாதகத்தின் பொதுப்பலன்களை நேரில் சொல்வதற்கு ரூ. 50/- ஆயுள் பலன் (வருஷம், மாதம் தேதி, நேரம், ஊர்) ரூ. 250/-.

மூன்று கேள்விகளுக்கு ரூ. 50/-. வேண்டுவோர் கடிதத் தொடர்பு கொண்டு விவரம் அறிந்து பணம் அனுப்பி சகல நன்மைகளும் அடைவீர்களாக. நேரில் - காலை 8 to 12 noon

பிரபல ஜோதிஷர் பண்டித காழியூர் பத்மநாபன்,
"தபோநிதி"
நெ. 5, வித்யோதயா முதல் மெயின் தெரு,
தபெ எண் : 1411, தி.நகர்,
மதராஸ் 600 017. Ph. 826 3814
தென் இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)

முக்கிய கவனிப்பு : முன் பதிவு செய்து கொள்வது அவசியம். தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப்படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த விதமான தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்ரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

காஸ் ஸ்டவ் பயன்படுத்துவோர் கவனத்திற்கு!



காஸ் ஸ்டவ் பிரச்சினையா? எங்களை உடனே அணுகவும்.

✆ 4820494 (மாம்பலம்)
415117 (அடையார்)

எல்லா வகையான காஸ் அடுப்புகளும் ரிப்பேர், ஸ்ப்ரே பெயிண்ட்டிங், குரோமியம் பிளேட்டிங், உதரி பாகங்கள் மற்றும் தங்களின் பழைய ஸ்டவ் எடுத்துக்கொண்டு 2 வருட உத்திரவாதத்துடன் தரமான புதிய ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் ஸ்டவ் தருகிறோம்.

சிவா

காஸ் ஸ்டவ் மெக்கானிக் & சர்வீஸ்

43, கோவிந்தன் ரோடு (சீனிவாசா தியேட்டர் அருகில்) மேற்கு மாம்பலம், சென்னை - 33
7/8, கஸ்தூரி நகர் 3-வது குறுக்குத் தெரு, அடையார், சென்னை - 20

ரிப்பேர் செய்ய தங்கள் ஸ்டவ்வை கொடுக்கும்போது உடனடி உபயோகத்திற்கு மாற்று காஸ் ஸ்டவ்வும் தருகிறோம்.

P.K. மணியம்மாள்

டெக்ஸ்டைல்ஸ்—ன்

இருவித
வாடிக்கையாளர்
நலத் திட்டங்கள்

தீபாவளி, திருமண
விசேஷங்களுக்கு
ஜவுளி வாங்குபவர்கள்
ரூ. 500 -க்கு
ஒரு கூப்பனைப் பெற்று

ரூ. 1,00,000
பெறுமான

தங்க நகையுடன்

இதர 104 பரிசுகளையும்
வென்றிட வாருங்கள்

அடுத்த வருட தீபாவளி ஜவுளிக்கு
இப்பொழுதே சேமிக்கத்
துவங்குங்கள். மாதம் ரூ.250வீதம்
12 மாதங்கள் சேமிப்பீர். திட்ட
முடிவில் நீங்கள் செலுத்திய
ரூ.3000த்துடன் எங்களது
போனஸ் ரூ.250 சேர்த்து
ரூ.3250க்கு ஜவுளிகளை
சுலபமாக பெற்றிடலாம். அத்துடன்
பிரதி மாதமும்

ரூ. 20,000

மதிப்புள்ள பரிசுகளையும்
வென்றிடலாம்.

இத்திட்டத்தில் சேரும்
உறுப்பினர்களுக்கு
"மணியம்மாள்
உறுப்பினர்கார்டு" வழங்கப்படும்.
அதற்கு 5% சிறப்பு தள்ளுபடி
கிடைக்கும். திட்ட முடிவில்
வாங்கும் ரூ.3250-க்கான
ஜவுளிகளுக்கு இத்தள்ளுபடி
கிடையாது.

தறி விலையிலும், மில் விலையிலும் ஜவுளிகள் கிடைக்கிறது.

P.K. மணியம்மாள்

டெக்ஸ்டைல்ஸ் பி.லிட்., A/c.

222, R.K. மடம் சாலை, மைலாப்பூர் குளத்திற்கு அருகில்
சென்னை - 4. போன் : 4941055

WE ACCEPT ALL CREDIT CARDS

ACCORD

வரம் தரும்



வஸந்த நவராத்திரி

இந்த மாதம் கொலு வைத்து, 9-ம் நாள் நவமி அன்று சரஸ்வதி பூஜை செய்து, 10-ம் நாள் விஜயதசமியுடன் முடிவு பெறும் நவராத்திரி - நாம் வழக்கமாகக் கொண்டாடும் நவராத்திரி. ஆனால் இதைத் தவிர வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி என்ற பல நவராத்திரிகளும் உண்டு என்பது பலருக்குத் தெரியாது.

இத்தகைய வசந்த, சாரதா நவராத்திரியைக் கொண்டாடிய அரசர்கள் பெரும் புகழையும், கீர்த்தியையும் அடைந்துள்ளனர் என்று புராணங் கள், சரித்திரங்கள் கூறுகின்றன. கடுமையான விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இத்தகைய நவராத்திரிகளில் இருந்தா லும், இதைச் செய்பவர்களுக்கு நற்பலன் நிச்சய முண்டு என்கிறது தேவி மகாத்மியம். ஏழ்மை, துன்பம், நோய்களால் பீடிக்கப்பட்ட மனிதர்கள் காலத்திற்குகந்தவாறு இந் நவராத்திரிகளையும் அனுஷ்டித்துப் பயன்பெறலாமே என்கிற

• ராமரத்தினம்

கண்ணோட்டத்தில் சமஸ்கிருத பண்டித ரான இருராமரத்தினத்திடமிருந்து பெறப் பட்ட தகவல்கள் இதோ -

"சந்திரனின் நிலையைக் கொண்டு கணிக்கப்படும் நவராத்திரி இருநான் வடக்கே ஸரத்ருதுவில்தான் வரும். அத னால்தான் அதனை ஸாரதா நவராத்திரி என்கிறார்கள்.

வஸந்த நவராத்திரி என்பது வஸந்த காலத்தில்தான் கொண்டாடப்பட வேண் டும். இப் பண்டிகை சித்திரை மாதம் சுக்ல பக்ஷ முதல் நாளிலிருந்து - அதாவது ராமநவமிக்கு முன்னால் (8 நாட்களுக்கு முன்னதாக) ஆரம்பித்து ராமநவமியன்று 9-ம் நாளாகக் கணக்கிட்டுப் பூஜை செய் வோரும் உண்டு. இதனை 'நவராத்திரி கொண்டாட்டம்' என்பதை விட 'விரதம் அனுஷ்டிக்கும் தினங்கள்' என்று சொல்லலாம். இத்தகைய விரதங்களை அனுஷ்டிக்கும் தினங்களில் தரையில் தான் படுக்க வேண்டும். விளக்கு பூஜை, ஸுவாஸினி பூஜை என்று தற்காலத்தில் பிரபலமாகி வரும் கொண்டாட்டங்கள் 'ஸாக்தம்' முறையை அடிப்படையாகக் கொண்டவை. ஸாக்தம் என் றால் சக்தியை வழிபடுதல் என்று அர்த்தம்.

வஸந்த நவராத்திரியில் ஒன்பது நாட்களும் அம்பாள் உபாஸனை மட்டுமே நடக்கும். இதில் ஒரு கன்னிப் பெண்ணை அலங்கரித்துப் பூஜிக்கும் வழக்கமும் உண்டு. வேண்டுதல்கள் அதாவது எதிரிகளிடமிருந்து காக்க காளிபூஜை, செல்வம் கிடைக்க சண்டிகை, அரசனை மயக்க சாம்பவி, கஷ்டம் வறுமைகளை நீக்க துர்கை, நோய்களைத் தீர்க்க ரோஹிணியைப் பூஜிப்பது வழக்கம். இந்த வஸந்த நவராத்திரியில் எட்டாம் நாள் அதாவது அஷ்டமியன்று செய்யும் பூஜை மிகுந்த பல னைத் தரும். காரணம் அன்றுதான் அம்பாள் பத்ரகாளி அவதாரமெடுத்து தக்ஷனின் யக் ஞத்தை அழித்தாள்.

வஸந்த நவராத்திரியில் ஹோமங்கள் செய்து அம்பாளை வழிபட வேண்டும் என்று தேவி பாகவதம் கூறுகிறது. வஸந்த நவராத்திரி யின் போது பவானி தேவியை வழிபட்ட தீவிர பக்தன் மராட்டிய பேரரசன் சிவாஜி உலகம் போற்றும் கீர்த்தியை, புகழை அடைந்தான் என்று கூறுகிறது சரித்திரம். வஸந்த நவராத்திரியின் போது தேவர்களே அம்பாளை வழிபடுகிறார்கள் என்கிறது தேவி மகாத்மியம். இராமாயணத்தில் வன வாஸத்தில் இராமர் கிஷ்கிந்தையில் தன் மனைவி ஸீதா தேவியை மீட்டு வர தேவி பூஜை செய்தார் என்கிறது புராணம்.

இவை தவிர, ஆடி அமாவாசைக்கு அடுத்த நாள் ஆரம்பித்து 10 நாட்கள் செய்யப்படும் நவராத்திரிக்கு 'வாராஹி நவராத்திரி' என்றும் மார்கழி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் ஆரம் பித்து 9 நாட்கள் கொண்டாடப்படும் நவராத்திரிக்கு 'மாதங்கி நவராத்திரி' என்றும் பெயர். இவைகளும் ஸாக்த முறைப்படி. கடுமையாக உபாஸிக்கப் பட வேண்டியவையாதலால் இதற்குப் பதிலாக 'நவாவரண பூஜை' செய்து அதே பலன்களைப் பெறலாம்.

- கீதாமோஹன்

காவிரிக் கரையில் கால் ஏக்கர் நிலம், முதலீட்டாளர்களுக்கு காய்கறி இலவசம்



தொடர்ந்து **7** ஆண்டுகளுக்கு
ஒவ்வொரு **7** நாட்களுக்கு ஒருமுறை
உங்களுக்கு **7** கிலோ காய்கறி தர

வருகிறான்

காய்கறிகாரன்

- விலைவாசி ஏற்றத்தின் பாதிப்பின்றி நீங்கள் விரும்பும் 7 கிலோ காய்கறிகள் உங்கள் இல்லம் தேடி இலவசமாக வருகிறது, அல்லது வருமானவரி விலக்குப்பெற்ற விவசாய வருமானமாக ஆண்டுக்கு ரூ.3000/- முன் தேதியிட்ட காசோலையாக வழங்கப்படும்.
- கால் ஏக்கர் நிலத்தை 7 வருடங்களுக்குப்பிறகு வீட்டுமனைகளாக நல்ல விலைக்கு விற்கலாம்.

முதலீட்டுத் திட்ட விவரம்

திட்டம் 'A'	திட்டம் 'B' *	திட்டம் 'C' *
சுலப தவணைத்திட்டம்	குறுகிய தவணைத்திட்டம்	ஒரே தவணைத்திட்டம்
முன்பணம் ரூ. 3,500	முன்பணம் ரூ. 11,800	ஒரே தவணை
மாதத்தவணை ரூ. 2,675	மாதத்தவணை ரூ. 11,000	ரூ. 32,900
மாதங்கள் 12	மாதங்கள் 2	

* B மற்றும் C திட்டதில் சேருபவர்களுக்கு உடனடியாக காய்கறி வழங்கப்படும்.
பதிவுக் கட்டணமாக ரூ. 2,500/- கூடுதலாக செலுத்த வேண்டும்.

இதுவரை 2000 குடும்பங்கள் பயனடைந்து வருகிறது. நீங்களும் சேர்ந்து பயனடையுங்கள்.

BK ESTATES

B K எஸ்ட்டேட்ஸ்

48, வடக்கு உஸ்மான் சாலை, இரண்டாவது தளம்,
தி. நகர், சென்னை - 600 017.
தொ. பேசி. 8228282/8266978/8277234 பேக்ஸ் : 91-044-828 [illegible]

கிளை : No. A3, SVV காம்ப்ளக்ஸ், 9, சாஸ்த்திரி சாலை, திருச்சி 620 017. போன் : [illegible]



புதிய அலுவலக திறப்பு விழா சிறப்பு பரிசு!
முதலீட்டாளர் மற்றும் அறிமுகப்படுத்துவோருக்கும் சிறப்பு பரிசு உண்டு!

JEGI/BKE/41/96

பண்டிகை நாட்களா? பயமுறுத்தும் நாட்களா?

பண்டிகைகள் என்றாலே கோலாகலம்தான். கும்மாளம்தான். குதூகலம்தான். இந்த ஆனந்தம் அளவில்லாமல் இருக்க வேண்டும் என்று எண்ணியோ என்னவோ இந்து மதத்தினருக்கு எண்ணிலடங்காத அளவுக்குப் பண்டிகைகளை உண்டாக்கி விட்டுப் போயிருக்கிறார்கள் பெரியவர்கள். ஆனால் இன்றைய நிலையில் பல்வேறு காரணங்களினால் பண்டிகை நாட்களென்றாலே கிலி உண்டாகிறது பெண்மணிகளுக்கு. அதைப் பற்றி சிலர் அலசுகின்றனர்.



• உமா பிரபாகர்

மோகனா :

"பண்டிகைன்னா மனசிலே சந்தோஷம்தான். முக்கியமாக வீட்டிலே குழந்தைங்க அந்த நாட்களிலே உற்சாகமாக இருக்கிறதாலே நிறைவாகத்தான் இருக்குது. ஆனா விலைவாசி வேகமாக ஏறிக்கிட்டு வர வேகத்தைப் பார்த்தா எங்கேங்க நாம நினைக்கிற அளவுக்கு விசேஷங்களைக் கொண்டாட முடியுது? தெரிஞ்சவங்களையெல்லாம் கூப்பிட்டுக் கொண்டாடினாத்தான் அது பண்டிகை. ஆனா எங்களைப் பொறுத்தவரை பெரிய அளவிலே பண்டிகை கொண்டாடி வருஷக்கணக்காச்சு. வீட்டிலே இருப்பவங்களுக்கு மட்டும்தான் சிக்கனமாக விசேஷ சமையல். என்ன செய்ய, பொருளாதாரம் அப்படி. சொல்லப் போனா பண்டிகை நாள் நெருங்குதுன்னாலே போதும், மனக்குறையாலே "இதுமாதிரி விசேஷங்களைக் கூட விமரிசையாகக் கொண்டாட முடிவதில்லே உங்க சம்பாத்தியத்திலே"ன்னு புருஷன் கிட்டே எரிஞ்சு விழுவதும், பிறகு நானே வருத்தப்பட்டுகிறதும் தான் நடைமுறை ஆகிக்கிட்டு வருது."

கௌரி சுப்ரமணியம் :

"என் மாமியார் ரொம்ப ஆசாரமானவர். பண்டிகைகளையெல்லாம் சிரத்தையாகச் செய்வார். ஆனால் எனக்குத் திருமணமான ஐந்து வருடங்களிலேயே என் மாமனார் இறந்து போய் விட, மாமியார் ரொம்ப ஒடுங்கிப் போய்விட்டார். அதற்குமுன் பண்டிகைகளுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் என்னை விடாமல் தானே செய்து வந்த அவர், தன் கணவர் இறந்ததிலிருந்து பண்டிகைகளைக் கொண்டாடுவதில் துளியும் ஆர்வம் காட்டவில்லை. பண்டிகைகள் தொடர்பான பல சந்தேகங்களை நான் கேட்டபோதும் பதில் கூற மறுத்து விட்டார். இந்த நிலையில் பண்டிகைக் கொண்டாட்டம் என்றாலே ஏதோ குற்ற உணர்வு வர, எளிமை யாகவே செய்து விடுவது வழக்கமாகி விட்டது. தவிர சொல்ல முடியாத அளவுக்கு உடல்நலக் குறைவுகளும் சேர்ந்து கொள்ள, மிக முக்கியமான பண்டிகைகளை மட்டும் மிகக் குறைவான அளவில் கொண்டாடுவது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். மற்றபடி விமரிசையாகவும், சிரத்தையாகவும் பண்டிகை களைக் கொண்டாடுபவர்களைப் பார்த்து திருப்திபட்டுக் கொள்வதோடு சரி."



• பிரேமா நரசிம்மன்



• மோகனா

[illegible]

— [illegible]

[illegible] :

[illegible]

[illegible] :

[illegible]

— [illegible]

[illegible] : [illegible]

வீட்டிலேயே 'பாப்கார்ன்' தயாரிக்கலாமா?

திடீர் விருந்தினருக்குச் சொஜ்ஜி, பஜ்ஜி என்றுதான் பரிமாற வேண்டுமா? ஒரு மாறுதலுக்காக, சுடச் சுட 'பாப்கார்ன்' தயாரித்து அசர வைக்கலாமே?

ஆயிரக்கணக்கில் கொட்டி மிஷின் வாங்க வேண்டாம், 'பாப்கார்ன்' தயாரிக்க. நம் வீட்டிலுள்ள கேக் ஓவன், பிரஷர் குக்கர், கனமான இலுப்பைச் சட்டி போன்றவைகளைக் கொண்டே மிஷின் தயாரிப்பைத் தூக்கியடிக்கலாம்.

நான் 'பாப்கார்ன்' தயாரிக்கக் கேக் ஓவனைத்தான் பயன்படுத்துவேன். இது இல்லாதவர்கள் பிரஷர்குக்கரைப் பயன்படுத்தலாம்.

ப்ரஷர்குக்கர் இல்லாதவர்கள் சாதரான இலுப்பைச் சட்டியைக் கொண்டே தயாரிக்கலாம். இதற்குக் காப்பிக்கொட்டை வறுக்கும் வாணலிகூட போதுமானது. இதில் கொஞ்சம் மணலைப் போட்டு, நன்கு சூடேற்ற வேண்டும். பின், அடி கனமான பாத்திரத்தில் ஒரு ஸ்பூன் நெய் விட்டு, தேவைக்கேற்ப, உப்புத் தூள், மிளகாய்த் தூள் சேர்த்து, ஒரு கைப்பிடி மக்காச் சோளத்தைப் பாத்திரத்தில் போட்டு (Corn Flakes) மூடி விட வேண்டும். இல்லாவிட்டால், ஒரு பாப்கார்ன்கூட பாத்திரத்தில் நிற்காது. குதித்து கும்மாளமிட வெளியே வந்து விடும்.

சில நிமிடங்களில் பட்டாசு வெடிப்பதைப் போன்ற சப்தம் கேட்கும். இந்நிலையில் அடுப்பை அணைத்து விட வேண்டும். சில நிமிடங்கள் கழித்து திறந்து பார்த்தால் சோள வெண்பூக்கள் கண்ணையும், கருத்தையும் ஒரு சேர ஆக்ரமிக்கும்.

இதேமுறைதான் மற்ற இருவகைகளுக்கும். பிரஷர்குக்கரில் தயாரிக்கும் பொழுது வெயிட் போடக் கூடாது.

கேக் ஓவனுக்கு மூடி வேண்டாம். ஏனென்றால் அதிலேயே கேக் வைக்கும் துளை கொண்ட ஒரு தட்டு இருக்கும். அதுவே போதுமானது.

ஒரு பிடி கார்ன் ஃப்ளேக்ஸில் அரை சட்டி பாப்கார்ன் கிடைக்கும்.

(பி.கு) கேக் ஓவனில் மாவை நிரப்ப தட்டே இருக்கும். வேறு தட்டு அவசியமில்லை. குக்கருக்கு அவசியம் தட்டு தேவை. தட்டின்றி செய்தால் பாப்கார்ன் கருகி, காரியத்தையே கெடுத்து விடும். ஞாபகமிருக்கட்டும்.

-காந்தாமணி



ரம்யா 5

"ரம்யா வரல்லையா? அவங்கள்ளாம் போயாச்சா?" என்று தீனமான குரலில் மதுரம் கேட்டாள். ரவியால் கண்ணீரை அடக்க முடியவில்லை. விஜிதான் சமாளித்துக் கொண்டு, "அங்கே ரிசப்ஷன் வெச்சிருக்காங்களேம்மா. ரம்யா போகாட்டா எப்படி?

அடுத்த வாரம் ரெண்டு பேரையும் அனுப்பி வைக்கிறேன்னாங்க, அவ மாமியார். உங்களுக்கு ஒண்ணுமில்லேம்மா. ரெண்டு நாள்ல சரியாயிடும். அடுத்த வாரம் மாப்பிள்ளை வரச்சே எழுந்து விருந்தே பண்ணலாம். இல்லையா டாக்டர்?" என்று சிரித்தாள் விஜி.

"எஸ்... எஸ். புதுசா கல்யாணமானவங்க. அவங்க இருக்க முடியாதுன்னா, ரம்யாவை மட்டும் விட்டுட்டுப் போன்னு சொல்றது நியாயம் இல்லை. என்ன, நா சொல்றது சரிதானே?" என்று சிரித்தார் அதற்குள் வந்திருந்த டாக்டர். ஹனிமூன் போவதற்காக, ரம்யா அவர்களுடனேயே அவசரமாகக் கிளம்பி விட்டதாக மகாதேவன் சொல்லி இருந்தார் டாக்டரிடம்.

"ரவி... விஜி நீங்க ரெண்டு பேரும் இங்கேயே தங்கி மண்டபத்





தைக் காலி செய்து, காலையில் எல்லாருக்கும் கணக்கு தீர்த்துட்டு மெதுவா வாங்க. எனக்கு நல்லா தூக்கம்தான் வரது. வேறே பயப்படும் படி. ஒன்னும் இல்லை.

நான் பசங்களை வெச்சு மானேஜ் பண் ணிக்கறேன். இங்கே வேலை நீங்க இருந்தாத் தான் பொறுப்பா நடக்கும்'' என்றாள் மதுரம்.

டாக்டரின் காரிலேயே சௌகர்யமாக மதுரத்தைப் படுக்கவைத்து அழைத்துப் போய் விட்டார்கள்.

மாடியில் அலங்கரித்திருந்த அறையைப் பார்த்தபோது நெஞ்சு வலித்தது. ஜன்னலுக்கு வெளியே பிரமை பிடித்தது போல் பார்த்துக் கொண்டிருந்த ரவியின் தோளைத் தொட்டுத் திருப்பினாள். ஈரமாக இருந்த கண்களை புடை வைத் தலைப்பால் துடைத்தாள்.

''இப்ப எல்லாம் புரிஞ்சு போச்சுப்பா. பிரார்த்தனையெல்லாம் சும்மா. கிளம்பறச்சே அந்தம்மா எங்கிட்டே என்ன சொன்னா தெரி யுமா? 'எப்ப வந்தாலும் பச்சை செட்டோட வா!'

பச்சை செட் இப்ப போடலைங்கிறதை மனசுலே வெச்சுண்டு கடைசி நிமிஷத்துலே பிளானை மாத்திட்டா. அது வந்தாத்தான் இது

கோதா பார்த்தசாரதி

வும்கிற மாதிரி சொல்லாம சொல்லிட்டு போயிட்டார் அவர்.''

''முதல்லேயே சம்பந்தியம்மா அல்ப புத்தி தெரிஞ்சு போச்சு. அப்பவே அப்பாவிடம் பயப் படாமல் பேசி இதை நிறுத்தி இருக்கணும். சம யம் பார்த்து அம்மாவுக்கு உடம்புக்கு வந்தது. அம்மா ரொம்பப் பிடிவாதமா இருந்தா. என் னால தடுக்க முடியல்லை.''

ரவி குமுறினான்.

''சீ! வேணாம்பா. நல்லபடியாக் கல்யாணம் நடந்த இடத்துலே, இப்படி மனசைத் தளர விட்டு அழலாமா? எப்படியாவது பணம் புரட்டி பச்சை செட் வாங்கற வழியைப் பார்ப் போம். பிரார்த்தனைன்னு சொன்னதால் சங் கர் சும்மா இருந்துட்டார்.

கேவலம் ஒரு செட் நகைக்காக தன் உரி மையை விட்டுக் கொடுத்து விடுவாரா? எல் லாம் நல்லபடியா முடியும். கண்ணைத் துடை யுங்க. அம்மா வேறே மறுபடி படுத்துட்டாங்க. அம்மாவுக்கு இந்த விஷயம் தெரியவே கூடாது. அதிர்ச்சி கூடாதுன்னு டாக்டர் சொன்னாரே'' என்று தேற்றினாள் விஜி.

கட்டிலில் பதித்திருந்த கண்ணாடியில் கலைந்த தலையும், அழுது சிவந்த விழிகளும் களைத்துப் போன உடலுமாய் இருவர் உருவ

ழும் தெரிந்தது. கட்டிலைச் சுற்றி தொங்க விட்டிருந்த மலர்ச் சரங்கள் காற்றில் ஆடி மணத்தை அள்ளி வீசின.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் சமையல்காரரை மேலே வரச் சொல்லி பூ உட்பட எல்லாவற்றையும் அருகில் உள்ள குப்பத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கச் சொல்லி, ரவியையும் கூட அனுப்பினான். பால்கனி வழியாக குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிச் சாப்பிடுவதைக் கண்டு மனசுக்குள் ஒரு குட்டி சந்தோஷம், நிம்மதி எட்டிப் பார்த்தது.

"தாய்மார்களே! பணத்தைக் கொடுத்து ஒரு பொருளை வாங்கினால், அது வாங்கினவருக்குத்தானே சொந்தம்! கைநீட்டி வரதட்சிணைப் பணத்தை வாங்கியபின், பிள்ளை மாமனார் வீட்டோடு போய் விட்டான் என்று முணுகுவதில் அர்த்தம் இல்லை.

ஆடு மாடு போல் பிள்ளைகளுக்குப் பேரம் பேசாதீர்கள். மகனை, மகளை விற்காதீர்கள். வரதட்சிணை, சீர் என்றெல்லாம் கேட்டு வாழ வந்த பெண்ணை கொடுமைப்படுத்தாதீர்கள். உங்கள் வீட்டில் விளக்கேற்ற வந்த பெண்ணை ஸ்டவ்வில் எரியவிட்டு பெண்ணுக்குப் பெண்ணே யமனாக்காதீர்கள்!"

"சகோதரிகளே! நீங்களும் நேற்றைய மருமகளே. உங்கள் பெண்ணும் இன்னொரு வீட்டு மருமகளே! மருமகளாக நினைக்க வேண்டிய பெண்ணை நீங்கள் வாட்டினால், உங்கள் மகள் வீட்டில் ஸ்டவ் வெடிக்க எத்தனை நேரமாகும்?"

படபடவென்று கைதட்டும் ஒசை விடாமல் கேட்டது.

'ஹியர்-ஹியர்!' என்று பல குரல்கள் கேட்க பளிச்பளிச்சென்று காமிராக்கள் கண்சிமிட்டின. டீவி. காமிரா காமி ஈஸ்வரனின் ஒவ்வொரு அசைவையும் படம்பிடித்துக் கொண்டது. நாளைய செய்தி மலரில் வரும். இளப் காரியதரிசி மாலை போட்டு வணங்க, தலைவி வந்து கைகுலுக்கி வாழ்த்தினாள்.

மெம்பர்கள் பின்னால் வர, தலைவியும் காரியதரிசியும் இருபுறமும் நடந்து வர, போட்ட மாலையைக் கழற்றி முன் கைகளில் போட்டுக் கொண்டு ஒயிலாக நடந்து காண்டெசாவில் ஏறிக்கொள்ள, அவள் கை அசைவில் கார் சீறிப் பாய்ந்தது. தலைவியும் காரியதரிசியும் ஒரு காரில் ஏறிக்கொள்ள மற்ற மெம்பர்களும் புறப்பட்டனர்.

மிஞ்சியிருந்த நாலு பேரும் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தனர்.

"ம் சாத்தான் வேதம் ஓதுகிறது'ம்பாங்களே. அது இந்தம்மாளுக்குத்தான் பொருந்தும்" என்று வெறுப்புடன் சொன்னாள் விஜயா.

"ஆண்டு விழாவுக்கு இவங்களைக் கூப்பிட்டதே எனக்குப் பிடிக்கல்லை. சொல்றது ஒண்ணு செய்யறது ஒண்ணு!" என்றாள் சரோ.

"பெரிய மனுஷன் பெண்டாட்டியா இருந்தா மட்டும் போதுமா? அதுக்கு தக்கின பெருந்தன்மை வேண்டாமோ?" – கமலி.

"வரதட்சிணைக் கொடுமை, சீர்கேட்காதே அப்படின்னு பெரிசா மேடையிலே முழங்கினாளே, சொந்தப் பிள்ளை பைசா சீர் வரதட்சிணை இல்லாமல் சம அந்தஸ்து இல்லாத இடத்துலே கல்யாணம் பண்ணிண்டதுக்காக வீட்டை விட்டே விரட்டிட்டா."

"காமியை எனக்கு ரொம்ப நாளாத் தெரியும். நம்மையெல்லாம் போல் சாதாரணக் குடும்பம்தான். இது எல்லாம் இப்ப வந்த பணம் திடீர்னு ஒரு அதிருஷ்டம், பெண் பிறந்த வேளை ஈஸ்வரனை மேலே.. மேலே.. கொண்டு போயிடுத்து. இவங்களுக்கும் எங்களுக்கும் பொதுவா தெரிஞ்ச குடும்பம். காமி ஈஸ்வரனுக்கு ரொம்ப நெருங்கிய சிநேகம் கூட. பவானின்னு பேர் அந்தம்மாவுக்கு.

அவங்க பெண்ணுக்குத்தான் இவ பையன்னு பேசிண்டிருந்த காமி திடீர்னு பணம் வந்து அந்தஸ்து உயர்ந்ததும் ஆளே

திடீர் விருந்தாளி, தயிர்பச்சடி, பாயசத்துடன் சமைக்க வேண்டிய நிலை. அன்று பார்த்து தயிரைக் காலையிலேயே சிலுப்பி மோராக்கி விட்டேன். தக்காளி, பச்சை மிளகாயை பொடியாக நறுக்கி, உப்புப் போட்டு, கொஞ்சம் தேங்காயைத் துருவி நன்றாக கெட்டியாக அரைத்து மோருடன் கலக்கி தக்காளிக் கல்வையில் ஊற்றித் தாளித்தேன். சூப்பர் தயிர்ப் பச்சடி என்று பாராட்டுக்கள்.

– நிர்மலா குமார்



ATHREYA READYMADE BLOUSES

A SYMBOL OF STATUS

GIVES YOU A GREAT DEAL OF CONFIDENCE



"துணிவாங்கவது - தைக்க கொடுப்பது - திரும்பவும் ஓடுவது - திரும்பவும் ஓடுவது! திருப்தி இல்லாமல் திரும்புவது இனி வேண்டவே வேண்டாம். **ஆத்ரேயா** ரெடிமேட் ரவிக்கைகள் நீங்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் அழகாக அமைந்து விட்டது."

எவ்வளவோ பணம் செலவு செய்து வாங்கும் புடைவைகளுக்கு சரியான ரவிக்கைகள் அமைவதில்லை. இதை நாங்கள் நன்றாக புரிந்து கொண்டோம். ஆனையால்தான் விலை உயர்ந்த தரமான 2X2 துணியில் தயாரிக்கப்பட்ட எங்களது ரெடிமேட் ரவிக்கைகள் உங்களது மனதை கவரும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. சாதாரண ரவிக்கைகள் ஃபேன்ஸி ரவிக்கைகள் பலப்பல கலர்களில் உங்களுக்காகவே தயாரித்து வைத்திருக்கின்றோம். ஒருமுறை எங்களது ரெடிமேட் ரவிக்கைகளை அணிந்து பாருங்கள் பிறகு தெரியும் உங்களது தோற்றத்தில் மிகவும் அழகான மாற்றம் - ஒரு தன்னம்பிக்கை.

"புடைவையை வாங்கி விட்டு ரவிக்கைக்கு அலையும் காலம் போய்விட்டது. **ஆத்ரேயா** ரெடிமேட் ஃபேன்ஸி ரவிக்கைகள் வாங்கிவிட்டு பிறகு புடைவையை வாங்கும் காலம் வந்து விட்டது.

1. தாங்கள் போட்டு பார்ப்பதற்காகவே இரண்டு பிட்டிங் ரூம்கள்.
2. நீங்களே உங்கள் ரவிக்கைகளை தேர்ந்தெடுக்கும் வசதி.
3. வாங்கும் ரவிக்கைகளில் ஏதேனும் சிறிது ஆல்ட்ரேஷன் இருந்தால் அதை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் அனுபவம்.
4. உங்களுடன் அன்புடன் பழகும் எங்களது பெண் விற்பனையாளர்களின் உன்னதமான சேவை.

இவை அனைத்தையும் கொண்டது இந்தியாவின் மிகப் பெரிய பிரத்யேகமான READYMADE BLOUSE SHOW ROOM — "ATHREYA".

ATHREYA GARMENTS A/C.

வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
(ஹோட்டல் ராஜ் எதிரில்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034. போன் : 8271516.

வேலை நேரம் : காலை 10.00 முதல் இரவு 8.00 மணி வரை ஞாயிறு விடுமுறை

சென்னையில் எங்களது ரவிக்கைகள் கிடைக்கும் மற்றொரு இடம் :

கல்பனா டெக்ஸ்டோரியம்

(ஆஞ்சநேயர் கோயில் பஸ்நிலையம் அருகில்), நங்கநல்லூர், சென்னை 600 061. போன் : 2331311



காய்ந்த மிளகாயை மிக்ஸியில் போட்டு அரைக்கும் போது சரியாக அரைபடாது. மிளகாயுடன் சிறிது கல் உப்பும் சேர்த்து அரைத்தால் நைசாக அரைபடும்.

– எஸ். விஜயா சீனிவாசன்

மாறிட்டா. பையன் கொஞ்சம் மனசாட்சிக்குப் பயந்தவன் போலிருக்கு. அம்மா பெரிய ஜட்ஜ் வீட்டு சம்பந்தம் பேசி இருக்கச்சே, அந்தப் பெண்ணையே கல்யாணம் பண்ணிண்டு மாலையும் கழுத்துமா வந்துட்டான்.

கல்யாணம்னு ஆயிட்டா அம்மா மனசு இறங்கிடும்னு நெனச்சான் போலிருக்கு. இந்தம்மாவுக்குக் கல் நெஞ்சு. வீட்டுப்படியேறாதேன்னு கதவைச் சாத்திட்டா."

"எங்க வீட்டுக்கிட்டதான் அந்தப் பையன் வாடகை வீட்டிலே குடி இருக்கான். அரண்மனை மாதிரி வீடு. ஏவின வேலைக்கு ஆளும் படையும் ஆளுக்கொரு காருமா இவ தொழிக்கறா. ஒண்டுக்குடியில் அந்தப் பையன் ஒழைச்சு சம்பாதிக்கண்டு வரதுலே ரெண்டு குழந்தைகளை வெச்சிண்டு அந்தப் பெண் சிரமப்படறது."

ஈஸ்வரன் ஒரு பிரபல கம்பெனியில் மானேஜராக இருந்தார். அங்கு புதிதாக வந்தவர் சுந்தரேசன். அவருக்குத் தங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டையே வாடகைக்கு வாங்கிக் கொடுத்து பலவிதங்களிலும் உதவியாக இருந்தவள் சிவகாமி.

சேகர் பிறந்து மூன்று வருஷங்களாயிருந்தன. சுந்தரேசன் பவானி அப்போதுதான் கல்யாணமானவர்கள்.

"என் பிள்ளைக்கு முதலில் ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடு. அப்புறம் பிள்ளை பெத்துக்கோ!" என்று உரிமையுடன் கேட்குமளவு சிவகாமியும் – பவானியும் நேசமாகப் பழகி வந்தனர்.

யாருடைய கண் பட்டதோ?

கம்பெனியில் காலவரையறை இன்றி ஸ்டிரைக், தொடர்ந்து லாக்-அவுட் பிறகு கம்பெனியே மூடும்படியான நிலைமை வந்தபோது, இரு குடும்பமும் தவித்தது. அப்போது வரவுக்குள் செலவு செய்து, கொஞ்சம் சேமித்தும் வைத்திருந்த பவானி, சிவகாமிக்கும் தேவையான போது கொடுத்துதவினாள்.

வேலைக்குப் போகும் போது கம்பெனியில் கொடுத்த பணம் கொஞ்சம் இருந்தது. அதை முதலீடு செய்து சின்னதாக ஒரு தொழிலைத் துவங்கினார் ஈஸ்வரன்.

அதிருஷ்ட தேவதை அவரைக் கண் கொண்டு பார்க்க நினைத்து விட்டாளோ, அல்லது அருணா பிறந்த நேரமோ, தொழில் சூடு பிடித்துக் கொண்டு லாபத்தை அள்ளிக் கொட்டியது. நாளடைவில் மேலும் மேலும் வளர்ந்து குட்டி போட்டு இன்னும் பல கிளைகளாக விரிந்தன.

ஈஸ்வரன் கோடீஸ்வரன் ஆனார். நீண்ட நாள் கழித்துப் பிறந்த பெண் என்பதால் அருணாவிடம் உயிரையே வைத்திருந்தார். சேகர் அம்மா பிள்ளை. பிஸினஸ், கம்பெனி என்று அதன் வெற்றிக்காக மேலும் வெறிபிடித்தவர் போல் அலைந்ததால் வீட்டில் தங்கவே முடியவில்லை.

இடையில் ஒரு விபத்தில் சுந்தரேசன் இறந்து விட, பவானி தன் ஒரே பெண் குழந்தையான ராதாவுடன் தனித்து விடப்பட்டாள். கம்பெனியில் கொடுத்த தொகையைக் கொண்டு தான் இருந்த வீட்டையே வாங்கிப் போட்டிருந்தார் சுந்தரேசன்.

ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு விட்டு, வேறு ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்திருந்தார் சுந்தரேசன். அவரையும் தன் தொழிலில் கூட்டாளியாகச் சேரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார் ஈஸ்வரன்.

"அண்ணா, உங்க மனோபாவமே வேறே. என்னுது வேறே. உங்களுக்கு எதையும் துணிஞ்சு செய்து பார்க்கணும்கிற சுபாவம். எனக்கு எதுக்கும் பயம். இருக்கிற பணத்தை இன்வெஸ்ட் பண்ணி நஷ்டம் வந்துட்டா என்று தோன்றுகிறது.

"எனக்கு என்ன, ஒரே பெண் குழந்தை அவளும் உங்க மாட்டுப் பெண்ணா வரப் போறா. அப்புறம் எனக்கு என்ன குறைச்சல்?" என்று மறுத்து விட்டார் சுந்தரேசன்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தயக்கத்துடன் தன் கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்த சிவகாமி, நாளடைவில் அவராலேயே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நாகரிகத்தின் சிகரத்தில் இருந்தாள். முதல் காரியமாக சிவகாமி என்ற பெயரைச் சுருக்கி காமி என்று தன்னை எல்லோரும் அழைக்கும்படி மாற்றிக் கொண்டாள்.

ஆனால் ஈஸ்வரனோ சௌகர்யமும் வசதியும் இருந்ததால் ஒரு இரவுக்கு மேல் எங்கும் தங்காமல் பிளேனில் பறந்து வந்து விடுவார். ஒருநாள் விட்டு விட்டுப் போனதை ஈடுசெய்

ESTD :1959

ஸ்ரீ குருராகவேந்தராய நமஹ

37 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்

16 நாட்கள் கொண்ட ஏழு ஜோதிலிங்க யாத்திரை

சென்னையிலிருந்து 22.10.96 காலை 9.35க்கு நவஜீவன் எக்ஸ்பிரஸ் மூலம் பிரயாணம். உஜ்ஜெயினி - ஓம்காரம் -பூனா - பீமாசங்கரம் - நாசிக் - பஞ்சவடி - திரியம்பகம் - ஷிரிடி - சனி சிங்களாப்பூர் - குஸ்ரனேஸ்வரம் - எல்லோரா - பரலிவைத்தியநாதம் - நாகநாதம் - பண்டரிபுரம் - ரயில் கட்டணம் டிபன், காப்பி, சாப்பாடு உட்பட நபர் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 3500/- குறைந்த சீட்டுகளே உள்ளன.

12 நாட்கள் கொண்ட தீபாவளி கங்காஸ்நான யாத்திரை

சென்னையிலிருந்து 1.11.96-ல் கல்கத்தா மெயிலில் பிரயாணம். பூரி - புவனேஸ்வர் - கோனார்க் - காசி - கயா - அலகாபாத். ரயில் கட்டணம், டிபன், காப்பி சாப்பாடு உட்பட ரூ. 2750/- (குறிப்பு : 5 நாட்கள் அதிகம் நேப்பாள் போய் வர ரூ. 1000/- தனியாக செலுத்த வேண்டும்). எமது 38வது ஆண்டு விழாவை முன்னிட்டு காசி விஸ்வநாதருக்கு மேளதாளத்துடன் மிகப் பெரிய பால் அபிஷேகம், அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். இவ்வளவு குறைந்த கட்டணத்தில் ஆண்டு விழாவை முன்னிட்டு லாபத்தை கருதாமல் செய்கிறோம். குறைந்த சீட்டுகளே உள்ளன.

4 நாட்கள் ஆந்திரா பிரயாணம் டீலக்ஸ் பஸ்ஸில்

சென்னையிலிருந்து 25.10.96 இரவு 10 மணிக்கு ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சன்னதியிலிருந்து பஸ் புறப்படும். மந்த்ராலயம் - ஸ்ரீசைலம் - மஹாநந்தி - அஹோபிலம். பஸ் கட்டணம் டிபன், காப்பி, சாப்பாடு உட்பட ரூ. 650/-

மேலும் விவரங்களுக்கு : **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்,**

29, ஆரிமுத்து ஆசாரி தெரு (விவேகானந்தர் பஸ் நிலையம் அருகில்)

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. போன் : 8554538

உரிமையாளர் : வி. சுப்பாராவ்

AD START

MAFATLAL
FAMILY SHOP

PRESTEIGE
GANDHIPURAM

SWAGATH
SAIBABA COLONY, COIMBATORE.

FINER POINTS
SUITINGS

EL ROMANO
PREMIUM SHIRTINGS

TRENDZ
READYMADES

Shalini
BLOUSE MATCHING AND SAREES

L.S.MANI

GREAT LOOKS

Elysée

GREAT PRICE

SHIRTS & TROUSERS

FROM

COATS VIYELLA INDIA LIMITED

EXCLUSIVE SHOWROOM

LIBERTY COLLECTIONS

BIG BELL COMPLEX, OPP. ANZ BANK
D.B. ROAD, R.S.PURAM, COIMBATORE -2.


ALSO AVAILABLE AT

LIBERTY STORES

1. GANDHIPURAM 2.R.S.PURAM
3.SAIBABA COLONY COIMBATORE.

L.S.MANI

பிள்ளையார் சதுர்த்திக்குக்
காலையில் கொழுக்கட்டை மோதகம்
செய்தபின் தேங்காய், வெல்லப் பூர்ணம் தீர்ந்து
விட்டது. பால் கடையில் வாங்கி வந்த பால்பேடா
மோதகங்கள் இருந்தன. அரிசி மாவுக்
கிண்ணங்களில் இந்த மோதகத்தை வைத்து
மூடி, நீராவியில் சில விநாடிகள் வைத்து எடுக்க,
ருசியான மோதகங்கள் கிடைத்தன.
- லட்சுமி சுந்தரம்



வது போல் அருணாவுடனேயே இருப்பார். மறு படி. மறுநாளே வேறு எங்காவது பறக்க வேண்டியிருக்கும்.

இப்படி இருவரும் பிரிந்து சேர்ந்தாலும், அப்பா மீண்டும் திரும்பி வந்து பொழுதும் அன்பை கண் விழிக்கு முன் போய் இரவு அவள் தூங்கியபின் வரும் அம்மாவிடம் காண முடியவில்லை. என்றாவது அபூர்வமாகச் சீக்கிரம் வந்தால் கூட குழந்தையின் அருகில் உட்கார்ந்து அன்பாகப் பேச மாட்டாள். ஈஸ்வரனின் அன்பிலே அருணா வளர்ந்தாள்.

அதே போல பவானியின் மகள் ராதாவும் பி.காம். முடித்திருந்தாள். அம்மாவின் சிரமத்தைக் குறைக்க வேலை பார்க்க நினைத்தாள்.

"கோடீஸ்வரன் வீட்டு மாட்டுப் பொண்ணும்மா நீ. உன்னை வேலைக்கு அனுப்பினால் உன் மாமனாரும் சேகரும் கோபப்படுவாங்களே!" என்றாள் கிண்டலாக பவானி.

"கனவுலகத்துலேருந்து கொஞ்சம் நிஜ உலகத்துக்கு இறங்கி வா, அம்மா! நீதான் அவங்களைப் பத்தி புலம்பிண்டிருக்கியே தவிர அவங்கள்ளாம் நம்மை அடியோடு மறந்துட்டாங்க. அத்தையோ மாமாவோ இங்கே வந்து வருஷக் கணக்காகிறது. மாமாவாவது எத்தனை வேலை இருந்தாலும் வாரத்துக்கு ஒருமுறை ஏதுவோ கடமை மாதிரி ஹலோ செல்லி உன்னை, என் படிப்பை விசாரிப்பார்.

அத்தை அது கூட கேட்பதில்லை. அம்மா உனக்குத் தெரியும். நம்மோட எவ்வளவு அன்பாப் பழகின அத்தை இப்ப எப்படி இருக்காளு? ஆனா நீ உண்மையை சந்திக்க பயப்படறேம்மா. பயந்துண்டு திரை போட்டு மூடறே! உனக்குத் தெரியுமாம்மா? சேகருக்கு என்னோட படிக்கிற ஜட்ஜ் வீட்டுப் பெண்ணைப் பேசிகிட்டிருக்காங்க அத்தை!"

மேலே பேச முடியாமல் விம்ம ஆரம்பித்தாள் ராதா.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த பவானி வருந்தினாள். இந்தப் பிஞ்சுகள் நெஞ்சில் அன்நாடகம் சொல்லிச் சொல்லியே அன்பை வளர்த்து விட்டு இப்போது வெட்டிப் பிரிப்பதா? அண்ணா ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டார். மன்னியும் பாவம் பெற்ற தாய் அல்லவா? பெரிய இடம் வாய்க்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் தவறு இல்லை.

இனி காலதாமதம் செய்யக் கூடாது.

சேகரும் ராதாவும் அடிக்கடி வெளியில் சந்தித்துத் தங்கள் காதலை வளர்த்துக் கொண்டிருந்தனர். வாரந் தவறாமல் ஞாயிறு அன்று வீட்டுக்குச் சென்று பவானியைப் பார்த்துப் பேசி கொஞ்ச நேரம் இருந்து விட்டு வருவான். அவனுடன் அருணாவும் வருவாள்.

சேகர் - ராதா சந்திப்பது பவானிக்கும் தெரியும். ராதா தாயிடம் எதையும் மறைப்பதில்லை. அவர்கள் பண்பில் அவளுக்கு நம்பிக்கை உண்டு. அதனால் எதுவும் சொல்லவில்லை. அவர்களும் அந்த நம்பிக்கைக்குப் பழுது வராமல், அத்துமீறிப் பழகாமல், கண்ணியமாகவே நடந்து கொண்டார்கள்.

அவனும் தன் மேல் படிப்பை அப்போது முடித்திருந்தான். அவனை அமெரிக்காவுக்கு எம்.பி.ஏ. மேல் பயிற்சிக்கு அனுப்ப நினைத்திருந்தார். எல்லாரும் ஒன்றாக மனப்பூர்வமாக எப்போதோ நிச்சயித்த திருமணம்தானே, அவன் போகுமுன் கல்யாணத்தை நடத்தி இருவரையும் ஒன்றாக அனுப்பினால் போகிறது என்று நினைத்தார் ஈசுவரன்.

பவானியின் உடல்நிலை மேலும் மேலும் மோசமாகி வருவது அவருக்குத் தெரியாது. கொஞ்ச நாளாக போனில் கூட பேச முடியாத படி ஒரு எஸ்டேட் வாங்க அலைந்து கொண்டிருந்தார். சேகர்தான் அடிக்கடி போகிறானே என்று இருந்து விட்டார்.

ஒருநாள் பொறுக்க முடியாமல் வெட்கத்தை விட்டு காமி வேறு இடம் பார்ப்பதாகக் கேள்விப்பட்டதைச் சொல்லி, தன் இறுதிக் காலத்துக்குள் பல வருஷங்களுக்கு முன் கொடுத்த வாக்கை நிறைவேற்றினால் நான் நிம்மதியாகப்

தீராத இடுப்பு வலி, கழுத்து, தோள், மூட்டு வலியா?

மூளைக்கட்டி - கை, கால் செயலற்றவர் சுகம்!



திரு. V.K.ஹிரண்யராவ் (வயது 69) 100/2, கண்ணன் நகர், 2-வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 61. (பிரில்லியண்ட் ஸ்கூல் பக்கம்) இவருக்கு மூளையின் இடப்பக்கம் செல்கள் கெட்டு கட்டியானதால் (Infarct) வலது கை, கால், நாக்கு செயலற்றன. நவீன மருத்துவத்தில் கைவிடப்பட்டார். எமது 40 நாள் சிகிச்சையில் இப்போது கை, கால் சரியாகி நாக்கும் பேச வந்துவிட்டது. இதுபோல் கைவிடப்பட்ட பலர் குணம் பெற்று வருகிறார்கள். கழுத்து எலும்பில் C4 to C7 மற்றும் Lumbar Vertebrae-வின் குறிப்பாக L4, L5, S1, S2 இணைப்பு எலும்புகள் தேய்வு (Degenerative Changes) காரணமாக கழுத்து வலி (Cervical Spondylitis), இடுப்பு முறிவது போல் வலி (Lumbago), இடுப்பு முதல் தொடை, கால் நரம்புகள் இழுப்பது, குடைவது போன்ற வலி (Sciatica) , மூட்டுகளில் வீக்கம், வலி, (Synovitis, Arthritis) கால்களில் மதமதப்பு, மரத்துப் போதல், Toilet-ல் உட்கார்ந்து எழுவதில் மிகுந்த கஷ்டம், கை, கால்கள் நடுக்கம், (Parkinson-ISM) கைகளை உயர்த்த, கால்களை நீட்டி மடக்க முடியாமை, கால் பாதங்களில் வீக்கம், பக்கவாதம், இளம் வயதிலேயே கால்கள் சூம்புதல் / செயலற்று போவது. இன்னும் எத்தனையோவிதமான நரம்பியல் வாத நோய்களுக்கு அபூர்வமான சித்தர் குரு மருந்து சிகிச்சை அளிக்கிறோம். இவைகளுக்கெல்லாம் வெறும் வலி நிவாரண மாத்திரைகளை மட்டும் சாப்பிட்டுக் கொண்டு காலத்தை கடத்துவது தவறு. Physiotherapy /Plastry/Oil Massage சிகிச்சைகளில் ஓரளவே குணம் பெற்றவர்களும் எமது குருமருந்து சிகிச்சையில் 99% பேர் முழுமையான குணம் பெற முடியும்! **எமது சிகிச்சையில் ஆஸ்துமா தீராத நோய் அல்ல. சிகிச்சைக்குப்பின் ஐஸ்கிரீம் கூட சாப்பிடலாம். Oil Bath-ம் எடுக்கலாம்!**

வலிப்பு நோய், T.B., கல்லீரல் வீக்கம், Hepatitis சிறுநீரக கோளாறுகள், நீரடைப்பு, கல்லடைப்பு, அடிக்கடி சிறுநீர் கழிதல், வெண் படைகள், பிடிவாதமான தோல் நோய்களுக்கும் சிறப்பு மருத்துவம் உண்டு!

நவோதயா சித்தர் மருத்துவமனை,

20, ஆற்காடு ரோடு (மாடியில்), கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(லிபர்டி பஸ் ஸ்டாப், சேகர் எம்போரியம் அருகில்) போன் : 4810752 / 8551258 (வீடு)

அக்டோபர் மாதம் கோவையில் டாக்டரை சந்திக்க 15-ந்தேதிக்குள் முன் பதிவுக்கு கடிதம் எழுதுக / போன்: 440235 (P.P.)



RAMACHANDRA SAREES

(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

H.O. No.37-B Arya Gowder Road, Postal Colony Bus Stop West Mambalam, Madras -33. Ph : 4896532

Bus Route : 12G, 11G, 11H, 49A, 5T, 49, 9A

B:O: No: 2, R.K. Mutt Road, Picnic plaza (Basement shop) Luz corner, Mylapore, Madras - 600 004.

எங்களிடம் பெங்கால் காட்டன், வெங்கடகிரி Bathik, கோரா, காட்டன் புடவைகளும் கிடைக்கும்.


வழங்குவோர் : ராமசந்திரா சாரீஸ். 20-B பழைய குயவர்பாளையம் ரோடு. மதுரை - 9.

Working Hours 10.00 A.M. to 8.30 P.M.

(1.10.96 முதல் 6.10.96 வரை சிறப்பு தள்ளுபடி Mylapore கிளையில் மட்டுமே)

உயர்ரக மதுரை சுங்குடி புடவைகளின் விற்பனையாளர்கள்

என்ன இருந்தாலும் "ராமசந்திரா" சுங்குடி புடைவை உடுத்திற சுகம் அலாதிதான் போ. தரம், டிசைன், மங்களகரம்... இன்னும் 'சொல்லிண்டே போகலாம்' பல பேர் வாங்குகிற காரணம் இப்பத்தான் புரியுது. நீயும் அங்கேதான் வாங்கியிருக்கிறே; பார்த்தாலே தெரியுதே கண்ணுக்கு லட்சணமா!



யோகக்ஷேமம்

(a welfare organisation in association with)

யோகக்ஷேமா நிரந்தர நிதி லிமிடெட்

(மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது)
23, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்
சென்னை -- 600 033. ✆ : 484 8652.

கல்யாண யோகம் (முகூர்த்த நிதி)

உங்கள் அன்புக்கும், ஆசைக்கும் உரித்த பெண்ணின் திருமணத்தை பற்றிய கவலை இனி உங்களுக்கு தேவையில்லை.

ரூ. 1500 ஒரே முறையிலோ அல்லது 12 மாதத்திற்கு ரூ. 125, விதமோ கட்டி ரூ. 1,00,000 திருமணத்திற்காக 20 ஆண்டுகள் கழித்து பெறுங்கள்.

பிஸி மனி பாலிஸி

இனி நீங்கள் பணத்தேவைக்காக சீட்டு கம்பெனியை நாடிச் செல்ல வேண்டாம். மாதம் ரூ. 1,250 விதம் 12 மாதங்கள் கட்டினால் போதும். குறைந்த வட்டியில் ரூ. 1,00,000 கடனாக 13வது மாதத்தில் பெறலாம்.

நிரந்தர ஓய்வூதியம்

ரூ. 250/- ஒருமுறை செலுத்தி 30 ஆண்டுகளுக்கு பிறகு 1000/-பென்சனாக தருகிறோம்.
ரூ. 500/- ஒருமுறை செலுத்தி 20 ஆண்டுகளுக்கு பிறகு 1000/-பென்சனாக தருகிறோம்.
ரூ. 1500/- ஒருமுறை செலுத்தி 15 ஆண்டுகளுக்கு பிறகு 1000/-பென்சனாக தருகிறோம்.
ரூ. 6000/- ஒருமுறை செலுத்தி 10 ஆண்டுகளுக்கு பிறகு 1000/-பென்சனாக தருகிறோம்.

ஆத்ம சாந்தி

ரூ. 1,000 செலுத்தினால் அந்திம கிரியைக்காக ரூ. 5,000 குடும்பத்தில் ஒவ்வொரு நபருக்காகவும் வழங்குகிறோம்.

அதிவேக மாதாந்திர வருமான திட்டம்

மாதம் ரூ. 100 விதம் 48 மாதங்கள் கட்டினால் போதும். 49வது மாதத்திலிருந்து ரூ. 100/-மாதமாதம் உங்கள் வாழ்நாள் முடிய பெறலாம். அல்லது ரூ. 3000/- ஒரே முறையாக பெறலாம். இதில் சேருபவர்களுக்கு 20 ஆண்டுகள் முடிந்ததும் மாதாந்திர பென்ஷனாக ரூ. 1,000/- கொடுக்கப்படும். (இது ஒரு பரிசு) இதில் சேருபவர்களுக்கு கடன் வசதி உண்டு.

வாருங்கள், சேருங்கள், பயன்பெறுங்கள்

எங்களது சேவைப்பிரிவுகள்

திரு. சீனிவாசமூர்த்தி, (பிரான்ஸ் எக்ஸ்பிரஸ்) 5, கங்குராம செட்டி தெரு
2வது மாடி, சென்னை - 01. ✆ : 583748.
திரு. நாகராஜன், 30 A. வேது தெரு, பாலாஜி நகர்,நங்கநல்லூர், சென்னை - 61
திரு. வீரராகவன், 5, ராஜராஜேஸ்வரி நகர்,கூத்தப்பாக்கம், கடலூர் - 02.
திரு. முருகேசன், 1/1D, கோவிந்தர் ராய் லேன், கல்கத்தா - 46,

ஆத்மசாந்தி நிகேதன் - முதியோர் இல்லம் கூடியவிரைவில் ஆரம்பமாகிறது. முற்றிலும் பிராமண சம்பிரதாயத்தில் இயங்க இருக்கிறது. சேர விரும்புபவர்கள் அணுகவும்.

போவேன் என்று சேகரிடமே சொல்லி அனுப்பினாள்.

ஈஸ்வரன் ஊரில் இல்லை. அன்றுதான் ஜட்ஜ் ஜம்புலிங்கத்தின் பெண் ஷாலினியை சேகருக்கு பேசி முடித்துக் கொண்டு மறுநாள் பெண் பார்க்க அப்பா பிள்ளை இருவரையும் அழைத்து வருவதாக சொல்லிவிட்டு வந்திருந்தாள் காமி. சேகர் வந்து விஷயத்தைச் சொன்னவுடன் சீறினாள்.

"உன்னையே தூது அனுப்பினாளாக்கும்! வந்து சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? பெரிய இடத்துப் பையன்னா எல்லாரும் வளைச்சு போடத்தான் நினைப்பா. உனக்கு ஏண்டா அந்த அன்னக்காவடி? ரதி மாதிரி ஜட்ஜ் பெண்ணைப் பார்த்து வெச்சிருக்கேன்..."

சேகர் மனம் கொதித்தது. அம்மாவா இப்படி...?

"அம்மா ப்ளீஸ் இது அடுக்குமா? மாமாவுக்கு மரணப்படுக்கையில் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டீர்களா? எங்கள் நிலையை யோசித்துப் பார்த்தீர்களா? அல்லும் பகலும் எங்கள் மனத்தில் அன்பை மலர வைத்தது நீங்கள்தானே?

இப்போது ஏன் பின்வாங்கணும்? கேவலம் பணம் வந்து விட்டதால மரணத்தின் வாசலில் நிற்கும் அத்தையின் மனதை உடைத்து விடாதீர்கள். பணத்துக்காக எங்க ரெண்டு பேரையும் பிரிச்சுடாதீங்கம்மா!" என்று கெஞ்சினான்.

எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல், நிச்சயதார்த்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, ஈஸ்வரன் வரவுக்காக காத்திருந்தாள்.

தன் வாழ்க்கைப் பிரச்னையான கல்யாணத்தில் கூட தனக்கு உரிமை கொடுக்காமல் தன் பிடிவாதத்தில் உறுதியாக இருக்கும் காமிக்கு புத்தி கற்பிக்க எண்ணினான் சேகர்.

பேசாமல் யாருக்கும் தெரியாமல் கோயிலில் தாலிகட்டி விட்டால்...? ராதா பயத்தில் பேச்சே வரவில்லை. பவானியும் கண்டிப்பாக இதை அங்கீகரிக்க மாட்டாள். மாலையும் கழுத்துமா போய் நின்னா வேறு வழி இல்லாமல் ஏற்றுக் கொண்டுதானே ஆகணும்?

இப்படிப் பலவிதமாகப் பேசி ராதாவை மசிய வைத்து விட்டான். திருநீர்மலையில் சில நண்பர்கள் உதவியுடன் கல்யாணம். பிறகு பதிவுத் திருமணமும் செய்து கொண்டு மாலையும் கழுத்துமாக வீடு வந்தான். அன்று அபூர்வமாக காமி வீட்டில் இருந்தாள்.

"என்ன துணிச்சல் இருந்தால், இப்படி ஒரு காரியம் செய்து விட்டு என் முன் வரத் துணிவாய்? எல்லாம் அந்தப் பாவி உன்னை இப்படித் தூண்டி விட்டிருக்கிறாள். வயசுப் பெண்ணைக் கண்டதும் நீயும் மயங்கி விட்டாய். என் முகத்தில் விழிக்காதே. போ! இனி நீ எனக்குப் பிள்ளையும் இல்லை. நான் உனக்கு அம்மாவும் இல்லை!" என்று தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

சேகர் போட்ட கணக்கு தப்பாகி விட்டது.

பவானியிடம் இவர்கள் போகும் முன்பே விஷயம் போய் விட்டது. இதுநாள்வரை ஒரு முறை கூட போன் பண்ணாத காமி, பக்கத்து வீட்டு போனில் பவானியைக் கூப்பிட்டு கண்டபடி திட்டித் தீர்த்து விட்டாள். பவானி வாய் அடைத்துப் போய் எதுவுமே பேசாமல் அழுதபடி போனை வைத்து விட்டு வந்து விட்டாள்.

மணக்கோலத்தில் அவர்களைப் பார்த்து மகிழ்ந்தாலும், உயிர்த் தோழியான காமியும், உற்ற நண்பரான ஈஸ்வரனும் மனமுவந்து திருமணத்தை அங்கீகரிக்கவில்லையே என்ற குறைதான் பவானிக்கு. ஈஸ்வரன் திரும்பியதும் எல்லாம் நேராகி விடும் என்று அவளும் நம்பினாள்.

"நடந்தது நடந்து விட்டது. நாம் ஏற்கெனவே நினைத்ததுதானே? நாமே சொல்லிச் சொல்லியே இந்த எண்ணத்தை வளரவிட்டு விட்டோம். சமாதானமாக அழைத்து வந்து நல்லபடி வாழ்க்கையை அமைத்துக் கொடுப்போம்" என்றார் ஈஸ்வரன்.

தான் கிழித்த கோட்டைத் தாண்டாத பிள்ளை, தன் பேச்சை மீறிக் கல்யாணம் செய்து கொண்டது காமியின் ஈகோவுக்குப் பெரிய அடி! ஜட்ஜ் வீட்டில் தலைகுனிவு. தன் நண்பர்கள் நடுவில் எத்தனை பெரிய அவமானம்! இத்தனைக்கும் காரணமான பவானியின் பெண் இந்த வீட்டில் நுழைவதா?

காமி பிடிவாதமாக இருந்தாள். வீட்டில் சண்டை வலுத்தது. காமி அடிக்கடி மயங்கி

தோசை மாவு ஒரு கரண்டி போல் மிஞ்சியிருந்தது. அத்துடன் ஒரு கரண்டி கடலை மாவு போட்டு, வெங்காயம், பச்சை மிளகாய், மல்லித்தழை நறுக்கிப் போட்டு, தோசையாக வார்த்து, பின் அவைகளை சிறிய இலை அளவாக நறுக்கி ஏற்கெனவே செய்து வைத்திருந்த மோர்க்குழம்பில் போட, அந்தத் தோசை மோர்க் குழம்பை குழந்தைகள் விரும்பிச் சாப்பிட்டார்கள்.

- பூர்ணிமா பாலன்



விழுந்தாள். டாக்டர் வந்தார். பிளட் பிரஷர், ஹார்ட் வீக், ஹிஸ்டீரியா என்று ஏதேதோ சொல்லி ஏகப்பட்ட டெஸ்ட் எடுத்து, நீளமாக மாத்திரை மருந்து எழுதிக் கொடுத்து, அதிர்ச்சியான எந்த விஷயமும் அவள் காதில் போடக் கூடாது என்று ஒரு குண்டையும் வீசி விட்டுப் போனார்.

இதனால் அவர் மீண்டும் சேகரை அந்த வீட்டுக்குள் அழைக்க முடியாமலேயே போய் விட்டது.

ஈஸ்வரனும் வரவில்லை என்றதும் மனம் உடைந்து படுத்த படுக்கையான பவானி, அந்தக் குறையுடனேயே தன் இறுதி மூச்சை விட்டாள். அவள் ஆசைப்பட்டபடி அந்தத் தகவல் ஈஸ்வரனுக்கு அறிவிக்கப்பட்டது. வீட்டு நிலைமை, அம்மா படுத்தது, உடல் நிலவரம் எல்லாம் சேகருக்குத் தெரியும்.

காமிக்கு உடம்பு கொஞ்சம் தேறி ஈஸ்வரன்



முறுக்கு, சீடை மற்ற பலகாரங்கள் வெடித்து சிதறாமல் இருக்க உப்பை நீரில் கரைத்து விட்டு உபயோகியுங்கள். (அ) எண்ணெயில் மாவை போட்டவுடன் ஒரு அகலமான தட்டினால் வாணலியை மூடி, அடுப்பையும் 'சிம்'மில் வைத்து விடுங்கள். வெடித்துச் சிதறாது.

— ஜெயா

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஆபீஸ் வர ஆரம்பித்து இருந்தார். அதனால் ஆபீசுக்கே போன் செய்தான். ஈஸ்வரன் ஓடோடி வந்தார். உயிர்த் தோழனின் மனைவி அனாதரவாக உயிர் துறந்ததும், சேகரும் ராதாவும் அனாதை போல் தனியாக நிற்பதும் அவர் மனதை வாட்டியது.

வேண்டிய பொருளுதவி செய்வதாகவும் சௌகர்யமாக வாழும்படியும் சொன்னார்.

"அப்பா, பணத்தைக் கொடுத்து நம் உறவைக் கொச்சைப்படுத்தாதீர்கள். அப்பா! பெற்றவர்கள் அன்பில் மூழ்கி ஆனந்தமாக வாழ வேண்டிய நாங்கள் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை. அம்மா மனதார ஆசீர்வதித்துக் கொடுக்காத பணம் எனக்கு வேண்டாம்.

நீங்கள் கொடுத்த கல்வியே பெரும் செல்வம். அதில் வரும் வேலை, அதில் கிடைக்கும் பணம் போதும். ராதா அதற்குள் குடித்தனம் பண்ணுவாள். முடிஞ்ச போது நீங்க வந்து பார்த்தாலே சந்தோஷப்படுவோம்பா. மத்தபடி அம்மாவை நல்லா பார்த்துக்குங்க" என்று கை கூப்பி விட்டான் சேகர்.

சொந்த முயற்சியில் கிடைத்த வேலையில் கௌரவமாக வாழ்கிறான். குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு அவ்வப்போது போய்ப் பார்த்துவிட்டு வந்தார்.

இன்று டாக்டர் பதியின் பெண் மாலினியின் நடன அரங்கேற்றம். வீட்டுக்கு வந்து டிரஸ் மாற்றிக் கொண்டு சபாவுக்கு போகலாம் என்றுதான் வந்தான் காமி. ஏழு மணிக்குத்தான். கம்மா தலையைக் காட்டி விட்டு வந்தால் போறும். மேடையில் தலைமைதாங்க சினிமா ஸ்டார்.

ஒரு சமயம் மேடைக்கு அழைத்து பேசச் சொன்னாலும் சொல்வார். குடும்ப டாக்டராச்சே. போகாவிட்டால் நன்றாக இருக்காது. லேட்டாகப் போனால் பாதகம் இல்லை. அப்பத்தான் மதிப்பா இருக்கும்.

கேட்டின் முன்நின்று பலமாக ஹாரனை அலற விட்டான். ஈஸ்வரன் அருணா திரும்பி விட்டதால் கேட் பூட்டியாகி விட்டது. காமி வர எப்பவும் நேரமாகும் என்பதால், அதுவும் இன்று டான்ஸ் போவதாக வேறு சொல்லி இருந்ததால், கூர்க்கா கொஞ்சம் காலாற வெளியே போய் விட்டான்.

ஹாரன் அலறலைக் கேட்டு உள்ளேயிருந்து ஓடி வந்த வேலு, மிரண்டு போய்க் கையும் காலும் தந்தியடிக்க, ஓடிப்போய்க் கதவைத் திறந்தான்.

வீடு அமைதியாக இருந்தது.

"பார்வதி... பார்வதி!" என்று கத்தியபடி உள்ளே நுழைந்தான் காமி. பார்வதி கையில் தீபத்துடன் துளசி மாடத்துப் பக்கம் போய்க் கொண்டு இருந்தவள், காமியின் குரலைக் கேட்டு ஓடி வந்தாள்.

பத்து மணிக்கு மேல் தினமும் வீடு திரும்பும் எஜமானி இன்று நேரத்தோடு வந்திருக்கிறானே, என்ன விசேஷம்?

"நான் மாடிக்குப் போறேன். நீ ஸ்டிராங்கா ஒரு கப் காப்பி போட்டு மேலே எடுத்துண்டு வா!" என்று உத்தரவு போட்டு விட்டு மாடிக்கு ஏறினான்.

கீழே எரிமலை குமுறி, பூகம்பம் வெடித்தது கூடத் தெரியாமல் அருணும் ஈஸ்வரனும் சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருந்தார்கள். காமி தன் ரூமுக்குப் போக அருணாவின் அறையைத் தாண்டித்தான் போக வேண்டும்.

உள்ளே இருவரும் உரத்துப் பேசும் குரல் கேட்டு காமி நின்றான்.

"பேபி! நீ நினைக்கிற மாதிரி இது அவ்வளவு கலபம் இல்லை. ஏன் இப்படி ஒரு


அம்மன் தரிசனம் தீபாவளி மலர் 1996

ஆன்மீக வாசகப் பெருமக்களே!
அன்பார்ந்த ஏஜெண்டுகளே!

வண்ணமயமான அம்மன் தரிசனம் தீபாவளி மலர் பல புகழ் பெற்ற எழுத்தாளர்கள், ஓவியங்கள், கவிஞர்கள் கைவண்ணத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை உள்ள அம்மன் திருத்தலங்களைப் பற்றிய விசேஷக் கட்டுரைகள் மலருக்கு மணம் சேர்க்கின்றன.

நான்கு வண்ணப் படங்கள், குங்குமப் பிரசாதம் ஆகியவை மலரோடு தங்களுக்குக் கிடைக்கும்.



முற்றிலும் புதிய பொலிவுடன் இவ்வாண்டு தயாராகும் அம்மன் தரிசனம் தீபாவளி மலரைப் பெறுவதற்கு உடனே உங்கள் ஏஜெண்டுகளிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

புதிய ஏஜெண்டுகளும் விண்ணப்பிக்கலாம்.

112 பக்கங்கள் கொண்ட இம்மலரின் விலை 5 ரூபாய்தான்!

முகவரி :

அம்மன் தரிசனம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்.
11, வெங்கடநாராயணா சாலை, தி.நகர், சென்னை - 600 017.
போன் : 4348964

அக்டோபர் இதழ் அம்மன் தரிசனம் வாங்கி விட்டீர்களா?

P. R. ஜுவல்லரியில்

ராசிக்கேற்ற கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள்

1. மேஷ ராசி பவழம்
2. ரிஷப ராசி வைரம்
3. மிதுன ராசி மரகதபச்சை
4. கடக ராசி முத்து
5. சிம்ம ராசி மாணிக்கம்
6. கன்னி ராசி மரகதபச்சை
7. துலாம் ராசி வைரம்
8. விருச்சிக ராசி பவழம்
9. தனுசு ராசி புஷ்பராகம்
10. மகர ராசி நீலம்
11. கும்ப ராசி நீலம்
12. மீன ராசி புஷ்பராகம்

எங்களிடம் ராசிக்கேற்ற கல் மோதிரம் வாங்கி பயன்பெறும் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்.

எங்களது **11** வது ஆண்டு விழாவை முன்னிட்டு

விழாச்சலுகை : 1.9.96 முதல் 9.12.96 முடிய

தங்க நகைகள், வெள்ளி பாத்திரங்கள், கொலுசுகள், செய்கூலி, சேதாரம் இல்லை. EXCEPT SPECIAL ITEM & KDM

நவரத்தின மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது.

ரூ. 250 க்கு மார்க்கெட் மோதிரம் வாங்கி அணிந்தால் செல்வ வளம் பெறும்

P.R. JEWELLERY
GOLD • SILVER • DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, MADRAS 600 017
TUESDAY HOLIDAY. PH: 434 4442

தரத்திற்கு உத்திரவாதம்

நியூமராலஜிபடி கல் மோதிரங்கள்
March 21 to April 20 Diamond (or) Ruby
April 21 to May 21 Emarald (or) Moonstone
May 22 to June 21 Pusparagam (or) Topaz
June 22 to July 23 Ruby (or) Pearl
July 24 to August 23 Diamond (or) Ruby
August 24 to September 23 Sapphire (or) Coral
September 24 to October 23 OPAL (or) Sapphire
October 24 to November 22 Topaz (or) Pusparagam
November 23 to December 21 Amethyst (or) Tarquise
December 22 to January 20 Garnet (or) Gomeydhagam
January 21 to February 19 Amethyst (or) Pearl
February 20 to March 20 Emarald (or) Aquamarine

ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ 400
ஹைதராபாத் முத்து 10 கிராம், ஒரு மாலைக்கு ரூ 200

ROYAL

A-Z சித்த ஆராய்ச்சி நிறுவனம்

40 வருடகால சேவை

- சிறுநீரக கோளாறுகளை சீர்படுத்தும் மிகச் சிறந்த சிகிச்சை மையம்
- இரண்டே மாத சிகிச்சையில் பூரண நலம் பெறுவீர்
- டயாலிஸிஸோ மாற்று சிறுநீரகமோ தேவையின்றி சிறுநீரகக் கோளாறுகள் நீக்கப்படும்
- ப்ளட் கேன்சர், எபிலெப்சி, டயாபிடிஸ், ஆஸ்துமா, சைனஸ், தோல் வியாதிகள் போன்றவற்றுக்கும் எந்த பக்க விளைவுமின்றி சிகிச்சை அளிக்கப்படும்
- டியாபிடிஸ் - எந்த விதமாய் சார்ந்து வாழ்பவர் இருந்தாலும் 15 நாட்கள் மருந்து எடுத்ததும் Blood Glucose Level Normal செய்து விடுகிறோம்

புற்றுநோய் மற்றும் சிறுநீரக கோளாறுகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

அணுகுவீர் :

டாக்டர் நாஸ்னீன் ஜிக்ருல்லா

U-92, ஸ்கைலார்க் அபார்ட்மென்ட்ஸ், மூன்றாவது மெயின் ரோடு,

அண்ணாநகர், சென்னை - 600 040. ☎ 6263519/6280032

ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள்
அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

குறிப்பு : எம்மிடம் வேத, வைதிக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது Catalogue ஐ பெற்றுக் கொள்ளலாம்.

இழைக் கோலம் போட பச்சரிசியை நனைக்கும் போது சிறிது வெந்தயம், உளுந்து இரண்டும் சேர்த்து நீரில் நனைத்து மைய அரைத்துக் கோலம் போட்டால், கூட்டும் போது பெய ராமல் நெடுநாள் அழியாமல் இருக்கும்.

– ஜாதிகா



ஆசையை வளர்த்துண்டே கண்ணம்மா? நா இப்படியெல்லாம் ஆகும்னு கொஞ்சம் கூட நினைக்கலைடா. ஏதோ சிநேகிதன். வேலை வேணும்னே. நல்ல வேலை போட்டுக் கொடுத் தேன், உன் ஆசைக்காக.

இப்ப காதல், கல்யாணங்கறே. ஏற்கெனவே இங்கே ஒரு காதல் கல்யாணம் பட்டபாடு உனக்குத் தெரியாதா? உங்கம்மா பணம், அந் தஸ்து, கௌரவம், வீண் பெருமை இதிலேயே ஊறினவ. உங்கம்மா இதுக்கு ஒத்துப்பாளா? வறட்டு கௌரவத்துக்காகதான் உயிரையே வைச்சிருந்த பிள்ளையையே இழந்துட்டா அவ.

இப்ப உன்னையும்... ஓ நோ! என்னாலே உன்னை விட முடியாதுடா. கொஞ்சம் யோசிச் சுப் பாரு!"

காமி திடுக்கிட்டாள். பேசினது ஈஸ்வரன். கூட இருப்பது அருணா! காதல் கல்யாணம் மறுபடி இந்த வீட்டிலா? நோ நெவர்!

இப்போது உள்ளே போவதா அல்லது தெரி யாதது போல் நம் ரூமுக்குள் புகுந்து கொள் வதா?

மனம் ஊசலாடிய நேரத்தில் காலடிச் சத்தம் கேட்டு 'யாரது?' என்று குரல் கொடுத்து விட்டார் ஈஸ்வரன்.

இனிமேல் தப்பிக்க முடியாது. நான்தான் என்று சொல்லிக் கொண்டு உள்ளே போவ தைத் தவிர வேறு வழியில்லை.

உள்ளே அப்பாவின் மடியில் தலையையும் சோபாவில் காலையும் நீட்டிக் கொண்டு கண் ணீர் விடும் மகளையும், அவள் தலையைக் கோதியபடி கார்பெட்டில் உட்கார்ந்திருக்கும் ஈஸ்வரனையும் பார்த்தாள்.

"வீடு பூரா சோபாவும் கட்டிலும் ஊஞ்சலு மாக கிடக்கு. அதையெல்லாம் விட்டுட்டு நடக் கிற கார்பெட்லே டர்ட்டி. படுத்துண்டு, படுக் கற சோபாவுல காலைப் போட்டுண்டு... உங்கப் பாவுக்குத்தான் இன்னும் கிராமத்து புத்தி போகல்லை. உனக்குமா?"

"எழுந்து சோபாவிலே உட்காரு. இப்ப எதுக்கு அழுகை?" என்று அதட்டினாள்.

அம்மாவின் குரல் கேட்டதும் பயம் ஒரு பக்கம், சந் தோஷம் ஒரு பக்கமுமாகத் திணறினாள் அருணா.

பயம் – அப்பாவுடன் பேசியதைக் கேட் டிருப்பாளோ? பிரச்னையை எதிர்பாராமல் இவ்வளவு சீக்கிரம் நேர்முகமாக எதிர்கொள்ள வேண்டி வருமோ என்று.

சந்தோஷம் – என்றாவது ஒருநாள் பேசித் தானே ஆகணும்? தாங்கள் பேசியதை அம்மா கேட்டு விட்டிருந்தால் எப்படி ஆரம்பிப்பது என்ற தயக்கம் வேண்டாம். பாதி வேலை மிச்சம். விளக்கம் தேவையில்லை. பிரச்னைக்கு நேரடியா வந்துடலாம்.

"என்னங்க அப்பாவும் பொண்ணுமா தரை மகாநாடு? வீடு ஒண்ணு திறந்து கிடக்கு. கூர்க்கா கேட்டில இல்லை. ஒரு மணி அலறினப்புறம் வேலு வரான். பார்வதி கொல்லைப்பக்கம் காத்து வாங்கறா. நீங்க ரெண்டு பேரும் மாடிலே. என்ன பணம் கொடுத்தா என்ன? பொறுப்பா பாத்துக்க ஆள் இல்லை.

அருண் – காலேஜிலிருந்து வந்தா குளிச் சிட்டு டிரஸ் மாத்திண்டு பிரஷ்ஷா இருக்க வேணாமா? லேஸி!" என்று வெடித்தாள் காமி.

"அது... வந்து... காமி குளிக்கத்தான் கிளம் பிண்டிருந்தா. அதுக்குள்ள நீ வந்துட்டே. போடா அருண்... சட்புட்னு குளிச்சிட்டு ரெடியா வா! மம்மி கூட அதிசயமா இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டா. பசிக்கிறது. எல்லாரும் ஒண்ணாக சாப்பிடலாம்!" என்றார் காமி பார்க்காமல் கண்ணைச் சிமிட்டியபடி.

அம்மாவிடம் இருந்து விடுதலை கிடைத்து விட்ட சந்தோஷத்துடன் உள்ளே ஓடினாள் அருணா.

மீண்டும் கதவு தட்டும் சத்தம்! இப்போது பார்வதி!

கையில் காப்பியுடன் வந்த பார்வதி மேஜை மேல் வைத்து விட்டு, "அய்யா. உங்களுக்கு..." என்று தயங்கினாள்.

"வந்ததும் ஒரு டோஸ் ஆச்சில்லையா? இன் னும் என்ன உபசாரம்? அருணா குளிச்சிட்டு

வந்ததும் ரெண்டு பேருமா சேர்ந்து சாப்பிடுவா. நீ போ!"

ஈஸ்வரனுக்குக் காப்பி அடிக்கடி வேண்டும் கடச்கட. காமி மூன்று வேளைக்கு மேல் கூடா தென்று கட்டுப்பாடு விதித்திருந்தாள். ஈஸ்வரன் பரிதாபமாகப் பார்த்துவிட்டு, "ஓகே காமு, நா உன்னோட கொஞ்சம் தனியாப் பேசணும். கொஞ்சம் நேரம் ஒதுக்க முடியுமா?" என்றார்.

தன் காப்பியில் பாதியை அவருக்கு நீட்டிய படி, "என்ன கிண்டலா? எதுவானாலும் சுத்தி வளைக்காம அஞ்சு நிமிஷத்துலே சொல்லுங்க. நம்ம டாக்டர் பெண் மாலினி அரங்கேற்றம் இன்னிக்கு. நா போகல்லைன்னா வசந்தா கோச்சுப்பா.

"ஜஸ்ட் ரொம்பத் தலைவலியா இருந்தது. ஒரு காப்பி குடிச்சுட்டுப் போவோம்னு வந்தேன். இப்ப என்ன பேசணும்?"

"காமு! திஸ் இஸ் ஸ்டிரிக்டிலி அர்ஜன்ட், அண்ட் வெரி வெரி இம்பார்டண்ட்! டான்சுக் குப் போறது முக்கியமில்லை. உட்காரு."

அழுத்தந்திருத்தமாக உத்தரவிட்டு விட்டு சோபாவில் நகர்ந்து அருகில் உட்கார இடம் கொடுத்தார்.

"நீ கிணத்துத் தவளையா கூண்டுக்கிளியா இருக்கக் கூடாதுன்னு உன்னை வெளியே விட்டதில் தப்புப் பண்ணிட்டேனோன்னு தோணறது. நீ வெளியுலகைப் பத்தி நினைக் கிறியே தவிர, வீட்டை சுத்தமா மறந்துட்டே. நீ பழைய மாதிரி வீட்டுப் பறவையாவே இருந் திருக்கக் கூடாதான்னு தோணறது.

நான்தான் கம்பெனி, பிசினஸ் என்று அதன் பின்னாடியே கண்ணைக் கட்டின்ட குதிரையாய் நேரம் நேசம் எல்லாத்தையும் தொலைச்சுட்டேன். நீயாவது வீட்டைக் கவ னிக்கக்கூடாதா, காமு! இருக்கிற ஒரு பிள்ளை யைத்தான் உயிரோடு இழந்தாச்சு உன்னாலே. இப்ப இந்தப் பெண்ணையும்..."

குரல் தழுதழுக்க நிறுத்தினார் ஈஸ்வரன்.

"போன கதையைப் பத்தி பேசத்தானா உட்காரச் சொன்னது? அது எப்பவோ முடிஞ்சு போன கதை. மறுபடி அதையே கண்டினியூ பண்றதா இருந்தா, நான் போறேன்..."

எழுந்து கொண்டாள்.

"அது முடிஞ்சு போன கதைதான். உன் தயவு இல்லாமயே உன் பிள்ளை நல்லா வாழ்ந்துண்டிருக்கான். இது உன் பெண்ணைப் பத்திய பிரச்னை..."

"ஓ... ஏன் என் பொண்ணுனு பிரிச்சுப் பேசணும்? அவ உங்க பொண்ணும்தானே?"

"அஃப்கோர்ஸ் அஃப்கோர்ஸ். அவ என் பெண்தான். ஆனா நீ நம்ம பெண்ணைப் பத்தி அடியோட மறந்துட்டதால, நான் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கு. கல்யாண வயசிலே பெண்ணிருந்தா, அம்மாக்காரி நம்ம பெண்



புதினாச் சட்னி அரைக்கும் போது அத்துடன் ஒரு தக்காளியும், ஒரு டீஸ்பூன் சர்க்கரையும் வைத்து அரைத்து எடுத்தீர் களானால், பஜ்ஜி, வடை போன்றவை களுக்குத் தொட்டுச் சாப்பிட படு சூப்பராக இருக்கும்.

– பூர்ணிமா பாலன்

ணுக்கு வயசாயிகிட்டே போறதே. காலாகாலத் துலே கல்யாணம் பண்ண வேண்டாமா?' என்று நச்சரிப்பா. நீ மறந்துட்டே. நான் ஞாப கப்படுத்த வேண்டி இருக்கு."

"நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். நேரம் வரும்போது நானே பண்ணி வைப்பேன். இப்ப என்ன அவசரம் அவளுக்கு? அவ குழந் தைதானே. இன்னும் படிப்பே முடியல்லை."

"என்ன அவசரம்னு நீ சொன்னா போதுமா காமு! அருண் நீ நினைக்கிற மாதிரி குழந்தை இல்லை. டீன் ஏஜ் தாண்டியாச்சு. 'எப்ப டேடி என் கல்யாணம்'னு அவளே கேட்டுட்டா..." ஈஸ்வரன் சிரித்தார்.

"நீங்க பேசினதெல்லாம் நானும் கேட்டுண்டுதான் இருந்தேன். உங்ககிட்ட இத்தனை பேசற பெண், எங்கிட்ட ஒரு வார்த்தையாவது சொன்னாளா? அம்மான்னு ஒரு மதிப்பு மரியாதை உண்டா? நீங்கதான் அவளைத் தலையில் தூக்கி வெச்சுண்டு செல் லம் கொடுத்து கெடுக்கறது."

"ஸ்டாப் இ நான்சென்ஸ், காமு! அருண் சின்னப் பெண். அவ உனக்கு என்ன மதிப்பும் மரியாதையும் கொடுக்கத் தவறிட்டா? அம்மாங் கிற இமேஜைக் காப்பாத்திக்க நீதான் தவ றிட்டே! ஒருநாளாவது அவ பக்கத்துலே உட் கார்ந்து அன்பா ஆதரவா பேசியிருக்கியா?"

"ஓகே... ஓகே... விஷயத்துக்கு வாங்க."

"அருணோட பிரண்ட் ராஜான்னு ஒரு பையன். அடிக்கடி இங்கே வருவான். வெரி ஸ்மார்ட் பாய்! நம்ப கம்பெனிலே வேலை கத் துக்கட்டும்னு நான்தான் சேர்த்து விட்டேன். கூடிய சீக்கிரம் டிரெயினிங்குக்கு ஸ்டேட்ஸ் அனுப்பலாம்னு இருக்கேன். அருண் சொல்றா தே ஆர் இன்லவ்!

நல்ல ஃபாமிலி பெரிய குடும்பம். நம்ம அளவு பணம் இல்லாட்டியும் வசதியான குடும் பம்தான். அருண், அவனை அமெரிக்கா அனுப்

பறதுக்குள்ளே கல்யாணத்தை வெச்சுண்டுடலாம்னு நினைக்கிறா. அவங்களைப் போய்ப் பார்க்கிறதுக்கு முன்னாடி உன்னோடு பேசணும்னுதான் உன்னை இருக்கச் சொன்னேன்."

"இதுலே கேக்கறதுக்கு என்ன இருக்கு? சாதாரண வசதி. பெரிய குடும்பங்கதீங்க. பையன் நம்ம கம்பெனியிலேயே வேலை செய்யறான். உங்க மாப்பிள்ளைன்னு சொல்லிக்க ஒரு ஸ்டேடஸ் வேண்டாமா? அருணாவுக்கு மாப்பிள்ளை தேடற பொறுப்பை எங்கிட்ட விட்டுடுங்க."

நொடித்துக் கொண்டாள் காமி.

"காமு லக்ஷமும் கோடியும் மட்டுமே வாழ்க்கைன்னா, இன்னிக்கு நீ சொல்ற அந்த கோமஸ்வரன் வீட்டுப் பெண்கள் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இருளில் தேட மாட்டார்கள். வாழ்க்கைக்கு பணம் அவசியம் தேவைதான். ஒத்துக்கறேன். ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தர முடியாது.

மனசு ஒன்றுபட்டு இணைந்தால்தான் வாழ்க்கை சோபிக்கும். மனசுக்கு பிடிச்சவனோட குடிசையில் இருந்து கூழைக்குடிச்சாலும் இனிக்கும்!"

"அதெல்லாம் டிராமாவில சினிமாவில பார்க்கவும், கைதட்டவும் நல்லா இருக்கும். ஆனா பிராக்டிகல் வாழ்க்கைக்கு ஒத்து வராது, டியர்! உங்க பெண் இங்கே வசதியா வாழ்ந்து பழக்கப்பட்டவ. அவ காஸ்டியூமுக்குக் கூட அவன் சம்பளம் காணாது.

கொஞ்ச நாள் கழிச்சு இந்த மோகம் போனதும் 'டேடி'னு கதறிண்டு இங்கேதான் ஓடி வருவா. அப்புறம் ரொம்பக் கஷ்டப்படுவா. அப்ப புரிஞ்சுண்டு என்ன பலன்?"

"ஓக் காமு! நாம வாய்க்கு வாய் பேபின்னு ஆசையா கூப்பிட்டாலும், அருண் இப்ப பேபி இல்லை. வளந்துட்டா. இது அவ வாழ்க்கைப் பிரச்னை. இதிலே முடிவு எடுக்க வேண்டியது அவதான். அதற்கான வயசும் தகுதியும் அவளுக்கு வந்தாச்சு.

அவ இந்த முடிவிலே உறுதியா இருக்கா. எனக்கு ஓகே. நீயும் சம்மதித்து சந்தோஷமாக் கலந்துண்டா எங்களுக்கும் சந்தோஷம். உனக்கும் மரியாதை. எப்படியும் இந்தக் கல்யாணம் நடக்கத்தான் போறது. நீ கலந்துக்கப் போறயா? இல்லையாங்கிறதை நீயே முடிவு பண்ணிக்கோ!"

ஈஸ்வரன் உறுதியாகச் சொல்லி விட்டார்.

காமுவுக்குப் பயம் வந்தது. ஈஸ்வரன் துணிந்து விட்டார். இனி அவள் சொல் எடுபடாது. அவர் ஒரு முடிவு எடுத்து விட்டால் அதை யாராலும் மாற்ற முடியாது.

வீண் டம்பம் அந்தஸ்து வித்தியாசத்துக்காக பல நாள் நட்பை உதறியவன் என்ற கெட்ட பெயர் வந்து விட்டது. இந்தக் கல்யாணத்தின் மூலம் இழந்த பெயரை மீட்டுக் கொள்ளலாம். யார் கண்டது? இந்தக் கல்யாணத்தின் மூலம் சேகர் மறுபடி இங்கு வரலாம்.

அவனை அழைக்காமல் விட மாட்டார். அப்படி அவன் வந்தால் கொஞ்சம் பிகு பண்ணிக் கொண்டு அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தாள். சேகர் அவளுக்குச் செல்லப் பிள்ளை. அவனைப் பிரிந்து அவளால் அதிக நாள் இருக்க முடியவில்லை.

லட்டு மாதிரி பெண்ணும் பிள்ளையுமா ரெண்டு குழந்தை பிறந்து இருக்காம். இந்தக் கல்யாணத்தின் மூலம் ஒன்று சேர்ந்தால் சரி.

"என்ன யோசனை காமு! அவசரம் இல்லை. நிதானமா யோசனை பண்ணிச் சொல்லு!"

"யோசிக்க என்ன இருக்கு. எனக்கு மட்டும் அருண் மனசுக்குப் பிடிச்சவளைக் கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமா வாழறது பிடிக்காதா என்ன? சிரமப்படுவானோ. பெரிய இடமாப் பார்க்கலாமோங்கிற ஆசைதான். நல்லதாச்சு. நமக்கு மாப்பிள்ளை தேடற வேலை மிச்சம்.

இப்ப தலைவலிக்கிறது. குளிச்சிட்டு ரெஸ்ட் எடுக்கறேன். சாப்பிட்ட பிறகு கல்யாணம் பத்தி பின்னால் பண்ணலாம். ஓகே." என்று தன் அறைக்குப் போய் விட்டாள்.

படபடவென்று கைகளைத் தட்டியபடி பாத்ரூமிலிருந்து வந்தாள் அருணா. உடலை ஒரு சாடின் மாக்சி தழுவி இருக்க, தலையில் டர்க்கி டவல் கோபுரம். சந்தன நிற முகத்தில் ஈர முத்துக்கள். டவலுக்குள் அடங்காத கேசத்திலிருந்து ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது.

"ஒண்டர்புல் டேட்! யு டிட் எ மார்வலஸ் ஜாப் – எப்படிப்பா முடிஞ்சுது? அம்மாவை ஓகே சொல்ல வெச்சுட்டீங்களே. தாங்க்யூ டேட்!" என்று இரு கைகளையும் மாலையாக அவர் கழுத்தைச் சுற்றி போட்டுக் கொண்டு

வீட்டின் கொலுவில் ஒரு பிளாஸ்டிக் கூடையில் மண் போட்டு மணி பிளாண்ட் வைப்பது சிலர் வீட்டில் உண்டு. அப்படி படர விடும் போது அழகிய காகிதப் பூக்கள் செய்து நடுநடுவே கலர் கலராய் வைத்து விட்டால் பார்க்க கண்ணைப் பறிக்கும்.

- கி. மங்களா



கொஞ்சினான் அருணா.

"அதாண்டா கண்ணா ஹ்யூமன் சைகாலஜி. வாசல்ல கார் வந்ததும் கூச்சலும் குழப்பமும் அம்மா வந்தாச்சுன்னு தெரிஞ்சுதா. நேரா மாடிக்குத் தன் ரூமுக்குத்தான் போவான்னு தெரியும். அதான் கொஞ்சம் முன்கதைச் சுருக்கம் மாதிரி டயலாக் எடுத்து விட்டேன். அதிலேயே பாதிக்கதை புரிஞ்சிருக்கும்.

செருப்புச் சத்தம் உள் ரூம் வாசல்லே நின்னதும், அம்மா கேட்கட்டும்னு உன்னைக் கண்டிக்கிற மாதிரி பேசினேன். எல்லாம் உனக்காகத்தான்டா, கண்ணம்மா!"

பெருமையுடன் அருணாவைப் பார்க்க அவள் கண்களில் கண்ணீரைக் கண்டு பதறினார்.

"ஏண்டா.. ஏன் அழறே? அதான் எல்லாம் நல்லபடியா முடிஞ்சாச்சே!"

"அதுக்கில்லை டேட், நீங்க சேகர் அண்ணா கல்யாணத்துலே ஏன் இந்த சைகாலஜியை யூஸ் பண்ணல்லை? பாவம் டேட், சேகரும் ராதாவும். அதுவும் இப்படி சுமுகமா முடிஞ்சிருந்தா. இருக்கறது ஒரு அண்ணா. ராதாவும் குட்டிப் பசங்களையும் அங்கே தனியா..." விம்மினாள் அருணா.

ஒரு நீண்டபெருமூச்சு விட்டார் ஈசுவரன்.

"சுமுகமா முடிச்சிருக்கலாம்மா. முடிச்சிருப்பேன் நான் ஊரில் இருந்திருந்தா. அதுக்குள்ளே ரொம்ப காம்பிளிகேட் ஆகி விஷயம் என் கையை மீறிப் போச்சு. சேகர் உங்கம்மா பிள்ளை. என் எதிரே கூட நின்னு பேச மாட்டான். எனக்கும் அப்ப நேரம் இருக்கல்லை.

உங்கம்மாவுக்கு பணம் கண்ணை மறைச்சிடுத்து. தன் பேச்சை அதுவரை தட்டாத பிள்ளை, இப்ப ராதாவைத்தான் பண்ணிப்பேங்கறானேன்னு ஆத்திரம் அவளுக்கு. இவனும் அவசரப்பட்டுட்டான். நீயா பாத்து அவளை பண்ணிக்கோன்னு சொல்லும் வரை எனக்குக் கல்யாணம் இல்லைன்னு சத்தியாகிரகம் பண்ணியிருக்கணும்.

அப்ப அந்தப் பெண்ணைத் தவிர யாரையும் பண்ணிக்க மாட்டேங்கிற அவன் பிடிவாதம் அவன் மனசுக்குத் தெரியாது. நீ சொன்னாத்தான் ராதாவைப் பண்ணிப்பேன்கிற அவளுக்குத் தரப்படும் முக்கியத்துவம்தான் தெரியும். நாளாக ஆக, போனா போகட்டும். குழந்தைங்கிற மனோபாவம் வந்து அவளே பண்ணி வெச்சிருப்பா.

அப்படி இல்லாம அவன் கல்யாணமே பண்ணிண்டு வந்து நின்னதும், தன்னை விட பவானியையும் ராதாவையும் அவன் உயர்வாகக் கருதி விட்டதாக எண்ணி அவனை விரட்டி விட்டான். நான் ஊரிலிருந்து வந்த பிறகும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பெத்த பெண்கிட்ட ஒரு தகப்பன் பேசற விஷயமில்லைன்னாலும், சொன்னாத்தானே புரியும்? சொல்லித்தான் ஆகணும், கண்ணம்மா!

தான் போகாததுடன், நான் பவானி வீட்டுப் பக்கம் போனாலே என்னையும் அவளையும் சம்பந்தப்படுத்தி கண்டபடி பேச ஆரம்பித்தாள். அப்போதே இந்த ஹிஸ்டீரியா ஆரம்பித்து விட்டது. அதனால் நம்மால் அந்த அப்பாவிப் பெண்ணுக்கு ஏன் வீண் களங்கம்? என்று அங்கு போவதையே நிறுத்தி விட்டேன்.

பாவம் பவானி, பணம் வந்ததும் நான் கூட மாறிட்டேன்னு மனசு நொந்து போயிருப்பா. டாக்டர் அவளுக்குப் பிடிக்காத விஷயத்தை பேசவோ செய்யவோ கூடாதுன்னுட்டார். இந்த நிலையில் ராதா – சேகர் கல்யாணம் கூட சாத்தியமில்லைதான்.

நா ஊரிலிருந்து வரதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சு போச்சு. அவனும் ரோஷக்காரன். அம்மாக்குத் தெரியாம நா அவனைப் பார்க்கிறதையோ பொருள் உதவி செய்யறதையோ அவன் விரும்பல்லை. உங்கம்மா மனசு மாறி அவனைக் கூப்பிட்டால்தான் மறுபடி இந்த வீட்டுக்குள் நுழைவான்.

அவனா வந்து நான் பண்ணது தப்புனு கேட்டா உங்கம்மா எல்லாம் மறந்து ஏத்துக்குவா. இப்ப அவ மனசு அவ்வளவு தூரம் ஏங்கிப் போயிருக்கு. வீடு தேடிண்டு வந்தவனை விரட்டினதால், அவன் இதுக்கு மேலே பிடிவாதமா இருக்கான். பூனைக்கு மணி யார் கட்டறது?

உன் கல்யாணமாவது இதையெல்லாம் மறக்கடிக்கணும்!"

(தொடரும்)


நாம் பண்டிகை நாட்களில் மட்டும்தான் அதிக அளவு வெல்லம் சேர்க்கிறோம். வெல்லத்தில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. வாரம் இரண்டு தினங்களாவது வெல்லம் சேர்த்த உணவு வகைகளை குழந்தைகளுக்குச் செய்து கொடுக்கலாம். இதனால் குழந்தைகள் இரும்புச் சத்தைப் பெறுவதுடன் ஆரோக்கியமாக இருப்பார்கள்.

— எஸ். விஜயா




அறிமுகம்
இயற்கைப்
பொலிவான
சருமம்.
பராமரித்தது
புதிய பியர்ஸ்
ஆயில்
கிளியர்.
அழகான மலர்போன்ற மென்மை. வழவழப்பு! இதுவே உங்கள் சருமத்தின் இயற்கை சிறப்பு!
ஆனால் எண்ணெய் வழிந்தால், அது செயற்கையாக பளபளக்கும்... ஒரேயடியாய் ஒட்டும்... அழுக்குப் படியும். அதைக்கழுவினாலோ, உங்கள் சருமத்திற்கு தேவையான எண்ணெய் சத்தும் போய்விடும். சருமம் பொலிவிழந்து உலர்ந்துவிடும்.
இப்போது உங்களுக்கு வருகிறது புதிய பியர்ஸ் ஆயில் கிளியரின் பராமரிப்பு.
இதன் ஆயில் கிளியர் ஃபார்முலா அதிகமாக உள்ள எண்ணெயை இதமாக அகற்றுகிறது. அதே சமயம், அதன் பராமரிக்கும் செயல், தேவையான எண்ணெயை தக்க வைக்கிறது. ஆகவே, உங்கள் சருமம் எண்ணெய் வழியாது, உலராது. இயற்கைப் பொலிவோடு இருக்கும்.
PURE & GENTLE
Pears
Oil - Clear
புதிய
PURE & GENTLE
Pears®
Oil - Clear
HTA.1155.97
எண்ணெய் வழியாது, உலராது... இயற்கைப் பொலிவான சருமம்.

கொசுவர்த்தி வில்லைகளில் பூக்கூடை



பயன்படுத்திய கொசுவர்த்தி வில்லைகளைத் தூக்கி எறியாமல் சேகரித்து அழகான பூக்கூடை செய்யலாம்.


தேவையான பொருட்கள்:

1) கொசுவர்த்தி வில்லைகள் - 30,
2) தெர்மக்கோல் சீட்,
3) போஸ்டர் பெயின்ட்,
4) பிளாஸ்டிக் (அ) காகிதப் பூக்கள்,
5) பெவிக்கால்.

செய்முறை:

தெர்மக்கோலை படத்தில் உள்ளது போல் வெட்டிக் கொள்ளவும், பின்பு அதன் மேல் வில்லைகளை நெருக்கமாக, வரிசையாக பெவிக்கால் கொண்டு ஒட்டி விடவும். கைப் பிடியில் வளைவாக ஒட்டும்போது சில இடங்களில் சிறிது இடைவெளி ஏற்படும். அவ்விடங்களில் முக்கோணமாக வில்லைகளை வெட்டி ஒட்டி விடவும். பின்பு போஸ்டர் பெயின்ட் கொண்டு வர்ணம் பூசவும். இக்கூடையில் கலர் பேப்பரில் பூக்கள் செய்து (அ) பிளாஸ்டிக் பூக்களைக் குத்தி விடுங்கள். இதனை வரவேற்பறையில் மாட்டி அனைவரின் பாராட்டையும் பெறுங்கள்.

முட்டை ஓட்டில் பெங்குயின்




தேவையான பொருட்கள்:

1) முட்டை ஓடு, 2) சொட்டு மருந்து பாட்டிலில் உள்ள மேல் மூடி-1, 3) போஸ்டர் பெயின்ட்-கருப்பு, 4) பெவிக்கால், 5) சார்ட் பேப்பர்.

செய்முறை:

முட்டையில் சிறு ஓட்டைப் போட்டு வெள்ளை மற்றும் மஞ்சள் கருவை வெளியேற்றவும். அதனை நன்கு கழுவி, காய வைக்கவும், சொட்டு மருந்து பாட்டிலின் மூடியை முட்டை ஓட்டின் மேல் பகுதியில் பெவிக்கால் கொண்டு ஒட்டவும், படம் 1,2-ல் உள்ளது போல் சார்ட் பேப்பரில் வெட்டி பெயின்ட் செய்து முட்டை ஓட்டில் கால் மற்றும் கைப்பகுதியாக ஒட்டவும். தலைப் பகுதியாக உள்ள மூடியில் கண், மூக்கு ஆகியவற்றை பெயின்ட் செய்யவும்.



இப்பெங்குயினின் உடல் பகுதியில் இரு பக்கமும் கருப்பு வர்ணம் பூசவும், நடுவில் வெள்ளையாக விடவும். இதனை தெர்மக்கோல் அல்லது சிறிய அட்டைப் பெட்டியில் ஸ்டாண்ட் மாதிரி செய்து ஒட்டி விட மிகவும் அழகாக இருக்கும்.

அட்டையில் அழகான பொம்மை செய்யலாம்

தேவையான பொருட்கள்:

1) சார்ட் பேப்பர், 2) வெல்வெட் பேப்பர், 3) டேபிள் டென்னிஸ் பால்-2, 4) கருப்பு உல்லன் நூல், 5) லேஸ், 6) சிறிய பாசி (அ) சமிக்கி. 7) போஸ்டர் (அ) பேப்ரிக் பெயிண்ட், 8) பெவிக்கால், 9) ஸ்டேப்பிலர்.

செய்முறை:

1) சார்ட் பேப்பரில் 6செ.மீ. 3செ.மீ, ரேடியஸ்ஸில் வட்டம் வரைந்து வெட்டவும். 2) 6செ.மீ. விட்டமுள்ள அட்டையை பாதியாக வெட்டி 2 கோன் செய்யவும். 3) 3செ.மீ. விட்டமுள்ள வட்டம் இரண்டு வரைந்து வெட்டி அதன் நடுமையத்தில் சிறு துளை இடவும். 4) கோன் செய்தவற்றை நன்றாக ஸ்டேப்பிலர் போடவும், 5) இதே முறையில் வெல் வெட் பேப்பரையும் வெட்டி கோன் மற்றும் வட்டத் தின் மீது ஒட்டவும். 6) டேபிள் டென்னிஸ் பாலின் அடியில் சிறு ஓட்டை போடவும். இதனை பொம் மையின் முகமாக செய்வதற்கு கண், காது, மூக்கு, வாய், முடி ஆகியவற்றை வரையவும். உல்லன் நூலில் 4" நீளத்திற்கு நிறைய வெட்டி அதனை நடுவில் ஒரு சிறு நூலால் இறுக்கமாக கட்டவும். பின்பு இரு பக்கமும் சடை பின்னி கீழே ரப்பர் பேண்ட் போட்ட மாதிரி கட்டி விட்டு நூலைப் பிரித்து விட வும். 7) வட்ட வடிவ அட்டையை பாதியாக மடக்கி நடுவில் உள்ள துளையில் கோனை சொருகவும். துளை வழியே வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் கோனின் மீது டேபிள் டென்னிஸ் பாலைச் சொருக வும். நன்றாக பெவிக்கால் கொண்டு ஒட்டவும். 8) இப்பொம்மையின் அடிப்புறத்தில் பக்க வாட்டிலும் பாசிகள், ஜமிக்கி, லேஸ் கொண்டு அலங்காரம் செய் யலாம். (படத்தில் உள்ளது போல்) 9) மேலும் அட் டையில் சிறு கோன் செய்து வெல்வெட் பேப்பர் ஒட்டி தொப்பியாகவும் செய்து பொருத்தினால் மண்டைப் பகுதி அழகாகும். 10) வட்ட வடிவத்தில் உள்ள அட்டையை இரண்டாக வெட்டி இரு பகுதி களாக கோன் செய்து பக்கவாட்டில் ஒட்டினால் சிறிது வித்தியாசமான இரண்டாவது பொம்மை செய்யலாம். உடம்பு, தலைப்பகுதி மேற்சொன்ன முறையில் செய்யவும்.

-ஆர். ஜெயந்தி

மங்கையர் மலரும் அனுபவ் குரூப் ஆஃப் கம்பெனிஸும் இணைந்து நடத்திய கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சி இது. இதில் பெண்கள் நல அமைப்புகளின் பிரதிநிதிகளும், கல்லூரி, பள்ளி மாணவிகளும் கலந்து கொண்டனர். பேராசிரியரும் பாடநூல் கழகத்தின் முன்னாள் தலைவருமான எஸ்.என். சொக்கலிங்கம், 'அனுபவ்' கம்பெனிகளின் தலைவர் நடேசன், அனுபவ் ஹோம்ஸின் நிர்வாக இயக்குனர் முல்லை சுப்பையா ஆகியோரும் பங்கேற்றனர்.





மஞ்சுளா ரமேஷ் : 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?' என எழுதினார் ஒரு கவிஞர். அதிக ஜனத்தொகை என்பது கேவலமில்லை. அத்தனை உழைக்கும் கைகள் இருக்கின்றன என்று அர்த்தம். 40களின் இறுதியில் இடிந்து போன ஜப்பான் இன்று அமெரிக்காவுக்குச் சவால் விடும் அளவு வளரவில்லையா? சுத்தம் என்னும்போதே நம் நினைவில் தோன்றும் ஊர் சிங்கப்பூர்தானே? கலாசார பெருமைமிகுந்த நம் நாடு மட்டும் ஏன் முன்னேறவில்லை? இதற்கு எது தடை? நம்மாலும் முன்னேற முடியும். அதற்கு எவற்றையெல்லாம் நீக்கினால் நம்மால் முன்னேறலாம் என கருத்துப் பரிமாறிக் கொள்ளவே இங்கு நாம் கூடியுள்ளோம்.

கிதுபிரியா : முதலில் இளமைப் பருவம். இதிலேயே முதல்லே குடும்பத்தில், பின்பு சமூகத்தில் வயதானவர்களில் பல பேர் எங்களைப் போன்றவர்கள் படிக்கவே தடை செய்கிறார்களே? நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு முதல் தடையே கல்வி அறிவின்மை தான்!"

பரிமளா கிருஷ்ணமூர்த்தி : "என் மருமகள் திருமணமாகி எங்கள் வீடு வந்தபோது பி.எஸ்ஸி., 2-ம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். நான் தொடர்ந்து அவளை படிக்கச் சொன்னேன். பட்டம் பெற்றதுடன் நிற்காமல் எம்.பி.ஏ. வரையும் படித்தாள் அவள். படிக்க வைத்தோம்."

மஹாலட்சுமி : "சமுதாயத்தில் ஒரு பக்க மக்களில் சிலர் உழைக்கின்றனர். நாடு காக்கவும் கூட செய்கின்றனர். ஆனால் இளைஞர்களில் சிலர் படிக்காமல் 'காலையில் பீடி, பின்பு களிவுதரும் ஆடி, மாலையில் மயக்கம் தரும் 'பான்பராக்' மயக்கம் தீர்ந்ததும் ஜூராசிக் பார்க் இப்படியிருந்தால்...?"

சுஜாதா : "பெரியவங்க தடை என்பதை





நம் முன்னேற்றத்துக்கு எது தடையாக இருக்கிறது?



விட அவுங்க விருப்பத்தை எங்க மீது திணிக்கறாங்கன்னுதான் சொல்லணும். வீட்டிலே பாட்டி இருக்காங்க. "நீ படி. நல்லா படிச்சு முன்னேறு. வேண்டான்னு சொல்லலே. ஆனா நான் சாகறதுக்குள்ளே கல்யாணம் செய்துக்கோ" என்பார். இதுவும் ஒரு வகையில் தடைதானே? உங்களை மாதிரி மாமியார் எத்தனை பேர் மருமகள்களைப் படிக்க வைக்கிறார்கள்."

நடேசன் : "இளைய சமுதாயத்துக்கு நம்பிக்கை வேண்டும். ஜப்பான், சிங்கப்பூர் இந்த நாட்டு மக்கள் முன்னுக்கு வர தன்னம்பிக்கையும் உழைப்பும்தானே காரணம்? வீட்டுப் பிரச்னை விட்டு நாட்டு மேல் நம்பிக்கை வச்சு நாட்டின் உயர்வுக்காக உண்மையாக உழைத்தால் முன்னேற்றம் வரத்தான் செய்யும்."

பரிமளா கிருஷ்ணமூர்த்தி : "தொழில் துறை முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம். நம் பொருட்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் இங்கு போலியும், ஏமாத்துத்தனமும்தான் இருக்கு. இங்கு ஒரு ஆள் மூட்டைப் பூச்சி மருந்து சாப்பிட்டு சாக எண்ணி அதை உண்டான். ஆனால் சாகவில்லை. காரணம் கலப்படம்தான். எல்லா இடத்திலும் 'சம்திங்' தர வேண்டிய நிலையில் தரமான பொருள் எப்படி தயார் செய்ய முடியும். இதை எக்ஸ்போர்ட் செய்தால் - கப்பல் ஏறிப் போவது நம்மானம்தான்! போட்டி மனப்பான்மையும்தானே நம் சமுதாயம் முன்னேறாமலிருக்க இன்னொரு தடை."

ரேவதி செல்வமணி : "சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைக் கவர்ந்த அடையார் ஆலமரம் புயலில் சிக்கி வீழ்ந்த போது - பட்டமரமான அதை எடுத்து நிறுத்தினர். காரணம் வேர்கள் அழுகவில்லை. நம் நாட்டின் வேர்கள் கிராமம்; கலாச்சாரம், பண்பாடு இவைகளைத் தழுவாதது முன்னேற்றமே அல்ல. இது ஒரு ஓட்டம்தான். தாத்தா பாட்டிகளை குறை சொல்லவே கூடாது. அவர்களுக்குப் புரியும்



படி எடுத்துச் சொன்னால் ரொம்பப் பெருமைப்படுவாங்க."

மஹாலட்சுமி : "புடைவை கட்டுவது தான் பண்பாடு, பெரியவர்கள் சொல்வதைக் கேட்பதுதான் கலாசாரமோ? – 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் – அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' – பகுத்தறிவுக்கு வேலை கொடுக்கும் போதுதான் முன்னேற்றம் வரும்."

"கிராமங்கள் தொழில் தொடங்கி அதையே நகரமாக்கி டெவலப் செய்தால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை தரலாமே? நம் நாட்டில் தொழில்கள் ரொம்பவும் குறைவு. நிறைய படிச்சவங்க பல பேர் இருக்காங்க. கிராமங்களிலே நிறைய இடமும் இருக்கு. பிர்லா கூட இப்படி பின்தங்கிய ஒரு இடத்திலே தொழில் தொடங்கி இருக்கார். 'நாசாவில்' 80 சதவிகிதம் இந்தியர்கள்தான். எத்தனையோ விஞ்ஞானிகள் இருக்காங்க. கிராமத்தில் இடத்தை வீணாக்காமல் விஷயம்



தெரிந்தவர்கள் தொழில் தொடங்கி அதையே டெவலப் செய்தாலே போதும்."

முல்லை சுப்பையா : "வளமான இந்தியா உருவாக நாம் என்ன செய்ய வேண்டும்? நம் நாட்டில் என்ன குறை இருக்குன்னு தெரியும். ஆனால் அதை எப்படி நீக்குவதுன்னுதான் யோசிக்கலே. இதுபோன்ற கருத்தரங்கு, கலந்துரையாடல் போன்றவைகளினாலே ஒரு நல்ல விழிப்புணர்வு ஏற்படுது. ஒரு ஜோக் சொல்வாங்க பல மீட்டிங்களிலே.

"ஒரு ஏற்றுமதியாளர் கூடையிலே நண்டு எடுத்துக்கிட்டு அமெரிக்கா போனாராம். பக்கத்திலிருந்த அமெரிக்கர் கூடைக்கு மூடி போடலையேன்னு கேட்க, அதுக்கு இந்த ஏற்றுமதியாளர் 'அது தேவையில்லை. ஒரு நண்டு மேலே போனா அடுத்தது அதன் காலைப் பிடிச்சு இழுத்துடும். இவைகள் இந்திய நண்டுகள்''னு சொன்னாராம். இது ஜோக் இல்லே. இப்படி நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளவும் கூடாது.

அடுத்தவங்க வளர்ச்சியிலே நாம சந்தோஷப்படணும்; அந்த மனோபாவத்தை குழந்தைங்ககிட்டேயும் நாம் வளர்க்கணும். ஆண்கள்தான் பெண்களின் உலகம் என்ற எண்ணம் மாறவில்லை. பணத்துக்காக மட்டுமில்லே வேலைக்குப் போறது. நம்ம சக்திகளை வெளிப்படுத்தவும்தான். இது புரியணும். தனி தொழில் வேண்டும்."

நடேசன் : ''எல்லா நாடுகளுக்கும் தனித்தன்மைகள் உண்டு. இந்தியாவுக்கு அதன் வளமான இடங்கள்தான் அந்தத் தனித்தன்மை. 2-வது இயற்கைக் காட்சிகள் நிறைந்த சுற்றுலா இடங்கள். அடுத்து மனிதசக்தி. இத்தனை இருந்தும் நாம் வறுமையில் இருக்கிறோம். உலகிலேயே நமக்குத்தான் ஐ.க்யூவ் அதிகம். வறுமைக்குக் காரணம் தொழிலிலோ, விவசாயத்திலோ அதிகக் 'கவனம் செலுத்தாதுதான். இப்போ ரூ. 2000 கோடிக்கு மரங்களை இறக்குமதி செய்கிறோம். ஆனால் ரூ. 10000 கோடிக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய திறன் இருக்கு. நிலவளம், நீர்வளம், ஆண்டு முழுவதும் சூரிய வெளிச்சம் இவை இங்கு உண்டு. பயிர்கள் வளர இவை மூன்றும் மிகவும் அவசியமல்லவா? இத்தனையும் இருந்தும் என்ன பயன்? என்ன செய்தோம்?

2-வது சுற்றுலாத்துறை. இதை பெரியளவில் வளர்க்க முடியும். 'வந்தாரை வாழவைக்கும் தமிழகம்' என்போம். எல்லோரையும் வரவேற்கிறோம். ஆனால் அவர்களை வைத்து பணம் சம்பாதிக்கவில்லையே! பெரிய பெரிய ஹோட்டல்கள் கட்டி எத்தனையோ செய்யலாமே? உலக அளவில் நாம் எதுவும் செய்யலே. நம் மனித சக்தியையும் கூட அடுத்த நாடுகளுக்குத்தான் பயன்படுத்தறோம். இங்கு தொழில் துறை வளராததுதான் இதுக்குக் காரணம்.

சரஸ்வதி : "என்ன மார்க்கு வாங்கினாலும் கல்லூரிகளிலே இடம் கெடைக்கலே. அதோட என்ன திறமை இருந்தாலும் இங்கே வாய்ப்பு இல்லே. அதனாலேதான் வெளிநாடு போறாங்க. திறமையுள்ளவர்களை நம் அரசாங்கம் பயன்படுத்திக்கணும்."

இதயத்தையும் இனிக்க வைக்கும்

SREE Annapoorna

ஸ்வீட்ஸ்

சில பாரம்பரியங்களும் கலை நுணுக்கங்களும் நம்
நெஞ்சத்தை விட்டு நீங்காதவை !
ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகையெல்லாம்
தமிழர்களின் பாரம்பரியத்தை பறை சாற்றுபவை!
இவை மட்டுமல்ல...
அன்னபூர்ணாவின் இனிப்பு மற்றும்
கார வகைகளும் தான்...
சுத்தமான நெய்யினால் சுவைபட ,
தயாரிக்கப்பட்ட மைசூர் பா!
கல்கத்தா கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட
பெங்காலி ஸ்வீட் இன்னும் பல இனிப்பு
மற்றும் கார வகைகள்
இவை அனைத்தும் இன்று மட்டுமல்ல
என்றென்றும் நம் நெஞ்சை விட்டு நீங்காதவை

எங்களது பிரதான கிளைகள்

புரசைவாக்கம்	:	190/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை–7
தி.நகர்	:	1, சிவஞானம் தெரு (போஸ்ட் ஆபீஸ் எதிரில்) பாண்டி பஜார், சென்னை–17. போன் : 4347280
மைலாப்பூர்	:	157/1, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை–4
அண்ணாநகர்	:	A101, 3வது அவின்யூ, சென்னை–40 போன் : 4845649



bajaj auto ltd
Value for money for years

இமையோ, பாதையோ...வளைவு நெளிவுகளைக் கையாள்வது, உங்களுக்கு கை வந்த கலை!

கண்ணைக் காப்பது இமை. அந்த இமையைப் போற்றிக் காப்பதென்பது ஓர் கலை. அதுவும் உங்களுக்குக் கை வந்த கலை. அதே வளைவு, நெளிவு, சுளிவுகளைக் கையாளும் வித்தையை சாலையிலும் சாதிக்க உதவுகிறது ஸன்னி ஸிப் . ஆம். இதில் கியர்கள் இல்லை. எப்பேர்ப்பட்ட வளைவுகளிலும் சுலபமாக வளைந்து விரைந்திட முடிகிறது. பெடல் செய்யும் தொல்லையும் இல்லை. மேலிருந்து கீழாக அமைந்துள்ள சரிவான ஸீட் வசதி. பரவசமூட்டும் பவர்ஃபுல் 60CC என்ஜின். வளைந்து நெளிந்து செல்லத் தெரியாதோருக்கும் அக்கலையை அக்கறையுடன் கற்றுத் தரும் வாகனமல்லவா — பஜாஜ் ஸன்னி ஸிப் ?!

ஆம். உங்களுக்குத் தெரியும்தான். எத்தனை எளிது...ஸன்னி ஸிப்பை ஓட்டுவது.



Lintas Baj Sn 711 2029 Tm



Vasundhra
(M.A., Dip, BTHD. Cosmetologist)

"THE VISIBLE DIFFERENCE" HERBAL BEAUTY CLINIC & SCHOOL OF COSMETOLOGY

"தி விஸிபிள் டிபரன்ஸ்" ஹெர்பல் பியூட்டி கிளினிக் அண்டு ஸ்கூல் ஆஃப் காஸ்மெட்டாலஜி

2 MONTHS COMPLETE
BEAUTICIAN COURSE FOR PROFESSIONALS

SKIN CARE,
FACIALS,
MANICURE,
PEDICURE,
WAXING
,MEHNDI,
BRIDAL DRESSING,
HAIR CARE,
HAIR CUTS,
EXERCISE

HAIR & BEAUTY CARE
GALVANIC,
THERMOLYSIS TREATMENT
LATEST FACIALS, ,
LATEST TECHNIQUE IN
BRIDAL DRESSING AND
THERAPEUTIC TREATMENT
FOR PIMPLES, SCARS
DERMABRASION.
AROMA THERAPY

[YOGA & EXERCISE CLASSES CONDUCTED]

3, BALAJI AVENUE I STREET, T. NAGAR,
[OPP. VIDYODAYA SCHOOL, NEAR VALLUVAR KOTTAM],
MADRAS - 600 017. Ph : 8254079

NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

NOTIFICATION No. 13/96

Offers the following Diploma Courses by Correspondence.

BUSINESS MANAGEMENT	(1 Year)
FINANCIAL MANAGEMENT	(1 Year)
MARKETING MANAGEMENT	(1 Year)
HUMAN RESOURCES DEVELOPMENT	(1 Year)
ADVERTISING & PUBLIC RELATIONS	(1 Year)
TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000	(1 Year)
PORTFOLIO ANALYSIS & INVESTMENT MANAGEMENT	(1 Year)
BUSINESS ADMINISTRATION	(6 Months)
OFFICE ADMINISTRATION	(6 Months)
SALES & MARKETING	(6 Months)
INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.	(6 Months)
LABOUR LAWS	(6 Months)
QUALITY ASSURANCE & ISO 9000	(6 Months)
PRODUCTION MANAGEMENT	(6 Months)
INDUSTRIAL SAFETY	(6 Months)
ENVIRONMENTAL MANAGEMENT	(6 Months)
QUALITY CONTROL & ISO 9000	(6 Months)

No formal qualifications is required. Course Fee Rs. 1200/- (1 Year) & Rs. 600/- (6 Months). Examination centre at all major cities. For registration form and prospectus, kindly send Rs. 3/- postal stamp to **NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT** 23/13, Rameswaram Road, Narayana Apartments, Second Floor, T. Nagar, Madras - 600 017. Phone : 044-4851854 Fax : 044-4933259.

நடேசன் : "இதுக்கு அரசை குறைசொல்ல வேண்டாம். தனிபட்டவர்களே தொழில் துறையை முன்னுக்குக் கொண்டு வரலாம். நம் சொந்த நிலங்களிலே நாமே பாடுபட்டு உழைச்சா ஏற்றுமதி செய்யுமளவு உற்பத்தியைப் பெருக்கலாம்."

மஞ்சுளா நாகராஜன் : இண்டஸ்ட்ரின்னு சொன்னா முதல் ஃபுட்புரோசசிங் அதுக்குத் தேவையான காய்கறிப் பழங்களை நாம் எங்கே உற்பத்தி செய்யறோம். அவைகளைக் குளிர்ச்சியுடன் பாதுகாக்க என்ன வசதிகள் இருக்கு?

முல்லை : "வெளிநாடுகளிலே வசிப்பவர்கள் அங்கு 2-வது வகுப்பு குடிமகன். ஆனால் இங்கே வேண்டாத விருந்தாளி. அந்த சௌகர்யம் அனுபவித்த பிறகு இங்கேயிருக்க முடியலை என்பதுதான் உண்மை. காரணம் தொழில்கள் பெருகவில்லை. இது பெருகினா வாய்ப்புக்கள் தானாக வரும். ஆரம்பத்தில் கஷ்டம்தான். இந்தியாவை உருவாக்க நீங்க கஷ்டப்பட்டால் வரும் தலைமுறையினர்



சந்தோஷமாக இருப்பாங்க. பெரிய சம்பளம் எதிர்பார்க்காமே தனியா சிறிய தொழில் தொடங்கி முன்னேறணும்."

நடேசன் : "இதற்கு உடனடியா செய்ய வேண்டியது விவசாய உற்பத்தியைப் பெருக்குவது. சுற்றுலாத் துறையை வளர்ப்பது. அரசின் கொள்கைகள் வர்த்தகர்களுக்கு சாதகமான முறையில் அமைய வேண்டும். தேக்கு மரம் வளர்ப்பின் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் பெற முடியும். இதுக்குத் தடை நிலை உச்சவரம்பு சட்டம். இதனால் பெரிய அளவிலான உற்பத்தி கிடைக்கவில்லை. தனிப்பட்டவர்கள் சந்தனமரம் வளர்க்கக் கூடாது என்பது ஆங்கிலேயர்கள் காலத்தில் போட்ட சட்டம். இன்று இதை நீக்குவது பற்றிப் பேசறாங்க. சில சட்டங்களை மாத்தினா நாம முன்னேற உதவியாக இருக்கும். தொலைநோக்குடன் கூடிய திடமான பொருளாதாரக் கொள்கை அரசுக்கு இருந்து அந்தக் கொள்கையை வச்சு நாம உழைச்சால் நிச்சயம் முன்னேற முடியும்."

சுதா : "நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயம் செய்தால் முன்னேற முடியும். அதோட விவசாயம் ஆறு மாத வேலைதான். மீதி ஆறு மாதம் எந்தத் தொழிலும் தெரியாத நிலையிலே வீணாதான் கழியுது. அரசு செய்யும் திட்டங்களும் முழுமையாகக் கிடைக்காத நெலையிலே வெறுப்புதான் மிஞ்சுது. நவீன டெக்னிக் பயன்படுத்தி விவசாயம் செய்தால் மேலும் வளரலாம்."

தனவந்தினி : "விவசாயம் பெருகணும்னு சொல்றீங்க. ஆனால் இப்போ வயல்களை நிறைய அழிச்சு தொழில்கூடங்கள் கட்டறாங்க."

நடேசன் : "இப்படிச் செய்வது அநேகமாக நகர்ப்புறங்களிலேதான். லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கிராமங்களிலே தரிசா இருக்கு. அங்கே போய் பயிர் செய்யலாமே!"

மாலா ராமகிருஷ்ணன் : "இப்படி காலி யாரும் நிலங்களில் தொழில்கூடங்கள் வந்தா கூட பரவாயில்லை. ஆனால் அவை ரியல் எஸ்டேட் பிளாட்டுகள் ஆயிடுதே! ஏழை விவசாயிகளிடம் மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அதையே விளம்பரம் செய்து எண்ணிப் பார்க்க முடியாத விலைக்கு விற்கறாங்க. ஏக்கர் கணக்கிலே விக்கற நம்ம நிலத்தையே சென்ட் கணக்கிலே தேடி ஓடி வாங்கக்கூடிய நிலை வருமோ என்ற அச்சம்."

மாலா ராமகிருஷ்ணன் : "படப்பையிலே எங்க ஃபாரம் லேண்ட் இருக்கு. பல சமயங்களிலே ஆள் கிடைக்காமே நாங்களே காய் பறிப்போம். விலை ரொம்பக் குறைவாகக் கேட்பாங்க. சோளம் பயிர் செய்யறது ரொம்பக் கஷ்டம். ஆனா அதை ஒன்று 10 பைசாக்குக் கேட்பாங்க. இங்கே அது விலை உங்களுக்குத் தெரியுமே!"

கீதப்ரியா : "பருவமழை பொய்த்தால் கவலைப்படுவதுடன் சரி. ஆனால் அயல் நாடுகளில் செயற்கை மழை பெய்ய வைப்பதரால்தான் அவர்கள் முன்னோடியாக இருக்கிறார்கள். எந்தப் பெரிய தொழில் செய்பவரானாலும் விவசாயத்திலிருந்து அரிசி வர

Nestlé®
அறிமுகப்படுத்துகிறது
உலகின் நம்பர்.1
சாக்லேட்
எனர்ஜி
டிரிங்க்

உலகெங்கு
முள்ள லட்சக்
கணக்கான
தாய்மார்களின்
நம்பிக்கையை பெற்ற
ஒரு எனர்ஜி டிரிங்கை
இப்போது நீங்களும் உங்கள்
குழந்தைக்கு கொடுக்கலாம்.
உங்கள் குழந்தை விளையாடவும்,
உன்னதம் அடையவும், வெற்றிவாகை

கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொண்டவர்கள்

1. பரிமளா கிருஷ்ணமூர்த்தி,
2. ராஜலட்சுமி
3. சுதாகாவ்லேகர்
4. விஜயாகிருஷ்ணன்
5. டாக்டர் காந்திமதி
6. ரேவதி செல்வமணி
7. சரஸ்வதி
8. லட்சுமி ராமசாமி
9. கீதா வரதராஜன்
10. மஞ்சுளா நாகராஜன்
11. பரிமளாகிருஷ்ணன்
12. ரம்யா
13. தனவந்தினி
14. தீபா
15. பி. ஜெயலட்சுமி
16. கீதப்ரியா
17. லஷ்மிதுரை
18. சரளா நாதன்
19. சுஜாதா
20. சுதா
21. சி. சாமுண்டீஸ்வரி
22. மஹாலட்சுமி
23. பி. சித்ரா
24. சாவித்ரியோகா
25. மாலா ராமகிருஷ்ணன்

வில்லை என்றால் என்ன செய்ய முடியும்? இதனால் விவசாயத்துக்கு முக்கியத்துவம் தரவேண்டும்."

பரிமளா கிருஷ்ணன் : "வடநாட்டில் எக்கச்சக்க தண்ணீர் வேஸ்டாகுது. ஆறுகளை இணைத்தாலே இந்தத் தண்ணீர் பிரச்னை தீருமே! நாடும் முன்னேறும்."

சரளா : "நம்மோட அடிப்படை மதிப்புகள், ஊறிப் போயிருக்கிற சோம்பேறித் தனத்துனாலே அடிபட்டுப் போகுது. செய்யற வேலையிலே அது என்ன சம்பளம் தருவதானாலும் ஒரு ஈடுபாடு வேண்டும். இதையே இளையசமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லி ஒற்றுமையுடன் செயலாற்றச் செய்ய வேண்டும்."

காந்திமதி : "மனித, பொருள் சக்தி வீணாகுது. இளைஞர்களுக்குப் போதிய வாய்ப்பும் வழிகாட்டியும் இல்லை. ஆனால் வயது வந்து விட்டது சம்பாதிக்க வழி மட்டும் தெரியாத நிலை. அயல்நாட்டிலிருந்து வந்த

ஒரு பெண் நம் கோலம் போடும் முறைகளைக் கற்று அங்கு சென்று இதைச் சொல்லிக் கொடுத்து, புத்தகம் போட்டு லட்சக்கணக்கில் சம்பாதித் தாள். நம் திறமை, ஆற்றல், சக்தி இவைகளை நாம் உணரவில்லை. தற்போது படிக்கும் ஹாபிட் குறைந்து விட்டது. புத்தகங்கள் மூலம் எத்தனையோ வழிகாட்டிகள் உண்டு. லைப்ரரியில் போய்ப் படிக்க வேண்டும். பெற்றோர் நண்பர்கள் உதவியும், ஊக்கமும் தரவேண்டும். முன்னேற்றத்துக்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது. அயல்நாடுகளிலே நோபல் பரிசு வாங்கிறவர்கள் கூட அவுங்க ஜுனியர்களின் உழைப்பை பயன்படுத்திப் பாங்களாம். குறைசொல்வதை விட்டு நம்மை நாமே திருத்திக் கொண்டு முன்னேற வழிகள் தேடணும். நிதி நிறுவனங்களின் உதவி, பத்திரிகைகள் போன்றவைகளின் வழிகாட்டு தல்கள் இவற்றைப் பயன்படுத்திக்கணும். கலந்து பழகணும், ஒரு லட்சியம் அதை அடைய நல்ல திட்டத்துடன் கூடிய பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குறுக்கு வழி கூடாது. பொறுமையுடன் நேரான வழியில் முன்னுக்கு வர வேண்டும்."

சாமுண்டீஸ்வரி : "உணவில்லாத குழந் தைகள் அரசு சத்துணவு கொடுத்தாலும் கல்வியறிவு முழுமையாக் கிடைக்காத நிலை தான். பழங்காலத்தில் அயல்நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்த நாடு. இந்தியாவிற்கு வர வேண்டும் என்று அனை வரும் கனவு கண்ட நாடு. ஆனால் நாம் இன்று அமெரிக்காவைப் பற்றிக் கனவு காணுகிறோம். அந்த அளவு வீழ்ச்சியடைந்திருக்கிறோம்."

விஜயா கிருஷ்ணன் : "தொழில் பற்றிய ஃபால்ஸ் பிரஸ்டீஜ் நமக்கு இருக்கு. தோல் பொருட்களை ஒரு குறிப்பிட்ட இனத்தவர்கள் தான் செய்ய வேண்டுமென்பது. ஆனால் இன்று அதையே இனம் பார்க்காமல் செய்து பல பேர் முன்னேறலையா? அதே போல ஹேர் டிரஸ்ஸிங், ப்யூட்டி பார்லரையும் சொல்லலாம். இப்படி ஒரு நம்பிக்கையோட ஃபால்ஸ் பிரஸ்டீஜ் இல்லாமே பண்ணி முன்னேறலாம்."

சித்ரா : "இன்னொரு முக்கிய தடை சோம்பேறித்தனம். நல்ல சிந்தனைகள், நல்ல எண்ணங்களின் வெளிப்பாடு. அயல்நாட்டில் உற்பத்தி செய்த பொருள் என்றால் ரொம்ப உயர்வு என்ற எண்ணம் - நாம ரசிக்கிறோம். ஆனால் நம்மை, நம் பொருட்களை மற்றவர் கள் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் வேண்டும். அதை உயர்த்த வேண்டும்."

மஞ்சுளா ரமேஷ் : "கல்லூரியில் படித்துதான் முன்னேற வேண்டுமென் பதில்லை. மற்றவங்க வேலை தரணும்னு ஏன்



H M V பெருமையுடன் வழங்கும்

ஸ்ரீ மீனாட்சி



சுப்ரபாதம்

முதலிய

துதிப் பாடல்கள்

சங்கீத கலாநிதி ஸ்ரீமதி

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி

பாடியது

இந்த ஒலிநாடாவில் அமரர் "கவிகோகில" Dr. V. ராகவன் அவர்கள் இயற்றிய மீனாட்சி சுப்ரபாதம் மற்றும் "சமஸ்கிருத" ஸ்லோகங்கள் ஒரு பக்கத்திலும், மதுரை மீனாட்சி அன்னையைப் போற்றும் தமிழ்ப் பாடல்கள் மறுபக்கத்திலும் செவிக்கு விருந்தளிக்கின்றன. பக்தி ரஸம் ததும்பும் திருமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் இனிய குரலில் இந்த ஒலி நாடா ரசிகப் பெருமக்களுக்கு ஓர் அரிய பொக்கிஷமாகும்.

RPG

அனைத்து **H M V** கேசட் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

HMV

SRI DURGA ARTS

சொல்றீங்க? பெரிய தொழிலதிபர்களைக் கேட்டா ஈடுபாடும் பொறுப்பும் கொண்ட நல்ல பணியாளர்கள் கிடைக்கலேன்னுதான் சொல்றாங்க."

சுதா : "சுவாமி சின்மயானந்தா சொல்வார் 'யூத் ஆர் நாட் யூஸ்லெஸ். தே ஆர் யூஸ்டு லெஸ் ஒன்லி' வழிகாட்டிகள்தான் சரியாக எங்களுக்கு இல்லாத நிலை. ஒரு மெடிகல்-ரெப் வேலைக்கான எல்லாத் தகுதியும் உள்ள ஒரு பெண்ணுக்கு அவள் பெண் என்பதை வீணான காரணம் காட்டி தேர்வு செய்யப் படவில்லை."

பரிமளா கிருஷ்ணன் : "நம்மவர்களி டையே ரொம்ப குறுகிய மனப்பான்மையும், பொறாமையும் இருக்கு. பணமிருந்தாதான் எதையும் செய்ய முடியும் என்ற எண்ணம்."

ரம்யா : "கல்வி முறை இங்கு சரியில்லை. உதாரணமா நிறைய பேர் பி.எஸ்ஸி. விவசாயம் படித்தவங்க இருக்காங்க. அவுங்களுக்கு செயல்முறைப் பயிற்சிகள் வேண்டுமே! கல்வித் திட்டத்தில் மாறுதல்கள் வந்தால் நல்ல முன்னேற்றம் இருக்கும். நவீன விவசாயத் திட்டங்களை ஊர் ஊராகப் போய் விளக்க லாம்."

லட்சுமி ராமஸ்வாமி : "பசுமைப் புரட்சின்னு சொல்லிப் பயனில்லே. கிராமம் கிராமம்னு சொன்னாலும் நாம் இருப்பது பட்டிணத்தில்தான்! 'பலே ஜோரு பலே ஜோரு பட்டிணவாசம் – பார்த்துப் புட்டோம், பாத் துப்புட்டோம் ஃபிளாட் வாசம். கிராமபுரம் செல்வதற்கு ஏதுங்க நாட்டம்? வாட்டத்தை விட்டு விளையாட்டுக்கு வரலாம். ஒரு வெண்கலம் கூட அடைய முடியாத நிலை தான். ஏன் குழந்தைகளை விளையாடாதே விளையாடாதே என்பதால்தான். அப்படி ஒரு கட்டாயம். நமது பாடத் திட்டம் நிமிர்ந்து நிற்க வேண்டிய குழந்தைகளை குனிந்து கூன் போட வைக்கிறது."

சாமுண்டீஸ்வரி : "தகுதி அடிப்படையில் கல்வி அமையலே. பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை. அதனாலே படிச்சு முடிச்சவுடனேயே எப்படி செய்த முதலீட்டை எடுக்க முடியும்னுதானே சிந்திப்பாங்க."

ஜெயலட்சுமி : "படிக்கிற சப்ஜெக்டை வச்சு மதிக்கிறாங்க. நான் தமிழ் எம்.ஏ. படிக்கிறேன். தமிழ்நாட்டிலிருந்து கொண்டு தமிழை மதிக்கலையே? பாமர மக்கள் கூட பிள்ளைகள் மெட்ரிகுலேஷனில் படிப்பது குறித்துப் பெருமைப்படுகிறார்கள்."

சித்ரா : "ஒரு சினிமா பாட்டிலே மார்ச் போனா செப்டம்பர்னு எதையும் ஈஸியாக எடுத்துக்கணும் எனும் கலாசாரத்தை விதைக் கிறாங்க. இது ரொம்பத் தவறு. இளைய வயதில் ஒரு பிடிவாதமான குறிக்கோள் இருந்தாதான் வாழ்க்கையில் முன்னேற முடியும். 'டேக் இட் ஈஸி பாலிஸி' எனச் சொல்லிக் கொடுப்பது ரொம்பத் தவறு."

சரளாநாதன் : "இப்போ எல்லா வீடுகளிலேயும் குழந்தைகள் படிக்கறாங்க. சாதி மதம் விட்டாலும் மாநில அளவிலான எண்ணம் மாறவில்லையே. இந்தி தெரியாமல் வடநாடு போனால் படும்பாடு? மொழியே நம் முன்னேற்றத்திற்குத் தடையா இருக்கு."


கீதா காவ்லேகர் : "மொழி வித்தியாசம் பார்க்காம கத்துக்கறது நல்லது. நான் மஹாராஷ்டிராதான். ஆனா தமிழ் பேசத் தெரியும். மொழி தெரிஞ்சா நாம் நம் நாட்டுக்குள்ளே எங்கேயும் போயி தொழில் தொடங்கலாமே! மொழியை வெறியா வைக்கக் கூடாது. நாடுதானே முன்னேறும்."

சாவித்ரியோகா : "டேக் இட் ஈஸி பாடல் பெயிலானவர்களை 'என்கரேஜ்' பண்ணத் தான். அவுங்களை முன்னேற்றதான் இது. இன்னும் நாம் படித்து மேலும் வரணும்னு நினைக்கணும். சுகாதார குறைவும் நமது முன்னேறாமைக்குக் காரணம். அயல்நாட்டி னர்கள் இங்கு சுற்றிப் பார்க்கும் போது மூக்கை மூடிக் கொள்ள வேண்டிய நிலை. நாம் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தினாலே சுற் றுலாத்துறை முன்னேறும். அதோட மூடநம்பிக்கைகளும் நம்மிடையே அதிகம் இருக்கு. பிள்ளையார் பால் குடிக்கறதுன்னு ஒருநாள் எத்தனை காட்சிகள். அதனால் எத்தனை பாதிப்பு?"

நடேசன் : "இங்கு 10,000 பேருக்கு ஒரு டாக்டர். ஆனால் அயல்நாட்டில் 100 பேருக்கு ஒரு டாக்டர். 5 மெடிகல் காலேஜில் எத்தனை

பழைய ஷட்டில்காக் பந்துகளை எறிந்து விடாமல் அவற்றின் அழகான தலைகளை யும் ஆடைகள் போல் அமைந்திருக்கும் இறகுகளையும் கொண்டு விதம் விதமாக அலங்கரிக்கப்பட்ட ராஜா-ராணி, கணவன்-மனைவி, கோமாளிகள் (மற்றும் கற்பனைக் கேற்ப வேறு) பொம்மைகள் செய்து கொலுவில் தக்க இடங்களில் வைத்தால் வித்தியாசமாகக் கவனத்தைக் கவரும்.

– எஸ். சரோஜினி



டாக்டர்களை உருவாக்க முடியும்? 50 கல்லூரிகள் திறக்கலாமே! வண்டிக்கு முன் மாட்டை வைக்க வேண்டும். நாம் மாற்றி வைக்கிறோம். நம் வறுமை நாம் உருவாக்கியது. அரசும் தன் கொள்கைகளை மாற்றி நல்ல திட்டங்கள் தரவேண்டும். 25 வருடங்களுக்கு முன்பு நாம் 1 லட்சம் ஏக்கரில் தேக்கு பயிரிட்டு இருந்தால் ஜப்பானின் வருமானத்தை மிஞ்சியிருக்கும். நாடு முன்னேற்றத்துடன் சமுதாய முன்னேற்றமும் மனமுன்னேற்றமும் வேண்டும். விவசாயம், சுற்றுலா துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். குறைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. இந்த மனப்போக்கு மாறினால் நாடு முன்னேறும்."

ச.த. சொக்கலிங்கம் : "நான் சோவியத்தில் எடை தூக்கும் போட்டி கண்டேன். ஈரான் சேர்ந்தவன் ஒருவன் வென்றான். ஒரு ரஷ்யன் அப்போது மேடையில் வர, பெண்கள் 'நீயும் ஒரு ரஷ்யனா?' என்று கோபமாகக் கேட்டனர். மனம்தான் உடலை இயக்குகிறது என்பது எத்தனை உண்மை? உடனே அவன் அந்த ஈரான்காரன் தூக்கியதை விட அதிகமான எடையைத் தூக்கினான். அத்தனை கைத் தட்டல். நான் ஒரு இந்தியன் என்ற எண்ணமும் உறுதியும் வேண்டும். இந்தியன் என்ற படம் பார்த்தாலே அந்த உணர்வு வரும். சோம்பேறித்தனம் நம்மால்தான் குழந்தைகளிடம் வருகிறது. நாம் நம்மை மாற்றிக் கொண்டால்போதும். நாம் திருந்த வேண்டும். மற்றவர்களின் தவறுகளை காண வேண்டாம். ஜாதி நம் மனதை விட்டுப் போக வேண்டும். போரில் இறந்தவர்களை விட சமயச் சண்டையில் இறந்தவர்களே அதிகம். எதைப் படித்தாலும் - நன்கு ஆழமாகப் படிக்க வேண்டும். ஆழ்ந்த கல்வி, தன்னம்பிக்கை, நாட்டுப்பற்று, இவற்றை நாம் வளர்த்துக் கொண்டாலே நம் தடைகள் நீங்கி நாம முன்னேறுவோம். பெரியவர்களும் படிக்க வேண்டும். சோவியத்தில் தலைமுறைகள் நன்றாகப் படிக்கும். இளைய சமுதாயத்தைக் குறைகூறக் கூடாது.

தொகுப்பு : **வைதேகிதேசிகன்**
படங்கள் : **ராஜுநாராயண்**

காய்கறிகள் வாங்கும் போது:

காய்கறிகள் வாங்கும் போது, முற்றலையும், அழுகியவைகளையும் சிலர் விவரம் தெரியாமல் வாங்கி விடுவார்கள். அவ்விதம் நேராமல் இருப்பதற்கு சில யோசனைகள்:


அவரைக்காய்: இவற்றின் விதைகள் புடைத்துக் கொண்டு காணப்படாமல் இருக்குமாறு பார்த்து வாங்க வேண்டும். அவ்வாறு புடைத்துக் கொண்டு காணப்பட்டால் அவை முற்றலாக இருக்கும்.

கீரைகள்: இவை பூத்துக் காணப்பட்டால் வாங்கக் கூடாது. முளைக்கீரை, அரைக்கீரை போன்றவற்றின் தண்டுகள் பெருத்திருந்தால் சுவையாக இருக்காது. தக்காளி-முற்றிலும் பழுக்காத தக்காளிகளை விட அரைவாசி அல்லது முக்கால் வாசி பழுத்த தக்காளிகள் சுவையாக இருக்கும்.

கருணைக்கிழங்கு: இது நல்ல சிவந்த நிறத்துடன் காணப்பட்டால் அது சுவையாக இருக்கும். சீக்கிரம் வெந்து விடும்.

முட்டைக் கோஸ்: இது வாங்கும்போது இலை பிரியாமலும், சற்று பச்சை நிறமாகவும் இருக்க வேண்டும்.

வாழைத்தண்டு: இதை நகத்தால் கிள்ளிப் பார்க்க வேண்டும். நார்தெரிந்தால் வாங்கக் கூடாது. நூல் தெரிந்தால் வாங்கலாம். நூல்கோல், முள்ளங்கி, சுரைக்காய், சௌசௌ, பீர்க்கங்காய் போன்றவற்றை நகத்தினால் அழுத்திப் பார்க்க வேண்டும். நகம் இறங்கினால் வாங்கலாம். நகம் இறங்காவிட்டால் வாங்கக் கூடாது. அவை முற்றல்.



காலி பிளவர்: இது பூத்து விரிந்ததாக இருந்தால் வாங்கக் கூடாது. அவை சுவையாக இருக்காது. பூ வெண்மையாகவும், அழுத்தமாகவும் இருக்க வேண்டும்.

கிழங்கு வகைகள் வெங்காயம், வாழைக்காய், மாங்காய் வாங்கும்போது விரல்களால் சற்று அழுத்திப் பார்க்க வேண்டும். அழுத்தினால் வாங்கக் கூடாது. வெண்டைக்காயின் கூர்மையான நுனிப்பகுதியை விரலால் ஒடித்துப் பார்க்க வேண்டும். நன்கு எளிதாக ஒடிபட்டால் அவை பிஞ்சாக இருக்கும். முருங்கைக்காய் கணுக்கள் தெரியாமல் ஒரே சீராக இருந்தால் அதை மட்டும் வாங்க வேண்டும். கத்தரிக்காய் வாங்கும்போது அதன் மேலுள்ள காம்பு பசுமையாகவும், விரல்களால் அழுத்தும் போது மென்மையாகவும் இருக்க வேண்டும்.

-விஜயா ஸ்ரீநிவாசன்



இதயம் நல்லெண்ணெய்

இதயத்திற்கு இதமானது

நானும் ஒரு கில்லாடி தான் . . .

என்ன சார்...
என்ன அப்படிப் பார்க்கறீங்க?
என்னடா வீட்டுக்காரியை
ஆபீசுக்கு அனுப்பிச்சிட்டு இவன்
சமையல் பண்ணிக்கிட்டு
இருக்கானேன்னா?



இன்னைக்கு வீட்ல விசேஷங்க.
எங்க கல்யாண நாள். அவளுக்கு லீவு
கிடைக்கலை. நான் ஆபீசுக்கு லீவு
போட்டுட்டு என் நளபாகத்தை
ஆரம்பிச்சிட்டேன். சமையலிலே
நானும் ஒரு கில்லாடி தான்.
இருக்கவே இருக்கு
இதயம் நல்லெண்ணெய்.
அதுல சமையல் செஞ்சா சுவையும்
மணமும் பிரமாதம்.

யத்திற்கு இதமானது **இதயம் நல்லெண்ணெய்**

இதயம் நல்லெண்ணெய் இரத்தத்தில்
கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கிறது.

DELHI DISTRIBUTOR
M/S. SRI RAMA STORES, Shop No.4, Rama Market
Munirka, New Delhi - 110 067 Ph. : 6942476 & 662686

BOMBAY DISTRIBUTOR
M/S. P. RAMALINGAM, Near Matunga Railway Station (C. Rly)
Matunga, Bombay - 400 019. Ph. : 4012077, 4022473 & 4026874



Silverspoon



புன்னகை

தங்கத்தில் பூத்த எழில்நகையும்

செவ்விதழ் சிந்தும் புன்னகையும்

உலகின் வர்ணங்களை படைக்க

கடவுளுக்கு தேவைப்பட்டது 7 நாட்கள்.

ஆனால் எங்களுக்கு தேவைப்படுவதோ

7 நிமிடங்கள் .

எந்த நிறம் ஆயினும் சரி, ..ட்டால் போதும் கொடுக்கப்படும். ..தை தயாரிக்க சராசரியாக 7 ..டங்கள் போதும்.

இன்ஸ்டா கலர் புரியும் மாயம் ..வே. இந்தியாவின் முதல் ..டி பெயிண்ட் தயாரிப்பு ..வே. உங்கள் தேவைக்கு, கலர் ..டு கார்டுகளை கேட்கவும், ..லைபேல், இன்ஸ்டா கலர் ..யத்தை அணுகி, 626 ஷேடுகளில் ..றை தேர்ந்தெடுக்கவும் (நீங்கள்



நினைக்கும் நிறம் எதுவாயினும்) எமல்ஷன், இனமல், மேட், ஷீன் அல்லது க்ளாஸ் எந்தவித பரப்பாயினும், எந்தவித ஃபினிஷ் ஆயினும் சரி, கண் முன்னே கம்ப்யூட்டர் தேவையான கலரை தயாரித்திடும்.

வண்ணங்களின் வர்ணஜாலம்! இயற்கையையும் மிஞ்சும் செயற்கை.

Jenson & Nicholson (India) Limited

..ங்கள் எண்ணம், எங்கள் வண்ணம், அதுவே இன்ஸ்டா கலர்.

..டிகர் : 653657, கோயம்புத்தூர் : 230376, கட்டாக் : 610771, டெல்லி : 532594, எர்ணாகுளம் : 394256, ஹைதராபாத் : 213661, கஜியாபாத் : 730634, ..தியானா : 662077, மெட்ராஸ் : 8524695, மதுரை : 540369, மும்பாய் : 2613320, நியூ மும்பாய் : 7682021, பாட்னா : 222388, பூனே : 676531,

CONTRACT. JAN.188.96 TAM

Registered with the Registrar of Newspapers of India under No. 30309/76 * Registered No. TN/MS (S) 201 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS-(S)/3 * Registered as a Newspaper in Sri Lanka



100% தூய, இயற்கையான சந்தன எண்ணெயுள்ள ஒரே சோப். சந்தன எண்ணெய் நூற்றாண்டுகளாக மங்கையர் தங்கள் சருமத்தை அன்றலர்ந்த மலர் போல புதிதாக, பருக்கள் இல்லாமல் இருக்கப் பயன்படுத்தி வருவது. சிறு வெட்டுகள், காயங்களை ஆற வைப்பது. வியர்க்குருவின் வேதனையைப் போக்குவது. ஒரு வாசனை திரவியம். மைசூர் சாண்டல் இது வெறும் ஒரு சோப் அல்ல. வியர்க்குருவுக்கான பவுடர், வாசனை திரவியம், ஆன்டிசெப்டிக் மற்றும் சோப். அனைத்தும் ஒன்றிலே.

மைசூர் சாண்டல் சோப். தூய சந்தன எண்ணெயுடன். வேறு எந்த சோப்பும் உங்களுக்கு இதனை தருவதில்லை.



மைசூர் சாண்டல், இயற்கையான சந்தன எண்ணெயின் ஒரே அதிகாரபூர்வ தயாரிப்பாளரான கர்நாடகா சோப்ஸ் அண்ட் டிடர்ஜென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்பு.
த.பெ.எண். 5531, பெங்களூர் - 560 055 ஃபேக்ஸ் : 91-80-337 0498. போன் : 337 7691

CONTRACT-1907-06-TAM

2082con_tam